# தாய்வீடு

234

ISSN 2369-3657

THAIVEEDU | SEPTEMBER | 2026

தாய்வீடு | செப்ரெம்பர் | 2026

வைகறைவாணன்:
இரண்டாம் தலைமுறைத் தோழமை
■ செல்வ. புவியரசன்

மகாவம்சத்தை இயற்றிய
மகாநாம தேரர் யார்?
■ என். சரவணன்

இமயத்தில் ஒலிக்கும்
பேரழிவின் இரைச்சல்
■ ச. சத்யதேவன்



ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


RE/MAX ACE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Lic# 10530
Best Rates & Advice You Can Trust!
உங்கள் அனைத்து அடமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?
Not to Worry!
Please Call
Theven Kankesu
(MCSC, MCP, AMP, CMBA)
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc.

தாய்வீடு

**Publisher & Editor**
PJ. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பிரசாத் சொக்கலிங்கம்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா, சி. ரமேஷ்,
ச. சத்யதேவன்.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**தொழினுட்ப உதவி**
சாம் டானியல்

**நிர்வாக ஒருங்கிணைப்பு**
சாம்பவி நிரோஷன்

**அட்டைப்பட வடிவமைப்பு**
பிரசாத் சொக்கலிங்கம்

**வடிவமைப்பு**
பிரசாத் சொக்கலிங்கம்,
tg. திருநெல்வேலி (இலங்கை),
தானா விஷ்ணு.

**படங்கள்**
istock.com,

**ஒப்புநோக்கல்**
கந்தசாமி கங்காதரன்,
ந. குகபரன், கௌரி,
தானா விஷ்ணு.

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Canada

**Tel : +1 416 857 6406**
**Fax : +1 416 849 0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

ஆக்கங்கள் அனைத்துக்கும்
ஆக்கியோரே பொறுப்பு.
பெயர் தோற்றாத ஆக்கங்களுக்கு
ஆசிரியரே பொறுப்பு.

## 'பேரரசரின் புதிய ஆடைகள்'

அமெரிக்க அதிபர் டிரம்ப் மீண்டும் ஒருமுறை சிறுபிள்ளைத்தனமான பெயர்சூட்டுவிழாவொன்றை நிகழ்த்தி யுள்ளார். மெக்சிக்கோ வளைகுடாவுக்கு, அமெரிக்க வளைகுடாவென்று பெயரிட்டார். உலகம் அதை உதாசீனம் செய்தது. உலகப்புகழ் பெற்ற அமெரிக்கப் பண்பாட்டு மையமான கென்னடி மையத்தின் பெயரை டிரம்ப்-கெனடி மையம் என்று மாற்றினார். அமெரிக்க நீதிமன்றமே அதைச் சட்டவிரோதம் என அறிவித்தது. இப்பொழுது நானூறு ஆண்டுகளுக்கும் மேலாக 'ஒன்ராறியோ' என்ற பூர்வகுடி வார்த்தையால் அறியப்பட்ட ஏரியின் பெயரை 'அமெரிக்கா ஏரி' என மாற்றியிருப்பதாக அறிவித்துள்ளார். இதையும் உலகம் நிராகரிக்கும்.

அவரின் இந்த நகர்வுகள் மேலோட்டமாகப் பார்க்கும்போது எள்ளிநகையாடத்தக்கனவாகத் தோன்றினாலும், அவற்றின் அடிப்படையிலேயுள்ள அதிகாரத் திமிரும் ஆணவச் செருக்கும், அச்சமும் அருவருப்பும் ஊட்டுவன. டிரம்பின் நகர்வுகள் எப்போதுமே ஒருவித பதற்றத்தையும் குழப்பத்தையும் உலக அரங்கிலே விதைப்பதற்கென்றே திட்டமிட்டு மேற்கொள்ளப்படுபவை போன்றே அமைகின்றன. ஒரு வல்லரசின் தலைவ ரிடம் எதிர்பார்க்கக்கூடிய நிதானமோ, தொலைநோக்கோ, முதிர்ச்சியோ இன்றி, தன்னிச்சையான உணர்ச்சி வசப்படுதல்களின் அடிப்படையிலேயே அவரது முடிவுகள் அமைவதும், அவற்றை ஓர் அடிமை மனநிலை-யோடு ஆமோதித்து ஆதரிக்கும் அவருடைய அடுத்த கட்டத் தலைவர்களின் செயற்பாடுகளும் கவலைக்-குரியனவும் கண்டிக்கவேண்டியனவுமாகின்றன.

டிரம்பின் இந்த நடத்தை, சர்வதேச விதிகள், இராஜதந்திர மரபுகள் ஆகியவற்றின் மீதான அவரது அலட்சி-யத்தையே காட்டுகிறது. காலையில் ஒரு நாட்டுடன் நட்பு பாராட்டுவதும், மாலையில் அதே நாட்டின் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிப்பதாகக் கீச்சகத்தில் பதிவிடுவதும் அவரது வாடிக்கை-யாகிவிட்டன. இத்தகைய முரண்பாடான செயல்பாடுகள் அமெரிக்காவின் நீண்டகால நட்பு நாடுகளை அத்தியாவசியமான சில தெரிவுகளை நோக்கி உந்தியுள்ளன. அமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடாகவும் வர்த்தகப் பங்காளியாகவும் விளங்கிவந்த கனடா, தற்போது, அமெரிக்காவைத் தவிர்த்து தனது பொருளாதார எதிர்காலத்தை நிர்ணயிக்கவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகியுள்ளது.

உலகளாவிய வர்த்தகம், காலநிலை மாற்றம், பாதுகாப்பு ஆகியன சார்ந்த ஒப்பந்தங்களில் இருந்து டிரம்ப் திடீரென விலகுவதும், புதிய நிபந்தனைகளை விதிப்பதும், தானே ஏற்படுத்திய ஒப்பந்தங்களை ஒருதலைப் பட்சமாக மீறுவதும் ஒட்டுமொத்த அனைத்துலகப் பொருளாதாரச் சூழலையே நிலையற்றதாக மாற்றியிருக்கிறது.

பேச்சுவார்த்தைகளை ஒரு மிரட்டல் ஆயுதமாக அமெரிக்கா பயன்படுத்துகிறது. ஒப்பந்தங்களை இறுதி செய்யும்போது, மற்ற நாடுகளின் இறையாண்மையையும் பொருளாதார உரிமைகளையும் நசுக்க அமெரிக்கா முற்படுகிறது. கூட்டுறவினதும் சமத்துவத்தினதும் அடிப்படையில் அமைய வேண்டிய வர்த்தகப் பேச்சுவார்த் தைகளை, தனது ஆயுத பலத்தால் அச்சுறுத்தி வழிநடத்த அமெரிக்கா முயல்கிறது.

கனடா போன்ற நாடுகள் சர்வதேச சட்டங்களுக்கும் விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடக்கும் வேளையில், அமெரிக்கா தனது சந்தைப் பலத்தைக் காட்டி அச்சுறுத்துவது உலக வர்த்தக அமைப்பையே முடக்கும் செயலாகும். இது போன்ற தன்னிச்சையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் அமெரிக்காவுக்கே பாதகமாக முடியும். நட்பு நாடுகளை ஒடுக்குவதன் மூலம் எழும் பொருளாதாரப் போர், உலகளாவிய வழங்கற் சங்கி லியைச் சீர்குலைத்து, அமெரிக்கர்கள் உட்பட்ட, சாதாரண மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும். உலகப் பொருளாதாரச் சீர்குலைவு உலக அமைதியையும் சீர்குலைக்கும். உலகில் அமெரிக்காவும் அடங்கும். இது பேராபத்தானது. ஆனால் டிரம்ப் அரசோ தொலைநோக்கு அறவே அற்று, பெருமுதலாளி களின் நன்மைகளைக் கருத்திற் கொண்டு, எரிகின்ற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்பதாக பங்குச் சந்தையை மட்டுமே குறிவைத்துக் காய் நகர்த்துகிறது.

டிரம்பின் எதேச்சாதிகாரமான, முன்னுக்குப்பின் முரணான பிரகடனங்களை அவரின் அமைச்சர்கள், அடியா ளுக்குரிய விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்வதையும் அவற்றை விதந்தோதுவதையும் நோக்கும்பொழுது, ஹான்ஸ் கிரிஸ்டியன் அன்டர்சனின், 'பேரரசரின் புதிய ஆடைகள்' என்ற டேனிஷ் சிறுவர் கதையே நினைவுக்கு வருகிறது. பேரரசர் நிர்வாணமாகவே உள்ளார். அதைச் சுட்டிக்காட்ட அவரைச் சூழவுள்ள வர்கள் பயப்படுகிறார்கள். அதை அடையாளங்கண்டு சுட்டிக்காட்ட வேண்டியவர்கள், இந்த அற்பத் தலைவரின் தலைக்கனத்தாலும் பேராசையாலும் தமது எதிர்காலத்தையே தொலைக்கவுள்ள அமெரிக்க மக்களே. அதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்கு எதிர்வரும் நவம்பர் மாதத்து இடைக்காலத் தேர்தலிலே வாய்க்கும்.

ஏனைய உலக நாடுகள் ஏற்கனவே இதை உணர்ந்து தமக்கான எதிர்காலத்தை அமெரிக்காவைத் தவிர்த்து உருவாக்கத் தலைப்பட்டுவிட்டன.

# தாய்வீடு இம்மாதத் தாய்வீட்டில்...


பேரரசரின் புதிய ஆடைகள் 3

மூன்று நாடுகளும் முந்நூறு பீரங்கிகளும் 5
- ரதன்

காஸா 'சமாதான வழி வரைபடம்': ஹமாஸ் ஆயுதக்களைவின் அரசியல் சிக்கல்களும் மறைக்கப்படும் பாலஸ்தீன உரிமைகளும் 9
- ரூபன் சிவராஜா

சியூட்டா: கடலில் தொடங்கிய மக்கள் அலைக்குப் பின்னாலுள்ள வரலாறும் அரசியலும் 16
- ரவீந்திரன் துரைசிங்கம்

துருக்மெனிஸ்தான்: தீ, பளிங்கு, தனிமைப்படுத்தலின் நிலம் 21
- யமீனா கிருஷ்ணசாமி

நீட் குளறுபடியும் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் (CJP) எழுச்சியும் 25
- நெல்லை ஜெயசிங்

இமயத்தில் ஒலிக்கும் பேரழிவின் இரைச்சல் 30
- ச. சத்யதேவன்

இலங்கை ஏன் தொடர்ந்து வெள்ளத்தில் மிதக்கிறது? பேரிடர் மீட்பிலிருந்து காலநிலை மீள்திறன் நோக்கி 35
- மீநிலங்கோ தெய்வேந்திரன்

உணர்வில் தமிழைச் சுமக்கும் றீயூனியன் நாட்டுத் தமிழர்கள் 39
- சிவா முருகுப்பிள்ளை

வட்டுக்கோட்டைத் தீர்மானம் - பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஓர் இடதுசாரியின் பார்வை 46
- வீரகத்தி தனபாலசிங்கம்

மொழியின் அரசியல் - வர்க்க சக்தியாக மொழியும் ஆங்கிலம் பேசும் மேட்டுக்குடியினரும் 49
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பேராசிரியர் ஜேசன் ஆர்டேய் அவர்களின் துயரம் தரும் கதை 56
- ந. சுசீந்திரன்

மனித கண்களுக்குப் புலப்படாத அதி நவீன ட்ரோன்கள்... 58
- சுப்ரமணியம் ஜெயசீலன்

உலகப் புகழ்பெற்ற காற்பந்தாட்டமும் சில விருதுகளும் 61
- குரு அரவிந்தன்

வேர்களின் சாட்சியம் மரங்கள் சொல்லும் நிலத்தின் அரசியல் 64
- அருள்கார்க்கி

ஒரு பேராசிரியரின் கனவும் அதன் முக்கியத்துவமும் தபோவனம் 70
- சரவணன் லக்ஹரன்

ஹோமோன்களும் உள நலமும் 75
- போல் ஜோசேப்

21-ஆம் நூற்றாண்டுப் பெற்றோர்களின் தோல்வி: குழந்தைகளின் உளவியல், சமூகவியல் ரீதியிலான ஓர் ஆய்வு 80
- அகமட் பிஸ்தாமி

விளையாட்டின் வழி கற்றலும் மனித ஆளுமை உருவாக்கமும் 83
- புவனேந்திரன் ரதிகலா

கற்றலில் பின்னூட்டமும் மீளவலியுறுத்தலும் பெற்றோரும் ஆசிரியர்களும் பின்பற்ற வேண்டியவை 88
- சிவபாலு

மாற்றத்துக்கான கற்றலும் வளர்ச்சியும்! 93
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

வெளிநாடுகளில் சொத்துகளை விற்றல் 97
- செந்தூரன் புனிதவேல்

பாவனையும் பராமரிப்பும் 100
- வேலா சுப்பிரமணியம்

அமைதிக்குப் பாதை அமைப்போம்! சர்வதேச அமைதி நாள் 103
- சி. நற்குணலிங்கம்

பேச்சாற்றல் பேராற்றல் 106
- நடராசா சிறிரஞ்சன்

ஓர் ஈழ நாட்குறிப்பு - 7 108
- ஓவியர் ஜீவா

யூடித் பட்லரும் பால்நிலை நிகழ்த்துகையும் 111
- சிவா மாலதி

வேடுவர்களின் சடங்கு 115
- தங்கேஸ்வரன் விக்னேஸ்வரன்

சிலந்தியும் சதுரங்கமும்: இங்மார் பெர்க்மனின் மௌன முத்தொகுதியும் ஏழாம் முத்திரையும் 118
- சொர்ணவேல்

போருக்குப் பலியான இலக்கியவாதி நெல்லை க. பேரன் 124
- வே. விவேகானந்தன்

தமிழ்த்தென்றல் திரு. வி.க.வின் சிந்தனைகள் - ஒரு நோக்கு 127
- இராஜேந்திரம்பிள்ளை சிவலிங்கம்

பேராசியர் கா. சிவத்தம்பியின் மலையகம் குறித்த பார்வையும் பங்களிப்பும் 131
- மல்லியப்புசந்தி திலகர்

வைகறைவாணன்: இரண்டாம் தலைமுறைத் தோழமை 136
- செல்வ. புவியரசன்

நந்தா மாலினி: ஒரு தலைமுறையின் குரலும் நமது காலத்தின் சமூக மனச்சாட்சியும் 138
- பி. பற்குணராஜன்

ஃபிடல் காஸ்ட்ரோ நூற்றாண்டு காஸ்ட்ரோ: ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு 141
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும் தொல்காப்பியத்தில் தொடரியல் 145
- நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

கடந்தகாலச் சுவடுகளை எம் மனங்களில் மீளப்பதித்தது தாமரைச்செல்வியின் 'சுமைகள்' 149
- கந்தர்மடம் அ. அஜந்தன்

சொற்களைச் செமிக்க மறுக்கும் கவிதைகள்...! 152
- இரா. மோகன்ராஜன்

வேர்களை மறக்காமல் வளரச் சொல்லும் 'தேடல்கள்' 155
- மாதவி உமாசுதசர்மா

'அந்த நிமிடம்' - புலம்பெயர்வாழ்வின் பன்முகப் பதிவு 158
- அன்னலட்சுமி இராஜதுரை

'கனகர் கிராமம்' கிழக்குக்கரை வாழ்வியலின் நீள்வெட்டுமுகம்! 160
- அழகு குணசீலன்

எனது பார்வையில் தி. ஞானசேகரனின் அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும் 166
- மைதிலி தயாநிதி

கடல்மேல் நின்று எழுதப்பட்ட முதல் படைப்பு: ஆழி சூழ் உலகு 170
- சு. வேணுகோபால்

அ. யேசுராசாவின் 'தம்பியைப் பேசவிடுங்க' நூல் வெளியீட்டு நிகழ்வு 177

முகமட் சாக்கீரின் 'சம்மாந்துறை வட்டார வழக்கு அகராதி' நூல் வெளியீட்டு நிகழ்வு 178

மகாவம்சத்தை இயற்றிய மகாநாம தேரர் யார்? 180
- என். சரவணன்

ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் 187
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

நிகழ்காலத்தை உருவாக்குதல்:போருக்குப் பிந்தைய 'தேசப்பற்று' இலங்கையில் வரலாறு தேசியப் பழமரபாக உருமாற்றப்படுதல் 192
- நீரா விக்கிரமசிங்க
தமுவல் தமிழாக்கம் - ச. சத்யதேவன்

ஈழத்துக் கவிதை வரலாற்றில் ஞாயிறு 200
- சி. ரமேஷ்

வாழ வழிகாட்டும் குருநாதர் உபதேசம் 208
- கிருங்கை சேதுபதி

கம்பனின் கருவூலம் திறந்து... 211
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

அகமுகம் 216
- பஞ்சகல்யாணி

வெளியே-உள்ளே...! 218
- உஷாதீபன்

பாலைவனச் சோலை 222
- சுடரி சிவகௌரி

அன்புக்குரியவள் 224
- அன்ரன் செக்கோவ்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

# மூன்று நாடுகளும் முந்நூறு பீரங்கிகளும்

◆ரதன்



tg.theeban@gmail.com

ஈரானுடன் அமெரிக்க - இஸ்ரேல் கூட்டணி மோதிக்கொண்டிருக்கும் பொழுது, மூன்று சுனி முஸ்லீம் நாடுகள் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன. இது ஒன்றும் புதிதல்ல. உலகில் பல நாடுகள் தங்களுக்குள் கூட்டணி அமைப்பதும், உடைவதும் இன்று நேற்றல்ல, பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகின்றன. மெக்கா கூட்டணி என அழைக்கப்படும் இந்தக் கூட்டணியின் முழுமையான பெயர் Mecca Joint Defence Agreement ஆகும். முஸ்லீம் உலகம் இன்று இரண்டாக பிரிந்துள்ளது என்பதனை விட உடைந்துள்ளது, பிளந்துள்ளது என்பதே சரியாகும்.

சுனி முஸ்லீம்கள் அதிகளவு வாழும் நாடுகள் சவூதி அரேபியா, பாகிஸ்தான், துருக்கி, எகிப்து, ஜோர்டான், சிரியா, ரியுனிசியா, அல்ஜீரியா, மொரொக்கா, சூடான், லிபியா, இந்தோனேசியா, பங்களாதேஷ், உஸ்பெகிஸ்தான், செனகல், சோமாலியா, நைகர், மாலி, கொமோரஸ் ஆகிய நாடுகள். ஷியா முஸ்லீம்கள் அதிகளவு வாழும் நாடுகள் ஈரான், ஈராக், அசர்பஜான், பாரெயின், தெற்கு லெபனான், யேமன் ஆகிய நாடுகள். இந்தியாவிலும் ஷியா முஸ்லீம்கள் அதிகளவு வாழ்கின்றார்கள்.

சவூதி அரேபியாவை சுற்றிவரவுள்ள நாடுகளில் ஈரானில் தான் அதிகளவு ஷியாக்கள் வாழ்கின்றனர். யேமன் தீவிரவாதிகளால் சவூதி அரேபியாவிற்கு தொடர்ச்சியான தாக்குதல்கள் ஆங்காங்கே நடைபெற்றுவருகின்றன. லெபானின் ஹிஸ்புல்லாவும் சவூதியின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளன. எனினும், இஸ்ரேலின் தொடர்ச்சியான தாக்குதல்களால் ஹிஸ்புல்லா பலமிழந்தே உள்ளது. துருக்கியைச் சுற்றிவர ஈரான், ஈராக், சிரியா, ஜோர்ஜியா, அசர்பஜான் போன்ற நாடுகள் உள்ளன. வடக்கில் ஐரோப்பா உள்ளது. (பல்கேரியா, சிரியா) தெற்கில் மத்திய தரைக் கடலும், வடக்கே கருங்கடலும் உள்ளது. ஒருவகையில் புவியியல் ரீதியாக பாதுகாப்பான பிரதேசத்திலேயே உள்ளது. அரேபியக் கடலின் வடக்கே அமைந்துள்ள பாகிஸ்தானைப் பொறுத்தவரை ஒரு புறத்தில் இந்தியாவும் மறுபுறத்தில் ஆப்கானிஸ்தான், ஈரான் அமைந்துள்ளன. சீனாவும் பாகிஸ்தானின் ஒரு எல்லை நாடாகும்.

துருக்கி ஏற்கனவே நேட்டோவில் உள்ள ஒரு நாடாகும். மெக்கா கூட்டணி ஒப்பந்தம் நேட்டோவினை ஒத்த ஒப்பந்தமாகும். ஏற்கனவே நேட்டோவில் உள்ள ஒரு நாடு ஏன் மற்றொரு நேட்டோவை ஒத்த ஒப்பந்தத்திற்கு கைச்சாத்திட்டுள்ளது என்ற கேள்வி எழாமல் இல்லை. நேட்டோ அமைப்பு பலவீனமாகவுள்ளதா ?

நேட்டோவின் 5-வது பிரிவு ஒரு நாட்டின் மீதான தாக்குதல், சகல நாடுகளின் மீதான தாக்குதலாகவே கருத்திற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கின்றது. அது மேலும், நேட்டோ அங்கத்துவ நாடுகள் அனைத்தும் ஒப்புதல் கொடுக்கும் பட்சத்தில் தாக்குதல் மேற்கொண்ட நாட்டின் மீது நேட்டோ தாக்குதலை மேற்கொள்ளும் எனத் தெளிவுபடுத்துகின்றது.

எனவே துருக்கி மீது இஸ்ரேல் தாக்குதலை மேற்கொண்டால், நேட்டோ அமைப்பால் துருக்கியை பாதுகாக்க இஸ்ரேல் மீது தாக்குதலை மேற்கொள்ளமுடியாது. ஏனெனில், அமெரிக்கா, இஸ்ரேல் நலன்களைப் பாதுகாக்கும். தனிப்பட்ட முறையில் சில நாடுகள் துருக்கிக்கு ஆயுதங்களோ இராணுவ ஆலோசனைகளோ வழங்கலாம். எனவே துருக்கிக்கு தன்னை பாதுகாத்துக்கொள்ள இந்த மெக்கா கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தம் அவசியமாகின்றது. ஓகஸ்ட் 17 டொனால்ட் ட்ரம்ப் ஹோர்முஸ் விவகாரத்தில் ஓமான் அமெரிக்காவுடன் இணைந்து செயற்படாவிட்டால், ஓமான் மீது தாக்குதலை மேற்கொள்ளுவோம் எனத் தெரிவித்துள்ளது. ஓமானில் கணிசமான அளவு சுனி முஸ்லீம்கள் வாழ்கின்றனர். இதுவரை காலமும் அமெரிக்காவின் நட்பு நாடாகவிருந்த ஓமானும் இவ்வாறான ஒரு ஒப்பந்தத்தை வேறு நாடுகளுடன் மேற்கொள்ளலாம். ஆனால், ஓமான் மீதான தாக்குதல் எச்சரிக்கை இந்த ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.

துருக்கிக்கு இவ்ஒப்பந்தம் அவசியமாகவுள்ளது. சவூதி அரேபியாவின் மூலதனம் ஏற்கனவே துருக்கியில் வளர்ச்சியடைந்துள்ள பாதுகாப்பு உபகரணங்கள் தயாரிப்பை சிறப்பாக்க உதவும். இது துருக்கியின் பாதுகாப்பிற்கு வலுச்சேர்க்கும். அதே சமயம் பாதுகாப்பு உபகரணங்களை வேறு நாடுகளுக்கு விற்பனை செய்வதன் மூலம் வருமானத்தையும் அதிகரிக்கும். துருக்கியின் நேட்டோ அங்கத்துவம் அதன் அந்நியச் செலாவணியைப் பாதுகாக்கும். துருக்கியின் பொருளாதார வளர்ச்சிக்கு மெக்கா ஒப்பந்தம் உதவுகின்றது.

துருக்கி நேட்டோ, மெக்கா ஒப்பந்தத்தில் உள்ளமை உல கின் பெரும்பாலான நாடுகளிலிருந்து வரும் பாதுகாப்பு அச்சுறுத்தலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்கின்றது. உதாரணத்துக்கு நேட்டோ வட-அமெரிக்கா, ஐரோப்பா நாடு களை உள்ளடக்கியுள்ளது. மெக்கா ஒப்பந்தம் அரேபியக் கடல், மத்திய கிழக்கு நாடுகளை உள்ளடக்கியுள்ளது.

### இந்தியாவிற்கு இவ்ஒப்பந்தத்தால் ஏற்படப்போகும் பாதிப்புக்கள்:

முதலாவதாக, ஏற்கனவே பலம் பொருந்திய பாகிஸ்தான் இராணுவம், சவூதி அரேபியாவின் பொருளாதார வலிமை யாலும், துருக்கியின் நவீன இராணுவத் திறன்களாலும் மேலும் வலுப்பெறும் வாய்ப்புள்ளது. குறிப்பாக, துருக்கியின் ட்ரோன் தொழினுட்பம், மின்னணுப் போரியல் (Electronic Warfare - EW) அமைப்புகள் மற்றும் நேட்டோ உறுப்புரிமை யின் ஊடாகப் பெற்றுள்ள நவீன இராணுவத் தொழினுட்ப அனுபவம் ஆகியவை இக்கூட்டணியின் இராணுவத் திறனை மேம்படுத்தக்கூடிய காரணிகளாகக் கருதப்படுகின்றன. இத னுடன் பாகிஸ்தானின் இராணுவத் தாக்குதல் மற்றும் பாது காப்புத் திட்டமிடல் திறன்களும் மேலும் வலுப்பெ றக்கூடும். 2026 ஓகஸ்ட் 7-ஆம் திகதி கையெழுத் திடப்பட்ட மெக்கா கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தம், அதிகாரபூர்வமாக எந்தவொரு குறிப்பிட்ட நாட் டையும் இலக்காகக் கொண்டதல்ல என்றும், வெளிப்புறத் தாக்குதல்களுக்கு எதிரான கூட்டு தடுப்பாற்றலை வலுப்படுத்துவதே அதன் நோக் கம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெக்கா ஒப்பந்தம் முதன்மையாக மத்திய கிழக் கின் பாதுகாப்புச் சூழலை மையப்படுத்தி உரு வாக்கப்பட்டிருந்தாலும், அதன் விளைவுகள் பாகிஸ்தானின் இராணுவ மற்றும் மூலோபாய நிலைப்பாட்டையும் வலுப்படுத்தக்கூடியவை. சவூதி அரேபியாவின் பொருளாதார வலிமை, துருக்கி யின் நவீன பாதுகாப்புத் தொழினுட்பம் மற்றும் பாகிஸ்தானின் இராணுவ அனுபவம் ஆகியவை ஒன்றிணைவதன் மூலம் மூன்று நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு புதிய பரிமாணத்தைப் பெறுகிறது.

இந்த நிலையில், இந்தியாவைப் பொறுத்தவரை துருக்கியும் சவூதி அரேபியாவும் முக்கியமான பொருளாதார மற்றும் மூலோபாயப் பங்காளிகளாகத் திகழ்கின்றன. குறிப்பாக, இந்தியா சவூதி அரேபியாவுடன் பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் உளவுத்துறை ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நீண்டகாலமாக உறவுகளைப் பேணி வருகிறது. எனவே, மெக்கா ஒப்பந்தத்தின் உருவாக்கம் இந்தியாவின் பிராந்திய மூலோபாயக் கணக்கீடுகளிலும் தாக்கத்தை ஏற் படுத்தக்கூடிய புதிய புவிசார் அரசியல் சூழலை உருவாக்கு கிறது.

இந்த நாடுகளின் உறவு முக்கியம். எனவே, இந்த ஒப்பந்தம் இந்தியாவைத் தனது பாதுகாப்பு இராணுவ நடவடிக்கை களை மீள ஆய்வு செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளியுள் ளது. எனினும், சவூதி அரேபியா இந்தியாவிற்கு விற்கப்படும் பெற்றோலைக் கருத்திற்கொள்ளும். இந்தியாவுடன் வணிக உறவுகளை வைத்திருக்கவே சவூதி விரும் பும். இந்தியாவிற்கும் பெற்றோல் குறைந்த விலைக்கு வாங்குவதற்கு சவூதி அரேபியா தேவை. இது சவூதிக்கும் தெரியும். இங்கு இந்தியாவின் நிலைமையே சிக்கலாக வுள்ளது.

> ***“மெக்கா ஒப்பந்தம் முதன்மையாக மத்திய கிழக்கின் பாதுகாப்புச் சூழலை மையப்படுத்தி உருவாக்கப் பட்டிருந்தாலும், அதன் விளைவுகள் பாகிஸ்தானின் இராணுவ மற்றும் மூலோபாய நிலைப்பாட்டையும் வலுப்படுத்தக் கூடியவை.”***

சவூதி அரேபியாவும், துருக்கியும் இந்தியா - பாகிஸ்தான் பகையை கருத்திற்கொள் ளாது பாகிஸ்தானை இவ்ஒப்பந்தத்தில் இணைத்துள்ளது. இது இந்தியாவை அவர் கள் கருத்திற்கொள்ளவில்லை என்பத னையும் மத்திய கிழக்கில் இந்தியா நடு நிலைமையாகச் செயற்படவில்லை என்ப தனையும் உறுதிப்படுத்துகின்றது. இந்தி யாவின் வெளியுறவுக் கொள்கையின் பல வீனத்தையே இது காட்டுகின்றது.



இந்தியா ஏற்கனவே இஸ்ரேலுடன் நெருக்கமான உறவை கொண்டுள்ளது. இதுவும் தற்சமயம் இந்தியாவிற்கு ஒரு பாதகமான சூழலையே ஏற்படுத்தியுள்ளது. India-Middle East-Europe Economic Corridor (IMEC) இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார தாழ்வாரத்தைப் பாதிக்கும். ஏற்கனவே, துருக்கி புதிய பாதைகளை தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்திற்கு பதிலளிக்கும் வகையில் இந்தியா ஷியா முஸ்லீம் நாடுகளுடன் தனது உறவைப் பலப்படுத்த முயற்சிக்கலாம். ஆனால், ஷியா நாடுகள் இன்று பலம் பொருந்திய நாடுகளாகவில்லை. இதுவும் இந்தியாவிற்குப் பாதகமாகவே அமையும். இறுதி நடவடிக்கையாக இந்தியா அமெரிக்காவுடன் நெருக்கமான உறவுகளை மேற்கொள்ள வேண்டிய நிப்பந்தத்திற்கு உள்ளாகலாம். ஆனால், இதற்கு இந்தியா அதிகளவு விலையை கொடுக்கவேண்டி வரும். ரஷ்யாவுடன் பகையை வளர்க்கவேண்டி வரும்.

பாகிஸ்தானைப் பொறுத்தவரை, இந்த ஒப்பந்தம் பல்வேறு வகைகளில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய தாகக் கருதப்படுகிறது. குறிப்பாக, சவூதி அரேபியா மற்றும் துருக்கியுடனான நெருக்கமான பாதுகாப்பு உறவின் மூலம் பாகிஸ்தானின் இராஜதந்திர நடவடிக்கைகள் மேலும் வலுப் பெறக்கூடும். அதேவேளை, இந்தியாவுடனான பிராந்திய மற்றும் மூலோபாயப் போட்டியில், இந்தியாவின் நடவடிக்கை களுக்கு எதிராகப் பாகிஸ்தான் தனது அரசியல் மற்றும் இரா ஜதந்திர நிலைப்பாட்டை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பும் உருவாகலாம். குறிப்பாக, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் காஷ்மீர் போன்ற பிரதேசங்களைச் சார்ந்த விவகாரங் களில், சவூதி அரேபியா மற்றும் துருக்கியின் ஆதரவைப் பயன்படுத்தி சர்வதேச அளவில் தனக்குச் சாதகமான அர சியல் சூழலை உருவாக்க பாகிஸ்தான் முயற்சிக்கக்கூடும்.

வளைகுடாவில் வேலை பார்க்கும் பாகிஸ்தானியர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதுடன், இவர்களால் பாகிஸ் தானின் அந்நியச் செலாவணி அதிகரிக்கும். அத்துடன் பாகிஸ் தானின் எரிபொருள் தேவையும் பூர்த்தி செய்யப்படுகின்றது. சீனாவில் தங்கியிருக்கும் பாகிஸ்தானின் தேவையை இது குறைக்கின்றது. இஸ்லாமிய மேற்கத்திய (துருக்கி-நேட்டோ வழியில்) மாற்று வழியை பாகிஸ்தானுக்கு இந்த ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

இவ்அமைப்பில் அணு ஆயுத சக்தி கொண்ட ஒரே நாடாக பாகிஸ்தான் உள்ளது. இவ்அமைப்பினூடாக பாகிஸ்தானின் பிராந்திய நலன்கள் சர்வதேச தளங்களில் பாதுகாக்கப்படு கின்றன. பாகிஸ்தானின் செல்வாக்கும் அதிகரித்துள்ளது.

பாகிஸ்தானின் எல்லை நாடான ஈரானுடான உறவுகள் இவ் ஒப்பந்தத்தால் பாதிப்படையலாம். ஈரான்-அமெரிக்க யுத்தத் தின் பின்னர் பாகிஸ்தான் விடயத்தில் ஈரான் கவனம் செலுத்தலாம். Jaish al-Adl எல்லை இன்றும் பாகிஸ்தானுக்கு பிரச்சினையாகவேயுள்ளது. Jaish al-Adl - இது ஒரு சுனி முஸ்லீம் தீவிரவாத அமைப்பு. ஈரானுக்கு எதிராக செயற் படுகின்றது. Baloch - பலூச் தீவிரவாத அமைப்புகள் பலூச் சஸ்தான் தனி நாட்டிற்காக பாகிஸ்தானிய இராணுவத்துடன் மோதுகின்றன. இவ்விரு அமைப்புகளும் இந்த எல்லையை ஒட்டியே இயங்குகின்றன. ஈரானுடனான சீரான உறவில்லை யெனில் இது பாகிஸ்தானுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

ஆபிரகாம் ஒப்பந்தங்கள் 2020-ஆம் ஆண்டில் அமெரிக்கா வின் மத்தியஸ்தத்துடன் உருவாக்கப்பட்டு, இஸ்ரேலுக்கும் சில அரபு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர உறவு களை ஏற்படுத்துவதற்கான வழியைத் திறந்தன. ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் பஹ்ரைன் முதலில் இவ்வொப்பந்தத் தில் இணைந்ததுடன், பின்னர் மொரோக்கோவும் சூடானும் இஸ்ரேலுடனான உறவுகளை இயல்பாக்கும் நடவடிக்கை களில் ஈடுபட்டன. இவ்வொப்பந்தங்களின் மூலம் இஸ்ரேலின் பிராந்திய இராஜதந்திர அங்கீகாரம் விரிவடைந்ததுடன், பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் அரசியல் துறைகளில் புதிய ஒத்துழைப்புகளும் உருவாகின. இதனால், பாலஸ் தீனப் பிரச்சினை தீர்க்கப்படாத நிலையிலும் இஸ்ரேலுடன் அரபு நாடுகள் உறவுகளை மேம்படுத்துவது, பாலஸ்தீன விவ காரத்தில் இஸ்ரேலுக்கு அரசியல் ரீதியான அனுகூலத்தை வழங்கக்கூடியதாக விமர்சிக்கப்பட்டது.

இந்நிலையில், சவூதி அரேபியாவின் அணுசக்தித் திட்டத் திற்கான அமெரிக்க ஒத்துழைப்பும் இஸ்ரேலுடனான உறவு களை இயல்பாக்கும் விவகாரத்துடன் தொடர்புபடுத்தப்பட் டுள்ளது. 2026 ஜூலையில் அமெரிக்காவும் சவூதி அரேபி யாவும் சிவில் அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெ ழுத்திட்டன. அதனைத் தொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சவூதி அரேபியா இஸ்ரேலுடன் உறவு களை இயல்பாக்கி ஆபிரகாம் ஒப்பந்தத்தில் இணையா விட்டால், அணுசக்தி ஒப்பந்தத்தை முன்னெடுக்க முடியாது எனத் தெரிவித்தார். இதனால், சவூதி அரேபியாவின் அணு சக்தித் திட்டம், இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகள் மற் றும் அமெரிக்காவின் மத்திய கிழக்கு மூலோபாயம் ஆகி யவை ஒன்றோடொன்று தொடர்புபட்ட புதிய அரசியல் சூழல் உருவாகியுள்ளது.

இந்தப் பின்னணியிலேயே சவூதி அரேபியா, பாகிஸ்தான், துருக்கி ஆகிய நாடுகளுக்கிடையில் 2026 ஓகஸ்ட் 7-ஆம் திகதி மெக்காவில் கையெழுத்திடப்பட்ட கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தத்தைப் பார்க்க வேண்டியுள்ளது. இவ்வொப்பந்தம் அதிகாரப்பூர்வமாக எந்தவொரு குறிப்பிட்ட நாட்டையும் இலக்காகக் கொண்டதாக அறிவிக்கப்படவில்லை என்றா லும், மத்திய கிழக்கில் அமெரிக்கா-இஸ்ரேல் மையப்படுத் திய பாதுகாப்பு அமைப்புகளுக்கு மாற்றான பிராந்திய பாது காப்புக் கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியாக இது பார்க் கப்படுகிறது.

இக்கூட்டணியின் முக்கிய தலைமை நாடாக சவூதி அரேபியா திகழ்கின்றது. எகிப்து உள்ளிட்ட மேலும் பல சுனி பெரும் பான்மை நாடுகளும் இவ்வொப்பந்தத்தில் இணைவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தி வருகின்றன. ஈரானைச் சுற்றி


யுள்ள மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்கா தனது இராணுவத் தளங்களையும் பாதுகாப்புக் கட்டமைப்புகளையும் நிறுவியுள்ள நிலையில், அவை ஈரானின் தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளன. இதன் விளைவாக, சில நாடுகளின் முக்கியமான பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு மையங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், அமெரிக்காவுடனான இந்நாடுகளின் பாதுகாப்பு மற்றும் இராணுவ உறவுகள் எதிர்காலத்தில் எவ்வாறு தொடரும் என்பது போருக்குப் பின்னரே தெளிவாகும்.

இந்தப் பின்னணியில், மெக்கா கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தம் உருவாகியுள்ள காலகட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். குறிப்பாக, மத்திய கிழக்கில் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழலிலேயே இக்கூட்டணி உருவாகியுள்ளது. இதன் மூலம், மத்திய கிழக்கு நாடுகள் தமது பாதுகாப்பை முழுமையாக மேற்கு நாடுகளின், குறிப்பாக அமெரிக்காவின், பாதுகாப்பு உத்தரவாதங்களில் தங்கவைத்திருப்பதற்குப் பதிலாக, பிராந்திய நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பின் மூலம் தன்னிறைவான பாதுகாப்புக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்துகின்றன. தமது பாதுகாப்பு மற்றும் மூலோபாயத் தேவைகளை பிராந்திய அளவில் தாங்களே கையாள்வதே நீண்டகாலத்தில் தமக்குச் சாதகமானது என்ற புதிய சிந்தனையின் வெளிப்பாடாகவும் மெக்கா கூட்டணியை நோக்கலாம்.

மொத்தத்தில், மத்திய கிழக்கில் நிலவும் போர்ச்சூழல், பிராந்திய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் மேற்கு நாடுகளின் பாதுகாப்பு உத்தரவாதங்களில் காணப்படும் சார்பு ஆகியவற்றின் பின்னணியிலேயே மெக்கா கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தம் உருவாகியுள்ளது. இவ்வொப்பந்தம் சவூதி அரேபியா, பாகிஸ்தான், துருக்கி ஆகிய நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதோடு, எதிர்காலத்தில் மேலும் பல மத்திய கிழக்கு நாடுகளைப் பிராந்திய பாதுகாப்புக் கட்டமைப்புக்குள் கொண்டுவரக் கூடிய வாய்ப்பையும் ஏற்படுத்துகிறது. இதன் மூலம், தமது பாதுகாப்பை அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் மீது முழுமையாகச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக, பிராந்திய நாடுகளின் கூட்டுப் பாதுகாப்பை முன்னிறுத்தும் புதிய மூலோபாயப் போக்கு உருவாகி வருவதைக் காண முடிகிறது. எனவே, மெக்கா கூட்டணி ஒரு தனிப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தமாக மட்டுமன்றி, மத்திய கிழக்கின் எதிர்கால புவிசார் அரசியல் மற்றும் பாதுகாப்பு ஒழுங்கில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய முக்கியமான தொடக்கமாகவும் கருதப்படுகின்றது.



rathan@thaiveedu.com



# காஸா

## ‘சமாதான வழி வரைபடம்’

## ஹமாஸ் ஆயுதக்களைவின் அரசியல் சிக்கல்களும் மறைக்கப்படும் பாலஸ்தீன உரிமைகளும்

ரூபன் சிவராஜா

tg.theeban@gmail.com



*காஸாவிற்கான சமாதான வழிவரைபடம் (Roadmap to peace) ஆயுதக் களைவு, நிர்வாக மாற்றம், பாதுகாப்பு ஏற்பாடுகள் என வான விடயங்களை முன்வைக்கிறது. ஆயினும் காஸா மீதான இஸ்ரேலின் இராணுவ ஆக்கிரமிப்பு, இன அழிப்பிற்கெதிரான நீதிப் பொறிமுறை, பொறுப்புக்கூறல் மற்றும் மேற்குக்கரை மக்கள் மீதான நாளாந்த ஒடுக்குமுறைகள், பாலஸ்தீன மக்களின் நில, அரசியல், வாழ்வுரிமைகள் குறித்த அடிப்படைக் கேள்விகளுக்கு எவ்வாறு பதில் அளிக்கப்போகிறது என்பதிற்தான் இந்தச் சமாதான வழி வரைபடத்தின் வெற்றி தங்கியுள்ளது.*

ஹமாஸ் அமைப்பு முழுமையான ஆயுதக் களைவுக்கு உடன்பட்டுள்ளதான செய்தி சர்வதேச அரசியலில் பேசு பொருளாகியுள்ளது. இந்தச் செய்தி பாலஸ்தீன மக்களின், குறிப்பாகக் காஸாவின் எதிர்காலம் குறித்த பல கேள்வி களை எழுப்பியுள்ளன. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமைத்துள்ள ‘சமாதான சபை’யின் (Board of Peace) மூலம் உருவாக்கப்பட்டுள்ள வழிவரைபடத்திற்கு (Road-map) அமைய, ஹமாஸ் உட்பட்ட ஏனைய பாலஸ்தீன ஆயு தக் குழுக்கள் தங்கள் ஆயுதங்களைப் படிப்படியாக ஒப்ப டைக்க வேண்டும் என்ற தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. சமா தான சபை என்பது, காஸாவில் போர் நிறுத்தம், ஆயுதக் களைவு மற்றும் மறுசீரமைப்பு ஆகியவற்றை மேற்பார்வையிடுவதற்கென ட்ரம்பினால் 2026 ஜனவரியில் உருவாக்கப்பட்ட அமைப் பாகும். டாவோஸில் (Davos) நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தின் (World Economic Forum) மாநாட்டில் இந்தச் சபை நிறுவப்பட்டது. இதன் ஆயுட்காலத் தலை வராக டிரம்ப் செயற்படுகிறார்.

### ஆயுதக் களைவு:

இத்திட்டம், ஹமாஸ் உட்பட்ட ஏனைய பாலஸ் தீன அமைப்புகள் படிப்படியாகத் தமது ஆயுதங்களைக் கைவிடும் முறையை விளக்குகிறது. கனரக ஆயுதங்கள், ஏவுகணைகள், இராணுவ உற்பத்தி மையங்கள் மற்றும் சுரங் கப்பாதைகள் ஆகியவை ஒரு சுயாதீன தேசிய தொழி னுட்ப வல்லுநர் குழு (National Committee) மற்றும் சர்வதேச கண் காணிப்புக் குழுவின் (International monitors) மேற்பார் வையில் கணக்கெடுக்கப்பட்டுத் திரட்டப்படும் (சேமிக்கப் படும்) அல்லது அழிக்கப்படும்.



கைத்துப்பாக்கிகள் மற்றும் காவற்றுறை உபகரணங்கள் பதிவு செய்யப்பட்டு, தற்போது எகிப்து மற்றும் ஜோர்டானில் பயிற்சி பெற்று வரும் புதிய பாலஸ்தீன காவற்படைக்குக் கட்டங்கட்டமாக மாற்றப்படும். ஹமாஸ் தரப்பின் இந்த விட்டுக் கொடுப்பிற்குப் பதிலாக, இஸ்ரேலிய அரசு ஆரம்பத்தில் ஒப்புக்கொண்ட 'மஞ்சள் எல்லைக் கோட்டிற்கு' (Yellow Line) இஸ்ரேலியப் படைகள் படிப்படியாகப் பின்வாங்க வேண்டும்.

இதன் ஓர் அங்கமாக காஸாவில் தனது அரசாங்கத்தைக் கலைத்துவிட்டதாகவும், தேசியக் குழுவிடம் (National Committee) அதிகாரத்தை ஒப்படைக்கத் தயாராகி வருவதாகவும் ஜூலை மாதத் தொடக்கத்தில் ஹமாஸ் அறிவித்தது. காஸாவில் தனது அரசாங்கத்தால் பணிக்கமர்த்தப்பட்ட பல்லாயிரக்கணக்கான அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் அல்லது புதிய வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்பதை உறுதிசெய்யவும் ஹமாஸ் கோரியது. சுகாதாரப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் காவற்றுறையினர் உட்பட தனது நிர்வாகத்தின் பல்லாயிரக்கணக்கான ஊழியர்களின் உரிமைகள், ஊதியம் அல்லது புதிய வேலைவாய்ப்புகள் நியாயமான முறையில் பாதுகாக்கப்படுவதை உடன்படிக்கை ஏற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஆயுத ஒப்படைப்பிற்குப் பதிலாக இஸ்ரேல் தனது படைகளை காஸாவிலிருந்து மீளப்பெற வேண்டும் என ஹமாஸ் நிபந்தனை முன்வைத்துள்ளது. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக சர்வதேசக் கண்காணிப்பாளர் குழு மற்றும் சர்வதேச உறுதிப்படுத்தல் படை (International monitors and an international stabilisation force.) ஆகியவை அமைக்கப்பட்டு காஸாவின் நிர்வாகப் பொறுப்புப் படிப்படியாக ஒரு பாலஸ்தீன இடைக்கால நிர்வாகத்திடம் கையளிக்கப்படும் எனப்படுகின்றது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் கடுமையான எதிர்ப்பும் அதிருப்தியும் நிலவுகிறது. இஸ்ரேலிய அதிகாரிகளும் யூத இனவாதக் கட்சிகளும் ஹமாஸின் நோக்கங்கள் குறித்து மிகுந்த சந்தேகங்களை வெளிப்படுத்தியுள்ளன. ஆயுதக் களைவு தொடங்கும் வரை தனது படைகளை மீளப் பெறுவதற்கு இஸ்ரேல் மறுக்கிறது. இன்றைய சூழலில் இஸ்ரேல் தனது இராணுவ நிலைகளைக் காஸாவின் மேற்கே நகர்த்தியுள்ளதோடு காஸாவின் 65 வீதத்திற்கு மேலான நிலப்பரப்பினைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. ஆயுதக் களைவினை முழுமையாக நிறைவேற்றுவதற்கு முன்நிபந்தனையாக இஸ்ரேல் அனைத்துத் தாக்குதல்களையும் நிறுத்திப் படைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் ஹமாஸ் கோருகிறது.

## ஹமாஸ் ஆயுதக் களைவை ஏற்றுக்கொள்வதற்கான காரணங்கள்:

இத்திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கான ஹமாஸின் முடிவிற்குப் பல காரணங்கள் உள்ளன. எகிப்த், கட்டார் மற்றும் துருக்கி ஆகிய பிராந்திய மத்தியஸ்தர்கள் மற்றும் அமெரிக்காவின் தீவிர அழுத்தத்தினை ஒரு காரணமாகக் குறிப்பிடலாம். ஹமாஸ் அமைப்பின் தலைவர் இஸ்மெயில் ஹனியே 2024 ஜூலை ஈரானின் புதிய அதிபர் மசூத் பெசெஷ்கியனின் (Masoud Pezeshkian) பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டிருந்தபோது, தெஹ்ரானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டார். அதன் பின்னர், கலீல் அல்-ஹய்யா (Khalil al-Hayya) மூத்த தலைவராக நியமிக்கப்பட்டார். இந்தப் பின்னணியில் அமைப்பிற்குள் முடிவெடுக்கும் செயல்முறையை எளிதாக்கிய உள்ளக மறுசீரமைப்பு நிகழ்ந்ததாக மேற்கின் ஊடகங்கள் கணிக்கின்றன. அத்தோடு ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் கூட்டுத்தாக்குதல் ஹமாஸிற்கான ஈரானின் பின்புல ஆதரவை வெகுவாகப் பாதித்துள்ளது. இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாரிய உணவுப் பற்றாக்குறை, அழிவுகள் மற்றும் தொடர்ச்சியான இராணுவத் தாக்குதல்களுக்கு மத்தியில் வாழும் காஸாவின் கொடூரமான மனிதநேய நெருக்கடி ஹமாசின் இச்சமரசத்திற்குரிய மற்றுமோர் முக்கிய காரணியாகக் கணிக்கப்படுகின்றது.

ஹமாஸ் இந்த வழிவரைபடத்தை ஏற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டாலும், இதன் நடைமுறைச் சாத்தியம், இஸ்ரேல் படைகளை மீளப்பெறுவதிலேயே முழுவதுமாய்த் தங்கியிருக்கின்றது. ஹமாஸ் மீது நம்பகமின்மையை வெளிப்படுத்தியுள்ள இஸ்ரேல், ஹமாஸ் ஆயுதங்களைக் களையும் வரை

தாம் படைகளைத் திரும்பப் பெறப்போவதில்லை என்றும் கூறியுள்ளது. தற்போது காஸாவைத் தொடர்ந்தும் போர் மேகங்கள் சூழ்ந்துள்ளன. இஸ்ரேல் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்திவருகின்றது. அரசியல் ரீதியான எந்த வொரு உடன்படிக்கைகளையும் எட்டுவதற்கு உகந்த விட் டுக்கொடுப்புகளோ அரசியல் நெகிழ்வுத்தன்மையோ இஸ்ரேல் தரப்பிடமிருந்து இதுவரை வெளிப்படவில்லை.

## டிரம்பின் '20 அம்ச' காஸா தீர்வுத்திட்டம்:

டிரம்பின் 20 அம்ச காஸா தீர்வுத்திட்டத்தின் சாரம் கீழே இடம்பெறுகின்றது. இது 09.10.2025 பிபிசி வெளியிட்ட தரவி லிருந்து தொகுக்கப்பட்டதாகும்:

- **போர்நிறுத்தம், பிணைக்கைதிகள் விடுதலை மற்றும் கைதிகள் பரிமாற்றம்:**
  - இரு தரப்பும் இத்திட்டத்தை ஏற்றவுடன் உடனடியாக அனைத்து இராணுவ நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டு, இஸ்ரேலியப் படைகள் ஒப்புக்கொள்ளப்பட்ட எல்லைக் கோடு வரை பின்வாங்கும்.
  - இஸ்ரேல் இணக்கம் தெரிவித்த 72 மணி நேரத்திற்குள் அனைத்துப் பிணைக்கைதிகளும் ஒப்படைக்கப்படுவார் கள். ஆயுள் தண்டனை பெற்ற 250 பாலஸ்தீனக் கைதிக ளையும், 2023 ஒக்டோபர் 7-இற்குப் பின் கைது செய்யப் பட்ட பெண்கள், குழந்தைகள் உட்பட 1700 பேரையும் இஸ்ரேல் விடுவிக்கும்.
  - ஆயுதங்களைக் கைவிட்டு அமைதியான சகவாழ்வை ஏற்கும் ஹமாஸ் உறுப்பினர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்படும். காஸாவை விட்டு வெளியேற விரும்பும் ஹமாஸ் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பான வெளியேற் றம் உறுதிப்படுத்தப்படும்.
- **நிர்வாகம், பாதுகாப்பு மற்றும் ஆயுதக் களைவு:**
  - அரசியல் சார்பற்ற, தொழில்முறை வல்லுநர்களைக் கொண்ட ஒரு பாலஸ்தீனக் குழு காஸாவின் அன்றாட சிவில் நிர்வாகத்தைக் கவனித்துக்கொள்ளும்.
  - டொனி பிளேயர் உள்ளிட்டோர் அடங்கிய டொனால்ட் டிரம்ப் தலைமையிலான சமாதான அவை, பாலஸ்தீன தன்னாட்சி நிர்வாகம் சீர்திருத்தங்களை நிறைவு செய்து அதிகாரத்தை ஏற்கும் வரை, காஸா மறுசீரமைப்பையும் நிதி மேலாண்மையையும் கண்காணிக்கும். ஹமாஸ் மற்றும் பிற ஆயுதக் குழுக்கள் எதிர்கால நிர்வாகத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ எந்தப் பங்கையும் வகிக்க முடியாது. சுரங்கப்பாதைகள் மற்றும் ஆயுத உட் கட்டுமான மையங்கள் முற்றிலும் அழிக்கப்படும்.
  - ஒரு சர்வதேச கண்காணிப்புக் குழு (ISF) அமைக்கப்பட்டு, அது புதிய பாலஸ்தீனக் காவல் படைக்குப் பயிற்சிய ளித்து பாதுகாப்பை உறுதிசெய்யும். ஆயுதக் களைவு நிறைவேறுவதற்கு ஏற்ப இஸ்ரேலியப் படைகள் (ISF) படிப் படியாக வெளியேறும். இஸ்ரேல் காஸாவை ஆக்கிர மிக்கவோ அல்லது தன்னுடன் இணைத்துக் கொள்ளவோ முடியாது.
- **மனிதநேய உதவி மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு:**
  - குடிநீர், மின்சாரம், மருத்துவமனைகள் மற்றும் இடிபாடு களை அகற்றுவதற்கான உதவிகள் ஐ.நா. மற்றும் செஞ்சி லுவைச் சங்கம் ஆகியனவற்றின் ஊடாக காஸாவிற்குள் அனுமதிக்கப்படும். முதலீடுகளை ஈர்க்கவும் வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் சாதகமான வரிச் சலுகைக ளுடன் கூடிய சிறப்புப் பொருளாதாரப் பொறிமுறை உரு வாக்கப்படும்.
  - இருதரப்பிற்கிடையிலும் சமாதான சகவாழ்வை ஊக்கு விக்கவும், நேர்மறையான எண்ணங்களை உருவாக்கவும் மதங்களுக்கிடையிலான உரையாடல்கள் தொடங்கப் படும். பாலஸ்தீன அதிகாரசபையின் சீர்திருத்தங்கள் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் வெற்றிகரமாக நிறைவ டையும் பட்சத்தில், பாலஸ்தீனத் தனிநாடு மற்றும் சுய நிர்ணய உரிமைக்கான வழிமுறை நம்பகமான முறையில் திறக்கப்படும்.





தனது இந்தத் திட்டம் நிலையான சமாதானத்திற்கான வர லாற்றுத் திருப்புமுனையான உடன்படிக்கை என்று கூறியுள் ளதோடு, இஸ்ரேலின் பாதுகாப்பினை உறுதிசெய்யும் என் றும் ட்ரம்ப் புகழாரம் சூட்டியுள்ளார்.

## சர்வதேச எதிர்வினைகளும் பாலஸ்தீனத் தரப்பின் நிலைப்பாடுகளும்:

இந்தத் திட்டம் எதிர்வினைகளுடன் நம்பிக்கையீனங்களை யும் பல மட்டங்களில் வெளிப்படுத்தியுள்ளது. இதன் அடுத் தகட்ட நகர்வுகளை உறுதிசெய்வதற்காக அனுசரணை நாடு களான எகிப்த், கட்டார் மற்றும் துருக்கி ஆகியவை தொடர்ந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றன. பாலஸ்தீனத் தரப்பில், இஸ்ரேல் தனது தாக்குதல்களை முற் றிலுமாக நிறுத்தி படைகளை முழுமையாகத் திரும்பப் பெற்றால் மட்டுமே ஆயுதக் களைவு சாத்தியமாகும் என்று ஹமாஸ் வலியுறுத்துகிறது. பாலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் போன்ற சில அமைப்புகள் முழுமையான உடன்பாடு எட்டப் பட்டுள்ளதாக வரும் செய்திகளை நிராகரித்து ஆட்சேபனைகளை வெளிப்படுத்தியுள்ளன.

இஸ்ரேல் இத்திட்டத்தினைப் பெரும் சந்தேகத் துடனேயே எதிர்கொள்வதாக அறியமுடிகிறது. ஆரம்பத்தில் இஸ்ரேல் இந்த வரைவை நிராகரித் தது. அதேவேளையில் இதாமர் பென்-க்வீர் (Ita-mar Ben-Gvir) போன்ற தீவிர வலதுசாரி அமைச் சர்கள் இவ்வொப்பந்தத்தை ஏற்க முடியாது எனக் கூறி வருகின்றனர். பிற அரசியற் தலைவர்களும் ஹமாஸ் தனது கட்டமைப்புகளைத் தக்கவைத் துக்கொள்ளும் எந்தவொரு தீர்வையும் கடுமை யாக எதிர்க்கின்றனர். சர்வதேச அளவில், ஐரோப் பிய ஒன்றியம், பிரித்தானியா, ஜேர்மன் மற்றும் பெல்ஜியம் போன்ற தரப்புகள் கவனத்தோடு நம் பிக்கையை வெளிப்படுத்தியுள்ளன. ஆனால் இரு தரப்பும் தமது கடப்பாடுகளையும் வாக்குறுதி களையும் நிறைவேற்றுவதிலும் - மனிதாபிமான உதவிகள் சென்றடைவதை அனுமதிப்பதிலும் - சாத்தியமான முறையில் 'இரு அரசுகள் தீர்வினை (Two state solution)' நோக்கி நகர்வதிலுமே பெரிதும் தங்கியுள்ளது எனவும் இந்நாடுகள் வலியுறுத்தி யுள்ளன. 1967 ஏழுநாள் போருக்கு முந்திய எல்லைகளை அடிப்படையாகக் கொண்ட சுதந்திர இறைமையுள்ள அரசு அமையும் வகையில் உடன்படிக்கை நகரும் என எதிர்பார்ப் பதாக பாகிஸ்தான் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

## நடைமுறைப்படுத்தலின் சவால்கள்:

இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் பல கட்டங்களிலும் தரப்பு களிலும் சவால்கள் நிலவுகின்றன. நடவடிக்கைகளின் வரிசை முறை (Sequencing) குறித்த முரண்பாடு தோன்றி யுள்ளது. இஸ்ரேல் படைகளை முழுமையாக மீளப்பெறுவ தற்குச் சமாந்தரமாகவே தமது ஆயுதக் களைவு நிகழ வேண்டும் என ஹமாஸ் கோருகிறது. ஆனால், படைகளின் மீளப்பெறுதலுக்கு முன்பாக ஹமாஸ் முழுமையாக ஆயுதங்களைக் களைய வேண்டும் என இஸ்ரேலும் மற்றும் ட்ரம் பின் சமாதான வாரியமும் கூட்டாக வலி யுறுத்துகின்றன. பேரழிவுகளுக்குப் பிறகு எந்தளவிற்கு ஹமாசிடம் கனரக ஆயுதங் கள், ஏவுகணைகள் மற்றும் சுரங்கப் பாதை வலைப்பின்னல்கள் எஞ்சியுள்ளன என்பதும் தெளிவற்றதாகவே உள்ளது. ஒரு சுயாதீனமான மூன்றாம் தரப்புக் குழு அமைப்பது குறித்துத் திட்டத்தில் தெளி வற்ற குறிப்புகளே பிரஸ்தாபிக்கப்பட்டுள் ளன. ஆயுதக் களைவைக் கண்காணிப் பது அல்லது உறுதிப்படுத்துவது யார் என்பது வெளிப்படையாகக் குறிப்பிடப் படவில்லை. ஆயுதக் களைவு காஸாவை மட்டும் உள்ளடக்கியதா? அல்லது மேற் குக்கரை மற்றும் கிழக்கு ஜெருசலேமை யும் உள்ளடக்குமா என்பதும் நிச்சயமற்ற தாகவே உள்ளது.

> ***"ஒக்ரோபர் 2025-இல் முதற்கட்ட போர் நிறுத்தம் அறிவிக்கப் பட்டதிலிருந்து 1100-இற்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வுடன்படிக்கை நிலைகொள் முன்னேற்றத்தையோ அல்லது பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமையையோ அடைய வழிகோலுமா என்பதில் காஸா மக்கள் ஆழ்ந்த சந்தேகத்தைக் கொண்டுள்ளனர்."***

## ஆயுதக் களைவு குறித்த பாலஸ் தீன மக்களின் கருத்து:

ஹமாஸ் அமைப்பின் அரசியற் பிரிவின் புதிய தலைவராக கலீல் அல்-ஹய்யா (Khalil al-Hayya) தேர்ந்தெடுக்கப்பட்ட

பிறகும், எமிரேட்டினை மையமாகக் கொண்டு இயங்கும் தொழிலதிபரும் முன்னாள் ஃபதா (Fatah) இயக்கத்தின் மூத்த தலைவருமான முகமது தஹ்லான் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னரே இம்முடிவு எட்டப்பட்டது. ஒக்ரோபர் 2025-இல் முதற்கட்ட போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 1100-இற்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வுடன்படிக்கை நிலைகொள் முன்னேற்றத்தையோ அல்லது பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமையையோ அடைய வழிகோலுமா என்பதில் காஸா மக்கள் ஆழ்ந்த சந்தேகத்தைக் கொண்டுள்ளனர். பாலஸ்தீன உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு மூலோபாயத் தூணாகவே ஆயுதமேந்திய போராட்டம் ஹமாஸின் கொள்கைச் சாசனத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளது. எனவே ஆயுதங்களைக் கைவிடுவது என்பது ஹமாஸின் அடிப்படைக் கொள்கைக்கு முற்றிலும் முரணானது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

பாலஸ்தீன மக்களிற் பெரும்பான்மையினரும் இஸ்ரேலின் யூத பேரினவாத ஆக்கிரமிப்பிற்கு எதிரான முதன்மைக் கருவியாகவே ஆயுதமேந்திய போராட்டத்தைப் பார்க்கின்றனர். ஒக்ரோபர் 2025-இல் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்றில், 69 வீதமான பாலஸ்தீனர்கள் (மேற்குக் கரையில் 87 வீதம், காஸாவில் 55 வீதம்) ஹமாஸ் ஆயுதங்களைக் கைவிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். காஸாவின் நிர்வாகப் பொறுப்புகளை விட்டுக்கொடுப்பதும் ஆயுதக் களைவை ஏற்பதும், போருக்குப் பிறகு தமது அமைப்பைச் சீரமைத்துக் கொள்வதற்காகக் ஹமாஸ் மேற்கொள்ளுகின்ற ஒரு தந்திரோபாய நகர்வாக இருக்கலாம்; என்ற கணிப்பும் நிலவுகின்றது. இந்த இராஜதந்திர நகர்வு மூலம் தமது அரசியல் மற்றும் கருத்தியல் நிலையைத் தக்க வைத்துக் கொள்ளவும் உதவும் என்றும் ஹமாஸ் காய்நகர்த்தக்கூடும்.

> ***“காஸா போர் ஹமாசிற்கு எதிரான போராட்டமாகச் சித்திரிக்கப்படும் வேளையில், மேற்குக் கரையை ஹமாஸ் நிர்வகிக்கவில்லை. அதனை பாலஸ்தீன தன்னாட்சி அதிகார சபையே (PA) நிர்வகிக்கிறது. பாலஸ்தீன மக்களை அவர்களது நிலத்தில் இருந்து வெளியேற்றுவதற்கான நீண்டகால இஸ்ரேலிய அரசியல் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாகவே இந்தத் திட்டமிட்ட யூதக் குடியேற்றவாசி வன்முறையும் நில ஆக்கிரமிப்பும் கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளன.”***

## இஸ்ரேலின் எதிர்ப்பும் குடியேற்றவாசி வன்முறையும்:

உலகத்தின் கவனம் ஹமாஸ் ஆயுதக்களைவு மீது குவிந்துள்ள நிலையில், மேற்குக்கரையின் கிராமங்களைச் சூறையாடும் இஸ்ரேலியக் குடியேற்றவாசிகளின் ஆயுதங்களை யார் களைவார்கள் என்ற கேள்வி இருட்டடிப்புச் செய்யப்படுகின்றது. ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரையின் குஸ்ரா (Qusra) எனும் கிராமத்தில், பாலஸ்தீனக் குடும்பங்கள் ஓகஸ்ட் மாதம் முழுவதையும் தமது சொந்த வீடுகளுக் குள்ளேயே சிறை பிடிக்கப்பட்ட நிலையில் கழித்துள்ளனர். இஸ்ரேலியக் குடியேற்றவாசிகள் அம்மக்களின் வீட்டு முன் றில்களில் கூடாரங்களை அமைத்து, வெளிப்புற உலகத்துடனான அவர்களின் தொடர்பைத் துண்டித்தனர். குடிநீர் மற்றும் மின்சார இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. வெளியே கூடியிருந்த ஆயுதமேந்திய நபர்கள் ஜன்னல்களை உடைத்து, கற்களை எறிந்து, வீட்டு உபயோகப் பொருட்களைத் திருடிச் சென்றனர்.

இக்கிராமத்தில் நடப்பதும் நடந்ததும் ஒரு தனிப்பட்ட சம்பவமல்ல. ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரை முழுவதும் அவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறையின் ஒரு பிம்பமே இது என்று Middle East Eye தளத்தில் எழுதிய கட்டுரையில் பிரிட்டிஷ்-துனிசிய எழுத்தாளரும் மத்திய கிழக்கு அரசியல் நிபுணருமான சௌமயா ஃகன்னூஷி (Soumaya Ghannoushi) சுட்டியுள்ளார்.

## அரசு ஆதரவு குடியேற்றவாசி வன்முறை:

மேற்குக்கரை முழுவதிலும் அரங்கேற்றப்படும் வன்முறைகளுக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. அவை பெரும்பாலும் யூதக் குடியேற்றவாசி வன்முறையாளர்களால் நிகழ்த்தப்படுகிறது. இஸ்ரேல் இராணுவ, காவல்துறை இயந்திரங்களின் துணையோடு அவை நிகழ்த்தப்படுகின்றன. அந்த வன்முறைகள் ஒரு நிலையான மாதிரியைப் பின்பற்றுகின்றன. குடியேற்றத் திட்டங்கள் நிறுவப்படும்போது, சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, போக்குவரத்துச் சாலைகள் அடைக்கப்பட்டு, மேய்ச்சல் நிலங்கள் துண்டிக்கப்பட்டு, பயிர்கள் அழிக்கப்படுகின்றன. தற்போதும்கூட காஸாவின் வடபகுதியில் மூன்று புதிய இராணுவ மற்றும் விவசாயச் சாவடிகளை அமைக்க வலதுசாரி இஸ்ரேலிய அமைச்சர்கள் முன்மொழிந்துள்ளனர். இது வரலாற்று ரீதியாக நிரந்தர யூதக் குடியேற்றங்களுக்கு முன்னோடியாக அமைந்த ஒரு மாதிரி ஆகும்.

2025-ஆம் ஆண்டின் ஒலிவப் பழ அறுவடைக்காலத்தின் இரண்டு மாதங்களில், குடியேற்றவாசிகள் நடத்திய 178 தாக்குதல்களை ஐ.நா. பதிவு செய்துள்ளது. இதில் 6000-இற்கும் மேற்பட்ட மரங்களும் கன்றுகளும் அழிக்கப்பட்டன. நீர் ஆதாரங்கள் பறிக்கப்படுகின்றன. 2026-இல் மட்டும் நீர் வளங்கள் மீது மட்டும் 160-இற்கும் மேற்பட்ட தாக்குதல்கள் பதியப்பட்டு சான்றுபடுத்தப்பட்டுள்ளன. பிட்செலெம் (B'Tselem), சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International) மற்றும் மனித உரிமைக் கண்காணிப்பகம் (Human Rights Watch) போன்ற மனித உரிமை அமைப்புகள் இந்நிகழ்வுகளை இன அழிப்பு, வலிந்த இடப்பெயர்வு மற்றும் அரச ஆதரவு வன்முறை என விவரிக்கின்றன.

இஸ்ரேலின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் இதாமர் பென்-க்வீரின் (Itamar Ben-Gvir) கீழ், குடியேற்றவாசிகளின் பாதுகாப்புப் படைகளுக்கு 100 000-இற்கும் மேற்பட்ட புதிய



துப்பாக்கி உரிமங்கள் வழங்கப்பட்டு, ஆயிரக்கணக்கான தானியங்கி துப்பாக்கிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதனால் இராணுவம், குடியேற்றவாசிகள் மற்றும் ஆயுதமேந்திய பொதுமக்கள் என்ற வேறுபாடுகள் இல்லாமலாக்கப்பட்டு, இராணுவமயமாக்கல் கூர்மையாக்கப்பட்டுள்ளது.

## ஆயுதக் களைவின் பின்னால் மறைக்கப்படும் நில உரிமை:

வெளிப்படையான ஆக்கிரமிப்பு மேற்குக் கரையில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. மேற்குக்கரையின் 82 வீதமாக நிலப் பரப்பினை இஸ்ரேலின் ஆளுகையின் கீழ் கொண்டுவரும் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. கடந்த நான்கு ஆண்டுகளில் 104 புதிய குடியேற்றங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 07.10.2023 முதல் ஜூலை 2026 வரை, மேற்குக்கரை மற்றும் கிழக்கு ஜெருசலேமில் இஸ்ரேலியப் படைகள் அல்லது குடியேற்றவாசிகளால் குறைந்தது 1122 பாலஸ்தீனர்கள் (246 குழந்தைகள் உட்பட) கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா. மனிதநேய விவகாரங்களின் ஒருங்கிணைப்பு அலுவலகம் (UN OCHA) தெரிவித்திருக்கிறது.

காஸா போர் ஹமாசிற்கு எதிரான போராட்டமாகச் சித்திரிக்கப்படும் வேளையில், மேற்குக்கரையை ஹமாஸ் நிர்வகிக்கவில்லை. அதனை பாலஸ்தீன தன்னாட்சி அதிகார சபையே (PA) நிர்வகிக்கிறது. பாலஸ்தீன மக்களை அவர்களது நிலத்திலிருந்து வெளியேற்றுவதற்கான நீண்டகால இஸ்ரேலிய அரசியல் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாகவே இந்தத் திட்டமிட்ட யூதக் குடியேற்றவாசி வன்முறையும் நில ஆக்கிரமிப்பும் கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளன. எனவே ஹமாஸ் ஆயுதக் களைவு மட்டுமே சமாதானத்தின் மையமாகச் சித்திரிக்கப்படும்போது, பாலஸ்தீன மக்களின் நில உரிமை, பாதுகாப்பு, சுயநிர்ணய உரிமை, நீதிக்கான கேள்விகள் திட்டமிட்டவகையில் புறக்கணிக்கப்படுகின்றன.

## நீதிவிசாரணையும் பொறுப்புக்கூறலும்:

அதேநேரம் இந்தத் தீர்வுத்திட்டம், நிர்வாக மற்றும் பாதுகாப்பு விவகாரங்கள் மீது மட்டுமே கவனம் செலுத்துவதாகவும் விமர்சிக்கப்படுகின்றது. ஆயுதக் களைவுக்கான சாத்தியக் கூறு பெரும் கேள்விகளையும் எழுப்புகிறது. சர்வதேசச் சட்டத்தின்கீழ் சுமத்தப்பட்ட போர்க்குற்றச் சாட்டுகளின் நிலை என்னவாகும் என்ற கேள்வி நிலவுகின்றது. மேலும் ஆழமான வடுக்களைச் சுமந்து - எண்பத்து ஆண்டுகளுக்கு மேலான இனவாதம், நில ஆக்கிரமிப்புகள், யூதக் குடியேற்றங்கள், இடப்பெயர்வுகள், பேரழிவுகளுக்கு முகம்கொடுத்து நிற்கும் பாலஸ்தீன மக்களுக்கான அமைதியை எவ்வாறு கட்டியெழுப்ப முடியும் என்ற கேள்விகள் இதில் முதன்மையானவை. எந்தவொரு போர், ஒடுக்குமுறை மற்றும் முரண்பாடுகளுக்குமான நிலையான தீர்வின் மையப்புள்ளியாக பொறுப்புக் கூறல் (Accountability) அமைய வேண்டும் என்பதை வரலாறு உணர்த்துகிறது. இந்தச் சமாதான வழிவரைபடம் ஒருவகை முடக்கத்திற்குள் தள்ளப்பட்டுள்ளது என்பதே அரசியல் களயதார்த்தமாகும். இரு தரப்பும் பரஸ்பரம் நிபந்தனைகளை முன்வைத்துள்ளன.

> ***நிலைகொள் தீர்வு சாத்தியப்பட வேண்டுமாயின் நீதி விசாரணையில் தீர்ப்பு, பொறுப்புக்கூறல், அரசியல் நிறுவனங்கள், உண்மையைக் கண்டறியும் பொறிமுறைகள், பாதிக்கப்பட்டவர்களுக்கான வலி நிவாரணம், மறு வாழ்வுத் திட்டங்கள் சமாந்தரமாக முன்னெடுக்கப்படுதல் அவசியம்.***

ஹமாஸ் தலைவர்களுக்கு முழுமையான பொதுமன்னிப்பு வழங்கப்படுவதையும் உள்ளடக்கியுள்ளதாக விமர்சிக்கப்படுகின்றது. அதேவேளை இஸ்ரேலியத் தலைவர்கள் மற்றும் படைத்துறை அதிகாரிகளுக்குரிய சட்டப் பாதுகாப்புக் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதன் பொருள் இஸ்ரேலியத் தரப்பின் மீது போர்க்குற்றம், இன அழிப்பு, மானிடத்திற்கு எதிரான குற்றங்களுக்குரிய நீதி விசாரணைகள், பொறுப்புக்கூறல் கோரப்படமாட்டாது என்ற சமிக்ஞையாகவே இதனை எடுத்துக்கொள்ளலாம். இஸ்ரேல் தரப்பு தண்டிக்கப்படுவதை அமெரிக்கா அனுமதிக்கப் போவதில்லை. இஸ்ரேலை இந்த உடன்படிக்கையை ஏற்கச் செய்வதற்குப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீது டிரம்ப் நிர்வாகம் போதிய அழுத்தம் பிரயோகிக்குமா என்பதிலேயே இத்திட்டத்தின் எதிர்காலம் பெரிதும் தங்கியுள்ளது.

## வரலாற்றுப்பாடம்:

போர்க்குற்றங்களுக்கான நீதிவிசாரணை மற்றும் பொறுப்புக்கூறலைப் புறக்கணிப்பதானது, தீர்க்கப்படாத ஆழமான வடுக்களையும் விட்டுச்செல்வதோடு, நிலைகொள் சமாதானத்திற்கான வழிகளையும் இல்லாமற் செய்யக்கூடியது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இருதரப்புத் தலைமைகள் மீதும் நவம்பர் 2024 கைது ஆணை பிறப்பித்

திருந்தது. ஆயினும் உள்ளகச் சிக்கல்கள் மற்றும் ட்ரம்ப் நிர் வாகத்தின் கடும் எதிர்ப்புகளை சர்வதேச குற்றவியல் நீதி மன்றம் எதிர்கொண்டிருந் தது. இது நீதிமன்றத்தின் சட்ட அங் கீகாரத்தையும் நீதியை நிலைநாட்டும் இலக்கினையும் கேள் விக்குள்ளாக்கியுள்ளது. வெறுமனே ஆயுதக்களைவும் பௌதீக மறு சீரமைப்பும் போதுமானவை அல்ல என்பதை யூகோஸ்லா வியா, ருவாண்டா, வட-அயர்லாந்து, குர்திஸ்தான் போன்ற வரலாற்று அனுபவங்கள் நிரூபிக்கின்றன.

நிலைகொள் தீர்வு சாத்தியப்படவேண்டுமாயின் நீதி விசார ணையில் தீர்ப்பு, பொறுப்புக்கூறல், அரசியல் நிறுவனங்கள், உண்மையைக் கண்டறியும் பொறிமுறைகள், பாதிக்கப்பட்ட வர்களுக்கான வலி நிவாரணம், மறுவாழ்வுத் திட்டங்கள் சமாந்தரமாக முன்னெடுக்கப்படுதல் அவசியம். ஒக்ரோபர் 2024, துருக்கிய தேசியவாதத் தலைவர் தேவ்பத் பாக்செலி (Devlet Bahceli) – பி.கே.கே தலைவர் அப்துல்லா ஒஜாலான் இடையேயான பேச்சுவார்த்தையை அடுத்து ஆயுதக்களைவு குறித்த அறிவித்தல் வெளிவந்தது. பெப்பிரவரி 2025 அப் துல்லா ஓஜாலான் சிறையிலிருந்து விடுத்த அறிவிப்பினை அடுத்து, மே 2025: பிகேகே அமைப்பு தனது ஆயுதமேந்திய போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்து ஆயுதக்களை வினை முன்னெடுத்தது. ஓகஸ்ட் 2026 துருக்கிய நாடாளு மன்றம் ஆயுதக் களைவு மற்றும் பொதுமன்னிப்புக்கான சட்ட பூர்வ தீர்மானத்தினை நிறைவேற்றியது. இருப்பினும், துருக் கியில் குர்திஷ் மக்களின் எதிர்கால உரிமைகள், ஓஜாலானின் சிறைத் தண்டனை நிபந்தனைகள் மற்றும் வட-சிரியாவில் உள்ள குர்திஷ் போராளிகளின் நிலைப்பாடு தொடர்பில் குறிப்பிடத்தக்க அரசியல் சவால்கள் இன்னமும் நீடிக்கவே செய்கின்றன.

## ஆயுதக் களைவுக்குப் பின்னால் மறைக்கப்படும் உரிமைகள்:

பாலஸ்தீனர்கள் ஆயுதங்களைக் களைந்து இஸ்ரேலின் வாழும் உரிமையை ஏற்க வேண்டும் என மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து கோருகின்றன ஆனால் பாலஸ்தீனக் கிராமங் களைச் சூறையாடும் குடியேற்றவாசிகளின் ஆயுதங்களை யார் களைவார்கள்? பாலஸ்தீனர்கள் தங்களது சொந்த நிலத்தில் வாழ்வதற்கும் தங்களது வீடுகளைப் பாதுகாப்பதற் குமான உரிமையை யார் உறுதிசெய்வார்கள் என்ற கேள் வியை மேற்குலகம் எழுப்புவதில்லை. காஸாவிற்கான எந்தத் திட்டமும் ஆயுதக் களைவு, நிருவாக மாற்றம் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ற குறுகிய வரம்புக்குள் மட்டும் வைத்துத் தீர்வை அடைய முடியாது. ஆக்கிரமிப்பு, குடியேற் றவாசி வன்முறை, பொறுப்புக்கூறல், நீதி மற்றும் பாலஸ்தீன மக்களின் அரசியல் உரிமைகள் என்ற அடிப்படைக் கேள்வி களுக்கு பதில் அளிக்காத எந்த சமாதான வழிவரைபடமும் நிலையான தீர்வாக மாறமுடியாது.



rooban.s@thaiveedu.com



இன்று $200,000 வரை
ஒரு புதிய வீட்டின் மீது
மிச்சப்படுத்திடுங்கள்
நாளை அது நிறைய
குடும்பங்களாகவும் நிறைய
வீடுகளாகவும் பெருகும்



புதிய வீட்டின் மீது $200,000
வரையிலும் எவ்வாறு மிச்சப்படுத்துவது
என்பதை பின்வரும்இணையப்
பக்கத்தில் அறிந்துகொள்ளுங்கள்:
ontario.ca/MoreHomesFaster

Ontario

ஒன்ராறியோ அரசாங்கத்தின்
நிதியுதவியுடன் வெளியிடப்பட்டது.

ரவீந்திரன் துரைசிங்கம்

# சியூட்டா

## கடலில் தொடங்கிய மக்கள் அலைக்குப் பின்னாலுள்ள பரபரப்பும் அரசியலும்




வட ஆபிரிக்காவின் மத்தியதரைக் கடற்கரையில், மொராக்கோவால் சூழப்பட்டிருக்கும் சிறிய நிலப்பகுதி தான் சியூட்டா. வரைபடத்தை மட்டும் பார்த்தால், அது மொராக்கோவின் இயல்பான ஓர் அங்கமாகத் தோன்றும். ஆனால், அரசியல் வரைபடத்தில் சியூட்டா ஸ்பெயினுக்குச் சொந்தமான தன்னாட்சி நகரமாகவும், ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிப்புற எல்லையாகவும் விளங்குகிறது. ஜிப்ரால்டர் நீரிணைக்கு அருகில் அமைந்துள்ள இந்த நகரம், ஆபிரிக்காவையும் ஐரோப்பாவையும் பிரிக்கும் எல்லையாக மட்டுமல்லாமல், காலனித்துவ வரலாறு, தேசிய இறையாண்மை, குடியேற்றக் கொள்கை, பாதுகாப்பு அரசியல், மேற்கு சஹாரா மோதல் மற்றும் சர்வதேச இராணுவக் கூட்டணிகள் அனைத்தும் சந்திக்கும் அரசியல் முனையாகவும் உள்ளது.

2026 ஜூலை மாத இறுதியில் சியூட்டாவை நோக்கி ஏற்பட்ட முன்னெப்போதும் இல்லாத மக்கள் அலை, இந்தப் பழைய மோதல்களை மீண்டும் உலகின் கவனத்திற்குக் கொண்டுவந்தது. ஆரம்ப அறிக்கைகள் சுமார் 60,000 பேர் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைக்கிடையிலான காலப்பகுதியில் சியூட்டாவிற்குள் நுழைந்ததாகக் கூறின. சியூட்டாவின் பிராந்தியத் தலைவர் ஹுவான் ஹெசூஸ் விவாஸ் வழங்கிய இந்த மதிப்பீடு, நகரத்தின் சுமார் 80,000 மக்கள் தொகையில் ஏறத்தாழ 70 சதவீதத்துக்கு இணையானது. பின்னர் வெளியான சில அதிகாரபூர்வமற்ற மதிப்பீடுகள் மொத்த எண்ணிக்கை 72,000 வரை இருக்கலாம் என்று தெரிவித்தன. எனவே இறுதி எண்ணிக்கை இன்னும் முழுமையாக உறுதிப்படுத்தப்படவில்லை. ஆயினும், இது சியூட்டாவின் நவீன வரலாற்றில் பதிவான மிகப் பெரிய எல்லை நுழைவுகளில் ஒன்று என்பதில் சந்தேகமில்லை.

### ஐரோப்பிய ஆட்சி தொடங்கிய வரலாறு:

சியூட்டாவின் இன்றைய அரசியல் நிலையைப் புரிந்து கொள்ள 15-ஆம் நூற்றாண்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். 1415-ஆம் ஆண்டு போர்த்துக்கல் சியூட்டாவைக் கைப்பற்றியது. ஆபிரிக்கக் கடற்கரையில் ஐரோப்பிய கடல் பேரரசுகள் விரிவடையத் தொடங்கிய ஆரம்ப கால நிகழ்வுகளில் இதுவும் ஒன்று. மத்தியதரைக் கடலையும் அட்லாண்டிக் பெருங்கடலையும் இணைக்கும் ஜிப்ரால்டர் நீரிணைக்கு அருகில் இருந்ததால், சியூட்டா வணிகம், கடற்படை இயக்கம் மற்றும் இராணுவக் கட்டுப்பாட்டுக்கு முக்கியமான இடமாகக் கருதப்பட்டது.

1580-ஆம் ஆண்டு போர்த்துக்கல்லும் ஸ்பெயினும் ஒரே மன்னரின் ஆட்சிக்குள் வந்தபோது சியூட்டாவும் ஸ்பானிய நிர்வாகத்தின் கீழ் சென்றது. போர்த்துக்கல் 1640-ஆம் ஆண்டு தனது சுதந்திரத்தை மீட்டபோதும் சியூட்டா ஸ்பெயினுடனேயே தொடர்ந்தது. 1668-ஆம் ஆண்டு செய்யப்பட்ட லிஸ்பன் உடன்படிக்கையின் மூலம் சியூட்டா ஸ்பெயினுக்குச் சொந்தமான பகுதியாக அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.

மொராக்கோ 1956-ஆம் ஆண்டு பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினின் காலனித்துவக் கட்டுப்பாட்டிலிருந்து சுதந்திரம் பெற்ற பின்னரும் சியூட்டாவும் மெலில்லாவும் ஸ்பெயினிடமே தொடர்ந்தன. ஸ்பெயினின் பார்வையில், இவை அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்ட காலனிகள் அல்ல; பல நூற்றாண்டுகளாக ஸ்பானிய நிர்வாகத்தின் கீழ் இருந்து வரும் நகரங்கள். மொராக்கோவின் பார்வையில், அவை ஆபிரிக்கக் கண்டத்தில் இன்னும் நீடிக்கும் ஐரோப்பியக் காலனித்துவத்தின் மீதங்களாகும்.

இதனால், சியூட்டாவின் எல்லை ஒரு சாதாரண குடியேற்ற எல்லையாக மட்டும் இல்லை. மொராக்கோவின் நில உரிமைக் கோரிக்கையும் ஸ்பெயினின் இறையாண்மை வாதமும் நேரடியாக எதிர்கொள்ளும் தீர்க்கப்படாத வரலாற்று எல்லையாக அது தொடர்கிறது.

## 2026 மக்கள் அலை எவ்வாறு தொடங்கியது?

2026 ஜூலை 30 மற்றும் 31-ஆம் தேதிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் சியூட்டாவை நோக்கிப் புறப்பட்டனர். சிலர் தரைவழி எல்லை வாயில்கள் மற்றும் வேலிகளைக் கடந்தனர். பலர் Tarajal கடற்கரை அருகே கடலுக்குள் இறங்கி எல்லைத் தடுப்பணையைச் சுற்றி நீந்தினர். சிலர் சிறிய மிதவைப் பொருட்கள், குழந்தைகளுக்கான நீச்சல் வளையங்கள் அல்லது தற்காலிகப் படகுகளைப் பயன்படுத்தினர்.

ஆரம்பத்தில் சுமார் 60,000 பேர் நுழைந்ததாகக் கூறப்பட்டாலும், ஓகஸ்ட் முதல் வாரத்தில் வெளியான செய்திகளில் மொத்தமாக 72,000 பேர் வரை கடந்திருக்கலாம் என மதிப்பிடப்பட்டது. அவர்களில் பெரும்பாலானோர் உணவு, தங்குமிடம் மற்றும் சியூட்டாவிலிருந்து ஸ்பெயின் நிலப்பரப்புக்குச் செல்லும் வழி கிடைக்காது என்பதை அறிந்ததும் மொராக்கோவுக்குத் திரும்பினர். சுமார் 45,000 பேர் முதல் 48,000 பேர் வரை சில மணிநேரங்களுக்குள் திரும்பியதாக ஆரம்ப அறிக்கைகள் தெரிவித்தன. பின்னர், சுமார் 70,000 பேர் மொராக்கோவுக்கு மீண்டும் அனுப்பப்பட்டிருக்கலாம் அல்லது தாமாகவே திரும்பியிருக்கலாம் என்று புதிய மதிப்பீடுகள் கூறின.

இன்னும் சுமார் 3,000 முதல் 5,000 பேர் சியூட்டாவில் இருக்கலாம் என்று ஓகஸ்ட் 5-ஆம் தேதியளவில் மதிப்பிடப்பட்டது. அவர்களில் சுமார் 800 முதல் 1,000 பேர் வரை துணையற்ற சிறார்கள் இருக்கலாம். இவர்களைத் தங்க வைக்கும் வசதிகள் போதாமையால், சிலர் திறந்தவெளி இடங்களில் அல்லது தற்காலிக முகாம்களில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஸ்பெயின் அரசு சிறார்களுக்கான பராமரிப்புக்கு கூடுதல் நிதியை அறிவித்துள்ளது.

## உயிரிழப்புகளும் மனிதாபிமானப் பேரழிவும்:

இந்த மக்கள் அலை அரசியல் நெருக்கடியாக மட்டுமல்லாமல் மனிதாபிமானப் பேரழிவாகவும் மாறியது. ஆரம்பத்தில் 18, பின்னர் 34, 57 என்று உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்தது. ஓகஸ்ட் முதல் வாரத்தில் ஸ்பெயினின் உள்துறை அதிகாரிகள் குறைந்தது 75 பேர் உயிரிழந்ததாகத் தெரிவித்தனர். சில பிந்தைய ஊடக அறிக்கைகள் சியூட்டா பகுதியில் 88 பேர் வரையும் மொராக்கோப் பகுதியில் மேலும் 11 பேர் வரையும் இறந்திருக்கலாம் என்று கூறின. எண்ணிக்கை இன்னும் மாறக்கூடியது; பலர் காணாமல் போயுள்ளதாகக் குடும்பங்கள் தெரிவித்துள்ளன.

கடலில் மூழ்கியவர்கள், கூட்ட நெரிசலில் காயமடைந்தவர்கள், குடும்பத்திலிருந்து பிரிந்த குழந்தைகள் மற்றும் காணாமல் போன இளைஞர்களைப் பற்றிய தகவல்கள் தொடர்ந்து வெளிவருகின்றன. மொராக்கோவின் Fnideq நகரத்தில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் எல்லைக்கு அருகே திரண்டு, சியூட்டாவிற்குச் சென்ற தமது உறவினர்கள் உயிருடன் இருக்கிறார்களா எனத் தேடினர்.

இந்த நிகழ்வின் மிக முக்கியமான பாடம் என்னவெனில், அரசுகள் எல்லைகளையும் அரசியல் நோக்கங்களையும் பற்றி விவாதிக்கும்போது, அதிக விலையைச் செலுத்துபவர்கள் பாதுகாப்பில்லாமல் கடலுக்குள் இறங்கும் சாதாரண மக்களே என்பதாகும்.


## நீதிமன்றத் தீர்ப்பின் தவறான விளக்கம்:

இந்தத் திடீர் மக்கள் அலையைத் தூண்டிய முக்கிய காரணங்களில் ஒன்று ஸ்பெயின் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு பற்றிய தவறான தகவல் என்று விசாரணைச் செய்திகள் கூறுகின்றன.

2026 ஜூலை மாதத்தில் ஸ்பெயின் உச்ச நீதிமன்றம், சியூட்டா அல்லது மெலில்லாவை கடல்வழியாக அடைய முயலும்போது ஸ்பானிய அதிகாரிகளால் கடலில் தடுக்கப்படுபவர்களை, ஒவ்வொருவரின் தனிப்பட்ட நிலை, புகலிடக் கோரிக்கை மற்றும் பாதுகாப்புத் தேவைகளைப் பரிசீலிக்காமல் 'எல்லை நிராகரிப்பு' நடைமுறையின் கீழ் உடனடியாக மொராக்கோவுக்கு அனுப்ப முடியாது என்று தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பு எல்லை திறக்கப்பட்டுவிட்டது என்று பொருளல்ல. அது கூட்டுத் திருப்பி அனுப்பல்களுக்கும் மனித உரிமை நடைமுறைகளுக்கும் சட்ட வரம்பு விதித்தது மட்டுமே.

ஆனால், சமூக ஊடகங்களில் இந்தத் தீர்ப்பு வேறு விதமாக மாற்றப்பட்டது. 'கடல் வழியாகச் சென்றால் திருப்பி அனுப்ப முடியாது', 'ஸ்பெயின் அனைவரையும் ஏற்க வேண்டும்', 'சியூட்டாவை அடைந்தால் ஐரோப்பாவிற்குள் செல்லலாம்' போன்ற செய்திகள் Instagram, TikTok, Facebook மற்றும் WhatsApp குழுக்களில் வேகமாகப் பரவின.

சில கடத்தல் குழுக்கள் இந்தச் சட்டத் தகவலைத் திட்டமிட்டு மிகைப்படுத்தியிருக்கலாம் என்று ஸ்பெயின் அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். இருப்பினும் எந்தக் குழு முதலில் செய்தியை உருவாக்கியது, யார் பணம் வழங்கினர், சமூக ஊடகப் பிரசாரத்திற்கு ஒருங்கிணைந்த மையம் இருந்ததா என்பவை முழுமையாக நிரூபிக்கப்படவில்லை.



### சமூக ஊடகம் உருவாக்கிய கூட்ட மனநிலை:

மொராக்கோவின் பல பகுதிகளில் வசித்த இளைஞர்கள், மற்றவர்கள் எல்லையைக் கடப்பதைக் காட்டும் காணொளிகளைப் பார்த்த பின்னர் சியூட்டாவை நோக்கிப் புறப்பட்டதாக Reuters மற்றும் AP செய்திகளில் தெரிவித்தனர். சிலர் பல மணிநேரம் வாகனங்களில் பயணம் செய்தனர். அயூப் எல் அப்யாத் என்ற 16 வயது இளைஞர், Instagram காணொளிகளில் மக்கள் சியூட்டாவுக்குள் நுழைவதைக் கண்டபின் தனது உறவினருடன் பயணத்தைத் தொடங்கியதாக Reuters பதிவு செய்தது. அவனுக்கு இது ஒரு சர்வதேச அரசியல் நடவடிக்கையாக இருக்கவில்லை; வேலை, வருமானம் மற்றும் எதிர்காலத்திற்கான வாய்ப்பாகவே தோன்றியது.

சமூக ஊடகங்களில் வெற்றி பெற்றவர்களின் காணொளிகள் அதிகமாகப் பரவின. ஆனால், கடலில் மூழ்கியவர்கள், கைது செய்யப்பட்டவர்கள், பசி மற்றும் தங்குமிடமின்மையால் திரும்பிச் சென்றவர்கள் பற்றிய காட்சிகள் ஆரம்பத்தில் அதே அளவு பரவவில்லை. இதனால் ஆபத்து மறைக்கப்பட்டு, வெற்றி பெறும் வாய்ப்பு மிகைப்படுத்தப்பட்டது.

சில பதிவுகள் எந்த இடத்திலிருந்து நீந்துவது, கடல் நீரோட்டம் குறையும் நேரம், கைப்பேசியை எவ்வாறு பாதுகாப்பது, எந்த வகையான நீச்சல் உடை பயன்படுத்துவது போன்ற நடைமுறைத் தகவல்களையும் பகிர்ந்ததாக ஊடக விசாரணைகள் தெரிவித்தன. தனிநபர்களின் காணொளிகளும் கடத்தல் வலையமைப்புகளின் வதந்திகளும் இணைந்த போது, 'இப்போது செல்லாவிட்டால் வாய்ப்பு மூடப்படும்' என்ற கூட்ட மனநிலை உருவாகியது.

### வதந்திக்கு அடியில் இருந்த பொருளாதார விரக்தி:

சமூக ஊடகச் செய்தி மட்டும் பல்லாயிரக்கணக்கான மக்களை நகர்த்த முடியாது. அதற்குக் கீழே நீண்டகால சமூக மற்றும் பொருளாதார விரக்தி இருந்தது.

மொராக்கோவில் இளைஞர் வேலையின்மை, பிராந்திய ஏற்றத்தாழ்வு, பொதுச் சேவைகளின் தரம் குறித்த அதிருப்தி, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கான கட்டுப்பாடுகள் மற்றும் ஐரோப்பிய வாழ்க்கையைப் பற்றிய கவர்ச்சி ஆகியவை பல ஆண்டுகளாக இடம்பெயர்வு விருப்பத்தை வளர்த்துள்ளன. 2025-ஆம் ஆண்டின் இறுதியில் வறுமை மற்றும் பொதுச் சேவைகள் தொடர்பாக மொராக்கோவில் பெரிய அளவிலான போராட்டங்கள் நடந்ததாக Reuters குறிப்பிட்டுள்ளது.

எனவே, சமூக ஊடகம் இடம்பெயர்வுக்கான ஆசையை புதிதாக உருவாக்கவில்லை. ஏற்கனவே இருந்த விரக்திக்கு அவசர உணர்வை வழங்கியது. தனித்தனியாக வாழ்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள், ஒரே காணொளி மற்றும் ஒரே வதந்தியால் ஒரே நேரத்தில் நகரத் தொடங்கியபோது அது மக்கள் அலையாக மாறியது.

### 2021–ஆம் ஆண்டின் முன்னுதாரணம்:

மொராக்கோ அரசின் பங்கு பற்றிய சந்தேகம் எழுவதற்கு முக்கிய காரணம் 2021-ஆம் ஆண்டு நடந்த சம்பவமாகும். 2021 மே மாதத்தில் இரண்டு நாட்களில் சுமார் 8,000 பேர் சியூட்டாவிற்குள் நுழைந்தனர். அப்போது மொராக்கோ எல்லைப் பாதுகாப்பைத் தளர்த்தியதாகப் பரவலாகக் கூறப்பட்டது.

அந்த நேரத்தில் மேற்கு சஹாராவின் சுதந்திரத்தை ஆதரிக்கும் Polisario Front அமைப்பின் தலைவர் பிராஹிம் காலிக்கு ஸ்பெயின் மருத்துவச் சிகிச்சை வழங்கியிருந்தது. இதை மொராக்கோ கடுமையாக எதிர்த்தது. எல்லைக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியது ஸ்பெயின் மீது அரசியல் அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கையாகப் புரிந்துகொள்ளப்பட்டது.

இந்த முன்னுதாரணத்தால், 2026-ஆம் ஆண்டில் மொராக்கோ அதிகாரிகள் ஏன் ஆரம்பத்தில் பெரும் கூட்டத்தைத் தடுக்கவில்லை என்ற கேள்வி எழுந்தது. சியூட்டாவின் தலைவர் விவாஸ், மொராக்கோ இந்த நுழைவைத் திட்டமிட்டிருக்கலாம் அல்லது குறைந்தபட்சம் அனுமதித்திருக்கலாம் என்று குற்றஞ்சாட்டினார். ஆரம்ப நேரங்களில் சில மொராக்கோ எல்லைக் காவலர்கள் செயலற்றிருந்ததாக சாட்சியங்கள் இருந்தாலும், பின்னர் அவர்கள் கண்ணீர்ப்புகை, கலவரக் கட்டுப்பாட்டு படைகள் மற்றும் நீர்த்தாரை வாகனங்களைப் பயன்படுத்தி கூட்டத்தைத் தடுத்தனர்.

ஆனால் மொராக்கோ அரசு 2026 மக்கள் அலையை திட்ட மிட்டதாக நிரூபிக்கும் கட்டளை ஆவணங்கள், நிதித் தகவல் கள் அல்லது புலனாய்வு ஆதாரங்கள் இதுவரை வெளியிடப் படவில்லை. AP உண்மைச் சரிபார்ப்பும் மொராக்கோ வேண் டுமென்றே எல்லையைத் திறந்தது என்ற குற்றச்சாட்டு உறு திப்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்தது.

## மேற்கு சஹாரா அரசியல்:

மொராக்கோவின் வெளிநாட்டுக் கொள்கையில் மேற்கு சஹாரா மைய இடத்தைப் பிடிக்கிறது. 1975-ஆம் ஆண்டு ஸ்பெயின் அந்தப் பகுதியிலிருந்து வெளியேறிய பின்னர் மொராக்கோ அதன் பெரும்பகுதியைக் கட்டுப்படுத்தத் தொடங்கியது. Polisario Front சஹ்ராவி மக்களின் சுயநிர்ணயத்தையும் தனி நாட்டையும் கோருகிறது.

ஐக்கிய நாடுகள் சபை மேற்கு சஹாராவை இன்னும் 'சுயாட்சி பெறாத பிரதேசம்' என்ற காலனித்துவ ஒழிப்பு பட்டியலில் வைத்துள்ளது. சஹ்ராவி மக்களின் சுயநிர்ணயத்தை உறுதிப் படுத்தும் அரசியல் தீர்வு தேவை என்று ஐ.நா. தொடர்ந்து கூறுகிறது. MINURSO அமைதிப்படைப் பணியின் காலம் 2026 ஒக்ரோபர் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மொராக்கோ, மேற்கு சஹாரா தனது இறையாண்மைக்குட் பட்ட பகுதி என்றும், மொராக்கோவின் கீழ் வரையறுக்கப்பட்ட தன்னாட்சியே நடைமுறைத் தீர்வு என்றும் கூறுகிறது. Polisario Front மற்றும் அதை ஆதரிக்கும் அல்ஜீரியா, சுதந்திரம் உட்பட விருப்பங்களை கொண்ட மக்கள் வாக்கெடுப்பு நடத் தப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றன.

## அமெரிக்கா – இஸ்ரேல் – மொராக்கோ உறவு:

2020 டிசம்பரில் அன்றைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், மேற்கு சஹாரா மீதான மொராக்கோவின் இறையாண் மையை அமெரிக்கா அங்கீகரிப்பதாக அறிவித்தார். அதே அரசியல் ஏற்பாட்டின் ஒரு பகுதியாக மொராக்கோ இஸ்ரேலு டனான உறவுகளைச் சாதாரணப்படுத்த ஒப்புக்கொண்டது.

2023 ஜூலை மாதத்தில் இஸ்ரேலும் மேற்கு சஹாரா மீதான மொராக்கோவின் இறையாண்மையை அங்கீகரித்தது. இதனால், மொராக்கோ - இஸ்ரேல் உறவு, மேற்கு சஹாரா தொடர்பான மொராக்கோவின் முக்கிய தேசிய இலக்குடன் நேரடியாகப் பின்னிப்பிணைந்தது.

அதன் பின்னர் மொராக்கோவும் இஸ்ரேலும் பாதுகாப்பு, ஆயுதத் தொழில்நுட்பம் மற்றும் ராணுவப் பயிற்சிகளில் நெருக்கமடைந்தன. 2025-ஆம் ஆண்டு அமெரிக்கா தலை மையில் மொராக்கோ உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளில் நடை பெற்ற African Lion பன்னாட்டு இராணுவப் பயிற்சியில் இஸ்ரேலும் பங்கேற்றது. இது மொராக்கோ - இஸ்ரேல் இருத ரப்புப் பயிற்சி அல்ல; அமெரிக்க ஆபிரிக்கக் கட்டளையின் கீழ் பல நாடுகள் பங்கேற்ற பெரிய பன்னாட்டுப் பயிற்சி.

## ஸ்பெயினின் இஸ்ரேல் மற்றும் ஈரான் நிலைப்பாடு:

ஸ்பெயின் அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் முழுமையாக எதிரான நாடு என்று கூற முடியாது. ஸ்பெயின் NATO உறுப் பினர் அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களையும் கூட்டாகப் பயன்படுத்தப்படும் இராணுவத் தளங்களையும் கொண்டுள்ளது. இருப்பினும் பெட்ரோ சான்செஸ் தலைமை யிலான அரசு காசா போர் தொடர்பாக இஸ்ரேலைக் கடுமை யாக விமர்சித்துள்ளது.

2025 செப்ரெம்பரில் ஸ்பெயின் அரசு இஸ்ரேலுடனான ஆயுத வணிகத் தடையைச் சட்டரீதியாக வலுப்படுத்தியது. இஸ்ரே லுக்கு ஆயுதங்கள், இரட்டை பயன்பாட்டுத் தொழினுட்பங் கள் மற்றும் ராணுவப் பொருட்கள் விற்பனை செய்வதற்கும் வாங்குவதற்கும் தடைகள் விதிக்கப்பட்டன. பாலஸ்தீன ஆக் கிரமிப்புப் பகுதிகளில் உள்ள சட்டவிரோத குடியேற்றங்களி லிருந்து பொருட்களை இறக்குமதி செய்வதையும் அரசு தடுத்தது.

2026 பெப்பிரவரி இறுதியில் அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் மீது தாக்குதல் நடத்திய பின்னர், மார்ச் 4-ஆம் தேதி சான்செஸ் 'போருக்கு இல்லை' என்ற நிலைப்பாட்டை அறி வித்தார். ஸ்பெயினில் உள்ள கூட்டுப் பயன்பாட்டு இரா ணுவத் தளங்களை ஈரான் தாக்குதலுக்குப் பயன்படுத்த அமெரிக்காவுக்கு அனுமதி வழங்காததால் வாஷிங்டனுடனான பதற்றம் அதிகரித்தது.

இந்த அரசியல் பின்னணியால், அமெரிக்கா மற்றும் இஸ்ரே லுடன் நெருக்கமாக இருக்கும் மொராக்கோ, ஸ்பெயினுக்கு அழுத்தம் கொடுக்க சியூட்டா மக்கள் அலையை அனுமதித் திருக்குமா என்ற சந்தேகம் சில அரசியல் வட்டாரங்களில் எழுந்தது.

## அமெரிக்கா அல்லது இஸ்ரேல் பின்னால் இருந்ததா?

இதுவரை கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில், அமெ ரிக்கா அல்லது இஸ்ரேல் மொராக்கோவுடன் இணைந்து பல் லாயிரக்கணக்கான மக்களை சியூட்டாவுக்கு அனுப்பியது என்று கூற முடியாது.

அத்தகைய நடவடிக்கை நடந்ததாக நிரூபிக்க வேண்டு மெனில், யார் உத்தரவிட்டனர், எந்த அமைப்பு ஒருங்கிணைத் தது, சமூக ஊடகப் பதிவுகளை உருவாக்கிய கணக்குகள் எவை, பயணத்திற்கு நிதி வழங்கியவர்கள் யார், மொராக்கோ எல்லைப் படைகளுக்கு என்ன கட்டளை வழங்கப்பட்டது போன்ற ஆதாரங்கள் தேவை. அவ்வாறான நம்பகமான ஆவ ணங்களோ புலனாய்வுத் தகவல்களோ இதுவரை வெளியிடப் படவில்லை.

AP Fact Focus விசாரணை, ஸ்பெயினின் காசா மற்றும் ஈரான் நிலைப்பாட்டிற்குப் பழிவாங்க அமெரிக்கா அல்லது இஸ் ரேல் இந்த மக்கள் அலையை ஏற்பாடு செய்ததாகக் கூறும் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லை என்று தெரிவித்தது.

எனினும் மொராக்கோவின் எல்லைக் கட்டுப்பாடு மற்றும் அரசியல் நோக்கம் பற்றிய கேள்விகளை முற்றிலும் நிராகரிக் கவும் முடியாது. 2021-ஆம் ஆண்டு நடந்த சம்பவம், குடி யேற்றக் கட்டுப்பாடு வெளிநாட்டுக் கொள்கை அழுத்தமாகப் பயன்படுத்தப்படக்கூடியது என்பதை காட்டியது. ஆனால், முன்னுதாரணம் சந்தேகத்தை நியாயப்படுத்தலாம். அது 2026 குற்றச்சாட்டைத் தானாக நிரூபிக்காது.




**ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய பதில்:**

2026 ஓகஸ்ட் 4-ஆம் தேதி ஐரோப்பிய ஒன்றிய உள்துறை அமைச்சர்கள் அவசர காணொளிக் கூட்டம் நடத்தினர். சியூட்டா ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிப்புற எல்லை என்பதால், ஸ்பெயினுக்கு ஆதரவு வழங்கத் தயாராக இருப் பதாக அவர்கள் அறிவித்தனர். கடத்தல் வலையமைப்புகள், சமூக ஊடகத் தவறான தகவல்கள், எல்லைப் பாதுகாப்பு மற்றும் திருப்பி அனுப்பும் நடைமுறைகள் குறித்து ஒத்து ழைப்பை அதிகரிக்க வேண்டும் என்றும் விவாதிக்கப்பட்டது.

இத்தாலி 2026 ஓகஸ்ட் 1 முதல் செப்ரெம்பர் 1 வரை ஸ்பெயி னுடனான உள்நாட்டு விமான மற்றும் கடல் வழித்தடங்களில் தற்காலிக எல்லைச் சோதனைகளை அறிமுகப்படுத்தியது. இது Schengen ஒப்பந்தத்திலிருந்து ஸ்பெயினை முழுமை யாக நீக்குவது அல்ல; சியூட்டா நெருக்கடியால் இரண்டாம் நிலை இடம்பெயர்வு ஏற்படலாம் என்ற காரணத்தால் மேற் கொள்ளப்பட்ட தற்காலிகக் கட்டுப்பாடாகும்.

ஸ்பெயின் சியூட்டா கடற்பகுதியில் புதிய தடுப்பணைகளை அமைத்ததுடன், கூடுதல் காவல்துறை மற்றும் இராணுவப் படையினரையும் அனுப்பியது. அதே நேரத்தில், புகலிடக் கோரிக்கை முன்வைக்க விரும்புபவர்களுக்கு தனிப்பட்ட சட்டப் பரிசீலனை வழங்கப்பட வேண்டும் என்றும் துணை யற்ற குழந்தைகளைப் பாதுகாப்பின்றி திருப்பி அனுப்பக் கூடாது என்றும் மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்து கின்றன.

2026 சியூட்டா மக்கள் அலையை ஒரே காரணத்தால் விளக்க முடியாது. ஸ்பெயின் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் தவறான விளக்கம், சமூக ஊடகங்களில் பரவிய 'எல்லை திறந்து விட்டது' என்ற செய்தி, கடத்தல்காரர்களின் வணிக நலன், மொராக்கோ இளைஞர்களின் பொருளாதார விரக்தி, கூட் டத்தை ஆரம்பத்தில் கட்டுப்படுத்தத் தவறிய எல்லைப் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் ஸ்பெயின் - மொராக்கோ இடையிலான நீண்டகால அரசியல் நம்பிக்கையின்மை ஆகி யவை ஒன்றோடொன்று இணைந்துள்ளன.

மொராக்கோ குடியேற்றக் கட்டுப்பாட்டை அரசியல் அழுத்த மாகப் பயன்படுத்திய வரலாற்று முன்னுதாரணம் உள்ளது. எனவே, மொராக்கோவின் பங்கு பற்றிய விசாரணை நியாய மானது. ஆனால், அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் மொராக்கோ இணைந்து 60,000 அல்லது 72,000 மக்களைத் திட்டமிட்டு அனுப்பினர் என்று கூறுவதற்கான ஆதாரம் இன்றுவரை இல்லை.

அதேபோல், இந்த நெருக்கடி ஒரு சமூக ஊடக வதந்தியால் மட்டும் ஏற்பட்டது என்று கூறுவதும் முழுமையற்றது. ஒரு வதந்தி இவ்வளவு பெரிய மக்கள் இயக்கத்தை உருவாக்க வேண்டுமெனில், அதற்கு முன்பே சமூகத்தில் விரக்தி, வேலையின்மை, அரசியல் நம்பிக்கையின்மை மற்றும் எதிர் காலமின்மை குவிந்திருக்க வேண்டும்.

சியூட்டாவின் கடற்கரையில் 2026 ஜூலை இறுதியில் நிகழ்ந் தது ஒரு எல்லை மீறல் சம்பவம் மட்டுமல்ல. ஐந்து நூற்றாண் டுகளுக்கு மேலான ஐரோப்பிய ஆட்சி, மொராக்கோவின் இறையாண்மைக் கோரிக்கை, மேற்கு சஹாரா மோதல், அமெரிக்க - இஸ்ரேலிய கூட்டணி, ஸ்பெயினின் பாலஸ்தீன ஆதரவு அரசியல் மற்றும் மொராக்கோ இளைஞர்களின் வாழ்க்கை விரக்தி ஆகிய அனைத்தும் ஒரே இடத்தில் மோதிய தருணமாகும்.

தீப்பெட்டியாக நீதிமன்றத் தீர்ப்பைப் பற்றிய சமூக ஊடக வதந்தி இருந்திருக்கலாம். ஆனால் வெடிக்கத் தயாரான அரசியல், பொருளாதார மற்றும் வரலாற்று எரிபொருள் பல ஆண்டுகளாக சியூட்டாவின் எல்லையில் குவிந்துகொண்டி ருந்தது. அந்தப் பெரிய அரசியல் விளையாட்டின் மத்தியில், கடலில் உயிரிழந்தவர்கள், காணாமல் போனவர்கள், குடும் பத்திலிருந்து பிரிந்த குழந்தைகள் மற்றும் எதிர்காலத்தைத் தேடி வீடு திரும்ப முடியாமல் தவிக்கும் சாதாரண மக்கள் தான் மிகப்பெரிய விலையைச் செலுத்தியுள்ளனர்.



Raveendran.T@thaiveedu.com




# துருக்மெனிஸ்தான்: தீ, பளிங்கு, தனிமைப்படுத்தலின் நிலம்

யமீனா கிருஷ்ணசாமி

மத்திய ஆசியாவின் இதயப்பகுதியில் ஒரு நாடு அமைந்துள்ளது. அங்கு நிலப் பரப்பின் 80 சதவீதம் பாலைவனம். கோடையில் வெப்பநிலை 50 டிகிரி செல்சியசைத் தொடுகிறது; குளிர்காலத்தில் உறைபனிக்குக் கீழே செல்கிறது. பாலைவனத்தின் நடுவே ஒரு பிரம்மாண்டக் குழி - அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கிறது. உலகம் அதை 'நரகத்தின் வாசல்' (Door to Hell) என்று அழைக்கிறது. தலைநகரில் வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட கட்டடங்கள் சூரிய ஒளியில் மின்னுகின்றன. நகர மையத்தில், தனது மக்களின் 'தந்தை' என்று தன்னை அறிவித்துக் கொண்ட ஒரு தலைவரின் பொற்சிலை சூரியனை நோக்கிச் சுழல்கிறது.

இதுதான் துருக்மெனிஸ்தான் - உலகின் மிக விந்தையான, மிகத் தனிமைப்படுத்தப் பட்ட நாடுகளில் ஒன்று. பட்டுப் பாதையின் முக்கியப் பகுதியாக விளங்கிய இது, இன்று உலகின் நான்காவது பெரிய இயற்கை எரிவாயு இருப்பைக் கொண்டுள்ளது. ஆனால், அதன் செல்வமும் அதிசயங்களும் உலகிற்கு அதிகம் அறியப்படாமலேயே உள்ளன.

## பாலைவனத்தின் ஆட்சியும் நெருப்பின் அதிசயமும்:

491,210 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட துருக்மெனிஸ்தான், கலிஃபோர் னியாவை விடப் பெரியது; இலங்கையை விட ஏழு மடங்கு பரந்தது. இதன் எல்லை கள்: வடக்கே கஸகஸ்தான், வடகிழக்கே உஸ்பெகிஸ்தான், தென்கிழக்கே ஆப்கா னிஸ்தான், தெற்கே ஈரான், மேற்கே காஸ்பியன் கடல்.

## கரகும் பாலைவனம்:

கரகும் பாலைவனம் மத்திய ஆசியாவில் அமைந்துள்ள ஒரு பெரிய பாலைவன மாகும். இது துருக்மெனிஸ்தான் நாட்டின் மொத்தப் பரப்பளவில் சுமார் 80 சதவீ தத்தை ஆக்கிரமித்துள்ளது. இதன் பெயர் துருக்கிய மொழியில் 'கருப்பு மணல்' என்ற பொருளைக் கொண்டதாகும். இப்பாலைவனத்தில்தான் புகழ்பெற்ற டார்வாசா எரிவாயுக் குழி அமைந்துள்ளது. 1971-ஆம் ஆண்டு சோவியத் புவியியலாளர்கள் இயற்கை எரிவாயுவைத் தேடி நிலத்தைத் தோண்டியபோது, நிலத்தடியில் இருந்த ஒரு குகை சரிந்து, அதிலிருந்த மீத்தேன் வாயு வெளியேறியது.

வாயுவை எரித்து அகற்றுவதற்காக அங்கு தீ மூட்டப்பட்டது. சில நாட்களில் தீ அணைந்துவிடும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அது அரை நூற்றாண்டைக் கடந்தும் தொடர்ந்து எரிந்து கொண்டிருந்தது. இதனால், டார்வாசா எரிவாயுக் குழி இன்று உலகம் முழுவதிலுமிருந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் ஓர் இயற்கை அதிசயமாகவும் தனித்துவமான சுற்றுலாத் தலமாகவும் மாறியுள்ளது. கரகும் பாலைவனம் மட்டுமன்றி, கொப்பெட் டாக் மலைத்தொடரும் துருக்மெனிஸ்தானின்

> ***துருக்மெனிஸ்தானின் வரலாறு 5,000 ஆண்டுகளுக்கு மேற்பட்டது. பண்டைய காலங்களில், இது நாகரிகங்களின் சந்திப்பிடமாக விளங்கியது. மெர்வ் மற்றும் நிசா போன்ற நகரங்கள் பட்டுப் பாதையின் முக்கிய தங்குமிடங்களாக இருந்தன. பாரசீக அகேமெனிட் பேரரசு, அலெக்சாண்டரின் படைகள், பின்னர் அரபுப் படையெடுப்பாளர்கள் - அனைவரும் தங்கள் தடத்தைப் பதித்தனர். 7 - 8-ஆம் நூற்றாண்டுகளில் அரபுகள் இஸ்லாத்தை அறிமுகப்படுத்தினர், இது இன்றும் ஆதிக்க மதமாக உள்ளது.***

tg.theeban@gmail.com



*நரகத்தின் வாசல் (Door to Hell)*

புவியியல் தனித்துவத்தைக் காட்டுகிறது. இம்மலைத்தொடர் ஈரானுடனான இயற்கை எல்லையின் ஒரு பகுதியாக அமைகிறது. மேலும், ஆமு தார்யா ஆறு நாட்டின் கிழக்குப் பகுதிகளில் பாய்கிறது. இவ்வாறான புவியியல் வளமும் பல்வகைத் தன்மையும் காணப்பட்டாலும், துருக்மெனிஸ்தானின் காலநிலை கடுமையானதாகும். கோடைக்காலத்தில் கடுமையான வெப்பமும், குளிர்காலத்தில் கடும் குளிரும் நிலவுகின்றன; மழைப் பொழிவும் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

## பேரரசுகளும் தனிமையும் கொண்ட வரலாறு:

துருக்மெனிஸ்தானின் வரலாறு 5,000 ஆண்டுகளுக்கு மேற்பட்டது. பண்டைய காலங்களில், இது நாகரிகங்களின் சந்திப்பிடமாக விளங்கியது. மெர்வ் மற்றும் நிசா போன்ற நகரங்கள் பட்டுப் பாதையின் முக்கிய தங்குமிடங்களாக இருந்தன. பாரசீக அகேமெனிட் பேரரசு, அலெக்சாண்டரின் படைகள், பின்னர் அரபுப் படையெடுப்பாளர்கள் - அனைவரும் தங்கள் தடத்தைப் பதித்தனர். 7 - 8-ஆம் நூற்றாண்டுகளில் அரபுகள் இஸ்லாத்தை அறிமுகப்படுத்தினர், இது இன்றும் ஆதிக்க மதமாக உள்ளது.

13-ஆம் நூற்றாண்டில் மங்கோலியர்கள் இப்பகுதியைத் தாக்கி அழித்தனர். 19-ஆம் நூற்றாண்டில் உருசியப் பேரரசின் செல்வாக்கிற்கு உட்பட்டது. பின்னர், 1924-இல் சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக துர்க்மென் சோவியத் சோசலிஸ்ட் குடியரசு உருவானது. 70 ஆண்டுகள், அது அமைதியான, வேளாண்மை மற்றும் எரிவாயு வளம் கொண்ட ஒரு சோவியத் குடியரசாக இருந்தது; பத்திரிகைகளில் அதிகம் இடம்பெறவில்லை.

1991-இல் சோவியத் ஒன்றியம் சிதைந்தபோது, துருக்மெனிஸ்தான் சுதந்திரம் அடைந்தது - அத்துடன் தனிமையின் புதிய சகாப்தமும் தொடங்கியது. முதல் அதிபர் சபர்முரத் நியாசோவ் என்பவரின் கீழ், நாடு தனக்குத்தானே வணங்கும், விந்தையான பயணத்தைத் தொடங்கியது.

## தனிமனித வழிபாடு: நியாசோவின் விந்தையான ஆட்சி:

துர்க்மென்பாஷி' - அனைத்து துர்க்மென்களின் தந்தை - என்று தன்னை அழைத்துக்கொண்ட சபர்முரத் நியாசோவ், 1991 முதல் 2006-ஆம் ஆண்டு இறக்கும் வரையில் துருக்மெனிஸ்தானை ஆட்சி செய்தார். உலகின் மிகப் பகட்டான சர்வாதிகார ஆட்சியாளர்களையும் மிஞ்சும் வகையில், அவர் தன்னை மையப்படுத்திய தனிமனித வழிபாட்டு முறையை உருவாக்கினார். அவரது தங்கச் சிலை சூரியனை நோக்கிச் சுழலும் வகையில் அமைக்கப்பட்டு, அஷ்காபாத்தில் 75 மீட்டர் உயர முடைய நினைவுச்சின்னத்தின் மீது நிறுவப்பட்டது. நாணயங்கள் முதல் ஓட்கா போத்தல்கள் வரை பல்வேறு பொருட்களிலும் அவரது உருவம் இடம்பெற்றது.

ஆனால், நியாசோவின் வினோதமான செயல்கள் சிலைகள் மற்றும் உருவப்படங்களுடன் மட்டும் நின்றுவிடவில்லை. அவர் 'ரூஹ்நாமா' என்ற ஆன்மிக நூலை எழுதினார். வரலாறு, கவிதை மற்றும் ஒழுக்க வழிகாட்டல்கள் ஆகியவற்றின் கலவையாக அமைந்த இந்நூலை, குர்ஆன் மற்றும் பைபிளுக்கு இணையான முக்கியத்துவம் கொண்டதாக அவர் அறிவித்தார். பள்ளி மாணவர்கள் இந்நூலைக் கட்டாயமாகக் கற்க வேண்டியிருந்தது. அதுமட்டுமன்றி, பல்வேறு தொழில்களில் ஈடுபட்டவர்களும் அதன் உள்ளடக்கங்களை அறிந்திருக்க வேண்டிய நிலை உருவாக்கப்பட்டது. மேலும், ஆண்டின் மாதங்களின் பெயர்களையும் அவர் மாற்றினார். ஜனவரி மாதத்திற்கு 'துர்க்மென்பாஷி' என்றும், ஏப்பிரல் மாதத்திற்கு அவரது தாயாரின் பெயரான 'குர்பன்சோல்தான்' என்றும் பெயரிட்டார்; இதே போன்று ஏனைய மாதங்களின் பெயர்களும் மாற்றப்பட்டன.

அவரது ஆட்சிக் காலம் முழுவதும் அரசு அனைத்து ஊடகங்களையும் கடுமையாகக் கட்டுப்படுத்தியது. 'ரூஹ்நாமா' உள்ளிட்ட அரசின் கருத்தியலைப் பரப்பும் வெளியீடுகள் நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டன; மாற்றுக் கருத்துகள் மற்றும் எதிர்க்குரல்கள் ஒடுக்கப்பட்டன. வெளிநாட்டுத் திரைப்படங்கள் தடை செய்யப்பட்டதுடன், பாலே மற்றும் ஓப்பரா போன்ற கலைவடிவங்களும் நாட்டின் பண்பாட்டுக்கு ஒவ்வாதவை எனக் கருதப்பட்டன. பண்பாட்டு அமைச்சகத்தின் ஊடாக, கலைகள் மற்றும் பண்பாட்டு வெளிப்பாடுகள் அரசின் அதிகாரபூர்வக் கருத்தியலைப் பிரதிபலிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டன.

இந்த ஒடுக்குமுறைச் சூழலுக்கு மத்தியிலும் நியாசோவின் ஆட்சி பல்வேறு வினோதமான கொள்கைகளுக்காக உலகளவில் கவனம் பெற்றது. கச்சேரிகளில் நேரடி இசை நிகழ்ச்சிகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன; தலைநகருக்கு வெளியேயுள்ள பல மருத்துவமனைகள் மூடப்பட்டன; இணைய அணுகலும் சில அரசு அங்கீகரித்த இணையதளங்களுக்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டது. நியாசோவ் இறக்கும் நேரத்தில், துருக்மெனிஸ்தான் உலகின் மிகத் தனிமைப்படுத்தப்பட்ட நாடுகளில் ஒன்றாக மாறியிருந்தது; வடகொரியாவுடன் ஒப்பிடத்தக்க அளவிலான அரசியல் மற்றும் சமூகக் கட்டுப்பாடுகள் அங்கு நிலவின.



> ***உலகின் மிகப் பகட்டான சர்வாதிகார ஆட்சியாளர்களையும் மிஞ்சும் வகையில், அதிபர் சபர்முரத் நியா சோவ் தன்னை மையப்படுத்திய தனிமனித வழிபாட்டு முறையை உருவாக்கினார். அவரது தங்கச் சிலை சூரியனை நோக்கிச் சுழலும் வகையில் அமைக்கப்பட்டு, அஷ்காபாத்தில் 75 மீட்டர் உயர முடைய நினைவுச்சின்னத்தின் மீது நிறுவப்பட்டது.***

## பெர்டிமுகமேடோவ் சகாப்தம்: புன்னகையுடன் தொடர்ச்சி:

நியாசோவுக்குப் பின், குர்பாங்குலி பெர்டிமுகமேடோவ் 2006-இல் பதவியேற்றார். முதலில் ஒரு சீர்திருத்தவாதியாகத் தோன்றினாலும், அவர் விரைவில் அதே பாதையில் சென்றார். தனிமனித வழிபாட்டை - சற்று குறைந்த பகட்டுடன் - தொடர்ந்தார்; தனிமைப்படுத்தல் கொள்கையையும் பேணினார். அஷ்காபாத்தின் தெருக்களில் குதிரையில் சவாரி செய்து செல்வது இவரது பிரபலமான அடையாளங்களில் ஒன்று; குதிரைகளின் சுகாதார நன்மைகள் குறித்து ஒரு நூலும் எழுதினார். 2022-இல், பதவியிலிருந்து விலகி, தனது மகன் செர்தார் பெர்டிமுகமேடோவுக்கு அதிகாரத்தை மாற்றினார். இது பலரால் பரம்பரை சர்வாதிகாரம் என்று குறிப்பிடப்பட்டது.

செர்தார், முன்னாள் அரசு அதிகாரியும் விளையாட்டு ஆர்வலருமானவர், தனது தந்தையின் கொள்கைகளைத் தொடர்ந்த போதிலும், நவீன உருவத்தை முன்வைக்க முயன்றார். ஆனால், நாட்டின் மனித உரிமைப் பதிவு இன்னும் கவலைக் கிடமாகவே உள்ளது - தன்னிச்சையான கைதுகள், பருத்தித் தொழிலில் கட்டாய உழைப்பு, கருத்து சுதந்திரத்தில் கடுமையான கட்டுப்பாடுகள்.

## எரிவாயு வளமும் பொருளாதாரமும்:

துருக்மெனிஸ்தான் உலகின் நான்காவது பெரிய இயற்கை எரிவாயு இருப்பை கொண்டுள்ளது. TAPI குழாய்த் திட்டம் (துருக்மெனிஸ்தான்-ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான்-இந்தியா) - கல்கினிஷ் வயலில் இருந்து 1,800 கிலோமீட்டர்களைக் கடந்து தெற்காசியாவுக்கு எரிவாயுவை கொண்டு செல்லும் ஒரு மகத்தான திட்டம். இது இப்பகுதிக்கு பொருளாதார மேம்பாடு மற்றும் எரிசக்தி பாதுகாப்பை வழங்கும் ஒரு முக்கிய திட்டமாகப் பார்க்கப்படுகிறது.

எனினும், ஆப்கானிஸ்தானில் அரசியல் உறுதியின்மை, தள வாட சவால்கள், மற்றும் துருக்மெனிஸ்தானின் வெளிப்படைத் தன்மையின்மை ஆகியவற்றால் இந்தத் திட்டம் தாமதங்களைச் சந்தித்துள்ளது. இதற்கிடையில், நாட்டின் பொருளாதாரம் எரிவாயு ஏற்றுமதியை பெரிதும் நம்பியுள்ளதால், உலக விலை ஏற்ற இறக்கங்களுக்கு உள்ளாகிறது.

இந்த வளங்கள் இருந்தபோதிலும், சாதாரண குடிமக்கள் வறுமையில் வாடுகின்றனர். பொருளாதார மேலாண்மை இல்லாமை, பன்முகத்தன்மை இன்மை, மற்றும் அதிகப்படியான அரசுக் கட்டுப்பாடு ஆகியவை நாட்டை உணவு இறக்குமதி மற்றும் வெளிநாட்டு தொழிலாளர் அனுப்புதலில் தங்கியிருக்க வைத்துள்ளன. அஷ்காபாத்தின் பளபளக்கும் பளிங்கு கோபுரங்களுக்கும் - தலைவர்களின் மாபெரும் செலவு - ஏழ்மையான கிராமங்களுக்கும் இடையிலான தெளிவான வேறுபாடு, வளத்தைப் பகிர்ந்து கொள்ளத் தவறிய ஒரு நாட்டின் கதையைச் சொல்கிறது.

## சமூகமும் பண்பாடும்: முற்றுகையின் கீழ் பாரம்பரியம்:

துருக்மெனிஸ்தானின் மக்கள் பெரும்பான்மையாக முஸ்லிம்கள், 90 சதவீதம் சன்னி இஸ்லாத்தைப் பின்பற்றுகின்றனர். நாட்டின் வளமான பண்பாட்டு மரபுகளில் கம்பளம் நெசவு முக்கிய இடம்பெறுகிறது - சிக்கலான வடிவங்கள் தலைமுறை தலைமுறையாக கடத்தப்படுகின்றன. உலகப் புகழ் பெற்ற துர்க்மென் கம்பளம் (மேற்கில் 'புகாரா கம்பளம்' என்று அழைக்கப்படுகிறது) இங்கு உருவானதே.

ஆண்கள் பாரம்பரியமாக 'தெல்பெக்' - உயர் கிரீடம் கொண்ட ஆட்டுத்தோல் தொப்பி - அணிகின்றனர். பெண்கள் வண்ணமயமான, பாயும் ஆடைகளை அணிகின்றனர். தேசிய உணவான 'ஷுர்பா' - ஒரு கனமான ஆட்டிறைச்சி சூப் - மக்களின் நாடோடி வேர்களைப் பிரதிபலிக்கிறது.

ஆனால், இந்தத் துடிப்பான பண்பாடு பல தசாப்தங்களாக நிலவிவரும் சர்வாதிகார ஆட்சியின் கீழ் மெல்லச் சிதைந்து வருகிறது. அரசு கல்வி, ஊடகங்கள் மற்றும் பண்பாட்டு



வெளிப்பாடுகள் ஆகியவற்றைக் கடுமையாகக் கட்டுப்படுத் துகிறது. நாட்டின் கல்வியறிவு விகிதம் உயர்ந்த நிலையில் இருந்தபோதிலும், கல்வியின் தரம் குறைந்து வருவதாகக் கூறப்படுகிறது. மாணவர்களிடம் விமர்சனச் சிந்தனையை வளர்ப்பதற்குப் பதிலாக, அரசின் கருத்தியலும் பிரச்சாரங் களுமே முதன்மையாகக் கற்பிக்கப்படுகின்றன.

கலை மற்றும் இசைத்துறைகளும் கடுமையான கட்டுப்பாடுக ளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இணைய அணுகலும் தீவிர மாகக் கட்டுப்படுத்தப்படுகிறது. Facebook, YouTube, Twitter போன்ற பிரபலமான இணையத்தளங்கள் தடை செய் யப்பட்டுள்ளதுடன், சுயாதீன ஊடகங்களுக்கும் போதிய இடமில்லை. இதன் விளைவாக, மாற்றுக் கருத்துகளையும் சுதந்திரமான தகவல்களையும் மக்கள் அணுகுவதற்கான வாய்ப்புகள் பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

## எதிர்காலம்: அமைதியின் சந்திப்பும் வாய்ப்புகளும்:

இன்று, துருக்மெனிஸ்தான் ஒரு சந்திப்பில் நிற்கிறது. அதன் மகத்தான இயற்கை வளங்கள் மற்றும் மூலோபாய இருப் பிடத்துடன், இது ஒரு பிராந்திய பொருளாதார வல்லரசாக உருமாறும் திறனைக் கொண்டுள்ளது. TAPI குழாயின் வளர்ச்சி பில்லியன் கணக்கான வருவாயைக் கொண்டு வந்து தெற்காசியாவுடனான உறவுகளை வலுப்படுத்தும். நடுநிலை இயக்கத்தில் (Non-Aligned Movement) அதன் உறுப்பினர் மற்றும் ரஷ்யா மற்றும் சீனாவுடனான எச்சரிக்கையான உறவு கள் அதற்கு சில இராஜதந்திரப் பலத்தை வழங்குகின்றன.

ஆனால், நாட்டின் தொடர்ச்சியான தனிமைப்பாடு முன்னேற் றத்திற்கு தடையாக உள்ளது. வெளிப்படைத்தன்மை இன்மை, பரவலான தணிக்கை, மற்றும் வெளிநாட்டு செல்வாக்கு குறித்த அரசின் அவநம்பிக்கை ஆகியவை நாட்டை உலக சமூகத்துடன் முழுமையாக ஒருங்கிணைப்பதை தடுத்துள் ளன. இருந்தாலும், நம்பிக்கை உள்ளது. அதிகார மாற்றத் திற்குப் பின்னர், சில மெல்லிய மாற்றங்கள் தென்படுகின்றன - இணையக் கட்டுப்பாடுகளில் சிறிது தளர்வு, சர்வதேச கலா சார நிகழ்வுகளில் குறைந்த அளவிலான ஈடுபாடு, வெளி நாட்டு முதலீட்டை ஈர்க்கும் முயற்சி. நீண்ட காலமாக 'மறக்கப் பட்ட நிலமாக' இருந்து வந்த ஒரு நாட்டிற்கு, வெளித்திறப் பின் பாதை நீண்டதும் நிச்சயமற்றதுமானது.

## துருக்மெனிஸ்தானின் மர்மம்:

துருக்மெனிஸ்தான் முரண்பாடுகள் நிறைந்த ஒரு நாடாகும். மூச்சடைக்கச் செய்யும் இயற்கை அழகைக் கொண்ட இந்நாடு, எரிந்து கொண்டிருக்கும் டார்வாசா எரிவாயுக் குழி முதல் அமைதியான காஸ்பியன் கடற்கரை வரை பல்வேறு இயற் கைச் சிறப்புகளைக் கொண்டுள்ளது. ஆனால், அதன் மக்கள் அச்சமும் தனிமைப்படுத்தலும் நிறைந்த ஓர் அரசியல் அமைப்புக்குள் வாழ்கின்றனர். பிராந்திய எரிசக்திப் பாது காப்பில் முக்கியப் பங்கு வகிக்கக்கூடிய இயற்கை எரிவாயு வளங்களை இந்நாடு கொண்டிருந்தபோதிலும், அதன் தலை மைத்துவம் உண்மையான சர்வதேச ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளைத் திறப்பதில் தயக்கம் காட்டுகிறது. உலகை ஈர்க்கக்கூடிய வளமான பண்பாட்டு மரபுகளைக் கொண்டிருந் தாலும், துருக்மெனிஸ்தான் இன்னமும் வெளி உலகிற்கு முழுமையாகத் திறக்கப்படாத ஒரு மூடிய தேசமாகவே காணப்படுகிறது.

உலகம் தொடர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறது: துருக்மெ னிஸ்தான் இனியும் 'நரகத்தின் வாசல்' என அழைக்கப்படும் அந்த எரியும் மர்மமாகவே தொடருமா? அல்லது 21-ஆம் நூற்றாண்டின் வெளிச்சத்தை நோக்கித் தனது கதவுகளைத் திறக்கும் துணிச்சலைப் பெறுமா? இதற்கான விடை அதன் இயற்கை எரிவாயு வளங்களிலோ, பளிங்குக் கற்களால் எழுப் பப்பட்ட அரண்மனைகளிலோ இல்லை. மாறாக, அது அந் நாட்டு மக்களின் விருப்பத்திலும் அதன் தலைமைத்துவத் தின் தொலைநோக்குப் பார்வையிலுமே தங்கியுள்ளது.

தற்போதைய நிலையில், துருக்மெனிஸ்தான் நம் காலத்தின் கடைசி மாபெரும் மர்மங்களில் ஒன்றாகத் தொடர்கிறது. வெளி உலகால் முழுமையாகக் கண்டறியப்படுவதற்காகக் காத்திருக்கும் ஒரு தேசமாக மட்டுமன்றி, ஒருநாள் தன்னையே புதிதாகக் கண்டறிந்து மறுவரையறை செய்யக்கூடிய ஒரு நாடாகவும் அது விளங்குகிறது.

yameena.k@thaiveedu.com



# நீட் குளறுபடியும்
# கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் (CJP)
# எழுச்சியும்

நெல்லை ஜெயசிங்

தேசியத் தேர்வு முகமையின் வாயிலாக கொண்டுவரப்பட்ட பல்வேறு உயர் கல்வித் தேர்வுகள் கடும் முறைகேடுகளையும், வினாத்தாள் கசிவையும் ஏற்படுத்தியதன் விளைவாக, அது அகில இந்திய அளவில் மாணவர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பையும், அரசியலில் மிகப்பெரிய அதிர்வலைகளையும் ஏற்படுத்தி இருக்கிறது. இது ஆளும் பாஜக அரசிற்கு பெரும் நெருக்கடியையும் இந்திய அரசியலில் புதியதொரு பரிமாணத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.


**தேசியத் தேர்வு முகமை NTA (national Testing Agency):**

தேசியத் தேர்வு முகமை என்பது, ஒரே தரத்தில் வெளிப்படை, மற்றும் நம்பகத்தன்மை, மற்றும் தொழினுட்ப உதவியுடன் தேசிய தேர்வுகளை நடத்தும் எண்ணத்துடன் 2018-இல் பாஜக அரசால் கொண்டுவரப்பட்ட ஓர் உயர்கல்வி அமைப்பாகும். ஆனால் இது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கோ நாடாளுமன்ற சட்டத்திற்கோ உட்பட்டதல்ல. இது தேசிய அளவில் தேர்வுகளை நடத்தி முடிவுகளை அறிவிக்கும், கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு நிறுவனமாகும்.

ஒன்றிய கல்வி அமைச்சக அதிகாரிகள் உட்பட பல்வேறு துறை நிபுணர்களை உள்ளடக்கிய இக்குழு, சுயாதீனமானது என கூறப்படுகிறது. ஆனால் நடைமுறையில் நியமனங்கள் அனைத்தும் அரசு சார்பானதும், பாஜக-வின் கொள்கை சார்ந்ததாகவும் இருப்பது அனைவரும் அறிந்த ஒன்று. கல்வி அமைச்சின் கட்டுப்பாட்டில் இயங்கும். Neet, Jee ,Cuet, Uge Net என பல்வேறு தேர்வுகளை நடத்திய இந்நிறுவனத்தின் தேர்வு முறைமையில், வினாத்தாள் கசிவு உட்பட நூற்றுக்கு மேற்பட்ட குளறுபடிகள் தொடர்ந்து நடைபெற்று, அதன் காரணமாக இலட்சக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இலட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலத்தை மதிப்பிடும் இந்நிறுவனம், குறைந்தளவு நிரந்தரப் பணியாளர்களைக் கொண்டு இயங்குவது அதிர்ச்சியான தகவலாகும்.



prasadbatti@gmail.com



> *“நீட் தேர்வு மிகவும் திறமையானவர்களை மட்டுமே மருத்துவப் படிப்புக்கு தேர்ந்தெடுப்பதாகக் கூறப் படுவதைக் கூர்ந்து கவனித்தால், அதில் உண்மை இல்லை என்ற உண்மை தெரியவரும்.”*

## நீட் தேர்வு திறமையானவர்களைத் தேர்வு செய்கிறதா?

நீட் தேர்வு மிகவும் திறமையானவர்களை மட்டுமே மருத்துவப் படிப்புக்கு தேர்ந்தெடுப்பதாகக் கூறப்படுவதைக் கூர்ந்து கவனித்தால், அதில் உண்மை இல்லை என்ற உண்மை தெரியவரும்.

- பொதுவாக பத்தாம் வகுப்பில் தேர்ச்சிபெற ஒரு மாணவன் அனைத்துப் பாடங்களிலும் குறைந்தபட்சம் குறிப்பிட்ட மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும் என்பது நியதி. ஆனால் நீட் தேர்வில் மூன்று பாடத்திலும் குறைந்தபட்ச மதிப்பெண் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் எனக் கூறப்படவில்லை.
- நடந்து முடிந்த நீட் தேர்வின் முடிவில் மொத்த 720 மதிப் பெண்ணிற்கு (இயற்பியல் 180, வேதியல் 180, உயிரியல் 360) பொருளாதாரத்தில் பின்தங்கிய ஒரு மாணவர் 213 மதிப்பெண்ணும், பிற்படுத்தப்பட்ட மாணவர் 177 மதிப் பெண்ணும், (Cutoff) பெற்றால், அம்மாணவர் மருத்துவம் படிக்கத் தகுதியானவர் என நீட் தேர்வு நடத்தும் நிறுவனம் கூறுகிறது. எனவே மிகவும் திறமையானவர்களுக்கு மட்டுமே மருத்துவம் படிக்கத் தேர்வாகிறார்கள் என்பது இங்கே புதையுண்டு போகிறது.
- நீட் தேர்வு முறை, பணம் கொட்டிக்கிடந்தால் மருத்துவராக வழி வகுக்கிறது. நடந்து முடிந்த நீட் தேர்வில் இந்திய அளவில் 91,927 மருத்துவ இடங்கள் இருக்க, 9,09,369 மாணவர்கள் மருத்துவம் படிக்கத் தேர்ச்சி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் மருத்துவ இருக்கைகளைத் தாண்டி, எட்டு இலட்சம் பேர் மேலதிகமாக அறிவிக்கப்படவேண்டியதன் அவசியம் என்ன? தற்போது 43,915 இருக்கைகள் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகளில் பணம் உள்ளவர்கள் குறைந்த மதிப்பெண் இருந்தாலும் மருத்துவம் படிக்க இது ஒரு குறுக்கு வழியாகுவதுடன் நேர்மையற்ற முறையுமாகும். பொதுத் தேர்வு என்ற போர்வையில் ஏழைகளிடமிருந்து, உயர் கல்வி பறிக்கப்பட்டு பணம் படைத்தவர்களுக்கு மட்டும் என்ற நிலை உருவாக்கப்பட்டுவிட்டது. இவ்வாறு தனியார் மருத்துவக் கல்லூரிகளின் மிகப்பெரும் பகற் கொள்ளைக்கு அரசே துணைபோவது வெளிப்படையாகத் தெரிகிறது.
- தனியார் கல்லூரிகளில் நடைபெறும் கட்டணக் கொள்ளையைத் தடுக்கவே தேசிய அளவில் நீட் என கூறப்பட்டது. ஆனால் நடைமுறையில் அது தடுக்கப்படவில்லை. மறுபுறம் வேறு ஒரு பணக் கொள்ளையாக, நீட் தேர்வு பயிற்சி மையங்கள் (Coaching centres) நாடெங்கும் உருவாகத் தொடங்கிவிட்டன. பயிற்சி மையம் சென்றால் மட்டுமே தேர்ச்சி பெறமுடியும் என்ற நிலை உருவாகிவிட்டது. பயிற்சி மையங்களில் பல ஆயிரம் கோடி ரூபாய் வசூலாவது வெளிப்படையாகத் தெரிகிறது. லட்சக்கணக்கான ஏழை மாணவர்களால் லட்சத்தில் பணம் செலுத்தி பயற்சி பெற முடியாத சூழ்நிலை. குறிப்பாக ஏழை எளிய கிராமப்புற மாணவர்களின் உயர் கல்விக் கனவு, பணத்தால் கருகிப் போய்க் கொண்டிருக்கிறது. இந்திய அளவில் ஏராளமான மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

கல்வி அனைவருக்கும் கிடைக்கவேண்டிய அடிப்படை உரிமையென வலியுறுத்தப்பட்டபோதும், நடைமுறையில் அது வெறும் ஏட்டில் மட்டுமே இருக்கிறது. உயர் கல்வி கட்டமைப்பு, சமூக நீதிக்கு எதிரானதாகவும், விளிம்புநிலை மக்களின் வாய்ப்புகளை பறிப்பதாகவும் இருக்கிறது. சம வாய்ப்பு என்று முலாம் பூசி அறிமுகப்படுத்தப்பட்ட தேர்வு, நடைமுறையில் சமூக ஏற்றத்தாழ்வுகளைத் தீவிரப்படுத்துகிறது.

## நீட் குளறுபடிகள்:

தேர்வு முகமை தொடங்கப்பட்ட 2018 முதல், நீட் உள்பட பல்வேறு தேர்வுகளில் ஏராளமான முறைகேடுகள் நடைபெற்று வந்துள்ளன. அவை எண்ணிக்கையில் நூற்றுக்கு மேல் இருக்கும் எனக் கூறப்படுகிறது. இந்நிலையில் மருத்துவம் தொடர்பான நீட் தேர்வில் நடைபெற்ற முறைகேடுகள் தேசிய அளவில் மாணவர்கள், பெற்றோர், மற்றும் பொதுமக்கள் மத்தியில் மிகக்கடுமையான பாதிப்பை, காயத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

தற்போதைய வினாத்தாள் முறைகேட்டுக்கு முன்னதாக 2024-ஆம் வருடமும் வினாத்தாள் கசிவு நடந்துள்ளது. வினாத்தாள் கசிந்து பல இலட்சம் ரூபாய்க்கு வினாத்தாள் விற்கப்பட்டு, ஒரே குடும்பத்தில் பலரும் மருத்துவ படிப்பில்



> *சோனம் வாங்சு 'கல்வியைப் பாதுகாக்க பொறுப்பற்ற அரசிற்கு அரசியல் பொறுப்பும் இருக்க வேண்டும்' என்ற கோஷத்துடன் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்க முன்வரலானார்.*

சேர்ந்ததாகவும் விமர்சனம் எழுந்தது. பீகார், ஜார்கண்ட் மாநிலங்களில் வினாத்தாள் கசிந்ததாகக் கூறப்பட்டது. இதனைச் சமாளிக்க சில தேர்வு மையங்களில் கருணை மதிப்பெண் (Grace mark) வழங்கப்பட, உச்ச நீதிமன்றம் அதனை இரத்து செய்து, சில மையங்களில் மட்டும் மறு தேர்வுக்கு உத்தரவிட்டது. தேர்வு முடிவு வெளிவந்த போது வழமையைவிட பலர் 720/720 மதிப்பெண் பெறலாயினர். இச்செயற்பாடு அப்போதே மாணவர் மற்றும் பெற்றோர் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. தேர்வு முகமை மீது மக்கள் நம்பிக்கை இழந்தனர்.

இந்நிலையில் தேர்வுத்தாள் கசிவின் உச்சகட்டமாக 2026-ஆம் ஆண்டு மருத்துவப் படிப்புக்கான நீட் எனும் நுழை வுத்தேர்வு மே மாதம் 26-ஆம் திகதி, மாணவர்கள் மீதான பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் நடைபெற்றது. ஆனால் ராஜஸ்தானில் வினாத்தாள் கசிவு ஏற்பட்டு பலகோடி ரூபாய்க்கு வினாத்தாள் விற்பனையான தகவல் வரத் தேர்வு இரத்துச் செய்யப்பட்டு ஜூன் 21-இல் மறு தேர்வு நடத்தப்பட்டது. மே மாதத் தேர்வில் 22 இலட்சம் மாணவர்கள் கலந்துகொண்ட நிலையில் ஜூன் மாத மறு தேர்வில் இரண்டு இலட்சம் குறைந்து, 20 இலட்சம் மாண வர்களே தேர்வு எழுதினர்.

தேர்வு வினாத்தாள் கசிவு மாணவர்கள் மத்தியில் மிகப் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. ஒரு மாத இடைவெ ளியில் மீண்டும் ஒரு தேர்வு எழுத வேண்டிய கட்டாயம் உருவானது. இதனால் இலட்சக்கணக்கான மாணவர்கள் கடும் மன அழுத்தத்திற்கு ஆளானார்கள். அரசின் மெத் தனப்போக்கு அனைத்துப் பெற்றோர்களையும் கோபத் திற்கு உள்ளாக்கியது. தேசியத் தேர்வின் நம்பகத்தன்மை சிதையுண்டுபோனது. பலவீனமான தேர்வு முகமையின் கண்காணிப்பில், தேர்வு முகமை சார்ந்த பேராசிரியர்களே வினாத்தாள்களை விற்பனை செய்துள்ளனர் என்ற உண்மை தெரியவரலாயிற்று.

வினாத்தாள் கசிவுகள் தற்செயலானவை அல்ல. அது திட் டமிடப்பட்ட ஒன்றாகும். இதற்கு தேசிய அமைப்பின் அடிப்படை வடிவமைப்பில் உள்ள குறைபாடும் பிரதான காரணமாகும். ஒப்பந்த ஊழியர்களுடன் மிகக் குறைந்த நிரந்தரப் பணியாளர்களைக் கொண்டு ஒரு கோடிக்கும் அதிகமான மாணவர்களுக்கான பல்வேறு தேசியத் தேர்வுகளை நடத்தும் பலவீனமான அமைப்பு இது என்பது தற்போது தெரியவந்திருக்கிறது.

உயர் கல்வி அமைச்சரும், ஒன்றிய பாஜக அரசும் இவ்அநீ திக்குப் பொறுப்பேற்காது வழக்கம் போல கடந்து போக முற்பட்டபோது அரசின் மீது கடும் கோபம் கொண்ட இலட் சக்கணக்கான மாணவர்கள், தன்னெழுச்சியாக வீதிக்கு வந்து போராடுவது என முடிவுக்கு வந்தனர். இச்சந்தர்ப் பத்தில் இம்மாணவர்களின் குரலை ஆளும் அரசுக்கும், மக்களுக்கும் கொண்டு சேர்ப்பதில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் (CJP) நிறுவுனர் தோழர் அபிஜித் தீப்கே, மற்றும் சமூக செயற்பாட்டாளர், சோனம் வாங்சு இருவரும் பெரும் பங்கு வகித்தனர் எனலாம். இதற்கான வலிமையான போராட்டக் களம் தோழமை உணர்வுடன் அபிஜித் தீப்கே தலைமையில் உருவானபோது, மாணவர் போராட்டத் திற்கும், கல்வி சீர்திருத்தத்திற்கும் ஆதரவு தெரிவித்து உண்ணாவிரதம் இருந்த சோனம் வாங்சு அவர்களும் பக்க பலமாக இருந்தார்.

**சோனம் வாங்சு:**

லடாக்கைச் சார்ந்த கல்வி மற்றும் சூழலியல் ஆர்வலர் சோனம் வாங்சு 'கல்வியைப் பாதுகாக்க பொறுப்பற்ற அரசிற்கு அரசியல் பொறுப்பும் இருக்க வேண்டும்' என்ற கோஷத்துடன் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெ டுக்க முன்வரலானார். அவர் ஏற்கனவே இயற்கை சூழல் மற்றும் கல்விப்பணிக்காக உலக நாடுகளால் அங்கீகரிக் கப்பட்டவர். 2018-ஆம் ஆண்டு ஆசியாவின் உயரிய குடி மக்கள் விருதாகக் கருதப்படும் 'ராமன் மகசேசே' விருது பெற்றவராவார். தவிர ரோலக்ஸ் விருது, பசுமை ஆசிரியர் விருது உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்ற மனிதநேய சமூக உணர்வாளர் ஆவார்.

திரு சோனம் வாங்சு அவர்களுக்கு, கரப்பான்பூச்சி ஜனதா கட்சியுடன் அமைப்பு ரீதியான தொடர்பு இல்லாதபோதும் மாணவர் போராட்டத்துக்கு ஆதரவாக நேரடி பங்கேற்பா ளராக செயற்படலானார். உயர்கல்வியில் சீர்திருத்தம், தேர்வு முறையில் வெளிப்படைத்தன்மை, என்பவற்றை வலி யுறுத்தி, மாணவர்கள் மற்றும் CJP கட்சியின் ஆதரவுடன்,



> *இது தேர்வு முறைகேட்டிற்கு எதிரான போராட்டம் மட்டுமல்ல. இது மாணவர்களின் கல்வி உரிமையையும் ஜனநாயக உரிமையையும் பாதுகாக்கும் இயக்கமாக முன்னெடுக்கப்பட்டது.*

ஜூன் 28 அன்று அகிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தைப் புகழ்பெற்ற டெல்லி ஜந்தர் மந்தரில் தொடங்கினார். இவரது காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் ஒருங்கிணைந்த மாணவர் இயக்கத்திற்கு மிகப் பெரும் உத்வேகத்தை அளித்தது.

கல்வி நிர்வாகத்தில் நீண்டகால சீர்திருத்தம் அவசியம் என வலியுறுத்திவந்த இவர், தொடர் தவறுகளுக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும் எனவும் கூறினார். இவரது உண்ணாவிரதப் போராட்டம் பொது நலன் சார்ந்த கோரிக்கையாகப் பார்க்கப்பட்டது. தேசிய ஊடக கவனத்தையும் சர்வதேச கவனத்தையும் ஈர்த்தது. அரசு பேச்சுவார்த்தைக்கு அழுத்தம் அதிகரிக்க, மறுபுறம் மாணவர் போராட்டமும் மனவுறுதியும் அதிகரித்தது. பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும் போராட்டக்களத்திற்கு திரளாக திரண்டு வந்து, சோனம் வங்சுவின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தங்களின் முழு ஆதரவையும் தெரிவிக்கலாயினர். ஜந்தர் மந்தரில் உண்ணாவிரதம் இருந்த சோனம் வாங்சு அவர்களைக் காவல்துறை வலுக்கட்டாயமாக அங்கிருந்து அப்புறப்படுத்தி மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போதும், அவர் தனது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடவில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ்வாறு தேசிய அளவில் பெரும் கவனத்தை ஈர்த்த சோனம் வாங்சுவின் உண்ணாவிரதப் போராட்டம், 26 நாள் நீடித்தது. இறுதியில் ஒன்றிய அரசின் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ஜூலை 24-இல் அவரது உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது. ஒன்றிய அரசு அவரது கோரிக்கைகளை ஏற்று, சில உறுதிமொழிகளை வழங்கியதுடன், போராடிய வர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட மாட்டாது எனவும் கூறியது. சோனம் வாங்சுவின் உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு வந்தபோதும், இலட்சக்கணக்கான மாணவர்கள் திரண்ட CJP கட்சி போராட்டம் தொடர்ந்தது.

### கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் மாணவர் போராட்டம்:

இந்திய ஒன்றிய அரசுக்கு சவால்விட்டு, மாணவர்களுக்கு நம்பிக்கை ஊட்டிய கரப்பான் பூச்சி ஜனதா கட்சி தற்செயலாக உருவாகி, பின்னர் இந்திய அரசியலில் நிரந்தரமான இடத்தையும் பிடித்து வருகிறது. மே 15-இல் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி, இளைஞர்களைப் பார்த்துக் கூறிய 'கரப்பான் பூச்சி' என்ற சொல்லாடலை கட்சியின் சின்னமாக வைத்து, மே 16-இல் அபிஜேத் தீப்கே என்பவரால் தொடங்கப்பட்ட CJP, சமூக இயக்கமாகி, பின்னர் நாடுதழுவிய மாணவர் இயக்க அமைப்புகளுடன் இணைந்து போராட்ட களத்திற்கு வரலாயிற்று.

தேசியத் தேர்வுகளில் நடந்த முறைகேடுகள் குறித்து மாணவர்களுக்கு ஆதரவாக ஜூன் 6-இல் டெல்லி ஜந்தர் மந்தரில் மாணவர் போராட்டம் எழுச்சியுடன் தொடங்கியது. நாடெங்கும் இருந்து இலட்சக்கணக்கான மாணவர்கள் ஜந்தர் மந்தர் எனும் போராட்டகளத்திற்கு வரலாயினர்.

இது தேர்வு முறைகேட்டிற்கு எதிரான போராட்டம் மட்டுமல்ல. இது மாணவர்களின் கல்வி உரிமையையும் ஜனநாயக உரிமையையும் பாதுகாக்கும் இயக்கமாக முன்னெடுக்கப்பட்டது. இதனால் நாடெங்குமிருந்து மாணவர்களுடன், சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள், பெற்றோர், பொதுமக்கள், திரைப்படக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள், இடதுசாரி அமைப்பினர், கட்சித் தலைவர்கள் என ஏராளமானோர் இரவு பகல் பாராது திரண்டுவந்து ஆதரவு அளிக்கலாயினர். வீடுகளுக்குத் திரும்பாத மாணவர்கள், போராட்ட களத்திலேயே உண்டு உறங்கலாயினர். நாடாளுமன்றம் நோக்கியும் பேரணிகளை நடத்த மாணவர்கள் தயங்கவில்லை. இது இளைய தலைமுறையினரிடையே மிகப்பெரிய எழுச்சியை உருவாக்கியது. டெல்லியில் மட்டுமல்லாது இந்தியாவின் மாநிலங்களிலும் மாணவர் போராட்டம் தீயாகப் பரவியது. தமிழகத்திலும் இடதுசாரி கட்சி அமைப்பு மாணவர்கள் வகுப்புக்களைப் புறக்கணித்துப் போராடலாயினர்.

கடந்த 12 வருடத்தில், பாஜக அரசுக்கு எதிராக இப்படி ஒரு கடுமையான எதிர்ப்புப் போராட்டம் நடந்தது இல்லை என்று கூறுமளவிற்கு, பொது நலனுக்கான மாணவர் போராட்டம், தொய்வின்றி நடந்தபோது, அரசு காவல் துறையின் வழியே கடுமையான அடக்குமுறைகளை மேற் கொள்ளத் தவறவில்லை. மாணவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். கண்ணீர்ப்புகை குண்டுகள் வீசப்பட்டன இளம் பெண்களும், வரம்பு மீறிய தாக்குதல்களுக்கு உள்ளாகினர். சிதறல் குண்டுகள் (Pellet) உட்பட தடை செய்யப்



> *உலக வங்கி போன்ற நிதி நிறுவனங்கள் நிதி உதவி என்ற பெயரில் தனியார் பங்களிப்பைக் கட்டாயமாக்குகிறது. இவற்றின் நிர்ப்பந்தம் காரணமாக இந்தியா போன்ற நாடுகளில் மானியங்கள் குறைக் கப்பட, ஏழை எளிய மக்களின் கல்வி உரிமை மறுக்கப்படுகிறது.*

பட்ட ஆயுதங்களை காவல்துறை பயன்படுத்தியதாக மாணவர்கள் குற்றம் சுமத்தினர். சீருடை இல்லாத பலரால், மாணவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகியதாகவும் கூறப் பட்டது. தற்போதும் ஏராளமான மாணவர்கள் மருத்துவ மனைகளில் உள்நோயாளர்களாகச் சிகிச்சை பெற்று வரு கின்றனர்.

அனைத்து முறைகேட்டிற்கும் பொறுப்பேற்று ஒன்றிய உயர் கல்வி அமைச்சர் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கை முதன்மையாக முன்வைக்கப்பட்டது. நீட் தேர்வு காரண மாக தற்கொலை செய்து கொண்ட மாணவர்களுக்கு இழப்பீடு முழுமையாக வழங்கவேண்டும். அவற்றுடன் மாணவர்கள் மீதான வழக்குகள் மீளப்பெற வேண்டும். நேர்மையான வகையில் தேர்வு தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் வெளிப்படைத்தன்மையுடன் நேர்மையான தேர்வுகள் நடைபெறும் வகையில் உயர்கல்வித்துறை மறு சீரமைப்புக்கு உட்படுத்தவேண்டும், போன்ற கோரிக் கைகள் மாணவர்கள் உள்ளடங்கிய CJP அமைப்பு முன் வைத்துப் போராட்டத்தைத் தீவிரப்படுத்த, அரசாங்கம் கோரிக்கைக்கு உடன்பட்டு, ஒன்றிய கல்வி அமைச்சர் தர் மேந்திர பிரதான் பதவி விலகினார்.

மாணவர் போராட்டத்தின் தீவிரம் கருதி உடனடித்தீர்வாக கல்வி அமைச்சர் பதவி விலகிய பின்னர், தேர்வு முறை கேட்டை தடுக்கும் சட்ட முன்வரைவும் நாடாளுமன்றத்தில் நிறைவேறலாயிற்று, பலர் தேர்வு முகமையிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், சிலர் கைது செய்யப்பட் டுள்ளதாகவும் அரசின் அறிக்கை தெரிவிக்கிறது. மறுபுறம் மாணவர்கள் மீதான வழக்குகள் முழுமையாக நீக்கப்பட வில்லை என்ற அதிருப்தியும் CJP அமைப்பிடம் இருக் கிறது. அதற்கான ஒரு போராட்டத்தை அவர்கள் மீண்டும் ஆரம்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதன்பின் உயர்கல்வியில் உள்ள பிரச்சினைகள், தேர்வு முறையில் உள்ள குளறுபடிகள், முழுமையாக நீங்குமா, மாற்றங்கள் நிகழுமா என்று தெரியவில்லை. ஏனெனில் அர சிடமிருந்த கல்வி பல வருடங்களுக்கு முன்பே பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்குச் சென்றுவிட்டது. அது இலாபம் தரும் வணிகப்பொருளாகவும் மாற்றப்பட்டுவிட்டது. கல்விக்கான அரசு செலவீனம் தற்போது GDP-இல் 2.1 வீத மாகவும் குறைந்துவிட்டது. இதனைப் பயன்படுத்தி தனியார் பயிற்சி மையங்களின் வர்த்தகம் கோடியில் கொடி கட்டிப் பறக்கிறது. அரசும் அதற்கு மறைமுகமாகத் துணை போகிறது.

பன்னாட்டு நிறுவனங்கள் கல்வியை அடிப்படை உரிமை யாக நினைப்பதில்லை. உலக வங்கி போன்ற நிதி நிறு வனங்கள் நிதி உதவி என்ற பெயரில் தனியார் பங்க ளிப்பைக் கட்டாயமாக்குகிறது. இவற்றின் நிர்ப்பந்தம் காரணமாக இந்தியா போன்ற நாடுகளில் மானியங்கள் குறைக்கப்பட, ஏழை எளிய மக்களின் கல்வி உரிமை மறுக் கப்படுகிறது. சமூக நீதி இல்லாது போய்விடுகிறது.

மாநிலப்பட்டியலில் இருந்த கல்வி 1976-ஆம் ஆண்டு அவ சரகால நிலையின்போது பொதுப்பட்டியலுக்கு மாற்றப் பட்டது. 2020-ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையை பாஜக அரசு கொண்டு வந்தது. தூய்மையான தேர்வுகளை நடத்துவதில் ஒன்றிய அரசு முற்றிலும் தோல்வி அடைந்த தற்கு அடிப்படைக் காரணமே இந்தத் தேசிய கல்விக் கொள்கை ஆகும். இதுபோன்று மத்தியில் அதிகாரக் குவியல் காரணமாக, மாநில மக்களின் விருப்பத்திற்கு மாறாகக் குறிப்பாக தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் மீது இந்தி, சமஸ்கிருதம் போன்ற வடஇந்திய மொழிகளைத் திணிக்கும் முயற்சியும் நடைபெறுகிறது. மாணவர்களின் விருப்பத்திற்கு மாறாக மும்மொழிக்கொள்கை கட்டாய மாக்கப்படுகிறது. இவ்வாறு தேசத்தின் கல்விக்கட்டமைப்பு மாணவர்களின் எதிர்கால நலனை விட ஆளும் கட்சியின் கொள்கை மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் காட்டும் திசைவழி செல்வதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதன் மறைமுக செயற்றிட்டமாக சமூக நீதிக்கொள்கையும் திட்ட மிட்டு சிதைக்கப்படுகிறது.

இந்நிலையில் நடந்து முடிந்த மாணவர், CJP போராட்டம் உணர்த்திய பாடங்கள் ஏராளம். அதனைப் பத்தோடு ஒன்றாக அரசும், அரசியல் கட்சிகளும் நினைத்துக் கொண்டு கடந்து போய்விடக்கூடாது. இது ஒன்று திரண்ட மாணவர்களின், இளைஞர்களின் எச்சரிக்கை மணியாகும். தேர்வு முகமையை மட்டும் மாற்றியமைப்பது இதற்கான முழுமையான தீர்வாகாது. மாணவர்களின் எதிர்காலம், கல்வி, வேலைவாய்ப்பு, எனப் பல அம்சங்கள் இதில் இணைந்துள்ளன. அதனடிப்படையில் தீர்வு காணப்படாத பட்சத்தில், மீண்டும் ஒரு மாணவ, இளைஞர் போராட்டம் இந்திய தேசத்தில் உதயமாவது தவிர்க்க முடியாத ஒன்றா கிவிடும்.



jeyasingh@thaiveedu.com

# இமயத்தில் ஒலிக்கும் பேரழிவின் இரைச்சல்

சு. சத்யதேவன்



2026 ஓகஸ்ட் 26 அன்று நேபாள - திபெத் எல்லைப் பிராந்தியத்தில் அமைந்துள்ள திபெத்தின் ஜீரொங் (Gyirong) மற்றும் நேபாளத்தின் ரசுவா (Rasuwa) மாவட்டப் பகுதிகளைச் சார்ந்த லெண்டே கோலா (Lende Khola) ஆற்றில், குறுகிய நேரத்தில் பெருகிய அசுரப் பனிச் சேற்றுப் பெருக்கைக் (Glacial Debris Torrent) கண்டபோது அப்பகுதி மக்களும், பின்பு அதைச் செய்திகளிலும் சமூக ஊடகங்களிலும் பார்த்த தெற்காசியாவும் அதிர்ச்சியில் உறைந்துபோனது. பொதுவாகக் கடுமையான மழைப்பொழிவு அல்லது புயல் போன்ற சீற்றங்களினாலேயே பேரழிவு வெள்ளம் உண்டாகும் என்பதே பெரும்பாலான மக்களின் பொதுவான நம்பிக்கை; அங்கே அது அடியோடு மாறிப்போனது. ஏனெனில், அன்று காலை அங்கே வழக்கமான அமைதியும் இதமான சூழலுமே நிலவியது. உள்ளூர்வாசிகள் தங்களது அன்றாடப் பணிகளில் மூழ்கியிருக்க, கைலாஷ் மானசரோவர் புனிதப் பயணம் மேற்கொண்ட யாத்ரீகர்களும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் தங்களது பயணங்களை உற்சாகத்துடன் தொடங்கியிருந்தனர்.

ஆனால், அந்த அமைதியை நொடிப்பொழுதில் சுக்கு நூறாக உடைத்துக்கொண்டு, உயர்மலையடுக்கிலிருந்து சீறிப் பாய்ந்த பனி இடிபாடுகளும் சேறும் லெண்டே கோலா ஆற்றுப் பள்ளத்தாக்கை வந்தடைந்தன. அதன் தொடர்ச்சியாக, அதுவரை அமைதியாக ஓடிக்கொண்டிருந்த திரிசூலி (Trishuli) ஆறு வெறும் 30 நிமிடங்களுக்குள், அதன் நீர்மட்டம் 27 அடி (ஒன்பது மீற்றர்) வரை அச்சுறுத்தும் வகையில் திடீரென உயர்ந்தது. மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் பாய்ந்து வந்த இவ்வசுர வெள்ளம், தன் பாதையிலிருந்த பாலங்கள், பிரதான சாலைகள், நீர்மின் திட்டங்கள் மற்றும் கிராமங்கள் என அனைத்துக் கட்டமைப்புகளையும் சுவடே இன்றிச் சின்னாபின்னமாக்கியது. இப்பேரழிவில் பல உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதுடன், பன்னாட்டு யாத்ரீகர்கள் மற்றும் உள்ளூர்வாசிகள் உட்படப் பலரைக் காணவில்லை என முதற்கட்ட அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இப்பேரழிவினால் ஏற்பட்ட உயிர்ச்சேதங்களும் உட்கட்டமைப்புச் சீரழிவுகளும் அப்பிராந்தியத்தின் நிலைமையை மேலும் சோகமயமாக்கியுள்ளன. நேபாள - திபெத் எல்லைப் பிராந்தியத்தில் இதுவரை நேபாளத்தில் 162 பேரும், திபெத் பகுதியில் 3 பேரும் உயிரிழந்துள்ளமை அதிகாரபூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளது. அதே வேளை, திபெத் பிராந்தியத்தில் 260 வெளிநாட்டவர்கள் உட்பட 558 பேரும், நேபாளப் பகுதியில் 341 வெளிநாட்டவர்கள் உட்பட 403 பேரும் காணாமல் போயுள்ளனர். அதற்கமைய, இரு பிராந்தியங்களிலுமாக இதுவரை 165 உயிரிழப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளதோடு, 601 வெளிநாட்டவர்கள் அடங்கலாக மொத்தம் 961 பேரின் நிலை என்னவென்று தெரியாமல் இன்னமும் தேடப்பட்டு வருகின்றனர்.

காணாமல் போனவர்களின் பட்டியலில் கணிசமான எண்ணிக்கையிலான வெளிநாட்டுப் பயணிகளும் உள்ளூர்வாசிகளும் அடங்குகின்றனர். ஆன்மீகப் பயணமாக கைலாஷ்

prasadbatti@gmail.com

மானசரோவர் நோக்கிச் சென்ற 133 இந்திய யாத்ரீகர்களும், அப்பகுதியின் நீர்மின் திட்டப் பணிகளில் ஈடுபட்டிருந்த 9 தென்கொரியப் பொறியாளர்களும் தொழிலாளர்களும் இதில் அடங்குவர். மேலும், அமெரிக்காவைச் சேர்ந்த 47 பேரும், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த 34 பேரும், பிரித்தானியாவைச் சேர்ந்த 33 பேரும், கனடாவைச் சேர்ந்த 24 பேரும், மலேசியாவைச் சேர்ந்த 11 பேரும், ரஷ்யாவைச் சேர்ந்த 4 பேரும் காணாமல் போயுள்ளனர். இவர்களுடன், முதற்கட்ட மீட்புப் பணிகளில் துணிச்சலாக ஈடுபட்டிருந்த 28 நேபாளப் பொலிஸ் அதிகாரிகளும் 62 உள்ளூர் நேபாளக் குடிமக்களும் காணாமல் போனவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளமை அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பேரழிவின் உட்கட்டமைப்புச் சேதங்கள் அப்பிராந்தியத்தின் பொருளாதாரத்தையும் வாழ்வாதாரத்தையும் அடியோடு முடக்கியுள்ளன. வெள்ளப்பெருக்கின் சீற்றத்தால் 19 பிரதான பாலங்கள் முற்றாக அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன், சுமார் 40 கிலோமீற்றர் நீளமுடைய நெடுஞ்சாலைக் கட்டமைப்புகள் முற்றிலும் உருத்தெரியாமல் அழிந்து, போக்குவரத்துத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. மேலும், இப்பிராந்தியத்தின் மின் தேவையைப் பூர்த்தி செய்து வந்த பல நீர்மின் உற்பத்தி நிலையங்கள் வெள்ள நீரில் மூழ்கிப் பலத்த சேதமடைந்துள்ளன. குறிப்பாக, நுவாகோட் (Nuwakot) மாவட்டத்தில் குடியிருப்பு மற்றும் அரசுக் கட்டடங்களின் இரண்டாவது மாடி வரை வெள்ளத்தோடு அடித்துவரப்பட்ட களிமண்ணும் பாறை இடிபாடுகளும் நிறைந்து ஒட்டு மொத்தப் பகுதியையும் சேற்றுப் படுக்கையாக மாற்றியுள்ளன.

சம்பவ இடத்தில் தீவிரமான தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதனால், வெவ்வேறு செய்தி ஊடகங்கள் மற்றும் அரசுசாரா அமைப்புகளின் தரவுகளில் சிறு புள்ளிவிபர வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதேவேளை, நேபாளம் மற்றும் திபெத் ஆகிய இரு எல்லைப் பிராந்தியங்களிலும் காணாமல் போனதாகப் பதிவான சில நபர்களின் விவரங்கள், இரு நாடுகளின் அதிகாரபூர்வப் பட்டியல்களிலுமே இரட்டிப்பாகக் (Double counting) குறிப்பிடப்பட்டிருக்கலாம் எனவும், மீட்புப் பணிகள் நிறைவடையும் போதே துல்லியமான புள்ளிவிவரங்கள் தெரியவரும் என்றும் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## பேரழிவின் காரணம்:


இத்தனை பிரம்மாண்டமான உட்கட்டமைப்புச் சீரழிவுகளுக்கும் உயிர்ச்சேதங்களுக்கும் மத்தியில், 'மழையோ, புயலோ இல்லாத தெளிவான சூழலில், இத்தனை கோடிக்கணக்கான லீற்றர் வெள்ளப்பெருக்கு எவ்வாறு சாத்தியமானது?' என்ற கேள்வியே சர்வதேசக் காலநிலை விஞ்ஞானிகளையும் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளையும் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியது. இப்பேரழிவின் பின்னணியில் உள்ள புவிசார் காரணிகளை ஆராயத் தொடங்கியபோதே, மனிதக் கண்களுக்குப் புலப்படாத இமயத்தின் உயர்மலையடுக்கில் அரங்கேறிய அந்த அச்சுறுத்தும் இயற்கை விளையாட்டு வெட்டவெளிச்சமானது.

வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட திரிசூலி ஆற்றங்கரைப் பகுதியிலிருந்து சுமார் 35 கிலோமீற்றர் தொலைவில், கடல் மட்டத்திலிருந்து 5,200 மீற்றருக்கும் அதிகமான உயரத்தில், பல நூறு தொன் எடை கொண்ட பனிப்பாறையின் மாபெரும் பகுதி ஒன்று மெல்ல நகர்ந்து தன் பிடியை முழுமையாக இழக்கத் தொடங்கியிருந்தது. அடுத்த சில நொடிகளில் சுக்குநூறாக உடைந்த அந்தப் பெரும் பனிப்பாறை, சுமார் 1,200 மீற்றர் உயரத்திலிருந்து பள்ளத்தாக்கை நோக்கி அசுர வேகத்தில் வீழ்ந்தது. வழியிலிருந்த பிரம்மாண்ட பாறைகளையும் வண்டல் மண் படிவுகளையும் தன்னோடு இழுத்துக்கொண்டு, மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் கீழ்நோக்கிச் சீறிப் பாய்ந்தது. பனிப்பாறைச் சரிவு என்பது நிலச்சரிவு போல மாதக்கணக்கில் மெல்ல நகரும் ஒன்று அல்ல; பல நூறு தொன் எடை கொண்ட உறைபனிப் பாறை, மலையுச்சியிலிருந்து விடுபடும் அந்தப் பிரதான நிகழ்வு (Trigger Event) சில வினாடிகளிலேயே நடைபெற்றது. இச்சரிவின் சீற்றம் ரிக்டர் அளவுகோலில் 5.2 அலகு நில அதிர்வாகப் பதிவாகும் அளவுக்கு மாபெரும் ஆற்றலைக் கொண்டிருந்தது. ஆரம்பத்தில் இது வழக்கமான நிலநடுக்கம் எனக் கருதப்பட்ட போதிலும், இந்த நில அதிர்வுச் சமிக்ஞை நிலநடுக்கத்தால் ஏற்படவில்லை என்றும், மாறாக மாபெரும் பனிப்பாறைச் சரிவே (Glacial Collapse) இத்தகைய அதிர்வை உருவாக்கியது என்றும் அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் (USGS) உறுதிப்படுத்தியது.

மலைச்சரிவிலிருந்து சீறிப் பாய்ந்து வந்த மாபெரும் பாறைகளும், வண்டல் மண்ணும், பனி இடிபாடுகளும் திபெத்தின் லெண்டே கோலா (Lende Khola) ஆற்றின் குறுகிய பள்ளத்தாக்குப் பகுதியில் ஒன்று திரண்டு வந்து விழுந்தன. இவ்அசுர இடிபாடுகள் ஆற்றின் இயற்கையான நீரோட்டத்தை முற்றிலுமாக அடைத்து, குறுகிய நேரத்திற்குள் அங்கே ஆபத்தான ஒரு 'தற்காலிக இயற்கை அணையை' (Landslide Dam) உருவாக்கின.

ஆற்றின் இயல்பான நீரோட்டத்தை முழுமையாக மறித்த இவ்இடிபாடுகள், குறுகிய நேரத்திற்குள் ஆபத்தான ஒரு 'தற்காலிக இயற்கை அணையை' (Landslide Dam) உருவாக்கின. அடைபட்டுப்போன ஆற்றின் பின்னால், மலையுச்சியிலிருந்து உருகி வந்த பனிநீரும் சேறும் கட்டுக்கடங்காமல் திரண்டு, நிமிடத்திற்கு நிமிடம் அச்சுறுத்தும் மாபெரும் நீர்த்தேக்கமாக உருவெடுத்தது. ஆனால், கணக்கிலடங்காத் தண்ணீரின் பிரம்மாண்டமான நீரழுத்தத்தைத் தாங்கும் வலிமை, மண் மற்றும் பாறை இடிபாடுகளால் ஆன அந்தத் தற்காலிக அணைக்கு இருக்கவில்லை. இறுதியில், அந்த அசுர அழுத்தத்தைத் தாங்க முடியாமல் அடுத்த சில மணிநேரங்களிலேயே அந்த இயற்கை அணை பேரிரைச்சலுடன் உடைந்து சிதறியது.

அணை உடைந்த அந்த நொடியில், அதன் பின்னால் அடைபட்டுத் தேங்கியிருந்த கோடிக்கணக்கான லீற்றர் நீரும், அடர்ந்த சேறும், பாறைகளும் கலந்த பேரழிவு அலை, சீற்றத்துடன் கீழ்நோக்கிப் பாய்ந்தது. மலைப் பள்ளத்தாக்குகளின் வழியே தங்குதடையின்றிப் பாய்ந்த இப்பேரலை, அதுவரை அமைதியாக ஓடிக்கொண்டிருந்த திரிசூலி (Trishuli) ஆற்றுப் படுக்கையை அடைந்த வெறும் 30 நிமிடங்களுக்குள், ஆற்றின் நீர்மட்டம் 27 அடி (சுமார் ஒன்பது மீற்றர்)




2011 முதல் 2020 வரையிலான தசாப்தத்தில் 65 சதவீதக் கூடுதல் வேகத்தில் பனி இழப்பு ஏற்பட்டுள்ளது, நேபாள நாட்டின் பனிப்பாறைகள் மட்டும் கடந்த 30 ஆண்டுகளில் தங்களது ஒட்டுமொத்தப் பனி இருப்பில் மூன்றிலொரு பகுதியை இழந்து விட்டது

வரை அச்சுறுத்தும் வகையில் திடீரென உயர்ந்து, வெள்ளப் பெருக்கைப் பற்றிய பொதுவான நம்பிக்கையை அங்கே அடியோடு மாற்றி, மாபெரும் பேரழிவை உருவாக்கியது.

### உறைபனி உருகுதலும் புவிசார் அச்சுறுத்தல்களும்:

இமயமலைப் பிராந்தியத்தில் அமைந்திருக்கும் பனிப்பாறைகள் வரலாறு காணாத வேகத்தில் உருகி வருவது இப்பேரழிவுகளின் பின்னணியில் உள்ள பிரதான காரணியாகும். காலநிலை மாற்றத்தின் தீவிரப் போக்கால் இமயமலைப் பகுதியில் அமைந் திருக்கும் பனிப்பாறைகளும், பல நூற்றாண்டுகளாக உறைந்த நிலையிலேயே இருந்து வந்த நிரந்தர உறைமண்ணும் (Permafrost) மிக வேகமான முறையில் உருகி வருவதாகச் சர்வதேசக் காலநிலை விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாகவே தொடர்ந்து எச் சரித்து வருகின்றனர். 2011 முதல் 2020 வரையிலான தசாப்தத்தில், அதற்கு முந்தைய தசாப்தத்தைக் காட்டிலும் 65 சதவீதக் கூடுதல் வேகத்தில் பனி இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் காலநிலை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, நேபாள நாட்டின் பனிப்பாறைகள் மட்டும் கடந்த 30 ஆண்டுகளில் தங்களது ஒட்டுமொத்தப் பனி இருப்பில் மூன்றி லொரு பகுதியை இழந்துவிட்டதாகப் புள்ளிவிவ ரங்கள் எச்சரிக்கின்றன.

உலகளாவிய வெப்பநிலை உயர்வடையும் போது, மலைப் பிராந்திய உயர் மண்டலங்களிலுள்ள பனிப் பாறைகள் கரைந்து நெகிழ்வடைகின்றன. பனி உரு கும்போது, மலைச்சரிவுகளின் இயற்கை நிலைத் தன்மை கடுமையாகப் பாதிக்கப்படுகின்றது. 'நிரந்தர உறைமண்' (Permafrost) என அழைக்கப்படும், பல நூற்றாண்டுகளாக உறைந்து கட்டியாக இருந்த மண் தரையானது வளிமண்டல வெப்பத்தால் உருகு வதால் அதன் பிணைப்புத் தன்மை தளர்கின்றது. இதன் நேரடி விளைவாகவே, கட்டுக்கடங்காத பனிப் பாறைச் சரிவுகளும் அபாயகரமான நிலச்சரிவுகளும் தொடர்ச்சியாக உருவெடுக்கின்றன.

இமயமலையின் செங்குத்தான பல மலைச்சரி வுகளை அங்குள்ள உறைபனியே ஓர் இயற்கைச் சிமெந்தைப் போலப் பிணைத்து வைத்திருக்கின்றது என்றும், பூகோள வெப்பமயமாதலால் இவ்வுறைபனி உருகும்போது எதிர்காலத்தில் மேலும் பல பிரம் மாண்ட நிலச்சரிவுகள் ஏற்படும் அபாயம் உள்ளதா கவும் பனிப்பாறையியல் (Glaciology) நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

அதேவேளை, புவித்தட்டு நகர்வுகளின் (Tectonic movements) காரணமாக இமயமலைத் தொடர் புவியியல் ரீதியாகத் தொடர்ந்து உயர்ந்து வரு கின்றது. இதனால், பனிப்பாறைகளின் சரிவுக் கோணம் மேலும் செங்குத்தாக மாறுவது இயல்பா னதொரு புவியியல் நிகழ்வு எனச் சுட்டிக்காட்டும் பேராசிரியர்கள், காலநிலை மாற்றமானது இவ்வி யற்கைச் செயல்முறையை மேலும் துரிதப்படுத்தியுள்ள தாகத் தெரிவிக்கின்றனர். இத்தகைய ஆபத்தான புவியியல் அமைப்பும், மனித நடவடிக்கைகளால் உருவான காலநிலை மாற்றமும் ஒன்றிணையும் புள்ளியிலேயே, கணக்கிலடங்கா இத்தகைய கோரப் பேரழிவுகள் ஏற்படுவதாகவும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.




இமயமலையின் செங்குத்தான பல மலைச்சரிவுகளை அங்குள்ள உறைபனியே ஓர் இயற்கைச் சிமெந்தைப் போலப் பிணைத்து வைத்திருக்கின்றது என்றும், பூகோள வெப்பமயமாதலால் இவ்வுறைபனி உரு கும்போது எதிர்கா லத்தில் மேலும் பல பிரம்மாண்ட நிலச்ச ரிவுகள் ஏற்படும்




### மீட்புப் பணிகளும் சர்வதேச உதவிகளும்:

பேரழிவைத் தொடர்ந்து நேபாள இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் தன்னார்வலர்கள் ட்ரோன்கள், மோப்ப நாய்களின் உதவியுடன் கரடுமுரடான களச்சூழலில் தீவிர மீட்புப் பணிகளை முன்னெடுத்தனர். இப்பேரழிவிற்கு நடுவே, நீர்மின் திட்டச் சுரங்கப்பாதையொன்றில் சிக்கியிருந்த 350 தொழிலாளர்கள் பத்திரமாக மீட்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. எல்லைக்கு மறுபுறம் திபெத் பிராந்தியத்திலும் சீன மீட்புக் குழுக்கள் தீவிர மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டன.

இப்பேரழிவின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு ஐக்கிய நாடுகள் சபை (CERF), அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, தென்கொரியா மற்றும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவை கோடிக்கணக்கான நிதியுதவிகளை அறிவித்தன. பிராந்திய ரீதியில், இந்தியா அவசர நிவாரணப் பொருட்களை இராணுவ விமானங்கள் மூலம் அனுப்பிவைத்ததுடன், ஐரோப்பிய ஒன்றியம் செயற்கைக்கோள் அடிப்படையிலான நிலவரைபட (Satellite Mapping) தொழில் நுட்ப உதவிகளை வழங்கி ஆதரவளித்தது.


### இரண்டாம் கட்ட பேரழிவு அபாயமும் பிராந்திய அச்சுறுத்தலும்:

முதற்கட்டப் பேரழிவின் தாக்கம் இன்னும் குறையாத நிலையில், தற்போது புதியதொரு வெள்ளப்பெருக்கு ஏற்படும் அச்சுறுத்தல் உருவெடுத்துள்ளது. பனிப்பாறைச் சரிவினால் வெள்ளம் ஏற்பட்ட பகுதியில், பாறைகளும் இடிபாடுகளும் தேங்கித் தற்காலிகமாகப் புதிய ஏரியொன்று உருவாகியுள்ளது. இதில் சுமார் 2.5 மில்லியன் கன மீற்றர் நீர் ஆபத்தான முறையில் தேங்கியுள்ளது.

இந்தத் தற்காலிக ஏரி எந்நேரத்திலும் உடைந்து மீண்டும் ஒரு பிரம்மாண்ட வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தக்கூடும் என்பதால், நேபாள மற்றும் சீன அரசாங்கங்கள் கடுமையான எச்சரிக்கைகளை விடுத்துள்ளன. இப்பீதி இந்திய எல்லைப் பகுதிகளான பீகார், உத்தரப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களிலும் பரவியுள்ளது. இமயமலைப் பிராந்திய ஆறுகள் வழியாகவே இவ்வெள்ள நீர் இந்தியாவுக்குள் பாயக்கூடும் என்பதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்குள்ள ஆபத்தான பகுதிகளில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

இதனிடையே, சர்வதேச ஒருங்கிணைந்த மலை மேம்பாட்டு மையம் (ICIMOD) விடுத்துள்ள எச்சரிக்கையில், திரிசூலி ஆற்றின் சில குறுகிய பிராந்தியங்களில் இடிபாடுகளால் தற்காலிக இயற்கை அணைகள் உருவாகியுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளது. இத்தற்காலிக அடைப்புகள் உடையும் பட்சத்தில், இரண்டாம் கட்டப் பேரழிவு வெள்ளம் மீண்டும் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளதாகவும் அச்சர்வதேச அமைப்பு எச்சரித்துள்ளது.

இப்பேரழிவானது உலகம் முழுவதற்கும் பொதுவான ஒரு



> **இது ஏதோ தொலைதூர மலையுச்சியில் நிகழும் தனிப்பட்ட நிகழ்வல்ல; பூகோளச் சமநிலையை நாம் சீர்குலைத்ததன் நேரடி விளைவு. இன்று இமயத்தின் மௌனம் உடைந்து பாய்ந்த பெருவெள்ளம், நாளை யாருடைய வாசலைத் தட்டி அழிவை உருவாக்கப் போகின்றது?**

மாபெரும் அச்சுறுத்தலையே சுட்டிக்காட்டுகின்றது; அதுவே காலநிலை மாற்றம். இமயமலையின் பனிப்பாறைகள் அதி வேகமாக உருகுவது, ஆசியப் பிராந்தியத்தின் பிரதான நதிகளின் நீரோட்டத்தை நேரடியாகப் பாதிக்கும். கங்கை, பிரம்மபுத்திரா உள்ளிட்ட பெரும் ஆறுகள் இப்பனிப்பாறைக ளிலிருந்தே தமது நீர்மூலத்தைப் பெறுகின்றன. இவை தொடர்ச்சியாக உருகும்போது, ஆரம்பத்தில் பேரழிவு வெள் ளப்பெருக்கும், அதனைத் தொடர்ந்து கடுமையான வறட் சியும் ஏற்படும் அபாயம் உள்ளது. இத்தகைய சூழல் இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் உணவு மற்றும் குடிநீர் பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்தி, இறுதியில் சூழவுள்ள நாடுகளின் பொருளாதாரத்திலும் மறைமுகப் பாதிப்புகளை உருவாக்கும்.

மேலும், கடந்த 2021-ஆம் ஆண்டு இந்தியாவின் சாமோலி (Chamoli) பள்ளத்தாக்கில் இதேபோன்றதொரு பனிப் பாறைச் சரிவு ஏற்பட்டு, சுமார் 200 பேர் வரை உயிரிழந்திருந் தனர். அப்பேரிடரின்போது வெளியான ஆற்றலின் சக்தி, சுமார் 15 அணுகுண்டுகள் ஒரே நேரத்தில் வெடித்ததற்கு இணையானது என விஞ்ஞானிகள் கணக்கிட்டிருந்தனர். எனவே, இமயமலையில் நிகழும் பேரழிவுகள், உலகளாவிய காலநிலை நெருக்கடி தொடர்பான ஒரு கடுமையான எச்ச ரிக்கை மணியாகும்.

## எச்சரிக்கும் எதிர்காலமும் உலகளாவியப் பாடமும்:

இமயமலையில் பனிப்பாறைகள் தொடர்ச்சியாக உருகி வரும் வரை, இதுபோன்ற பேரழிவுகள் மீண்டும் நிகழும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். மாற்றங்கள் நிகழும் வேகம் மிக அதிகமாக இருப்பதுடன், அதன் கொடூரத் தாக்கங்கள் தற்போது தெளிவாக வெளிப்படத் தொடங்கியுள்ளதாகச் சர்வதேச ஒருங்கிணைந்த மலை மேம்பாட்டு மையத்தின் (ICIMOD) நிபுணர் முகமது ஃபரூக் அசாம் சுட்டிக்காட்டு கின்றார்.

கடந்த 2021-ஆம் ஆண்டில் ஏற்பட்ட சாமோலிப் பேரிடர் மற்றும் 2026-ஆம் ஆண்டின் நேபாள்-திபெத் பேரழிவு என்பன இனி வரவிருக்கும் தொடர் பேரிடர்களின் தொடக்கப் புள்ளிகளே ஆகும். பூகோள வெப்பமயமாதலின் தீவி ரத்தால் உலகெங்கிலும் உள்ள பனிப்பாறைப் பகுதிகளில் இதுபோன்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. சுவிட்சர் லாந்து, இத்தாலி, அமெரிக்கா உள்ளிட்ட உலகின் பல நாடு களிலும் பனிப்பாறைச் சரிவு நிகழ்வுகள் தொடர்ச்சியாகப் பதிவாகி வருகின்றன.

புவியின் வெப்பநிலை உயரும் போது பனிப்பாறைகள் சுருங்கி, பனி வேகமாக உருகுகின்றது எனப் பனிப்பாறை நிபுணர் டாக்டர் சைமன் குக் எச்சரிக்கின்றார். மேலும், மலைச்சரிவுகளைப் பிணைத்து நிலைப்படுத்தும் நிரந்தர உறைமண் (Permafrost) தனது வலிமையை இழந்து உருகி வருவதால், எதிர்காலத்தில் நிலச்சரிவுகள், பாறை வெள்ளப் பெருக்குகள் மற்றும் பனிப்பாறை ஏரிகள் உடைந்து ஏற்படும் திடீர் வெள்ளப்பெருக்குகள் (GLOF - Glacial Lake Outburst Floods) போன்றவை மேலும் அதிகரிக்கும் என்றும் அவர் வலியுறுத்துகின்றார்.

## உடையும் மௌனமும் ஒலிக்கும் எச்சரிக்கையும்:

இமயமலை நமக்கு உணர்த்தும் செய்தி மிகத் தெளிவானது; நமது நில அமைப்பு வேகமாக மாறி வருகின்றது. பனிக்கட் டிகள் உருகுகின்றன, மலைச்சரிவுகள் நிலைகுலைகின்றன, ஆறுகள் தங்களது வழக்கமான பாதையிலிருந்து திசைமாறிப் பாய்கின்றன. இப்புவியியல் மாற்றங்களின் வேகம் மனிதக் கட்டுப்பாடுகளைத் தாண்டி மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

இப்பேரழிவானது, காலநிலை மாற்றத்தின் கொடூர விளைவுகளை நாம் இனிமேலும் புறக்கணிக்க முடியாது என்பதை உலகிற்கு மீண்டுமொருமுறை அச்சுறுத்தலுடன் நினைவுபடுத்துகின்றது. இமயமலையின் பனிப்பாறைகள் உருகுவது அப்பிராந்தியத்தின் உள்ளூர் பிரச்சினை மட்டு மல்ல; அது இந்தியப் பெருங்கடல் வரை நீளும் ஒரு தொடர்ச் சங்கிலி வினையின் ஆபத்தான தொடக்கமாகும்.

இயற்கை நமக்கு அளப்பரிய கொடையாக அளித்த இப்பூமி, மனிதகுலத்தின் பேராசையினாலும் எல்லைமீறிய அலட்சி யத்தினாலும் எவ்வாறு ஒரு மாபெரும் பேராபத்தாக உருவெ டுத்து வருகின்றது என்பதையே இச்செய்தி நம் ஒவ்வொருவ ருக்கும் உரக்க உணர்த்துகின்றது. இமயமலையின் உச்சியில் உறைபனி உருகும் மெல்லிய ஓசையானது, இன்று ஒட்டுமொத்தப் பிராந்தியத்தையே உலுக்கும் பேரழிவின் கொடூர இரைச்சலாக எதிரொலிக்கின்றது!

இது ஏதோ தொலைதூர மலையுச்சியில் நிகழும் தனிப்பட்ட நிகழ்வல்ல; பூகோளச் சமநிலையை நாம் சீர்குலைத்ததன் நேரடி விளைவு. இன்று இமயத்தின் மௌனம் உடைந்து பாய்ந்த பெருவெள்ளம், நாளை யாருடைய வாசலைத் தட்டி அழிவை உருவாக்கப் போகின்றது? காலநிலை மாற்றத்தின் இப்பயங்கரமான எச்சரிக்கையை உணர்ந்து உலகம் உடன டியாகச் செயல்படத் தவறினால், மனிதகுலம் எதிர்கொள்ள விருக்கும் அடுத்தடுத்த பேரழிவுகள் இதைவிடப் பல மடங்கு கொடூரமானதாகவே இருக்கும்!



sathiyathevan.s@thaiveedu.com



# இலங்கை ஏன் தொடர்ந்து வெள்ளத்தில் மிதக்கிறது?

மீநிலங்கோ தெய்வேந்திரன்

tg.theeban@gmail.com

## தொடக்கக் குறிப்புகள்:

இலங்கை மீண்டும் கனமழை, வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளது. உயிரிழப்புகள், இடம் பெயர்வுகள், சேதமடைந்த வீடுகள், தடைப்பட்டுள்ள சாலைகள், மூடப்பட்டுள்ள பாடசாலைகள் எனப் பல் பரிமாண நெருக்கடியை இன்னொருமுறை இலங்கை எதிர்நோக்க நேர்ந்துள்ளது. இந்த நெருக்கடி ஏற்படுவது இது முதன்முறையன்று. இற்றைக்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் 2016-இல் இலங்கையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கும் நிலச்சரிவுகளும் காலநிலை மாற்றத்தின் தீவிரத்தை முன்னறிவித்தன. அக்கனமழை ஏற்படுத்திய சேதம் இலங்கையின் 22 மாவட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்தியது. அதைத் தொடர்ந்து ஆண்டுதோறும் இவ்வகையான கனமழையும் அதன் விளைவான வெள்ளப்பெருக்கும் மண்சரிவும் ஏற்படுகிறது. கடந்தாண்டு டிசம்பரில் 'டித்வா' புயல் நாட்டையே புரட்டிப்போட்டது. இப்போது இது மீண்டும் ஏற்படுவது ஒரு சங்கடமான கேள்வியை எழுப்புகிறது. இந்த அபாயங்கள் எதிர்பாராதவை அல்ல, ஏன் இலங்கை இதைக் கையாள்வதில் தொடர்ந்து தோல்வியடைகிறது?

2016-ஆம் ஆண்டின் பேரழிவுகரமான வெள்ளத்திற்கும் நிலச்சரிவுகளுக்குப் பிறகு, நாடு தொடர்ச்சியான எச்சரிக்கைகளைப் பெற்றுள்ளது. கடுமையான மழையும் அதன் பாதிப்புகளும் கவலையளிக்கும் வகையில் சீராக மக்களின் வாழ்வையும், வாழ்வாதாரங்களையும், உள்கட்டமைப்பையும் சீர்குலைத்துள்ளன. காலநிலை மாற்றம் மழைப்பொழிவு முறைகளை மாற்றி, தீவிர மழைப்பொழிவின் நிகழ்தகவை அதிகரிக்கிறது. இருப்பினும், மழைப்பொழிவு மட்டுமே ஒரு பேரிடரை உருவாக்குவதில்லை. பேரிடர்-அபாய ஆய்வுகளில், அபாயம் என்பது பொதுவாக ஆபத்து, வெளிப்பாடு, பாதிப்புக்குள்ளாகும் தன்மை ஆகியவற்றுக்கு இடையேயான ஓர் இடைவினையாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. வானிலை ஆபத்தை உருவாக்குகிறது. யார், எவ்வாறு, எங்கே பாதிக்கப்படுவார்கள், எவ்வளவு பாதிப்புக்குள்ளாகுவார்கள், எவ்வளவு விரைவாக மீண்டு வர முடியும் என்பதை பொதுக் கொள்கையே தீர்மானிக்கிறது. எனவே, இலங்கையின் தொடர்ச்சியான இழப்புகள் திட்டமிடல், செயலாக்கம், அரசியல் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் உள்ள தோல்விகளை வெளிப்படுத்துகின்றன. அதீத மழைப்பொழிவு இயற்கையானதாக இருக்கலாம். ஆனால் தொடர்ச்சியான பேரழிவு சமூக ரீதியாகவும் நிறுவன ரீதியாகவும் உருவாக்கப்படுகிறது. இந்தப் பின்புலத்தில் ஏழு

முக்கிய விடயங்களை இக்கட்டுரை கவனம் செலுத்த விரும் புகிறது.

- **நாம் அவசரகாலப் பதிலளிப்பை மீள்திறனுடன் குழப்பிக் கொள்கிறோம்:**

வெள்ள நீர் வீடுகளுக்குள் நுழைந்த பின்னரே அரசின் செயற்பாடு மிகவும் வெளிப்படையாகத் தெரிகிறது. நிவாரண மையங்கள் திறக்கப்படுகின்றன, பாதுகாப்புப் படைகள் கள மிறக்கப்படுகின்றன, உணவுப் பொதிகள் விநியோகிக்கப் படுகின்றன, இழப்பீடு வழங்கப்படும் என உறுதியளிக்கப்படு கிறது. இந்தத் தலையீடுகள் அவசியமானவை, ஆனால் அவை பதிலளிப்பையே உருவாக்குகின்றன, மீள்திறனை அல்ல என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

காலநிலை மீள்திறன் (climate Resilience) என்பது, நிறு வனங்கள், உள்கட்டமைப்பு, சூழல் அமைப்புகள், சமூகங்கள், ஏற்கனவே உள்ள பாதிப்புகளை மீண்டும் உருவாக்காமல், அபாயங்களை முன்கூட்டியே கணித்து, தங்களைத் தகவ மைத்துக் கொண்டு, மீண்டு வருவதற்கான திறனாகும். இது, பேரழிவுகளுக்குப் பின்னரே செயற்படும் முகாமைத்துவத்தி லிருந்து, முன்கூட்டியே கணிக்கும் ஆளுகைக்கு மாறுவதை அவசியமாக்குகிறது. தயார்நிலை என்பது அரசாங்கத்தின் ஒரு நிரந்தரச் செயற்பாடாக மாற வேண்டும். இது ஆண்டு தோறும் வரவு செலவுத் திட்டங்கள், அளவிடக்கூடிய இலக் குகள் மற்றும் பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்பு களால் ஆதரிக்கப்பட வேண்டும்.

- **நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்படுகிறது:**

வெள்ளத்தைத் தக்கவைக்கும் சமவெளிகள், சதுப்பு நிலங் கள், நிலையற்ற சரிவுகள், இயற்கையான வடிகால் பாதை கள் ஆகியவற்றில் கட்டுமானப் பணிகள் தொடர்கின்றன. ஒருபுறம், ஏழைக் குடும்பங்களுக்கு மலிவான மற்றும் பாது காப்பான நிலம் கிடைக்காததால் இப்பகுதிகளில் குடியிருப் புகள் உருவாகின்றன. மறுபுறம் அபிவிருத்தியின் பெயரால் ஒழுங்குமுறைப் பலவீனம், அரசியல் செல்வாக்கு, ஊகக் கட்டு மானம், பிளவுபட்ட திட்டமிடல் அதிகாரம் ஆகியன இவ் வகையான முறையற்ற கட்டுமானங்களுக்கு அனுமதிக் கின்றன.

அரச நிறுவனங்களால் தயாரிக்கப்படும் அபாய வரைபடங் கள், சட்டபூர்வமாக முக்கியத்துவம் வாய்ந்த திட்டமிடல் கரு விகளாக மாற வேண்டும். அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஒப்புதல்கள், ஒரு திட்டத்துடன் இணைக்கப்பட்ட அபா யத்தை மட்டும் கருத்தில் கொள்ளாமல், ஒட்டுமொத்த வெள்ளம் மற்றும் நிலச்சரிவு அபாயத்தையும் உள்ளடக்க வேண்டும். பாதுகாப்பில்லாத இடங்களில் உள்ள குடியிருப் புகள் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்படுவதற்குப் போது மான நிதி ஒதுக்கப்பட வேண்டும், மேலும் இச்செயன் முறையில் வேலைவாய்ப்பு, கல்வி, சமூக வலைப்பின்னல்க ளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். மக்களின் வாழ் வாதாரங்களை அழித்துக்கொண்டே அவர்களை அபாயங்க ளிலிருந்து அப்புறப்படுத்துவது தழுவல் (adoptation) அல்ல.

- **நாம் சாதாரண உள்கட்டமைப்புப் பராமரிப்பைப் புறக்கணிக்கிறோம்:**

அடைக்கப்பட்ட கால்வாய்கள், சிறிய அளவிலான சிறுபா லங்கள், மோசமாகப் பராமரிக்கப்படும் வடிகால்கள், திடக் கழிவுகள் குவிதல், ஆக்கிரமிக்கப்பட்ட நீர்வழிகள் ஆகி யவை கனமழையை நீண்டகால நகர்ப்புற வெள்ளப்பெருக் காக மாற்றுகின்றன. அரசாங்கங்கள் பெரும்பாலும் வெளிப் படையாகத் தெரியும் பொறியியல் திட்டங்களை அறிவிக்கவே விரும்புகின்றன. இருப்பினும், வடிகால் அமைப்புகளைச் சுத் தம் செய்தல், நீர்த்தேக்கப் பகுதிகளைப் பராமரித்தல், சிறு பாலங்களைப் பழுதுபார்த்தல், கட்டட விதிமுறைகளை அமல்படுத்துதல் போன்ற கவர்ச்சிகரமானதாகத் தோன்றாத செயற்பாடுகளையே மீள்திறன் பெரும்பாலும் சார்ந்துள்ளது.

ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும், பருவமழைக்கு முந்தைய வடிகால் தணிக்கை அறிக்கையை வெளியிட வேண்டும். அதில், தடைகள், பொறுப்புகள், பராமரிப்பு அட்டவணை கள், முடிக்கப்பட்ட பணிகள் ஆகியவற்றை அங்கீகரிக்க வேண்டும். சாலைகள், பாலங்கள், பாடசாலைகள், மருத்துவ மனைகள், நீர் அமைப்புகள் ஆகியன காலநிலை அபாய மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டும். கணிக்கக்கூடிய காலநிலை அழுத்தத்தின் கீழ் மீண்டும் மீண்டும் தோல்வி யுற்றால், மலிவான உள்கட்டமைப்பு என்பது செலவு குறைந் ததாக இருக்காது.



- **தகவல்கள் சீரான உள்ளூர் நடவடிக்கைகளாக மாறுவதில்லை:**

இலங்கையிடம் வானிலை முன்னறிவிப்புகள், நதி அளவீடுகள், நிலச்சரிவு அபாய மதிப்பீடுகள், வெளியேற்றும் கட்டமைப்புகள், பேரிடர் மேலாண்மை நிறுவனங்கள் ஆகியன உள்ளன. பிரதான பிரச்சினை என்பது வெறுமனே தகவல் இல்லாமை அல்ல. போதுமான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உட்கட்டமைப்பு இருக்கிறது. ஆனால், நிறுவனங்கள் தமக்கிடையே தகவல்களை ஒருங்கிணைத்து, அவற்றை உரிய நேரத்தில் நடவடிக்கைகளாக மாற்றுவதில் தொடர்ச்சியாகத் தோல்வியடைந்து வந்துள்ளன.

மக்களுக்கு விடப்படும் எச்சரிக்கையானது போதுமானதல்ல. பாதிப்பு அடிப்படையிலான ஓர் எச்சரிக்கையானது, எதிர் பார்க்கப்படும் மழைப்பொழிவை மட்டும் விளக்காமல், எந்தெந்த குடியிருப்புகள், சாலைகள் மற்றும் வாழ்வாதாரங்கள் ஆபத்தை எதிர்கொள்கின்றன என்பதையும் விளக்க வேண்டும். குடியிருப்பாளர்களும் அதிகாரிகளும் என்ன செய்ய வேண்டும், எப்போது செய்ய வேண்டும் என்பதையும் அது குறிப்பிட வேண்டும். ஸ்மார்ட்போன்கள் இல்லாதவர்கள், மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைவரையும் அணுகுவதற்கான வழிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இத்தகவல்கள் சிங்கள மொழியில் மட்டுமன்றித் தமிழிலும் எப்போதும் வழங்கப்படுவது உறுதிசெய்யப்பட வேண்டும். மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களைச் சென்றடையாத ஓர் எச்சரிக்கையானது, நிர்வாக ரீதியாக வெளியிடப்பட்டாலும், சமூக ரீதியாகப் பயனற்றதாகும்.

- **சூழல் அமைப்புகள் வெறுமையான வீணடிக்கக் கூடிய நிலமாகக் கருதப்படுகின்றன:**

ஈரநிலங்கள் அதிகபடியான நீரைத் தேக்கி வைக்கின்றன. காடுகள் சரிவுகளை நிலைப்படுத்துகின்றன. சதுப்புநிலக் காடுகள் கடலோரப் பாதிப்பைக் குறைக்கின்றன. செயல்படும் நதி அமைப்புகள் பருவகால நீரோட்டங்களுக்கு இடமளிக்கின்றன. இவை அலங்கார சுற்றுச்சூழல் சொத்துக்கள் அல்ல. அவை பாதுகாப்பு உட்கட்டமைப்புகள். குறுகிய கால அபிவிருத்தித் திட்டத்திற்காக அவற்றை அழிப்பதும், பின்னர் கான்கிரீட் வெள்ளத் தடுப்புகளுக்கு நிதியளிப்பதும் பொருளாதார ரீதியாகப் பகுத்தறிவற்ற செயலாகும்.

இலங்கை தனது உட்கட்டமைப்பு உத்தியின் ஒரு பகுதியாக ஈரநிலங்கள், மேல் நீர்ப்பிடிப்புப் பகுதிகள், நதிப் பாதுகாப்புப் பகுதிகள் மற்றும் மலைப்பகுதித் தாவரங்களைப் பாதுகாத்து மீட்டெடுக்க வேண்டும். இயற்கை சார்ந்த தீர்வுகள் எல்லா இடங்களிலும் பொறியியல் பாதுகாப்பிற்கு மாற்றாக அமைய முடியாது. மீள்திறனுக்கு, சூழலியல் மீட்டெடுப்பை கவனமாக வடிவமைக்கப்பட்ட பௌதீக உட்கட்டமைப்புடன் இணைப்பது அவசியமாகும்.

- **பாதிப்புக்குள்ளாகும் தன்மை சமமற்றது என்பதைக் கொள்கைவகுப்பு புறக்கணிக்கிறது:**

வெள்ளநீர் சமூக எல்லைகளைக் கடக்கக்கூடும், ஆனால் அதன் விளைவுகள் மிகவும் சமமற்றவை. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், பெருந்தோட்டச் சமூகங்கள், முறைசாரா தொழிலாளர்கள், பெண்கள் தலைமையிலான குடும்பங்கள், குழந்தைகள், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் வெளியேறுவதற்கும், உடைமைகளை மாற்றுவதற்கும், வருமான இழப்பைத் தாங்குவதற்கும் அல்லது தங்கள் வீடுகளை மீண்டும் கட்டுவதற்கும் பெரும்பாலும் குறைவான வளங்களையே கொண்டுள்ளனர். கால நிலை மாற்றத்திற்கு மிகக் குறைவாகப் பங்களிப்பவர்களே பெரும்பாலும் அதன் அதிகபட்ச செலவுகளைச் சுமக்கிறார்கள்.

காலநிலை மீள்திறன் என்பது நீதி குறித்த ஒரு கேள்வியாகும். இறப்புகள், சேதமடைந்த கட்டடங்களை மட்டும் கணக்கிடும் மதிப்பீடுகள், தடைப்பட்ட கல்வி, கடன் சுமை, ஊதியம் பெறாத பராமரிப்புப் பணி, வாழ்வாதாரப் பாதுகாப்பின்மை ஆகியவற்றைக் கவனிக்கத் தவறுகின்றன. இலங்கைக்கு அதிர்ச்சிக்கு ஏற்ப பதிலளிக்கும் சமூகப் பாதுகாப்பு தேவை. இந்த அமைப்புகள் பேரிடர்களின் போது தற்காலிகமாக உருவாக்கப்படுவதை விட, அவை ஏற்படுவதற்கு முன்பே அதற்கான ஏற்பாடுகள் இருக்க வேண்டும். சமூகநல அரசாக இலங்கையை வளர்த்தெடுப்பது இதனாலேயே முக்கியமாகிறது.

காலநிலை மீள்திறன் என்பது நீதி மற்றும் சமத்துவம் பற்றியது. காலநிலை தொடர்பான பேரழிவுகள் அனைவரையும் சமமாகப் பாதிப்பதில்லை. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், முறைசாராத் தொழிலாளர்கள், விளிம்பு நிலைச் சமூகங்கள், மீள்வதற்கான குறைந்த வளங்களைக் கொண்டிருக்கும் அதே வேளையில், பெரும்பாலும் அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றனர். பேரழிவுகளின் தாக்கங்கள் இறப்புகள், காயங்கள் மற்றும் கட்டடங்கள், உட்கட்டமைப்புகளுக்கு ஏற்படும் சேதங்கள் ஆகியவற்றின் மூலம் மட்டுமே அளவிடப்பட்டால், உண்மையான சமூக, பொருளாதாரச் சுமையின் பெரும்பகுதி கண்ணுக்குத் தெரியாமல் போய்விடுகிறது. பேரழிவுகள் குழந்தைகளின் கல்வியைத் தடைசெய்யலாம், குடும்பங்களைக் கடனில் தள்ளலாம், முறைசாரா வாழ்வாதாரங்களை அழிக்கலாம், வேலைப் பாதுகாப்பின்மையை அதிகரிக்கலாம், ஊதியம் பெறாத பராமரிப்புப் பணிகளின் சமமற்ற சுமையைப் பெண்கள் மீது சுமத்தலாம். வெள்ள நீர் வடிந்த பின்னரும், அவை உணவுப் பாதுகாப்பின்மை, மன உளைச்சல் என்பவற்றையும் ஏற்கனவே உள்ள சமூக ஏற்றத்தாழ்வுகளையும் மேலும் மோசமாக்கக்கூடும். எனவே, காலநிலை மீள்திறனுக்கான ஒரு நியாயமான அணுகுமுறை, எவ்வளவு இழப்பு ஏற்பட்டது என்பதை மட்டுமல்லாமல், யார் பாதிக்கப்பட்டார்கள், அந்த இழப்புகள் என்ன வடிவங்களில் இருந்தன, மேலும் மீள்வதற்கு யாரிடம் வளங்களும் நிறுவன ஆதரவும் உள்ளன என்பதையும் கேட்க வேண்டும். மீள்திறன் கொள்கையானது, அனைவரையும் உள்ளடக்கிய சமூகப் பாதுகாப்பு, வாழ்வாதாரப் பாதுகாப்பு, எளிதில் அணுகக்கூடிய பொதுச் சேவைகள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்கள் தங்கள் எதிர்காலத்தை வடிவமைக்கும் முடிவுகளில் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்பதன் மூலம், இந்த சமமற்ற, குறைவாகக் கண்ணுக்குத் தெரியும் தாக்கங்களைக் கையாள வேண்டும்.

- **காலநிலை மீள்திறன் பொருளாதாரக் கொள்கைக்குப் புறம்பானதாகவே உள்ளது:**

பொருளாதாரம் மேம்படும் வரை காலநிலைத் தழுவலை ஒத்திப்போட இலங்கையால் இயலாது. பேரழிவுகள் ஏற்கனவே பொதுச் சொத்துகளைச் சேதப்படுத்துவதன் மூலமும், விவசாய உற்பத்தியைக் குறைப்பதன் மூலமும், கல்வி மற்றும் வேலைவாய்ப்பைத் தடை செய்வதன் மூலமும், உற்பத்தித் திறனைக் குறைப்பதன் மூலமும், அரசாங்க நிதிகளின் மீது கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத் துவதன் மூலமும் பொருளாதாரத்தைப் பலவீனப்படுத்தி வருகின்றன. எனவே, காலநிலை இடர் என்பது ஒரு தனிப் பட்ட சுற்றுச்சூழல் அக்கறை அல்ல. அது ஒரு மையப் பொருளாதார, அபிவிருத்திச் சவாலாகும்.

இலங்கையின் நிதிக் கட்டுப்பாடுகள் கவனமான முன்னுரி மைப்படுத்தலை அவசியமாக்குகின்றன. ஆயினும், வரை யறுக்கப்பட்ட பொது நிதி, தடுப்பு நடவடிக்கைகளுக்கான தேவையைப் பலவீனப்படுத்துவதற்குப் பதிலாக அதை வலுப்படுத்துகிறது. மீள்திறன் முதலீட்டை ஒத்திவைப்பது இன்று செலவினங்களைக் குறைக்கலாம், ஆனால் அது அடுத்த பேரிடருக்குப் பிறகு, நாட்டை மிகப் பெரியதும், பெரும்பாலும் மீள முடியாததுமான பொருளாதார, சமூகச் செலவுகளை எதிர்கொள்ளச் செய்துவிடும்.

## நிறைவுக் குறிப்புகள்:

இலங்கையின் பிரதான பிரச்சினை என்பது கொள்கை கள், சட்டங்கள் அல்லது நிறுவனக் கட்டமைப்புகளின் இல்லாமை அல்ல. மாறாக, இத்திட்டங்கள் கொள்கை முடிவுகளுக்கும் நடைமுறையில் எடுக்கப்படும் முடிவுக ளுக்கும் இடையே நிலவும் தொடர்ச்சியான இடைவெளியே ஆகும். காலநிலைத் தழுவல், பேரிடர் அபாயக் குறைப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவை தேசிய உத்திகளில் முக்கியமாக இடம்பெற்றாலும், நிலப் பயன்பாடு, உட்கட் டமைப்பு மேம்பாடு, பொது முதலீடு மற்றும் நிதி ஒதுக்கீடு தொடர்பான தேர்வுகளில் இந்த முன்னுரிமைகள் சீராகப் பிரதிபலிக்கப்படுவதில்லை. சுற்றுச்சூழல் உணர்திறன் மிக்க அல்லது அபாயம் நிறைந்த பகுதிகளில் அபிவி ருத்தித் திட்டங்கள் இன்னும் அங்கீகரிக்கப்படுகின்றன. அத்தியாவசிய வடிகால் அமைப்புகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் சரிவுப் பாதுகாப்பு நடவடிக்கைகள் போதுமான அளவு பராமரிக்கப்படாமல் இருக்கின்றன.

உடனடியான, அரசியல் ரீதியாகப் புலப்படும் பலன் களைத் தரும் திட்டங்களுக்கு ஆதரவாக, மீள்திறன் முத லீடுகள் பெரும்பாலும் ஒத்திவைக்கப்படுகின்றன. அதே நேரத்தில், உள்ளூராட்சி அமைப்புகள் - பாதிக்கப்படக் கூடிய சமூகங்களுக்கு மிக அருகில் இருந்தாலும் - தேசியக் கொள்கையை உள்ளூர் நடவடிக்கையாக மாற்று வதற்குத் தேவையான நிதி ஆதாரங்கள், தொழினுட்ப நிபு ணத்துவம், நம்பகமான தரவுகள், முடிவெடுக்கும் அதி காரம் ஆகியவற்றைக் கொண்டிருப்பதில்லை. இதன் விளைவாக, இலட்சியம்மிக்க கொள்கைகளும் திட்டங் களும் சிதறடிக்கப்பட்ட நிறுவனங்கள், பலவீனமான அமு லாக்கம், குறுகிய காலத் திட்டமிடல் ஆகியவற்றுடன் இணைந்து ஒரு செயலாக்கப் பற்றாக்குறையை ஏற்படுத் துகின்றன.

ஒவ்வொரு வெள்ளத்திற்குப் பிறகும் அரசாங்கம் எவ் வளவு வெளிப்படையாகப் பதிலளிக்கிறது என்பதல்ல அதன் சரி யான அளவுகோல்; ஒரு வெள்ளப்பெருக்கு ஏற் படுவதற்கு முன்பாக அது எவ்வளவு பாதிப்புகளை நீக்கு கிறது என்பதே அளவுகோல். அதீத மழைப்பொழிவு தவிர்க்க முடியாததாக இருக்கலாம். ஆனால், மீண்டும் மீண்டும் ஏற்படும் நிறுவன ரீதியான அதிர்ச்சிகள் தவிர்க்க முடியாதவை அல்ல. ஒவ் வொரு பேரழிவும் அனுதாபம், நிவாரணம், வாக்குறுதி ஆகியவற்றை அளித்தது. ஆனால் கட்டமைப்பு சீர்திருத்தங்களைச் சிறிதளவே அளித்தால், அடுத்த பேரழிவுக்கு நாடு ஏற்கனவே தயாராகிக்கொண்டி ருக்கிறது என்று பொருள். கடுமையான மழைப்பொழிவு மீண்டும் வருமா என்று கேட்பதை இலங்கை நிறுத்தி விட்டு, அது நிச்சயம் வரும் என்ற உறுதியின் அடிப் படையில் ஆட்சி செய்யத் தொடங்கும்போதே காலநிலை மீள்திறன் தொடங்குகிறது.



meenilankco@thaiveedu.com





சிவ முருகுப்பிள்ளை

# உணர்வில் தமிழைச் சுமக்கும் நியூனியன் நாட்டுத் தமிழர்கள்

உலகின் மிகத் தொன்மையான மொழிகளுள் எமது தாய் மொழியான தமிழ் மொழிக்கு என்றென்றும் தலைசிறந்த இடமுண்டு. தொன்மை, இலக்கிய வளம், இலக்கணச் செறிவு ஆகியவற்றைக் கொண்டு உலக மக்களால் போற்றப்படும் தமிழ் மொழி, முறைப்படியான செம்மொழித் தகுதியையும் பெற்றுத் திகழ்கின்றது. இம்மொழியைத் தாய்மொழியாகப் பேசுபவர்களே 'தமிழர்கள்' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அடையாளத்தைப் பெறுகின்றனர். உலகச் செம்மொழிகளின் மொத்த எண்ணிக்கை குறித்துப் பொதுவான வரையறைகள் ஏதுமில்லாதபோதிலும், இந்திய அரசினால் இதுவரை 11 மொழிகள் செம்மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள், முதன்முதலாகச் செம்மொழி அந்தஸ்தைப் பெற்ற மொழியாகத் தமிழ் திகழ்வது உலகவாழ் தமிழர்கள் அனைவரும் பெருமிதம் கொள்ளத்தக்க சிறப்பம்சமாகும்.

தெற்காசியப் பிராந்தியத்திற்கு அப்பால் தமிழ் மொழியின் இருப்பியல் குறித்த உரையாடல்களும் வினாக்களும் தீவிரமடைந்துள்ள இச்சூழலில், புலம்பெயர் தளத்தில் மொழியின் நிலவுகை பற்றியும், அதனைத் தன் தேசிய அடையாளத்தின் அங்கமாக ஏற்றுக்கொண்ட ஒரு தேசம் பற்றியும் நோக்குவதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

இந்தியாவின் தென்மாநிலமான தமிழ்நாட்டில் சுமார் 7.2 கோடிக்கும் அதிகமான தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு வாழும் மக்கள் மிக அதிகளவில் வாழும் நிலப்பரப்பு இதுவே என்பதால், உலகத் தமிழர்களின் குறியீட்டுத் தாயகமாகத் தமிழ்நாடு திகழ்கின்றது.

இரண்டாம் உலகப் போருக்கு முந்திய காலத்தில், மேற்குல நாடுகள் தமது காலனி ஆதிக்கத்தை உலகெங்கும் நிலை நாட்டியிருந்தன. அவற்றுள் பிரித்தானியர் உலகின் பல பகுதிகளையும் தமது ஆட்சிக் கீழ் கொண்டுவந்து, மிகப் பெரிய ஆதிக்க சக்தியாக விளங்கினர். அக்காலத்தில், பிரித்தானியரின் ஆளுகைக்கு உட்பட்ட பல்வேறு நாடுகளிலிருந்த தோட்டங்களில் பணியாற்ற, உள்ளூர் மக்களை ஏமாற்றும் விதமாக இன்மொழிகளால் ஈர்த்து அடிமைகளைப் போன்று அழைத்துச் சென்றனர். பின்னர் இம்முறை ஒப்பந்தத்

prasadbatti@gmail.com

தொழிலாளர் அமைப்பாக மாற்றம் பெற்றது. 1834-ஆம் ஆண்டிற்குப் பின்னர், பிரித்தானியர் தமது காலனித்துவ நாடுகளில் அடிமை முறையை ஒழித்ததை அடுத்து, கடுமையான உழைப்பாளர் பற்றாக்குறை ஏற்பட்டது. அதனை நிவர்த்தி செய்வதற்காக, ஒப்பந்தத் தொழிலாளர் (Indentured Labourers) மற்றும் கங்காணி முறைகளின் (Kangani System) கீழ் இந்தியத் தமிழர்களைப் பெருமளவில் பல்வேறு நாடுகளுக்குக் கொண்டு சென்றனர்.

அவ்வாறு தமிழர்கள் வேலைக்காக அழைத்துச் செல்லப்பட்ட ஆசிய நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அங்கு காபி, தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்களில் பணியாற்றுவதற்காக, தமிழ்நாட்டின் திருச்சி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி போன்ற பகுதிகளிலிருந்து இலட்சக்கணக்கான தமிழர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களே இன்று 'மலையகத் தமிழர்கள்' என அழைக்கப்படுகின்றனர்.

மலேசியாவிற்கு, ரப்பர் தோட்டங்கள் மற்றும் இரயில்பாதை அமைக்கும் பணிகளுக்காகக் கங்காணி முறையின் கீழ் பெருமளவிலான தமிழர்கள் கொண்டு செல்லப்பட்டனர். சிங்கப்பூருக்குத் துறைமுகப் பணிகள், கட்டுமான வேலைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்திற்காகத் தமிழர்கள் அழைத்து வரப்பட்டனர். மியான்மரில் நெல் விவசாயம், ஆலைகள் மற்றும் வர்த்தகப் பணிகளுக்காகப் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் தமிழர்கள் குடியேற்றப்பட்டனர்.

இதேபோல் ஆபிரிக்கக் கண்டத்திற்கும் அதனைச் சார்ந்த தீவு நாடுகளுக்கும் தமிழர்கள் பல்வேறு காலகட்டங்களில் ஒப்பந்தத் தொழிலாளர்களாகக் கொண்டுசெல்லப்பட்டனர். இவ்வரலாற்றுப் புலப்பெயர்வில், மொரிசியஸ் தீவின் கரும்புத் தோட்ட வேலைகளுக்காக முதன்முதலில் கொண்டுசெல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியத் தமிழர்களாவர். அதனைத் தொடர்ந்து கரீபியன் தீவுகள் மற்றும் தென் அமெரிக்காவில் அமைந்திருந்த பிரித்தானியக் காலனிகளான கயானா, டிரினிடாட் போன்ற இடங்களின் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்காகத் தமிழர்கள் ஒப்பந்த அடிப்படையில் அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர், தென்னாபிரிக்காவின் 'நடால்' (Natal) மாகாணத்தில் உள்ள கரும்புத் தோட்டங்கள் மற்றும் நிலக்கரிச் சுரங்கங்களில் கடின உழைப்பை வழங்குவதற்காகத் தமிழர்கள் பெருமளவில் குடியமர்த்தப்பட்டனர். 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சீஷெல்ஸ் தீவுகளின் தென்னந்தோட்டங்கள் மற்றும் விவசாயப் பணிகளுக்காகத் தமிழர்கள் கொண்டுசெல்லப்பட்டதுடன், கென்யா மற்றும் உகாண்டா ஆகிய கிழக்கு ஆபிரிக்க நாடுகளை இணைக்கும் 'உகாண்டா இரயில்பாதை' அமைக்கும் மிகக் கடினமான கட்டுமானப் பணிகளுக்காகப் பல்லாயிரக்கணக்கான இந்தியத் தொழிலாளர்களுடன் தமிழர்களும் அழைத்துச் செல்லப்பட்டனர். இவை தவிர, ஜமைக்கா, கரீபியன் பிராந்தியத்தின் பிற பகுதிகள், ஓசியானியா அமைவிடங்களான பிஜித் தீவுகள் போன்ற தூரத்து நாடுகளுக்கும் ஒப்பந்த அடிப்படையில் இந்தியாவில் இருந்து தமிழர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

டச்சுக்காரர்களின் காலனித்துவ ஆட்சிக் காலத்தில், தமிழர்கள் பிரதானமாக இந்தோனேசியா (முக்கியமாகச் சுமாத்ரா மற்றும் பாட்டோவியா பகுதிகள்), இலங்கை மற்றும் தென்னாபிரிக்கா போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்தப் பிரித்தானிய மற்றும் டச்சுக் காலனிகளைத் தவிர்த்து, பிரெஞ்சுக் காலனிகளான றீயூனியன் தீவு (Réunion), மார்ட்டினீக் (Martinique), குவாடலூப் (Guadeloupe) போன்ற பிராந்தியங்களுக்கு, அன்றைய பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்த புதுச்சேரி மற்றும் காரைக்கால் துறைமுகங்கள் வழியாகத் தமிழர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களாகக் கொண்டுசெல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பிரெஞ்சுக் காலனி நாடு ஒன்றில் குடியேற்றப்பட்ட தமிழர்கள் பற்றியே அதிகம் கவனத்தில் எடுத்து கட்டுரை பதிவு செய்கிறது. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் குடியேற்றப்பட்ட தொழிலாளர்கள் பலரும் ஆரம்பக் கட்டத்தில் தாம் வாழ்ந்த நாடுகளில் 'இந்திய வம்சாவளித் தமிழர்கள்' என்றே தம்மை அடையாளப்படுத்திக் கொண்டனர். தமிழர்களுக்கு அப்பால், இந்தியாவின் வேறு மொழி பேசும் பிற சமூகத்தினரும் இவ்வாறான ஒப்பந்த உழைப்பு முறைகளின் கீழ் ஏனைய நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். இரண்டாம் உலகப்போர் முடிவடைந்து காலனித்துவ ஆட்சி முடிவுக்கு வந்த அரசியல் சூழலில், 'சுதந்திரம்' மலர்ந்த போதிலும் இத்தொழிலாளர்களுள் மிகச் சிலரே தமது தாயகமான இந்தியாவிற்குத் திரும்பினர். எனினும், பெரும்பாலான தொழிலாளர்கள் தாம் குடியேற்றப்பட்ட நாடுகளிலேயே நிரந்தரமாகத் தங்கி, அம்மாநிலங்களின் குடிமக்களாக வாழ்வை அமைத்துக் கொண்டனர்.

இதன் தொடர்ச்சியாக, இலங்கை போன்ற தமிழ் பேசும் நாடுகளில் வாழ்ந்த இந்திய வம்சாவளியினர் தொடர்ந்தும் தமிழ் மொழியையே தமது பிரதான மொழியாகக் கொண்டு, தாய்மொழியாகத் தமிழைத் தமக்குள் உள்வாங்கிக் கொண்டனர். ஆனால், தமிழ் மொழிப் புழக்கம் இல்லாத நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள், அந்தந்த நாடுகளில் புழக்கத்தில் உள்ள மொழிகளின் ஆதிக்கத்திற்குள் வீழ்த்தப்பட்டுத் தமிழை மறந்தவர்களாகவும், மறுக்கப்பட்டவர்களாகவும் வாழ நிர்பந்திக்கப்பட்ட வாழ்க்கை முறைக்குள் இணைக்கப்பட்டனர். இதனால் இவர்கள் கால ஓட்டத்தில் தமிழை மறந்தவர்களாக ஆயினும், தமிழர்களாக இன்னமும் வாழத் துடிக்கும் உணர்வுடன் வாழும் நிலைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளார்கள்.

மொழியை மறந்தபோதிலும், அவர்கள் தமிழர்களின் தெய்வ வழிபாடு, கலை மற்றும் பண்பாட்டு வடிவங்களை இன்றளவும் பேணிப் பாதுகாத்து, தம்மைத் தமிழர்களாக அடையாளப்படுத்துவதிலேயே பெருமிதமடைகின்றனர். அன்றாடப் புழக்கத்தில் தமிழ் மொழியைப் பயன்படுத்தும் வாய்ப்பற்றுப்போன போதிலும், உணர்வுப் பிணைப்பால் அவர்கள் தமிழர்களாகவே வாழ்கின்றனர். ஒரு தேசிய இனத்தின் அடையாளத்தைச் சிதைக்க வேண்டுமாயின், அதன் மொழியியலை முதலில் முடக்கினால் ஏனைய பண்



பாட்டுக் கூறுகள் மெல்ல மெல்ல உதிர்ந்துபோகும் என்பதற்கு இவர் களின் வரலாறு ஒரு சோகமான சான்றாகும். அண்மையில் ஒளிப ரப்பான பிரபல இந்தியத் தொலைக் காட்சி நிகழ்ச்சியொன்றில் பங்குபற்றிய உலகளாவிய இந்திய வம்சாவளியி னரின் வாழ்வியல் பகிர்வுகள், இத்தகைய வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட பிரெஞ்சுத் தீவான 'றீயூ னியன்' பற்றிய பதிவொன்றை முன் வைப்பதற்கான தூண்டுகோலாக அமைந்தன.

இது போன்ற ஒரு உணர்வு இன்னும் பல பத்து ஆண்டுகளுக்குப் பின்னர், பல்வேறு மேற்குல நாடுகளில் வாழும் எமது அடுத்த சந்ததியினரிடம் நிச்சயம் ஏற்படப் போகின்றது என்பதும் இப்பதிவை எழுதுவதற்கு இன்னொரு காரணமாகி, என்னை இப்பதிவை எழுதத் தூண்டியது.

அந்த வகையில், எதிர்காலத்தில் இன்றும் 50 வரையிலான மேற்குல நாடுகளில் வாழும் எமது அடுத்த சந்ததித் தமிழர்கள், தமது மூதாதையர் பற்றியும் தமது மூலவேர் பற்றியும் பேசப் போகின்றார்கள். அப்போது, அவர்களால் தமது சொந்த நாடுகளுக்குப் பெரும்பாலும் திரும்பிச் சென்று வாழும் சூழ்நிலைகள் அற்றவர் களாக இருந்தாலும், தமது பிறப்பின் உரிமையை நிச்சயம் எண்ணி ஏங்கும் அந்த நினைவுகளைப் பேசத்தான் போகின்றார்கள்.

ஆனால், அது இதுவரை அதிகம் தமது பிறப்பின் தாய்நாட்டின் தாய்மொழி உணர்வாக இந்தியாவின் தமிழ்நாட்டைப் பற்றியே அதிகம் பேசிய நிலையில் இருந்து சற்று வேறுபட்டே இருக்கும். அப்போது அது இலங்கைத் தமிழர் என்றாக அதிகம் பேசவிளையும்; பல நூறு ஆண்டு வரலாறு எதிர்காலத்தில் ஏற்படப் போகின்றது என்பதினால், இதுவரை புலம்பெயர் சமூகத்தின் வரலாற்று உரையாடல்கள், பெரும்பாலும் இந்தியத் தமிழர்களின் புலம்பெயர்வு அனுபவங்களையே மையமாகக் கொண்டிருந்தன. ஆனால், வருங்கா லத்தில் அது ஈழத் தமிழர்களின் புலம் பெயர்வு வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட புதியதொரு பரிமாணத்தைப் பெறும். ஏனெனில், ஈழத் தமிழர்களின் சர்வதேசப் புலம்பெயர்வும் நூற்றாண்டு கால வரலாற்றை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. எனவே, றீயூனியன் வாழ் தமிழர்கள் தமது தாய்மொழிப் பயன்பாட்டை இழந்த போதிலும், எவ்வாறு தமது தமிழ்ப் பூர்வீக அடையாளங்களைப் பேணி வாழ்கின்றனர் என்பதை ஆராய்வது தற்போதைய வரலாற்றுச் சூழலில் மிக அவசியமான ஒன்றாகும்.

இந்தியப் பெருங்கடலில் மிகப் பெரிய தீவான மடகாஸ்கருக்குக் கிழக்காக றீயூனியன் அமைந்துள்ளது. பிரெஞ்சுத் தீவான றீயூனியன் தீவுக்கு இப்பெயர் வரக் காரணம், பிரெஞ்சுப் புரட்சியின் போது மார்சேய் நகரப் புரட்சியாளர் களும், பாரிஸ் நகர தேசியக் காவல்ப டையும் ஒன்றாக இணைந்த வரலாற்று நிகழ்வை நினைவுகூர்வதற்காகவே ஆகும்.

பிரெஞ்சு மொழியில் 'Réunion' என்ற சொல்லுக்கு 'மறுசந்திப்பு' அல்லது 'மீண்டும் ஒன்று கூடுதல்' என்று பொருளாகும். இத்தீவின் விரிவான வர லாற்றுப் பெயர்களாக, அரபு மாலுமிகள் மனிதர்கள் குடியேறுவ தற்கு முன்பு இத்தீவுக்கு 'தீனா மோர்காபின்' (மேற்குத் தீவு) எனப் பெயரிட்டனர். போர்த்துகீசியர்கள் 16-ஆம் நூற்றாண்டில் இத்தீவைக் கண்ட றிந்தபோது, இதற்கு 'சாந்தா அபொலோனியா' என்று பெயரிட்டனர்; எனினும், அவர்கள் இத்தீவை வாழ்வ தற்குரிய நாடு அல்ல எனக் கருதிக் கைவிட்டுச் சென்றனர். பின்னர் இந்த நாட்டை பிரான்ஸ் தனது கட்டுப்பாட் டிற்குள் கொண்டு வந்தது. 1649-இல் பிரான்ஸ் நாட்டின் லூயிஸ் XIII மன்னர், தனது அரச வம்சத்தின் பெயரான 'பர்பன்' என்பதை இத்தீ வுக்குச் சூட்டினார்.

றீயூனியன் தீவின் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்கினர், அதாவது சுமார் இரண்டு லட் சத்திற்கும் அதிகமானோர் தமிழ் வம் சாவளியினராவர். இவர்களைத் தவிர, ஏனைய இந்திய வம்சாவளி மக்களும் கணிசமான எண்ணிக்கையில் அங்கு வாழ்ந்து வருகின்றனர். இக்கட் டுரையை ஆக்குவதற்காக நேரடி யாகப் களப்பயணம் மேற்கொண்டு தர

வுகளைத் திரட்டும் சாத்தியப்பாடுகள் அற்ற சூழலில், கிடைக்கப்பெற்ற வரலாற்றுப் பதிவுகள், கள ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளின் அடிப்படையிலேயே இப்பதிவு ஒழுங்கமைக்கப்படுகின்றது.

மோரிசியசிலிருந்து 200 கி.மீ தென்மேற்காக அமைந்துள்ள மிகச்சிறிய தீவான றீயூனியன் தீவு 63 கி.மீ நீளமும், 45 கி.மீ அகலமும் கொண்டது.

இந்நாட்டைப் பற்றி சொல்வதானால் 2,512 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்ட இத்தீவின் சனத்தொகை, அண்மைய புள்ளிவிவரங்களின்படி சுமார் 9,11,000 ஆகும். இதன் தலைநகரம் செயிண்ட் டெனிஸ் (Saint-Denis) ஆகும். மலைகளும் ஏற்ற இறக்கங்களும் நிறைந்த இத்தீவு, சுமார் முப்பது லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு கடற்பகுதியில் ஏற்பட்ட பிரம்மாண்டமான எரிமலை வெடிப்பினால் உமிழப்பட்ட குழம்புகளால் உருவானது. எங்கு பார்த்தாலும் மலைகளும் ஆறுகளும் பல்வகை தாவர இனங்களும் நிறைந்த எழில்மிக்க இயற்கை அமைப்பை இது கொண்டுள்ளது. இத்தீவின் கிழக்கு எல்லையில் உள்ள கேடய எரிமலை (பைத்தன் டி லா போர்னைசி) கடல்மட்டத்தில் இருந்து 2,631 மீட்டர் வரை வெடிக்கக்கூடியது, இது அவாய் தீவுகளின் எரிமலைகளின் இயல்புகளை ஒத்தது. 1640-ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வெரிமலை நூற்றுக்கும் அதிகமான தடவைகள் சீற்றம் அடைந்திருக்கின்றது. கடைசியாக 2010 ஜனவரி 2-இல் சீற்றம் அடைந்தது. இதனைவிடவும் பைத்தன் டெஸ் நெய்ஜெசு என்ற எரிமலை கடல் மட்டத்தில் இருந்து 3070 மீற்றர் உயரம் கொண்டது இத்தீவின் மிக உயரமான புள்ளி ஆகும். இதன் உயரம் கடல் மட்டத்தில் இருந்து 3,070 மீற்றர் ஆகும்.

இந்த இரண்டு எரிமலைகளினது சாய்வான நிலப்பகுதி அடர்ந்த காடுகளை அண்மித்திருப்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல இங்கு மழை வீழ்ச்சி அதிகமாகக் கிடைக்கின்றது. இத்தீவின் மேற்குக்கரைக் கடற்பகுதியில் பவளப் பாறைகள் அதிகம் காணப்படுகின்றன. றீயூனியன் தீவு தற்சமயம் பிரான்ஸ் நாட்டில் கடல் கடந்த ஓர் அங்கநாடாக (French Overseas Department) விளங்குகிறது. இது பிரான்சின் 18 பிராந்தியங்களில் ஒன்றாகும். இது ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவாரிப் பிராந்தியங்களில் ஒன்றுமாகும். இது யூரோ வலயத்திலும் உறுப்புரிமை பெற்று யூரோ நாணயத்தைப் பயன்படுத்துகிறது.

றீயூனியனில் 18-ஆம் நூற்றாண்டின் 1797-ஆம் ஆண்டில் இருந்த மொத்த மக்கள் தொகை 56,800 ஆகும். அப்போது ஐரோப்பிய வம்சாவளியினர் 10,400; விடுதலை பெற்ற வெளிநாட்டவர் 1,600; அடிமைகள் 44,800 எனப் பிரெஞ்சுப் பதிவுகள் காட்டுகின்றன. அதனைத் தொடர்ந்து, 1850-ஆம் ஆண்டில் றீயூனியனில் இருந்த மொத்த மக்கள்தொகை 1,10,891 ஆகும். தமிழ்நாட்டிலிருந்து தமிழர்கள் 18-ஆம் நூற்றாண்டிலிருந்தே அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்டனர். இது ஓரளவில் அடிமைகளாகத் தொடங்கி, பின்னர் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இடம்பெற்றது.

இத்தீவு 1520-ஆம் ஆண்டில் போர்த்துக்கீசிய மாலுமியால் கண்டுபிடிக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது. பிறகு, ஆங்கிலேயர் கையிலும், பிரெஞ்சுக்காரரின் பிடியிலும் என்று சிற்சில காலம் மாறி மாறியிருந்தது. கடைசியாக, 1816-ஆம் ஆண்டிலிருந்து பிரெஞ்சு நாட்டவரின் கைகளிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டது. தமிழர்களோ பிற இந்தியர்களோ 17-ஆம் நூற்றாண்டு வரை இத்தீவுக்குச் சென்று குடியேறியதாக வரலாற்றுச் சான்றுகள் இதுவரை இல்லை.

ஏரிமலைகளின் குழம்புகளாலான றீயூனியன் தீவை ஆரம்பத்தில் பண்படுத்த வேலையாட்கள் தேவையாக இருந்தது. இதனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரெஞ்சு வெள்ளை முதலாளிகள் ஆபிரிக்காவின் கறுப்பின மக்களையும் மடகாஸ்கரின் பழங்குடிமக்களையும் அடிமைகளாகக் கொண்டுவந்து றீயூனியனில் கரும்பு, சோளம், நிலக்கடலை முதலியவற்றைப் பயிரிட்டனர். அதேவேளை சர்க்கரை ஆலைகளிலும் அவர்களிடம் வேலை வாங்கினார்கள். 1848-இல் பிரெஞ்சுப் பேரரசில் அடிமைமுறை ஒழிக்கப்பட்டதால், வெள்ளை முதலாளிகள் வேறு வழியின்றித் தங்கள் அடிமைகளை விடுதலை செய்துவிட வேண்டியதாயிற்று. எதிர்பாராத இந்த விளைவினால் இத்தீவின் பொருளாதார முதுகெலும்பு ஒடிந்து போய்விட்டதாக 1850-இல் இங்கு பிரயாணம் செய்த ஆங்கிலேயர் ஃபிரடரிக் என்பவர் தம் றீ யூனியப் பயணநூலில் குறிப்பிடுகிறார்.

கரும்புச் சாகுபடியை வெகுவாகப் பெருக்கிச் சர்க்கரை விற்பனையில் கொள்ளை இலாபம் சம்பாதிக்கலாம் என்று திட்டமிட்டிருந்த பிரான்சின் வெள்ளை இன முதலாளிகளை இந்த அடிமையொழிப்புச் சட்டம் திக்குமுக்காடச் செய்துவிட்டது. அதனால் இந்தக் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்கான தேடலில் கிடைத்தவர்களே தமிழ் நாட்டுத் தமிழர்கள். 1827-ஆம் ஆண்டு தொடக்கம் சுமார் 25 வருடங்கள் தொடர்ச்சியாக பிரஞ்சுக் காலனிகளாக இருந்து வந்த பாண்டிச்சேரி, காரைக்கால், ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், போன்ற பகுதிகளைச் சேர்ந்த தமிழர்கள் றீயூனியன் தீவில் கரும்புத்தோட்டங்களில் வேலை செய்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் ஆசை காட்டி அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஆனால் அதற்கெல்லம் முன்பே சில இந்தியர்கள் கோவா பிரதேசங்களிலிருந்து 15 பேர் அடிமைகளாக இங்கு அழைத்து வரப்பட்டதான வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன. இதன் அடிப்படையில் றீயூனியனில் 1848-களுக்கு முன் 4200 இந்தியர்கள் அப்பகுதியில் கூலித் தொழிலாளிகளாக இருந்ததாக அறிய முடிகின்றது. இவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களாக இருந்த காரணத்தினால் வெள்ளைக்கார துரைமார்கள் இவர்கள் எல்லோரையும் தமிழர்கள் என்றே குறிப்பிட்டிருந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் கரும்புத் தோட்டங்களிலும் சர்க்கரை ஆலைகளிலும் சிலர் முதலாளிகளின் வீடுகளில் சமையல்காரர்களாகவும் மெய்க்காவல்காரர்களாகவும் வேலைகளை மேற்பார்வை செய்யும் மேஸ்திரிகளாகவும் வேலை செய்தனர். இவ்வாறு வந்த ஒப்பந்தக் கூலிகளில் மிகச் சிலரே தமது ஒப்பந்தம் முடிவடைந்ததும் தமது தாயகத்துக்குத் திரும்பியிருந்தனர். ஏனையவர்கள் அங்கேயே



தங்க வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளா கியிருந்தனர். தொடர்ந்து இந்நாட்டில் வசிப்பவர்களுக்கு நிரந்தரக் குடியுரிமை வழங்கப்படும் என்று அரசு சொன்ன ஆசைவார்த்தைகள் பிரதான காரணமாக இருந்தது. இதற்கு அப்பால், இந்தியாவில் நிலவிய சாதிய வேறுபாட்டுத் தாழ்வுணர்ச்சியின்றி, எல்லோரும் சமமாக வாழும் சமரச வாழ்க்கை முறையும், வேலை நிச்ச யமும், கூலி நிச்சயமும் என்ற புதிய நம்பிக்கைகளும் காரணமாகும். அத்துடன், அன்றைய காலத்தில் தமிழ் நாட்டில் நிலவிய வறுமைச் சூழலும் ஒரு முக்கிய காரணமாகும்.

1946 வரையில் பிரான்ஸின் காலனியாக இருந்துவந்த இத்தீவு 1947-இல், 2-ஆம் உலக மகா யுத்தம் முடிவுற்ற நிலையில் உலகத்தில் ஏற்பட்ட புதிய ஒழுங்குகளுக்கு ஏற்ப பிரான்ஸ் நாட்டின் கடல் கடந்த அங்கநாடு என்று சட்டபூர்வமாக ஏற் றுக்கொள்ளப்பட்டது. அன்று முதல் பிரான்ஸ் நாட்டுக் குடியுரிமை இந்திய வம்சாழியினருக்கும் கிடைக்கப் பெற்றது. இங்கு வெள்ளையின பிரெஞ் காரர்கள், தமிழர், ஆபிரிக்க நாட்டுக் கறுப்பினத்தவர்கள், மலகாஸ், கொமோர் தீவுகளின் மக்கள், சீனர்கள், வியாபார நிமித்தம் கடைசியாக இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வந்த இந்திய குஜராத்தி முஸ்லீம்கள் ஆகிய பல இனத்தவரும் தற்போது வாழ்ந்து வருகிறார்கள்.

ஆரம்ப காலங்களில் இங்கு வாழும் இந்திய வம்சாவழியினர் திருமணச் சடங்கு மற்றும் மரணச் சடங்குகளை கத்தோலிக்க மத முறைப்படி மேற்கொண்டு வந்தனர். காலப் போக்கில் தமது தாய் வழிச் சமூ கத்தின் தேடல் மூலம் இந்தியாவுடன் ஏற்படுத்திக் கொண்ட மீள் உறவின் காரணமாக இந்து சமயத்தை கடைப்பி டித்து அந்த முறைகளில் சடங்குகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

ஆனாலும் திருமணம் என்று வருகின்ற போது பிள்ளைகள் ஏற்கனவே சந்தித்து பேசி காதலித்து பின்னரே பெற்றோருக்கு அறிமுகமாகின்றார்கள். இங்கு இருவீட்டாரும் ஒன்றிணைந்து திருமணத்தை நடத்தி வைப்பதோடு இந்தியாவைப் போல் சீதனம் சார்ந்த பிரச்சினைகள் இல்லாமல் இருவிட் டாரும் செலவுகளைப் பகிர்ந்து கொள் கின்றனர். இங்கு இந்து மதப் பண்பா டுகள், நம்பிக்கைகள் பல ஒற்றுமைப் பட்டதாகவும் சில வேற்றுமைப்பட்டதா கவும் அமைவதோடு அந்நாட்டு சட்ட திட்டங்களுக்கு உட்பட்டதாக அமைவதும் தவிர்க்க முடியவில்லை.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் குழந்தை பிறந்தால் முடியிறக்குதல் மற்றும் காது குத்துதல் போன்ற சடங் குகள் நிகழ்த்தப்படுவது வழமை, இதேபோல இங்கும் முடியிறக்கும் சடங்கு நடைபெறுகின்றது ஆனால் காது குத்துதல் வழங்கொழித்து போன ஒன்றாகக் காணப்படுகின்றது. அதேபோல் இறந்தவர்களை இந்து மதச் சடங்குப்படி எரியூட்டாது கல்ல றையில் அடக்கம் செய்கின்றனர்.

இங்கு ஒவ்வொரு ஊரிலும் ஒரு கோயிலுண்டு. சிவன், முருகன், திருமால், காளி போன்ற தெய்வங்க ளுக்கு கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. பெண் தெய்வத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வழிபடும் மரபும் உண்டு. இக்கோயில்களுக்கு தமிழ் நாட்டிலி ருந்து அர்ச்சகர்கள் வரவழைக்கப்பட்டு அர்ச்சனை செய்யப்படுகின்றது.

இங்கு ஆரம்பத்தில் கோயில்களில் பிரஞ்சு மொழியில்தான் அர்ச்சனை செய்யப்பட்டிருந்தது. பின்னர் தமது பண்பாடு கலாசாரம் தொடர்பான வழிப்புணர்வு ஏற்பட்டதனைத் தொடர்ந்து கோயில்களில் சமஸ்கி ருதம், தமிழ் போன்ற மொழிகளில் அர்ச்சனை செய்யப்படுகிறது. இவற்றை விட தமிழ்நாட்டை ஒத்த வழி பாடுகள் சில சில மாற்றங்களோடு நிகழ்த்தப்பட்டும் வருகின்றன.

றீயூனியன் தமிழர்களிடையே பெரும் பாலும் கிராம தேவதை வழிபாடே அதி கமாகக் காணப்படுகிறது. டிசம்பர், ஜனவரி, ஜூலை மாதங்களில் திரௌப தையம்மன் கோயிலில் தீ மிதித்தல் திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. ஆனால் இந்நாட்டின் பாதுகாப்பு சட் டத்துக்குட்பட்டு பெண்கள் தீக்குழி யினைச் சுற்றி வருவதனையே தீ மிதித் தலாகக் கருதப்படுகின்றது. தமிழ் நாட்டைப் போல் ஜூன் மாதங்களில் மாரியம்மனுக்கு, கஞ்சி ஊற்றும்

திருவிழா, கூடவே காளியம்மனுக்கு டிசம்பர், ஜனவரி, ஜூலை மாதங்களில் ஆட்டுக்கடா, கோழி முதலியன பலி கொடுத்து வழிபடுதல், இந்த விழாக்கள் பத்து நாட்க ளுக்குக் குறையாமல் கொண்டாடப்படுகின்றன. பொதுக் கோயில்கள் மட்டுமல்லாமல், கிராமங்களில் ஒவ்வொரு வீட்டின் தோட்டத்திலும் காளி, மாரி, முனி, வீரன், கருப்பு முதலிய தேவதைகளுக்குச் சிறு கோயில்கள் எழுப்பி மாதந் தோறும் வழிபாடு செய்து வருகின்றனர். இது இந்தி யாவில் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கின்ற சுவாமி அறை பூசையை ஒத்திருக்கின்றது.

நகரங்களில் உள்ள சிவசுப்ரமணியர், பெருமாள் ஆகிய தெய்வங்களின் கோயில்களில் ஆண்டு தோறும் பத்து நாள் உற்சவம் நடைபெறுகின்றது. அப்போது ஏராளமான மக்கள் நாள் தோறும் கோயிலுக்கு வந்து வழிபாடுகளில் பங்கேற்கின்றனர். கிருஸ்ண ஜெயந்தியையும் இரவு முழுவதும் கண்விழித்து அவரது வரலாற்றினைப் பக்தி யுடன் கேட்டு மகிழ்வுடன் கொண்டாடுகின்றனர். திருவிழாக் களின் போது சாமி ஊர்வலமும், சக்திகரக ஆட்டங்களும், அலகு குத்தி ஆடுவதும் சிறப்பாக நடைபெறும். ஊர்வ லத்தின் போது பக்தர்கள் வீடுதோறும் தீபாராதனை செய் வார்கள். அடிப்படையில் தமிழ் மொழியின் பயன்பாடு மிகவும் குறைந்திருந்தாலும் தெய்வ வழிபாடு அதுசார்ந்த கலாசார பண்பாட்டு முறைகளில் அவர்கள் இன்னமும் தமிழ் நாட்டுத் தமிழராகவே வாழ்கின்றனர்.

றீயூனியன் தமிழர்கள் தைப்பொங்கல், தீபாவளி, தமிழ் வருடப்பிறப்பு ஆகியவற்றை தமது வீடுகளில், கோயிலில் கொண்டாடுகின்றனர். இந்நாட்களில் சூரியனுக்குச் சிறப்பான பூசைகள் நடக்கின்றன. ஒவ்வொரு வருடமும் ஜூலை 14, நவம்பர் 11, டிசம்பர் 20 ஆகிய நாட்கள் தேசிய விழா நாட்களாக அரசாங்கத்தாலும் பொதுமக்களாலும் வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றன.

தற்போது தமிழர்கள் அனைத்து தொழில்களிலும் ஈடுபட்டி ருக்கின்றனர். கரும்பு தோட்ட வேலை, கட்டடக் கொந்த ராத்து, சாலைகள் அமைக்கும் கொந்தராத்து, பஸ், லாரி போக்குவரத்து ஆகியவற்றிலும், சிமெண்டு உற்பத்தித் தொழிற்சாலை, கருங்கல் சல்லி தயாரிப்புத் தொழிற்சாலை முதலியவற்றிலும் தமிழர்கள் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

மக்களுக்குத் தேவைப்படும் அத்தியாவசிய பொருள்களை றீயூனியனில் உற்பத்தி செய்வதைக் காட்டிலும், வெளி நாடுகளில் இருந்து தருவிக்கப்படுவது மிகவும் விலை குறைவாக அமைவதால், இங்குப் பெரிய தொழிற்சா லைகளை அமைத்து விளை பொருட்களை சேமிப்பது பதனிடுவது என்பதில் அதிக அக்கறையோ அவசியமோ இதுவரையில் ஏற்படவில்லை. சர்க்கரை ஆலைகள் மட்டும் நவீனமயமாக்கப்பட்டுப் பெரிய அளவில் நடத்தப்ப டுகின்றன.

தமிழர்களில் 28 சதவீதத்தினர் அரசியல், தொழில், வாணி பத்தில் ஈடுபட்டுள்ளனர். வெட்டிவேர், வனிலா, ஜெரானியம் போன்றவற்றிற்கும் சேனைப் பயிர்த் தொழில் வளர்ச் சிக்கும், கைவினைப் பொருள் உற்பத்திக்கும், தேன் உற் பத்திக்கும், மீன்பிடிப்பிற்கும் அரசாங்கம் பெருமளவில் உதவிபுரிகிறது. இதனால் மக்கள் இத்தொழில்களில் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பிரான்ஸில் படித்த பிரெஞ்சு மொழி பேசும் தமிழர்கள் மருத்துவர்களாகவும் வழக்குரைஞர்களாகவும் ஆசிரியர்க ளாகவும் விரிவுரையாளர்களாகவும் பணிபுரிகின்றனர்.

1947-இல் இத்தீவு பிரான்சின் அங்க நாடாக மாறியதிலி ருந்து இங்குள்ளோரின் வாழ்க்கைத்தரம் நாளுக்கு நாள் உயர்ந்து வருகின்றது. பிரான்ஸ் நாட்டில் நடைமுறைப்ப டுத்தப்படும் அத்தனை சலுகைச் சட்டங்களும் இங்கும் அப்படியே நடைமுறைக்கு வருவதால் சுற்றிலும் உள்ள நாடுகளின் வாழ்க்கைத் தரத்தைக் காட்டிலும் றீயூனியன் மக்களின் வாழ்க்கைத்தரம் பன்மடங்கு உயர்ந்து காணப்ப டுகின்றது.

தமிழர்கள் மாட்டிறைச்சி உண்பதில்லை என்றாலும் பெரும்பாலான தமிழ் நாட்டுப் பலகாரங்கள் இங்கு மறந்து போய்விட்டன. ரொட்டியும் வெண்ணெயும் காலைச் சிற் றுண்டியாக உள்ளது. பெரும்பாலும் ஐரோப்பிய நாட்டு உணவுப் பழக்கவழக்கங்களே அதிகம் இடம்பெறுகின்றன. கோயில் திருவிழாக்களின் போதும், மதச்சடங்குகள், வீட் டுப்பண்டிகைகளின் போதும் ஓரளவு தமிழ்ச் சமை யல்முறை கையாளப்படுகிறது.

றீயூனியன் தமிழர்களின் உடை கலாசாரம் பொதுவெ ளியில் மாறினாலும் இப்போதும் இந்துக்கோயில் திருவி ழாக்களிலும், தமிழ்ச் சமய திருமணச் சடங்குகளிலும் ஆர் வமுள்ள இளைஞர் பலர் வேட்டி, சட்டை அல்லது ஜிப்பா அணிந்தும் பெண்களில் பலர் புடவை, ரவிக்கை அணிந்தும் தமிழ்க் கலாசாரத்தை வெளிப்படுத்துகின் றனர். பொங்கல், தீபாவளி, புத்தாண்டு, விரதம், தீமிதிப்பு முதலிய விழாநாட்களில் பெண்கள் புடவையும் நகைகளும் அணிந்து கொள்கிறார்கள்.

றீயூனியன் தீவின் பண்பாட்டு அடையாளத்தில், பிரெஞ்சு மற்றும் தமிழ் மொழிகளின் வரலாற்றுத் தொடர்பினால் உருவான 'றீயூனியன் கிரியோல்' (Réunion Creole) மொழியின் பயன்பாடு முதன்மையானதொன்றாகும். பத் தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் குடியேறிய தமிழ் ஒப்பந்தத் தொழிலாளர்கள் பிரெஞ்சு முதலாளி களின் நம்பிக்கையைப் பெற்றவர்களாகப் பணிபுரிந்த சூழலில், இத்தீவெங்கும் தமிழ் சமூகத்தினரின் தாக்கம் கணிசமாக நிலவியது. அக்காலகட்டத்தில், தமிழர்க ளுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையிலான அன்றாடத் தொடர்பாடல் தேவையின் நிமித்தம் பிறந்ததே இக்கிரியோல் பேச்சுவழக்கு மொழியாகும்.

றீயூனியன் கிரியோல் மொழியின் சொற்களஞ்சியம் பிரதா னமாகப் பிரெஞ்சு மொழியிலிருந்து பெறப்பட்ட போதிலும், அதன் வாக்கிய அமைப்பும் கருத்து வெளிப்பாட்டு முறையும் தமிழ் மொழியின் தொடரியல் (Syntax) இயல்பு களையே பெருமளவில் ஒத்துக் காணப்படுகின்றன.

எனவே, இக்கிரியோல் மொழியியலின் உருவாக்கத்தில் அன்றைய தமிழர்களின் பங்களிப்பு முதன்மையானதாகும். தென்னிந்தியாவில் தமிழ் மொழியின் பல்வேறு பேச்சுவழக் குகளிலிருந்தும், திராவிட மொழிக் குடும்பத்தின் கிளைக் கிளைகளிலிருந்தும் ஏனைய மொழிகள் உருவான வர லாற்றுச் செயன்முறையை ஒத்ததொன்றாகவே, றீயூனி யனின் இக்கலப்பு மொழி உருவாக்கத்தையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

இப்போது உள்ள றீயூனியன் தமிழர்கள் தமிழை மறந்துவிட் டனர். அனைவரும் கிரியோல் மொழியே பேசுகின்றனர். கிரியோல் மொழி றீயூனியனின் தேசிய மொழியாக அங்கீக ரிக்கப்பட்டு வழக்கத்தில் உள்ளது. கிரியோல் மொழி தற்போது இத்தீவின் 90% மக்களின் வீடுகளில் பேசப்படும் மொழியாக உள்ளது. படித்தவர்கள் மட்டுமே பிரெஞ்சு மொழி பேசுகின்றனர். ஆனால், நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதத்தினர், தமிழ் எழுதவோ, படிக்கவோ, பேசவோ தெரியாதவர்களாக வாழ்கின்றனர். பிரான்சின் பாரீஸ், தமிழ் நாட்டின் புதுவை மாவட்டத்திலுள்ள தமது உறவுகளுடன் தொடர்புள்ள ஒரு சிலர் மட்டுமே தமிழ் பேசுகின்றனர்.

கல்வி வளர்ச்சி என்ற வகையில், இன்றைய றீயூனியன் தமி ழர்கள் முன்னிலை வகிக்கிறார்கள். மருத்துவர்கள், சட்டமே தைகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பொறியியல் துறைகளில் வல்லுநர்கள் என்று எல்லா நிலையிலும் இவர்கள் உயர்ந்து விளங்குகிறார்கள்.

அண்மைக் காலமாகத் தமிழ் மக்கள் அதிகமாக வசிக்கும் செயின்ட் ஆண்டிரியிலுள்ள மூன்று உயர்நிலைப் பள்ளிக ளிலும், அவற்றுடன் இணைந்து செயல்படும் செயின்ட்பனு வாவிலுள்ள ஒரு கல்லூரியிலும் விருப்பப் பாடமாகத் தமிழ் கற்பிக்கப்படுகிறது. இதுவன்றி, பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாகிய Institute of Linguistics and Anthropology-இல் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோருக்குத் தமிழ் போதிக்கப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகள் றீயூனியன் தீவில் தமிழ் மொழியின் இருப்பை எதிர்கா லத்தில் தக்கவைத்து உயர் நிலைக்குக் கொண்டு செல்லுமா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்றாகும். அதேவேளை, தமிழ்நாடு மற்றும் உலகளாவிய தமிழ் அமைப்புகளுடனான பண்பாட்டு மற்றும் கல்விசார் தொடர்பாடல்கள், றீயூனியனில் தமிழ் மொழியின் மறுமலர்ச் சிக்கும் மேன்மைக்கும் உறுதுணையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரெஞ்சு மொழியில் பேராசிரியராக வளர்ந்துள்ள திரு. வி. தேவக்குமாரன் பல ஆண்டுகளுக்கு முன் தமிழ் பிரெஞ்சுப் பாடநூல் எழுதிக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேம் பாடடையச் செய்தார். அவர் எழுதிய நூலின் பெயர் 'ap-preds le tamoul' ஆகும். அவர் ஓர் தமிழாசிரியர். றீயூனி யனில் தமிழ் கற்பித்த முதல் தமிழாசிரியர் மொரீசியஸைச் சேர்ந்த திரு. சங்கிலி என்பவர் ஆவார். பிரெஞ்சு மூலம் தமிழ் படிக்க, பாலர் பாடநூல் பள்ளிகளில் கற்பிக்கப்படு கிறது. நவீன தொழில் நுட்ப வளர்ச்சியினால் உலகம் உள் ளங்கையிற்கு வந்ததாக உணரும் தருணங்களில் தொலைக்காட்சி, ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், பஜனைப் பாராயணம், கோயில் ஆகியவற்றிலும் தமிழை முன்பை விட அதிகமாக பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். அதனால் மறைந்த தமிழை மீண்டும் மலரச் செய்யும் வாய்ப் புகளும் எண்ணமும் றீயூனியன் தமிழரிடையே வேரூன்றத் தொடங்கி இருக்கிறது. தமிழ் மொழி மீதான ஆர்வம் இதன் மூலம், குறிப்பாக இளம் தலைமுறையினரிடையே மேலும் வளர்ச்சியடையும் சூழல் உருவாகி வருகின்றது. இருந்த போதிலும் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் றீயூனியன் தமிழர்கள் முற்றிலும் இழக்கவில்லை என்பதற்குச் சான்றாக தமது பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டும்போது தமிழ் இந்துப் பெயர்களையே வைக்கிறார்கள். அரங்கசாமி, இராமாசாமி, கிருட்டிணன், இராமன், முருகன், கணேசன், காத்தாயி, முருவாய், இராமாய், மீனாட்சி, மீனா, மைனாவதி, காமாட்சி போன்ற பெயர்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. கத்தோலிக மதத்தைப் பின்பற்றுபவர்கள் தமிழ்ப் பெயர்களோடு கிறீஸ்துவப் பெயர்களையும் இணைத்துச் சூட்டுகின்றனர்.

றீயூனியன் தீவில் தமிழர்களின் அரசியல் அங்கத்து வத்தினை நோக்கும் போது, அங்கு உள்ள அரசியல் கட்சி களான சம உடமைக் கட்சி மற்றும் தொழிற்கட்சிகளில் அதிகமான தமிழர்கள் அங்கம் வகிக்கிறார்கள். சட்டச பையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்கள் இருக் கிறார்கள். பிரான்சின் அங்க நாட்டுக்கான நாடாளுமன் றத்தில் றீயூனியன் பகுதிக்கு உரிய ஐந்து உறுப்பினர்களில் (Five deputies) ஒருவராக வீரப்பாபிள்ளை என்ற தமிழர் அங்கம் வகிக்கிறார். ஆனால் இவருக்குத் தமிழ் தெரியாது. மேலும் றீயூனியனிலிருந்து செல்லும் மூன்று சட்டமன்ற மேலவை உறுப்பினர்களில் (Senators) இருவர் தமிழர்கள்.

தமிழ் மொழியினையும் தமிழ் பண்பாட்டினையும் தமிழ் கலைகளையும் இத்தீவில் வளர்த்துக் கொள்ளவும் வளப்ப டுத்தவும் அங்குள்ள படித்த தமிழர்கள் விரும்பம் கொண்டு செயற்படுகின்றனர். இதற்குத் தமிழ்நாட்டிலிருந்து தமிழ் மொழியினைக் கற்பிப்பதற்குரிய தமிழ் ஆசிரியர்களையும் தமிழ்நாட்டுக்கே உரிய இலக்கியம், இசை, பரதக்கலைகள் போன்றவற்றினைக் கற்றுக்கொடுக்கும் இசை, நடன ஆசிரியப் பெருமக்களையும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். கூடவே தமிழ்நாட்டுக் கலைகள், கோயில்கள், நகர மற்றும் நாட்டுப்புற வாழ்க்கை முறைகள், விழாக்கள், பண்டி கைகள் ஆகியவற்றைப் பற்றிய செய்திப் படங்களையும் எதிர்பார்க்கின்றனர்.

றீயூனியனில் உள்ள இளைஞர்கள் தமிழகம் வந்து கலாசார, பண்பாட்டுத்துறைகளில் நேரடி அனுபவம் பெறு வதற்கு வேண்டிய உதவிகளையும் தமிழ்நாட்டு அறிஞர்களி டமிருந்தும் அரசிடமிருந்தும் எதிர்பார்த்துக் காத்திருக்கின் றனர். இவர்களது எதிர்பார்ப்புகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்குரிய பொருத்தமான ஒழுங்குகள் முன்னெ டுக்கப்படும் போது றீயூனியனிலும் தமிழ் செழித்து வாழும் என்று நம்பிக்கை கொள்ளலாம்.



James@thaiveedu.com

வீரகத்தி தனபாலசிங்கம்

# வட்டுக்கோட்டைத் தீர்மானம்

## பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஓர் இடதுசாரியின் பார்வை

நவசமசமாஜ கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவின் இரண்டாவது நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பு மருதானை டீன்ஸ் வீதியில் அமைந்திருக்கும் சமூக சமய நடுநிலையத்தின் கேட்போர் கூடத்தில் 2026 ஜூலை 25 சனிக்கிழமை காலை நிகழ்வு ஒன்று இடம் பெற்றது.

இலங்கையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பில் கலாநிதி கருணாரத்ன இறுதிவரை மிகவும் உறுதியாகக் கடைப்பிடித்த நிலைப்பாட்டையே அவரின் அரசியல் இயக்கம் தற்போதும் கொண்டிருக்கிறது.

நவசமசமாஜ கட்சியின் தற்போதைய பொதுச் செயலாளர் ரணத் குமாரசிங்க எழுதிய 'வட்டுக்கோட்டை தீர்மானத்தின் இன்றைய நிலை என்ன?' என்ற தலைப்பில் சிறிய நூல் ஒன்று அன்றைய தினம் வெளியிடப்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தின் இலக்கு ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சி (சமஷ்டி) அடிப்படையில் தீர்வைக் காண்பது என்பதில் இருந்து 'தமிழீழம்' என்ற சுதந்திரமான தனியரசுக்கான கோரிக்கையாக நகர்ந்ததை குறித்து நின்ற வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டு (1976 மே 14) அரை நூற்றாண்டு கடந்த நிலையில், அது குறித்து வடக்கில் சிலர் ஆரவாரமில்லாமல் ஓரிரு நிகழ்வுகளை நடத்தினர்.

ஆனால், அந்த தீர்மானத்தின் இன்றைய 'தகுதி' குறித்து குறிப்பாக உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து 17 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்திருக்கும் நிலையில் எவரும் ஆய்வு செய்து ஒரு நூலை வெளியிட்டதாக தெரியவில்லை.

ஆனால், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இடதுசாரி அரசியல்வாதி ஒருவர் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் இன்றைய நிலை குறித்து தனது எண்ணத்தை, சிறியதாக



tg.theeban@gmail.com

இருந்தாலும் ஒரு நூலாகக் கொண்டு வருவதில் அக்கறை காட்டியிருக்கிறார். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை மீது தனது இயக்கத்துக்கு இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையின் வெளிப்பாடாக வட்டுக்கோட்டை தீர்மானத்தை நியாயப்படுத்திக் கருத்துகளை முன்வைத்திருக்கிறார் என்று தெரிகிறது.

தனிநாட்டை அடைவதற்கான ஆயுதப் போராட்டத்தின் விளைவான உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பின்னர் குறைந்தபட்சம் 1987 ஜூலை இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கையின் விளைவாக கொண்டுவரப்பட்ட மாகாண சபைகளையாவது ஒழுங்காக இயங்க வைப்பதில் குறிப்பாக தென்னிலங்கை அரசாங்கங்களும் பொதுவில் சிங்கள அரசியல் சமுதாயமும் அக்கறையின்றி இருக்கின்ற நிலையில் தமிழ் மக்களுக்கு இன்னமும் கூட விட்டு வைக்கப் பட்டிருக்கக்கூடிய 'தெரிவு' சுயநிர்ணய உரிமையே என்பதே ரணத் குமாரசிங்கவின் நம்பிக்கையாக இருக்கிறது போன்று தோன்றுகிறது.

தற்போதைய அரசியல் நிலைவரத்துக்கு மத்தியில் வட்டுக் கோட்டை தீர்மானத்துக்காக குரல் கொடுப்பது எந்தளவுக்கு பொருத்தமானது அல்லது தகுதியானது என்பது கடந்த அரை நூற்றாண்டு கால அரசியல் நிகழ்வுப் போக்குகளை ஒருவர் எவ்வாறு மதிப்பிடுகிறார் என்பதிலேயே தங்கியிருக் கிறது என்பது இந்தக் கட்டுரையாளரின் நம்பிக்கை. என்றாலும் கூட, குமாரசிங்கவின் கருத்துகளை தமிழ் வாச கர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் அவரின் நூலில் வட்டுக்கோட்டை தீர்மானம் பற்றிய முக்கி யமான பகுதிகள் இன்று இந்த பத்தியில் மீள்பிரசுரம் செய் யப்படுகின்றன. அவை வருமாறு:

- இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்களுடன் இணக்கப் பாட்டுக்கு வருவதற்கு தாங்கள் மேற்கொண்ட முயற்சி களைக் கைவிடுவதற்கும் தங்களது விதியைத் தாமே பொறுப்பேற்பதற்கும் தமிழ் மக்களை நகர்த்தியதே வட் டுக்கோட்டை தீர்மானத்தின் வரலாற்று வகிபாகம்.

- சிங்கள ஆட்சியாளர்களுடனான கொடுக்கல் வாங்கல் களை முடிவுக்கு கொண்டு வந்து சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் எழுந்து நின்று தனித்தமிழ் ஈழத்தை உரு வாக்குவதன் மூலம் அல்லாமல் வேறு வழியில் தமிழ் மக் களுக்கு சுதந்திரத்தையோ விமோசனத்தையோ பெற்றுக் கொடுக்க முடியாது என்பதை அந்த தீர்மானம் உறுதிப்ப டுத்தியது.

- தமிழ் மக்களின் பாரிய நிறுவன பலத்தை அடிப்படை யாகக் கொண்ட சுதந்திரமான சுயாட்சி பற்றிய எதிர்பார்ப் புகளைக் கட்டியெழுப்பிய வட்டுக்கோட்டை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அந்த தீர்மானம் குறித்து இன்று நாம் விவாதிக்கிறோம். அத்தகையதொரு பலம்வாய்ந்த இயக் கம் உலக வல்லரசுகளின் உதவியுடன் அழிக்கப்பட்ட பின்னர் தோன்றிய சிதறிய ஒரு சூழ்நிலையில், அந்த பலமான காலத்தில் உருவான கருத்துகள் குறித்து இன்று கலந்துரையாடுகிறோம்.

- தோல்விகள் ஒருபோதுமே உண்மைகளை முடிவுக்கு கொண்டு வருவதில்லை. இலங்கையின் மார்க்சிய இயக் கங்கள், புரட்சிகர இயக்கங்கள் மற்றும் ஜனநாயக இயக் கங்கள் இன்று மிகவும் கடினமான இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றன.

- இந்த வீழ்ச்சியும் போர்ப்பீதியும் தமிழ் மக்களை மாத்திரம் பாதிக்கவில்லை. தமிழர்களுக்கு சமமான அளவுக்கு அல் லது சில வேளைகளில் அதையும் விட அதிகமாகவும் சிங் கள சமூகத்தையும் அது பாதித்தது என்று கூறலாம்.

- இலங்கைச் சமுதாயத்தின் உயிர் நாடியாக விளங்கும் தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் பெரும்பான்மையினர் இராணுவவாதத் திட்டத்துக்கு அடிபணிந்து செயற்பட்ட தால் ஏற்பட்ட பாரிய சமூக விழுமியச் சரிவின் விளைவுக ளுக்கு பதிலைத் தேடும் பொறுப்பை வரலாறு அவர்க ளுக்கு வழங்கியிருக்கிறது.

- தமிழ் மக்கள் தமது பிரதேசங்களை விடுவித்து தமது தலைவிதியைத் தீர்மானிப்பதற்காக முன்னெடுத்த போராட் டம் கொடிய தோல்வியைத் தழுவியது. ஆனால், அதன் மூலம் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் எதிர்பார்ப்புகளும் நோக்குகளும் தோல்வியடைந்ததாக கருதமுடியாது. இது விடுதலைப் போராட்டத்தின் ஓர் 'இனிங்ஸின்' தோல்வி மாத்திரமே.

- அந்த தோல்விக்கான காரணங்களை விவாதித்து அடுத்த 'இனிங்ஸுக்கு' தயாராவதற்கான வியூகங்களை வகுத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்வதற்கு வட்டுக்கோட்டை மாநாட்டின் நோக்குகளை பயன்படுத்திக் கொள்ளவேண் டும்.

- வட்டுக்கோட்டை மாநாட்டுக்கு பிறகு 1976 நவம்பரில் நாடாளுமன்றத்தில் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பட்ஜெட் விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தமிழ் பேசும் மக்கள் இழந்த உரிமைகளைப் பெறுவதற்காக தான் முன்னெடுத்த சமஷ்டி இயக்கம் தோல்வியடைந்துவிட்டதை ஒத்துக் கொண்டார்.

- அதற்கு முன்னதாக, இரு பிரதமர்களுடன் தான் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் தோல்வியடைந்த பிறகு செல்வ நாயகம் சிங்களத் தலைவர்கள் குறித்து ஓர் உறுதியான முடிவுக்கு வந்தார்.

- அதாவது சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களை ஆளக் கூடிய அளவிற்கு பெருமனதுடையவர்களோ பலமான வர்களோ அல்ல. அவர்கள் அந்தளவுக்கு உயர்ந்தவர் களும் இல்லை என்பதே அந்த முடிவு. எமது அனுபவமும் அதுவே.

- தமிழ் மக்களை ஆளுவது ஒரு புறமிருக்க, இந்த நாட்டின் சிங்களத் தலைவர்கள் சிங்கள மக்களைக் கூட ஆளத் தகுதியற்றவர்கள். அவர்களுக்கு அதற்கான பலம் இருந் திருந்தால் தமிழ் மக்களுடன் செய்து கொண்ட ஒப்பந் தங்களை கிழித்தெறிய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக் காது.



- சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் வித்தியாசமில்லை என்றும் அவர்களை சமத்துவமாக நடத்துவதாகவும் முன்னைய அரசாங்கங்கள் கூறியதைப் போன்றே இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் கதை கூறுகிறது. தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, சிங்கள மக்களுக்கும் தேவையானது சுயநிர்ணயமேயாகும். சிங்கள விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் தங்களது பிரதேசங்களின் உற்பத்தி, விநியோகம் மற்றும் விலை நிர்ணயம் போன்றவற்றை தீர்மானிக்கக்கூடிய ஒரு சுயாட்சி அதிகாரம் தேவைப்படுகிறது.

- ஒரு தேசத்துக்கு சுயநிர்ணயம் என்பது ஏதோ பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதுடன் முடிந்துவிடுவதில்லை. அது ஒரு தேசத்தின் எதிர்காலத் தலைவிதி, கலாசாரம், மொழி மற்றும் கல்வி சார்ந்த விடயமாகும். இவை அனைத்தையும் பற்றி சுதந்திரமாகத் தீர்மானம் எடுத்து முன்னகர்ந்து செல்லக்கூடிய, வேறு ஓர் இனத்தின் அடக்குமுறைக்கு உட்படாத ஒரு சுதந்திர நாட்டில் வாழ்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு.

- ஒரு சுதந்திர அரசுக்கு தான் எந்த தேசிய அரசுடன் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வது, இணைந்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பது என்ற தீர்மானங்களை எடுக்கும் சுதந்திரம் உண்டு. இவை முழுவதையுமே சுயநிர்ணயம் என்கிறோம்.

- இவ்வாறான ஒரு நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ளாமல் ஒரு தேசத்தை ஒன்றிணைக்க முடியாது. அவ்வாறு ஒன்றிணைக்க முடியாவிட்டால், ஒரு 'தேசிய அரசு' உருவாகாது என்பதுடன் இந்த மண்ணில் அபிவிருத்திப் பாதையை அமைக்கவும் முடியாது.

- தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கினால் மாத்திரமே சிங்கள மக்களுக்கும் விடுதலை கிடைக்கும். சிங்கள மக்கள் பெரும்பான்மை இனத்தவர்கள் என்பதால் அவர்களுக்கு மாத்திரம் தனியான விமோசனம் கிடைக்காது.

- யுத்தம் செய்து வெற்றிபெற்ற பின்னரும் பொருளாதார ரீதியில் பிச்சையெடுக்கும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. 2048-ஆம் ஆண்டில்தான் இந்த பிரச்சினை தீரும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சொன்னார். ஆனால், அந்த ஆண்டில்தானா அல்லது 2088-ஆம் ஆண்டில்தானா என்பது யாருக்கும் தெரியாது.

- ஜனநாயக மாற்றங்கள் என்பது தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதில் இருந்து தொடங்க வேண்டும். அதற்கு வட்டுக்கோட்டை தீர்மானங்களின் நோக்குகளை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் தலைமையுடன் இணைந்து செயற்பட வேண்டும். தற்போதைய சூழலில் அவர்கள் எடுக்கப்போகும் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கு ஆட்சியாளர்கள் வசதி செய்துகொடுக்க வேண்டும்.

- தமிழ் மக்களுக்கு உரிமைகள் எவ்வாறு கிடைக்க வேண்டும் என்பது வட்டுக்கோட்டை ஆவணத்தில் இருக்கிறது. ஒரு ஜனநாயக தேசிய அரசை, மதசார்பற்ற அரசை எவ்வாறு உருவாக்குவது என்பதற்கு அது ஒரு சிறந்த உதாரணமாகும்.

- வட்டுக்கோட்டை தீர்மானங்களின் பிரகாரம் செயற்பட அனுமதித்தால், எமக்கு தனித்தனியாகவும் ஒன்றிணைந்தும் அபிவிருத்திக்கான போராட்டங்களை முன்னெடுக்க வாய்ப்பு உருவாகும். தேசியப் பிரச்சினைக்கான தீர்வு குறித்த கலந்துரையாடல்களை (எவ்வாறு முன்னோக்கிச் செல்வது என்பதை) இன்றைய யதார்த்த சூழ்நிலையில் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் நோக்குகளின் அடிப்படையில் முன்னெடுக்க வேண்டும்.

Thanabalasingham.V@thaiveedu.com



மொழியின் அரசியல் : 3

# வர்க்க சக்தியாக மொழியும் ஆங்கிலம் பேசும் மேட்டுக்குடியினரும் – 4



tg.theeban@gmail.com

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**மொழி சீர்திருத்தத்தின் வரம்புகள்:**

1956-ஆம் ஆண்டுக்கு முந்தைய பத்தாண்டுகளில் ஆங்கிலம் பேசும் மேட்டுக்குடியினர் மீது எழுந்த விமர்சனம், பல விதங்களில் நியாயமானதாகவே இருந்தது. கல்வி, வேலைவாய்ப்பு, அரச அதிகாரத்தைப் பெறுவதற்கான வழிகளை வடிவமைப்பதில் மொழியின் பங்கை அது சரியாக அடையாளம் கண்டதுடன், சுதந்திரத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் காலனித்துவ மொழிப் படிநிலைகள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டு வந்தன என்பதையும் அம்பலப்படுத்தியது. ஆயினும், அரசியல் ஆதிக்கம்பெற்ற தீர்வான - சிங்களத்தை ஒரே உத்தியோகபூர்வ மொழியாக ஏற்றுக் கொண்டது - தனக்குள்ளேயே சில உள்ளார்ந்த வரம்புகளைக் கொண்டிருந்தது. அது ஒரு வகையான மொழிப் புறக்கணிப்பை அகற்ற முயன்ற போதிலும், சமத்துவ மின்மையின் பரந்த அரசியல் பொருளாதாரத்தைக் கவனத்தில் கொள்ளாமல் அவ்வாறு செய்தது. அதன்மூலம், அது கடக்க முற்பட்ட பல கட்டமைப்பு நிலைமைகளையே மீண்டும் உருவாக்கியது. அதன் சாராம்சத்தில், 'சிங்களம் மட்டும்' கொள்கையானது மொழி மூலதனத்தின் மறுபகிர்வையே குறித்தது. அந்த மூலதனம் செயற்பட்ட அமைப்பின் மாற்றத்தை அல்ல. இது அணுகலுக்கான தகுதிகளை ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு மாற்றியது. இதன் மூலம், முதன்மையாக சிங்களத்தில் கல்வி கற்ற தனிநபர்கள் போன்ற ஒரு புதிய தரப்பினர் அரசு அமைப்பில் நுழைய வழிவகுத்தது. இருப்பினும், வாய்ப்புகளைக் கட்டுப்படுத்திய அடிப்படைக் கட்டமைப்புகளான, கட்டுப்படுத்தப்பட்ட தொழிலாளர் சந்தை, சீரற்ற கல்வித் தரம், பிராந்திய ஏற்றத்தாழ்வுகள், அதிகரித்து வரும் படித்த இளைஞர்களை உள்வாங்க இயலாத பொருளாதாரம் போன்றவற்றை இது மாற்றாமல் விட்டுவிட்டது. இந்த வகையில், மொழி சீர்திருத்தம் ஒரு பகுதித் தீர்வாகச் செயற்பட்டது. இது சமத்துவ மின்மையின் அறிகுறிகளை மட்டுமே கையாண்டு, அதன் அடித்தளங்களைப் பெரும்பாலும் மாற்றாமல் விட்டுவிட்டது.

> ***“ஆங்கிலம் ஆதிக்கம் செலுத்திய அமைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த, குறிப்பாக கிராமப்புற மற்றும் கீழ்-நடுத்தரவர்க்கப் பின்னணியைச் சேர்ந்த சிங்கள மொழி பேசுபவர்கள், எழுத்தர், நிர்வாகப் பதவிகளுக்கான அதிக அணுகலைப் பெற்றனர். புதிய மொழித் தேவைகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஆட்சேர்ப்பு செயல்முறைகள் சரிசெய்யப்பட்டன, மேலும் அரசு நிர்வாகம் படிப்படியாக சிங்களத்தில் கல்வி கற்ற வர்களுக்கு எளிதில் அணுகக்கூடியதாக மாறியது.”***

‘சிங்களம் மட்டும்’ சட்டத்தின் மிக உடனடியான விளைவு, அரசுப் பணியிடங்களின் அமைப்பில் ஏற்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகும். ஆங்கிலம் ஆதிக்கம் செலுத்திய அமைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த, குறிப்பாக கிராமப்புற மற்றும் கீழ்-நடுத்தரவர்க்கப் பின்னணியைச் சேர்ந்த சிங்கள மொழி பேசுபவர்கள், எழுத்தர், நிர்வாகப் பதவிகளுக்கான அதிக அணுகலைப் பெற்றனர். புதிய மொழித் தேவைகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஆட்சேர்ப்பு செயல்முறைகள் சரிசெய்யப் பட்டன, மேலும் அரசு நிர்வாகம் படிப்படியாக சிங்களத்தில் கல்வி கற்றவர்களுக்கு எளிதில் அணுகக்கூடியதாக மாறியது. பல தனிநபர்களுக்கு, இந்த மாற்றம் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அது, முன்பு மறுக்கப்பட்டிருந்த ஒரு நிலையான,

> ***1950-களின் பிற்பகுதியிலும் 1960-களின் முற்பகுதியிலும், சிங்களத்தில் கல்வி கற்ற இளைஞர்கள் அதிகளவான எண்ணிக்கையில், பூர்த்தி செய்ய முடியாத வேலைவாய்ப்பு எதிர்பார்ப்புகளுடன் தொழிலாளர் சந்தையில் நுழைந்தனர். முதன்மை வேலை வழங்கு நராக நிலைநிறுத்தப்பட்டிருந்த அரசால், இந்த வருகையை உள்வாங்க முடியவில்லை. இது, படித்த வேலையின்மை என்ற நிலை உருவாக வழிவகுத்தது.***

சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பையும், ஒருவித அங்கீ கார உணர்வையும் வழங்கியது. கிராமத்து ஆசிரியரின் மாண வர், ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறாமலேயே ஒரு அரசாங்க வேலையை அடைய முடியும் என இப்போது யதார்த்தமாகக் கனவு காண முடிந்தது. கிராமப்புற இளைஞர்கள் அரசு அமைப்பிற்குள் ஓர் எதிர்காலத்தைக் கற்பனை செய்து பார்க்க முடிந்தது. இந்த வகையில், இந்தச் சீர்திருத்தம், அரசின் மொழியைப் பெரும்பான்மையினரின் மொழியுடன் மேலும் நெருக்கமாக இணைத்து, அணுகலில் ஒரு குறிப்பிட்ட அளவிலான ஜனநாயகமயமாக்கலை அடைந்தது.

இருப்பினும், இந்த அணுகல் விரிவாக்கம் விரைவில் கட்ட மைப்பு ரீதியான வரம்புகளை எதிர்கொண்டது. அரசில் கிடைக்கக்கூடிய பதவிகளின் எண்ணிக்கை வரையறுக்கப்பட் டதாக இருந்தது, மேலும் புதிய வேலைவாய்ப்புகளை உரு வாக்கும் பொருளாதாரத்தின் திறனும் குறைவாகவே இருந் தது. சிங்களத்தில் கல்விகற்ற அதிகமானோர் கல்விமுறைக் குள் நுழைந்து, அரசுப் பணிகளை விரும்பியதால், போட்டி தீவிரமடைந்தது. அணுகலில் கிடைத்த ஆரம்பகால ஆதாயங் கள், நீடித்த அல்லது பரவலான முன்னேற்றமாக மாறவில்லை மாறாக, அவை சிங்கள மொழி பேசும் மக்களிடையே ஒரு புதிய படிநிலையை உருவாக்கின் அது, பதவிகளைப் பெற்ற வர்களையும், ஒதுக்கப்பட்டவர்களையும் வேறுபடுத்திக் காட் டியது.

விவசாயப் பொருளாதாரம் தொடர்ந்து குறைந்த உற்பத்தித் திறன், வரையறுக்கப்பட்ட பன்முகப்படுத்தல் மற்றும் வெளிப் புற அதிர்ச்சிகளுக்கு எளிதில் பாதிக்கப்படும் தன்மை ஆகிய வற்றால் வகைப்படுத்தப்பட்டது. அரச வேலைவாய்ப்பின் விரி வாக்கம், மக்கள் தொகையின் ஒரு பிரிவினருக்கு வாய்ப் புகளை வழங்கியது. ஆனால் அது வறுமையை உருவாக்கிய கட்டமைப்பு நிலைமைகளைச் சரிசெய்யவில்லை. பல கிரா மங்களில், மொழி சீர்திருத்தத்தின் தாக்கம் சீரற்றதாக இருந் தது. ஒரு சிறிய எண்ணிக்கையிலான தனிநபர்கள் அரசாங்க வேலைகளைப் பெற்றபோதிலும், பெரும்பான்மையானவர்கள் தொடர்ந்து விவசாயம் அல்லது முறைசாரா வேலைகளையே நம்பியிருந்தனர். இதனால், சீர்திருத்தத்தின் பலன்கள் ஏற் கனவே கல்விவாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளும் நிலையில் இருந்தவர்களிடையே குவிந்தன. இது சமத்துவ மின்மையை அகற்றுவதற்குப் பதிலாக வலுப்படுத்தியது.

பெரும்பாலும் கிராமப்புற, கீழ்-நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த இந்த வர்க்கம், அரசின் நிர்வாக அமைப்பில் பதவிகளை வகித்து, முந்தைய ஆங்கிலம் பேசும் மேட்டுக்குடியினருக் குப் பதிலாகவோ அவர்களுக்குத் துணையாகவோ செயற் பட்டது. மார்க்சியக் கண்ணோட்டத்தில், இந்த வளர்ச்சியை மேட்டுக்குடி உருமாற்றம் என்பதை விட, மேட்டுக்குடி சுழற்சி செயல்முறையாகப் புரிந்துகொள்ளலாம். சிறப்புரிமையின் மொழி அடிப்படை மாறியது. ஆனால் சிறப்புரிமையின் கட்ட மைப்பு அப்படியே இருந்தது. புதிய அதிகாரத்துவ வர்க்கம், தனக்கு முந்தைய வர்க்கத்தின் பல செயற்பாடுகளையும் நடைமுறைகளையும் மரபுரிமையாகப் பெற்று, அதே நிறு வனக் கட்டமைப்பிற்குள் இயங்கி, பெரும்பாலும் ஒத்தபுறக்க ணிப்பு வடிவங்களை மீண்டும் உருவாக்கியது.

1956-க்குப் பிறகு அரசுப் பணியில் சேர்ந்த ஒரு சிங்கள மொழி பேசும் எழுத்தர், தனக்கு முந்தைய ஆங்கில மொழி பேசும் எழுத்தரிடமிருந்து மொழியிலும் சமூகப் பின்னணி யிலும் வேறுபடலாம். ஆனால் அமைப்புக்குள் அவரது பங்கு பெரும்பாலும் அப்படியே இருந்தது. அவர் படிவங்களைச் செயலாக்கினார், விதிமுறைகளை அமல்படுத்தினார், மேலும் அரசுக்கும் மக்களுக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்தார். உரையாடலின் மொழி மாறியது, ஆனால் அதிகாரிக்கும் பிர ஜைக்கும் இடையிலான படிநிலை உறவு நீடித்தது. நிர்வாகப் பயிற்று மொழியாக சிங்கள மொழியின் உருமாற்றம், சிங்கள வழிக் கல்வியின் விரிவாக்கம் உட்பட, கல்வி அமைப்பில் பரந்த மாற்றங்களுடன் சேர்ந்து நிகழ்ந்தது. இருப்பினும், இந்த விரிவாக்கத்திற்கு இணையாக தரம், வளங்கள் அல் லது பொருளாதார வாய்ப்புகளுடன் பொருந்துதல் போன்ற மேம்பாடுகள் எப்போதும் ஏற்படவில்லை.

1950-களின் பிற்பகுதியிலும் 1960-களின் முற்பகுதியிலும், சிங்களத்தில் கல்வி கற்ற இளைஞர்கள் அதிகளவான எண் ணிக்கையில், பூர்த்தி செய்ய முடியாத வேலைவாய்ப்பு எதிர் பார்ப்புகளுடன் தொழிலாளர் சந்தையில் நுழைந்தனர். முதன்மை வேலை வழங்குநராக நிலைநிறுத்தப்பட்டிருந்த அரசால், இந்த வருகையை உள்வாங்க முடியவில்லை. இது, படித்த வேலையின்மை என்ற நிலை உருவாக வழிவகுத்தது. பரந்த பொருளாதார மாற்றத்துடன் சேராதபோது, மொழி சீர் திருத்தத்தின் வரம்புகளை இந்த நிகழ்வு எடுத்துக்காட்டு கிறது. கல்வி இலட்சியங்களை அதிகரித்தது. ஆனால் அதற் கேற்ற வாய்ப்புகள் இல்லாததால், அது விரக்தியையும் உரு வாக்கியது. மொழி மூலம் முன்னேற்றம் கிடைக்கும் என்ற வாக்குறுதி பகுதியளவு மட்டுமே நிறைவேற்றப்பட்டது. இது பலரை ஒத்திவைக்கப்பட்ட எதிர்பார்ப்பு நிலையில் விட்டு விட்டது.

'சிங்களம் மட்டும்' கொள்கை ஓர் ஆழமான மாற்றத்தின் தோற்றத்தை உருவாக்கியது. அது காலனித்துவ படிநிலையி லிருந்து ஒரு முறிவையும், பெரும்பான்மையினரை நோக்கி அரசை மறுசீரமைப்பதையும் அடையாளப்படுத்தியது. ஆயி னும், இந்த அடையாளபூர்வமான மாற்றத்திற்குக் கீழே, பல அடிப்படைக் கட்டமைப்புகள் மாற்றமின்றி இருந்தன. மொழி மறுவடிவமைக்கப்பட்டிருந்தபோதிலும் நான்கு விடயங்கள்




அப்படியே இருந்தன.

- பொருளாதாரம் கட்டுப்படுத்தப்பட்டே இருந்தது.
- கல்வி ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்தன.
- தரமான வளங்களுக்கான அணுகல் சீரற்றதாக இருந்தது.
- சமூகப் படிநிலைகள் புதிய வடிவங்களில் மீண்டும் உருவாக்கப்பட்டன.

குறியீட்டு மாற்றத்திற்கும் கட்டமைப்புத் தொடர்ச்சிக்கும் இடையிலான இந்த முரண்பாடு, மொழியியல் சீர்திருத்தத்தின் வரம்புகளைப் புரிந்துகொள்வதற்கு மையமானது. சமத்துவமின்மையின் வெளிப்படையான வடிவங்களைக் கையாளும் கொள்கைகள், ஆழமான வடிவங்களை எவ்வாறு அப்படியே விட்டுவிடுகின்றன என்பதை இது வெளிப்படுத்துகிறது.

சிங்களம் மட்டும் கொள்கையின் பகுதியளவான வெற்றியானது புதிய முரண்பாடுகளையும் உருவாக்கியது. சிங்களம் பேசுபவர்களுக்கான அணுகல் விரிவடைந்தபோது, எதிர்பார்ப்புகள் உயர்ந்தன, மேலும் இந்த எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதில் அமைப்பின் இயலாமை தெளிவாகத் தெரிந்தது. அதே நேரத்தில், புதிய மொழி ஒழுங்கிற்குள் சிறுபான்மை சமூகங்கள் புறக்கணிப்பை அனுபவித்தன, இது இனங்களுக்கிடையேயான பதற்றங்களைத் தீவிரப்படுத்தியது. இவ்வாறு இந்தச் சீர்திருத்தம் சிலருக்கான உள்ளடக்கம் மற்றவர்களுக்கான புறக்கணிப்பு என்ற இரட்டை இயக்கவியலை உருவாக்கியது. இந்த இயக்கவியல் தொலைநோக்கு விளைவுகளைக் கொண்டிருந்தது, இது அடுத்தடுத்த பத்தாண்டுகளில் இலங்கையின் அரசியல் மற்றும் சமூக மோதல்களின் போக்கை வடிவமைத்தது.

மொழி சீர்திருத்தத்தின் வரம்புகள், மொழியைப் பிரச்சினையாகவும் தீர்வாகவும் கருதுவதில் அடங்கியுள்ளன. அது உண்மையான, ஆழமாக உணரப்பட்ட ஒருவகை சமத்துவமின்மையைக் கையாண்டபோதிலும், அந்த சமத்துவமின்மையைத் தக்கவைத்திருந்த பரந்த அதிகார மற்றும் உற்பத்தி கட்டமைப்புகளை மாற்றியமைக்காமல் அதைச் செய்தது. சிங்களம் மட்டும் கொள்கையானது அரசிற்கான அணுகலை மறுபகிர்வு செய்து, புதிய பங்களிப்பாளர்கள் அதன் நிறுவனங்களில் நுழைய வழிவகுத்தது. ஆயினும், அது வாய்ப்புகளை உருவாக்கும் அந்த நிறுவனங்களின் திறனை விரிவுபடுத்தவில்லை, சமத்துவமின்மையை உருவாக்கிய பொருளாதார நிலைமைகளையும் மாற்றவில்லை. அதன் விளைவாக, அது அமைப்பின் அடிப்படைத் தர்க்கத்தை மாற்றாமல், ஒருவகைச் சலுகையை மற்றொருவகைச் சலுகையால் மாற்றியது.

இந்த வகையில், இலங்கையின் மொழியியல் சீர்திருத்தம் என்பது உருமாற்றமில்லாத ஒரு சீர்திருத்தத்தின் எடுத்துக்காட்டாகும். அதாவது, அதிகாரத்தின் சின்னங்கள் மறுவடிவம் பெற்றபோதிலும், அதன் கட்டமைப்புகள் பெரும்பாலும் மாற்றமின்றி இருந்த ஒரு தருணம். இந்தக் குறைபாட்டைப் புரிந்து கொள்வது, காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசின் சாதனைகளையும் தோல்விகளையும், அதன் விளைவாக எழும் புதிய முரண்பாடுகளையும் புரிந்துகொள்வதற்கு இன்றியமையாததாகும்.

***“சிங்களம் பேசுபவர்களுக்கான அணுகல் விரிவடைந்தபோது, எதிர்பார்ப்புகள் உயர்ந்தன, மேலும் இந்த எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதில் அமைப்பின் இயலாமை தெளிவாகத் தெரிந்தது. அதே நேரத்தில், புதிய மொழி ஒழுங்கிற்குள் சிறுபான்மை சமூகங்கள் புறக்கணிப்பை அனுபவித்தன, இது இனங்களுக்கிடையேயான பதற்றங்களைத் தீவிரப்படுத்தியது. இவ்வாறு இந்தச் சீர்திருத்தம் சிலருக்கான உள்ளடக்கம் மற்றவர்களுக்கான புறக்கணிப்பு என்ற இரட்டை இயக்கவியலை உருவாக்கியது.”***

## சிறுபான்மையினரும் மறுபகிர்வின் விலையும்:

'சிங்களம் மட்டும்' கொள்கையானது பெரும்பான்மை சமூகத் திற்குள் மொழி மூலதனத்தின் மறுபகிர்வைக் குறித்தாலும், அது சிறுபான்மைக் குழுக்களுக்கு, குறிப்பாக இலங்கைத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் இன்னும் சிக்கலான வழி களில் முஸ்லிம் சமூகங்களுக்கு, சமமற்ற விலைகளையும் ஏற்படுத்தியது. பெரும்பான்மையினருக்கான அணுகலை ஜனநாயகப்படுத்துவதாக அரசியல் ரீதியாகக் கட்டமைக்கப் பட்ட ஒன்று, பல சிறுபான்மையினரால் உள்ளடக்கமாக அல் லாமல், ஆழமான இடப்பெயர்வு மற்றும் விலக்கலின் ஒரு வடி வமாகவே உணரப்பட்டது. ஆங்கிலத்திலிருந்து சிங்களத் திற்கு மாறியது மொழிப் படிநிலையை அகற்றவில்லை. அது அதை மறுவடிவமைத்தது, ஒரு சிறப்புரிமை அச்சிற்குப் பதிலாக மற்றொன்றைக் கொண்டுவந்ததுடன், வெவ்வேறு சமூகங்கள் அரசோடு ஈடுபடக்கூடிய நிபந்தனைகளையும் மாற்றியது.

காலனித்துவ ஆரம்பகால காலனித்துவத்திற்குப் பிந்தைய அமைப்பின் கீழ், ஆங்கிலம் - அதன் பிரத்தியேகத் தன்மை இருந்தபோதிலும் - பல்வேறு இனப் பின்னணியைச் சேர்ந்த தனிநபர்கள் நிர்வாகத்திலும் தொழில்முறை வாழ்விலும் பங் கேற்கக்கூடிய, சமமற்றதாக இருந்தாலும், ஒரு பகிரப்பட்ட ஊடகமாகச் செயற்பட்டது. குறிப்பாக ஆங்கிலக் கல்வியால் பயனடைந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் அதிகாரிகள், அரசுப் பணி, தொழிற்றுறைகள், அரசின் பிற செயற்பாட்டுத் துறைகளில் நுழைய முடிந்தது. தமிழ் சமூகத்திற்குள்ளேயே ஆங்கிலத்திற்கான அணுகல் சீரற்றதாக இருந்ததால், அவர் களின் நிலை அதன் சொந்த உள் ஏற்றத்தாழ்வுகள் இல்லா மல் இல்லை. ஆனால், இனஅடையாளத்தை விட மொழித் திறனே அணுகலைத் தீர்மானிக்கும் ஒரு கட்டமைப்பை அது வழங்கியது.

சிங்களத்தை ஒரே உத்தியோக மொழியாக ஏற்றுக்கொண்ட மாற்றம் இந்தக் கட்டமைப்பை அடிப்படையாக மாற்றியது. அது பெரும்பான்மையினரின் அடையாளத்துடன் நெருக்க மாக இணைந்த ஒரு மொழியியல் அளவுகோலை அறிமுகப் படுத்தியது. இதன் மூலம், பல்லினப் பங்கேற்புடன் கூடிய மொழியியல் பிரத்தியேகத் தளமாக இருந்த அரசை, மொழி யியல் பெரும்பான்மைவாதத் தளமாக மாற்றியது. சிறுபான்மை சமூகங்களுக்கு, இந்த மாற்றம் உடனடியான மற்றும் தொலை நோக்கு விளைவுகளை ஏற்படுத்தியது. 1950-களின் பிற்பகுதி யிலும் 1960-களின் முற்பகுதியிலும் தமிழ் அரசுப் பணியாளர் களின் அனுபவம், இந்த மாற்றம் நடைமுறையில் எவ்வாறு வெளிப்பட்டது என்பதற்கு ஒரு தெளிவான எடுத்துக்காட்டை வழங்குகிறது. இந்த அதிகாரிகளில் பலர் ஆங்கிலத்தில் பயிற்சிபெற்று பணியாற்றியிருந்தனர். காலனித்துவ அரசின் மொழியியல் கட்டமைப்பிற்குள் நிர்வாகம், சட்டம், கொள்கை ஆகியவற்றில் நிபுணத்துவத்தை வளர்த்துக்கொண்டனர். அவர்களின் தொழில்முறை அடையாளமும் திறமையும், அதி காரத்துவத் தொடர்ச்சியின் மொழியாகச் செயற்பட்டு வந்த ஆங்கிலத்தில் இயங்கும் திறனுடன் பிணைக்கப்பட்டிருந்தன.

'சிங்களம் மட்டும்' நடைமுறைப்படுத்தப்பட்டதால், இந்த அதி காரிகள் ஒரு புதிய மொழிமுறைக்குத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. நிர்வாக நடைமுறைகள், கடிதப் போக்குவரத்து மற்றும் உள்ளகத் தொடர்புகள் படிப்படியாக சிங்களத்திற்கு மாறின. மேலும் பதவி உயர்வுக்கு அம்மொழி யில் புலமை ஒரு முன்நிபந்தனையாக ஆனது. பல தமிழ் அதிகாரிகளுக்கு, இது ஒரு குறிப்பிடத்தக்க சவாலாக அமைந்தது. முறையான கல்வி மூலம் அவர்கள் கற்றறிந்த ஆங்கிலத்தைப் போலல்லாமல், சிங்களம் அவர்கள் பயிற்சி பெற்ற அல்லது பழகிய ஒரு மொழியாக இருக்கவில்லை.

அதன் விளைவுகள் உடனடியாக இருந்தன. பதவி உயர்வு கள், இடமாற்றங்கள் சிங்களப் புலமையைச் சார்ந்திருந்த தால், சிலர் தங்கள் தொழில் வாழ்க்கையில் தேக்கநிலையை அனுபவித்தனர். மற்றவர்கள், குறைந்த பொறுப்பு அல்லது செல்வாக்கு கொண்ட பதவிகளுக்கு மாற்றப்பட்டு, இடப் பெயர்வை எதிர்கொண்டனர். சில சமயங்களில், அதிகாரிகள் தாங்களாகவே முன்வந்து அல்லது நிர்ப்பந்திக்கப்பட்டு, பணியை விட்டு முழுவதுமாக வெளியேறினர். இது அதிகார வர்க்கத்திற்குள் நிறுவன அறிவையும் அனுபவத்தையும் இழக்க வழிவகுத்தது. இந்த நபர்களுக்கு, மொழி சீர்திருத்தம் என் பது ஜனநாயகமயமாக்கலைக் குறிக்கவில்லை, மாறாக மறு வரையறை மூலம் ஏற்படும் விலக்கலையே குறித்தது. ஒரு காலனித்துவ படிநிலைக்குள் இருந்தாலும், அவர்கள் பங் கேற்பாளர்களாக இருந்த ஓர் அமைப்பு, அவர்களின் மொழி அடையாளம் ஒரு தடையாக மாறும் ஒன்றாக உருமாற்றப் பட்டது.

ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு மாறியது அதிகார வர்க் கத்தின் அமைப்பை மட்டுமல்ல, அதன் அடிப்படை தர்க்கத் தையும் மாற்றியது. ஆங்கிலம், விலக்கும் தன்மையுடை யதாக இருந்தாலும், இன அடிப்படையில் ஒப்பீட்டளவில் நடு நிலையான மொழியாகச் செயற்பட்டது. இது வெவ்வேறு சமூ கங்களைச் சேர்ந்த தனிநபர்கள் ஒரு பொதுவான கட்டமைப் பிற்குள் போட்டியிட அனுமதித்தது. இதற்கு மாறாக, சிங்க ளம் பெரும்பான்மை சமூகத்துடன் நெருக்கமாகத் தொடர்பு டையதாக இருந்தது. இது அரசின் மொழிக்குள் இன அடை யாளத்தைப் பொதித்தது. இந்த உருமாற்றம் ஆழமான தாக் கங்களைக் கொண்டிருந்தது. இது உள்ளடக்குதலின் வரைய றைகளை மறுவரையறை செய்தது; பங்கேற்பானது கல்வி அல்லது திறமையை மட்டும் சார்ந்திருக்காமல், பெரும்பான் மையினரின் மொழி அடையாளத்துடன் ஒத்துப்போவதையும் சார்ந்திருக்குமாறு செய்தது. சிறுபான்மை சமூகங்களுக்கு, இது கட்டமைப்பு ரீதியாகவும் குறியீட்டு ரீதியாகவும் ஒரு புதிய பரிமாணத்திலான விலக்கலை அறிமுகப்படுத்தியது.

1950-களின் பிற்பகுதியில் சிங்களம் பேசும் நிர்வாக அமைப் புடன் தொடர்புகொள்ளும் ஒரு தமிழர், ஆங்கிலத்தின் கீழ் சிங்களம் பேசுபவர்கள் முன்பு அனுபவித்ததைப் போன்ற சிர மங்களை எதிர்கொள்ள நேரிட்டது. படிவங்கள், நடைமுறை கள், தகவல் தொடர்புகள் ஆகியன சிங்களத்தில் நடைபெற் றன, இதனால் மொழிபெயர்ப்பு அல்லது மத்தியஸ்தம் தேவைப்பட்டது. இருப்பினும், அந்த அனுபவம் தரத்தில் வேறுபட்டிருந்தது. ஆங்கிலத்தின் கீழ், விலக்கல் ஒரு கால னித்துவ மரபாகக் கட்டமைக்கப்பட்டு, சிங்களத்தின் கீழ், அது ஒரு சமூகத்திற்கு மற்றவர்களை விட முன்னுரிமை அளிக்கும் ஒரு பின்-காலனித்துவ மறுசீரமைப்பாக அனுபவிக்கப்பட்டது. அனைத்து குடிமக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்ட அரசு, ஒரே ஒரு பிரஜையின் மொழியில் மட்டுமே செயற்படுவது போல் தோன்றியதால், இந்த வேறு பாடு அநீதி உணர்வைத் தீவிரப்படுத்தியது.

மலையகத் தமிழர்களுக்கு, மொழி மறுபகிர்வின் விளைவுகள் இன்னும் கடுமையாக இருந்தன. குடியுரிமைச் சட்டங்கள், பொருளாதாரச் சுரண்டல் மற்றும் கல்விக்கான வரையறுக்கப் பட்ட அணுகல் ஆகியவற்றால் ஏற்கனவே ஓரங்கட்டப்பட்டி ருந்த அவர்கள், புதிய மொழி ஆட்சிமுறைக்குத் தங்களை மாற்றியமைத்துக் கொள்வதற்குப் பொருத்தமற்ற நிலையில் இருந்தனர். குறைந்தபட்ச கல்வியையும், தமிழ் தாய்மொழி யையும் கொண்டிருந்த தோட்டத் தொழிலாளர்கள், தற்போது சிங்களத்தில் அதிகளவில் இயங்கிவரும் ஓர் அரசை எதிர் கொண்டனர். சேவைகளைப் பெறுவதற்கும், உரிமைகளை நிலைநாட்டுவதற்கும், அல்லது நிர்வாகச் செயல்முறைகளில் ஈடுபடுவதற்கும் அவர்களின் திறன் மேலும் கட்டுப்படுத்தப் பட்டது. ஆங்கிலக் கல்விக்கான அணுகலைக் கொண்டிருந்த இலங்கைத் தமிழர்களைப் போலல்லாமல், மொழித் தழு வலுக்கான வரையறுக்கப்பட்ட வழிகளே அவர்களுக்கு இருந்தன.

மொழிச் சீர்திருத்தம் ஏற்கனவே இருந்த சமத்துவமின்மை களை மேலும் தீவிரப்படுத்தியதால், இதன் விளைவாக ஓரங் கட்டப்படுதல் ஆழமடைந்தது. இந்தச் சமூகத்தைப் பொறுத் தவரை, ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு மாறியது என்பது, புறக்கணிப்பு மொழியில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிக்க வில்லை, மாறாக அது தீவிரமடைந்ததையே குறித்தது. பிராந்தியத்தைப் பொறுத்து பெரும்பாலும் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் பேசும் முஸ்லிம் சமூகங்கள், மிகவும் சிக்கலான ஒரு நிலையில் இருந்தன. அவர்களில் சிலர், குறிப்பாக சிங்களம் பெரும்பான்மையாக உள்ள பகுதி களில், புதிய மொழிச் சூழலுக்குத் தங்களைத் தகவமைத்துக் கொள்ள முடிந்தாலும், மற்றவர்கள் தமிழ் சமூகங்களைப் போன்ற சவால்களையே எதிர்கொண்டனர். சில சூழல்களில், முஸ்லிம் தனிநபர்கள் நிர்வாக மற்றும் வணிக நோக்கங்க ளுக்காக சிங்களத்தை ஏற்றுக்கொண்டு, புதிய அமைப்பை நடைமுறைக்கு ஏற்றவாறு கையாண்டனர். இருப்பினும், இந் தத் தழுவல் சீரற்றதாக இருந்து, பெரும்பாலும் குறிப்பிடத் தக்க சரிசெய்தல் தேவைப்பட்டது. இந்த மாற்றம், மொழியி னதும் கலாசார அடையாளத்தினதும் சமநிலையையும் மாற்றி யமைத்து, சொந்தம், பிரதிநிதித்துவம் குறித்த கேள்விகளை எழுப்பியது.

இந்த அனுபவங்களிலிருந்து வெளிப்படும் பரந்தபோக்கு, அனைவரையும் உள்ளடக்காமல் செய்யப்படும் ஒரு மறு பகிர்வு ஆகும். 'சிங்களம் மட்டும்' கொள்கை பெரும்பான்மை யினருக்கான அணுகலை விரிவுபடுத்தியது. ஆனால் சிறு பான்மையினரின் பங்கேற்புக்கான வெளியைக் குறைக்கும் விதத்தில் அதைச் செய்தது. மறுபகிர்வின் தர்க்கம் என்பது அனைவருக்கும் வாய்ப்புகளை விரிவுபடுத்துவதாக இருக்க வில்லை, மாறாக ஏற்கனவே உள்ள வாய்ப்புகளை மொழி அடிப்படையில் மறுபங்கீடு செய்வதாக இருந்தது. அரசியற் பொருளாதாரக் கண்ணோட்டத்தில், இது ஒரு நிலையான வளக் கட்டமைப்பிற்குள் செயல்படும் சீர்திருத்தங்களின் வரம்புகளைப் பிரதிபலிக்கிறது. வாய்ப்புகள் குறைவாக இருக்கும்போது, மறுபகிர்வு என்பது பெரும்பாலும் விரிவாக் கமாக இல்லாமல், குழுக்களுக்கு இடையேயான மறுபங்கீட்டு வடிவத்தை எடுக்கிறது. இத்தகைய சூழல்களில், ஒரு குழு விற்கான ஆதாயங்கள் மற்றொரு குழுவிற்கான இழப்புக ளுக்கு வழிவகுக்கும். இது போட்டியையும் மோதலையும் தீவி ரப்படுத்துகிறது.

சிறுபான்மையினர் அனுபவித்த புறக்கணிப்பு தனிநபர் அல் லது நிறுவன மட்டங்களுக்குள் மட்டும் அடங்கிவிடவில்லை. அது புதிய அரசியல் குறைகளுக்கான அடிப்படையாக மாறியது. குறிப்பாக, தமிழ் சமூகங்களைப் பொறுத்தவரை, 'சிங்களம் மட்டும்' என்ற முறைக்கு மாறியது அரசுடனான அவர்களின் உறவில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.



காலனித்துவத்தின் கீழ் கட்டமைப்பு ரீதியான சமத்துவமின் மையாக உணரப்பட்டது, இப்போது காலனித்துவத்திற்குப் பிந்தைய ஆட்சியின் கீழ் பெரும்பான்மையினரின் ஆதிக்க மாக உணரப்பட்டது. மொழி என்பது புறக்கணிப்பின் சின்ன மாக மட்டுமல்லாமல், இன அடிப்படையில் அதிகாரத்தை மறுவடிவமைப்பதன் சின்னமாகவும் மாறியது. இந்த கண் ணோட்டம், அதைத் தொடர்ந்த பத்தாண்டுகளில் தமிழ் அரசி யல் அணிதிரட்டலின் தோற்றத்தில் ஒரு மையப் பங்கை வகித் தது. மலையகத் தமிழர்களுக்கு, அது ஏற்கனவே இருந்த புறக்கணிப்பு வடிவங்களை ஆழப்படுத்தியது. முஸ் லிம் சமூ கங்களுக்கு, அது தகவமைப்பு, அடையாளம் தொடர் பான புதிய சவால்களை அறிமுகப்படுத்தியது.

இந்த வகையில், 'சிங்களம் மட்டும்' கொள்கையானது, கால னித்துவத்திற்குப் பிந்தைய சீர்திருத்தத்திற்குள் இருக் கும் ஒரு அடிப்படை முரண்பாட்டை வெளிப்படுத்துகிறது. அனை வரையும் உள்ளடக்கிய கட்டமைப்புகள் இல்லாத நிலையில், ஒரு குழுவினருக்கான அணுகலை ஜனநாயகப்படுத்தும் முயற் சியானது, மற்றவர்களுக்குப் புறக்கணிப்பை உருவாக்கக் கூடும். இந்த முரண்பாட்டைப் புரிந்துகொள்வது, இலங்கை யின் அரசியல் வளர்ச்சியின் பரந்த பாதையைப் புரிந்து கொள்வதற்கு இன்றியமையாதது. அங்கு மொழி மூலதனத் தின் மறுபகிர்வு, அடையாளம், சொந்தம், மோதல் ஆகிய வற்றின் அரசியலுடன் பின்னிப் பிணைந்தது.

## தொடரும் குறிப்புகள்:

இந்தக் கட்டுரை, காலனித்துவ, காலனித்துவத்திற்குப் பிந் தைய ஆரம்பகால இலங்கையில் மொழி சமத்துவமின்மை யின் வரலாற்று உருவாக்கத்தின் வரைபடத்தை வழங்கியுள் ளது. ஆங்கிலம் பேசும் மேட்டுக்குடியினர் வெறுமனே ஒரு சமூகப் பிரிவாக மட்டுமல்லாமல், காலனித்துவ அரசியல் பொருளாதாரத்தின் ஒரு கட்டமைப்பு ரீதியான விளைபொரு ளாகவும் இருந்தனர் என்பதை இது நிரூபிக்கிறது. கல்வியின் நிறுவன வடிவமைப்பு, தொழிலாளர் சந்தையின் அமைப்பு, அரசின் மொழித் தேவைகள் ஆகியவற்றின் மூலம், ஆங்கி லம் ஒரு மூலதன வடிவமாக மாற்றப்பட்டது. அது குவிக்கப்ப டவும், கடத்தப்படவும், மற்றும் அதிகாரமாக மாற்றப்படவும் கூடிய ஒன்றாக இருந்தது. இதன் விளைவாக, வாய்ப்புகளுக் கான அணுகல் வர்க்கம் மற்றும் புவியியல் ஆகியவற்றால் மட்டுமல்லாமல், மொழியாலேயே தீர்மானிக்கப்பட்ட ஒரு சமூ கம் உருவானது.

இந்த மேட்டுக்குடியினரின் தோற்றம் தற்செயலானதோ தவிர்க்க முடியாததோ அல்ல. அது, ஆங்கிலத்தைக் கொண்டிருப்ப வர்களுக்கு வெகுமதி அளிக்கும் அதே வேளையில், ஆங்கி லத்திற்கான அணுகலை வேண்டுமென்றே கட்டுப்படுத்திய ஓர் அமைப்பின் விளைவாகும். சமயப் பரப்புரைக் கல்வி, நகர்ப்புறப் பாடசாலைக் கல்வி, அரசின் ஆட்சேர்ப்பு நடை முறைகள் ஆகியவை இணைந்து, காலனித்துவ நிர்வாகத் திற்கும் பரந்த மக்களுக்கும் இடையில் ஒரு மத்தியஸ்தராகச் செயற்பட்ட, குறுகிய ஆனால் செல்வாக்கு மிக்க ஒரு வர்க் கத்தை உருவாக்கின. இந்த வர்க்கம், இன ரீதியாகப் பன்மு கத்தன்மை கொண்டிருந்தாலும், தங்களை ஒன்றிணைத்து, தாய்மொழி பேசும் பெரும்பான்மையினரிடமிருந்து வேறுபடுத் திக் காட்டும் ஒரு பொதுவான மொழி அடித்தளத்தைப் பகிர்ந்து கொண்டது.

ஆயினும், சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்திலும் இந்தக் கட்டமைப்பு நீடித்தமையானது ஓர் ஆழமான முரண்பாட்டை உருவாக்கியது. அரசியல் இறையாண்மை அடையப்பட்டிருந் தாலும் மொழி, கல்வி ஆகியன இறையாண்மை அடையப்பட வில்லை. அதன் குடிமக்களில் பெரும்பான்மையானோர் சிங் களம் அல்லது தமிழில் கல்வி கற்றிருந்த போதிலும், அரசு முதன்மையாக ஆங்கிலத்தில் செயற்படக்கூடியவர்களுக்கே அணுகக்கூடியதாக இருந்தது. அரசியல் உள்ளடக்கத்திற் கும் நிறுவன ரீதியான விலக்கத்திற்கும் இடையிலான இந்த முரண்பாடு, குறிப்பாக சிங்கள கிராமப்புற நடுத்தரவர்க்கத்தி னரிடையே, பெருகிவரும் அநீதி உணர்வை உருவாக்கியது. அவர்கள் கல்வி கற்றிருந்தும் ஓரங்கட்டப்பட்டவர்களாகவும், திறமையானவர்களாக இருந்தும் அங்கீகரிக்கப்படாதவர்களா கவும் தங்களைக் கண்டனர்.

இந்த நிலையிலிருந்து எழுந்த மனக்கசப்பு கருத்தியல் ரீதி யானதாகவோ சித்தாந்த ரீதியானதாகவோ இருக்கவில்லை. அது வாழ்ந்த அனுபவத்தில் வேருன்றியிருந்தது. முன்னேற முடியாத கிராம ஆசிரியரின் விரக்தியிலும், புரிந்துகொள்ள முடியாத அதிகாரத்துவத்தில் தவிக்கும் விவசாயியின் அவ மானத்திலும், கல்விவாய்ப்பாக மாறாத மாணவரின் ஏமாற்றத் திலும் அது உணரப்பட்டது. இந்த அனுபவங்கள் ஒன்று சேர்ந்து, புறக்கணிப்பு குறித்த ஒரு கூட்டுவிழிப்புணர்வை உருவாக்கின அது, சமத்துவமின்மையின் மைய அச்சாக மொழியைப் பெருகிய முறையில் அடையாளம் காணும் ஓர் அரசியல் உணர்வை வடிவமைத்தது.

இருப்பினும், இந்தக் கட்டுரை காட்டுவதுபோல, இந்த மனக்க சப்பு மொழி தேசியவாதமாக உருமாறியது. ஒரு முக்கியமான மாற்றத்தை உள்ளடக்கியிருந்தது. சமத்துவமின்மையின் கட்ட மைப்பு ரீதியான வேர்களான - கல்விக்கான சமமற்ற அணு கல், வரையறுக்கப்பட்ட பொருளாதார வாய்ப்புகள் மற்றும் வளங்களின் குவிப்பு - ஆகியவை மொழி சார்ந்த ஒரு பிரச் சினையாக மட்டுமே மறுவரையறை செய்யப்பட்டன. சலுகை யின் மிகவும் வெளிப்படையான அடையாளமாக ஆங்கிலம் இருந்ததால், அது விமர்சனத்தின் முதன்மை இலக்காக மாறி யது, அதே நேரத்தில் சமத்துவமின்மையைத் தக்கவைத்த ஆழமான வழிமுறைகள் குறைவாகவே புலப்பட்டன மற்றும் குறைவாகவே எதிர்க்கப்பட்டன.

எனவே, 1956-ஆம் ஆண்டின் சிங்களம் மட்டும் சட்டம், அநீதிக்கு ஒரு பதிலாகவும், அதன் மறுவடிவமைப்பாகவும் புரிந்துகொள்ளப்படவேண்டும். ஒரு மட்டத்தில், அது கால னித்துவ கடந்தகாலத்திலிருந்து ஒரு குறிப்பிடத்தக்க முறி வைக் குறித்தது. ஆங்கிலத்தின் ஆதிக்கத்திற்கு சவால் விடுத்து, முன்னர் விலக்கப்பட்டிருந்த சிங்கள மொழி பேசு பவர்களுக்கு அரச நிறுவனங்களில் அணுகலைத் திறந்தது. அது ஆளுகையின் மொழியைப் பெரும்பான்மையினரின் மொழியுடன் சீரமைத்து, நீண்ட காலமாக மறுக்கப்பட்டிருந்த அங்கீகாரத்திற்கும் உள்ளடக்கத்திற்குமான கோரிக்கையை நிறைவேற்றியது. ஆயினும், இந்த உருமாற்றம் இயல்பாகவே ஒருதலைப்பட்சமானது. சீர்திருத்தத்தின் முதன்மைக் களமாக மொழியில் கவனம் செலுத்துவதன் மூலம், அது சமத்துவமின் மையின் கட்டமைப்பு அடித்தளங்களை அகற்றாமல் அதன் அறிகுறிகளை மட்டுமே கையாண்டது. பொருளாதாரம் கட்டுப் படுத்தப்பட்டே இருந்தது. கல்விவளங்களின் விநியோகம்

> ***சமூக வாழ்வின் மிகவும் வெளிப்படையான, குறியீட்டு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கூறாக மொழி, அரசியல் நடவடிக்கைகளுக்கு ஒரு சக்தி வாய்ந்த மையப் புள்ளியாக விளங்கியது. ஆயினும், அதன் இந்த வெளிப்படையான தன்மையே, பொருளாதார அமைப்பு, வளப் பங்கீடு, நிறுவன வடிவமைப்பு ஆகியவற்றில் புதைந்துள்ள ஆழமான சமத்துவமின்மை வடிவங்கள் பகுதியளவு மறைக் கப்படவும் வழிவகுத்தது.***



சீரற்றதாக இருந்தது. மேலும் படித்த உழைப்பை உள் வாங்கும் அரசின் திறனும் குறைவாகவே இருந்தது. இதன் விளைவாக, சிலருக்கான அணுகல் விரிவாக்கம் என்பது அனைவருக்கும் சமூக நகர்வாக மாறவில்லை, மாறாக சிங் கள மொழி பேசும் மக்களிடையே புதிய படிநிலைகள் உருவா வதற்கே வழிவகுத்தது.

அதே நேரத்தில், ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு மாறி யது புறக்கணிப்பின் வரையறைகளை மறுவரையறை செய் தது. பல்லினப் பங்கேற்புடன் கூடிய மொழிச் சிறப்புரிமை அமைப்பாக இருந்த ஒன்று, மொழிப்பெரும்பான்மைவாத அமைப்பாக மாறியது. இதில், அணுகல் என்பது ஆதிக்க சமூகத்தின் மொழியுடன் மேலும் மேலும் சீரமைக்கப்பட்டது. சிறுபான்மைக் குழுக்களுக்கு, குறிப்பாக இலங்கைத் தமிழர் களுக்கு, இது புறக்கணிப்பின் தொடர்ச்சியாக இல்லாமல், அதன் அடிப்படையின் உருமாற்றத்தைக் குறித்தது. காலனித் துவப் படிநிலையிலிருந்து காலனித்துவத்திற்குப் பிந்தைய ஓரங்கட்டப்படுதலுக்கு மாறியது.

இந்த வகையில், சிங்களம் மட்டும் சட்டம் மொழி சமத்துவ மின்மையை ஒழிக்கவில்லை. மாறாக, அதை மறுசீரமைத்தது. அது ஒருவகை மொழி மூலதனத்திற்குப் பதிலாக வேறொன்றை நிறுவி, காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசின் மக்கள் தொகையையும் அரசியல் யதார்த்தங்களையும் பிரதிபலிக் கும் ஒரு புதிய அதிகார அமைப்பை உருவாக்கியது. ஆங்கி லம் பேசும் மேட்டுக்குடியினர் கலைக்கப்படவில்லை, மாறாக இடம்பெயர்க்கப்பட்டனர். அவர்களுக்குப் பதிலாக, அதே நிறுவனக் கட்டமைப்புகளில் பலவற்றிற்குள் இயங்கும் ஒரு சிங்களம் பேசும் அதிகாரத்துவ வர்க்கம் உருவானது.

இந்த விளைவு, காலனித்துவத்திற்குப் பிந்தைய மாற்றங் களில் ஒரு பரந்தபோக்கைக் காட்டுகிறது. வெளிப்படையான ஆதிக்க வடிவங்களுக்கு சவால் விடும் சீர்திருத்தங்கள், அவற்றின் அடிப்படைக் கட்டமைப்புகளை அப்படியே விட்டு விடும் போக்கைக் காட்டுகிறது. சமூக வாழ்வின் மிகவும் வெளிப்படையான, குறியீட்டு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கூறாக மொழி, அரசியல் நடவடிக்கைகளுக்கு ஒரு சக்தி வாய்ந்த மையப் புள்ளியாக விளங்கியது. ஆயினும், அதன் இந்த வெளிப்படையான தன்மையே, பொருளாதார அமைப்பு, வளப் பங்கீடு, நிறுவன வடிவமைப்பு ஆகியவற்றில் புதைந் துள்ள ஆழமான சமத்துவமின்மை வடிவங்கள் பகுதியளவு மறைக்கப்படவும் வழிவகுத்தது.

ஆகவே, 1956-ஆம் ஆண்டுக்கான பாதை என்பது விடுதலை அல்லது வீழ்ச்சியின் ஓர் எளிய கதையாக இருக்கவில்லை. இது ஒரு சிக்கலான செயல்முறையாகும். இதில் உண்மை யான குறைகள் வெளிப்படுத்தப்பட்டு, அணிதிரட்டப்பட்டு, ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டபோதிலும், அவை புதிய முரண் பாடுகளை உருவாக்கும் விதங்களில் அமைந்தன. பெரும் பான்மையினருக்கான அணுகல் ஜனநாயகப்படுத்தப்பட்ட அதே வேளையில், சிறுபான்மையினர் ஓரங்கட்டப்பட்டனர். காலனித்துவப் படிநிலை நிராகரிக்கப்பட்ட அதே வேளை யில், சமத்துவமின்மை புதிய வடிவங்களில் மீண்டும் உரு வாக்கப்பட்டது. இந்த இருமையைப் புரிந்துகொள்வது, இலங் கையின் காலனித்துவத்திற்குப் பிந்தைய வரலாற்றின் போக் கைப் புரிந்துகொள்வதற்கு இன்றியமையாதது. சிங்களம் மட்டும் சட்டம் ஒரு முடிவுப் புள்ளி அல்ல, மாறாக அது ஒரு முக்கியமான திருப்பு முனையாகும். அரசின் மொழி உரு மாற்றம் பெற்ற ஒரு தருணம், ஆனால் நீதி, சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்குதல் குறித்த ஆழமான கேள்வி கள் தீர்க்கப்படாமல் இருந்தன.



meenilankco@thaiveedu.com



# பேராசிரியர் ஜேசன் ஆர்டேய்

## அவர்களின் துயரம் தரும் கதை

**ந. சுசீந்திரன்**

**‘இடம்பெயர்ந்த மனிதர்களின் முன்னே**
**இருக்கும் படிகள் யாவும் நேர் செங்குத்தானவை’**

*- தாந்தே*

பேராசிரியர் ஜேசன் ஆர்டேய் (Jason Arday) அவர்களின் வாழ்க்கை, மிகக் கடுமையான தடைகளையும் சவால்களையும் தாண்டிச் சாதனை படைத்த ஒரு கறுப்பின அறிஞரின் உத்வேகக் கதையாகவே தொடங்கியது. ஆனால், இன்றைய சமூக ஊடகங்களின் இரக்கமற்ற விசாரணைகளும், மனிதாபிமானம் இழந்த அறிவுஜீவித்துவச் சூழலும் எவ்வாறு ஒரு மனிதரின் வாழ்வை முடிவுக்குக் கொண்டுவருகின்றன என்பதற்கு அவரது துயர மரணம் சாட்சியமாகியுள்ளது. உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய இச்சம்பவம், நவீன அறிவார்ந்த சமூகத்தின் மீதான ஒரு கடுமையான எச்சரிக்கை மணியாக ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

ஒரு வெள்ளையின மனிதரை மேற்சொன்ன உலகு இத்துணை மூர்க்கமாக அணுகிச் சோக முடிவிற்குத் தள்ளியிருக்காது என்பது இன்று பலரின் வாதமாக இருக்கின்றது. அது சரியாகத்தான் இருக்கிறது என்றே சொல்லத் தோன்றுகின்றது. நடைமுறையில் வெட்கமும் பொறுப்புமற்ற கோமாளி மனிதர்களிடம் பதவிகளும் பலவகைப்பட்ட அதிகாரங்களும் போய்ச்சேரும் சூட்சுமம் என்னவாக இருக்கும்? பதின்நான்கு வயதுச் சிறுவன் ஜோர்ஜ் ஸ்டினி 1944-இல் ஐக்கிய அமெரிக்காவில் அநியாயமாகத் தூக்கிலிடப்பட்ட காலங்கள், மீளவும் மெய்நிகர்த்த காலங்களாகத் திரும்பிவிட்டதா? எப்ஸ்ரைன் பட்டியல் மனிதர்கள் அநேகம்பேர் தம்மை மாய்த்துவிட்டார்களா என்ன?

இன்று நவீன சமூகங்களில் சிறுபான்மை மனிதர்கள் மன உறுதியற்றுப் போவதும், பொது விமர்சனங்களைச் சகித்துக்கொள்ள முடியாமலும், சுமக்க முடியாமலும் தம்மை மாய்த்துக்கொள்வதன் பின்னணியைத் தனிமனிதப் பலவீனங்கள் என்று கடந்து மட்டும் போக முடியாது. அதற்கு நிறவாதம், இனவாதம், பெரும்பான்மை மனோநிலை போன்றவை எவ்வாறு செயற்படுகின்றன என்பது, முடிவுகட்ட வேண்டிய தேவையின் நிமித்தம் ஆராயப்பட வேண்டும்.

பேராசிரியர் ஜேசன் ஆர்டேய் அவர்கள் 1985-ஆம் ஆண்டு லண்டனில், கானா நாட்டைச் சேர்ந்த பெற்றோருக்கு மகனாகப் பிறந்தார். அவரது மூன்றாவது வயதில், ஜேசனுக்கு மாற்றுத் திறன் ஒன்று (Autism) இருப்பது கண்டுபிடிக்கப் பட்டதாகவும், பல ஆண்டுகளாக அவரால் பேச முடியவில்லை என்றும், அவர் தனது பதினோராவது வயதில்தான் பேசத் தொடங்கினார். 18 வயதில்தான் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டார் என்றும் சொல்லப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளில் ஆபிரிக்க, ஆசிய மனிதர்கள் வந்து சிக்கிக் கொள்ளும்போது, இங்கு சாதாரணமாகப் பிறந்த முற்றிலும் ஆரோக்கியமான குழந்தைகளின் உடலமைப்பிற்கூடக் குறையிருப்பதாகத் தவறாக அனுமானித்த மருத்துவர்களையும், வளரிளம் பருவத்துக் குழந்தைகள் பற்றி அவர்கள் வளரும் சூழல் பற்றிய முன்னறிவோ சுயசிந்தனையோ அற்று, அவர்களிடம் குறைபாடுகளைத் தவறாகக் கணித்த பாடப்புத்தக சமூகசேவைப் பணியாளர்கள், புத்தகப் படிப்பு உளவியலாளர்கள் பலரை என் தொழிலின் பொருட்டுப் பலதடவை அனுபவத்திற் கண்டிருக்கின்றேன். ஒருவகை

prasadbatti@gmail.com

ஐரோப்பிய (வெள்ளை) மையவாதச் சிந்தனை அவர்களையறியாமலேயே அவர்களிடம் இருப்பதனையும் காணலாம். இவ்வகை வன்முறைகளின் பாதிப்பு இன்னும் நிகழ்ந்துகொண்டுதானிருக்கின்றது.

பேராசிரியர் ஜேசன் ஆர்டேய் அவர்கள், கண்டங்கள் மாறி, கலாசாரங்கள் மாறி, காலனி ஆதிக்கத்திற்கு உட்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மனிதர்கள் எதிர்கொள்ளும் பலவாறான சவால்களை எதிர்கொண்டு, தன் மிகக் கடின உழைப்பின் மூலம் 2015-ஆம் ஆண்டு லிவர்பூல் ஜான் மூர்ஸ் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றிருக்கின்றார். பல பல்கலைக் கழகங்களில் பணிபுரிந்த பின்னர், ஈற்றில் 2023-ஆம் ஆண்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சமூகவியல் பேராசிரியராக நியமனம் பெற்றார். கேம்பிரிட்ஜின் 800 வருட (காலனியக் காலத்தை உள்ளடக்கிய) வரலாற்றில், முப்பத்தேழு வயது டைய மிக இளம் கறுப்பினப் பேராசிரியர் என்று விதந்தோதப்பட்டார்.

> **“எம்மைப்போல ஓர் இடம்பெயர்ந்த ஆபிரிக்கக் குடும்பம் சந்திக்கும் எல்லா வகைத் தடைகளுக்கும் அப்பால் சாதனைகள் நிகழ்த்தும் எம் பிள்ளைகள் போன்ற இரண்டாம் தலைமுறைப் பிள்ளை ஒன்றினை அநியாயமாக இழந்து விட்டோமே”**

இன யதார்த்தவாதி (race realist) என்று தன்னை அழைத்துக் கொள்ளும் ஒரு அமெரிக்க ஆய்வாளர், பேராசிரியர் ஜேசன் ஆர்டேயின் பழைய முனைவர் பட்ட ஆய்வேட்டை மென்பொருள் மூலம் சோதித்ததாகவும், அதில் பல பகுதிகள் வேறு ஒரு மாணவரின் ஆய்வேட்டில் இருந்து நகலெடுக்கப்பட்டதாகவும், பேராசிரியர் ஜேசன் ஆர்டேய் மீது அறிவுத் திருட்டுக் குற்றச்சாட்டினை (plagiarism) சுமத்தினார். ஆனால், லிவர்பூல் ஜான் மூர்ஸ் பல்கலைக்கழகம் இது குறித்து 2025-இல் விசாரணை நடத்தியது. ஆர்டேய் அவர்கள் அறிவுத் திருட்டில் ஈடுபட்டதாக அப்பல்கலைக்கழகத்தினர் கண்டறியவில்லை; ‘நேர்மையான பிழை’ (honest error) என்று கூறியதுடன், அப்பல்கலைக்கழகம் ஒதுங்கிக் கொண்டது. இருப்பினும், அவரது புலமைத்துவ வரலாற்றுப் பட்டியலில் இருந்து மேலும் மேலும் முரண்பாடுகள் கொணரப்பட்டன. உதாரணமாக, சில பல்கலைக்கழகங்களில் தான் ‘வருகைதரு பேராசிரியர்’ (visiting professor) ஆக இருந்ததாக அவர் கூறியுள்ளார். ஆனால், அது உண்மையல்ல என்று அவை மறுத்துவிட்டன.

இவ்வருடம் (2026) ஜூலையிலிருந்து ஐக்கிய இராச்சிய (UK) பத்திரிகைகள் ‘அறிவுத்திருட்டு’, ‘பொய் கூறியது’ போன்ற குற்றச்சாட்டுகளைப் பற்றிப் பெருமளவில் வெளியிடத் தொடங்கின. 22 நாட்களில் மட்டும் 249-க்கும் மேற்பட்ட கட்டுரைகள் அவரைப் பற்றித் தூற்றியவாறு வெளியிடப்பட்டன. இந்த மிகப்பெரிய அளவிலான வெளிப்புற அழுத்தம் காரணமாகப் பேராசிரியர் ஜேசன் ஆர்டேய் அவர்கள், ஓகஸ்ட் 5, 2026 அன்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இருந்து பதவி விலகினார். இருப்பினும், தொடர்ந்து வந்த தாக்குதல்கள் சகிக்க முடியாதபடி மிகக் கொடுமையானவை என்றும், தன் குடும்பத்தின் நலனுக்காக இந்தக் கல்வியியல் அத்தியாயத்தை முடித்துக் கொள்வதாகவும் அவர் கூறியிருக்கின்றார்.

ஓகஸ்ட் 14, 2026 அன்று, தனது 41-ஆவது வயதில், பேராசிரியர் ஜேசன் ஆர்டேய் அவர்கள் தெற்கு லண்டனில் உள்ள தனது வீட்டில் இறந்து கிடந்தார். பொலீசார் அவரது இறப்பு எதிர்பாராதது என்றும், ஆனால் சந்தேகத்திற்கிடமானதல்ல (not suspicious) என்றும் கூறினர். அவரது குடும்பத்தினரும் பல ஆதரவாளர்களும், அவரைத் துன்புறுத்திய ஒரு பிரச்சாரமே (campaign of harassment) அவரைத் தற்கொலைக்குத் தள்ளியது என்று உறுதியாகவே நம்புகிறார்கள்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் வேந்தர் (Chancellor) மற்றும் பிரித்தானிய தொழிற் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் உட்படப் பலர், பேராசிரியர் ஆர்டேய் மீது ‘இன வெறி வேட்டை’ (racist feeding frenzy) நடத்தப்பட்டிருக்கின்றது என்று வெளிப்படையாகவும் கடுமையாகவும் விமர்சித்தனர். ஒரு வெள்ளைப் பேராசிரியர் மீது இவ்வாறு நடத்தியிருக்க முடியாது என்றும், கறுப்பின மனிதர் ஒருவரின் வெற்றிக் கதை என்பதற்காகவே அவர் வேட்டையாடப்பட்டார் என்றும் அவர்கள் வாதிடுகிறார்கள்.

கேம்பிரிட்ஜ் போன்ற பல்கலைக்கழகங்கள், தங்களது (இல்லாத?) பன்முகத்தன்மைக்காக அவரை ஒரு ‘அடையாளச் சின்னமாக’ (poster child) பயன்படுத்திக் கொள்ளவே மிக வேகமாக உயர்த்தியதில் தவறு செய்தனர் என்றும், மிக உயரத்தில் இருந்ததால், விழும் தூரமும் மிகப் பெரியதாக இருந்தது என்றும் ஒரு சாரார் வாதிடுகின்றனர். அதேவேளை, இது ஒரு உடைந்த அமைப்பின் கதை என்றும், ஆனால் அந்த அமைப்பு, கூடுதல் அரவணைப்பும் ஆதரவும் தேவைப் பட்ட ஒருவரைப் பாதுகாக்கத் தவறிவிட்டது என்றும் கூறுகின்றனர்.

மறைந்த பேராசிரியர் ஆர்டேயின் குடும்பத்தினரின் வேதனையும், ‘எம்மைப்போல ஓர் இடம்பெயர்ந்த ஆபிரிக்கக் குடும்பம் சந்திக்கும் எல்லாவகைத் தடைகளுக்கும் அப்பால் சாதனைகள் நிகழ்த்தும் எம் பிள்ளைகள் போன்ற இரண்டாம் தலைமுறைப் பிள்ளை ஒன்றினை அநியாயமாக இழந்து விட்டோமே’ என்ற அவர்களின் அழுகையும், நம்மை ஒரு முக்கியமான கேள்வியை எதிர்கொள்ள வைக்கின்றன. இனி வரும் காலங்களில், கல்வி, ஊடக, அரசியல் அமைப்புகள் தாம் வகிக்கும் பொறுப்புகளை உணர்ந்து, விளிம்புநிலை மனிதர்களின் பாதுகாப்பிற்கும் நீதிக்கும் உறுதியாக நிற்குமானால், இத்தகைய சோகங்கள் மீள நிகழாமல் தடுக்கப்படலாம். இல்லையெனில், இந்தச் சம்பவம் ஒரு தனிமனிதனின் முடிவாக மட்டுமின்றி, அமைப்புகளின் கூட்டுத் தோல்விக்கான அடையாளமாகவும், எதிர்காலத்தில் ‘யாரோடு நோவதாம்; எதைத்தான் செய்வதாம்!’ என்ற கேள்வியே நம் அனைவருக்கும் நிலைத்த விடையாகவும் மாறிவிடும். அந்த விடை நமக்கு வேண்டாம்.



suseendran.n@thaiveedu.com

# மனித கண்களுக்குப் புலப்படாத அதி நவீன ட்ரோன்கள்...

சுப்ரமணியம் ஜெயசீலன்



மனித கண்களுக்குப் புலப்படாத புதிய வகை ட்ரோன் களை அறிமுகம் செய்யும் முயற்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நோர்த் வெஸ்டர்ன் பல்கலைக்கழக பொறியியலாளர்களினால் இந்தப் புதிய கண்டுபிடிப்பு முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானிகள் அறிமுகம் செய்துள்ள இந்தப் புதிய வகை ட்ரோன்கள் மனித கண்களுக்கு புலப்படாத வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் மூலம் கண்களுக்குப் புலப்படாத ட்ரோன்கள் மற்றும் ரோபோக்கள் உருவாக்கும் முயற்சியில் ஓர் முக்கிய திருப்புமுனை பதிவாகியுள்ளது.

உருவை மறைக்கக் கூடிய, ஒளி புகச்செய்யும் பொருட்கள் அல்லது ஒளியை ஊடுருவக்கூடிய பதார்த்தங்களைக் கொண்டு கண்ணுக்குத் தெரியாத ட்ரோன்கள் மற்றும் ரோபோக்களை வடிவமைக்கும் முயற்சியில் ஆய்வாளர்கள் தீவிர முனைப்புக் காட்டி வருகின்றனர். எனினும் இந்த முயற்சிகள் இன்னமும் முழுமையான வெற்றியை அளிக்க வில்லை.

எனினும் நோர்த் வெஸ்டர்ன் பல்கலைக்கழக ஆய்வாளர்களினால், இந்த ஒளி உட்புகும் அல்லது மறைப்புப் பொருட்களுக்கு பதிலாக மிக வேகமாகச் சுழலக் கூடிய சுழலிகளைப் பயன்படுத்தி மோஷன் ப்ளேர் (motion blur) என்ற எண்ணக் கருவின் அடிப்படையில் புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மனிதப் பார்வையின் விசித்திரமான தன்மைகளைப் பயன்படுத்தி, நோர்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழகப் பொறியாளர்கள், கண்களுக்கு எதிரிலேயே கிட்டத்தட்ட மறைந்து விடும் ஒரு ட்ரோனை வடிவமைத்துள்ளனர்.

'ஃபேன்டம் ட்விஸ்ட்' (Phantom Twist) எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த ட்ரோன் வகையானது, ஒரு வினாடிக்கு 25 தடவை வரையில் சுற்றிச் சுழல்கிறது. இது மனிதக் கண்ணால் தெளிவாகப் பார்க்க முடியாத அளவுக்கு மிக வேகமானது. இது முற்றிலும் கண்ணுக்குத் தெரியாததாக இல்லாவிட்டாலும், பின்னணியுடன் தடையின்றிக் கலந்து விடும் ஒரு மங்கலான உருவமாக அல்லது உருமாற்றமாகவே கண்களுக்குப் புலப்படுகின்றது.

இந்த ஆய்வு முயற்சியின் மூலம் உருவாக்கப்படும் ட்ரோன்கள் எதிர்காலத்தில் பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தக்கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுவதாக ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

காட்டு விலங்கினங்களைக் கண்காணிப்பதற்கும், உட்கட்டமைப்பு வசதிகளைப் பரிசோதிக்கவும் மற்றும் எமது சுற்றுச் சூழலை ஆய்வுக்கு உட்படுத்தவும் இந்தக் கண்களுக்குப் புலப்படாத ட்ரோன்கள் உதவும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

prasadbatti@gmail.com


கடந்த ஜூலை மாதம் 16-ஆம் திகதி அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற (ரோபோடிக்ஸ்: விஞ்ஞானம் மற்றும் முறைமைகள் என்ற மாநாட்டில் நோர்த்வெஸ்டர்ன் விஞ்ஞானிகள் ட்ரோன் குறித்த தங்களது ஆய்வு அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தனர்.

மனிதர்களின் கட்புல இயலுமை அளவீட்டை மையப்படுத்தி மிகவும் குறைந்த கட்புலனைக் கொண்ட ஆளில்லா விமானங்கள் அல்லது ட்ரோன்களை வடிவமைத்து உருவாக்குதல் என்ற தலைப்பில் ஆய்வு முன்வைக்கப்பட்டது.

நோர்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தின் இணை ஆசிரியர்களில், மெக்கார்மிக் பள்ளியின் கணினி அறிவியல் உதவிப் பேராசிரியர் எம்மா அலெக்சாண்டர், மெக்கார்மிக் பள்ளியின் கணினி அறிவியல், இயந்திரப் பொறியியல் மற்றும் வேதியியல் மற்றும் உயிரியல் பொறியியல் துறைகளின் உதவிப் பேராசிரியர் சாம் கிரீக்மேன், மற்றும் கிரீக்மேனின் ஆய்வகத்தில் கலாநிதி பட்ட மாணவரான டேவிட் மேத்யூஸ் ஆகியோர் இந்த ஆய்வுக்குழுவில் உள்ளடங்குகின்றனர்.

மேலும், இந்த ஆய்வின் இணை-முதல் ஆசிரியர்கள், ரூபென்ஸ்டைனின் ஆய்வகத்தைச் சேர்ந்த முனைவர் பட்ட பட்டதாரியான ஜிங்ஷியன் வாங் மற்றும் கிரீக்மேனின் ஆய்வகத்தில் முனைவர் பட்ட மாணவரான சென் யூ ஆகியோர் இணைந்து கொண்டனர்.

கண்களுக்குப் புலப்படாத ட்ரோன்களை உருவாக்குவதற்கு அவற்றை பின்னணியில் உள்ள சூழலைப் போன்றே தென்படச் செய்வதற்கான முனைப்புகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. அதாவது உருவமறைப்பு எண்ணக்கருவின்



அடிப்படையில் ட்ரோன்களின் பின்னணியில் உள்ள சூழலைப் போன்றே ட்ரோன்களை உருவாக்குவதற்கு முயற்சிக்கப்பட்டது என இந்த ஆய்வுக்குத் தலைமை தாங்கிய நோர்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தின் இணைப்பேராசிரியர் மைக்கேல் ரூபன்ஸ்டீன் (Michael Rubenstein) கூறுகின்றார்.

ரோபோ வடிவமைப்பில் நிபுணரான ரூபன்ஸ்டீன், நோர்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தின் மெக்கார்மிக் பொறியியல் கல்லூரியின் கணினி அறிவியல் மற்றும் இயந்திரப் பொறியியல் துறையின் இணைப் பேராசிரியர் என்பதுடன் அந்தப் பல்கலைக்கழகத்தின் ரோபோ மற்றும் பயோசிஸ்டம்ஸ் மையத்தின் உறுப்பினராகவும் கடமையாற்றுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த எண்ணக்கருவிற்கு மாற்று வடிவில், மனிதர்கள் இயக்கத்தை உணரும் விதத்தை அடிப்படையாகக் கொண்டு ட்ரோனையே வடிவமைக்க முடியுமா என ஆராயப்பட்டதாக அவர் தெரிவிக்கின்றார்.

ஒரு பொருளின் தொடர்ச்சியானதும் வேகமானதுமான இயக்கத்தின் மூலம் குறைந்த கட்புலத்தன்மை என்ற இந்த யோசனையை மிகச் சிலரே இதுவரையில் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இயற்கையின் உன்னதமான கொடைகளை கண்காணித்து ஆய்வுகளை மேற்கொள்வதற்கு மிகவும் பொருத்தமான கருவியாக இந்த ட்ரோன்களை வடிவமைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விலங்கு உலகின் இரகசியமான விந்தைமிகு தருணங்கள், பறவைகள் கூடு கட்டி மகிழ்ந்து குழாவும் பொழுதுகள், வெப்ப வலயக் காடுகளின் சுவாத்திய மாற்றம் பற்றிய ஆய்வுகள் என விந்தைமிகு இந்த உலகின் மிகவும் ஆர்வத்தைத் தூண்டக்கூடியதும் மனிதரால் நேரடியாக துல்லியமாகப் பார்வையிட முடியாததுமான சில தருணங்கள், விடயங்களை கச்சிதமாகப் பதிவு செய்யவும் பகுப்பாய்ந்து எதிர்காலத்தில் பயன்படுத்திக்கொள்ளவும் இந்த ட்ரோன்கள் வழியமைக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என ஆய்வாளர்கள் உறுதியாக நம்புகின்றனர்.

> “மனிதர்களின் கட்புல இயலுமை அளவீட்டை மையப்படுத்தி மிகவும் குறைந்த கட்புலனைக் கொண்ட ட்ரோன்களை வடிவமைத்து உருவாக்குதல்”

கண்களினால் பார்க்கக்கூடிய ட்ரோன்களை தொலைதூரங்களுக்கு அனுப்பி ஆய்வு செய்யும் போது மனித நடத்தைகள் எவ்வாறு ட்ரோன்களைக் கண்டவுடன் மாற்றமடைகின்றதோ அதேபோன்று விலங்குகள் மற்றும் பறவையினங்களும் ட்ரோன்களைக் கண்டவுடன் இயற்கையான தன்னிலையில் இருந்து மாறி, ட்ரோன் புலப்பட்டதன் பின்னர் துலங்கத் தொடங்குகின்றன.

அதாவது பறவையொன்று சுதந்திரமாக எவ்வாறு கூடு கட்டுகின்றது என்பது பற்றிய ஆய்விற்காக நாம் கண்களினால் புலப்படக்கூடிய ஒரு ட்ரோனை ஈடுபடுத்தினால் பறவையானது அதன் போக்கில் செயற்படாது இந்த ட்ரோனைப் பார்த்து துலங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் வெகுவாகக் காணப்படுகின்றன.


ட்ரோன்கள் பெரும்பாலும் இயற்கையின் நடத்தையை மாற்றுகின்றன, ஏனெனில் மனிதர்களோ அல்லது விலங்குகளோ அவற்றைக் கவனிக்கின்றன. இந்த இடையூறு வனவிலங்குகள் சிதறி ஓடவும், மக்கள் வித்தியாசமாக நடந்துகொள்ளவும் காரணமாகலாம். மறுபுறம், எளிதில் பார்க்க முடியாத ஒரு ட்ரோன், அதன் சுற்றுப்புறத்துடன் ஒன்றி இயைபொத்துப் போவதனால் கண்காணிப்பு மற்றும் ஆய்வு முனைப்புகளை செவ்வனே மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு அதிகமாகக் கிடைக்கப் பெறுகின்றது.

இந்த கண்களுக்குப் புலப்படாத ட்ரோன்கள் எதிர்காலத்தில் சில வேளைகளில் இராணுவ நோக்கங்களுக்காக போர்க்களத்தில்கூட பயன்படுத்தக் கூடிய சாத்தியங்களை நிராகரித்துவிட முடியாது.

பொதுவாகக் கட்புலனாகா ட்ரோன்களை உருவாக்கும் முனைப்புக்களில் அதன் தோற்றத்தை மாற்றியமைப்பதில் பின்னணியுடன் இணைந்து தென்பட வேண்டும் என்ற அடிப்படையிலான ஆய்வுகளே அதிகளவில் வலுப்பெற்றிருந்தன. எனினும் நோர்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழக பொறியாளர்கள் இந்த எண்ணக்கருவிலிருந்து விலகிச் சிந்தித்து மாற்று வழிகள் தொடர்பிலான தேடுதலில் ஈடுபட்டு அதில் வெற்றியையும் கண்டுள்ளனர்.

குறிப்பாக மனிதர்கள், பறவைகள் அல்லது விலங்குகள் எவ்வாறு ட்ரோன்களைப் பார்க்கின்றன என்ற புதிய கோணத்தில் யோசித்து ஆய்வுகளை முன்னெடுத்தனர். நான்கு தனித்தனி சுழலிகளைக் கொண்ட ஒரு வழக்கமான நான்கு சுழலி ட்ரோனை (quadcopter) போலல்லாது, ஃபேன்டம் ட்விஸ்ட்டில் ஒரு மோட்டாரும் ஒரு உந்துசுழலியும் (propeller) காணப்படுகின்றன. உந்துசுழலி ஒரு திசையில்

> **“எளிதில் பார்க்க முடியாத ஒரு ட்ரோன், அதன் சுற்றுப்புறத்துடன் ஒன்றி இயைபொத்துப் போவதனால் கண்காணிப்பு மற்றும் ஆய்வு முனைப்புகளை செவ்வனே மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு அதிகமாகக் கிடைக்கப் பெறுகின்றது.”**



சுழல்கிறது, ட்ரோனின் மற்றப் பாகங்கள் எதிர் திசையில் சுழல்கின்றன. ஒரு வழக்கமான நான்கு சுழலி ட்ரோனில், சுழலிகள் சுழலும், ஆனால் அதன் மையப் பகுதியான ரோபோ நிலையாக இருக்கும். இதனால் ட்ரோனின் உடல் பாகத்தை கண்களினால் பார்க்க முடியும்.

எனினும், நோர்த் வெஸ்டர்ன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் உருவாக்கிய ட்ரோனில் அனைத்துப் பாகங்களும் சுழல்வதாகவும் இதில் நிலையான பாகங்கள் எதுவும் கிடையாது என்றும் இதனால் அதனை பார்வையிட முடியாது எனவும் ஆய்வாளர் ரூபன்ஸ்டீன் கூறுகின்றார்.

கண்களுக்குப் புலப்படாத ட்ரோனை வடிவமைப்பதற்காக, மைக்கேல் ரூபன்ஸ்டீன் தலைமையிலான நோர்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழகக் குழு முதலில் கணினி மாதிரியைப் பயன்படுத்தி, நிலையான முறையில் பறக்கக்கூடிய சுமார் 20,000 ட்ரோன் வடிவமைப்புகளை உருவாக்கியது.

அதன் பின்னர், செயற்கை நுண்ணறிவு மற்றும் மேம்படுத்தல் வழிமுறைகளைப் பயன்படுத்தி, ட்ரோனின் முக்கிய கூறுகளான மோட்டார், உந்துசுழலி, சர்க்யூட் போர்டு, சமநிலை எடை மற்றும் பேட்டரிகள் ஆகியவற்றின் அமைப்பை அவர்கள் மீண்டும் மீண்டும் மாற்றியமைத்தனர்.

பல்வேறு உள்ளமைப்புகளை ஆராய்ந்த பின்னர், நிலையான பறத்தலை அனுமதிக்கும் அதே வேளையில், ஏறக்குறைய ஒவ்வொரு பார்வைக் கோணத்திலிருந்தும் ட்ரோனின் தென்படுகையைக் குறைக்கும் வகையில் அதன் பாகங்களின் சிறந்த இடவமைப்பை அல்காரிதம்கள் தீர்மானித்தன.

சிறந்த தேர்வுகளை மேற்கொண்ட பின்னர், பொறியாளர்கள் ஒவ்வொரு ட்ரோனும் பறக்கும்போது சுழல்வதை உருவகப்படுத்தி, அந்தப் படங்களை நூறு நிஜ உலகப் பின்னணிகளுடன் பொருத்திப் பார்த்தனர். பின்னர், ஒவ்வொரு வடிவமைப்பும் எவ்வளவு கவனத்தை ஈர்க்கும் வகையில் தோன்றியது என்பதைத் தீர்மானிக்க, மனிதப் பார்வையை ஒத்த ஒரு புலனுணர்வு மாதிரியை அவர்கள் பயன்படுத்தினர். தங்கள் சுற்றுப்புறங்களுடன் ஒன்றிப்போன வடிவமைப்புகள் குறைந்த தெரிவுநிலை மதிப்பெண்களைப் பெற்றன. குழு, மிகக் குறைந்த மதிப்பெண்களைப் பெற்ற 500 வடிவமைப்புகளைத் தேர்ந்தெடுத்து, அந்த மதிப்பெண்களை மேலும் குறைப்பதற்காகப் பாகங்களின் நிலைகளைத் திரும்பத் திரும்பச் சரிசெய்யும் அல்காரிதத்தைப் பயன்படுத்தினர்.

இந்த ட்ரோன் வடிவமைப்புச் செயல்முறை முழுமையாகத் தானியங்குபடுத்தப்பட்டது என ஆய்வாளர் ரூபன்ஸ்டீன் குறிப்பிடுகின்றார்.

பின்னர், ஒரு ட்ரோன் எங்கள் அனைத்து அளவுகோல்களையும் பூர்த்தி செய்கிறது என உறுதியாக நம்பியபோது, அதை உருவாக்கியதாக அவர் தெரிவிக்கின்றார். இதன் விளைவாக உருவான வடிவமைப்பு, சுழலும்போது பாகங்கள் பார்வைக்கு ஒன்றுடன் ஒன்று மேற்பொருந்தாமல் இருக்க, அவற்றை ட்ரோனைச் சுற்றி வெவ்வேறு உயரங்களிலும் வெவ்வேறு கோணங்களிலும், அவற்றுக்கிடையே அதிக இடைவெளியுடனும் பரப்பியது. எனவே, அனைத்தும் ஒன்றாகக் கலக்கும்போது, ட்ரோன் ஒரு தனித்துவமான வடிவமாகத் தோன்றுவதற்குப் பதிலாக, மங்கலான, ஓரளவு ஒளிபுகும் மேகம் போல மாறுகிறது. பார்வை அளவீட்டின் படி, மேம்படுத்தப்பட்ட ட்ரோன், மற்றவற்றை விட சுமார் 10 மடங்கு குறைவாகவே கண்ணுக்குப் புலப்படுகிறது.

‘ஒரு கேமராவின் வெளிப்பாட்டு நேரத்தைப் போலவே, மனிதக் கண்ணும் சமிக்ஞைகளைச் சேகரித்து அறிந்து கொள்ள நேரம் எடுத்துக்கொள்கிறது,’ என கணினிப் பார்வை நிபுணரான அலெக்சாண்டர் குறிப்பிடுகின்றார். ஒரு பொருள் வேகமாகச் சுழலும்போது, அது மங்கலாகி, அதன் தனித்துவமான அம்சங்களை இழப்பதாக நாம் உணர்கிறோம். இந்த புதிய ட்ரோன் ஏறக்குறைய முழுவதுமாக ஒளிபுகும் தன்மை கொண்டிருப்பதால், அதன் சில ஒளிபுகா பாகங்கள் பின்னணியுடன் பார்வைக்குச் சராசரியாகி, ஒட்டு மொத்தமாக ஒரு மெல்லிய மூடுபனி போன்ற தோற்றத்தை அளிப்பதாகக் கூறுகின்றார்.

புதிய ட்ரோனில் இன்னும் பல வரம்புகள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டனர். அதன் சுழலி கேட்கக் கூடிய சத்தத்தை எழுப்புகிறது, மேலும் ட்ரோனின் கம்பிகளும் ஆதரவுத் தண்டுகளும் இன்னும் ஓரளவிற்குத் தெரிகின்றன. ஃபேன்டம் ட்விஸ்ட்டை இன்னும் குறைவாகக் கவனிக்கப்படும்படி செய்ய, அதிக ஒளிபுகும் பொருட்கள் அல்லது அமைதியான உந்துவிசையுடன் எதிர்காலப் பதிப்புகளை வடிவமைக்கத் தனது குழு திட்டமிட்டுள்ளதாக ரூபன்ஸ்டீன் குறிப்பிடுகின்றார்.



jeyaseelan.s@thaiveedu.com






## உலகப் புகழ்பெற்ற

# காற்பந்தாட்டமும்

# சில விருதுகளும்

**- குரு அரவிந்தன்**

**கா**ற்பந்து விளையாட்டு உலகளவில் முதன்மையான இடத்தைப வகிப்பதுடன், கோடிக்கணக்கான இரசிகர் பட்டாளத்தைக் கொண்ட உலகளாவிய விளையாட்டுத் துறையாகத் திகழ்கின்றது. வரவிருக்கும் 2030-ஆம் ஆண்டில், சர்வதேச காற்பந்து கூட்டமைப்பு (FIFA - பிஃபா) தனது முதலாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 100-ஆவது ஆண்டை (நூற்றாண்டு விழா) உத்தியோகபூர்வமாகக் கொண்டாடவுள்ளது. எல்லைகளைக் கடந்து சர்வதேச ரீதியாக இரசிகர்களை ஒருங்கிணைக்கும் பிஃபாவின் பரந்த நோக்கம், உலகக் கிண்ணத் தொடரை உலக விளையாட்டு வரலாற்றின் உன்னத நிகழ்வாக மாற்றியுள்ளது.

உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் இறுதியில் வீரர்களின் ஆற்றலையும் பங்களிப்பையும் கௌரவிக்கும் வகையில் பல உயரிய சர்வதேச விருதுகள் வழங்கப்படுகின்றன. தங்கப் பந்து (Golden Ball), தங்கப் பாதணி (Golden Boot), தங்கக் கையுறை (Golden Glove) உட்படப் பல்வேறு பிரிவுகளில் வழங்கப்படும் இவ்விருதுகளும், அவற்றை இதுவரை வென்றெடுத்து வரலாற்றுச் சாதனை படைத்த வீரர்களின் விபரங்களும் காற்பந்து வரலாற்றின் முதன்மையான பக்கங்களாக அமைகின்றன.

அதேவேளை, உலகக் கிண்ணத் தொடருக்கு அப்பால் சர்வதேச காற்பந்து அரங்கைத் துடிப்பாக வைத்திருப்பதில் பல்வேறு கண்டங்கள் மற்றும் கழக மட்டத்திலான போட்டித் தொடர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஐரோப்பிய சாம்பியன்ஸ் லீக் (UEFA Champions League), யூரோப்பா லீக் (UEFA Europa League), நேசன்ஸ் லீக் (UEFA Nations League), வட அமெரிக்காவின் CONCACAF சாம்பியன்ஸ் கிண்ணம், FA கிண்ணம், பிஃபா கழக உலகக் கிண்ணம் (FIFA Club World Cup) மற்றும் உலகக் கிண்ணத் தகுதிச் சுற்றுப் போட்டிகள் ஆகியவை உலகின் கவனத்தை ஈர்க்கும் முதன்மையான தொடர்களாகும்.

மேலும், மகளிர் யூரோ தொடர், பிஃபா 17 வயதிற்குட்பட்டோர் மற்றும் 19 வயதிற்குட்பட்டோருக்கான இளையோர் உலகக் கிண்ணத் தொடர்கள் ஆகியவை காற்பந்துத் துறையின் எதிர்கால நட்சத்திரங்களை உருவாக்குவதில் தீர்க்கமான பங்காற்றுகின்றன. இவை தவிர, உலகளாவிய ரீதியில் தேசிய மட்டத்திலும் பாடசாலை மற்றும் உயர்கல்வி நிறுவன மட்டத்திலும் நடத்தப்படும் தொடர்கள், சர்வதேச திறமைகளை அடையாளம் காண்பதற்கும் காற்பந்தின் உட்கட்டமைப்பைப் பலப்படுத்துவதற்கும் அடித்தளமாக விளங்குகின்றன.

பொதுவாக 'விருது' என்பது, ஒரு போட்டியாளரின் திறமை, தகுதி அல்லது பங்களிப்பின் அடிப்படையில் நடுவர் குழுவினால் ஆராயப்பட்டு வழங்கப்படும் உத்தியோகபூர்வத் தீர்மானத்தின் முடிவாகும். நடுவர்களின் உத்தியோகபூர்வ முடிவை உறுதிப்படுத்தும் சான்றாக அமைவதால், இவ்விருதுகள் கோப்பைகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் எனப் பல்வேறு வடிவங்களில் வழங்கப்படுகின்றன.

இருப்பினும், போட்டிகளில் விருதுகளையோ பதக்கங்களையோ வென்றெடுத்தவர்கள் மட்டுமே உலகின் சிறந்த விளையாட்டு வீரர்கள் என்று முடிவெடுத்துவிட முடியாது. நடுவர்களின் மதிப்பீட்டுச் சூழல்கள் அல்லது தவிர்க்க முடியாத புறநிலைச் சவால்கள் காரணமாக, மிகச்சிறந்த திறமையாளர்கள்கூடச் சில நேரங்களில் விருதுகளை இழக்க நேரிடுகின்றது. அதிர்ஷ்டம் என்பதைத் தாண்டி, தொடர்ச்சியான கடின உழைப்பும் அர்ப்பணிப்புமே ஒரு வீரரை சர்வதேச அரங்கில் நிலைநிறுத்துகின்றன. காலப்போக்கில் விளையாட்டு விதிகளும் மதிப்பீட்டு முறைகளும் மாற்றமடைந்து வரும் சூழலில், சர்வதேசக் காற்பந்து வரலாற்றில் தடம் பதித்த முதன்மையான விருதுகளின் இயல்பு பற்றி ஆராய்வது அவசியமாகின்றது.

சிறந்த வீரருக்கான பீபாவின் தங்கப் பந்து விருது முதன் முதலில் 1982-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அதிக கோல் அடித்தவருக்கான தங்கக் காலணி முதன்முதலில் 1982-ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. சிறந்த கோல் கீப்பருக்கான தங்கக் கையுறை முதன்முதலில் 1994-ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. ஒரு நாட்காட்டி ஆண்டின் தொடக்கத்தில் 21 வயதுக்குட்பட்ட வீரர்கள் இந்தப் போட்டியில் விளையாடினால், அவர்களில் சிறந்த வீரருக்கான 'பீபா இளம் வீரர்' விருது முதன்முதலில் 2006-ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. நேர்மையான ஆட்டத்தில் சிறந்த சாதனையுடன் இரண்டாம் சுற்றுக்கு முன்னேறிய அணிக்கு வழங்கப்படும் 'பீபா ஃபேர் பிளே' கோப்பை, முதன்முதலில் 1970-ஆம் ஆண்டு வழங்கப் பட்டது.

இப்போது நாங்கள் முதலில் உலகக் கோப்பை 'கோல்டன் பூட்' வெற்றியாளர்களின் முழுமையான பட்டியலைப் பார்ப்போம். 1930 - 2026 வரை நடந்த போட்டிகளின்போது, இந்த விருது 1982-ஆம் ஆண்டு 'கோல்டன் சூஸ்' என்ற பெயரில் அதிகாரபூர்வமாகத் தொடங்கப்பட்டு, பின்னர் 2010-ஆம் ஆண்டு 'கோல்டன் பூட்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. FIFA, 1930-ஆம் ஆண்டு முதல் அனைத்து 23 போட்டிகளிலும் அதிக கோல் அடித்த வீரர்களைப் பின்னோக்கியும் அங்கீகரித்ததால் அவர்களுக்கும் இந்த விருது கிடைத்தது. இதில் பெனால்டி சூட் அவுட்களில் அடிக்கப்படும் கோல்கள் ஒரு வீரரின் மொத்த கோல் எண்ணிக்கையில் சேர்க்கப்பட மாட்டாது என்பது ஒரு முக்கியமான விதியாகும். தொடரின் போது பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச கோல் அடிப்பதற்கான உதவிகள், குறைந்தபட்சம் விளையாடிய நிமிடங்கள் போன்ற மேலதிக நிபந்தனைகளுக்குப் பிறகும் சமநிலை நீடித்தால், விருது பகிர்ந்து அளிக்கப்படும். 2010 முதல் பீபா நிறுவனத்தினர் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது அதிக கோல் அடித்தவர்களுக்கு 'வெள்ளிபூட்' மற்றும் 'வெண்கலபூட்' விருதுகளையும் வழங்கி வருகின்றனர்.

இந்த பீபா காற்பந்துப் போட்டிகள் எந்த ஆண்டு, எங்கே நடைபெற்றது, வெற்றியாளர், மற்றும் எந்த நாட்டுக் குழுவைச் சேர்ந்தவர் என்ற விவரங்களை முதலில் உங்களுக்கு இங்கே தருகின்றேன். முதலில் 1982-ஆம் அண்டு விருதுக்கு முந்திய போட்டிகள்.

1930-ஆம் ஆண்டு உருகுவே கில்லர்மோ ஸ்டேபில் அர்ஜென்டினா 8 கோல்கள், 1934-ஆம் ஆண்டு இத்தாலி ஓல்ட்ரிச் நெஜெட்லி செக்கோஸ்லோவாக்கியா 5 கோல்கள், 1938-ஆம் ஆண்டு பிரான்ஸ் லியோனிடாஸ் பிரேசில் 7 கோல்கள், 1942, 1946 உலகயுத்தம் காரணமாக போட்டிகள் நடைபெற வில்லை.

1950-ஆம் ஆண்டு பிரேசில் அடெமிர் பிரேசில் 8 கோல்கள், 1954-ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்து சாண்டோர் கோசிஸ் ஹங்கேரி 11 கோல்கள், 1958-ஆம் ஆண்டு ஸ்வீடன் ஜஸ்ட் ஃபோன்டைன் பிரான்ஸ் 13 கோல்கள் (எல்லாக் கால சாதனை), 1962-ஆம் ஆண்டு சிலி, 6 வீரர்கள் சமநிலையில் 4 கோல்கள் போட்டனர். சமநிலையில் முடிந்த இந்தப் போட்டி, உலகக் கோப்பை வரலாற்றில் மிகவும் அசாதாரணமான ஒன்றாகும். ஃப்ளோரியன் ஆல்பர்ட் - ஹங்கேரி, வாலண்டின் இவானோவ் - ரஷ்யா, கரின்சா - பிரேசில், வாவா - பிரேசில், டிராசான் ஜெர்கோவிச் - யுகோஸிலேவியா மற்றும் லியோனல் சான்செஸ் - சிலி ஆகிய அனைவரும் தலா நான்கு கோல்களுடன் போட்டியை நிறைவு செய்தனர். அக்காலத்தில் சமநிலை முறிவு விதிகள் இல்லாததால், அந்த ஆறு வீரர்களும் இந்த கௌரவத்தை சமமாகப் பகிர்ந்து கொண்டனர்.

1966-ஆம் ஆண்டு இங்கிலாந்து யூசெபியோ போர்ச்சுகல் 9 கோல்கள், 1970-ஆம் ஆண்டு மெக்சிகோ கெர்ட் முல்லர் மேற்கு ஜேர்மனி 10 கோல்கள், 1974-ஆம் ஆண்டு மேற்கு ஜேர்மனி கிரிகோர்ஸ் லாட்டோ போலந்து 7 கோல்கள், 1978-ஆம் ஆண்டு அர்ஜென்டினா மரியோ கெம்பஸ் அர்ஜென்டினா 6 கோல்கள், உலகக் கோப்பையை வென்றார்.

1982-ஆம் ஆண்டு ஸ்பெயின் பாலோ ரோஸி இத்தாலி 6 கோல்கள் முதல் அதிகாரபூர்வ கோல்டன் உலகக் கோப்பை கோல்டன் பால் வென்றார். 1986-ஆம் ஆண்டு மெக்சிகோ கேரி லினெகர் இங்கிலாந்து 6 கோல்கள். 1990-ஆம் ஆண்டு இத்தாலி சால்வடோர் சில்லாசி இத்தாலி 6 கோல்கள், 1994-ஆம் ஆண்டு அமெரிக்கா சலென்கோ / ஸ்டோய்ச்கோவ் ரஷ்யா /பல்கேரியா 6 கோல்கள் பகிர்ந்து கொண்டனர்; அசிஸ்ட்களிலும் சமமாக இருந்தனர். 1998-ஆம் ஆண்டு பிரான்ஸ் டேவர் சுகர் குரோஸஷியா 6 கோல்கள். 2002-ஆம் ஆண்டு தென் கொரியா, ஜப்பான் ரொனால்டோ பிரேசில் 8 உலகக் கோப்பையை வென்றார்.

2006-ஆம் ஆண்டு ஜேர்மனி மிரோஸ்லாவ் க்ளோஸ் ஜேர்மனி 5 கோல்கள். 2010-ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்கா தாமஸ் முல்லர் ஜேர்மனி 5 கோல்கள் அசிஸ்ட்கள் (3) மூலம் வென்றார்; 20 வயதில் இளைய வெற்றியாளர். 2014-ஆம் ஆண்டு பிரேசில் ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ் கொலம்பியா 6 கோல்கள். 2018-ஆம் ஆண்டு ரஷ்யா ஹாரி கேன் இங்கிலாந்து 6 கோல்கள் அசிஸ்ட்கள் மூலம் வென்றார். 2022-ஆம் ஆண்டு கத்தார் கைலியன் எம்பாப்பே பிரான்ஸ் 8 கோல்கள் இரண்டாம் இடம்; இறுதிப் போட்டியில் ஹாட்ரிக். 2026-ஆம்

ஆண்டு அமெரிக்கா கைலியன் எம்பாப்பே பிரான்ஸ் 10 கோல்கள்.

காற்பந்தாட்டத்தில் உலகக் கோப்பையை வென்ற குழுக் களில் விளையாடிய வீரர்களில் சிலர்தான் கோல்டன் பூட் சைத் தமதாக்கி இருக்கிறார்கள். காற்பந்தாட்ட வரலாற்றில் ஐந்து வீரர்கள் மட்டுமே உலகக் கோப்பை கோல்டன் பூட் விருதையும் வென்று, அதே ஆண்டில் கோப்பையையும் வென்றுள்ளனர். இது காற்பந்து வரலாற்றில் மிகவும் அரிதான நிகழ்ச்சியாகும். 1962-ஆம் ஆண்டு பிரேசில் கோப்பையை வென்ற அணியில் கரின்சாவும் வாவாவும் கோல்டன் பூட் விருதைப் பகிர்ந்து கொண்டனர். மரியோ கெம்பஸ் 1978-ஆம் ஆண்டு அர்ஜென்டினாவுடன் வென்றார். பாவ்லோ ரோஸி 1982-ஆம் ஆண்டு இத்தாலியுடன் வென்றார். ரொனால்டோ 2002-ஆம் ஆண்டு பிரேசிலுடன் வென்றார். கடைசியாக இது நிகழ்ந்து 24 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. 2002-ஆம் ஆண்டு ரொனால்டோ வென்றதிலிருந்து, ஒவ்வொரு உலகக் கோப்பை போட்டியிலும் அதிக கோல் அடித்தவர், உலகக் கோப்பையை வெல்லாத அணியைச் சேர்ந்தவராகவே இருந்து வருகிறார்.

உலகக் கோப்பை வரலாற்றில், தனது அணி குழுநிலை யிலேயே வெளியேற்றப்பட்ட போதிலும் கோல்டன் பூட் விருதை வென்ற ஒரே வீரர் ரஷ்யாவைச் சேர்ந்த ஒலெக் சலென்கோ ஆவார். 1994-ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடந்த தொடரில் ரஷ்யா அடுத்த சுற்றுக்கு முன்னேறா மலேயே வெளியேறியது. இருப்பினும், சலென்கோ ஆறு கோல்களுடன் அதிக கோல் அடித்த வீரராகத் திகழ்ந்தார். அந்த ஆறு கோல்களில் ஐந்து கோல்கள் கேமரூனுக்கு எதிரான ஒரே போட்டியில் அடிக்கப்பட்டன. இதுவே, ஒரே உலகக் கோப்பை ஆட்டத்தில் ஒரு வீரர் அடித்த அதிகபட்ச கோல்களுக்கான சாதனையாக இன்றும் உள்ளது. அதே போல் ஆறு கோல்களை அடித்த பல்கேரியாவின் ஹிரிஸ்டோ ஸ்டோய்ச்கோவுடன் அவர் இந்த விருதைப் பகிர்ந்து கொண்டார். இரு வீரர்களும் தலா ஒரு கோல் அடிக்க உதவினர். அதிகாரபூர்வ காலத்தில் இந்த விருது முறை யாகப் பகிரப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

2010-ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடந்த உலகக் கோப்பையில் தாமஸ் முல்லர் தங்கப் பூட் விருதை வென்றபோது அவருக்கு 20 வயது மற்றும் 274 நாட்கள் ஆகி யிருந்தது. இதன் மூலம், இந்த விருதின் வரலாற்றில் மிக இளைய வெற்றியாளர் என்ற பெருமையை அவர் பெற்றார். 1998-ஆம் ஆண்டு பிரான்சில் நடந்த போட்டியில் டேவர் சுகர் 30 வயது மற்றும் 196 நாட்களில் இந்த விருதை வென்று, சாதனை படைத்தார். எந்த வீரரும் உலகக் கோப்பை தங்கப் பூட் விருதை இரண்டு முறை வென்றதில்லை. ஆனால் இம்முறை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கைலியன் எம்பாப்பே இரண்டாவது முறையாகப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

ஒவ்வொரு முறையும் வெவ்வேறு அணிகளின் செயற்பாடுகள், போட்டி அட்டவணை மற்றும் எதிரணியின் பலம் ஆகிய வற்றால், போட்டியானது சுழற்சிகளுக்கு இடையில் மிகவும் மாறுபடுகிறது. 1930-ஆம் ஆண்டு முதல் 2026-ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு போட்டியும் ஒரு தனித்துவமான வெற் றியாளரை உருவாக்கியுள்ளது.

ஒரே தொடரில் தங்கப் பூட் மற்றும் தங்கப் பந்து ஆகிய இரண் டையும் வென்ற ஒரே வீரர் பாலோ ரோஸி ஆவார். அவர் 1982 ஸ்பெயின் தொடரில் இரண்டையும் வென்றார். இத்தாலி பட்டத்தை வென்றபோது, அவர் ஆறு கோல்களை அடித்தார், இதில் இரண்டாவது குழுச் சுற்றில் பிரேசிலுக்கு எதிராக அடித்த ஹாட்ரிக் கோல்களும் அடங்கும்.

பீபா கோல்டன் பூட் விருதைப் போலல்லாமல், கோல்டன் பால் விருது 1978-ஆம் ஆண்டு அர்ஜென்டினாவில் நடை பெற்ற உலகக் கோப்பையின் போதுதான் அறிமுகப்படுத்தப் பட்டது.

பீபா உலகக் கோப்பை: தங்கப் பந்து வெற்றியாளர்களின் முழுப் பட்டியலைப் பார்ப்போம். போட்டி நடந்த ஆண்டு, போட்டியை நடத்திய நாடு, தங்கப் பந்து வெற்றியாளர், அவரது குழுவின் நாடு போன்றவற்றைத் தருகின்றேன்.

- 2026 கனடா, மெக்சிகோ, அமெரிக்கா - ரோட்ரி ஸ்பெயின்
- 2022 கத்தார் - லியோனல் மெஸ்ஸி அர்ஜென்டினா
- 2018 ரஷ்யா - லூகா மோட்ரிச் குரோசஷியா
- 2014 பிரேசில் - லியோனல் மெஸ்ஸி அர்ஜென்டினா
- 2010 தென்னாபிரிக்கா - டியாகோ ஃபோர்லான் உருகுவே
- 2006 ஜேர்மனி - ஜினெடின் ஜிதான் பிரான்ஸ்
- 2002 தென் கொரியா, ஜப்பான் - ஆலிவர் கான் ஜேர்மனி
- 1998 பிரான்ஸ் - ரொனால்டோ பிரேசில்
- 1994 அமெரிக்கா - ரொமாரியோ பிரேசில்
- 1990 இத்தாலி - சால்வரோர் சில்லாசி இத்தாலி
- 1986 மெக்சிகோ - டியாகோ மரடோனா அர்ஜென்டினா
- 1982 ஸ்பெயின் - ரோஸ்ஸி இத்தாலி
- 1978 அர்ஜென்டினா - மரியோ கெம்பஸ் அர்ஜென்டினா

இந்தப் போட்டியின் வரலாற்றில், ஒரே ஒரு வீரர் மட்டுமே இந்த விருதை இரண்டு முறை வென்றுள்ளார். அவர் அர் ஜென்டினாவின் லியோனல் மெஸ்ஸி ஆவார். இவர் 2014-ஆம் ஆண்டு மற்றும் 2022-ஆம் ஆண்டுகளில் பீபா உலகக் கோப்பை தங்கப் பந்து விருதைப் பெற்றார். லியோனல் மெஸ்ஸி 2022-ஆம் ஆண்டு கத்தார் தொடரில், தொடரின் சிறந்த வீரருக்கான தங்கப் பந்து விருதை வென்று, வெற் றிக்கு மிக அருகில் வந்தார். இருப்பினும், ஏழு கோல்களுடன் வெள்ளிப் பூட் விருதைத்தான் அவரால் வெல்ல முடிந்தது, இது எம்பாப்பேயின் எட்டு கோல்களை விட ஒரு கோல் குறை வானதாகும். மெஸ்ஸி இதுவரை உலகக் கோப்பை தங்க பூட் விருதை வென்றதில்லை. 2026-ஆம் ஆண்டு எதிர்பார்த் தாலும் அதையும் அவர் தவற விட்டுவிட்டார்.

kuruaravindan@thaiveedu.com





# வேர்களின் சாட்சியம்

## மரங்கள் சொல்லும் நீலத்தின் அரசியல்

அருள்கார்க்கி

**அந்நிய மரங்களின்**
**நிழலில் கருகும் மலையகத்தின் அரசியல்:**

'நிலம் தன் வரலாற்றை மனிதர்களின் மொழியில் எழுதுவ தில்லை; அது மரங்களின் வேர்களிலும், வறண்டுபோன நதிப்படுகைகளின் வெடிப்புகளிலுமே தனது ரணங்களைப் பதிவு செய்கிறது.'

பனிமூடிய மலைச்சிகரங்களும், பச்சைப் பசேலென விரிந்து கிடக்கும் தேயிலைச் சரிவுகளும், அதனூடே வானைத் துளைத்துக் கொண்டு நிற்கும் பிரமாண்டமான மரங்களும் வெளியிலிருந்து வரும் ஒரு பயணிகளுக்கு அழ கியலின் உச்சமாகத் தெரியலாம். சித்திரங்களைப்போல காட்சியளிக்கும் இந்த நிலப்பரப்பை, சுற்றுலாப் பயணி களின் கண்கள் 'சொர்க்கம்' என்று புகழலாம். ஆனால், லயன் அறைகளின் இரும்புக் கூரைகளுக்குக் கீழே வாழ்வைக் கழிக்கும் ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலா ளியின் கண்கொண்டு பார்த்தால், இந்தப் பசுமைக்குப் பின்னால் உறைந்துபோயிருக்கும் கொடிய வறட்சியும், வஞ்சகமான அரசியலும் புலப்படும்.

குறிப்பாக, மலையகத்தின் நிலப்பரப்பை இன்று ஆக்கிர மித்திருக்கும் யூகலிப்டஸ் (கற்பூர மரம்), பைன் (Pine) போன்ற அந்நிய மரங்கள் வெறுமனே இயற்கையின் அங் கங்கள் அல்ல. அவை காலனித்துவத்தின் எச்சங்கள்; இன்றும் மலையக மக்களின் காணி உரிமையையும், நீர் வளத்தையும், பண்பாட்டையும் மௌனமாகச் சிதைத்துக் கொண்டிருக்கும் 'சூழலியல் ஏகாதிபத்தியத்தின்' (Ecologi-cal Imperialism) வாழும் சாட்சியங்கள். இது தாவரவிய லுக்கும் மனிதருக்கும் இடையிலான முரண்பாடு அல்ல; இது நிலம், அதிகாரம், சர்வதேச மூலதனம் மற்றும் விளிம் புநிலை மக்களின் உரிமை ஆகியவற்றை உள்ளடக்கிய மிக நுட்பமான அரசியல்.

**காலனித்துவத்தின் விதையும்**
**சூழலியல் வன்முறையும்:**

பத்தொன்பதாம் நூற்றாண்டில், பிரித்தானிய மூலதனம் இலங்கையின் மத்திய மலைநாட்டிற்குள் நுழைந்தபோது, அவர்கள் அந்த நிலத்தை ஒரு பல்லுயிர்மைத் தொகுதி யாகப் பார்க்கவில்லை; மாறாக, லாபத்தை அறுவடை செய்வதற்கான ஒரு பிரமாண்டமான தொழிற்சாலை யாகவே பார்த்தார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மலையகத்தின் ஈரப்பதத்தைப் பாதுகாத்து, மழைநீரைப் பஞ்சுபோல உறிஞ்சிச் சேமித்து வைத்து, வறட்சிக் காலங் களில் சிறு சுனைகளாகவும் அருவிகளாகவும் வெளி யேற்றிய காடுகள், பிரித்தானியரின் கண்களுக்குப் 'பயனற்ற தரிசு நிலங்களாகவே' (Wastelands) தெரிந்தன.

சுதேச மரங்களை அழித்துவிட்டுத் தேயிலையைப் பயிரிட்ட அவர்களுக்கு, தேயிலையைக் காயவைக்கும் தொழிற்சாலைகளின் உலைகளை எரிக்கவும், புகையிரதப் பாதைகளுக்கான மரக்குற்றிகளுக்கும், சரிவுகளைத் தாங்கிப் பிடிக்கும் முட்டுக்களாகவும் மிக வேகமாக வளரக் கூடிய மரங்கள் தேவைப்பட்டன. அதற்காக அவுஸ்திரேலி யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவைதான் இந்த யூக லிப்டஸ் மரங்கள்.

prasadbatti@gmail.com

இது வெறுமனே ஒரு மரம் நடும் திட்டம் அல்ல. அரசியல் கோட்பாட்டாளர் அகிலே எம்பேம்பே (Achille Mbembe) முன்வைக்கும் 'மரண அரசியல்' (Necropolitics) கோட்பாட்டை நாம் இங்குச் சூழலியலோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அதிகார மையமானது 'யார் வாழ வேண்டும், யார் சாக வேண்டும்' என்பதைத் தீர்மானிப்பதே மரண அரசியல். பிரித்தானியக் காலனித்துவம் மலைய கத்தில் அதையே செய்தது. தேயிலை செழிக்க வேண்டும், பிரித்தானியப் பொருளாதாரம் வாழ வேண்டும் என்ப தற்காக, மலையகத்தின் பூர்வீகத் தாவரங்களும், அந்த நிலத்தின் இயற்கை நீர்ச் சுழற்சியும் சாகடிக்கப்பட்டன. ஒரு நிலத்தின் இயல்பான உயிரியல் கட்டமைப்பைத் தமது மூலதனத் தேவைக்காகத் திருத்தி அமைத்த இந்தச் செயல், மலையகத்தின் மீது நிகழ்த்தப்பட்ட முதல் கட்டச் சூழலியல் வன்முறையாகும்.

## ஏகாதிபத்தியமும் பசுமைப் பாலைவனங்களும்:

உலகெங்கிலும் உள்ள சூழலியலாளர்கள் யூகலிப்டஸ் மற்றும் பைன் காடுகளை 'பசுமைப் பாலைவனங்கள்' (Green Deserts) என்றே அழைக்கிறார்கள். பார்ப்பதற்குப் பச்சையாகக் காட்சியளித்தாலும், ஒரு பாலைவனத்திற் குரிய அத்தனை வறட்சியையும் உயிரற்ற தன்மையையும் அவை தமக்குள் கொண்டிருக்கின்றன.

இந்த மரங்களின் வேர்கள் நிலத்தின் மேற்பரப்பில் உள்ள நீரை மட்டுமல்லாது, பல நூறு அடிகள் ஆழத்திற்குச் சென்று நிலத்தடி நீர்ப் படுகைகளையும் (Ground water aquifers) இரக்கமின்றி உறிஞ்சிக் குடிக்கின்றன. இதோடு மட்டுமன்றி, யூகலிப்டஸ் மரங்களின் இலைகள் உதிர்ந்து மண்ணில் சேரும்போது, அவை மண்ணின் வேதியியல் தன்மையை மாற்றுகின்றன (Allelopathy). அந்த இலைகளில் உள்ள நச்சுத்தன்மை, வேறு எந்தவொரு சுதேசத் தாவரமும், சிறு புல்லும் கூட அந்த மரத்தின் நிழலில் வளர முடியாதபடி மண்ணை மலடாக்குகிறது.

இத்தகைய ஒற்றைப் பயிர்ச்செய்கையை (Monoculture) நாம் சர்வதேச உதாரணங்களோடு ஒப்பிடலாம். சிலி (Chile) நாட்டில், பூர்வீகக் குடிமக்களான 'மாபுச்சே' (Mapuche) சமூகத்தினர் வாழும் நிலங்களில் பெருநிறுவனங் களால் நடப்பட்ட யூகலிப்டஸ் மற்றும் பைன் மரங்கள் அந்த மக்களின் ஒட்டுமொத்த நீர் வளத்தையும் அழித்தன. மாபுச்சே மக்கள் இன்று அந்த மரங்களை 'பச்சை அரக் கர்கள்' என்று அழைத்து, அவற்றை வேரோடு பிடுங்கி எறியும் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். அதேபோல, தென்னாபிரிக்காவில் 'Working for Water' என்ற தேசியத் திட்டத்தின் கீழ், நீரை உறிஞ்சும் இத்தகைய அந்நிய மரங்கள் அரசாலேயே வெட்டி அகற்றப்படு கின்றன. ஆனால், இலங்கையிலோ பெருந்தோட்டக் கம் பனிகள் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' மற்றும் 'காடாக்கல்' (Reforestation) என்ற போர்வையில் இந்த வன்முறையைத் தடையின்றித் தொடர்கின்றன.

## நீரின் ஆயுதமயமாக்கலும் லயன் அறைகளின் தாகமும்:

'நீர் என்பது வெறும் H2O அல்ல; அது அதிகாரத்தின் திரவ வடிவம்' என்கிறார்கள் நவீன அரசியல் புவியியலாளர்கள். மலையகத்தில் யூகலிப்டஸ் மரங்களால் ஏற்படும் சூழலியல் வறட்சி, ஒரு இயற்கைப் பேரழிவு அல்ல; அது மனிதர்களால், குறிப்பாக பெருநிறுவனங்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட வறட்சி.

இலங்கையின் மகாவலி, களனி, களு, வளவை ஆகிய பிரதான நதிகளின் பிறப்பிடமான மத்திய மலைநாடு சுருங் கிக்கொண்டிருக்கிறது. ஆனால், இந்த வறட்சியின் முதல் பலிகடாக்கள் யார்? தேயிலைத் தொழிற்சாலைகளுக்கோ, சொகுசு விடுதிகளுக்கோ நீர் செல்வதில் எந்தத் தடையு மில்லை. ஆனால், அதிகாலைப் பனியிலும் அட்டைக் கடி களிலும் தமது உதிரத்தைத் தேயிலைக் கொழுந்துகளாக மாற்றும் மலையகப் பெண்களின் லயன் குடியிருப்புக ளுக்கு ஒரு சொட்டு நீர்கூடச் செல்வதில்லை.

“பிரித்தானியப் பொருளாதாரம் வாழ வேண்டும் என்பதற்காக, மலைய கத்தின் பூர்வீகத் தாவரங்களும், அந்த நிலத்தின் இயற்கை நீர்ச் சுழற்சியும் சாகடிக்கப்பட்டன. ஒரு நிலத்தின் இயல்பான உயிரியல் கட்டமைப்பைத் தமது மூலதனத் தேவைக்காகத் திருத்தி அமைத்த இந்தச் செயல், மலைய கத்தின் மீது நிகழ்த்தப்பட்ட முதல் கட்டச் சூழலியல் வன்முறையாகும்.”

யூகலிப்டஸ் மரங்கள் இயற்கை ஊற்றுகளை வறளச் செய்யும்போது, தொழிலாளர்கள் முற்றுமுழுதாகத் தோட்ட முகாமைத்துவம் (Estate Management) விநியோகிக்கும் நீரை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறார்கள். காரல் விட்ஃபோகல் (Karl Wittfogel) எனும் ஆய்வாளர் தனது 'நீரியல் எதேச்சாதிகாரம்' (Hydraulic Despotism) என்ற கோட்பாட்டில், நீரைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு அதிகாரம், எப்படி ஒட்டு மொத்த சமூகத்தையும் தனக்கு அடிமையாக்கி வைத்திருக்கும் என்பதை விளக்குகிறார். மலையகத்தில் இதுவே நடக்கிறது. நீருக்காக முகாமைத்துவத்தை நம்பியிருக்கும் ஒரு சமூகம், எப்படிக் கூலி உயர்வுக்காகவோ, காணி உரிமைக்காகவோ வீதிக்கு வந்து துணிந்து போராட முடியும்? ஆக, யூகலிப்டஸ் மரங்கள் இங்கு வெறும் விறகுக்கான மரங்கள் அல்ல; அவை மலையக மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் 'நீரியல் எதேச்சாதிகாரத்தின்' ஆணிவேர்கள்.

## காணி உரிமை: வேர்களை இழந்த மனிதர்களின் அரசியல்:

ஒரு சமூகத்தின் அரசியல் பலம் என்பது அவர்கள் வாழும் நிலத்தின் மீதான அவர்களின் உரிமையிலிருந்து தொடங்குகிறது. ஆனால் மலையக மக்களின் வரலாறு என்பது நிலத்திலிருந்து திட்டமிட்டு அந்நியப்படுத்தப்பட்ட ஒரு வரலாறு. இருநூறு ஆண்டுகளுக்கு முன் இந்த நிலத்திற்கு வந்து, காடுகளைத் திருத்தி, பாதைகளை அமைத்து, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிய உழைப்பாளர்களுக்கு இன்றுவரை சொந்தமாக ஒரு துண்டு காணி இல்லை.

ஆனால் விந்தை என்னவென்றால், அதே இருநூறு ஆண்டுகளுக்கு முன் அவுஸ்திரேலியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட யூகலிப்டஸ் மரத்திற்கு மலையகத்தின் மண்ணில் பல நூறு அடி ஆழத்திற்கு வேர்விட உரிமை இருக்கிறது. அந்த மரங்கள் பெருந்தோட்டக் கம்பனிகளின் பாதுகாக்கப்பட்ட சொத்துகளாக மதிக்கப்படுகின்றன. ஆனால் மனிதர்களான மலையகத் தமிழர்களோ, இன்றும் ஒட்டுண்ணிகளைப் போலத் தமது சொந்த நிலத்திலேயே 'அகதிகளாக' அல்லது 'வரவேற்கப்படாத விருந்தினர்களாகவே' நடத்தப்படுகிறார்கள்.

பிரித்தானியர் காலத்தில் கொண்டுவரப்பட்ட 'காணி சுவீகரிப்புச் சட்டங்கள்' (Crown Lands Encroachment Ordinance) எப்படிச் சுதேச மக்களின் நிலங்களைப் பறித்துத் தோட்டங்களை உருவாக்கினவோ, அதே அதிகார வடிவம்தான் இன்றும் தொடர்கிறது. இன்று பெருந்தோட்டக் கம்பனிகள் 'நீண்டகால குத்தகை' (Long-term lease) என்ற பெயரில் நிலத்தைத் தம் கட்டுப்பாட்டில் வைத்துள்ளன. காணி உரிமையைக் கோரும் மலையக மக்களின் போராட்டங்கள், அரச இயந்திரத்தாலும், கம்பனிகளின் அதிகாரத்தாலும் தொடர்ந்து நசுக்கப்படுகின்றன.

ஒரு தொழிலாளி தனது லயன் அறைக்கு முன்னால் ஒரு சிறிய மரக்கறித் தோட்டத்தை அமைப்பதற்கோ, தனது கால்நடைகளை மேய்ப்பதற்கோ உரிமை கிடையாது. நிலத்தோடுள்ள இந்த அந்நியமாதல் (Alienation) கார்ல் மார்க்ஸ் குறிப்பிடும் உழைப்பில் இருந்தான அந்நிய மாதலை விடவும் கொடியது. இது மனிதரை அவரது இருப்பிலிருந்தே (Existential reality) அந்நியப்படுத்தும் ஒரு நவீன அடிமைத்தனம்.

## யூகலிப்டஸும் உலகளாவிய சூழலியல் வன்முறையும்:

மலையகத்தில் நாம் காணும் யூகலிப்டஸ் மரங்களின் அரசியல், வெறுமனே இலங்கையின் மலைத்தொடர்களோடு சுருங்கிவிடுவதில்லை. இது ஓர் உலகளாவிய 'பசுமை வேடமிடுதலின்' (Greenwashing) பிரிக்க முடியாத அங்கம். சர்வதேச அரங்கில், காடாக்கல் (Afforestation) என்ற பெயரில் நடக்கும் மிகக் கொடிய சூழலியல் மோசடிகளில் முதன்மையானது இந்த மரங்களை வளர்ப்பதுதான். இது ஒரு மரத்தின் கதையல்ல; இயற்கை வளங்களைச் சூறையாடும் சர்வதேச மூலதனம், விளிம்புநிலை மக்களை

“பிரித்தானியர் காலத்தில் கொண்டுவரப்பட்ட ‘காணி சுவீகரிப்புச் சட்டங்கள்’ எப்படிச் சுதேச மக்களின் நிலங்களைப் பறித்துத் தோட்டங்களை உருவாக்கினவோ, அதே அதிகார வடிவம்தான் இன்றும் தொடர்கிறது. இன்று பெருந்தோட்டக் கம்பனிகள் ‘நீண்டகால குத்தகை’ என்ற பெயரில் நிலத்தைத் தம் கட்டுப்பாட்டில் வைத்துள்ளன.”

எவ்வாறு அவர்களின் சொந்தக் காணிகளிலிருந்து அந்நியப்படுத்துகிறது என்பதற்கான உலகளாவிய சாட்சியம்.

ஐரோப்பாவின் போர்த்துகல் (Portugal) நாட்டில், காகிதக் கூழ் உற்பத்திக்காகத் தனியார் நிறுவனங்களால் இலட்சக் கணக்கான ஹெக்டேயர் காணிகளில் வளர்க்கப்பட்ட யூகலிப்டஸ் மரங்கள், அந்த நாட்டின் ஒட்டுமொத்தப் பல்லுயிர்மையையும் சிதைத்ததோடு, கோடை காலங்களில் ஏற்படும் பாரிய காட்டுத்தீக்கு (Wild fires) முக்கியக் காரணமாக அமைந்தன. நிலத்தின் ஈரப்பதத்தை முற்றுமுழுதாக உறிஞ்சி, மிக எளிதில் தீப்பற்றக்கூடிய எண்ணெய்த் தன்மையைக் கொண்ட இந்த மரங்கள், இயற்கையான காடுகளை எரித்துச் சாம்பலாக்கின. இது வெறுமனே ஓர் இயற்கை அனர்த்தமல்ல; பெருநிறுவனங்களின் இலாபத்திற்காக இயற்கையின் சமநிலையைப் பலி கொடுக்கும் 'மூலதனத்தின் வன்முறை'.

யூகலிப்டஸ் மரங்கள் ஒரு தேசத்தின் நீர்வளத்தை எப்படிப் பலிவாங்கும் என்பதற்குத் தென்னாபிரிக்கா மிகச் சிறந்த உதாரணம். இந்த மரங்கள் 'ஆக்கிரமிப்புத் தாவரங்கள்' (Invasive Alien Species) எனப் பிரகடனப்படுத்தப்பட்டு, அவற்றை வேரோடு அகற்றுவதற்காகத் தென்னாபிரிக்க அரசாங்கம் 'நீருக்காக உழைப்போம்' (Working for Water) என்ற மாபெரும் தேசியத் திட்டத்தை முன்னெடுத்தது. ஒரு நாடு தன் நீர்வளத்தைக் காக்க, பல மில்லியன் டொலர்களைச் செலவிட்டு இந்த மரங்களை வெட்டி வீழ்த்துகிறது. ஆனால் நாமோ, அதே மரங்களை 'சுற்றாடல் பாதுகாப்பு' என்ற போர்வையில் மலையக மலைத்தொடர்களில் இன்றும் பாதுகாத்து வருகிறோம்.

இந்தச் சர்வதேச உதாரணங்கள் எமக்கு உணர்த்தும் உண்மை ஒன்றே ஒன்றுதான். பிரேசில், சிலி, தென்னாபிரிக்கா என உலகின் எந்த மூலையாக இருந்தாலும், யூகலிப்டஸ் மரங்கள் எங்கு நடப்படுகின்றனவோ, அங்கு விளிம்புநிலை மக்களின் காணி உரிமையும், நீர் உரிமையும் பறிக்கப்படுகின்றன. மலையகத்தில் தேயிலை உற்பத்தியின் ஆரம்பக் காலத்தில் விறகுக்காகவும், புகையிரதப் பாதைகளுக்காகவும் பிரித்தானியரால் கொண்டுவரப்பட்ட இந்த அந்நிய வேர்கள், இன்று உலகளாவிய கார்பன் வர்த்தகத்திற்கும் (Carbon Trading), மரக்கூழ் உற்பத்திகளுக்கும் தீனி போடும் சர்வதேசப் பெருநிறுவனங்களின் ஆயுதங்களாக உருமாறியுள்ளன.

மலையக மக்களின் தாகம் என்பது வெறுமனே பருவமழை பொய்த்ததால் ஏற்பட்ட இயற்கை வறட்சியல்ல; அது பெரு நகரங்களின் பங்குச்சந்தைகளில் தீர்மானிக்கப்படும் கார்ப் பரேட் இலாப வெறியின் நேரடி விளைவு. இந்தக் கட்டுரையில் நாம் முன்னரே விவாதித்த 'நீரியல் எதேச்சாதிகாரம்' (Hydraulic Despotism) மற்றும் 'சூழலியல் ஏகாதிபத்தியம்' என்பன உள்ளூர் பெருந்தோட்டக் கம்பனிகளின் தனிப்பட்ட முடிவுகள் அல்ல; அவை இயற்கையைத் தங்களின் அடிமையாகப் பார்க்கும் உலகளாவிய முதலாளித்துவக் கட்டமைப்பின் நுட்பமான வலைப்பின்னல். காணி உரிமையற்ற ஒரு சமூகத்தின் மீது தொடுக்கப்படும் இந்தச் சூழலியல் போர், உலகெங்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் சந்திக்கும் நில இழப்பின் ஒரு தொடர்ச்சியே ஆகும்.

## பண்பாட்டுச் சிதைவும் அடையாளத் தேடலும்:

நிலம் என்பது வெறும் பொருளாதாரம் அல்ல; அது ஒரு சமூகத்தின் பண்பாடு, ஆன்மீகம் மற்றும் நினைவுகளின் இருப்பிடம். மலையக மக்களின் நாட்டார் தெய்வங்களான முனீஸ்வரனும், மாரியம்மனும் இயற்கையோடும் சுதேச மரங்களோடும் (ஆலமரம், வேம்பு) பின்னிப்பிணைந்த வர்கள். ஆனால், முடிவற்ற யூகலிப்டஸ் காடுகளுக்குள் எந்தத் தெய்வங்களும் குடியிருப்பதில்லை; எந்தப் பறவைகளும் அங்கு வந்து பாடுவதில்லை. அந்த மரங்கள் எழுப்பும் சத்தம் கூட வறண்டதாகவும் அந்நியமானதாகவும் இருக்கும்.

தமது நிலத்திலிருந்து, இயற்கையான சூழலிலிருந்து பிரிக்கப்பட்டு, முற்றுமுழுதாக ஒரு செயற்கையான 'பொறியியல் நிலப்பரப்பில்' (Engineered landscape) வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட மலையகச் சமூகம், தமது பண்பாட்டு வேர்களைத்

“மலையக மக்களின் நாட்டார் தெய்வங்களான முனீஸ்வரனும், மாரியம்மனும் இயற்கையோடும் சுதேச மரங்களோடும் (ஆலமரம், வேம்பு) பின்னிப்பிணைந்தவர்கள். ஆனால், முடிவற்ற யூகலிப்டஸ் காடுகளுக்குள் எந்தத் தெய்வங்களும் குடியிருப்பதில்லை; எந்தப் பறவைகளும் அங்கு வந்து பாடுவதில்லை.”

தேடி இன்றும் தவிக்கிறது. நிலத்தின் மீதான பற்று அறுப டும்போது, கலாசாரப் பிணைப்புகளும் அறுபடுகின்றன. இது ஒரு சமூகத்தின் கூட்டு மனசாட்சியில் (Collective consciousness) ஏற்படுத்தும் உளவியல் ரீதியான வடுக்கள் மிக ஆழமானவை.

### சமூக அடிப்படையிலான மாற்றுப் பொருளாதாரம்:

நிலத்தின் காயங்களை வெறும் சட்டத் திருத்தங்களாலோ, மேடைப் பேச்சுகளாலோ ஆற்றிவிட முடியாது. நூற்றாண்டு களாக ஒரு சமூகத்தின் வியர்வையையும் நிலத்தின் ஈரப்ப தத்தையும் உறிஞ்சிக் கொழுத்த பெருந்தோட்டக் கம்பனி களின் (Regional Plantation Companies - RPCs) எதேச்சா திகாரத்திற்கு முடிவு கட்டாமல், மலையகத்தில் சூழலியல் நீதியையோ சமூக நீதியையோ நிலைநாட்ட முடியாது. 'நீதியான மாற்றம்' (Just Transition) என்பது வெறும் சூழலியல் சொற்பதம் அல்ல; அது அதிகாரத்தையும் வளங்களையும் அடிமட்ட மக்களுக்குக் கைமாற்றும் ஒரு புரட்சிகரமான பொருளாதார நகர்வு. காலனித்துவத்தின் எச்சமாக இன்றும் தொடரும் 'கூலித் தொழிற்முறை' என்ற சிறையிலிருந்து மலையக மக்கள் விடுபட்டு, காணி உரி மையாளர்களாகவும், நிலத்தின் பாதுகாவலர்களாகவும் உருவெடுக்கும் மாற்றுப் பொருளாதாரப் பாதையை இந்த அத்தியாயம் முன்வைக்கிறது.

### சிறு தோட்ட உரிமையாளர் மாதிரி:

இலங்கையின் தேயிலை உற்பத்தியில் ஒரு மாபெரும் வரலாற்று முரண் ஒளிந்திருக்கிறது. தேசிய தேயிலை உற் பத்தியில் 70 சதவீதத்திற்கும் அதிகமான பங்களிப்பை வழங்குபவர்கள் தென்னிலங்கையில் உள்ள 'சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள்' (Tea Smallholders) ஆவர். ஆனால், உலகளாவிய ரீதியில் இலங்கைத் தேயிலைக்குப் பிரமாண்டமான அடையாளத்தைப் பெற்றுத்தந்த மலைய கத்தில், உற்பத்தியின் முழுமையான கட்டுப்பாடு விரல் விட்டு எண்ணக்கூடிய சில பெருநிறுவனங்களின் கைகளிலேயே இன்றும் முடங்கிக் கிடக்கிறது. தென்னி லங்கை விவசாயி தனது காணியின் உரிமையாளராக இருக்கும்போது, மலையகத் தொழிலாளி மட்டும் ஏன் தலைமுறை தலைமுறையாக அதே தோட்டத்தில் கூலித் தொழிலாளியாகவே தன் வாழ்வை முடித்துக்கொள்ள வேண்டும் ?

இந்த முரண்பாட்டைக் களைவதற்கான ஒரே தீர்வு, கம்பனி களிடம் உள்ள தேயிலைக் காணிகளைப் பகிர்ந்தளித்து, மலையகத் தொழிலாளர்களைச் சிறு தோட்ட உரிமையா ளர்களாக மாற்றுவதாகும் (Tea Smallholders Model). நிலத்தை மனிதர்களுக்குப் பகிர்ந்தளிப்பது என்பது முத லாளித்துவக் கட்டமைப்பை உடைக்கும் முதல் படி. கென்யாவின் தேயிலை அபிவிருத்தி முகவராண்மை (Kenya Tea Development Agency - KTDA) இதற்கு ஒரு சிறந்த சர்வதேச உதாரணமாகும். அங்கு 600,000-இற்கும் மேற்பட்ட சிறு தேயிலைத் தோட்ட விவசாயிகளே, தேயிலைத் தொழிற்சாலைகளின் பங்காளர்களாகவும் உரி மையாளர்களாகவும் கூட்டுறவு முறையில் இயங்குகி றார்கள். இந்த மாதிரியை மலையகத்தில் பிரயோகிக் கும்போது, தொழிலாளர்கள் நாளொன்றுக்குக் கிடைக்கும் ஆயிரம் ரூபாய்க்காகக் கைகளை ஏந்தி நிற்கும் நிலை மாறி, தமது நிலத்தின் விளைச்சலுக்குத் தாமே விலை நிர் ணயிக்கும் பொருளாதாரத் தன்னாட்சியைப் பெறுவார்கள். இது ஒரு சமூகத்தின் உளவியலில் ஏற்படுத்தும் கௌரவ மும் அதிகாரமும் அளப்பரியது.

### சமூகக் காடாக்கலும் சுற்றாடல்–வேளாண்மையும் (Agro–Forestry):

நிலத்தை மக்களிடம் கையளிப்பதுடன் மட்டும் இந்தப் புரட்சி நிறைவடைந்துவிடுவதில்லை; அந்த நிலத்தை வறட் சியிலிருந்து மீட்கும் சுற்றாடல் பொறுப்பும் அதனுடனேயே தொடங்குகிறது. கம்பனிகள் விட்டுச்செல்லும் தரிசு நிலங்க ளிலும், யூகலிப்டஸ் ஆக்கிரமித்த வறண்ட சரிவுகளிலும் நாம் மீண்டும் ஒற்றைப் பயிர்ச்செய்கையை திணிக்கக் கூடாது. மாறாக, உலகப் புகழ்பெற்ற சூழலியலாளர் கலாநிதி ரணில் சேனாநாயக்க இலங்கையில் அறிமுகப்ப டுத்திய 'அனலொக் வனவியல்' (Analog Forestry) கோட்பாட்டை இங்கு நடைமுறைப்படுத்த வேண்டும்.



> மலையகத்தில் சூழலியல் நீதியையோ சமூக நீதியையோ நிலைநாட்ட முடியாது. 'நீதியான மாற்றம்' என்பது வெறும் சூழலியல் சொற்பதம் அல்ல; அது அதிகாரத்தையும் வளங்களையும் அடிமட்ட மக்க ளுக்குக் கைமாற்றும் ஒரு புரட்சிகரமான பொருளாதார நகர்வு.

அனலொக் வனவியல் என்பது இயற்கைக் காடுகளின் கட்ட மைப்பை ஒத்தவாறு, பொருளாதாரப் பயன்கொண்ட மரங்க ளையும் செடிகளையும் வளர்க்கும் முறையாகும். மலைய கத்தின் சரிவுகளில் அந்நிய யூகலிப்டஸ் மரங்களை அகற்றி விட்டு, அங்கே நீர் உறிஞ்சும் பல்லுயிர்மையைக் கொண்ட சுதேச மரங்களை நடுதல் வேண்டும். அதே நிலப்பரப்பில், அந்த மரங்களின் நிழலிலும் தண்டுப்பகுதிகளிலும் படர்ந்து வளரக்கூடிய மிளகு, ஏலக்காய், வனிலா மற்றும் கோப்பி போன்ற உயர் பெறுமதியுடைய பணப்பயிர்களைக் கூட்டுப் பயிர்ச்செய்கையாக (Intercropping) மேற்கொள்ளலாம்.

தேயிலை விலையில் சர்வதேசச் சந்தையில் வீழ்ச்சி ஏற்பட் டாலும், இந்தக் குறுநில வேளாண்மை (Micro-ecology models) ஒரு குடும்பத்தின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடை யாமல் தாங்கிப் பிடிக்கும். இது நிலத்தடி நீரை மீட்டெ டுக்கும் ஒரு சூழலியல் செயற்றிட்டம் மட்டுமல்ல; உலக ளாவிய 'நியாயமான வர்த்தகச் சந்தைகளில்' (Fairtrade Markets) மலையக மக்கள் தமது சூழலியல்-விவசாயப் பொருட்களை நேரடியாக விற்பனை செய்வதற்கான ஒரு மாபெரும் பொருளாதாரத் திறப்பு.

## அரச முதலாளித்துவமும் சூழலியல் மீட்சிக்கான வழியும்:

காலனித்துவப் பெருந்தோட்ட முறைமை என்பது பெண்களின் உடலையும் உழைப்பையும் ஈவிரக்கமின்றிச் சுரண்டும் ஒரு ஆணாதிக்கக் கட்டமைப்பு. காணி உரிமை மறுக்கப்பட்ட நிலையில், தேயிலைக் கூடைகளோடு மலையில் ஏறும் பெண்கள் முற்றுமுழுதாகத் தோட்ட முகா மைத்துவத்தின் அதிகாரத்திற்குப் பணிந்து கிடக்கிறார்கள். சிறு தோட்ட உரிமையாளர் மற்றும் சுற்றாடல்-வேளாண்மை முறைமை நடைமுறைக்கு வரும்போது, பெண்கள் வெறும் உழைப்பாளர்களாக அன்றி, உற்பத்தியின் தீர்மானிப்பாளர் களாகவும், கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகளாகவும் உரு மாற்றம் பெறுவார்கள். மெக்ஸிக்கோவின் சியாபாஸ் (Chia-pas) மாகாணத்தில் உள்ள 'ஸபாடிஸ்டா' (Zapatista) சுதேசியப் பெண்கள், தமக்கான கோப்பி உற்பத்திக் கூட்டுற வுகளை அமைத்து, எவ்விதம் சர்வதேசக் கம்பனிகளின் ஆதிக்கத்தை உடைத்தெறிந்தார்களோ, அதற்கொப்பானது இந்த மாற்றம்.

அதேபோல, இன்றைய மலையகத்தின் மிகப்பெரிய துயரம் அதன் இளைய தலைமுறையின் இடப்பெயர்வு. கௌரவ மற்ற தோட்டத் தொழிலை நிராகரிக்கும் இளைஞர்கள், கொழும்பின் உணவகங்களிலும், ஆடைத் தொழிற்சாலைக ளிலும் மிகக் குறைந்த ஊதியத்திற்குத் தமது இளமையைத் தொலைக்கிறார்கள். தமது பூர்வீக நிலத்தில் காணி உரிமையும், நவீன விவசாயத் தொழினுட்பங்களைக் கையாளும் சுற்றாடல்-வேளாண்மையும் அறிமுகப்படுத்தப்ப டும்போது, விவசாயம் என்பது ஒரு 'தொழில்முனைவோ ருக்கான' (Entrepreneurship) கௌரவமான அடையா ளத்தைப் பெறும். அந்த இளைஞர்கள் தமது நிலத்திற்குத் திரும்பி வருவார்கள். ஒரு நிலத்தின் மீதான பிணைப்பு மீண்டும் துளிர்க்கும் இடத்தில்தான், அந்தச் சமூகத்தின் அரசியல் இருப்பும் பலமடைகிறது.

நிலத்தை மக்களிடம் ஒப்படைப்பதென்பது வெறும் பொரு ளாதாரப் பரிவர்த்தனை அல்ல. அது பல தசாப்தங்களாக மௌனிக்கப்பட்டிருந்த ஒரு சமூகத்தின் குரலை மீண்டும் ஒலிக்கச் செய்வது. நிலத்தின் ஆழத்தில் அறுபட்டுக் கிடந்த வேர்களை, மீண்டும் அந்த மண்ணின் சொந்தக்காரர் களோடு இணைத்து வைக்கும் ஒரு வரலாற்று மீட்சி. மலைய கத்தின் விடியல் என்பது கம்பனிகள் வழங்கும் நாளாந்தக் கூலியில் இல்லை; அது, அந்த நிலத்தின் வேர்கள் மீது மக்கள் கொள்ளும் இறையாண்மையிலேயே தங்கியுள்ளது.

இன்று உலகளாவிய அளவில் 'பருவநிலை மாற்றம்' (Cli-mate Change) குறித்த விவாதங்கள் முன்னிலையில் உள்ளன. சர்வதேச அமைப்புகளும், அரசுகளும் கார்பன் வர்த்தகம் (Carbon Trading), பசுமைப் பொருளாதாரம் (Green Economy) என்று பல கோட்பாடுகளைப் பேசு கின்றன. இந்த சர்வதேசப் போக்குகளை தமக்குச் சாதக மாகப் பயன்படுத்திக்கொள்ளும் இலங்கையின் பெருந் தோட்டக் கம்பனிகள், தாம் வளர்க்கும் யூகலிப்டஸ் மரங் களைச் 'சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பங்களிப்பாகக்' கணக்குக் காட்டி சர்வதேச நிதியங்களையும், வரிச்சலுகைக ளையும் பெறுகின்றன. இது 'பசுமை வேடமிடுதல்' (Green-washing) எனும் மிகக் கொடிய கார்ப்பரேட் மோசடி. மலையக மக்களின் பண்பாடு, அவர்கள் வாழ்ந்த நிலத்தோடு இயைந்திருந்தது. ஆனால், காணி சுவீகரிப்பு மற்றும் பெருந்தோட்ட மயமாக்கல் அவர்களின் பண்பாட்டு அடையாளத்தையே சிதைத்துள்ளது. வேரறுக்கப்பட்ட மக்களின் வாழ்வியலில், மரம் என்பது ஒரு வெறும் தாவர மல்ல; அது நம்பிக்கையின் குறியீடு. வீட்டின் முன் இருக்கும் ஒரு மரத்தையோ தோட்டத்தில் இருக்கும் ஒரு செடியையோ பராமரிக்கும் உரிமை கூட மறுக்கப்படும்போது, ஒரு சமூ கத்தின் பண்பாட்டு வேர்கள் அறுக்கப்படுகின்றன. நிலத்தோ டுள்ள அந்த பந்தம் துண்டிக்கப்படும்போது, மலையக மக்கள் தங்கள் சுய அடையாளத்தைத் தேடி அலையும் ஒரு சமூகமாக மாற்றப்படுகிறார்கள்.

மலையகத்தின் சரிவுகளில் வளர்ந்து நிற்கும் ஒவ்வொரு யூக லிப்டஸ் மரமும், அந்த மண்ணின் மௌனமான வரலாற்றைச் சுமந்து நிற்கிறது. அதிகாரத்தின் நிழலில் இந்த மரங்கள் வளரலாம், ஆனால் நிலத்தின் உண்மையான உரிமையாளர் களான மலையக மக்களின் தாகம் தீரப் போவதில்லை. நிலத்தை வெறும் வணிகப் பொருளாகப் பார்க்கும் பார்வையை மாற்றி, அந்த நிலத்தின் சூழலியல் மற்றும் சமூக வரலாற்றை மீட்டெடுப்பதன் மூலமே, இந்த 'அந்நிய வேர்களை' அகற்றிவிட்டு, மண்ணின் உண்மையான வேர்களை மீண்டும் துளிர்க்கச் செய்ய முடியும்.

இந்த அரசியல் என்பது, மரங்களை வெட்டுவது மட்டுமல்ல; அந்த மரங்களுக்குப் பின்னால் மறைந்து நிற்கும் அதிகார அமைப்பைச் சீர்திருத்துவதுமாகும்.



Arulkarki@thaiveedu.com

சரவணன் லக்ஷரன்

# ஒரு பேராசிரியரின் கனவும் அதன் முக்கியத்துவமும் தபோவனம்

ஒரு குழந்தையின் சிரிப்பைப் பார்க்கும்போது, அந்தச் சிரிப்புக்குப் பின்னால் இருக்கும் கதையை நாம் பெரும்பாலும் அறிந்துகொள்வ தில்லை. சில குழந்தைகளின் சிரிப்புக்குப் பின்னால் அன்பும் பாது காப்பும் நிறைந்த குடும்பம் இருக்கலாம்; இன்னும் சில குழந்தைகளின் சிரிப்புக்குப் பின்னால் சொல்லப்படாத வலிகளும், குடும்பப் பிரச்சினை களும், தனிமையும், பயமும், பொருளாதார நெருக்கடியும் மறைந்திருக் கலாம். குழந்தைப் பருவம் என்பது வாழ்க்கையின் மிக அழகான காலமாகக் கருதப்பட்டாலும், எல்லாக் குழந்தைகளுக்கும் அந்த அழகு ஒரே மாதிரியாகக் கிடைப்பதில்லை. சில குழந்தைகள் தங்கள் வயதிற்கு அப்பாற்பட்ட அனுபவங்களைச் சுமந்துகொண்டு வளர்கின்றனர். இத்தகைய குழந்தைகளின் வாழ்க்கையில் அவர்களது கடந்த காலத்தை மாற்ற முடியாவிட்டாலும், அவர்களின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் மாற்றுவதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்க முடியும். அத்தகைய ஒரு மனிதநேயக் கனவின் உயிருள்ள வெளிப்பாடாகவே யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் இயங்கிவரும் தபோவனத்தைப் பார்க்க வேண்டியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலணைத் தீவுப் பகுதியில் அமைந்துள்ள அல்லைப்பிட்டி கிராமத்தில் இயற்கை, ஆன்மீகம், கல்வி, உளவியல் நலம் மற்றும் சமூக மேம்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட சமூக மையமாக தபோவனம் (Thapova-nam) விளங்குகின்றது. 'தபஸ்' என்பது தவம், தியானம் அல்லது ஆன்மீகச் சிந்தனையையும், 'வனம்' என்பது இயற்கைச் சூழலையும் குறிக்கும் நிலையில், இயற்கையோடு இணைந்த அமைதியான வாழ்வியல் மற்றும் உளநலச் சூழலை உருவாக்கும் நோக்கத்தை 'தபோ வனம்' என்ற பெயர் பிரதிபலிக்கின்றது. பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களால் அல்லைப்பிட்டியில் சுமார் 10 ஏக்கர் அளவிலான வெற்றுக் காணியைப் பெற்று, அதனை படிப்படியாக இயற்கையுடன் இணைந்த அமைதியான சூழலாக மாற்றப்பட்டது. காலப்போக்கில் தபோவனம் தனிப்பட்ட ஓய்வு அல்லது இயற்கைச் சூழல் கொண்ட இடமாக மட்டுப்படாமல், குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் கல்வி, ஆளுமை வளர்ச்சி, திறன் மேம்பாடு, சமூக ஒற்றுமை மற்றும் இயற்கைப் பாதுகாப்பு ஆகியவற்றை முன்னிறுத்தும் சமூக மையமாக வளர்ச்சியடைந்தது.




தபோவனத்தைப் புரிந்துகொள்ள அதன் பின்னணியில் உள்ள சமூக யதார்த்தத்தை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு இலங்கையின் சமூ கங்கள் நீண்டகாலப் போரின் பல்வேறு தாக்கங்களை எதிர்கொண்டுள்ளன. இடம்பெயர்வு, குடும்ப உறுப்பினர் களின் இழப்பு, காயங்கள், கைது, சித்திரவதை, வீடு மற்றும் வாழ்வாதார இழப்பு போன்ற அனுபவங்கள் பல குடும்பங்களின் வாழ்க்கையில் ஆழமான தடங்களை ஏற்படுத்தியுள்ளன. போர் முடிவடைந்த பின்னரும் அதன் உளவியல் மற்றும் சமூக விளைவுகள் முற்றிலும் மறைந்துவிடவில்லை. குடும்ப உறவுகளின் சீர்குலைவு, வறுமை, வேலையின்மை, மதுபாவனை, போதைப்பொருள் பயன்பாடு, குடும்ப வன்முறை போன்ற பிரச்சி னைகள் சமூகத்தின் பல்வேறு நிலைகளில் தொடர்ந்தன. இதனுடன் COVID-19 பெருந்தொற்று மற்றும் நாட்டின் பொருளாதார நெருக்கடியும் பல குடும்பங் களின் வாழ்க்கையை மேலும் பாதித்தன. இப்படிப்பட்ட

prasadbatti@gmail.com

சூழலில் வளர்கின்ற குழந்தைகள் தங்களுக்குச் சுற்றிலும் காணும் எதிர்மறையான நடத்தைகளையே இயல்பான வாழ்க்கை என்று கருதும் நிலை உருவாகக்கூடும். இதனால் ஒரு தலைமுறையின் காயம் இன்னொரு தலைமுறையின் வாழ்க்கையிலும் தொடரும் அபாயம் உள்ளது. இந்த எதிர்ம றையான சுழற்சியை உடைத்து, குழந்தைகளுக்குப் புதிய அனுபவங்களையும் புதிய சிந்தனைகளையும் புதிய நம்பிக் கைகளையும் வழங்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே தபோவனத்தின் குழந்தை வளப்படுத்தல் செயற்பாடுகளைப் பார்க்க வேண்டும்.

ஒரு சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பல்வேறு வழிகள் இருக்கலாம். ஆனால் குழந்தைகளின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவது என்பது எதிர்காலத்தை மாற்றுவதற்குச் சமமானது. இந்த உண்மையை அடிப்ப டையாகக் கொண்டே தபோவனத்தின் பயணம் அமைந்துள்ளது. 2024-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குழந்தை வளர்ச்சித் திட்டம் 2025-ஆம் ஆண்டில் தொடர்ச் சியான Child Enrichment Programme ஆக விரிவடைந்தது. குழந்தைகளின் உடல், உள, சமூக, பண்பாட்டு, படைப் பாற்றல் மற்றும் ஆன்மீக வளர்ச்சியை ஒருங்கிணைந்த முறையில் மேம்ப டுத்தும் வகையில் பல்வேறு செயற்பா டுகள் முன்னெடுக்கப்பட்டன. 2025-ஆம் ஆண்டில் 95 குழந்தைகள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், ஒரு நாள் நிகழ்ச்சியில் சராசரியாக 30 முதல் 50 குழந்தைகள் வரை பங் கேற்றுள்ளனர். சனிக்கிழமைகளில் மட்டுமல்லாமல், சில ஞாயிற்றுக்கிழ மைகள், பொது விடுமுறைகள் மற்றும் பாடசாலை விடுமுறைகளிலும் செயற் பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.





ஆனால் 95 குழந்தைகள் என்ற எண்ணிக்கைக்குள் தபோவனத்தின் முழுமையான அர்த்தத்தை அடக் கிவிட முடியாது. ஒரு குழந்தை தன்னம்பிக்கையுடன் பேசத் தொடங் குவது ஒரு எண்ணிக்கை அல்ல. ஒரு குழந்தை தனது உணர் வுகளை வெளிப்படுத்தத் தொடங்குவது ஒரு புள்ளிவிவரம் அல்ல. தனிமையில் இருந்த குழந்தை நண்பர்களை உரு வாக்கத் தொடங்குவது வெறும் நிகழ்ச்சியின் விளைவு அல்ல. பயந்த குழந்தை ஒரு புதிய செயற்பாட்டில் தன்னம் பிக்கையுடன் பங்கேற்பது ஒரு சிறிய மாற்றமாகத் தோன்றி னாலும், அந்த மாற்றம் அதன் எதிர்கால வாழ்க்கையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. எனவே தபோ வனத்தின் உண்மையான வெற்றி அதன் நிகழ்ச்சிகளின் எண் ணிக்கையில் அல்ல அந்த நிகழ்ச்சிகளின் மூலம் குழந்தை களின் மனதிலும் நடத்தையிலும் உருவாகும் சிறிய, ஆனால் அர்த்தமுள்ள மாற்றங்களில்தான் இருக்கிறது.

தபோவனத்தின் செயற்பாடுகளில் கலைக்கு வழங்கப்பட் டுள்ள முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கது. குழந்தைகளுக்கு இசை, Piano, பாடல், நடனம் மற்றும் பல்வேறு படைப் பாற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஓவியப் பயிற்சிகளும் முன்னெடுக்கப் பட்டுள்ளன. ஒரு குழந்தைக்கு ஓவியம் வரைவதற்காக ஒரு காகிதமும் பென்சிலும் கொடுக்கும்போது, அது வெறும் கலைப் பயிற்சிக்கான கருவிகளை வழங்குவதாக மட்டும் இருக்காது. குழந்தையின் மனதில் இருக்கும் எண்ணங்க ளையும் உணர்வுகளையும் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு மொழியில் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பையும் அது வழங்குகிறது. குறிப்பாக மதுபானம் மற்றும் போதைப் பொருள் பாவனையின் விளைவுகள் குறித்து குழந்தைகள் ஓவியங்களை உருவாக்கியி ருப்பது, சமூகப் பிரச்சினை களைப் பற்றி குழந்தைகள் சிந்தித்து, தங்களது சொந்த படைப்பாற்றல் மொழியில் வெளிப்ப டுத்துவ த ற்க ான வாய்ப்பை தபோவனம் வழங் கியிருப்பதைக் காட்டுகிறது. குழந்தைகளின் மனதைப் புரிந்துகொள்ளும் இன்னொரு முக்கியமான வழியாக நாடகச் செயற்பாடுகள் அமைந்துள் ளன. யாழ்ப்பாணப் பல்க லைக்கழகத்தின் நாடகத் துறையினருடன் இணைந்து குழந்தைகளுக்கான நாடகப் பயிற்சிகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. நாடகத்தின் மூலம் குழந்தைகள் தமது எண்ணங்க ளையும் உணர்வுகளையும் வெளிப் படுத்துவதற்கான வாய்ப்பைப் பெற் றுள்ளனர். சில குழந்தைகள் நாடகச் செயற்பாடுகளுக்குப் பின்னர் தங்களது மனம் அமைதியாக இருந்ததாகவும், தனிப்பட்ட பிரச்சினைகளை மறந்து அமைதியை அனுபவித்ததாகவும் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் நாடகம் வெறும் மேடை நிகழ்ச்சியாக இல்லாமல், குழந்தைகளின் உணர்ச்சி வெளிப்பாட்டுக்கும் உள அமை திக்கும் உதவும் ஒரு வழிமுறையாக மாறுகிறது. குழந்தை நேரடியாக தன் கதையைச் சொல்ல முடியாதபோது, சில நேரங்களில் ஒரு கதாபாத்திரத்தின் மூலம் அதைச் சொல்ல முடியும். அந்த வகையில் கலை மற்றும் நாடகம் குழந்தைகளின் உள்ளார்ந்த உலகத்திற்குச் செல்லும் மென்மையான கதவுகளாகின்றன.

இன்றைய உலகில் குழந்தைகளின் மனநலத்தைப் பற்றிப் பேசுவது மிகவும் அவசியமானதாகியுள்ளது. கல்விப் போட்டி, குடும்பப் பிரச்சினைகள், சமூக அழுத்தங்கள், கைபேசி மற்றும் சமூக ஊடகப் பயன்பாடு போன்ற பல்வேறு காரணிகள் குழந்தைகளின் மனநிலையைப் பாதிக்கக்கூடிய சூழலை உருவாக்குகின்றன. இதனால் குழந்தைகளுக்கு அறிவை வழங்குவதோடு மட்டுமல்லாமல், தங்களுடைய

உணர்வுகளை அடையாளம் காணவும் அவற்றை ஆரோக்கியமான முறையில் வெளிப்படுத்தவும் கற்றுக்கொடுப்பது அவசியமாகிறது. தபோவனத்தில் மகிழ்ச்சி, அன்பு, வெறுப்பு, ஆச்சிரியம், பயம், கோபம் போன்ற உணர்வுகளை அடையாளம் காணும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. Bullying மற்றும் Emotional Bullying தொடர்பான விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. குழந்தை 'எனக்கு கோபமாக இருக்கிறது', 'எனக்கு பயமாக இருக்கிறது, 'எனக்கு வருத்தமாக இருக்கிறது' என்று தனது உணர்வுகளை அடையாளம் கண்டு சொல்லக் கற்றுக்கொள்ளும் போது, அது தனது நடத்தையைப் புரிந்துகொள்வதற்கான முதல் படியை எடுத்து வைக்கிறது.

இதனுடன் யோகா மற்றும் தியானம் போன்ற செயற்பாடுகளும் தபோவனத்தின் திட்டத்தில் இடம்பெற்றுள்ளன. சுவாசத்தைக் கட்டுப்படுத்துதல், உடல் மற்றும் மனதைத் தளர்த்துதல், மனதை அமைதிப்படுத்துதல் மற்றும் நேர்மறையான சிந்தனையை வளர்த்தல் போன்ற பயிற்சிகள் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. சிறு கதைகள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலமாகவும் நேர்மறையான சிந்தனையை வளர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான திறன்களை மட்டுமே கற்றுக்கொடுப்பதை விட, தோல்வி, பயம், கோபம், பதற்றம் போன்ற உணர்வுகளை எவ்வாறு கையாள்வது என்பதைக் கற்றுக்கொடுப்பதும் அவசியமான வாழ்க்கைக் கல்வியாகும். இந்த வகையில் தபோவனத்தின் உள அமைதியை மையப்படுத்திய செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.



'நான் யார்?' என்ற கேள்வி ஒரு குழந்தையின் வளர்ச்சியில் மிகப் பெரிய கேள்வியாக இருக்கலாம். தபோவனத்தில் குழந்தைகள் தங்களைப் பற்றிச் சிந்திக்கவும், தங்களுடைய விருப்பங்கள், பலங்கள், பலவீனங்கள் மற்றும் எதிர்கால விருப்பங்களைப் பற்றி கலந்துரையாடவும் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 'நான் என்ன ஆக விரும்புகிறேன்?', 'என்னுடைய பலம் என்ன?', 'என்னுடைய பலவீனம் என்ன?' போன்ற கேள்விகள் குழந்தைகளின் சுயஅறிவை வளர்க்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளன. தன்னை அறிந்துகொள்ளத் தொடங்கும் குழந்தை தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றியும் சிந்திக்கத் தொடங்கும். குடும்பச் சூழல் அல்லது சமூகச் சூழல் தன் வாழ்க்கையை முழுமையாக நிர்ணயிக்காது என்பதை உணர்வதற்கான அடிப்படையையும் இத்தகைய சுயஅறிவு செயற்பாடுகள் உருவாக்குகின்றன. தபோவனத்தின் பார்வையில் குழந்தையின் வளர்ச்சி மனதிற்குள் மட்டும் நடைபெறுவதில்லை. உடலும் வளர வேண்டும்; ஆரோக்கியமும் பாதுகாக்கப்பட வேண்டும். இதனால் சுகாதாரம், ஊட்டச்சத்து, சத்துணவு மற்றும் வீட்டுத் தோட்டம் போன்ற செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு பல்வேறு ஊட்டச்சத்து உணவுகள் வழங்கப்பட்டதுடன், வீட்டுத் தோட்டம் அமைக்கும் செயற்பாடுகள் மூலமாக ஆரோக்கியமான உணவு மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய புரிதலை உருவாக்க முயற்சி செய்யப்பட்டுள்ளது. ஒரு குழந்தை மண்ணில் விதையை விதைத்து, அது வளர்வதைப் பார்க்கும் அனுபவம் வெறும் தோட்டக்கலைச் செயற்பாடு அல்லபொறுமை, பொறுப்பு, இயற்கை மீதான அன்பு மற்றும் வளர்ச்சியை எதிர்பார்க்கும் நம்பிக்கை ஆகியவற்றை வளர்க்கும் வாழ்க்கைப் பாடமாகவும் அது அமைகிறது.

உடல் செயற்பாடுகளிலும் தபோவனம் கவனம் செலுத்தியுள்ளது. நீச்சல், பாரம்பரிய விளையாட்டுகள், கராத்தே மற்றும் Martial Arts போன்ற செயற்பாடுகள் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக நீச்சல் பயிற்சியின் மூலம் சில குழந்தைகள் நீரின் மீதான பயத்தை குறைத்து அடிப்படை நீச்சல் திறன்களைப் பெற்றதாக அறிக்கை குறிப்பிடுகிறது. ஒரு குழந்தை பயந்த ஒன்றை மெதுவாக எதிர்கொண்டு அதை கையாளக் கற்றுக்கொள்ளும் போது, அந்த அனுபவம் அதன் மனதில் 'என்னால் முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்குகிறது. இதனால் விளையாட்டு என்பது வெறும் உடல் இயக்கமாக இல்லாமல், தன்னம்பிக்கை, ஒழுக்கம், துணிவு மற்றும் சுயகட்டுப்பாடு ஆகியவற்றை வளர்க்கும் ஒரு கல்வி முறையாகவும் அமைகிறது.

ஒரு குழந்தையை வளர்ப்பது பெற்றோரின் பொறுப்பு மட்டுமல்ல அது முழு சமூகத்தின் பொறுப்பு. தபோவனத்தின் செயற்பாடுகள் இந்த உண்மையைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. பெற்றோர், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மருத்துவர்கள், உளவியல் பயிற்சியாளர்கள், கல்வியாளர்கள், உள்ளூர் இளைஞர்கள், தன்னார்வலர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் என பல்வேறு தரப்பினரும் இந்தப் பணியில் இணைந்துள்ளனர். குழந்தை மற்றும் பெண்கள் பாதுகாப்பு, கைப்பேசி பயன்பாட்டின் நன்மை தீமைகள், குடும்பச் சூழல், மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனையின் குழந்தைகள் மீதான தாக்கம் போன்ற விடயங்களில் விழிப்புணர்வு மற்றும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதனால் குழந்தையின் பிரச்சினையை குழந்தைக்குள் மட்டும் தேடாமல், குழந்தையைச் சுற்றியுள்ள

குடும்ப மற்றும் சமூகச் சூழலையும் கருத்தில் கொள்ளும் அணுகுமுறை உருவாகிறது.

இந்த முயற்சியில் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பும் முக்கியமானதாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் மற்றும் மருத்துவர்கள் தபோவனத்தைப் பார்வையிட்டுள்ளனர். கல்வியாளர்கள், உளவியல் பயிற்சியாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளின் நிபுணர்களும் தபோவனத்தின் செயற்பாடுகளுடன் இணைந்துள்ளனர். பல்கலைக்கழகங்களில் உருவாகும் அறிவு வகுப்பறைகளுக்குள்ளும் ஆய்வுக் கட்டுரைகளுக்குள்ளும் மட்டும் தங்கிவிடாமல், சமூகத்தின் தேவையுள்ள குழந்தைகளின் வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் போது அந்த அறிவு உயிர் பெறுகிறது. இந்த வகையில் தபோவனம் பல்கலைக்கழகத்திற்கும் சமூகத்திற்கும் இடையிலான ஒரு பாலமாகத் திகழ்கிறது. ஒரு பேராசிரியரின் கனவு என்பது மாணவர்களுக்கு அறிவை வழங்குவதில் முடிவடையாமல், அந்த அறிவு சமூக மாற்றமாக மாற வேண்டும் என்பதையும் தபோவனத்தின் செயற்பாடுகள் நினைவூட்டுகின்றன.



தபோவனத்தின் செயற்பாடுகளின் உண்மையான மதிப்பை குழந்தைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் வெளிப்படுத்துகின்றன. ஆரம்பத்தில் வெவ்வேறு பகுதிகள் மற்றும் சமூகப் பின்னணிகளில் இருந்து வந்த குழந்தைகளுக்கிடையே ஏற்றுக்கொள்ளாமை மற்றும் பிரிவுணர்வு காணப்பட்ட போதிலும், காலப்போக்கில் அவர்கள் ஒருவரையொருவர் ஏற்றுக்கொண்டு ஒன்றாகச் செயற்படத் தொடங்கியுள்ளனர். சில குழந்தைகளிடம் காணப்பட்ட ஆக்கிரமிப்பு நடத்தை மற்றும் வன்முறையான மொழிப் பயன்பாடு குறைந்து, மரியாதையான தொடர்பாடலும் சுயகட்டுப்பாடும் அதிகரித்ததாக அறிக்கை குறிப்பிடுகிறது. சில குழந்தைகள் முன்பு அறியாத செயற்பாடுகளில் ஆர்வம் காட்டத் தொடங்கியதுடன், Mindfulness, Structured Play மற்றும் குழுச் செயற்பாடுகளிலும் அதிக ஈடுபாட்டைக் காட்டியுள்ளனர்.



தபோவனத்தின் மனிதநேய அணுகுமுறையை இன்னும் ஆழமாக வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வு அங்கு பணியாற்றிய ஒரு Facilitator-இன் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றமாகும். ஆரம்பத்தில் பதற்றம், தன்னம்பிக்கைக் குறைவு மற்றும் குழுவுடன் இணைந்து செயல்படுவதில் சிரமம் போன்ற பிரச்சினைகளை எதிர்கொண்ட அவருடைய பின்னணியில் கடினமான குழந்தைப் பருவம், மதுபாவனையுடன் தொடர்புடைய குடும்பச் சூழல், குடும்ப வன்முறை, வறுமை மற்றும் குடும்பப் பிரிவுகள் போன்ற அனுபவங்கள் இருந்ததாக அறிக்கை குறிப்பிடுகிறது. அவருடைய குறைகளை மட்டும் பார்த்து மதிப்பிடுவதற்குப் பதிலாக, அவருடைய வாழ்க்கைப் பின்னணியைப் புரிந்துகொண்டு, உணர்வுபூர்வ ஆதரவு, வழிகாட்டல், ஊக்குவிப்பு, நேர்மறையான பின்னூட்டம் மற்றும் பொறுப்புகளை வழங்குவதன் மூலம் தபோவனம் அவருடைய வளர்ச்சிக்கு உதவியுள்ளது. காலப்போக்கில் அவர் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு, குழந்தைகளின் நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு வழிநடத்தும் நிலைக்கு வளர்ந்துள்ளார்.

இங்கு தபோவனத்தின் மிக முக்கியமான மனிதநேயத் தத்துவம் வெளிப்படுகிறது. ஒருவருடைய குறைகளை மட்டும் பார்த்து அவரை வரையறுப்பதற்குப் பதிலாக, அந்தக் குறைகளுக்குப் பின்னால் இருக்கும் வாழ்க்கைக் கதையைப் புரிந்துகொள்வது அவசியம். ஒரு மனிதர் இன்று எப்படி இருக்கிறார் என்பதற்கு அவன் கடந்த கால அனுபவங்களும் காரணமாக இருக்கலாம். ஆனால் அந்தக் கடந்த காலமே அவருடைய எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டிய அவசியமில்லை. சரியான ஆதரவு, நம்பிக்கை, வாய்ப்பு மற்றும் வழிகாட்டல் கிடைத்தால் ஒருவருக்குள் மறைந்திருக்கும் திறமைகள் வெளிப்பட முடியும். தபோவனத்தின் இந்த அணுகுமுறை குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் பொருந்தக்கூடிய ஒரு ஆழமான சமூகப் பாடமாக அமைகிறது. தபோவனத்திற்கு வரும் குழந்தைகளுக்கு அது ஒரு நிகழ்ச்சி நடைபெறும் இடமாக மட்டும் இல்லாமல், பாதுகாப்பான இடமாகவும் மாறியிருப்பது அதன் மிகப்பெரிய சாதனைகளில் ஒன்றாகும். குடும்பங்களில் மதுபாவனை, தொடர்ச்சியான மோதல்கள் அல்லது பிற சிரமங்களை எதிர்கொள்ளும் சில குழந்தைகளுக்கு தபோவனம் தங்களுடைய கவலைகளைத் தற்காலிகமாக மறந்து நண்பர்களுடன் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய இடமாக அமைந்துள்ளது. தபோவனத்திற்கு முதலில் வந்தபோது பயமாக இருந்ததாகவும், பின்னர் நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் இருப்பதாகவும் ஒரு குழந்தை தெரிவித்துள்ளது. Karate, Piano, Swimming, Drama போன்ற பல்வேறு செயற்பாடுகள் தங்களது திறமைகளை வெளிப்படுத்த உதவுவதாகவும், மகிழ்ச்சியாக இருந்தாலும் கவலையாக இருந்தாலும் தன்னை வரவேற்கும் இடமாக தபோவனம் மாறியுள்ளதாகவும் அந்தக் குழந்தை தெரிவித்துள்ளது.

தபோவனத்தின் செயற்பாடுகள் எதிர்காலத்திலும் மேலும் முறையாக வளர வேண்டிய தேவையும் உள்ளது. குழந்தைகளில் ஏற்படும் மாற்றங்களை Case Histories, Home Visits

மற்றும் Quantitative Measures மூலம் பதிவு செய்து மதிப்பிடுவதற்கான திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும் குழந்தைகளின் வயது மற்றும் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப குழுக்களைப் பிரித்து பயிற்சிகளை வழங்குவதும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இத்தகைய முறையான மதிப்பீடுகள் தபோவனத்தின் செயற்பாடுகளால் குழந்தைகளின் உளவியல், சமூக மற்றும் கல்வி வளர்ச்சியில் ஏற்படும் நீண்டகால மாற்றங்களை அறிவியல் ரீதியாகப் புரிந்துகொள்ள உதவும். அதேவேளை, எதிர்கால நிதி, வளங்கள், பயிற்சிகள் மற்றும் சமூகப் பங்களிப்புகளை திட்டமிடுவதற்கும் இத்தகைய ஆதாரங்கள் முக்கியமானவையாக அமையும்.

இங்கே 'ஒரு பேராசிரியரின் கனவு' என்ற கருத்து தனிப்பட்ட கனவைத் தாண்டி ஒரு சமூகக் கனவாக மாறுகிறது. ஒரு பேராசிரியரின் கனவு என்பது ஒரு பல்கலைக்கழகத்தைப் பற்றிய கனவு மட்டுமல்ல பல்கலைக்கழகத்தின் அறிவு சமூகத்தின் கடைசி மனிதரையும் சென்றடைய வேண்டும் என்ற கனவாக இருக்கலாம். குழந்தைகள் தங்கள் குடும்பத்தின் கடந்தகாலத்தால் கட்டுப்படுத்தப்படாமல் தங்கள் எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்ற கனவாக இருக்கலாம். ஒரு குழந்தை தனது வீட்டில் பார்த்த வன்முறையை தனது வாழ்க்கையில் மீண்டும் உருவாக்கக்கூடாது என்ற கனவாக இருக்கலாம். ஒரு குழந்தை தனிமையில் வளராமல் நண்பர்களுடன் வளர வேண்டும் என்ற கனவாக இருக்கலாம். ஒரு குழந்தை தனது திறமைக்கு வாய்ப்பு கிடைக்காமல் மறைந்து போகக்கூடாது என்ற கனவாக இருக்கலாம். அந்த வகையில் தபோவனம் ஒரு நிறுவனத்தின் கனவை அல்ல, ஒரு தலைமுறையின் எதிர்காலத்தைப் பற்றிய கனவைத் தாங்கிக்கொண்டிருக்கிறது.

ஒரு நாள் தபோவனத்தில் ஓவியம் வரைந்த குழந்தை நாளை ஒரு கலைஞராக மாறலாம். Piano கற்ற குழந்தை நாளை ஒரு இசைக்கலைஞராக மாறலாம். நாடக மேடையில் நின்ற குழந்தை நாளை ஒரு சமூகத் தலைவராக மாறலாம். நீச்சல் கற்ற குழந்தை நாளை தன்னுடைய பயங்களைத் தாண்டி வாழ்க்கையின் பெரிய சவால்களை எதிர்கொள்ளலாம். ஆனால் இவற்றைக் காட்டிலும் முக்கியமான மாற்றம் இன்னொன்று இருக்கலாம். இன்று தபோவனத்தில் பாதுகாப்பையும் அன்பையும் அனுபவித்த ஒரு குழந்தை, நாளை தன்னுடைய குழந்தையை வளர்க்கும்போது அதே பாதுகாப்பையும் அன்பையும் வழங்கலாம். அப்போது மாற்றம் ஒரு குழந்தையிலிருந்து இன்னொரு குழந்தைக்குச் செல்கிறது. ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்குச் செல்கிறது. எதிர்மறையான தலைமுறைச் சுழற்சியை முறியடித்து நேர்நிலையான தலைமுறைச் சுழற்சியை உருவாக்கும் வாய்ப்பு அங்கே உருவாகிறது. இதனால்தான் தபோவனத்தின் முக்கியத்துவம் அதன் கட்டடத்தில் இல்லை; அது உருவாக்கும் மனிதர்களில் உள்ளது. அதன் முக்கியத்துவம் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையில் இல்லை; அந்த நிகழ்ச்சிகளால் குழந்தைகளின் வாழ்க்கையில் உருவாகும் மாற்றங்களில் உள்ளது. அதன் முக்கியத்துவம் ஒரு வருட அறிக்கையில் மட்டும் இல்லை; அந்த அறிக்கையின் பின்னால் இருக்கும் குழந்தைகளின் உண்மையான வாழ்க்கைக் கதைகளில் உள்ளது. தபோவனம் குழந்தைகளுக்குக் கல்வியை மட்டும் வழங்கவில்லை; அனுபவத்தை வழங்குகிறது. விளையாட்டை மட்டும் வழங்கவில்லை; நட்பை வழங்குகிறது. கலைப் பயிற்சியை மட்டும் வழங்கவில்லை; உணர்வுகளை வெளிப்படுத்தும் மொழியை வழங்குகிறது. தியானத்தை மட்டும் கற்றுக்கொடுக்கவில்லை; மன அமைதியைத் தேடும் வழியைக் காட்டுகிறது. துணிவை மட்டும் வழங்கவில்லை; ஆரோக்கியமான வாழ்க்கை பற்றிய புரிதலை உருவாக்குகிறது. இவை அனைத்தையும் ஒன்றிணைத்து குழந்தையின் முழுமையான வளர்ச்சியை நோக்கி நகர்கிறது.

ஒரு பேராசிரியரின் கனவு காகிதத்தில் எழுதப்பட்ட ஒரு எண்ணமாகத் தொடங்கியிருக்கலாம். ஆனால் அந்தக் கனவு இன்று அல்லைப்பிட்டியின் குழந்தைகளின் காலடிச் சத்தத்தில், அவர்களின் ஓவியங்களின் வண்ணங்களில், அவர்களின் பாடல்களில், நாடகங்களில், விளையாட்டுகளில், நீச்சல் பயிற்சிகளில், தியானத்தின் அமைதியில், நண்பர்களுக்கிடையிலான சிரிப்பில், 'நானும் முடியும்' என்று சொல்லத் தொடங்கும் தன்னம்பிக்கையில் உயிர்பெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு குழந்தை தன் வாழ்க்கையைப் பற்றி நம்பிக்கையுடன் சிந்திக்கத் தொடங்கும் அந்தக் கணமே அந்தக் கனவின் வெற்றி தொடங்குகிறது.

அல்லைப்பிட்டியின் கடற்காற்று தொடர்ந்து வீசிக்கொண்டிருக்கும். கடல் தொடர்ந்து அலைகளை அனுப்பிக்கொண்டிருக்கும். அந்த அலைகளுக்கு நடுவே தபோவனத்தின் குழந்தைகள் தங்கள் சிறிய உலகத்தைப் பெரிதாக்கிக் கொண்டிருக்கிறார்கள். நேற்று அவர்களுக்கு இருந்த எல்லைகள் இன்று கொஞ்சம் விரிந்திருக்கலாம். இன்று அவர்கள் காணும் கனவு நாளை இன்னும் பெரிதாகலாம். அந்தக் கனவு அவர்களுடைய தனிப்பட்ட எதிர்காலத்தை மட்டுமல்ல, அவர்களைச் சுற்றியுள்ள குடும்பங்களையும் சமூகத்தையும் மாற்றும் சக்தியாக மாறலாம். ஒரு குழந்தையின் கையில் ஒரு சிறிய விதையை வைக்கும் போது, அது நாளை ஒரு பெரிய மரமாக வளரும் என்று நாம் உறுதியாகக் கூற முடியாது. ஆனால் அந்த விதையை மண்ணில் வைக்காமல் மரம் உருவாகாது என்பதைக் கூற முடியும். தபோவனம் அத்தகைய விதைகளை விதைத்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு குழந்தையும் ஒரு விதை. ஒவ்வொரு அனுபவமும் ஒரு துளி நீர். ஒவ்வொரு அன்பான வார்த்தையும் ஒரு சிறிய வெளிச்சம். ஒவ்வொரு வாய்ப்பும் ஒரு புதிய கிளை. அவை அனைத்தும் ஒன்றிணையும் போது, ஒரு தலைமுறையின் நிழலைத் தரக்கூடிய மரம் உருவாகலாம். அதனால் தபோவனம் என்பது ஒரு இடத்தின் பெயர் மட்டுமல்ல. அது ஒரு கனவின் பெயர். அது ஒரு சமூகப் பொறுப்பின் பெயர். அது குழந்தைப் பருவத்தின் கண்ணியத்தைப் பாதுகாக்கும் முயற்சியின் பெயர். அது கடந்த காலத்தின் காயங்களை மறைக்காமல், அவற்றைத் தாண்டி எதிர்காலத்தை நோக்கிச் செல்லும் நம்பிக்கையின் பெயர். அதனால்தான்ஒரு பேராசிரியரின் கனவு இன்று ஒரு குழந்தையின் சிரிப்பாக மாறும்போது, அந்தச் சிரிப்பு தனிப்பட்ட மகிழ்ச்சியாக மாறுகிறது. அது ஒரு சமூகத்தின் நாளைய நம்பிக்கையாக மாறுகிறது.



laksharan.sarawanan@thaiveedu.com

# ஹோமோன்களும் உள நலமும்

tg.theeban@gmail.com

போல் ஜோசேப்

> நரம்பியல் விஞ்ஞானம் மற்றும் உளவியல் அடிப்படையில் மனம் என்பது உணர்வு நிலை, எண்ணங்கள், சிந்தனை, பகுத்தறிவு, கற்பனை, நினைவாற்றல், விழிப்புணர்வு, அறிவாற்றல்திறன் ஆகியவற்றின் தொகுப்பாக மூளையுடன் நெருக்கமாகத் தொடர்புடைய செயல்முறையாகும்.



கடந்த 2018-இல் வெளியிட்ட எனது 'நலம் நலமறிய ஆவல்' நூலில் பெரும்பாலும் மனநலம் தொடர்பான கட்டுரைகளும் ஆலோசனைகளும் தீர்வுகளும் பற்றி எழுதி இருந்தேன். பெரும்பாலும் சமூகத்தில் பேசு பொருளாக இல்லாத புதிய கருத்துகளை முன்வைக்க வேண்டும் என்ற ஆவல் இந்தக் கட்டுரையை எழுதத் தூண்டியது. பொதுமக்களுக்கான நலவாழ்வு கருத்தரங்குகளில் இதைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திவருகின்றேன். ஹோமோன்களைப் பற்றிய, மனநலம் பற்றிய பல மருத்துவர்களின் கருத்துகள் பல தளங்களில் கொட்டிக் கிடக்கின்றன. ஆனால் இந்த மனநலம் மற்றும் ஹோமோன்கள் இரண்டையும் தொடர்புபடுத்திப் பெரும்பாலும் மக்கள் மத்தியில் பேசப்படுவது குறைவு எனலாம். மனநலம் பற்றி இதுவரை நீங்கள் கொண்டிருந்த புரிதலுக்கும் அப்பால் இன்றைய அறிவியல் கண்ணோட்டம் சற்றே மாறுபடுகிறது. சிலவேளை நீங்கள் கொண்டிருக்கும் உளவியல் தொடர்பான நம்பிக்கைகளுக்கு எதிராகவோ அல்லது முரணாகவோ தோன்றலாம்.

முதலில் மனம் மற்றும் ஹோமோன்கள் பற்றிய அடிப்படைப் புரிதல் அவசியமானது. மனதைப் பற்றி பலரின் மனதிலும் பலவிதமான கோட்பாடுகளும் நம்பிக்கைகளும் உண்டு. மனம் என்றால் என்ன என்பதைப் பற்றி ஆயிரமாயிரம் ஆண்டுகளாக முன்னோர்களும் ஞானிகளும் இன்றைய வாட்ஸ்அப் விஞ்ஞானிகளும் கூறியவற்றையெல்லாம் கேட்டு நீங்களே குழம்பிப் போய் இருப்பீர்கள். மேலும் நானும் இன்னும் குழப்பாமல் அறிஞர்கள் மூலம் நான் புரிந்து கொண்டதை இலகுவாக விளக்க விரும்புகிறேன். சற்றொப்ப மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியத்தில் மரபியலில் ஒரு நூற்பாவில்,


***ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே***
***இரண்டு அறிவதுவே அதனோடு நாவே***
***மூன்று அறிவதுவே அவற்றோடு மூக்கே***
***நான்கு அறிவதுவே அவற்றோடு கண்ணே***
***ஐந்து அறிவதுவே அவற்றோடு செவியே***
***ஆறு அறிவதுவே அவற்றோடு மனனே***

இந்த நூற்பாவில் உயிர்களின் உணர்வுப் புலன்களோடு மனிதர்களின் தனித்துவமான ஆறாவது அறிவு 'மனன் எனும் மனம்' என்று குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். அதேபோல 2000 ஆண்டுகளுக்கு முன்பும் வள்ளுவர் நூற்றுக்கணக்கான குறள்களில் மனநலம் பற்றி நேரடியாகவே குறிப்பிடுகிறார். ஆகவே மனம் பற்றிய அறிவு மேற்கத்திய அறிவியலில் சற்றோப்ப 300 ஆண்டுகளில்தான் பேசுபொருளாகியது. அதன் பின்பு ஏறக்குறைய கடந்த 150 ஆண்டுகளாகத்தான் Sigmund Freud காலத்துக்குப் பின்பு ஆய்வுப் பொருளாகியது. அதற்கு முன்பு வெறும் தத்துவ ரீதியாக இருந்ததை Pseudo science (போலி அறிவியல்) என்றுதான் கருதினார்கள்.

'நரம்பியல் விஞ்ஞானம் மற்றும் உளவியல் அடிப்படையில் மனம் என்பது உணர்வு நிலை, எண்ணங்கள், சிந்தனை, பகுத் தறிவு, கற்பனை, நினைவாற்றல், விழிப்புணர்வு, அறிவாற்றல் திறன் ஆகியவற்றின் தொகுப்பாக மூளையுடன் நெருக்க மாகத் தொடர்புடைய செயல்முறையாகும்.'

மனம் (software) செயற்படுவது மூளை என்ற (hardware) உறுப்பின் ஊடாக முதலில் எண்ணங்கள் (Thoughts) தோற் றம் பெற்று, பின்னர் அவை சிந்தனைகளாக (Thinking) மாற் றமடைந்து, பின்பு அவை செயலாக (Action) வெளிப்படு கிறது. இந்த செயல்,

- உணர்வுகள் உணர்ச்சிகளாக - Emotions
- கற்பனையாக - Imagination
- விழிப்புணர்வாக - Consciousness
- பகுத்தறிவாக - Rational
- நினைவாற்றலாக - Memory
- மீள்நினைவுகளாக - recollection of memory
- அறிவாற்றலாக - Cognition
- நுண்ணறிவாக - intelligence
- ஐன அதி - ஆசை / உணர்ச்சி
- Ego அகம் - தன்முனைப்பு / நடுநிலை
- Superego அதியகம் - பண்பாட்டுணர்ச்சி / மனச்சாட்சி / அறநெறி




இப்படி பல பரிமாணங்களில் வெளிப்படுகிறது.

மூளையின் பல பகுதிகள் இந்தச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருந்தாலும் லிம்பிக் சிஸ்டம் (Limbic system) என்ற பகுதிதான் பெரும் பங்காற்றுகிறது. இதில் அமைக்டலா (Amygdala) என்ற அமைப்பு உணர்ச்சிகளைக் குறிப்பாக கோபம், பயம், கவலை, மகிழ்ச்சி போன்றவற்றை ஹோமோன் களுடனும் நரம்பு தூதுவர்கள் (Neurotransmitters) துணை யுடன் செயலாக்குகிறது. மேலும் அச்சுறுத்தல்களைக் கண்டு உணர்ந்து அதற்கான எதிர்வினைகளைச் செய்கிறது. அதோடு உணர்வுபூர்வமான எண்ணங்களைத் தோற்றுவிக்கிறது.

ஹிப்போ கம்பஸ் (Hippocampus) இங்கே தான் நம் நினைவு களும் கடந்த காலத்தின் அனுபவப் பதிவுகளும் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. நினைவுகளின் காப்பகம், அது மட்டு மல்ல நடக்கும் நிகழ்வுகளைக் கடந்த காலத்தின் பதிவு களோடு தொடர்புபடுத்தி புதிய நினைவுகளை உருவாக்கும் செயலும் இங்கே தான் நடக்கிறது. கற்றல் செயற்பாடுக ளுக்கும் பொறுப்பாளர் இவர்தான்.

நமது மூளையின் IT department தலாமஸ் (Thalamus) புலன் சார் தகவல்களை உள்வாங்கி மூளையின் அது தொடர்புடைய பல்வேறு இடங்களுக்கும் அனுப்பும் relay sta-tion ஆக செயற்படுகிறது. மற்றும் விழிப்புணர்வு, நனவு நிலை, நினைவாற்றல் போன்றவற்றிலும் பங்கு வகிக்கிறது.

ஹைப்போதலாமஸ் (Hypothalamus) என்பது எங்கள் மூளை யின் நடுவில் உள்ள ஒரு சிறிய பகுதியாகும். அதுதான் முதன்மைக் கட்டுப்பாட்டு மையமாகச் (master control center) செயற்படுகிறது. பசி, தாகம், தூக்கம், பாலுணர்வு, உடல் வெப்பநிலை, மற்றும் தன்னிச்சையான நரம்பு மண்ட லத்தின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் மூலம் உட லின், உள்ளத்தின் சமநிலையை பராமரிக்கிறது. இது நரம்புக ளையும் நாளமில்லா சுரப்பிகளையும் இணைத்து நரம்புகள், ஹோமோன்கள் மற்றும் மனநலம் தொடர்பானவற்றை சமநி லையில் பேணுவதற்கு உதவுகிறது.

சிங்குலேட் கைரஸ் (Cingulate gyrus) - உணர்ச்சி ஒழுங் குமுறை, வலி செயலாக்கம் மற்றும் அறிவாற்றல் கட்டுப்பாடு ஆகியவற்றை நிர்வகிக்கிறது. மூளையின் லிம்பிக் அமைப் பின் ஒரு முக்கிய பகுதியான இது உணர்வுகளைச் செயல்க ளுடன் இணைத்து, மன அழுத்தத்திற்கு உடல் எதிர்வினை யாற்ற உதவுகிறது. உணர்ச்சிகள், பழக்கவழக்கங்களின் ஒழுங்குமுறைகளைக் கட்டுப்படுத்தி வலி உணர்தலுக்கும் பொறுப்பாக செயற்படுகிறது. மேலும் முடிவுகளை எடுத்தல் தீர்மானித்தல் குறிப்பாக முரண்பாடான வேளைகளில் விழிப் போடு செயற்பட்டு முடிவெடுக்கும் ஆற்றலைத் தரும் ஆலோ சகரும் இவர்தான்.

மமில்லரி உடல்கள் (mammillary bodies) என்ற பகுதியானது நினைவு மீட்டல், சுற்றுச்சூழலில் இடஞ்சார்ந்த நினைவு வழி

செலுத்தல் spatial memory navigation மற்றும் உணர்ச்சி களைச் செயலாக்குகின்றன. மூளையின் பேப்பஸ் சுற்றின் (Papez circuit) முக்கிய அலகுகளாக, அவை ஹிப்போகேம் பஸிலிருந்து தாலமஸுக்கு சமிக்ஞைகளை அனுப்புகின்றன. முக்கிய செயற்பாடுகளாக நினைவு ஒருங்கிணைப்பு, குறுகிய கால அனுபவங்களை நீண்ட கால நிகழ்வு சார் மற்றும் செயற் பாட்டு நினைவுகளாக மாற்ற உதவுகிறது. உணர்ச்சி செய லாக்கம், உணர்வுசார் பதிவுகளையும், பாராட்டுக்கள் வெகு மதி போன்றவற்றை குறிப்பிட்ட நினைவுகள் அல்லது தூண்டுதல்களுடன் இணைக்கிறது.

Fornix (ஃபார்னிக்ஸ்) இது ஒரு Fibro Optic நரம்பு கற்றையாக தொலைத்தொடர்பு (4G, 5G Spectrum) போலலிம்பிக் சிஸ்ரத்தின் மற்ற பகுதிகளுடன் செய்தி பரிமாற்றத்திலும் அவற்றை மீளப் பெறுவதிலும் பங்காற்றும் தொழினுட்ப வல்லுனர் நினைவுகளை உரு வாக்கவும் ஒழுங்குபடுத்தவும் மீட்டெடுக்கவும் உதவுகிறது. ஹைப்போதாலமஸ், தாலமஸ் மற்றும் செப்டல் நியூக்ளியஸுடன் இணைத்து, லிம்பிக் மண்டலத்தில் நினைவாற்றல், உணர்ச்சி மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கு ஆதரவளிக்கிறது.

Orbitofrontal Cortex எனும் மூளையின் முன் பகுதியில் கீழ்புறமாக அமைந்துள்ள இது மனித மனதின் முக்கிய பகுதியாகும். இது தான் நம் பகுத்தறிவின் பிதாமகன். மனிதரை மனிதராக வைத்திருப்பவர் இவர்தான். முடிவு களை நல்லது கெட்டது அடிப்படையில் தீர் மானிக்கும் பொறுப்புக்குப் பொறுப்பாக இருப்பவர். உணர்வுகள் உணர்ச்சிகள் ஆகி யவற்றையும் இது ஒருங்கிணைத்து சமூகம் மற்றும் சூழலுக்கு ஏற்ற வகையில் தீர்மா னங்களை எடுக்க உதவுகிறது.

ஆம், இன்னும் இதுபோல் பல மூளையின் பகுதிகள் 'மனம்' என்ற செயற்பாட்டில் ஈடுபடு கின்றன. இந்த செயலுக்கு நியூரோன்கள் என்ற நரம்புக்கலங்கள், இவற்றை இணைக் கும் சினாப்ஸ் (synapse) அவற்றிலுள்ள சில இரசாயனங்கள் மற்றும் Neurotransmitters என்ற நரம்பியக் கடத்தி அல்லது நரம்புத் தூதுவர் போன்றவையும் மனதின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் உணர்வு உணர்ச்சிகளையும் நினைவுக ளையும் மின்காந்த அலைகளாகக் கடத்தி நம்மையெல்லாம் இயங்க வைக்கின்றன. இதில் பல ஹோமோன்களும் இணைந்து மனதின் செயலாக்கத்தில் முக்கிய பங்கு வகிக் கின்றன.

எனவே தான் ஒருவரின் மனநலம் என்பது வெறும் மனம் சார்ந்தது அல்ல, அதன் பின்புலத்தில் இருக்கும் இந்த இரசாயன ஆசாமிகள்தான் பல விடயங்களை ஆட்டிப்படைக் கின்றனர். இவற்றில் அளவு கூடும்போதோ குறையும்போதோ அது மனநலத்தையும் பாதிக்கும். அதேபோல நேர்மாறாக மனநலம் அகப்புற காரணிகளால் பாதிக்கப்படும்போது நரம் புத் தூதுவர்களையும் இரசாயனத் தூதுவர்களான ஹோமோன் களையும் அவற்றின் நாளமில்லாச் சுரப்பிகளையும் பாதிக் கும்.

***"ஒருவரின் மனநலம் என்பது வெறும் மனம் சார்ந்தது அல்ல, அதன் பின்புலத்தில் இருக்கும் இந்த இரசாயன ஆசாமிகள்தான் பல விடயங்களை ஆட்டிப் படைக்கின்றனர். இவற்றில் அளவு கூடும்போதோ குறையும்போதோ அது மனநலத்தையும் பாதிக்கும். தேபோல நேர்மாறாக மனநலம் அகப்புற காரணிகளால் பாதிக்கப்படும்போது நரம்புத் தூதுவர் களையும் இரசாயனத் தூதுவர்களான ஹோமோன்களையும் அவற்றின் நாளமில்லாச் சுரப்பிகளையும் பாதிக்கும்."***

உதாரணமாக நமது உடலின் ஒரு முக் கிய ஹோமோன் அட்ரினலின் (Adren-aline) இது epinephrine என்றும் அழைக் கப்படுகின்றது. சிறுநீரகத்தின் மேலுள்ள தொப்பி போன்ற வடிவுடைய அட்ரீனலின் சுரப்பியினால் சுரக்கப்படுகிறது. மூளையி லுள்ள, நான் முன்பு குறிப்பிட்ட லிம்பிக் சிஸ்ரமும் அதனுடன் தொடர்புடைய பகு திகளும் மற்றும் பிற்றியூற்றரி சுரப்பி போன்றவற்றின் தூண்டுதல் காரணமாக அட்ரீனலின் சுரக்கிறது. ஆம் இதற்கும் நமது மனதிற்கும் என்ன சம்மந்தம் என்று நீங்கள் நினைப்பது புரிகிறது. இப்போ நீங்கள் ஓர் ஆபத்தான சூழலில் மாட்டியி ருக்கிறீர்கள். அந்த ஆபத்தை எதிர்த்துப் போராட அல்லது அதிலிருந்து தப்பி யோட உங்கள் உடலைத் தயார்படுத் துவது இந்த அட்ரீனலின் தான். சண்டையி டுதல் அல்லது தப்பித்தல் (Fight Or Flight) இந்தப் பொறிமுறைக்கு முதலில் உங்களுக்குள்ளேயே ஒரு பய உணர்வு வரவேண்டும். அதன்பின் உங்கள் இதயத் துடிப்பு அதிகமாகும். இரத்தக் குழாய்களில் அழுத்தம் அதிகமாகி தசைகளுக்கு அதிக சக்தி வழங்க இரத்தோட்டமும் அதிக ரிக்கும். இதன் மூலம் நீங்கள் ஆபத்தான சூழ்நிலையினை எதிர்த்துப் போராட அல் லது தப்பித்து ஓடத் தேவையான ஆற்ற லைக் கணப்பொழுதில் உங்களுக்கு வழங்கியது யார் என்றால் இந்த அட்ரின லின் சுரப்பு தான்.

அது மட்டுமல்ல இவற்றோடு இணைந்து மூளையின் அமைக்டலா, ஹிப்போகேம் பஸ், தலாமஸ், ஹைப்போத லாமஸ் மற்றும் சில மூளையின் மனம் தொடர்பான பகுதி களின் ஆலோசனையோடு உடலும் மனமும் உணர்வுகளும் இணைந்து செயற்படும் போது தான் நீங்கள் பாதுகாக்கப்படு கிறீர்கள்.

பல லட்சம் ஆண்டுகளாகக் காடுகளிலும் குகைகளிலும் ஆதி மனிதர்களாக விலங்குகளோடும் பிற இனக் குழுமங்க ளோடும் வாழ்ந்த நம் முன்னோர்க்கு எப்போதுமே விழிப் போடு இருந்து தன்னையும் தான் சார்ந்தவர்களையும் பாது

காப்பாக வைத்திருப்பதற்கு இத்தகைய பொறிமுறை அவசியமாக இருந்தது. ஆனால் இன்றைய சூழல் அப்படி இல்லை, அது வேறு விதமாக பரிண மித்து உள்ளது. இன்றைய வாழ்வியல் சூழல், உணவுப் பழக்கம், பொருளாதார அழுத்தம், போட்டி மனப்பான்மை, சவால் களை எதிர்கொள்ளல் போன்ற பல கார ணிகளால் காடுகளில் வாழ்ந்த போது இருந்தச் சூழல் வடிவம் வேறாக நம்மை எப்போதும் ஓர் அழுத்தத் தோடு ஆபத் தான படபடப்பான சூழலோடு வைத்தி ருக்கிறது. அதனால் தான் அந்த அட்ரீன லினும் மற்றும் கோட்டிசோல் போன்ற இர சாயனங்களும் இதயத்துடிப்பை அதிக ரித்து இரத்தக் குழாய்களில் அழுத்தம் வரும்போது அது பிளட் பிரசர் என்ற இரத்த அழுத்த நோயாக மாறுகிறது. குருதியில் குளுக்கோஸ் அளவைக் கூட்டி diabetes என்ற சர்க்கரை நோயாளிகளா கவும் நம்மை மாற்றி விடுகிறது.

இன்று காடுகள் இல்லை, விலங்குகள் இல்லை, தப்பித்து ஓட வேண்டிய அவ சியம் இல்லை என்றாலும் நான் முன்பு குறிப்பிட்ட அத்தனை சூழல்களும் மனநி லையும் நம்மை நோயாளியாக்கி வைத்தி ருப்பதற்கு இப்போது காரணம் புரிந்தி ருக்கும். விலங்குகளோடு அன்று காடு களில் வாழ்ந்தோம் (Jungle) கடன் களோடு இன்றும் காடுகளில் வாழ்கி றோம் (Bank card). பல ஆயிரம் ஆண்டு களாக மெதுவான மாற்றத்தையே எதிர் கொண்ட நமது உடலும் மனமும் மரப ணுக்களும் கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வரும் அதீத மாற்றங்க ளுக்கு ஈடுகொடுக்க முடியாது தடுமாறு கிறது. அவை தான் இன்றைய வாழ்வியல் நோய்கள் (Lifestyle Disorders).

உதாரணமாக தொழினுட்பங்களின் அதீத வளர்ச்சி, துரித உணவு, பதப்படுத்தப்பட்ட உணவு, உடல் உழைப்பு அல் லது உடற்பயிற்சியின்மை, குவிந்து கொட்டிக் கிடக்கும் தகவல் தொழினுட்பம், உறக்கமின்மை, பழக்க வழக்கங்கள், உறவுமுறைச் சிக்கல்கள், இடம் பெயர்வு, சூழல் மாசடைதல் போன்றவை ஆகும். இப்படி நூற்றுக்கணக்கான இந்த சடு தியான அதீத மாற்றங்களுக்கு உடலும் மனமும் ஹோமோன் களும் இரசாயனங்களும் மரபணுக்களும் இசைவாக்கம் அடைய போதிய அவகாசம் இல்லாத நிலையே இன்றைய பல நாட்பட்ட ஆனால் தொற்றாத (Chronic Non communicable diseases) நோய்களுக்குக் காரண மாகின்றன.

> ***“ஹோமோன்கள் உடலில் பல்வேறு பணிகளுக்கு இரசாயனத் தூதுவர்களாக செயற்படுகின்றன. இவை நாளமில்லா சுரப்பிகள் மூலம் சுரக்கப்படுகின்றன. இவை நேரடியாக ரத்தத்தில் கலந்து உடல் முழுவதும் சென்று அவற்றுக்கான பணியை முறையாகச் செய்கின்றன. உடலின் வளர்ச்சிதை மாற்றம், இனப்பெருக்கம், உடலுக்கு சக்தி வழங்கும் பொறிமுறை, மரபணுக்களின் செயல்முறை, உணர்வுகள், உணர்ச்சிகள், மனநலம், தூக்கம், பசி, தாகம் போன்றவற்றை ஒழுங்கமைக்கின்றன.”***



போதைக்கு அடிமை ஆவதும் ஏன் சமூக விரோத செயல்கள் செய்வதும் சிரிப்பதும் அழுவதும் மனிதர் மகிழ்ச்சியாக இருப் பதும் கவலையும் கோபப்படுவதும் பாச மாக இருப்பதும் பயப்படுவதும் மாறாக எதையும் தைரியமாக எதிர்கொள்ளும் தன்மையும் அணைப்பதும் சுரணையின்றி இருப்பதும் இப்படி எல்லா மனநலம் தொடர்பான உணர்வுகளுக்கும் பின்னணி யில் இசையமைப்பாளர்களாக இருந்து மனதை இசைய இயக்கி வைப்பது நியூரோ கெமிக்கல்ஸ் என்ற நரம்பு தூது வர்களும் ஹோமோன்களும் இந்த இர சாயன தூதுவர்களும்தான். இதே போல இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான கண்டுபிடிக்கப்படாத ஆயி ரக்கணக்கான இரசாயனங்களின் கலவை தான் மனிதர்.

உதாரணத்திற்கு சிலவற்றை மட்டும் குறிப் பிடுகிறேன்.

Dopamine and Serotonin டொபாமைன் மற்றும் செரட்டோனின் இவை இரண்டும் மனநலத்தில் முக்கிய பங்காற்றுகின்றன. நம்மை ஊக்கப்படுத்தி உசுப்பேத்தி விட்டு ஒரு இலக்கை அடையும் போது மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தரு கிறது. பதற்றத்தைத் தணித்து நம்மீது நமக்கு நம்பிக்கை வரச்செய்து மன சம நிலையை காக்கிறது. நம்மீது நமக்கு நம்பிக்கை வரச்செய்து ஊக்கமும் பாராட் டும் தரும் நமது நல்ல ஆசான் என்றே சொல்லலாம். இதன் தொடர்ச்சியாக நல்ல உறக்கம், உடல் ஆரோக்கியத்தையும் பேணுகிறது. பார்க்கின்சன்ஸ் நோய்க்கு இதன் குறைபாடுதான் காரணமாகும். அத னால் கை, கால் நடுக்கம் உட்பட, முகத் தில் எந்த வித உணர்வுகள் உணர்ச்சிகள் வெளிக்காட்ட முடியாமல் Mask face என்ற முகமூடி முகமாக மாறிவிடும்.

என்டார்ஃபின் (Endorphins) என்ற நரம்புத் தூதுவர்தான் நமது உடலின் இயற்கை யான வலி நிவாரணி, உடலின் வலியாக இருந்தாலும் மனதில் வலியாக இருந்தாலும் அதை சற்றே அமைதிப்படுத்தி மன அழுத்தத்தைக் குறைத்து உளச் சமநிலையை பேணுகிறது. பதட்டத்தின் படபடப்பின் எதிர்ம றையான உடல் ரீதி யான தாக்கங்களை குறைத்து மன அழுத்த மேலாண்மையின் பிதாமகன் இவர்தான்.

அடுத்து Oxytocin என்ற ‘Love ஹோமோன்’. ஆம், அன்பும், காதலும் தாய் பாசமும் இந்த ஹோமோன் இல்லையென்றால்

> ***இன்று காடுகள் இல்லை, விலங்குகள் இல்லை, தப்பித்து ஓட வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் நான் முன்பு குறிப்பிட்ட அத்தனை சூழல்களும் மனநிலையும் நம்மை நோயாளியாக்கி வைத்திருப்பதற்கு இப்போது காரணம் புரிந்திருக்கும். விலங்குகளோடு அன்று காடுகளில் வாழ்ந்தோம் (Jungle) கடன்களோடு இன்றும் காடுகளில் வாழ்கிறோம் (Bank card).***

மனித வாழ்வே அர்த்தம் அற்றதாகிவிடும். அன்புக்காகவும் அந்த அரவணைப்புக்காகவும் ஏங்காதவர்கள் எவரும் இல்லை. இதற்குப் பின்புலத்தில் இருப்பதும் தாய்க்கும் குழந்தைக்கும் இடையில் உள்ள பாசப்பிணைப்பினால் தாய்ப் பால் சுரப்பதும் ஒக்ஸிடோசினால் தான். காதல் ஹார்மோன் என்று அழைப்பது பொருத்தமானது. ஏனென் றால் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான அந்த உணர்வுகளை தூண்டுவதிலும் அதன் பின்னராக காமத்தில் முக்கிய பங்காற்றி குறள் 1330 நிரூபிக்கும் ஹோமோன் ஆகும்.

எதுக்கு எடுத்தாலும் கோபப்படுகிறார், கொஞ்சம் கூட பாசம் இல்லை, எப்ப பார்த்தாலும் டென்சனாக இருக்கிறார் எதிலும் ஒரு விருப்பம் இல்லை, இப்படிப்பட்ட ஆசாமிகளில் எந்தப் பிழையும் இல்லை. இவர்களில் டோபமைன், ஆக்ஸிடோஸின் போன்றவை குறைந்து டென்சன் ஹோமோன்களான கோட்டிசால், எபிநெப்ரின், நோர்எபிநெப்ரின் போன்றவை அதிகமாகிவிடும். அதனால்தான் இவர்கள் இப்படி ஆகிவிடுகிறார்கள்.

குறிப்பாக பெண்களில் மெனோபாஸ் என்ற மாதவிடாய் முற்றாக நிற்கப் போகும் காலங்களில் 'அச்சா அம்மா ஆங்கிரி பேர்ட் அம்மாவாகவும்', 'Auntyமார்கள் Antiமார்கள்' ஆகவும் மாறக் காரணம் ஹோமோன்களில் வரும் மாற்றங்கள் தான். பெண்மைக்கு லட்சணமான ஈஸ்ட்ரோஜன் மற்றும் புரோஜெஸ்ரெரோன் போன்ற ஹோமோன்கள் குறைந்து போகின்றன. இதனால் அவர்கள் மனநலத்திலும் உடல் நலத்திலும் பாரிய மாற்றங்கள் உண்டாகின்றன.

ஹோமோன்கள் உடலில் பல்வேறு பணிகளுக்கு இரசாயனத் தூதுவர்களாக செயற்படுகின்றன. இவை நாளமில்லா சுரப்பிகள் மூலம் சுரக்கப்படுகின்றன. இவை நேரடியாக ரத்தத்தில் கலந்து உடல் முழுவதும் சென்று அவற்றுக்கான பணியை முறையாகச் செய்கின்றன. உடலின் வளர்ச்சிதை மாற்றம் (metabolism), இனப்பெருக்கம், உடலுக்கு சக்தி வழங்கும் பொறிமுறை, மரபணுக்களின் செயல்முறை, உணர்வுகள், உணர்ச்சிகள், மனநலம், தூக்கம், பசி, தாகம் போன்ற வற்றை ஒழுங்கமைக்கின்றன. இன்னும் ஏராளமான பணிகளில் நமக்கு உதவிசெய்து நம்மை உயிரோடு வைத்திருப்பதில் ஹோமோன்கள் மற்றும் நரம்புத் தூதுவர்களின் பங்களிப்பு அளப்பரியது.

உதாரணமாக தைராய்டு சுரப்பி சரியாக செயற்படாது போனாலும் அல்லது அதீத செயற்பாடோ உடலிலும் மனதிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தும். உடல் எடையில் மாற்றம், இதயத்துடிப்பிலும் சுவாசத்திலும் மாறுதல், குழந்தைப் பேறில் சிக்கல்கள், குரலில் மாற்றங்கள், தலைமுடி கொட்டுதல், மாதவிடாய் கோளாறுகள் என்று பட்டியல் நீள்கிறது. மனநல அறிகுறிகளாக மறதி, பதட்டம், படபடப்பு, எதிலும் கவனம் செலுத்த இயலாமை, எதிலும் விருப்பமின்மை, மன அழுத்தம், தூக்கம் இன்மை, அல்லது அதிக தூக்கம், மனநிலை மாற்றம், கோபப்படுதல், எரிச்சல் அடைதல் மற்றும் அமைதியின்மை போன்ற இன்னும் பல மன அறிகுறிகள் தோன்றலாம்.

இப்படி ஹோமோன்கள் உங்கள் மனநலத்தோடு நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புடையவை. மேலும் வளர்ந்துவரும் மருத்துவ ஆராய்ச்சிகள் நாளமில்லா சுரப்பிகளின் ஹோமோன்கள், நரம்பு மண்டலம், மரபியல், குடல் நுண்ணுயிரியல் (Gut microbiome), நோய் எதிர்ப்பாற்றல் போன்றவற்றோடு நமது மனநலம் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்பதை தொடர்ச்சியாக ஆராய்ந்து வருகின்றன. இனி குற்றவாளிகளைத் தண்டிக்கும்போது அவர்களின் உடல் வேதியல் மற்றும் ஹோமோன்களின் மாற்றங்கள் ஏன் சடுதியான மாறுதலுக்கு ஆளாகிறது என்பதையும் கவனத்தில் கொள்ள 'மருத்துவம் - குற்றவியல் - நீதித்துறை'யை (Medicine - Criminology - Judiciary) உருவாக்கி விரிவாக்கம் செய்வது அவசியமாகிறது.

மருத்துவம், குற்றவியல் மற்றும் நீதித்துறை ஆகியவை தடயவியல், சட்டம் மற்றும் நெறிமுறைகளில் ஒன்றிணைகின்றன. மருத்துவ வல்லுநர்கள் அறிவியல் சான்றுகளை வழங்குகிறார்கள், குற்றவியல் நிபுணர்கள் குற்றங்களுக்கான காரணங்களை ஆராய்கிறார்கள், மேலும் நீதித்துறை இந்த ஆதாரங்களைப் பயன்படுத்தி நியாயமான சட்ட முடிவுகளை எடுக்க சட்டத்தைப் பயன்படுத்துகிறது. அவை இவ்வாறு இணைந்து செயற்படலாம், மருத்துவர்களும் தடயவியல் நிபுணர்களும் உடல்ரீதியான தடயங்களைக் கண்டறியலாம். மருத்துவ குற்றவியல் நிபுணர்கள், குற்றவாளிகள் ஏன் குற்றங்களைச் செய்கிறார்கள் மற்றும் சமூகம் அவற்றை எவ்வாறு தடுத்து நிறுத்தலாம் அல்லது தடுக்கலாம் என்பதை ஆராயலாம். நீதித்துறை ஒரு நபர் குற்றவாளியா ? என்பதைத் தீர்மானிக்க நீதிபதிகளும் நீதிமன்றங்களும் மருத்துவ உண்மைகளை அடிப்படையாக கொண்டு தீர்ப்புகளை வழங்கலாம்.



paul.joseph@thaiveedu.com




# 21-ஆம் நூற்றாண்டுப் பெற்றோர்களின் தோல்வி

## குழந்தைகளின் உளவியல், சமூகவியல் ரீதியிலான ஓர் ஆய்வு

**- அகமட் பிஸ்தாமி**

இருபத்தோராம் நூற்றாண்டு, குடும்ப அமைப்பின் கட்டமைப்பு, தொழினுட்பம் மற்றும் கலாசார இயக்கவியலிலும் இயங்கியல் தளத்திலும் முன்னெப்பொழுதும் இல்லாத மாற்றங்களைக் கண்டுள்ளது. இன்றைய பெற்றோர்கள் முந்தைய எந்தத் தலைமுறையையும் விட அதிக விவரமறிந்தவர்களாகவும், வளங்கள் நிறைந்தவர்களாகவும், விழிப்புணர்வு உள்ளவர்களாகவும் தெளிவோடு பயிற்சி பெற்றவர்களாகவும் இருந்தபோதிலும், குழந்தைகளின் நல்வாழ்வு தொடர்பான ஒரு பெரிய நெருக்கடியை எதிர்கொள்கின்றார்கள் என்பதனை அவதானிக்க முடிகிறது.

பிள்ளைகள் மீது முன்வைக்கப்படும் முறைப்பாடுகள், விசாரணைகள், அவர்களது செயற்பாடுகளில் அவதானிக்கத்தக்க கையாள முடியாத மாற்றங்கள் என்பவை பிள்ளை வளர்ப்பில் பெற்றோர்கள் விட்ட தவறுகளைச் சுட்டிக் காட்டுவதாக அமைகிறன. இத்தகைய தவறுகள் ஏற்பட பிள்ளை வளர்ப்பும் பிள்ளைகள் வளர்க்கப்பட்ட சூழமைவும் முக்கியமான காரணிகள் எனலாம்.

இன்றைய வளரிளம் தலைமுறையிடம், சிறுவயது பதற்றம் (anxiety), மனச்சோர்வு (depression), மனவெழுச்சிசார் சீர்குலைவு மற்றும் சமூக விலகல் ஆகியவை வரலாற்று ரீதியாக உச்சத்தை எட்டியுள்ளன.

குழந்தைகளின் பார்வையில், இந்த நெருக்கடி அவர்களின் குறைபாடல்ல; மாறாக, இது நவீன பெற்றோர் வளர்ப்பின் தோல்வியாகும். பெற்றோரால் விடப்படுகின்ற அலட்சியமான தவறுகளின் உடனடி விளைவுகள் எனலாம். வளர்ச்சி உளவியல் (developmental psychology) மற்றும் கட்டமைப்பு சமூகவியல் (structural sociology) ஆகியவற்றின் வழியாகப் பார்க்கும்போது, டிஜிட்டல் ஆதிக்கம், அதிகபடியான கண்காணிப்பு, உணர்ச்சிகளை நிராகரித்தல் மற்றும் நுகர்வோர் கலாசாரத்தை ஊக்குவித்தல் போன்ற 21-ஆம் நூற்றாண்டின் பெற்றோர் வளர்ப்பு முறைகள், நவீன குழந்தையின் வளர்ச்சி மற்றும் உணர்ச்சித் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறி விட்டதை இந்த ஆய்வு விளக்கமாக ஆராய்கிறது.

### சமூகவியல் மாற்றங்கள்:

- **பலவீனமான அமைப்பும் வர்த்தகமயமாக்கப்பட்ட வீடும்:**

நவீன பெற்றோர் வளர்ப்பின் பலவீனங்களைப் புரிந்து கொள்ள, 21-ஆம் நூற்றாண்டு குடும்பங்கள் வாழும் சூழலை முதலில் ஆராய வேண்டும். சமூகவியல் கட்டமைப்புகள், சமுதாயத்தின் ஆதரவோடு இருந்த குழந்தை வளர்ப்பு முறை மாறி, தனிமைப்படுத்தப்பட்ட, கடுமையான அழுத்தங்கள் நிறைந்த குடும்ப அலகுகளாக உருமாறியுள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றன.

முன்னர் கூட்டுக் குடும்பங்களுக்கு ஊடாக வளர்க்கப்பட்ட குழந்தைகள் இப்பொழுது கட்டணம் செலுத்தப்படும் பராமரிப்பு நிலையங்களிடம் ஒப்படைக்கப்படுவதை அவதானிக்க முடியும். இது பிரச்சினையின் ஆரம்ப வித்து எனலாம்.

- **கூட்டுச் சமூக அமைப்பின் சிதைவு:**

சமூகவியலாளர் Urie Bronfenbrenner சூழலியல் அமைப்புக் கோட்பாடு (Ecological Systems Theory), ஒரு குழந்தையின் வளர்ச்சி அவனது பரந்த சமூக சூழலால் பெரிதும் பாதிக்கப் படுகிறது எனக் கூறுகிறது. வரலாற்று ரீதியாக, குழந்தை வளர்ப்பு என்பது கூட்டுக் குடும்பங்கள், அண்டை வீட்டார் மற் றும் உள்ளூர் சமூகங்களால் ஆதரிக்கப்பட்ட ஒரு கூட்டு முயற்சியாகும். 21-ஆம் நூற்றாண்டில், நகரமயமாக்கல், பொருளாதார இடப்பெயர்வு மற்றும் தனிக்குடும்பங்களின் தனிமைப்படுத்தல் ஆகியவை இந்த அமைப்பைச் சிதைத்து விட்டன.

பெற்றோர்கள் இப்போது தனித்துச் செயற்படுவதால் மன அழுத்தத்திற்கும் (burnout) சோர்விற்கும் ஆளாகிறார்கள். இதன் விளைவாக, அழுத்தத்தில் உள்ள பெற்றோர்கள் குறை வான உழைப்பு மற்றும் அதிக கவனிப்புச் சிதறல் தரும் குறுக்கு வழிகளைப் பயன்படுத்துகின்றனர். இது குழந்தை களைப் பாதுகாப்பற்ற உணர்வு நிலைக்குத் தள்ளுகிறது.

- **தீவிர பெற்றோர் வளர்ப்பும் 'பண்டமாக்கப்பட்ட' குழந்தையும்:**

சமூகவியலாளர் Sharon Hays 'தீவிர பெற்றோர் வளர்ப்பு' (in-tensive parenting) என்ற சொல்லைப் பயன்படுத்தி நவீன பெற்றோர் வளர்ப்பு முறையை விவரிக்கிறார். இதன்படி குழந்தை வளர்ப்பு என்பது நிபுணர்களின் வழிகாட்டலில், அதிக உழைப்பு மற்றும் அதிக நிதிச் செலவு கொண்ட ஒன் றாக மாறிவிட்டது. முரண் என்னவென்றால், இந்த முறை குழந் தைகளைத் தனித்துவமான மனிதர்களாகப் பார்ப்பதற்குப் பதிலாக, அவர்கள் நிர்வகிக்கப்பட வேண்டிய ஒரு 'திட்டமாக' (project) நடத்துவதன் மூலம் அவர்களுக்குத் தீங்கு விளை விக்கிறது.

- **செயற்றிறனுக்கு முன்னுரிமை, அருகாமையில்லை:**

இப்பொழுதெல்லாம் பெற்றோர்களுக்குத் தங்கள் குழந்தை களோடு நேர காலத்தைக் கழித்து மகிழ்வதற்கு சந்தர்ப்பம் இல்லை. அதே நேரம் பிள்ளைகள் தமது திறமைகளை உச்ச நிலையில் பயன்படுத்தி ஆற்றுகைகளை வெளிப்படுத்தி சம வயதினரை மிகைத்து உச்சத்தில் நின்று சாதித்துக் காட்ட வேண்டும் என்ற ஆசையில் வாழ்கின்றனர். அத்தகைய ஆசைகளை அடைந்து கொள்வதற்காக அனைத்து விதமான அழுத்தங்களையும் அவர்களுக்கு வழங்கி விடுகின்றனர். சமூ கத்தில் தங்களின் வர்க்க அந்தஸ்தைத் தக்கவைத்துக் கொள்ள, குழந்தைகள் கல்வி மற்றும் இதர செயற்பாடுகளில் தொடர்ந்து சிறந்து விளங்க வேண்டும் என்ற அழுத்தத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

- **நிபந்தனையுடன் கூடிய அன்பு:**

பெற்றோரின் அன்பு என்பது குழந்தையின் தனித்துவமான மதிப்பைக் காட்டிலும், அவர்களின் சாதனைகள் மற்றும் மதிப் பெண்களோடு நேரடியாகத் தொடர்புபடுத்தப்படும் ஒன்றாக மாறியுள்ளது. பிள்ளைகள் பெற்றோர்களின் வருங்காலத் தூண்கள். அவர்களுக்கு நிபந்தனையுடன் கூடிய அன்பைத் தூவி விடுவதால் எதிர்காலத்தில் நிபந்தனையுடன் கூடிய பரா மரிப்பைத்தான் பெற்றோர்களாகிய நாம் எதிர்பார்க்க வேண்டி வரும் என்பதை மறந்து விடக்கூடாது.

## உளவியல் தோல்விகள்:

- **பிணைப்புக் கோளாறுகளும் மனவெழுச்சி நிராக ரிப்பும்:**

சமூகவியல், குடும்பத்தின் மீதான வெளிப்புற அழுத்தங்களை விளக்கும் வேளையில், வளர்ச்சி உளவியலானது பெற்றோ ரின் நடத்தைகள் எவ்வாறு அகக் கட்டமைப்பை நேரடியாகப் பாதிக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

- **தொழினுட்பக் குறுக்கீடும் (Techno-ference) சிதைந்த பிணைப்பும்:**

ஜான் போல்பி (John Bowlby) அவர்களின் 'பிணைப்புக் கோட்பாடு' (Attachment Theory) சுட்டிக்காட்டுவது போல, குழந்தைகள் ஆரோக்கியமான ஆளுமையுடன் வளரப் பெற்றோரின் தொடர்ச்சியான உணர்வுபூர்வமான அருகாமை யும் கவனமும் இன்றியமையாதவை; இருப்பினும், டிஜிட்டல் சாதனங்களின் அதிகளவிலான ஆதிக்கத்தால் பெற்றோர்-கு ழந்தை இடையேயான இயல்பான உரையாடல்களும் பிணைப்புகளும் தொடர்ந்து அற்றுப்போவது, 21-ஆம் நூற்றாண்டு பெற்றோர் வளர்ப்பில் நிலவும் மிக முக்கிய பலவீ னமாக உருவெடுத்துள்ளது.

- **அதிகபடியான பாதுகாப்பும் குறைவான தயாரிப்பும்:**

நவீன பெற்றோர் வளர்ப்பு முறை இன்று ஒரு விசித்திரமான சிக்கலில் சிக்கித் தவிக்கிறது; குழந்தைகளின் வெளிப்ப டையான காரியங்களில் அதிகளவில் தலையிடும் பெற்றோர் கள், அவர்களின் மனரீதியான கவலைகளையும் உணர்வுக ளையும் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகிறார்கள். குழந்தை களின் கண்ணோட்டத்தில் பார்த்தால், இந்த முறை அவர்க ளின் ஆரோக்கியமான மன வளர்ச்சிக்குத் தேவையான சுயாட்சி, உணர்வுபூர்வமான பாதுகாப்பு மற்றும் தடைகளற்ற இயல்பான விளையாட்டு ஆகிய அடிப்படை உரிமைகளைப் படிப்படியாகப் பறித்து, அவர்களின் இயல்பான வளர்ச் சியையே பெரிதும் பாதிப்படையச் செய்கிறது.

- **சுயாட்சி:**

  - **விளையாட்டுகளின் அழிவு:**

    குழந்தை உளவியலாளர் பீட்டர் கிரே (Peter Gray) சுட்டிக் காட்டுவது போல, குழந்தைகள் தன்னிச்சையாகவும் சுயமா கவும் விளையாடும் விளையாட்டுகள் குறைந்தமைக்கும், சிறுவயதிலேயே அவர்களிடம் பதற்றமும் மனச்சோர்வும் அதிகரித்தமைக்கும் இடையே நேரடித் தொடர்புள்ளது. பாதுகாப்பு குறித்த பயம் மற்றும் கல்வியில் பின்தங்கி விடு வார்களோ என்ற பதற்றம் காரணமாக, நவீன பெற்றோர்கள் குழந்தைகளின் சுதந்திரமான விளையாட்டு நேரத்தை பெருமளவில் குறைத்துவிட்டனர்; இதனால், குழந்தைகள்

தமது சூழலைச் சுயாதீனமாக ஆராயவோ, புதிய விளையாட்டு விதிகளை உருவாக்கவோ அல்லது இயல்பான சவால்களைச் சுயமாக எதிர்கொள்ளவோ முடிவதில்லை. இந்த நிலைமையானது, அவர்களின் உணர்ச்சிக் கட்டுப்பாடு மற்றும் சுயமேலாண்மைத் திறனைப் பாரதூரமாகப் பாதிக்கின்றது.

- **உணர்ச்சிகளை நிராகரித்தல் மூலம் ஒடுக்குதல்:**

  பொது இடங்களில் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்காகவோ அல்லது சமூகத்தில் தங்களை ஒரு சிறந்த பெற்றோராகக் காட்டிக்கொள்வதற்காகவோ, நவீன பெற்றோர்கள் பலரும் குழந்தைகளின் எதிர்மறை உணர்ச்சிகளை அலட்சியப்படுத்துகிறார்கள். 'ஒன்றுமில்லை', 'இது ஒரு பெரிய விஷயமே இல்லை' எனக் கூறி உணர்வுகளை மழுங்கடிப்பதோ அல்லது அழுகையை நிறுத்துவதற்காகப் பொருட்களை லஞ்சமாகக் கொடுப்பதோ, 'அசௌகரியமான உணர்வுகள் வெளிப்படுத்தத் தகாதவை' என்ற தவறான செய்தியையே குழந்தைகளின் மனதில் பதிய வைக்கின்றன. இத்தகைய அணுகுமுறையால் தமது உணர்ச்சிகளை அடக்கி வாழப் பழகும் குழந்தைகள், பிற்காலத்தில் அதனை எல்லைமீறிய கோபமாகவோ அல்லது உடல் மற்றும் மனநலம் சார்ந்த பாதிப்புகளாகவோ வெளிப்படுத்துகின்றனர்

- **அருகாமைக்குப் பதிலாகப் பொருள் வழங்கி திருப்திப்படுத்துதல்:**

  நீண்ட வேலை நேரங்கள் மற்றும் குற்ற உணர்ச்சி காரணமாக, நவீன பெற்றோர்கள் தங்களின் உணர்வுபூர்வமான அருகாமைக்குப் பதிலாகப் பொருள்களையும் டிஜிட்டல் பொழுதுபோக்குகளையும் வழங்குகிறார்கள்.

  அன்றெல்லாம் அழுத பிள்ளை பால் குடிக்கும் என்று சொல்வோம். இப்பொழுது அது தலைகீழாக மாறி அழுத பிள்ளை போன் பிடிக்கும். ஸ்மாட் போனைக் கையில் எடுக்கவே அழுது புரண்டு கத்தும் தலைமுறையைக் கையாளத் தெரியாத பெற்றோர்கள் துர்ப்பாக்கியசாலிகள் தான்.

- இந்த நுகர்வோர் சார்ந்த அமைதிப்படுத்தல் ஒரு தவறான சுழற்சியை உருவாக்குகிறது; அங்கு குழந்தைகள் மன அழுத்தத்தைப் போக்க வெளிப்புறத் தூண்டுதல்களைத் தேடத் தொடங்குகிறார்கள். இது நடத்தைக் கோளாறுகளுக்கும் தொடர்ச்சியான மனநிறைவின்மைக்கும் வழிவகுக்கிறது.

## அமைப்பை சீரமைத்தல்: 21–ஆம் நூற்றாண்டு பெற்றோர்கள் மாற்ற வேண்டியவை:

இந்தத் தலைமுறையின் தோல்வியைச் சரிசெய்ய, பெற்றோர் வளர்ப்பு முறை கட்டுப்பாடு, செயற்றிறன் மற்றும் கவனச்சிதறல் ஆகியவற்றிலிருந்து மாறி அருகாமை, எல்லைகள் மற்றும் உணர்ச்சிப் புரிதல் கொண்ட ஒன்றாக உருமாற வேண்டும். இந்த நிலைமைக்கு பெற்றோர்கள் தம்மை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

### நவீன பெற்றோருக்கான முக்கிய மாற்றங்கள்:

- டிஜிட்டல் கவனச்சிதறலிலிருந்து நேரடி அருகாமைக்கு மாறுதல்: பெற்றோர்கள் உணவருந்தும் நேரம், தூங்கும் நேரம் போன்றவற்றைத் திரைகளற்ற மண்டலங்களாக (device-free zones) மாற்ற வேண்டும். இது குழந்தைகளுக்குத் தடையற்ற கண் தொடர்பையும் முழுமையான கவனத்தையும் வழங்கும்.
- அதிகபடியான பாதுகாப்பிலிருந்து வழிகாட்டுதலுக்கு மாறு தல்: தடைகளை அகற்றுவதற்குப் பதிலாக, பாதுகாப்பான உணர்ச்சி எல்லைக்குள் குழந்தைகள் தோல்விகளையும், ஏமாற்றங்களையும், அதன் இயற்கை விளைவுகளையும் எதிர்கொள்ள பெற்றோர்கள் வழிவகை செய்ய வேண்டும்.
- அமைதிப்படுத்துதலிலிருந்து உணர்வுகளை ஒழுங்குபடுத்துதலுக்கு மாறுதல்: குழந்தையின் துன்பத்தையோ கோபத்தையோ ஒரு நடத்தைப் பிரச்சினையாகப் பார்க்கக் கூடாது. மாறாக, அமைதியான அணுகுமுறை மூலம் உணர்ச்சிகளைக் கையாள அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் வாய்ப்பாக அதை மாற்ற வேண்டும்.
- சாதனை சார்ந்த மதிப்பிலிருந்து மனித மதிப்புக்கு மாறுதல்: குழந்தையின் மனித மதிப்பை அவர்களின் கல்வி அல்லது விளையாட்டுச் சாதனைகளிலிருந்து தனிமைப்படுத்தி, நிபந்தனையற்ற நேர்மறையான அன்பை வழங்கி வளர்க்க வேண்டும்.

இந்த வகையில்,

21-ஆம் நூற்றாண்டுப் பெற்றோர் வளர்ப்பின் தோல்வி என்பது அன்பின்மையால் ஏற்பட்டதல்ல; மாறாக குழந்தைகளின் உண்மையான உளவியல் தேவைகளுடன் பெற்றோரின் அணுகுமுறை ஒத்துப்போகாததால் ஏற்பட்டதாகும். சுயாட்சியை விட சாதனைகளுக்கும், மனித அருகாமையை விட டிஜிட்டல் இணைப்புக்கும், மன உறுதியை விட தற்காலிக அமைதிக்கும் முன்னுரிமை அளித்ததன் மூலம், நவீன பெற்றோர்கள் அறியாமலேயே தங்கள் குழந்தைகளுக்கு அதிக அழுத்தமும் உணர்ச்சியற்ற தன்மையும் கொண்ட சூழலை உருவாக்கியுள்ளனர்.

குழந்தைகளின் ஆரோக்கிய மீட்டெடுப்புக்கு, பெற்றோர்கள் இந்த நுகர்வு சார்ந்த தீவிர பெற்றோர் வளர்ப்பு முறைகளை கைவிட வேண்டும். பெற்றோர்கள் உண்மையான அருகாமையை வழங்கி, உணர்ச்சிகளின் உண்மைத்தன்மையை மதித்து, குழந்தைகள் தோல்வியடையவும் ஆராயவும் சுதந்திரம் அளிக்கும் போது மட்டுமே, 21-ஆம் நூற்றாண்டின் குடும்பம் ஒரு உண்மையான வளர்ச்சிப் புகலிடமாக மாற முடியும்.



bisthamy.ahamed@thaiveedu.com

புவனேந்திரன் ரதிகலா

# விளையாட்டின் வழி கற்றலும் மனித ஆளுமை உருவாக்கமும்

மனித வாழ்க்கையில் கற்றல் என்பது பிறப்பு முதல் இறப்பு வரை தொடர்ச்சியாக நடைபெறும் ஓர் இயல்பான செயல்முறையாகும். மனிதர்கள் தமது வாழ்க்கைப் பயணத்தில் சந்திக்கும் ஒவ்வொரு அனுபவமும் அவர்களுக்குப் புதிய அறிவையும் புரிதலையும் வழங்குகின்றது. கற்றல் என்பது பாடசாலை வகுப்பறைகளுக்குள் மட்டும் நடைபெறும் ஒரு நிகழ்வு அல்ல. குடும்பம், சமூகம், இயற்கை, நண்பர்கள், அனுபவங்கள் மற்றும் பல்வேறு செயற்பாடுகள் அனைத்தும் மனிதரின் கற்றல் பயணத்தில் முக்கிய பங்காற்றுகின்றன. குறிப்பாக குழந்தைப் பருவத்தில் நடைபெறும் கற்றல் ஒரு மனிதரின் எதிர்கால வளர்ச்சிக்கான அடித்தளமாக அமைகிறது.

‘விளையாட்டு என்பது குழந்தையின் வேலை - அதன் மூலம் குழந்தை உலகத்தை அறிந்து கொள்கிறது.’ என மரியா மொண்டிசோரி குறிப்பிட்டுள்ளார். குழந்தைகள் உலகத்தை அறிந்து கொள்வதற்கான இயற்கையான வழிமுறைகளில் விளையாட்டு முக்கியமான ஒன்றாகும். குழந்தை விளையாடும் போது அது வெறும் பொழுதுபோக்கில் ஈடுபடுவதில்லை; மாறாக, தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைப் புரிந்துகொள்ளவும் புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளவும் பல்வேறு திறன்களை வளர்த்துக் கொள்ளவும் முயற்சிக்கின்றது. குழந்தைகளின் எண்ணங்கள், உணர்வுகள், கற்பனைகள் மற்றும் படைப்பாற்றல் ஆகியவை விளையாட்டின் மூலம் இயல்பாக வெளிப்படுகின்றன.

பொதுவாக சமூகத்தில் விளையாட்டு என்பது நேரத்தை செலவிடும் ஒரு செயற்பாடு என்ற எண்ணம் காணப்படுகிறது. சில நேரங்களில் விளையாட்டு கல்விக்கு எதிரானதாகவும் பார்க்கப்படுகின்றது. ‘அதிகமாக விளையாடினால் படிப்பு பாதிக்கப்படும்’ என்ற கருத்து பலரிடமும் உள்ளது. ஆனால் உண்மையில் சரியான நோக்கத்துடன் பயன்படுத்தப்படும் விளையாட்டு கற்றலை மேம்படுத்தும் ஒரு சிறந்த கருவியாகும். குழந்தைகள் மகிழ்ச்சியுடன் ஈடுபடும் செயற்பாடுகள் மூலம் பெறும் அறிவு, கட்டாயமாக மனப்பாடம் செய்யப்படும் அறிவை விட ஆழமானதாகவும் நிலையானதாகவும் அமைகிறது.

‘விளையாட்டு என்பது குழந்தையின் இயல்பான மொழி அதன் மூலம் குழந்தை உலகத்தை அறிந்து கொள்கிறது’ என்ற கருத்து குழந்தை வளர்ச்சியில் விளையாட்டின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. ஒரு குழந்தை விளையாடும் போது அதன் உடல் மட்டுமல்ல, மனம், அறிவு, உணர்வு மற்றும் சமூகத் திறன்களும் ஒருங்கிணைந்து வளர்கின்றன. விளையாட்டு இல்லாத குழந்தைப் பருவம் அனுபவம் இல்லாத கல்வியைப் போன்றது ஆகும்.



விளையாட்டின் மூலம் நடைபெறும் கற்றல் அனுபவ அடிப் படையிலானதாகும். ஒரு குழந்தை ஒரு விடயத்தை நேரடி யாக செய்து பார்க்கும் போது அது அந்த அனுபவத்தின் மூலம் ஆழமாகக் கற்றுக்கொள்கிறது. உதாரணமாக, ஒரு குழந்தை நண்பர்களுடன் சேர்ந்து விளையாட்டில் ஈடுபடும் போது, அது விதிகளைப் பின்பற்றுதல், பிறரின் கருத்துகளை மதித்தல் மற்றும் வெற்றி தோல்விகளை ஏற்றுக்கொள்ளுதல் போன்ற வாழ்க்கைத் திறன்களை இயல்பாகக் கற்றுக்கொள் கின்றது.

கற்றல் என்பது கேட்பதன் மூலம் மட்டுமல்ல செய்வதன் மூல மும் அனுபவிப்பதன் மூலமும் நடைபெறுகின்றது. கல்வியின் முக்கிய நோக்கம் மாணவர்களுக்கு பாட அறிவை மட்டும் வழங்குவது அல்ல. அறிவைப் பயன்படுத்தும் திறன், சுயமாக சிந்திக்கும் திறன், பிரச்சினைகளை தீர்க்கும் திறன், சமூகத் துடன் இணைந்து வாழும் திறன் மற்றும் நல்ல மனிதப் பண்பு களை வளர்ப்பதே கல்வியின் உயர்ந்த நோக்கமாகும். இந்த முழுமையான வளர்ச்சியை ஏற்படுத்துவதில் விளையாட்டு முக்கிய பங்காற்றுகின்றது. குழந்தையின் அறிவாற்றல் வளர்ச்சி யில் விளையாட்டு மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின் றது. புதிர்கள், கட்டுமான விளையாட்டுகள், நினைவாற்றல் விளையாட்டுகள், கற்பனை விளையாட்டுகள் போன்றவை குழந்தையின் சிந்தனை திறனை வளர்க்கின்றன. ஒரு பொருளை வேறு ஒரு வடிவத்தில் கற்பனை செய்து பயன் படுத்தும் போது குழந்தையின் படைப்பாற்றல் அதிகரிக்கின்றது. இதன் மூலம் புதிய கருத்து களை உருவாக்கும் திறனும் வளர்கின்றது.

விளையாட்டு குழந்தைகளுக்கு ஆராய்ந்து செயற்படும் மனப்பான்மையையும் உருவாக்கு கின்றது. ஒரு குழந்தை விளையாட்டின் போது 'எப்படி?', 'ஏன்?', 'வேறு எப்படிச் செய்யலாம்?' என்ற கேள்விகளை எழுப்புகின்றது. இந்தக் கேள்விகள் அதன் சுய சிந்தனைத் திறனை வளர்க்கின்றன. எதிர்காலத்தில் அறிவியல், கலை மற்றும் சமூகத் துறைகளில் புதிய கண்டுபிடிப் புகளை உருவாக்கும் திறனுக்கான அடித்தளம் இவ்வாறான குழந்தைப் பருவ அனுபவங்களி லேயே இருந்து உருவாகின்றது. மேலும், விளை யாட்டு மொழி வளர்ச்சிக்கும் முக்கிய பங்காற்று கிறது. குழந்தைகள் நண்பர்களுடன் விளையா டும் போது உரையாடுதல், கருத்துகளைப் பகிர்தல், கதைகளை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இதன் மூலம் அவர்களின் சொற்களஞ்சியம், தொடர்பாடல் திறன் மற்றும் வெளிப்பாட்டுத் திறன் என்பனவும் மேம்படுகின்றன. விளையாட்டு என்பது குழந் தைகளின் நேரத்தை வீணாக்கும் ஒரு செயல் அல்ல. அது அவர்களது எதிர்காலத்தை உரு வாக்குகின்றது. அத்தோடு அவர்களின் அறிவு, திறன், கற் பனை, சமூக உறவு மற்றும் மனிதப் பண்புகளை வளர்க்கும் ஒரு இயற்கையான கல்வி முறையாகவும் காணப்படுகின்றது. குழந்தையின் எதிர்கால ஆளுமையை உருவாக்கும் முக்கி யமான அடித்தளங்களில் ஒன்றாக விளையாட்டானது விளங் குகின்றது.

மனித ஆளுமை உருவாக்கம் என்பது ஒருவரின் அறிவுத் திறனை மட்டும் அடிப்படையாகக் கொண்டது அல்ல. ஒரு மனிதரின் சிந்தனை முறை, உணர்வுகளை கட்டுப்படுத்தும் திறன், பிறருடன் பழகும் விதம், பொறுப்புணர்வு, தன்னம் பிக்கை, தலைமைத்துவம், ஒழுக்கம் மற்றும் சமூகப் பங்க ளிப்பு போன்ற பல்வேறு அம்சங்களின் ஒருங்கிணைப்பே ஆளுமையாகும். இந்த ஆளுமைப் பண்புகள் சிறுவயதி லேயே உருவாகத் தொடங்குகின்றன. அவற்றை வளர்ப்பதற் கான இயற்கையான சூழலை விளையாட்டு வழங்குகின்றது. விளையாட்டின் மூலம் குழந்தைகள் தங்களைப் பற்றி அறிந்து கொள்கின்றனர். ஒரு செயற்பாட்டில் ஈடுபடும் போது தங்களுடைய திறமைகள், பலவீனங்கள் மற்றும் ஆர்வங் களை அவர்கள் புரிந்துகொள்கின்றார்கள். இது அவர்களின் சுய உணர்வை வளர்க்கின்றது. ஒரு குழந்தை தொடர்ந்து முயற்சி செய்து ஒரு விளையாட்டில் வெற்றி பெறும் போது அதன் தன்னம்பிக்கை அதிகரிக்கிறது. அதேவேளை தோல் வியை சந்திக்கும் போது மனம் தளராமல் மீண்டும் முயற்சி செய்யும் பண்பும் உருவாகின்றது.

வாழ்க்கையில் வெற்றி என்பது எப்போதும் கிடைக்கும் ஒன் றல்ல. வெற்றியையும் தோல்வியையும் சமமாக ஏற்றுக்கொள் ளும் மனப்பக்குவம் ஒரு மனிதருக்கு அவசியமானது. இந்த மனப்பக்குவத்தை சிறுவயதிலேயே உருவாக்கும் ஒரு சிறந்த வழிமுறையாக விளையாட்டு அமைகின் றது. ஒரு விளையாட்டில் தோல்வியடைந்த குழந்தை அடுத்தமுறை சிறப்பாக செயற் பட வேண்டும் என்ற எண்ணத்துடன் முயற்சி செய்கிறது. இந்த முயற்சி மனப்பான்மை எதிர்கால வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ள உதவுகிறது.

> ***"விளையாட்டு குழந்தைகளின் உணர்ச்சி வளர்ச்சிக்கும் மிக முக்கியமானதாகும். குழந்தைகளுக்கு மகிழ்ச்சி, கோபம், ஏமாற்றம், பயம், எதிர்பார்ப்பு போன்ற பல்வேறு உணர்வுகள் ஏற்படுகின்றன. அவற்றை எவ்வாறு சமாளிப்பது என்பதை விளையாட்டு அனுபவங்கள் கற்றுக் கொடுக்கின்றன."***

விளையாட்டு குழந்தைகளின் உணர்ச்சி வளர்ச்சிக்கும் மிக முக்கியமானதாகும். குழந்தைகளுக்கு மகிழ்ச்சி, கோபம், ஏமாற் றம், பயம், எதிர்பார்ப்பு போன்ற பல்வேறு உணர்வுகள் ஏற்படுகின்றன. அவற்றை எவ்வாறு சமாளிப்பது என்பதை விளை யாட்டு அனுபவங்கள் கற்றுக்கொடுக்கின் றன. உதாரணமாக, ஒரு குழு விளையாட் டில் எதிர்பார்த்த முடிவு கிடைக்காத போது குழந்தை ஏமாற்றத்தை ஏற்றுக்கொள்ள வும், தனது உணர்வுகளைக் கட்டுப்படுத் தவும் கற்றுக்கொள்கிறது. இன்றைய கால கட்டத்தில் குழந்தைகளின் மன அழுத்தம் அதிகரித்து வரும் நிலையில், விளை யாட்டு அவர்களுக்கு மகிழ்ச்சியான மற்றும் சுதந்திரமான சூழலை வழங்குகிறது. விளை யாடும் போது குழந்தைகள் தங்களுடைய கவலைகளை மறந்து இயல்பாக செயற் படுகின்றனர். இதனால் அவர்களின் மனநிலை சமநிலைப் படுத்தப்படுகிறது. ஆரோக்கியமான மனநிலையுடன் இருக்கும் குழந்தைகள் கற்றலில் அதிக ஆர்வத்துடன் பங்கேற்கின் றனர்.

குழு விளையாட்டுகள் சமூக வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒரு குழுவில் இணைந்து செயற்படும்போது குழந்தைகள் மற்றவர்களின் கருத்துகளை மதிக்கவும், அவர்



> ***விளையாட்டானது குழந்தைகளின் உடல் இயக்கத்திற்கான ஒரு செயற்பாடு மட்டுமல்ல அது அவர்களின் அறிவு, உணர்வு, சமூக உறவு மற்றும் மனிதப் பண்புகளை ஒருங்கிணைத்து வளர்க்கும் ஒரு முழுமையான வளர்ச்சி முறையாகும்.***

களுடன் ஒத்துழைக்கவும் கற்றுக்கொள்கின்றனர். தனிப்பட்ட வெற்றியை விட குழுவின் வெற்றிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை அவர்கள் புரிந்து கொள்கின்றனர். இதன் மூலம் சமூக உணர்வு மற்றும் பொறுப்புணர்வு வளர்கிறது. ஒரு சமூகத்தில் நல்ல உறவுகளுடன் வாழ்வதற்கு விட்டுக்கொடுக்கும் தன்மை, பொறுமை, பிறரை மதிக்கும் பண்பு போன்றவை அவசியமானவை. இத்தகைய பண்பு களை விளையாட்டு இயல்பாக வளர்க்கின்றது. குழந்தைகள் விளையாட்டின் போது தங்களுடைய விருப்பங்களை மட்டும் முன்னிலைப்படுத்தாமல், நண்பர்களின் தேவைகளையும் கருத்தில் கொள்ள கற்றுக்கொள்கின்றனர்.

விளையாட்டில் விதிகள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. எந்த ஒரு விளையாட்டிற்கும் சில விதிமுறைகள் இருக்கும். அவற்றை மதித்து செயற்படுவதன் மூலம் குழந்தைகள் ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாட்டைக் கற்றுக்கொள்கின்றனர். வாழ்க்கையிலும் சட்டங்கள், சமூக விதிமுறைகள் மற்றும் பிறரின் உரிமைகளை மதிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகிறது. மேலும், விளையாட்டு தலைமைத்துவப் பண்புகளை வளர்க்கும் ஒரு சிறந்த களமாகவும் அமைகின்றது. குழுவை வழிநடத்துதல், முடிவுகளை எடுத்தல், பொறுப்புகளை பகிர்ந்தளித்தல், பிரச்சினைகளைத் தீர்த்தல் போன்ற திறன்கள் விளையாட்டு அனுபவத்தின் மூலம் வளர்கின்றன. சிறுவயதில் உருவாகும் இந்த தலைமைத்துவத் திறன்கள் எதிர்காலத்தில் சமூக மற்றும் தொழில் வாழ்க்கையில் பெரும் பயனை அளிக்கின்றன.

விளையாட்டு குழந்தைகளின் படைப்பாற்றலையும் அதிகரிக்கின்றது. குறிப்பாக கற்பனை விளையாட்டுகள், நாடகம், பொம்மலாட்டம் போன்ற செயற்பாடுகள் குழந்தைகளுக்கு புதிய சிந்தனைகளை உருவாக்கும் வாய்ப்பை வழங்குகின்றன. ஒரு சாதாரண பொருளை புதிய வடிவில் பயன்படுத்துதல், புதிய கதைகளை உருவாக்குதல், புதிய பாத்திரங்களை கற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகள் படைப்பாற்றலை வளர்க்கின்றன. படைப்பாற்றல் என்பது கலைத்துறைக்கு மட்டும் தேவையான திறன் அல்ல. வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் புதிய சிந்தனை மற்றும் பிரச்சினைகளுக்கான புதிய தீர்வுகள் தேவைப்படுகின்றன. எனவே குழந்தைப் பருவத்தில் விளையாட்டின் மூலம் வளர்க்கப்படும் படைப்பாற்றல் எதிர்காலத்தில் அவர்களின் அனைத்து முயற்சிகளுக்கும் உதவுகிறது. விளையாட்டானது குழந்தைகளின் உடல் இயக்கத்திற்கான ஒரு செயற்பாடு மட்டுமல்ல அது அவர்களின் அறிவு, உணர்வு, சமூக உறவு மற்றும் மனிதப் பண்புகளை ஒருங்கிணைத்து வளர்க்கும் ஒரு முழுமையான வளர்ச்சி முறையாகும். மனித ஆளுமை உருவாக்கத்தில் விளையாட்டின் பங்கு மிக ஆழமானதும் இன்றியமையாததுமாகும்.

மனிதரின் கற்றல் அனுபவத்தை வளப்படுத்துவதில் கலை சார்ந்த விளையாட்டுகள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. குறிப்பாக நாடகமும் அரங்கியலும், பொம்மலாட்டம், இசை, நடனம் போன்ற நிகழ்த்துகைக் கலைகள் குழந்தைகளின் கற்றலை மகிழ்ச்சியான அனுபவமாக மாற்றுகின்றன. இவை வெறும் பொழுதுபோக்கு செயற்பாடுகள் அல்ல மாறாக, குழந்தைகளின் சிந்தனை, கற்பனை, உணர்வு மற்றும் சமூகப் புரிதலை வளர்க்கும் கல்வி முறைகளாக அமைகின்றன. நாடகம் என்பது விளையாட்டின் உயர்ந்த வடிவங்களில் ஒன்றாகக் கருதப்படலாம். ஒரு குழந்தை நாடகத்தில் பங்கேற்கும் போது அது ஒரு கதாபாத்திரத்தை ஏற்று நடிக்கின்றது. அந்தக் கதாபாத்திரத்தின் வாழ்க்கை, எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள முயற்சிக்கின்றது. இதன் மூலம் குழந்தைகள் தங்களுடைய உலகத்தைத் தாண்டி பிறருடைய அனுபவங்களையும் உணர்வுகளையும் புரிந்துகொள்ளக் கற்றுக்கொள்கின்றனர்.

நாடகச் செயற்பாடுகள் குழந்தைகளின் வெளிப்பாட்டுத் திறனை அதிகரிக்கின்றன. சில குழந்தைகள் இயல்பாகவே அமைதியானவர்களாகவும் தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தத் தயங்குபவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் நாடகத்தில் ஒரு கதாபாத்திரமாகச் செயற்படும் போது அவர்கள் தன்னம்பிக்கையுடன் பேசவும், தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்தவும் கற்றுக்கொள்கின்றனர். இதன் மூலம் அவர்களின் தொடர்பாடல் திறனும் மேம்படுகிறது. பொம்மலாட்டம் குழந்தைகளின் விளையாட்டு வழிக் கற்றலுக்கு சிறந்த உதாரணமாகும். பொம்மைகளை உருவாக்குதல், கதைகளை அமைத்தல், பொம்மைகளை இயக்குதல் மற்றும் உரையாடல்களை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகள் குழந்தைகளின் பல்வேறு திறன்களை ஒரே நேரத்தில் வளர்க்கின்றன. குறிப்பாக கைவினைத் திறன், கற்பனைத் திறன், மொழித் திறன் மற்றும் குழு ஒத்துழைப்பு போன்றவை பொம்



மலாட்டத்தின் மூலம் மேம்படுகின்றன. பாரம்பரிய பொம்ம லாட்டக் கலைகள் ஒரு சமூகத்தின் வரலாறு, பண்பாடு மற் றும் வாழ்க்கை முறைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத் துச் செல்லும் ஊடகங்களாகவும் விளங்குகின்றன. குழந்தைகள் இத்தகைய கலை வடிவங்களில் பங்கேற்கும் போது தங்க ளுடைய பண்பாட்டு அடையாளங்களை அறிந்து கொள்கின் றனர். அதேவேளை பிற சமூகங்களின் கலாசாரங்களையும் மதிக்கக் கற்றுக்கொள்கின்றனர்.

பொம்மலாட்டம் போன்ற கலை வடிவங்கள் விளையாட்டு வழிக் கற்றலை மேலும் வளப்படுத்துகின்றன. இவை குழந்தை களுக்கு அறிவை மட்டும் வழங்காமல், மனிதநேயம், படைப் பாற்றல், பண்பாட்டுப் புரிதல் மற்றும் முழுமையான ஆளுமை வளர்ச்சியையும் வழங்குகின்றன. இன்றைய நவீன உலகில் கல்வியின் நோக்கம் மாற்றமடைந்து வருகிறது. முன்பு கல்வி என்பது மாணவர்களுக்குத் தகவல்களை வழங்கும் ஒரு முறையாக மட்டுமே கருதப்பட்டது. ஆனால் தற்போது கல்வி என்பது மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை நோக்க மாகக் கொண்டுள்ளது. அறிவு, திறன், சிந்தனை, படைப் பாற்றல், சமூகப் பொறுப்பு மற்றும் மனிதநேயப் பண்புகள் கொண்டவர்களாக மாணவர்களை உருவாக்குவதே நவீன கல்வியின் முக்கிய நோக்கமாகும். இந்த நோக்கத்தை நிறை வேற்றுவதில் விளையாட்டு ஒரு முக்கியமான கருவியாக விளங்குகிறது.

விளையாட்டு வழிக் கற்றலில் கற்பனைக்கு முக் கியமான இடம் உள்ளது. குழந்தைகள் விளை யாடும் போது உண்மையான உலகத்தையும் கற்பனை உலகத்தையும் இணைத்துப் புதிய அனுபவங்களை உருவாக்குகின்றனர். ஒரு சிறிய பொருளை ஒரு பெரிய கற்பனை உலகத்தின் பகுதியாக மாற்றும் திறன் குழந்தைகளின் படைப்பாற்றலை வெளிப்படுத்துகின்றது. இந்தத் திறன் எதிர்காலத்தில் புதிய சிந்தனைகளையும் கண்டுபிடிப்புகளையும் உருவாக்க உதவுகிறது.

நவீன கல்வி முறைகளிலும் விளையாட்டு அடிப் படையிலான கற்றலுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. மாணவர்கள் ஆசிரியர் கூறும் தகவல்களை மட்டும் கேட்டு மனப்பாடம் செய்வதை விட, செயற்பாடுகளில் ஈடுபட்டு கற் றுக்கொள்ளும் போது அறிவு ஆழமாகப் பதி கின்றது. இதனால் மாணவர்களின் ஆர்வம், சுய சிந்தனை மற்றும் கற்றல் திறன் என்பனவும் அதி கரிக்கின்றது. விளையாட்டு அடிப்படையிலான கல்வி மாணவர்களை செயலில் ஈடுபடும் கற்ற வர்களாக மாற்றுகிறது. ஒரு பிரச்சினைக்கு பல் வேறு தீர்வுகளைச் சிந்திக்கும் திறன், புதிய முயற்சிகளை மேற்கொள்ளும் துணிவு மற்றும் சுயமாக முடி வெடுக்கும் திறன் போன்றவை வளர்கின்றன. இதனால் மாண வர்கள் எதிர்கால வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள் ளத் தயாராகின்றனர்.

ஆசிரியரின் பங்கும் விளையாட்டு வழிக் கற்றலில் மிகவும் முக்கியமானதாகும். ஆசிரியர் விளையாட்டை வெறும் இடை வேளை செயற்பாடாகப் பார்க்காமல், கல்விக் கருவியாகப் பயன்படுத்த வேண்டும். பாட உள்ளடக்கங்களுடன் தொடர் புடைய விளையாட்டு முறைகளை உருவாக்குவதன் மூலம் மாணவர்களின் கற்றலை எளிதாக்க முடியும். சிறந்த ஆசிரி யர்கள் மாணவர்களின் தனிப்பட்ட திறன்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு ஏற்ற விளையாட்டு மற்றும் கலைச் செயற்பாடுகளை வழங்குவார்கள். இதன் மூலம் ஒவ்வொரு மாணவரும் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தும் வாய்ப்பைப் பெறுகின்றனர். விளையாட்டு மூலம் மாணவர்கள் பாட அறிவை வாழ்க்கை அனுபவங்களுடன் இணைத்துக் கொள்ள முடிகிறது. ஒரு பாடத்தில் கற்றுக்கொள்ளும் கருத் துகளை செயற்பாடுகள் மற்றும் விளையாட்டுகள் மூலம் அனுபவிக்கும் போது, அந்த அறிவு அவர்களின் மனதில் ஆழமாகப் பதிகிறது. இதனால் கற்றல் ஒரு சுமையாக இல் லாமல் மகிழ்ச்சியான அனுபவமாக மாறுகிறது.

> ***“குழந்தைகள் விளையாடும் போது உண்மையான உலகத்தையும் கற்பனை உலகத்தையும் இணைத்துப் புதிய அனுபவங்களை உருவாக்குகின்றனர். ஒரு சிறிய பொருளை ஒரு பெரிய கற்பனை உலகத்தின் பகுதியாக மாற்றும் திறன் குழந்தைகளின் படைப்பாற்றலை வெளிப்படுத்துகின்றது.”***

இன்றைய தொழினுட்ப வளர்ச்சிக் காலத் தில் குழந்தைகளின் வாழ்க்கை முறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மின்னணு சாதனங்களின் அதிகப்படியான பயன்பாடு காரணமாக குழந்தைகளின் நேரடி சமூக உறவுகள் மற்றும் உடல் இயக்கங்கள் குறைந்து வருகின்றன. இந்நிலையில், நேரடி விளையாட்டுகள் குழந்தைகளுக்கு உடல் ஆரோக்கியத்தையும், சமூக உறவுகளையும் மீண்டும் உருவாக்க உதவுகின்றன. விளை யாட்டு குழந்தைகளுக்கு இயற்கையோடு இணைந்த அனுபவத்தையும் வழங்குகிறது. வெளிப்புற விளையாட்டுகள் மூலம் அவர் கள் சுற்றுச்சூழலை அறிந்து கொள்கின்றனர். இயற்கையை மதித்தல், பிற உயிரினங் களைப் பாதுகாத்தல் மற்றும் சமூகத்துடன் இணைந்து வாழ்தல் போன்ற மதிப்புகள் விளையாட்டு அனுபவங்களின் மூலம் உரு வாகின்றன.

மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையில் தேவையான பல திறன்களை வளர்க்கும் ஒரு பயிற்சிக் களமாக விளையாட்டு அமை கிறது. பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், குழுவாகச் செயற்படும் திறன், தலைமைத்

துவம், முடிவெடுக்கும் திறன் மற்றும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் திறன் போன்றவை விளையாட்டு மூலம் வளர்க்கப்படுகின்றன. இத்தகைய திறன்கள் கல்வி வாழ்க்கையில் மட்டுமல்லாமல் தொழில் மற்றும் சமூக வாழ்க்கையிலும் பெரும் உதவியாக அமைகின்றன. ஒரு நல்ல கல்வி அமைப்பு மாணவர்களின் தனித்திறமைகளை அடையாளம் கண்டு வளர்க்க வேண்டும். அனைத்து மாணவர்களும் ஒரே விதமான திறமைகளைக் கொண்டவர்கள் அல்ல. சிலர் அறிவியல், கணிதம் போன்ற துறைகளில் சிறந்து விளங்கலாம்; சிலர் கலை, விளையாட்டு அல்லது படைப்பாற்றல் துறைகளில் திறமைகளை வெளிப்படுத்தலாம். எனவே மாணவர்களின் பல்வேறு திறமைகளுக்கும் வாய்ப்பு வழங்குவதில் விளையாட்டு முக்கிய பங்கு வகிக்கிறது.

விளையாட்டு மூலம் குழந்தைகளிடம் உருவாகும் ஒழுக்கம் மற்றும் பொறுப்புணர்வு சமூக வாழ்க்கைக்கும் அடிப்படையாக அமைகிறது. விதிகளை மதித்தல், பிறரின் உரிமைகளை ஏற்றுக்கொள்ளுதல், நேர்மையாகச் செயற்படுதல் போன்ற பண்புகள் நல்ல பிரஜையை உருவாக்குகின்றன. மேலும், விளையாட்டு மனிதர்களிடையே சமத்துவ உணர்வையும் வளர்க்கிறது. விளையாடும் போது வயது, சமூக நிலை, மொழி, பின்னணி போன்ற வேறுபாடுகள் குறைந்து அனைவரும் ஒரே நோக்கத்துடன் செயற்படுகின்றனர். இதன் மூலம் ஒற்றுமை மற்றும் சகிப்புத்தன்மை போன்ற உயர்ந்த மனிதப் பண்புகள் உருவாகின்றன.

விளையாட்டை கல்வியின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்வது காலத்தின் தேவையாகும். பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் விளையாட்டு, கலை மற்றும் படைப்பாற்றல் சார்ந்த செயற்பாடுகளுக்கு உரிய இடம் வழங்க வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களின் கற்றலை மேம்படுத்த விளையாட்டு முறைகளை திறமையாகப் பயன்படுத்த வேண்டும். விளையாட்டு என்பது வெறும் பொழுதுபோக்கிற்கான செயற்பாடு அல்ல அது மனிதரை உருவாக்கும் ஒரு வாழ்க்கைப் பள்ளியாகும். ஒரு குழந்தையின் அறிவு, உணர்வு, சமூகத் திறன், படைப்பாற்றல் மற்றும் பண்புகளை ஒருங்கிணைத்து வளர்க்கும் சக்தி விளையாட்டிற்கு உள்ளது. விளையாட்டின் மூலம் கற்றுக்கொள்ளும் அனுபவங்கள் ஒரு மனிதரின் எதிர்கால ஆளுமைக்கு வலுவான அடித்தளமாக அமைகின்றன. ஒரு குழந்தை விளையாடும் போது அது வெறும் நேரத்தை செலவிடுவதில்லை. அது தனது எதிர்காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. எனவே விளையாட்டின் வழி கற்றலை ஊக்குவிப்பது என்பது நல்ல மாணவர்களை மட்டுமல்ல, நல்ல மனிதர்களையும் உருவாக்கும் ஒரு முக்கியமான முயற்சியாகும்.

‘விளையாட்டு என்பது குழந்தையின் மகிழ்ச்சி மட்டுமல்ல அது குழந்தையின் அறிவு, ஆளுமை மற்றும் எதிர்காலத்தை உருவாக்கும் ஒரு கல்விப் பயணம்.’



rathikala.puvan@thaiveedu.com



# கற்றலில் பின்னூட்டமும் மீளவலியுறுத்தலும்

## பெற்றோரும் ஆசிரியர்களும் பின்பற்ற வேண்டியவை



prasadbatti@gmail.com

**சிவபாலு**

கற்றலில் மீளவலியுறுத்தல் (Reinforcement) மற்றும் பின்னூட்டம் (Feedback) ஆகிய இரண்டும் ஒரு மாணவரின் கற்றல் திறனை மேம்படுத்துவதில் மிக முக்கியமான, ஆனால் ஒன்றோடொன்று தொடர்புடைய இரு வேறுபட்ட உத்திகளாகும். மாணவர்களின் தனித்துவமான கற்றல் பற்றிய நிறைகளையும் குறைகளையும் மற்றும் நடத்தை தொடர்பான கணிப்பையும் ஆராய்ந்து அதற்கான வழிகாட்டல்களை முன்வைக்கின்றன. மாணவரின் கற்றல் மற்றும் நடத்தை என்பது எல்லா மாணவர்களாலும் ஒரே நேரத்தில் அல்லது ஒரே மாதிரியாக மேற்கொள்ளப்படுவதில்லை. கற்றலில் அவர்களிடம் காணப்படும் பல்வேறு காரணிகள் செல்வாக்கைச் செலுத்துகின்றன. ஒரு மாணவர் தாமதமாகக் கற்பவராக இருக்கலாம். இன்னொருவர் விரைவாகக் கற்பவராக இருக்கலாம். இன்னொரு மாணவரின் நடத்தைகள் அல்லது செயல்கள் வித்தியாசமாக இருக்கலாம். இவற்றைச் சீர்தூக்கிப்பார்த்து அவர்களுக்கேற்றவகையில் வழிகாட்டுவதாக அமைவதே பின்னூட்டமும் மீள வலியுறுத்தலுமாகும். இவை பற்றிய கருத்தை இக்கட்டுரை ஆராய்கின்றது. 'கற்கக் கசடற' என்பதும் 'கற்றாங்கு ஒழுகுதல்' என்பதும் வள்ளுவத்தின் தத்துவங்கள். கற்பதை ஐயந்தெளிவறக் கற்றல் என்பதே கற்பதன் புரிதல் ஆகும். ஆனால் கற்றபடி நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவது வாழ்வியலின் அடிப்படையாகின்றது.

மாணவர்கள் பாடங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு, தொடர்ந்து ஆர்வத்துடன் கற்பதற்கு இவை எவ்வாறு உதவுகின்றன என்பதற்கான விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது:

### பின்னூட்டம் (Feedback) என்றால் என்ன?

மாணவர்கள் தமக்கு ஒப்படைத்த செயலைச் செய்யும்போது அல்லது ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும் போது, அவர்கள் செய்ததில் அல்லது பதில் அளித்ததில் உள்ள சரியையோ அன்றித் தவறையோ எடுத்துக்காட்டி அதை எப்படிச் சரிசெய்ய வேண்டும் என்று அவருக்கு வழங்கப்படும் தகவல் அல்லது வழிகாட்டுதல் பின்னூட்டம் ஆகும். இது பாடசாலை மாணவர்களுக்கு ஆசிரியர்களால் அல்லது பெற்றோரால் அவர்கள் கற்றது தொடர்பான பார்வையையும் நிறை, குறைபற்றி ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உடன்பாடான வழிகாட்டுதலாக அமைகின்றது.

- நோக்கம்: இது மாணவருக்குத் தங்களின் தற்போதைய கற்றல் நிலை என்ன என்பதைப் புரிய வைக்கிறது.
- உதாரணம்: ஒரு மாணவர் கணிதத்தில் தவறு செய்யும்போது, 'நீங்கள் சூத்திரத்தை (Formula) சரியாகப் பயன்படுத்தியிருக்கிறீர்கள், ஆனால் கூட்டலில் சிறிய தவறு நடந்துள்ளது. அதைச் சரிபாருங்கள்' என்று கூறுவது பின்னூட்டம்.
- பயன்: இது மாணவர்களின் அறிவாற்றலை (Cognitive aspect) மேம்படுத்தி, தவறுகளைத் திருத்திக் கொள்ள உதவுகிறது.

## மீளவலியுறுத்தல் (Reinforcement) என்றால் என்ன?

மீளவலியுறுத்தல் என்பது ஒரு மாணவரின் குறிப்பிட்ட நன்னடத்தையையோ அல்லது கற்றல் பழக்கவழக்கங்களையோ தொடர்ந்து செய்ய வைப்பதற்காக வழங்கப்படும் ஊக்கம் அல்லது வெகுமதி ஆகும். இது உளவியல் ரீதியாக மாணவர்களின் நடத்தையை வடிவமைக்கிறது. ஒரு கட்டடத்தின் தளத்தில் தவறு நேர்ந்துவிட்டால் அந்தக் கட்டடத்தைப் பாதுகாப்பதற்கான ஓர் ஒத்திணைவு அல்லது முட்டுக்கொடுப்பதை அந்தக் கட்டடம் சரிந்துவிடாதபடி மீள்வலிமையைத் தருவதாக அமைகின்றது.

அதேபோன்றதே மாணவர்களுக்குத் தரும் ஆதரவும் அமைகின்றது.

இது இரண்டு வகைப்படும்:

- உடன்பாடான மீளவலியுறுத்தல் (Positive Reinforcement): ஒரு நல்ல செயலைத் தொடர்ந்து செய்ய வைப்பதற்காகப் பாராட்டு அல்லது வெகுமதி தருவதாக அமையும். வீட்டுப் பாடத்தை ஒழுங்காக முடித்த மாணவருக்கு 'நட்சத்திரக் குறியீடு' (Star) வழங்குவது அல்லது வகுப்பில் எல்லோர் முன்னிலையிலும் பாராட்டுவதாக அமையும். அனால் இது இதனைச் செய்தால் நீ இதனைப் பெறுவாய் என்ற நிபந்தனையுடனான செயற்பாடாக அமையாது. மீளவலியுறுத்தல் என்பது மாணவருக்குத் திரும்பவும் பயிற்சியளிப்பதாக அல்லது திரும்பத் திரும்பச் சொல்லிக் கொடுத்து மனதில் ஆழமாகப் பதிய வைக்கும் ஒரு முயற்சியாகவே அமைகின்றது. இது கவனச் சிதறல் உள்ள அல்லது ஒன்றன்மீது தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்த முடியாது அல்லது விளங்கிக் கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்ளும் மாணவர்களின் நடத்தைகளை ஒழுங்கமைப்பதாக அமைகின்றது.
- எதிர்மறை மீளவலியுறுத்தல் (Negative Reinforcement): ஒரு மாணவர் தொடர்ந்து படிக்க வேண்டும் என்பதற்காக, அவருக்குச் சுமையாக இருக்கும் ஒரு விஷயத்தை நீக்கி விட்டு இலகுவானவற்றைக் கற்கவைக்கும் நடத்தையாக அமைகின்றது. அத்தோடு கவனச்சிதறல் மற்றும் கவனிக்காது வேறு சிந்தனைகளில் ஆழ்தல் போன்ற வற்றைத் தவிர்த்து கற்றலில் கவனம் செலுத்துவதை அடிப்படையாகக் கொண்டதாக அமைகின்றது. 'இந்த வாரம் முழுவதும் வகுப்பில் சிறப்பாகக் கவனித்தால், வார இறுதியில் வீட்டுப் பாடம் (Homework) தரப்பட மாட்டாது' எனக் கூறுவது. 'இன்று நன்றாகக் கவனித்துள்ளீர்கள் தொடர்ந்து இப்படியே கவனித்தால் எல்லோரையும் விட முதன்மை மாணவராக வருவாய்' என்பன போன்ற வார்த்தைகளால் மாணவர்களின் உளத்தைத் தொடுவதாக அமையும்.

இது மாணவர்களின் உந்துதலை (Motivation) அதிகரித்து, குறிப்பிட்ட நல்ல பழக்கத்தைத் திரும்பத் திரும்பச் செய்யத் தூண்டுகிறது.

**இரண்டுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு:**

பின்னூட்டத்தின் மையப்புள்ளி என்ன தவறு, அதை எப்படி மாற்றுவது என்பதனை விளக்கும் தகவலைக் கொண்டுள்ளது. அறிவை வளப்பதற்கான வழியைக் காட்டுகின்றது. ஊக்கப்படுத்தித் தட்டிக்கொடுத்து மேலும் செய்யவேண்டியதை அல்லது சேர்க்கவேண்டியதை ஆலோசனையாக வளங்குகின்றது. மாணவர்கள் கற்றதனை எவ்வளவுக்குப்



புரிந்துகொண்டுள்ளனர் என்பதை ஆசிரியர் அறிந்து கொள்ளும் வழியாகவும் தேவைப்படும் கற்றல் நடத்தைகளை சரி செய்து கொள்ளுவதாகவும் அமைகின்றது. பின்னூட்டம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தேவையானது. மாணவர் எவ்வளவிற்குப் புரிந்துகொண்டுள்ளனர் என்பதோடு தனதுகற்பித்தல் முறை பயனுள்ளதாக அமைந்துள்ளதா ? என்பதை ஆசிரியர் அறிந்து தனது கற்பித்தல் உத்தியை மாற்றியமைக்கவும் பயன்படுகின்றது.

ஆனால் மீள வலியுறுத்தல் என்பது உழைப்பையோ அன்றி நல்ல பழக்க வழக்கத்தையோ நிலைநிறுத்தித் தொடர்ந்து செயற்படவைக்கின்றது, பரிசில்கள், பாராட்டுக்கள், வெகுமதிகள், வாழ்த்துக்களால் மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள். இது நல்ல நடத்தைகளைப் பின்பற்ற வலியுறுத்துவதோடு உளவியல் சார்ந்த நடத்தையை வலியுறுத்தி மனதில் பதியவைக்கின்ற செயற்பாடாக அமைகின்றது.

### இவை எவ்வாறு கற்றலை மேம்படுத்துகின்றன?

- பயத்தைப் போக்குகிறது: சரியான பின்னூட்டம் கிடைக்கும் போது, மாணவர்கள் தவறுகளைக் கண்டு பயப்படாமல், அதிலிருந்து எப்படிக் கற்றுக்கொள்வது என்பதை உணர்கிறார்கள்.
- ஆர்வத்தைத் தக்கவைக்கிறது: மீளவலியுறுத்தல் (பாராட்டு அல்லது வெகுமதி) மாணவர்களுக்கு 'நாம் அங்கீகரிக்கப்படுகிறோம்' என்ற உணர்வைத் தந்து, தொடர்ந்து சிறப்பாகப் படிக்கத் தூண்டுகிறது.
- சுய கற்றலை ஊக்குவிக்கிறது: இவ்விரண்டும் இணையும் போது, மாணவர்கள் தங்களின் பலம் மற்றும் பலவீனங்களைத் தாங்களே சுயமதிப்பீடு செய்யும் திறனைப் பெறுகிறார்கள்.

சுருக்கமாகக் கூறின், பின்னூட்டம் மாணவர்களுக்குச் சரியான பாதையைக் காட்டுகிறது; மீள வலியுறுத்தல் அம் மாணவர்களை அந்தப் பாதையில் தொடர்ந்து பயணிக்க வைக்கிறது. உண்மையிலேயே, மெதுவாகக் கற்கும் மாணவர்களுக்கான (Slow Learners) பின்னூட்டம் (Feedback) பற்றிய விளக்கம் மற்றும் அதன் பயன்கள் மாணவர்களுக்கு நன்மைபயக்கின்றன.

### தாமதமாகக் கற்கும் மாணவர்களுக்கான பின்னூட்டம் என்றால் என்ன?

தாமதமாகக் கற்கும் மாணவர்களுக்குக் கருத்து அல்லது பின்னூட்டம் வழங்குவது என்பது, அவர்கள் செய்த தவறுகளைச் சுட்டிக்காட்டுவது மட்டுமல்ல. இது அவர்களின் கற்கும் வேகத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட ஓர் ஊக்கப்படுத்தும் கருவியாகும். இது பொறுமை மற்றும் முறையான அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டது. தாமதமாகக் கற்கும் மாணவர்கள் அடையும் பயன்கள் அவர்களில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

- உடன்பாடான அணுகுமுறை (Constructive and Positive): மாணவர்களின் குறைகளைச் சொல்வதற்கு முன், அவர்கள் செய்த நல்ல விஷயங்களைப் பாராட்டி, பின் மெதுவாக முன்னேற வேண்டிய இடங்களைச் சுட்டிக் காட்டி நெறிப்படுத்துவது.
- படிப்படியான வழிகாட்டுதல் (Incremental / Scaffolded): ஒரு பெரிய பாடத்தையோ அல்லது திட்டப்பணியையோ ஒரே நேரத்தில் எடுத்துரைக்காமல், சிறிய சிறிய பகுதிகளாகப் பிரித்து கருத்துகளை வழங்கும் முறையாகும்.
- முயற்சிக்கு முக்கியத்துவம் (Process-Oriented): இறுதிப் பதில் சரியாக இருக்கிறதா என்பதைத் தாண்டி, அவர்கள் செலவிட்ட நேரம், உழைப்பு, விடாமுயற்சி மற்றும் உத்திகளைப் பாராட்டுவதாக அமையும். எடுத்துக்காட்டாக 'சரியான பதில்' என்று சொல்வதற்குப் பதில், 'இந்தக் கணக்கை நீங்கள் படிபடியாகப் பிரித்துச் செய்த விதம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது' என்று கூறுவது.
- தெளிவான வழிகாட்டுதல் (Clear and Actionable): 'இன்னும் நன்றாகப் படியுங்கள்' என்று



பொதுப்படையாகக் கூறாமல், அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெளிவாகக் கூறி அதற்கான செயல்முறைகளை எப்படிச் செய்யவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி அவர்களை நெறிப்படுத்துவதாக அமையும். 'அடுத்த முறை கேள்வியை வாசிக்கும் போது, அதில் உள்ள முக்கிய வார்த்தைகளை அடிக்கோடிட்டுக் கொள்ளவேண்டும்' என்று கூறுவதனால் கேள்வியை நன்கு புரிந்துகொள்ள வழிகாட்டப்படுகின்றது.

**இதன் நன்மைகள் (Benefits):**

மெதுவாகத் தகவல்களைப் புரிந்துகொள்ளும் மாணவர்களுக்கு ஏற்ப பின்னூட்டங்களை மாற்றியமைக்கும் போது, அது அவர்களின் கற்றல் திறனை முழுமையாக மாற்றுகிறது, அதனால் அவர்களைக் கற்றலில் ஆர்வத்தோடு ஈடுபடவைக்கின்றது.

- தன்னம்பிக்கையை வளர்க்கிறது (Builds Confidence): தாங்கள் மற்ற மாணவர்களை விடப் பின்தங்கியிருக்கிறோம் என்பதை மெதுவாகக் கற்கும் மாணவர்கள் உணர்ந்திருப்பார்கள். இது அவர்களுக்கு ஒருவிதப் பயத்தை (Anxiety) உருவாக்கும். ஆசிரியர்கள் தரும் உடன்பாடான, படிப்படியான பின்னூட்டம் அவர்களாலும் முன்னேற முடியும் என்ற நம்பிக்கையையும் சுயமரியாதையையும் வளர்க்கிறது. இது ஏனைய மாணவர்களைப் போல என்னால் முடியும் என்னும் சிந்தனையை வலியுறுத்துவதனால் கல்வியில் தன்னார்வத்தோடு செயற்படவைக்கின்றது.
- மன அழுத்தத்தைக் குறைக்கிறது (Reduces Cognitive Overload): ஒரே நேரத்தில் அதிகபடியான திருத்தங்களையோ அல்லது தகவல்களையோ மாணவர்கள் மீது திணிக்கும் போது அவர்கள் சோர்ந்து விடுவார்கள். அவர்களுக்குப் புரியும் வேகத்தில், சிறிய அளவில் கருத்துக்களைக் கூறும்போது, அவர்களால் அதை எளிதாக உள்வாங்கித் திருத்திக் கொள்ள முடிகிறது. மனதில் உள்ள சுமையைக் குறைத்து சாதாரணமாக செயற்படத் தூண்டு கின்றது.
- வளர்ச்சி மனப்பான்மையை உருவாக்குகிறது (Fosters a Growth Mindset): மாணவர்களின் அறிவை மட்டும் பாராட்டாமல் அவர்களின் முயற்சியைப் பாராட்டும் போது, தவறுகள் என்பவை தோல்வி அல்ல, அவை கற்றலின் ஒரு பகுதி என்பதை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். இதனால் அவர்கள் சவால்களை எதிர்கொள்ளத் தயங்குவதில்லை.
- சுய முன்னேற்ற ஊக்குவிப்பு (Encourages Autonomy): தெளிவான மற்றும் வழிகாட்டும் பின்னூட்டங்கள் மாணவர்களுக்கு ஒரு வரைபடம் போலச் செயல்படுகின்றன. ஒவ்வொரு முறையும் ஆசிரியர் வந்து திருத்துவதற்காகக் காத்திராமல், தங்கள் வேலையைத் தாங்களே எப்படிச் சரிபார்ப்பது என்பதை அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.
- கற்றலில் ஈடுபாட்டைத் தக்கவைக்கிறது (Prevents Disengagement): 'நம்மால் மற்றவர்களோடு ஈடுகொடுக்க முடியவில்லையே' என்று நினைக்கும் போது மாணவர்கள் படிப்பை வெறுக்கவோ அல்லது கைவிடவோ வாய்ப்புள்ளது. ஆனால், அவர்களின் சிறு முன்னேற்றத்தையும் பாராட்டித் தொடர்ந்து பின்னூட்டம் கொடுக்கும் போது, தங்களின் உழைப்பிற்குப் பலன் கிடைப்பதை அறிந்து அவர்கள் தொடர்ந்து ஆர்வத்துடன் கற்பார்கள்.

## நேருக்கு நேர் வகுப்பறைக் கற்றல் (Traditional Classroom):

வகுப்பறையில் மாணவர்கள் உங்கள் முன்னிலையில் இருப்பதால், அவர்களின் உடல்மொழி மற்றும் முகபாவனைகளை வைத்து ஆசிரியர்கள் பின்னூட்டங்களை உடனடியாகவும் நேரடியாகவும் வழங்க முடியும். இது ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல பெற்றோருக்கும் பொருத்தமானது. பிள்ளைகளின் தேவையறிந்து அவர்களை வழிகாட்டுவதாக அமைகின்றது.



**கையாள வேண்டிய உத்திகள்:**

- பிரத்தியேகமான உரையாடல் (Private Feedback): மெதுவாகக் கற்கும் மாணவர்களை மற்ற மாணவர்களின் முன்னிலையில் வைத்துத் திருத்தக் கூடாது. அவர்கள் தவறு செய்யும் போது, அவர்களின் மேசைக்கே சென்று ரகசியமாக, மென்மையான குரலில் வழிகாட்டுவதாக அமைய வேண்டும்.
- தொட்டுணரக்கூடிய மற்றும் காட்சி வழிக் குறியீடுகள் (Visual & Tactile Cues): நோட்டுப் புத்தகத்தில் பெரிய 'X' குறியீடு போடுவதைத் தவிர்க்கவும். அதற்குப் பதிலாக, அவர்கள் சிறப்பாகச் செய்த பகுதிக்கு நட்சத்திரக் குறியோ (Star) அல்லது புன்னகை வடிவத்தையோ (Smiley) வரைந்து, திருத்த வேண்டிய இடத்தில் ஒரு சிறிய அடிக்கோடு (Underline) மட்டும் இடலாம். இது மாணவர்களை உளம் கோணாதபடி செயற்பட வைக்கும் உத்தியாகக் கையாளப்படவேண்டும்.
- உடனடி வாய்மொழிப் பாராட்டு (Immediate Verbal Praise): அவர்கள் ஒரு சிறிய சரியான படியை எடுத்து வைத்தால் கூட, உடனே 'மிக நன்று, இதே போல் மீதியையும் செய்யுங்கள்' என்று வகுப்பறையிலேயே ஊக்கப்படுத்தலாம்.

**நன்மைகள்:**

- பாதுகாப்பான உணர்வு (Sense of Security): மற்றவர்கள் கேலி செய்வார்களோ என்ற பயம் நீங்கி, ஆசிரியர் தங்களுக்குத் தனியாக உதவுகிறார் என்ற பாதுகாப்பு உணர்வு மாணவர்களுக்கு ஏற்படும். ஆசிரியர் தங்களில் மிகுந்த அக்கறையுடன் உள்ளார் அவர் எமக்கு நன்மையே செய்கின்றார். நாம் கற்பதற்குத் தனித்துவமான உத்திகளைக் கையாளுகின்றார் என சிந்திக்க வைக்கின்றது.
- உடனடித் திருத்தம் (Real-time Correction): தவறு செய்யும் அதே கணத்திலேயே அதைத் திருத்துவதால், தவறான வழிமுறைகள் அவர்களின் மனதில் ஆழப் பதிவது தடுக்கப்படுகிறது.

## நேரலை வகுப்பறைக் கற்றல் (Online Learning):

Online வகுப்புகளில் மாணவர்கள் தனிமையில் இருப்பதால், அவர்களுக்குக் கூடுதல் கவனமும், தொழில் நுட்பம் சார்ந்த மென்மையான அணுகுமுறையும் தேவைப்படுகிறது.

**கையாள வேண்டிய உத்திகள்:**

- தனிப்பட்ட செய்திகள் (Private Chat / DMs): பொதுவான ஜூம் (Zoom) அல்லது கூகுள் மீட் (Google Meet) சாட்டில் அனைவர் முன்னிலையிலும் குறைகளைக் கூறாமல், 'Private Message' அல்லது மின்னஞ்சல் மூலம் கருத்துகளை அனுப்ப வேண்டும்.
- ஒலி / ஒளிவடிவ பின்னூட்டம் (Audio/Video Feedback): வெறும் உரையாக (Text) தட்டச்சு செய்து அனுப்பினால், அது சில நேரங்களில் கடுமையானதாகத் தோன்றலாம். அதற்குப் பதிலாக, 1 நிமிடம் உங்கள் குரலை மட்டுமே பதிவு செய்தோ (Voice Note) அல்லது திரைப்பதிவுச் செயலி (Loom) போன்ற மென்பொருள் மூலம் திரையைப் பகிர்ந்து (Screen Share) அன்பான குரலில் வழிகாட்டலாம்.
- எண்ணிம வெகுமதிகள் (Digital Badges / Stickers): நேரலைக் கற்றலில் ஊக்கம் குறைய வாய்ப்புள்ளது. எனவே, அவர்கள் வீட்டுப் பாடத்தை முடிக்கும் போது எண்ணிம முத்திரைகளை அல்லது அடையாளங்களை வழங்கிப் பாராட்டலாம்.

**நன்மைகள்:**

- திரும்பத் திரும்பக் கேட்கும் வசதி (Rewind and Review): செவிப்புல மற்றும் கட்புல செயலிகளின் வழியாகத் தரும் பின்னூட்டங்களை, அந்த மாணவர் தனக்குப் புரியும் வரை எத்தனை முறை வேண்டுமானாலும் திரும்பத் திரும்பக் கேட்டும் பார்த்தும் கற்றுக் கொள்ள முடியும்.
- சுயமரியாதை காக்கப்படும் (Preserves Dignity): நேரலைகளில் தனிப்பட்ட முறையில் கருத்துகளைப் பகிர்வதால், சக மாணவர்களுக்கு முன்னால் வெட்கப்படுதல் அல்லது குறைவாக மதிப்பிடுவதற்கு உள்ளாதல் முற்றிலும் தவிர்க்கப்படுகிறது.

வகுப்பறையில் 'அன்பான அணுகுமுறையும் உடல்மொழியும்' அம்மாணவர்களுக்கு உதவும்; நேரலையில் பயன்படுத்தும் 'தனிப்பட்ட கட்புல மற்றும் செவிப்புல கருவிகளின் பதிவுகளும் மென்மையான வார்த்தைகளும்' அவர்களைச் சாதனையாளர்களாக மாற்றும். என்பது கல்வியாளர்களின் அனுபவப் பகிர்வாகும். மாணவர்களை அவர்களின் தரத்தைக் கண்டறிந்து அவர்களின் தரத்திற்கு இறங்கிச் செயற்படவேண்டியது ஆசிரியர்களினதும், மாணவர்களுக்கு உதவும் பெற்றோர் மற்றும் உறவினர்களினதும் கடப்பாடாகும். 'எந்தப்பிள்ளையும் நல்ல பிள்ளைதான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவராவதும் கெட்டவராவதும் அன்னை வளர்ப்பினிலே' என்றார் கவிஞர் கண்ணதாசன். அன்னை என்பது இங்கு ஈன்று புறம் தந்தாளை மட்டும் பொறுப்பாக்கிவிடுவதில்லை மாறாக பிள்ளையைச் சுற்றியுள்ள அனைவரையும் குறிப்பதாக அமைகின்றது. மனிதர் சூழலியல் விலங்காகக் கருதப்படுவதற்குச் சூழல் மிக முக்கிய காரணியாக அமைகின்றது. இதனால்தான் நல்ல சூழலில் குழந்தைகளை வளர்த்தெடுத்தல் வேண்டும் என்னும் கருத்து முன்வைக்கப்படுகின்றது. ஒரு மனிதர் நல்லவராவதும் கெட்டவராவதும் அவன் வாழும் சூழலைப் பொறுத்தே அமைகின்றது. பிள்ளைகளின் வளர்ச்சிப் பருவங்களில் ஏற்படும் தாக்கங்கள் பல்வேறு பின்விளைவுகளை அவர்களுக்குத் தருகின்றது. இவற்றைக் கவனித்து அவர்களைக் கல்வியறிவூட்டி வளர்த்தெடுப்பதில் பெற்றோர் மற்றும் கல்விச் சமூகத்திற்குப் பாரிய பொறுப்புள்ளது.

sivapalu@thaiveedu.com



இந்த அத்தியாயம், பெற்றோர்களும் பதின்மவயதினர்களும் தங்களுக்குள் ஒருவரையொருவர் சமாளிக்கின்ற விதங்கள் தொடர்பான சின்னச் சின்ன சம்பவங்களைக் கொண்டுள்ளதாக அமைந்துள்ளது. அவர்கள் இணைந்து வாழ்வதற்கும், உறவாடுவதற்கும் மேற்கொள்ளுகின்ற முயற்சிகள் தொடர்பான சில சிறிய கதைகள் இங்கு முன் வைக்கப்படுகின்றன. கூடவே, தத்தமது சுயமரியாதைக்காக, அவர்கள் இருதரப்பினரும் தனித்தனியாகத் தம்முள் நடத்தும் போராட்டங்களையும், தம்மிடையே முடிந்தளவுக்குக் குறைந்த அளவிலான மனக்கசப்புக்களோடேனும் தாம் ஒன்றாக வாழவேண்டும் என்பதற்காக எதிர் கொள்ளும் பரஸ்பர சவால்களையும் இவை கூறுகின்றன. அதனூடாக, பதின்ம வயதினர்கள், அவர்களது பெற்றோர்கள் ஆகிய இருதரப்பினருமே கற்றுக்கொள்ளவும், தம்மை வளர்த்துக் கொள்ளவும், தேவையான மாற்றங்களைத் தம்முள் ஏற்படுத்திக் கொள்ளவும் அவசியமான திறன்களையும் இவை வெளிப்படுத்துகின்றன.

### காதல் தொடர்பான ஒரு மௌனமான பாடம்:

கடற்கரையில் உலாவிக் கொண்டிருந்தபோது, பதினெட்டு வயதான நோரா தன் தாயிடம் கேட்டாள்:

‘அம்மா, இறுதியாக ஒரு பெண் தன் கணவரைக் கண்டடைந்த பிறகு, அவரை அவள் எப்போதும் தனக்கே உரியவராகப் பேணுவதென்பது எப்படி?’

தாய் ஒரு கணம் யோசித்துவிட்டு, குனிந்து இரண்டு கைகளிலும் இரண்டு கைப்பிடி மணலை அள்ளி எடுத்தாள். ஒரு கையில் உள்ளதை அவள் இறுக்கமாகப் பிழிந்தாள்: மணல் அவள் விரல்களின் இடைவெளிகளுக்கூடாகப் பிதுங்கி வெளியேறியது. அவள் எவ்வளவு இறுக்கமாகப் பிழிந்தாளோ, அவ்வளவுக்கு அதிகமாக மணல் வெளியேறியது. மற்றொரு கையை அவள் திறந்தபடியே வைத்திருந்தாள். மணல் அவளது உள்ளங்கையில் அப்படியே இருந்தது. நோரா தன் தாயை வியப்புடன் பார்த்தபடி மெதுவாகச் சொன்னாள்:

‘புரிகிறது.’

நோராவின் தாய் ஒரு அடிப்படை உண்மையை அவளுக்கு அழுத்தமாக நிரூபித்தாள்: வற்புறுத்தல் என்பது அன்பிற்கு நேர் எதிரானது. நோராவுக்கு இந்த நினைவூட்டல் தேவைப்பட்டது. அவள் தன் வருங்காலக் கணவருடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தாள். அதன் காரணமாக மிகவும் கவலையான மனநிலையில் இருந்தாள். அவளது தாயின் எந்த வார்த்தைகளுமற்ற மௌனமான செய்தி, அவளுக்குத் தான் நடந்துகொள்ள வேண்டிய விதம் பற்றிய, தெளிவான புரிதலைக் கொடுத்தது: ‘நான் மிகவும் உடைமை உணர்வு கொண்டவளாக இருக்கிறேன். நான் விஷயங்களை வற்புறுத்துபவளாக இருக்கிறேன். நான் மாற வேண்டும்.’

அவள் தன்னை மாற்றிக் கொண்டாள்.

### இதோ அவளது கதை:

‘அவருக்குப் பிடிக்காத ஒரு ‘சோடி’ (couple), எங்களை ஒரு இரவு விருந்துக்கு அழைத்தபோது நான் அதை ஏற்றுக்கொண்டு வருவதாகச் சொல்லியிருந்தேன். என்னுடைய



பதின்மவயதினருக்கும் உங்களுக்கும் இடையே

15

# மாற்றத்துக்கான கற்றலும் வளர்ச்சியும்!

எஸ்.கே. விக்னேஸ்வரன்

prasadbatti@gmail.com

வருங்காலக் கணவர் இதற்காக மிகவும் கோபமடைந்தி ருந்தார். கடந்த காலங்களில் நாங்கள் அவர்களின் வீட் டிற்குக் காரில் சென்று கொண்டிருந்த போதெல்லாம், அவருக்குப் பிடிக்காதவர்களுடன் இருக்கையில் ஒன்றாக அமரும்படி நான் பலமுறை அவரை வற்புறுத்தி இருக் கிறேன் என்பது எனக்கு நினைவுக்கு வந்தது. கடந்த காலங்களில், அவரை அதைச் செய்ய வைப்பதற்காக நான் சிணுங்கியிருப்பேன், அல்லது அவருடன் ஒரு வாக் குவாதத்தையே தொடக்கி விட்டிருந்திருப்பேன். இந்த முறை நான் எனக்குள் சொல்லிக்கொண்டேன்: 'அவ ருடைய விருப்பங்களுக்கு அவருக்கு உரிமை உண்டு. அதை நான் மதிக்க வேண்டும்'. எனது கையை அவரது தோளில் போட்டுக்கொண்டு நான் சொன்னேன்: 'நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்பதை நான் இப்போது புரிந்து கொள்கிறேன். இந்தச் சோடியுடன் இருக்க உங்களுக்கு விருப்பமில்லை என்பது எனக்கு இப்போது புரிகிறது. நான் உண்மையிலேயே அதற்காக வருந்துகிறேன்'

அவர் ஆச்சரியத்துடன் என்னைப் பார்த்தார். அவரது கோபம் கரைந்தது. அவர் சொன்னார்: 'சரி... நீ இவ்வளவு புரிதலுடன் இருப்பதற்கு நன்றி?'

இது நம் இருவருக்கும் கிடைத்த வெற்றி!

## வெறுப்பின் உரத்த பாடம்:

பதினேழு வயதான 'நானா', கடைகளின் கண்ணாடி ஜன்னல் வழியே பொருட்களைப் பார்த்துக் கொண்டி ருந்தாள். அவளது கண்கள் ஒரு விலையுயர்ந்த மேலங் கியின் (coat) மீது பதிந்திருந்தன. அப்போது ஒரு கடுமையான குரல் கேட்டது: 'உன்னிடம் சொந்தமாக ஒரு கடை திறப்பதற்குப் போதுமான ஆடைகள் இருக்கின்றன. பணம் மரத்தில் காய்க் காது என்பது உனக்குத் தெரியுமல்லவா.

உனது அப்பா எங்களது வாழ்க்கைக்காகக் கஷ்டப்பட்டு உழைக்கிறார். அந்த உழைப்பில், ஏற்கனவே எங்களுக்கு எங்கள் குடும்பத்தையே நன்றாகக் கொண்டுநடத்த முடிய வில்லை.'

உடனடியாக, அந்தச் சூழல் உறைந்து போனது. நானாவின் முகம் வாடியது. அவள் தன் தாயை முறைத்துப் பார்த்து, 'நீங்கள் ஒரு கோடீஸ்வரியாக இருந்தாலும் கூட, எனக் கென்று விலையுயர்ந்த ஆடைகளை வாங்கித் தர மாட் டீர்கள்' என்று கோபத்துடன் ஒரு சவால் போலக் கூறினாள். தாய், 'இந்த வீண் பேச்சுப் போதும். நாம் மதிய உணவு சாப் பிடலாம்' என்றார். நானா கால்களை இழுத்துக்கொண்டு, விருப்பமில்லாமல் மனக்கசப்புடன், தன் தாயைப் பின்தொ டர்ந்து ஒரு உணவகத்திற்குள் சென்றாள். தாய்க்கும் மக ளுக்கும் இடையிலான உறவு சரிசெய்ய முடியாத அள வுக்குக் குழம்பிப் போயிருந்தது. அவர்கள் அந்த நிலையில் எந்தச் சிறப்பான உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தாலும் கூட, அது விஷம் போலத்தான் சுவைத்திருக்கும்.

உண்மையில் இந்தச் சம்பவத்திற்கு வேறு ஒரு விதமான முடிவு கிடைத்திருக்க வேண்டும்.

கையில் குறைந்தளவிலான பணமே இருந்திருப்பினும் கூட, பெற்றோர்களால் கனிவாகவும், அனுதாபத்துடனும் நடந்துகொள்ள முடியும். நானாவின் தாய், 'எங்களது இன்றைய 'பட்ஜெட்'டில் (budget) இந்தக் 'கோட்'டை உனக்கு வாங்கக் கூடியதாக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் தான். உன்னுடைய மனதில் அதன்மீது அவ்வளவு விருப்பம் இருக்கிறது போலத் தெரிகிறது' என்று சொல்லியிருக்கலாம். உண்மையாகவே கொடுக்க முடியாத ஒன்றை, மனதளவில் அவளது தாயால் அவளுக்குக் கொடுத்திருக்க முடியும். இத்தகைய ஒரு பதில், உண்மை யானதாகவும் யதார்த்தமானதாகவும் இருக்கும்போது, நமது பதின்மவயதினருக்கு அது ஆறுதலாக இருக்கும். ஆனால், அது சுரண்டுவதற்கோ கையாள்வதற்கோ பயன்ப டுத்தப்படும்போது நேரடியான எதிர்விளைவையே ஏற்படுத் துகிறது.



**"பெற்றோர்களும் பதின்மவயதினர்களும் தத்தமது சுயமரியாதைக்காக, அவர்கள் இருதரப்பினரும் தனித்தனியாகத் தம்முள் நடத்தும் போராட்டங்களையும், தம்மிடையே முடிந்தளவுக்குக் குறைந்த அளவிலான மனக்கசப்புக்களோடேனும் தாம் ஒன்றாக வாழவேண்டும்"**

**ஒரு வெற்றிகரமான உரையாடல்:**

பதின்நான்கு வயதான 'வெண்டி', மிகுந்த கவலையுடன் கண்களில் நீர் மல்க, பாடசாலையில் இருந்து வீடு திரும் பினாள்.

**வெண்டி:** 'நான் பாடசாலைக்கு இனிமேல் போக மாட்டேன் - இனி ஒருபோதும் போகவே மாட்டேன்,'

**அம்மா:** 'உனக்கு என்னவோ கவலை போல... நீ மிகவும் சரியான கவலையில் இருக்கிறாய் போல எனக்குத் தோன் றுகிறது,'

**வெண்டி:** 'நீங்கள் என்னைக் கண்டுபிடித்துவிட்டீர்கள் அம்மா, ஆனால் தயவுசெய்து என்னைச் சமாதானப்படுத்த முயற்சிக்காதீர்கள். எனது முடிவு ஒரு முடிந்த முடிவுதான், அதை நான் அப்போதே எடுத்துவிட்டேன். (சற்றுப் பின்... மிகவும் அமைதியாக) அதுதான் என்னுடைய இறுதி முடிவு.

**அம்மா:** (அமைதியாக) அதைப் பற்றி என்னுடன் பேச நீ விரும்புகிறாயா ?

**வெண்டி:** அம்மா, நீங்கள் ஒரு மனோதத்துவவாதிதான்... உங்களுக்கு எனது மனதின் ஓட்டத்தைக் கண்டுபிடிக்கும் சக்தி இருக்கிறது. நீங்களே அதைப்பற்றி சொல்லுங்கோ...

**அம்மா:** இந்த நேரத்தில் உன்னுடைய பிரச்சினைகளைப் புரிந்துகொள்கின்ற அளவுக்கு எனக்கு மனோசக்தி இல்லை.

**வெண்டி:** பாடசாலையில் பிள்ளைகள் மிகவும் கொடூரமான வர்கள்.

**அம்மா:** ம்... பிள்ளைகளால் கொடூரமான வர்களாகவும் இருக்க முடியும் தான்.

**வெண்டி:** எனக்கு அவர்கள் சொன்ன ஒரு குறிப்பிட்ட பாலியல் சொல்லுக்கு என்ன அர்த்தம் என்று தெரிந்திருக்கவில்லை. ஆனால் விக்கிக்கு அது தெரியும். அவள் அதைத் தன் காதலனிடம் உளற வேண்டி இருந்திருக்கிறது. அவன் அதைத் தன் நண்பர்க ளிடம் உளறிவிட்டான். அவர்கள் அதை ஒரு பெரிய நகைச் சுவையாக வைத்து என்னைப்பற்றிக் கதைக்கத் தொடங்கி விட்டார்கள். அவர்கள் அதை வைத்து என்னைக் கேலியும் செய்தார்கள். எனக்கு அது பயங்கரமாக இருந்தது. அதனால் நான் மிகவும் கூனிக் குறுகிக் கிட்டத்தட்ட உடைந்தே போனேன்.

**அம்மா:** சில பிள்ளைகள் இப்படித்தான் இருப்பார்கள். அவர்கள் தங்களுக்குள் இருக்கும் தேவைகளைத் திருப் திப்படுத்துவதற்காக இப்படி இரக்கமில்லாமல் நடந்து கொள்கிறார்கள்.

**வெண்டி:** ஓ...ம், எனக்கு விக்கியை நன்றாகவே தெரியும். இப்போது நான் அவளைப் புரிந்து கொண்டுவிட்டேன். முதன் முதலாவதாக, நான் உயர்நிலைப் பாடசாலையில் பத்திரிகை ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அவள் என்னைப் பற்றிச் சில நக்கல் கதைகளைச் சொல்லி யிருந்தாள். பிறகு நடந்த 'ஸ்பெஷல் கோரஸ்' நிகழ்வில் நாங்கள் தனிப்பாடல் ஒன்றுக்காக முயற்சி செய்தபோது, அதில் நான் பாடியிருந்தேன். ஆனால் அவள் பாடவில்லை. அதுபற்றித் தனக்குக் கவலையில்லை என்பது போல் நடித்தாள். ஆனால் என்னால் அப்படி நடிக்க முடியவில்லை. அவள், தான் தெரிவுசெய்யப்படாத தையிட்டு எவ்வளவு ஏமாற்றமடைந்திருந்தாள் என்று என்னால் சொல்ல முடியும். ஏன் சிலர் இப்படி ஒருவரைத் தாழ்த்திப் பேசுவதற்கு விரும்புகிறார்கள் என்பது எனக்குப் புரியவேயில்லை.

**அம்மா:** ம்... நீ இந்தச் சூழ்நிலையை நன்றாக ஆராய்ந்து கொண்டிருக்கிறாய் போல் தெரிகிறது...

**வெண்டி:** ம்... ஆனால், அது ஒன்றும்



**"பதின்ம வயதினர்கள், அவர்களது பெற்றோர்கள் ஆகிய இருதரப்பினருமே கற்றுக்கொள்ளவும், தம்மை வளர்த்துக் கொள்ளவும், தேவையான மாற்றங்களைத் தம்முள் ஏற்படுத்திக் கொள்ளவும் அவசியமான திறன்களை வளர்த்துக் கொள்ளல் அவசியம்"**

அவள் அந்தப் பெடியங்களுக்கு முன்னால் என்னை ஒரு முட்டாளாகக் காட்டினாள் என்ற உண்மையை மாற்றிவிடாது. ஆனால், நான் இப்ப சொல்கிற இதெல்லாம் நான் ஏதோ அவர்களைப் பற்றிப் பெரிதாகக் கணக்கெடுக்கிறேன் என்பதற்காகச் சொல்லும் விடயங்கள் அல்ல.

**அம்மா:** ஏன், அந்தப் பையன்கள் உன் நண்பர்கள் இல்லையா ?

**வெண்டி:** அவங்கள் சரியான சின்னப் பொடியங்களைப் போல நடக்கிறாங்கள்... ஆனால் என்னை ஒரு 'சரியான முட்டாள்' என்று அவங்கள் நினைக்க வேண்டும் என்பதுதான் விக்கியின் நோக்கம். அவள் என்னை கேட்டுச் சவால்விட்ட அந்தப் பாலியல் வார்த்தை உங்களுக்குக் கூடச் சிலவேளை தெரிந்திருக்காது என்று எனக்கு உறுதியாக 'அடிச்சுச் சொல்ல' முடியும்.

**அம்மா:** ம்... ஓ... ஒருவேளை எனக்குக் கூடத் தெரிந்திருக்காத ஒன்றாக இருக்கலாம்...

வெண்டி: சரி... ஆனால் அது ஓர் அசிங்கமான வார்த்தை. விக்கி அதன் அர்த்தத்தைச் சொல்லச் சொல்லி என்னைச் சவால் விட்டபோது, நான் சொல்ல மறுத்துவிட்டேன். ஆனால் அது எனக்கு உண்மையில் தெரியாது என்பதை நான் ஒப்புக் கொள்ள விரும்பவில்லை. ஒருவேளை அது எனக்குத் தெரிந்திருந்தாலும் கூட, நான் அதன் அர்த்தத்தைச் சொல்ல விரும்பியிருக்க மாட்டேன். இந்த முழு விஷயமுமே முட்டாள்த்தனமானது தான். ஆனால் நான் இன்னமும் கவலையாகத் தான் இருக்கிறேன். எனக்கு உண்மையில் நெஞ்செல்லாம் பற்றி எரிகிறது.

**அம்மா:** உனக்கு ஒரு கோப்பை சூடான பால் குடிக்கத் தரட்டுமா, மகள் ?

**வெண்டி:** ஓமோம், சரி. ஆனால், ஒரு சிலரால் உங்களை ஒரு விதத்தில் ஒன்றுக்கும் உதவாத பூச்சியத்திற்கும் குறைவான ஒரு பதராக உணரவைக்க முடியும், இல்லையா அம்மா ?, என்ன... உங்களுக்கு நான் சொல்வது புரிகிறதா ?

**அம்மா:** ஓம் எனக்கு நன்றாகப் புரிகிறது மகள்.

**வெண்டி:** நாளை யாராவது இந்த விஷயத்தைப் பற்றிப் பேச வந்தால், அவர்களை எங்கேயாவது போய்த் தொலையச் சொல்லி ஏசிவிடுவேன்.

**அம்மா:** உண்மையிலேயே... உன்னால் அப்படி அவர்களிடம் உறுதியாகச் சொல்ல முடியுமா ?

**வெண்டி:** அல்லது, வேறு வேலையில்லாத இவர்களின் இப்படிப்பட்ட குழந்தைத்தனமான கருத்துகளை நான் கணக்கெடுக்காமல் விட்டுவிடலாம்.

**அம்மா:** ஆமாம்... அது தான் ஒரு நல்ல யோசனை.

அந்தச் சம்பவத்தைப் பற்றி யோசித்தபோது, வெண்டியின் அம்மா தான் புதிதாகக் கற்றுக்கொண்டிருக்கும் தனது திறமைகளைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். அவர் சொன்னார்: 'முன்னரைப் போலென்றால் நான் இந்தச் சூழ்நிலையைக் கோட்டை விட்டிருப்பேன். என் மகளிடம் அவளுடைய நண்பர்களுடன் இன்னும் கொஞ்சம் ஆதரவாக நடந்து கொள்ளும்படி கேட்டுக் கூட இருந்திருப்பேன்.'

மறுநாள் காலை வெண்டி அம்மாவிடம் அந்தக் 'கெட்ட' வார்த்தையைச் சொன்னாள். அவர்கள் அதைப் பற்றி விவாதித்து, அதைப் புறக்கணித்தார்கள். பாடசாலைக்குக் கிளம்புவதற்கு முன் வெண்டி அம்மாவிடம் ஒரு கவிதையைக் கொடுத்தாள்.

**வெண்டி எழுதிய கவிதை:**

*உலகம் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கையில்*
*நான் என் அறையின் ஜன்னலின் ஊடே வெளியே பார்க்கிறேன்.*
*படிந்திருக்கும் அந்த அமைதியையும் கூட...*
*ஒரு காலத்தில் பரபரப்பாக இயங்கிய வாழ்க்கை அது.*

*ஊர்ந்து வருகின்றன நிழல்கள்..*
*அவை நிலம் முழுவதும் பரந்து செல்கின்றன.*


*என் முகம் ஜன்னல் கண்ணாடியில் அழுந்தியுள்ளது*
*கண்ணுக்குத் தெரியாமல் இருந்தாலும், அது அங்கே இருக்கிறது.*
*அமைதி பூமியைச் சிதறடிக்கையில்*
*மணலிலும், நடைபாதையிலும், வாழ்விலும் பதிந்திருக்கும்*
*எண்ணற்ற கால்தடங்களை*
*நான் எண்ணுகிறேன்...*

*மேலும்,*
*நான் ஏதாவதோ ஒன்றின் ஒரு சிறு துகளாக இருந்தாலும் கூட,*
*என் வாழ்நாள் முடிவதற்குள்,*
*நான் இங்கே தான் இருந்தேன்*
*என்பதை*
*இந்த உலகம் அறியும் என்று*
*கடவுளிடம் நான் சபதம் செய்கிறேன்.*



vickneaswaran.sk@thaiveedu.com

# வெளிநாடுகளில் சொத்துகளை விற்றல்



**- செந்தூரன் புனிதவேல்**

கனடாவில் வதியும் முதியவர்கள் பலர் வெளிநாடுகளில் விடுதலைக்கால வீடுகளையும், புலம்பெயர்ந்து வந்தவேளை விட்டு வந்த பூர்வீகச் சொத்துகளையும் விற்று அவற்றைத் தமது கனேடிய சேமிப்பில் வைப்பதற்கு அல்லது தமது வாரிசுகளுக்கு பகிர்ந்து கொடுப்பதற்கு முன்வருகிறார்கள். உலகில் எந்த பாகத்திலும் இருந்து பெறப்பட்ட பெருந் தொகைப் பணத்தை, கனடாவில் தமது சொந்த வங்கியில் வைக்கும் வேளையில் அப்பெருந்தொகை எப்படிப் பெறப் பட்டது அல்லது சட்ட விரோதமான நடவடிக்கைகளினால் வந்ததா? என்ற சந்தேகத்தில் அதைப்பற்றி விசாரணைகளும் வழக்குகளும் வர இடமுண்டு.

எப்படி தன் சொந்த வெளிநாட்டிலுள்ள பணத்தை இங்கு கொண்டு வருவது என்று பலரும் பயப்படுகிறார்கள். ஆட்சியா ளர்களும் அப்பெருந்தொகை சட்ட விரோதமாய் பெறப் பட் டதா? அதாவது போதை வஸ்து வியாபாரம் போன்றவ றால் வந்ததா என அறிவதற்கு முற்படுகிறார்கள்.

### எப்படி கனடாவிற்கு பெருந்தொகைப் பணத்தை கொண்டு வரலாம்?

நல்ல செய்தி யாதெனில், வெளிநாட்டில் சொத்துகளை விற் பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கனடா வங்கிக் கணக்கிற்குக் கொண்டுவருவது சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படும். எனினும், கனேடிய நிதி நிறுவனங்கள் கட்டா யமாகப் பின்பற்ற வேண்டிய சில கட்டுப்பாடுகள் இருக்கவே செய்கின்றன.

இக்கட்டுப்பாடுகள் சட்டத்திற்குப் புறம்பாகப் பணம் நாட் டிற்குள் வருவதைத் தடுப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டுள் ளன. இதன் பொருள் நீங்கள் செய்வது தவறான காரியம் என் பதல்ல; மாறாக, வங்கியை யாரும் தவறாகப் பயன்படுத்து வதைத் தடுப்பதற்கான ஒரு சட்ட நடவடிக்கை என்பதே உண் மையாகும்.

### வங்கிகள் கேள்விகள் கேட்பது எதற்காக?

கனேடிய வங்கிகள், குற்றச் செயல்களிலிருந்து கிடைக்கும் பணத்தையும் பயங்கரவாதச் செயல்களுக்குப் பயன்படுத்தப் படும் நிதியையும் தடுக்க வேண்டிய சட்டபூர்வக் கடமையைக் கொண்டுள்ளன. இதற்காக, நிதி நிறுவனங்கள் தங்களது வாடிக்கையாளர்களின் வருமானம், முதலீடுகள், செலவி னங்கள் மற்றும் அவர்கள் ஈடுபடும் நிதிச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை அறிந்துகொள்வதுடன், தேவை யான சந்தர்ப்பங்களில் கனடாவின் Financial Transactions and Reports Analysis Centre (FINTRAC) எனும் அமைப் பிற்கு அறிக்கையிட வேண்டிய கடப்பாட்டையும் கொண் டுள்ளன. எனவே, நீங்கள் பெருமளவிலான பணத்தைப் பரி மாற்றம் செய்யும்போது, நிதி நிறுவனங்கள் பின்வரும் கேள்வி களைக் கேட்கலாம்.

- இந்தப் பெருந்தொகைப் பணம் எங்கிருந்து வந்தது?
- எந்தப் பொருளை அல்லது சொத்தை விற்பனை செய்த தன் மூலம் இந்தப் பணம் கிடைத்தது?
- அதனை நிரூபிப்பதற்கான உரிய ஆவணங்கள் உங்க ளிடம் உள்ளனவா?
- எதற்காக இந்தப் பெருந்தொகை கனடாவிற்கு கொண்டு வரப்படுகிறது?

இவ்வாறான கேள்விகள் கேட்கப்படுவது அசாதாரணமான விடயம் அல்ல. பணத்தின் மூலத்தையும் அதன் பயன்பாட் டையும் உறுதிப்படுத்துவதற்காக நிதி நிறுவனங்கள் மேற் கொள்ளும் வழமையான சட்டரீதியான நடைமுறையின் ஒரு பகுதியாகவே இத்தகைய கேள்விகள் அமைகின்றன.

### ஆவணங்களை நல்ல நிலையில் கவனமாக வைத்திருங்கள்:

பயனுள்ள ஆவனங்கள் சில,

- சொத்து உங்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதற் கான ஆவணம்.

- சொத்தை விற்பனை செய்வதற்கும் வாங்குவதற்குமான உடன்படிக்கை அல்லது ஒப்பந்த ஆவணம்.
- சொத்து விற்பனை நிறைவடைந்ததன் பின்னர் வழக்கறிஞரால் வழங்கப்படும் ஆவணம்.
- தேவைப்படும் சந்தர்ப்பங்களில், உரிய அரசாங்க அதிகாரியால் வழங்கப்பட்ட அங்கீகாரப் பத்திரம்.
- சொத்துடன் தொடர்புடைய வரிகள் செலுத்தப்பட்டதற்கான ஆவணம்.
- ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு பணம் அனுப்பப்பட்டதற்கான வங்கி அல்லது பணப் பரிமாற்ற ஆவணம்.

இத்தகைய பத்திரங்கள் இருக்கும் வேளையில் வங்கிகள் அனுமதிகளை விரைவாக வழங்கும்.

### கைமாற்றப்பட்ட சொத்து இருக்கும் நாட்டின் சட்டங்களைப் புரிந்து வைத்திருத்தல்:

ஒவ்வொரு நாடும் தனக்கெனத் தனித்துவமான சட்டங்கள், நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. சில நாடுகளில், உரிய வரிகள் செலுத்தப்பட்டிருப்பதை உறுதிப்படுத்திய பின்னர், பணம் அல்லது சொத்து கைமாற்றத்தை எளிதாக மேற்கொள்ள அனுமதிக்கப்படலாம்.

ஆனால், சில நாடுகளில் பணப் பரிமாற்றம் அல்லது சொத்து கைமாற்றத்தை மேற்கொள்வதற்கு மத்திய வங்கி, வரி நிர்வாக அமைப்பு மற்றும் அந்நியச் செலாவணி தொடர்பான உரிய அதிகாரிகளின் அனுமதி போன்ற கூடுதல் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கலாம்.
எனவே, ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு பணம் அல்லது சொத்தைக் கைமாற்றம் செய்யும்போது, அந்தந்த நாட்டின் சட்டங்கள், வரி விதிமுறைகள், அந்நியச் செலாவணி கட்டுப்பாடுகள் மற்றும் அனுமதி நடைமுறைகள் குறித்து முன்கூட்டியே அறிந்துகொள்வது அவசியமாகும்.

### உங்கள் கனேடிய வங்கிக்கு முன்னறிவிப்பு செய்யுங்கள்:

பலரும் பணம் தங்களது கணக்கிற்கு வந்த பின்னரே வங்கிக்கு தகவல் தெரிவிக்கின்றனர். ஆனால், பணம் வருவதற்கு முன்பே வங்கிக்கு அறிவிப்பது பல்வேறு சிக்கல்களைத் தவிர்க்க உதவும்.

குறிப்பாக, நீங்கள் வேறு நாட்டில் விற்பனை செய்துள்ள சொத்திலிருந்து கிடைக்கும் பெருமளவிலான பணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தால், அது தொடர்பான தகவலை உங்கள் கனேடிய வங்கிக்கு முன்கூட்டியே தெரிவிக்கவும்.

முன்னறிவிப்பு செய்யும்போது, பணத்தின் மூலத்தை நிரூபிப்பதற்கு என்னென்ன ஆவணங்கள் தேவைப்படும் என்பதை வங்கியிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

தேவையான ஆவணங்களை முன்கூட்டியே தயார் செய்து வைத்திருப்பது, பணம் உங்கள் கணக்கிற்கு வரும்போது ஏற்படக்கூடிய தாமதங்கள், மேலதிக விசாரணைகள் மற்றும் பிற சிக்கல்களைத் தவிர்க்க உதவும்.

### இயன்ற அளவு பணத்தை ரொக்கமாகப் பரிவர்த்தனை செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்:

பொதுவாக, பெருமளவிலான பணத்தை ரொக்கமாகக் கைமாற்றம் செய்வதை நிதி நிறுவனங்கள் சந்தேகத்திற்குரிய பரிமாற்றமாகக் கருதக்கூடும். எனவே, ஒரு சொத்தை விற்பனை செய்யும் போது, பணத்தை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சட்ட வல்லுநர் அல்லது நிதி நிறுவனத்தின் ஊடாக வங்கிப் பரிமாற்றமாக மேற்கொள்வது பாதுகாப்பானதும் முறையானதுமாகும்.

முடிந்தவரை, பெருமளவிலான பணத்தை ரொக்கமாகக் கைமாற்றம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். வங்கிப் பரிமாற்றம் அல்லது பிற முறையான நிதிப் பரிமாற்றங்களைப் பயன்படுத்துவது பணத்தின் மூலத்தையும் பரிமாற்றத்தின் நோக்கத்தையும் தெளிவாக நிரூபிக்க உதவும்.

மேலும், முறையாக ஆவணப்படுத்தப்பட்ட பணப் பரிமாற்றங்கள், அந்தப் பரிவர்த்தனை சட்டபூர்வமாகவும் வெளிப்படையாகவும் மேற்கொள்ளப்பட்டதற்கான முக்கியச் சான்றாக அமையும்.

### உங்கள் வரவுகளை சரியாகவும் முறையாகவும் அறிவியுங்கள்:

வெளிநாடுகளில் விற்கப்படும் சொத்துகளுக்கும் கனேடிய மண்ணில் வரி விதிக்கப்படலாம்.

சில சந்தர்ப்பங்களில், உங்கள் உடமைகள் அல்லது சொத்துகள் மூலம் மூலதன ஆதாயம் (Capital Gain) கிடைக்கும் போது, அதனை உரிய அதிகாரிகளிடம் அறிவிக்க வேண்டிய சட்டபூர்வக் கடமை உங்களுக்கு இருக்கலாம். நீங்கள் வெளிநாட்டில் அந்தச் சொத்து தொடர்பான வரிகளைச் செலுத்தியிருந்தாலும், கனடாவின் வரிச் சட்டங்களுக்கு உட்பட்டிருந்தால், அந்த வருமானம் அல்லது மூலதன ஆதாயத்தை கனடாவின் வரி நிர்வாகத்திடம் அறிவிக்க வேண்டியிருக்கலாம்.

எனவே, வெளிநாட்டில் செலுத்தப்பட்ட வரிகளுக்கான ஆவணங்கள் உட்பட, சொத்து விற்பனை மற்றும் அதன்மூலம் கிடைத்த வருமானம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் முறையாகப் பாதுகாத்து வைத்திருப்பது அவசியம்.

### பெருந்தொகை வரவு இருப்பது சட்டப்படி குற்ற மல்ல:

பலரும், குறிப்பிட்ட ஒரு தொகைக்கு மேல் பணத்தை வங்கிக் கணக்கில் வைப்பது குற்றம் என எண்ணுகின்றனர். இது தவறான கருத்தாகும். பெருமளவிலான பணம் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுவது மட்டும் சட்டவிரோதமான செயல் அல்ல. கனேடிய நிதி அமைப்புகளுக்கு வெளிநாடுகளிலிருந்து பெருமளவிலான பணப் பரிமாற்றங்கள் வழமையாக இடம்பெறுகின்றன. இத்தகைய பண வரவுகள் பல்வேறு சட்டபூர்வமான காரணங்களின் அடிப்படையில் அமையலாம். உதாரணமாக, இத்தகைய பண வரவுகள் பின்வரும் காரணங்களால் ஏற்படலாம்.

- சொத்து விற்பனை
- வியாபார பரிவர்த்தனைகள்
- சொத்து விநியோகம்
- முதலீடுகள்
- பரம்பரை சொத்துகளைப் பெறுவது

எவ்வளவு தொகை என்பதல்ல பிரச்சினை பணம் எப்படி எங்கிருந்து வருகிறது என்பதுதான் பிரச்சினை.

### பணத்தைச் சிறு தொகைகளாகப் பிரித்து இட மாற்றம் செய்யாதீர்கள்:

சிலர், பெருமளவிலான பணத்தைச் சிறு சிறு தொகைகளாகப் பிரித்து வங்கிக் கணக்கில் வரவு வைத்தால், அது கவனத் திற்கு வராது என்று எண்ணுகின்றனர். இது தவறான அணுகு முறையாகும். பணத்தை நோக்கமுடன் சிறு தொகைகளாகப் பிரித்து பரிமாற்றம் செய்வது சந்தேகத்தை மேலும் அதிகரிக் கக்கூடும்.

பெருமளவிலான பணம் சட்டபூர்வமான முறையில் கிடைத்தி ருந்தால், அதன் மூலத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்க ளுடன், அந்த நாட்டின் சட்டங்கள் மற்றும் நிதி விதிமுறைக ளுக்கு அமைவாக உங்கள் வங்கிக் கணக்கில் வரவு வைப் பதே சிறந்த நடைமுறையாகும். இதனைச் சரியான முறையில் மேற்கொள்வதற்கு, பின்வரும் ஐந்து விடயங்களையும் தவறா மல் பின்பற்றுங்கள்:

- சகல ஆவணங்களையும் கவனமாகப் பாதுகாத்து வைத்தி ருங்கள்.
- அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிபுணர்களின் ஆலோ சனையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களின் ஊடாகப் பணப் பரிமாற்றங்களை மேற்கொள்ளுங்கள்.
- உங்கள் வங்கியுடன் நேர்மையாகவும் வெளிப்படையா கவும் நடந்து கொள்ளுங்கள்.
- செலுத்த வேண்டிய வரிகளை முறையாகவும் நேர்மையா கவும் செலுத்துங்கள்.

'உண்மை வெல்லும்' என்ற நம்பிக்கையுடன், சட்டபூர்வமான வழியில் வெளிப்படையாகச் செயற்படுங்கள். அப்போது, சொத்து விற்பனை மூலம் கிடைத்த பணத்தின் சட்டபூர்வமான மூலத்தைத் தெளிவாக நிரூபித்து, அதனைப் பெறுவதற்கான நடைமுறைகளைச் சுமுகமாக முன்னெடுக்க முடியும்.



senthuran.p@thaiveedu.com



# பராமரிப்பு

## வேலா சுப்பிரமணியம்

ஒரு வீட்டில் இருக்கக் கூடிய இயந்திர சாதனங்களினதும் மற்றும் பிற கூறுகளின் பாவனை பற்றியும் அவற்றின் பராமரிப்பு பற்றியும் அறிந்து கொள்ளவேண்டியது மிக அவசியமானது. பொதுவாக நோக்கினால் விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியில் சகல துறைகளிலும் தினமும் புதிய கண்டுபிடிப்புகளையும் மாற்றங்களையும் கண்டு கொண்டே இருக்கின்றோம். அந்த வகையில் வீடுகள் சார்ந்த அமைப்பிலும் பாவிக்கப்படும் பொருட்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் மூலப் பொருட்கள் எனப் பலவற்றிலும் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன.

நுகர்வோரின் சிந்தனைகளுக்கு ஏற்ப விருப்பங்களும் தேவைகளும் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. அதற்கேற்ப அவற்றை ஈடு செய்யும் விதத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியும் எல்லை கடந்து வளர்ந்து கொண்டே இருக்கின்றது.

அந்த வகையில் மனிதர்களின் தேவையில் அத்தியாவசியமாக இருக்கும் உறைவிடமாகிய வீடு சார்ந்த அமைப்பிலும் பாவனைப் பொருட்களிலும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் மாற்றங்கள் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது மிக அவசியமானது.

'மாற்றம் ஒன்றே மாறாதது' என்பது நியதியாகியவிட்ட சூழ்நிலையில் நாங்களும் எங்களை மாற்றிக் கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்று. விரும்பியோ விரும்பாமலோ புதிய, புதிய மாற்றங்களைச் சந்திக்கின்றபோது புதிய பிரச்சினைகளையும் எதிர் கொள்ள வேண்டிய தேவை உருவாகின்றது. எனவே காலத்தின் தேவை கருதி உச்ச நிலை நோக்கி வேகமாக நகர்ந்து கொண்டிருக்கும் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ற விதத்தில் இருக்கக்கூடிய பாவனைப் பொருட்கள் பற்றியும், அவற்றின் பாவனை பற்றியும் அறிந்து கொள்ள வேண்டிய தேவை அதிகரித்த வண்ணமே இருக்கின்றது. அப்போது தான் தேவையற்ற இடர்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதோடு அவற்றின் உச்சப் பயன் பாட்டையும் அடைய முடியும்.

ஒரு வீட்டில் முக்கிய கூறாக இருப்பதும் எல்லோராலும் பெருமளவு பாவிக்கப்படுவதும் சமை யல் அறை. அந்த வகையில் சமையல் அறையில் இருக்கக் கூடிய இயந்திர சாதனங்கள் பற்றியும் இதர கூறுகள் பற்றியும் முதலில் நோக்குவது சாலவும் பொருந்தும்.

### அடுப்பு:

எமது நினைவுகளை சற்று பின் நோக்கி நகர்த்தினால் மண் அடுப்பு, கல் அடுப்பு, விறகு என்பன நினைவுக்கு வரும். தற்போது கூட இயற்கையோடு இணைந்து வாழும் கிராமப்புற வாழ்வில் இவை வழக்கொழிந்து போக வில்லை. தனி வீடாகவோ, கொட்டிலாகவோ இருக்கும் அடுக்களைகள் இயற்கையாகவே தற்போதய பராமரிப்பு அல்லது சுகாதார



tg.theeban@gmail.com

பாதுகாப்பு முறைகளுக்கு அப்பாற்பட்ட தன்மை கொண் டவை என்பது கவனிக்கத் தக்கது.

வளர்ச்சியடைந்த மேற்கத்தேய நாடுகளில் பொதுவாக மின் சாரத்தில் இயங்கும் அடுப்புகளும் இயற்கை வாயுவில் இயங்கும் அடுப்புகளும் பாவனையில் உள்ளன. பாது காப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டு மின்சார அடுப் புகள் அதிகம் பாவனையில் உள்ளன. ஆரம்பத்தில் Coil வடிவத்தில் இருந்த அடுப்புகள் தற்போது பல சிறப்பம்சங் களைக் கொண்ட கண்ணாடி மேல் அடுப்புகளாகக் (Glass Top Store) காணப்படுகின்றன. LG, Samsung, GE, Kitchen Aid, Whirlpool, Jenair போன்ற பல்வேறு உற்பத்தியாளர்கள் உலகளாவிய ரீதியில் இத்தகைய அடுப்புகளை உற்பத்தி செய்கின்றார்கள். 2025-இல் இவற்றின் உற்பத்தி 17.41 Billion Us டொலர்களை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

### Glass Top Stove:

மிகவும் பளபளப்பாக வடிவமைக்கப்பட்டிருக்கும் கண்ணாடி மேல் அடுப்புகள் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். பாத்திரங்களை வைக்காவிட்டால் ON ஆகா விதத்தில் பாது காப்பாகவும் இயங்குகின்றன. அத்துடன் குறிப்பிட்ட வெப் பத்தின் எல்லையைத் தாண்டாத விதத்திலும் செயற்படு கின்றன.

### பராமரிப்பு:

இத்தகைய அடுப்புகளை சுத்தம் செய்வதில் அதிக கவனம் தேவை. இதற்கென அறிவுறுத்தப்படும் சுத்தமாக்கும் திரவப் பொருட்களைப் பாவிக்காதுவிட்டால் பாரிய சேதங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை வரலாம். முறையற்ற பாவ னையால் கண்ணாடி வெடித்துப் போவதும் அதனைப் பிரதீயீடு செய்ய அதிக செலவை எதிர்கொள்ள வேண்டிய நிலை வருவதும் சாதாரணமாகக் காணப்படுகின்றது.



ஒவ்வொரு பாவனைக்குப் பின்னரும் கண்ணாடியின் மேற்ப குதியை Micro Fiber துணி அல்லது spunch-ஐ பாவித்து துடைத்து விடுவதே சிறந்த வழி. சமைக்கும் போது வழிந்து விடும் உணவுக் கூறுகள் சுத்தம் செய்யப்படாது காலப் போக்கில் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து கல்லுப்படிமானம் போல மாறிவிடும். அதன் பின்னர் சுத்தம் செய்வது மிகக் கடினம்.

- சூடாக இருக்கும் கண்ணாடியின் மேற்பகுதியின் வெப்பம் தணியும் வரை பொறுத்திருங்கள்
- Spray Bottle-இன் உதவியுடன் White Vinegar-ஐ Spray செய்து விட்டு சில நிமிடம் பொறுத்திருந்து பின்னர் Micro Fiber துணியால் துடைத்துவிடுவது சிறந்த வழி.
- Burner ன் மேற்பகுதியில் மேலதிக அடைவுகள் காணப் பட்டால் Spray செய்யப்பட்டிருக்கும் Vinegar க்கு மேல் சிறிது Baking Soda-ஐ தூவிவிட்டால் சுத்தம் செய்யும் பணி மிக இலகுவாக அமையும்.
- இதன் பின்னரும் மேலதிக அடுக்குகள் (Layer) காணப் பட்டால் சவரம் செய்யும் Blade-க்கு இணையான Blade மூலம் அதனை வழித்துவிட முடியும்.
- Glass Top-இற்கென பரிந்துரைக்கப்படும் சுத்தமாக்கும் திரவங்களை மட்டுமே பாவித்தல் வேண்டும். அமோனியா கலந்த திரவங்கள் கண்ணாடியை பெருமளவு பாதிக்கும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

Material Needed: White Vinegar, Spray Bottle, Baking Soda, Micro Fiber Cloth, single Edge Razor Blade.

### Gas Stove:

வேகமாக சுவையாக சமைப்பதில் ஆர்வம் உள்ள பலரும் இயற்கை வாயுவில் இயங்கும் அடுப்புகளையே பாவிக்கி றார்கள். இதன் பாவனையும் கணிசமான அளவு முன்னணி யில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



### பராமரிப்பு:

- சுருங்கக் கூறுவதானால் தினமும் துடைத்தல் கிழமைக் கொருமுறை அழுத்தி தேய்த்தல் (Scrubbing) மாதமொ ருமுறை ஆழமாகச் சுத்தம் செய்தல் என்ற நடைமுறையே சிபாரிசு செய்யப்படுகிறது.
- சாதாரண Soap திரவத்துடன் vinegar கலந்து சுத்தம் செய்யலாம்.
- Burner பகுதி எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும். தவறினால் நீல நிற சுவாலையைப் பெறுவதும் ஆரோக்கி யமான சமையலைச் செய்வதும் கடினமாக இருக்கும்.
- தண்ணீரை ஊற்றி கழுவுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- உலோக தட்டுகளை (Grates) வெளியில் எடுத்து Soap தண்ணீர் நிரப்பிய தொட்டியில் ஊறவிட்டு மாதமொரு முறையாவது கழுவுதல் சிறந்தது.

### Oven

பொதுவாக எல்லா வீடுகளிலும் அடுப்புகள் Oven உடன் சேர்ந்ததாகவே இருக்கும். பலர் இதனை அடிக்கடி பாவிப் பது அரிது. பெரிய பாத்திரங்களின் களஞ்சியமாகப் பாவிப் பது வழக்கமாக இருக்கிறது. அனால் இளைஞர்கள் மத்தி யில் Oven கவர்ச்சிக ரமான ஒன்றாகக் காணப்படுகின்றது.

எது எப்படி இருப்பினும் கிரமமான முறையில் சுத்தம் செய்ய வேண்டியது அவசியம் யாருக்கும் Oven சுத்தம் செய்வது என்பது விருப்பத்திற்குரிய செயலாக இல்லாவிட்டாலும் காலம் கடந்து செய்ய முயன்றால் பல சவால்களைச் சந்திக்க வேண்டியதாக இருக்கும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.



- பொதுவாக Self Cleaning அம்சம் அநேக Oven களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பெரிய அளவிலான உணவு எச் சங்களை அகற்றிவிட்டு Self Cleaning ஐ பாவிப்பது நல்லது. இந்த நடைமுறையில் உச்ச அளவிலான வெப் பத்தின் மூலம் இருக்கக்கூடிய அழுக்குகள் யாவும் பல மணி நேர வெப்பமாக்கலால் எரிக்கப்பட்டுச் சாம்பலாக் கப்படுகிறது. முடிவில் சாம்பலை ஒரு துணியின் மூலம் சுத்தம் செய்தால் போதுமானது. பல மணி நேரம் உச்ச அளவில் மின்சாரத்தைப் பாவிப்பது அதிகம் செலவானது என்பதையும் நினைவில் வைத்திருக்கவும்.
- கிரமமான முறையில் சுத்தம் செய்பவர்கள் சாதாரண Soap உடன் Baking Soda ஐயும் கலந்த தண்ணீரைப் பாவித்து தட்டுகள், சுவர்கள், கதவு என்பவற்றை சுத்தம் செய்ய முடியும். இது ஒரு சாதாரண நடைமுறை.
- ஆழமான சுத்திகரிப்பு: (Deep Cleaning) Oven சுத்தம் செய் வதற்கென இருக்கும் Oven Cleaner, அல்லது இரசாயன திரவங்கள், Spray என்பவற்றைப் பயன்படுத்தலாம்.

எங்களது தோல் பகுதியைப் பாதிக்கக் கூடிய இத்தகைய திரவங்களை பாவிக்கும் போது அதிக கவனம் எடுக்க வேண் டியதும், கையுறைகளைப் பாவிக்க வேண்டியதும் அவசிய மானது. குறிப்பாக இத்தகைய இரசாயானத் திரவங்களைப் பாவிக்கும் போது சமையலறையில் போதியளவு காற்றோட் டம் இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

## Rangehood Fan:

தற்போது மேற்கத்மேய நாடுகளில் உள்ள சமையலறைகளில் மிக முக்கிய இடத்தை வகிப்பது Rangehood Fan ஆகும். சமையல் மணம், சமையல் புகை, மேலதிக ஈரலிப்பு என்ப வற்றை அகற்றி வீட்டில் இருக்க வேண்டி காற்று மண்ட லத்தின் தரத்தை உயர்த்த இதன் தொழிற்பாடு மிக அவசிய மானது.

கிராமப் புறங்களிலும் இலங்கை போன்ற நாடுகளிலும் சமை யற் கூடம் தனியாகவோ, அல்லது காற்றோட்டமுள்ள வெளிப் புறத்திலும் அமைந்திருப்பதால் இத்தகைய விசிறிகளின் தேவை முக்கியத்துவம் பெறவில்லை. எப்போதும் பெரிய சமையல்கள் வீட்டிற்கு வெளியே உள்ள இடங்களில் மேற் கொள்ளப்படுவது நினைவுக்கு வருகிறது. எமது தாயகப் பகுதி களில் பிரதான வீட்டிற்குள் அமைந்த சமையல்கூடம் புகைக் கூண்டுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருப்பதால் இதன் தேவை வேறு விதமாகப் பூர்த்தி செய்யப்படுவதையும் அவதானிக் கலாம்.

சமையல் தொடங்குவதற்கு குறைந்தது 5 நிமிடங்களுக்கு முன்னர் இதனை இயங்க வைக்க ஆரம்பிக்க வேண்டும் என்பதோடு சமையல் முடிந்து சுமார் 15 நிமிடங்களுக்காவது இயங்கவிட்டு பின்னர் நிறுத்த வேண்டும் என்பது சிபாரிசு செய்யப்படுகின்றது. தற்போது இவை தானாக நிறுத்தப்படும் விதத்தில் Timer உடன் உற்பத்தி செய்யப்படுகின்றன என்ப தையும் கவனத்திற்கொள்ளவும்.

மிகக் குறைந்த விலையில் இருந்து அதாவது 75 டொலரி ருந்து $3000 டொலர் வரை பல வித தரங்களில் இவை சந் தைப்படுத்தப்படுகின்றன. ஆசிய சனத்தொகையின் சமையல் முறையைக் கருத்திற் கொண்டு பார்த்தால் சக்தி மிக்க Overhood Fan அவசியமானது என்பது புலனாகும், குறிப் பாக எம்மவரது பாவனைக்கு குறைந்தது 400 – 700 CFM சக்தி கொண்ட விசிறிகள் சிபாரிசு செய்யப்படக் கூடியவை.

வெளிநாடுகளில் கூட சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட வீடுகளில் இத்தகைய விசிறிகளுக்கு முக்கியத் துவம் கொடுக்கப்படவில்லை. பழைய வீடுகளிலும் தொடர் மாடிக் கட்டடங்களிலும் இத்தகைய வசதிகள் அரிதாகவே காணப்படுகின்றன. ஆனால் தற்போது கட்டப்படும் வீடு களில் இதன் அவசியம் கட்டட நியமங்களுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. தற்போதய புதிய வீடுகளில் 8'-10' விட்டத் தினைக் கொண்ட Duct Vents பொருத்தப்பட்டிருப்பதை சமையல் அறைகளில் காணலாம்.

## பராமரிப்பு:

தற்போதைய விசிறிகளில் காணப்படும் வடிகட்டிகள் (Filters) பாத்திரங்களைக் கழுவும் இயந்திரங்களின் மூலம் (Dishwasher Free) கழுவக் கூடியதாக அமைந்திருப்பது ஒரு வரப்பிரசாதம். சமையலைப் பொறுத்து கிழமைக்கொ ருமுறை அல்லது மாதமொரு முறை இவற்றைக் கழுவி விடுவது மிகச் சிறந்தது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் பிரபல்யமாகவிருந்த வட்ட வடிவில் அமைந்த விசிறிகளின் வடிகட்டிகளை அல்லது சதுர வடிவில் அமைந்த வடிகட்டிகளை மாதமொருமுறை யாவது கழற்றி கழுவி விடுதல் அவசியமானது அல்லது அவற்றை மாற்றீடு செய்வது நல்லது. அத்துடன் சேகரிக்கப் பட்டிருக்கும் கழிவு எண்ணையை சுத்தம் செய்வதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

(தொடரும்...)



velasubramaniam@thaiveedu.com

# அமைதிக்குப் பாதை அமைப்போம்!

## சர்வதேச அமைதி நாள்

சி. நற்குணலிங்கம்

அமைதி என்பது வெறும் மோதல்களோ, போர்களோ அல்லது வன்முறைகளோ இல்லாத ஒரு நிலை மாத்திர மல்ல; மாறாக, அது சமூக நல்லிணக்கம், நீதி மற்றும் மன அழுத்தங்களிலிருந்து விடுபட்டு ஒருமுகப்படும் தனிநபரின் ஆழ்ந்த நிம்மதியையும் குறிப்பதாகும். உண்மையில், ஒரு மனிதரின் அக அமைதியே இந்த அகிலத்தின் அமைதிக்கு வலுவான அடித்தளமாக அமைகின்றது. எனவே, அமைதி என்பது தனிமனித மன அமைதியில் தொடங்கி, அகில அளவி லான நல்லிணக்கம் வரை பரந்து விரிந்து செல்லும் ஒரு தொடர்ச்சியான வாழ்வியல் செயல்முறையாகும். சொல்லப் போனால், அமைதி என்பது வெறும் போர்களின் முடிவோடு மாத்திரம் நின்றுவிடுவதில்லை; மாறாக, அது ஒரு புதிய உல கின் விடியலுக்கான ஆரம்பமாகவும் திகழ்கிறது. நாம் எண்ணி யதை விடவும் மனிதர்களாகிய நாம் மிகவும் வித்தியாசமான வர்கள், அதேவேளையில் மிகவும் நெருக்கமானவர்கள் மற் றும் ஒட்டுமொத்தமாக ஒரே தாய் வயிற்று உடன்பிறப்புகள் என்பதை நாம் அனைவரும் ஆழமாக உணரும் ஒரு புதிய உலகையே அது அடையாளப்படுத்துகிறது. இதன் காரண மாகவே, அமைதி என்பது தானாக உருவாகும் ஒன்று அல்ல; மாறாக, அது மானுட சமுதாயம் தொடர்ச்சியாக முயன்று கைக்கொள்ள வேண்டிய ஒரு மூலோபாயத் தெரிவு என்பதை இத்தகைய புரிதல் நமக்கு உறுதியாக உணர்த்துகின்றது.

உலக அமைதி என்பது வெறும் கோட்பாடுகளோடு மட்டும் நின்றுவிடுவதன்று. அமைதியை நிலைநாட்டுவதும், அதனைத் தொடர்ச்சியாகப் பராமரிப்பதும் அரசாங்கங்களின் முழுப் பொறுப்பு மட்டுமே அல்ல என்ற நிதர்சனத்தை நாம் முதலில் ஆழமாக உணர வேண்டும். அரசுகளையும் தாண்டித் தனி நபர்கள், சமூகங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் தீவிரமான, அர்ப்பணிப்புடன் கூடிய பங்கேற்பு இன்றி உலக அமைதி சாத்தியமாகாது. ஏனெனில், ஒரு நாட்டின் நிலையான பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு அடிப்படையான வினை யூக்கியாகத் திகழ்வது அமைதி மட்டுமே ஆகும்.

மனிதகுலம் அமைதியின் உண்மையான தேவையையும் அதன் முக்கியத்துவத்தையும் பேரழிவுகளின் வழியேதான் உணர்ந்துகொண்டது. இரண்டாம் உலகப்போரின் உச்சக்கட் டத்தில், ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி நகரங்கள் மீது அணுகுண்டுகள் வீசப்பட்டு உறைந்துபோகும் பேரழிவைச் சந்தித்த அந்த கணம், ஜப்பானை மட்டுமல்லாது ஒட்டு மொத்த உலக நாடுகளையுமே திடுக்கிடச் செய்தது. போரின் இந்த கொடூர விளைவே அமைதியின் அத்தியாவசியத்தை உலகிற்கு உரக்கச் சொன்னது.

இதன் நேரடி விளைவாக, சர்வதேச நாடுகளிடையே ஏற்படும் மோதல்களைத் தவிர்த்து, உலகளாவிய ரீதியில் அமைதி யையும் பாதுகாப்பையும் உறுதியாக நிலைநாட்டும் உயரிய நோக்குடன் 1945-ஆம் ஆண்டு ஒக்ரோபர் 24-ஆம் திகதி உலக அமைதிக்கான அதிகாரபூர்வ அமைப்பாக ஐக்கிய நாடுகள் சபை (UN) தோற்றுவிக்கப்பட்டது.



tg.theeban@gmail.com

உலக அமைதிக்காக ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப் புகள் தொடர்ச்சியாகப் பாடுபட்டு வருகின்றன. இம்முயற்சி களை ஆதரிப்பதுடன், அமைதியை ஒரு பலவீனமாகக் கருதா மல், ஆளுமையை உயர்த்தும் உத்தியாகவும் தெளிவான சிந்தனைக்கான வழியாகவும் நாம் கொள்ள வேண்டும். அமைதி என்பது வெறுமனே அமைதியாக இருப்பது மட்டு மல்ல; சக மனிதர்களோடு அன்பைப் பகிர்வதுமாகும். உலக அமைதியின்மை தனிமனிதரைப் பாதிப்பது போலவே, தனி மனித அமைதியே உலக அமைதிக்கும் மூலவித்தாக அமை கின்றது.

இருப்பினும், புவி வெப்பமயமாதல், காலநிலை மாற்றங்கள், மாசுபாடு மற்றும் போர்ச்சூழல் போன்ற காரணங்களால் உலக நாடுகள் அமைதியைத் தொலைத்து வருகின்றன. குறிப்பாக, வறுமையினாலும் மோதல்களினாலும் பாதிக்கப் பட்ட ஆசிய, ஆபிரிக்க நாடுகள் பெரும் அமைதியின்மை யைச் சந்திக்கின்றன. ஆப்கானிஸ்தான், மியான்மர், எத்தியோப் பியா, சூடான், சோமாலியா, சிரியா, ஏமன் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் இதில் முதன்மையானவை. உண்மையில், யுத்தங்கள் இயல்பாக உருவாவதில்லை; மாறாக, அவை சுயநல நோக்கங்களுக்காகத் திட்டமிட்டே உருவாக்கப்படு கின்றன என்ற கசப்பான நிதர்சனத்தை உலக நாடுகள் இப் போது கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்து வருகின்றன.

நாட்டு எல்லைகளை விரிவுபடுத்துவதற்காக இன்று போர்கள் நடைபெறுவது குறைவு. ஆனால், பொருளாதாரத்தை வலுப் படுத்தவும் ஆற்றல் வளங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் நாடுகள் போரில் ஈடுபடுகின்றன. சில நாடு கள் நேரடியாக போரில் ஈடுபடாமல் மறைமுகமாகப் போர் தொடர்ந்து நிகழ ஆதரவு அளிக்கின்றன. போரில் ஈடுபட் டுள்ள நாடுகளுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்து இலாபம் ஈட்டும் நடவடிக்கைகளிலும் சில நாடுகள் மும்முரமாக உள் ளன. மேலும், தமது ஆதிக்கத்தை (அரசியல், பொருளா தாரம், கலாசாரம்) விரிவுபடுத்த மூன்றாம் கட்சியினரை பயன்படுத்திக்கொள்கின்றன. இத்தகைய போர்கள் 'பிறதரப் புப் போர்கள்' (proxy wars) எனப்படுகின்றன. மேலும் வன் முறையும் போரும் நிகழ்ந்துகொண்டிருக்கின்ற ஒரு நாட்டில் ஒடுக்கப்படுகின்ற குழுவுக்கு ஆயுதங்கள் வழங்கியும் வேறு விதங்களில் ஆதரவு அளித்தும் குறிப்பாக உணவு, மருந்து ஆகிய இன்றியமையா பொருள்களை வழங்கியும் உதவி யளித்து நிகழ்த்துகின்ற போர் முயற்சி 'மனிதநலப்போர்' (humanitarian war) என்று அழைக்கப்படுகிறது.

எல்லா மனிதர்க்குமே எந்த நெருக்கடியுமற்ற அமைதியான வாழ்வு வேண்டும் என்பதே உச்சபட்ச இலட்சியமாக இருக் கும். நிம்மதியான வாழ்விற்கு உலக அமைதி நாள், என்று உருவாகும் என்று மக்கள் ஏங்கிக்கொண்டிருந்தனர். 1961-ஆம் ஆண்டு ஐ.நா.-வின் பொதுச்செயலாளராக பணியாற் றிய ஹாமர்சீல்ட் என்பவர் விமான விபத்து ஒன்றில் உயிரிழந் தார். அவரின் இறப்பை நினைவுகூரும் விதமாக 1981-ஆம் ஆண்டில் இருந்து செப்ரெம்பர் மாதத்தின் மூன்றாம் செவ் வாய்க்கிழமை சர்வதேச அமைதி நாள் கொண்டாடப்பட்டு வந்தது. பின்னர் 2002-இல் இருந்து ஆண்டுதோறும் செப்ரெம் பர் 21-ஆம் திகதி எல்லா மனிதர்க்கும் எந்த நெருக்கடியு மற்ற அமைதியான வாழ்வு வேண்டும் என்ற நோக்கம் கருதி சர்வதேச அமைதி நாளாக (International Day Of Peace) ஐ.நா. நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

வன்முறையற்ற அமைதியான உலகை உருவாக்குவதற்கும், 24 மணிநேர போர் நிறுத்தத்திற்கும் ஐ.நா. சபை இந்நாளை உருவாக்கியுள்ளது. நியூயோக்கில் உள்ள ஐ.நா. தலைமை யகத்தில் ஜப்பான் நாட்டு மக்களால் வழங்கப்பட்ட அமைதி மணி (Peace Bell) இந்நாளில் ஒலிக்கப்படும். சர்வதேச அமைதி நாளின் சின்னமாக அமைதி மணி உள்ளது. உலகெங்கிலும் உள்ள மக்கள் மதியம் 12.00 மணிக்கு ஒரு நிமிட மௌனம் அனுசரித்து போர் மற்றும் வன்முறையால் பாதிக்கப்பட்டவர் களுக்கு அஞ்சலி செலுத்துகின்றனர். இந்நாளினை முன்னிட்டு உலக நாடுகள், சமூக அமைப்புகள் போர் தவிர்ப்பு விழிப் புணர்வு கருத்தரங்குகள், தியானம் போன்ற அமைதி முயற் சிகளில் ஈடுபடுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் உலக அமைதியை வலியுறுத்தும் வகை யில் ஐக்கிய நாடுகள் சபை சிறப்புமிக்க கருப்பொருள்களை வெளியிட்டு வருகின்றது. அந்த வகையில், 2020-ஆம் ஆண் டில் 'அமைதியை ஒருங்கிணைந்து ஏற்படுத்துதல்' (Shaping



Peace Together) என்பதும், 2021-இல் 'சமத்துவமான மற்றும் நிலையான உலகிற்காக சிறப்பாக மீண்டெழுவோம்' (Recovering Better for an Equitable and Sustainable World) என்பதும் கருப்பொருள்களாக அமைந்தன. தொடர்ந்து, 2022-இல் 'இனவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருவோம். அமைதியைக் கட்டியெழுப்புவோம்' (End Racism. Build Peace) என்றும், 2023-இல் 'அமைதிக்கான நடவடிக்கைகள்: உலகளாவிய இலக்குகளுக்கான எங்கள் இலட்சியம்' (Actions for Peace) என்றும் அறிவிக்கப்பட்டது.

அதேபோல், 2025-ஆம் ஆண்டிற்காக 'அமைதியான உலகத்திற்காக இன்றே செயற்படுங்கள்' (Act Now for a Peaceful World) என்ற ஆழமான அழைப்பு விடுக்கப்பட்டது. இக் கருப்பொருள்கள் அனைத்தும் தனிநபர் மற்றும் கூட்டுச் செயற்பாடுகளின் மூலமே உலக அமைதியைச் சாத்திய மாக்க முடியும் என்பதை உணர்த்தி, அனைவரும் களத்தில் இறங்கிச் செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்து கின்றன.

அமைதி, அமைதி என்று ஒரு நாள் முழுவதும் பேசிக்கொண் டிருந்தாலும், அந்த அமைதியை நாம் பெற்றுவிட்டோம் என்று வைத்துக்கொள்வோம். அப்போதுகூட, அது அடுத்த போருக் கான ஆயத்தக் காலமாக இருக்குமோ என்ற அச்சம் எழுகி றது. ஏனெனில், அமைதி என்பது நிலைத்திருக்கக்கூடிய ஒன்றல்ல என்ற எண்ணத்தைக்கூட நாம் வளர்த்துக்கொண்டி ருக்கிறோம். இன்றும் இதையே காண்கிறோம், இனியும் இதையே காண வேண்டிய நிலை ஏற்படக்கூடாது. வேண்டாம் இந்தக் காட்சி! உலகம் சமநிலை பெறவும், உலகில் நிலை யான அமைதி நிலவவும் நாம் இதுவரை உருப்படியாக என்ன செய்திருக்கிறோம்? ஒருகணம் நின்று சிந்தியுங்கள்!

போரற்ற, உள்நாட்டு மோதல்கள் அற்ற வாழ்வுதான் மக் களுக்கான அமைதிக்கு உத்தரவாதம் அளிப்பதாக இருக் கும் என்பதில் சந்தேகமில்லை. வன்முறை இல்லாத அமைதி யான அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தை கட்டமைப் பதே நம் அனைவரின் நோக்கமாக மாறவேண்டும். ஒத் துழைப்பின் மூலம் உலக அமைதியை மேம்படுத்துவதற் கான உலகளாவிய தளத்தை உருவாக்க தம் பங்களிப்பை ஒவ்வொருவரும் வழங்கவேண்டும். மோதல்களை அமைதி யான முறையில் தீர்க்கவும், சமூக நீதியை மேம்படுத்தவும், மனித உரிமைகளை பாதுகாக்கவும் வேண்டிய, அவசர தேவையை நாம் முதலில் உணரவேண்டும்.

சமகால சவால்கள், சமாதானத்தை அச்சுறுத்தும் சிக்கல் களை சமாளிக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும். அமைதிக் கான நடவடிக்கைகளை உலகளாவிய இலக்குகளாக மாற்று வதற்கான நடவடிக்கைகள் முதலில் நம்மிலிருந்து தொடங் கட்டும். அமைதியான, ஏற்றத்தாழ்வில்லாத உலகைப் படைத் திட நாம் உறுதி ஏற்கவேண்டி இருக்கிறது. அமைதியை வளர்ப்பதற்கும், நிலையான வளர்ச்சியை மேம்படுத்துவதற் கும் அனைத்து தனிநபர்களும் செழிக்கக்கூடிய உலகத்தை உருவாக்குவதற்கும் நமது கூட்டுபொறுப்பின் சக்திவாய்ந்த நினைவூட்டல் நம் ஒவ்வொருவரிலும் இருக்கவேண்டும். ஏன்? ஏற்றத்தாழ்வில்லா உலகை படைப்பதன்வழி உலக அமை தியை உருவாக்குவதற்கானதாகும்.

பன்னாட்டு அமைதி நாள் என்பது வன்முறையை முடிவுக்குக் கொண்டு வந்து, பரஸ்பரப் புரிந்துணர்வை வளர்ப்பதற்காக உலகெங்கிலும் உள்ள மக்களை ஊக்குவிக்கும் ஒரு முக்கி யமான நாளாகும். போர்கள் சமூகங்கள் மற்றும் எதிர்காலச் சந்ததியினர் மீது ஏற்படுத்தும் தாக்கங்களையும், அமை திக்குத் தடையாக விளங்கும் காரணிகளால் ஏற்படும் பாதிப் புகளையும் இந்நாள் எடுத்துக்காட்டுகிறது. மேலும், அகிம்சை, சகிப்புத்தன்மை, ஒற்றுமை ஆகியவற்றின் தூதர்களாகச் செயற்பட தனிநபர்களையும் குழுக்களையும் ஊக்குவிக் கிறது. அத்துடன், மக்களிடையே சகவாழ்வு, பரஸ்பரப் புரிந் துணர்வு மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் மதிப்புகளை வலுப் படுத்துவதற்கான சர்வதேச சமூகத்தின் அர்ப்பணிப்பைப் புதுப்பிப்பதற்கும் இந்நாள் வாய்ப்பளிக்கிறது.

உலகளாவிய பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மைக்கான அடித்தளங்களை உருவாக்குவதிலும் பன்னாட்டு அமைதி நாள் முக்கியத்துவம் பெறுகிறது. இந்நாளில், நாடுகளுக் கிடையிலான உரையாடலை மேம்படுத்துதல், முரண்பாடு களை அமைதியான வழிகளில் தீர்த்தல், வன்முறையற்ற அணுகுமுறைகளை ஊக்குவித்தல் போன்ற முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் மூலம், அமைதி என்பது போர் இல்லாத நிலை மட்டுமல்ல; புரிந்துணர்வு, ஒத்துழைப்பு, சகிப்புத்தன்மை மற்றும் நீதியை அடிப்படையாகக் கொண்ட நிலையான சமூக வாழ்வாகும் என்ற செய்தியும் வலியுறுத்தப் படுகிறது.

21-ஆம் நூற்றாண்டில் அரசியல், பொருளாதாரம், பண்பாடு, சமூகம் ஆகிய துறைகளில் செயற்படும் நேரடி மற்றும் மறைமுக சக்திகளைக் கருத்தில்கொண்டு பார்க்கும்போது, உலக அமைதி என்பது சிக்கல் நிறைந்த ஒன்றாகவே காணப் படுகிறது. எனினும், அந்தச் சிக்கலைக் காரணமாகக் கொண்டு அமைதிக்கான முயற்சிகளைக் கைவிட முடியாது.

வன்முறை ஒருபோதும் எந்தப் பிரச்சினைக்கும் நிலையான தீர்வாக அமையாது. நாடுகளுக்கிடையிலோ சமூகங்களுக்கு இடையிலோ உருவாகும் பெரிய அளவிலான கருத்து வேறு பாடுகளைக்கூட பேச்சுவார்த்தை, இராஜதந்திரம், பரஸ்பரப் புரிந்துணர்வு ஆகியவற்றின் மூலம் அமைதியான முறையில் தீர்த்துக்கொள்ள முடியும். எனவே, முரண்பாடுகளை வன் முறையின் மூலம் அணுகுவதற்குப் பதிலாக, உரையாடல் மற்றும் சமரசத்தின் வழிமுறைகளை முன்னிறுத்துவது அவசி யமாகிறது. உலக சுகாதார நிறுவனம் (WHO), ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா.) போன்ற சர்வதேச அமைப்புகளும் வன்முறையைத் தவிர்த்து, மனித உயிர்களையும் பிற உயிரி னங்களையும் மதித்து, அன்பு, பரிவு, சகிப்புத்தன்மை ஆகிய வற்றுடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்து கின்றன. எனவே, உலக அமைதி என்பது அரசுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் பொறுப்பு மட்டுமல்ல; ஒவ்வொரு தனிநபர், சமூக அமைப்பு மற்றும் நாட்டிற்கும் உரிய கூட்டுப் பொறுப்பாகும். அந்தப் பொறுப்புணர்வுடன் நாம் செயற்ப டும்போதுதான் நிலையான அமைதியையும் பாதுகாப்பான எதிர்காலத்தையும் உருவாக்க முடியும்.



natkunalingam@thaiveedu.com

நடராசா சிறிரஞ்சன்

tg.theeban@gmail.com



# பேச்சாற்றல் பேராற்றல்

மனிதருக்கு அவசியமான ஆற்றல்களில் முக்கியமானது பேச்சாற்றல். பேச்சாற்றல் என்றதும் எமக்கு உடனடியாக ஞாபகம் வருவது மேடைப் பேச்சாற்றல்தான். என்றாலும், நாம் நாளாந்த வாழ்க்கையில் வீட்டில் உள்ளவர்களுடன் மேற்கொள்ளும் சாதாரண உரையாடல் முதற்கொண்டு அரசாங்கங்களுக்கு இடையிலான இராஜதந்திரப் பேச்சுவார்த்தை உட்பட எல்லாவகைப்பட்ட வாய்வழித் தொடர்பாடல்களையும் பேச்சாற்றல் என்று கருதலாம்.

ஒருவரது அறிவாற்றல் எவ்வளவாக இருந்தாலும், அவர் அதை வெளிப்படுத்தும் முறைதான் அவரது வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாக அமைகின்றது. மாணவர் ஒருவர் எவ்வளவு அறிவு கொண்டவராக இருப்பினும் அவரது திறமையின் அளவைப் பரீட்சை மூலமாக அறிவது போன்று, நாளாந்த வாழ்க்கையில் அவரது திறமைகளில் கணிசமானவை ஒருவரது பேச்சாற்றல் மூலமாகத்தான் வெளிப்படுத்தபடுகின்றன.

நம்மில் பலர் சாதாரண உரையாடல் மற்றும் மேடைப்பேச்சு போன்றவற்றைக்கூட விவாதம் அல்லது பட்டிமன்றப் பாணியில் பேசத் தலைப்படுகிறோம். இதனால், உரிய நோக்கம் அடையப்படாமல் போவதுடன் தேவையற்ற முரண்பாடுகளும் ஏற்பட அது காரணமாகிறது.

முறைசார்ந்த பேச்சுக்கள் என்று பார்க்கும்போது சினேகபூர்வக் கலந்துரையாடல், உத்தியோகபூர்வக் கலந்துரையாடல், பேச்சுவார்த்தை, விவாதம் எனப் பல்தரப்பட்ட வகைகள் உள்ளன. இவை ஒவ்வொன்றையும் ஒரே பாணியிலன்றி அவை ஒவ்வொன்றிற்குமுரிய பொருத்தமான பாணியில் வெவ்வேறு விதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். இது தொடர்பில் சில உத்திகள், முறைகள், வரையறைகள் போன்றவை உள்ளன. இவற்றைச் சரியாகத் தெரிந்து கொண்டு, அதற்கேற்ற வகையில் பேசுதல் பல்தரப்பட்டவர்களுக்கும் நன்மை பயப்பதாக அமையும்.

> ***“தொடர்ச்சியான வாசிப்பு, மற்றவர் பேசுவதைக் கவனித்துக் கேட்டு விளங்கிக் கொள்ளும் ஆற்றல், நகைச்சுவை கலந்து பேசும் ஆற்றல், மற்றவர் பேசும் போது குறுக்கிடாதிருத்தல், பேச்சைக் கேட்பவர்களின் தன்மையை அறிந்திருத்தல் போன்றவை பேச்சாற்றலை மேம்படுத்தும் வழிகளாகும்.”***

நாம் நாளாந்தம் மேற்கொள்ளும் சாதாரண உரையாடல்கள் கூட எமது பேச்சாற்றலின் வெளிப்பாடுதான். சிறந்த உரையாடல் திறன் கொண்டவர்களுடன் மற்றவர்கள் உரையாட விரும்புவதையும் அத்திறன் இல்லாதவர்களுடன் உரையாடுவதைத் தவிர்ப்பதையும் காணுகிறோம். பேச்சாற்றல் உள்ளவர்கள்தான் சமூகத்திலும் நிறுவனங்களிலும் தலைமைப் பதவி முதற்கொண்டு முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்படுகிறார்கள்.

மற்றவர்கள் பேசுவதைக் கவனமாகவும் குறுக்கிடாமலும் கவனித்துக் கேட்டல் அடிப்படையானது. அப்போதுதான் குறிப்பிட்ட விடயத்தைச் சரியாகப் புரிந்து அது தொடர்பில் சரியான கருத்தை அல்லது எமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க முடியும். அடுத்தது, எமக்கு ஏற்புடையதற்ற விடயமொன்றை மற்றொருவர் கூறும்போது கோபப்படாது, அவர் பேசி முடிப்பதற்கு இடம் கொடுத்துப் பின்னர், எமது கருத்துகளை ஆதாரங்களுடனும் எடுத்துக்காட்டுகளுடனும் அமைதியாகவும் உறுதியாகவும் அவருக்கு எடுத்துக் கூறுதல் வேண்டும்.

தொடர்ச்சியான வாசிப்பு, மற்றவர் பேசுவதைக் கவனித்துக் கேட்டு விளங்கிக் கொள்ளும் ஆற்றல், நகைச்சுவை கலந்து பேசுமாற்றல், மற்றவர் பேசும் போது குறுக்கிடாதிருத்தல், பேச்சைக் கேட்பவர்களின் தன்மையை அறிந்திருத்தல் போன்றவை பேச்சாற்றலை மேம்படுத்தும் வழிகளாகும். இதன் மூலம் பேச்சினூடே சொல்லப்படும் விடயம் உரியவர்களுக்கு உரிய முறையில் சென்று, பேச்சின் நோக்கம் நிறைவேற வழிவகுக்கும்.

தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்களில் பேச்சுக்கள், விவாதங்கள் முதலியவற்றைக் கேட்டல், பேச்சாளர்களால் நிகழ்த்தப்படும் பேச்சுக்கள், பல்வேறு இடங்களில் நடை பெறும் பொதுக்கூட்டங்கள் போன்றவற்றில் நேரடியகக் கலந்துகொண்டு பேச்சுக்கள் மற்றும் விவாதங்களை அவ தானித்தல் போன்ற முறைகளிலும் பேச்சாற்றலை வளர்க்க முடியும். சில நிகழ்ச்சிகளில் முதலில் ஒருவர் ஒரு தலைப்பில் பேசுவார், அவர் பேசி முடிந்தவுடன் பார்வையாளர்கள் அவரது பேச்சுத் தொடர்பில் கேள்விகள் கேட்பார்கள். அதற்குப் பேச்சாளர் பதிலளிப்பர். அதன் பின்னர், பார்வையாளர் களுக்கும் குறிப்பிட்ட உரை தொடர்பில் தமது கருத்துகளை மேடைக்குச் சென்று கூறுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கருத்துகளைக் கூறுவதன் மூலமாக மேடைக்கூச்சம் முதலியவற்றிலிருந்து விடுபட்டு பேச்சுத் திறனைக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்த் துக்கொள்ள முடியும்.

ஊர்கள் தோறும் குறிப்பிட்ட காலத்துக்கொருமுறை இவ் வாறான கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு வெவ்வேறு தலைப்புகளில் பேச்சுக்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடத்துதல் வேண்டும். இதன் மூலம் மக்களின் பேச்சாற்லை வளர்ப்பதுடன், பல்தரப்பட்ட விடயங்களைப் பேசி, உரை யாடி அவர்களின் அறிவை வளர்க்க முடியும். அத்துடன் சமூகம் சார்ந்த பல்தரப்பட்ட விடயங்களைப் பேசிக் கலந்துரை யாடி அவை தொடர்பில் ஊரவர்களது அறிவு, விழிப்புணர்வு முதலியவற்றை வளர்த்தெடுக்கலாம். கருத்து வேறுபாடுகள், பிரச்சினைகள் முதலியவற்றைப் பேசித் தீர்க்க முடியாத போதுதான் முரண்பாடுகள், விரோதங்கள், சண்டைகள் தோன்றுகின்றன. அவற்றைப் பேசித்தீர்க்கும் ஆற்றலை வளர்த் தெடுப்பது முக்கியமானதொரு இன்றைய சமூகத் தேவை யாகும்.

பேச்சாற்றலை வளர்ப்பது தொடர்பில் 'சொல்வேந்தர் மன் றம்' (Toastmasters) என்றதொரு அமைப்பு உலகளாவிய ரீதியில் உண்டு. இதன் தலைமை அலுவலகம் அமெரிக்கா வில் உள்ளது. இது 145 நாடுகளில் 16,200-இற்கு மேற்பட்ட மன்றங்களைக் கொண்டுள்ளது. இந்த மன்றங்கள், நிறு வனங்கள் சார்ந்தும் (insitution based) சமூக அமைப்புகள் (community based) சார்ந்தும் அமைந்துள்ளன. இது பதி னெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு இயங்குகிறது. பதினெட்டு வயதுக்குட்பட்டவர் களுக்கு Gavel Club என்ற பெயரில் தனியான அமைப்பு உள்ளது.

இந்த மன்றங்களின் அங்கத்தவர்கள் பங்குபற்றும் கூட்டங் கள் தொடர்ச்சியாக இடம்பெற்று அதில் பேச்சாற்றலை வளர்க்கும் பல்தரப்பட்ட செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. மன்ற உறுப்பினர்கள் பேச்சாற்றல் தொடர்பிலான ஒவ்வொரு அம்சத்திலும் தேர்ச்சி பெறும் வகையில் இதன் செயற்பாடு கள் இடம்பெறுகின்றன. பேச்சாளரின் முகபாவனை, உடல் மொழி, ஒலி அளவு, ஒலியின் அளவில் ஏற்ற இறக்கங் களைப் பேணுதல் சபையினரின் கவனத்தைத் தொடர்ந்து தக்க வைத்தல், நேரக் கட்டுப்பாடு போன்ற இன்னோரன்ன திறமைகளை உருவாக்கி வளர்ப்பதற்கு சொல்வேந்தர் மன் றங்களின் பயிற்சி வகுப்புகள் உதவுகின்றன. இந்த அமைப் பில் அங்கத்துவம் பெற்றுப் பயிற்சிகளில் பங்குபற்றிய பலர் உலகளாவிய ரீதியில் பெயர் பெற்ற பேச்சாளர்களாக வளர்ந்துள்ளனர். அதனூடே தமது தொழில் மற்றும் சமூக வாழ்க்கை தொடர்பில் பெரும் உச்சங்களைத் தொட்டவர் களாகவும் பரிணமித்துள்ளனர்.

சொல்வேந்தர் மன்றங்கள் சமூகம் சார்ந்தவையாக அல்லது நிறுவனங்கள் சார்ந்தவையாக இயங்கி வருகின்றன. இந்த மன்றங்களில் பேச்சாற்றல் வகுப்புகள் பொதுவாக ஆங் கிலத்தில்தான் இடம்பெறுகின்றன. ஒரு சில இடங்களில் தமிழிலும் வகுப்புகள் இடம்பெறுவதாக அறியமுடிகிறது. தமிழ் மொழி மற்றும் ஆங்கிலமொழிச் சொல்வேந்தர் மன்றங்களை பொருத்தமான நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகளில் உருவாக்கி உறுப்பினர்களைச் சேர்த்துப் பயிற்சியளித்தல் பேச்சாற்றலை வளர்க்கப் பெரிதும் உதவும்.


ஒரு சிறிய முரண்பாடு ஏற்படும் போதுகூட நம்மில் சிலர் அடி, பிடி, சண்டை என்று போய்க் கொலையில் முடியும் ஒரு காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். தொட்டதுக்கெல் லாம் சண்டை பிடிப்பது வீரத்தின் வெளிப்பாடல்ல, அது பலவீனத்தினதும் தன்னம்பிக்கை இன்மையினதும் வெளிப் பாடாகும். இவ்வாறானதொரு காலகட்டத்தில் பேச்சாற்றலை வளர்த்து முரண்பாடுகளைப் பேசித்தீர்க்கும் வல்லமை கொண்டவர்களை உருவாக்குவது முக்கியமானதொரு சமூ கத் தேவையாகும்.

விடயம் ஒன்று தொடர்பில் மற்றொருவருடன் முரண்பாடு தோன்றிவிட்டால், அவரை வழியில் காணும் போதுகூட கண்களில் பொறி பறக்குமளவு எதிர்ப்பையும் வன்மத்தை யும் வெளிப்படுத்தும் அபத்தமான நிலையைச் சில இடங் களில் காணக்கூடியதாக உள்ளது. ஒரு விடயத்தில் ஒரு வருடன் முரண்பட்டால் அந்த விடயத்தைத் தவிர்த்து மற் றைய விடயங்களில் அவருடன் நல்லுறவைப் பேணுவதும் தேவைப்படும்போது அவருடன் சேர்ந்து செயற்படுவதும் தான் ஆரோக்கியமான ஒருவரது பண்பாக அமையும்.

உலகின் எதிரி நாடுகளின் தலைவர்கள் சந்திக்கும்போது, ஒருவரை ஒருவர் கட்டித்தழுவிச் சிரித்துப் பேசுவதைக் காண் கிறோம். இவ்வாறு அவர்கள் நடந்து கொள்வது மற்றவர் மேல் கொண்ட பயத்தாலோ அல்லது பாசத்தாலேயோ அல்ல, பதிலாகத் தத்தமது காரியங்களைப் பேச்சுவார்த்தை மூலமாகச் சாதித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே. எனவே, பேச்சாற்றலை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அதைப் பல்லதரப்பட்ட வழிகளில் வளர்த் தெடுக்க ஆவன செய்தல் வேண்டும்.



Nadarasa.sriranjan@thaiveedu.com



# ஓர் ஈழ நாட்குறிப்பு

ஓவியர் ஜீவா

7

கம்பளை வழியாக கண்டியை நோக்கி சென்றுகொண்டி ருந்தோம். கண்டி என்றவுடனேயே எம்.ஜி.ஆரும் சிவாஜியும் என் மனதில் தோன்றிவிட்டனர். முன்னவர் பிறந்த ஊர் அருகே என்பது ஒன்று. பின்னவரின் திரைப்படம் ஒன்று நினைவுக்கு வந்து விட்டது. 1957-இல் வெளியான 'புதையல்' என்ற படத்தில் இடம் பெற்ற 'கண்டி ராஜா' நாடகத்தில்தான் 'கண்டி' என்ற பெயரையே நான் கேட்டிருக்கிறேன். சிவாஜியும் பத்மினியும் அந்த நாட கத்தில் நடித்திருந்தனர். அதில் கண்டி அரசனாக சிவாஜி முழக் கமிட்ட காட்சிகள் நினைவுக்கு வந்தது. நகருக்குள் நுழை யும்போது லேசான மழைத்துளிகள் விழத்துவங்கிவிட்டன. பேராதனை அந்தப் பகுதிதான் என்று சில விளம்பரப்பலகை களைக் கண்டு யூகித்துக்கொண்டேன். கண்டியை நெருங்கி யபோது நல்ல மழை பெய்யத் தொடங்கிவிட்டது. மழையில் வண்ணக் குடைகளுடன் மக்கள் நடப்பதே ஓர் அழகிய காட்சி. கண்டி சென்றால் புகழ் பெற்ற தலதா மாளிகை (ஸ்ரீ தலதாமா ளிகாவ) ஆலயத்தை காணாமல் வரமுடியுமா? புத்தரின் பல் அங்கே வைக்கப்பட்டிருந்ததாகச் சொன்னார்கள். ஆலயத்தை சுற்றியுள்ள பகுதிகளில் மட்டும் ஒரு சிறிய உலா சென்று வந்தோம். ஏராளமான வெளிநாட்டினர், குறிப்பாக ஜப்பான் போன்ற நாடுகளில் இருந்து பயபக்தியுடன் வலம் வருவதை பார்த்தேன். இலங்கையை சேர்ந்த புத்த மதத்தினரையும் திரளாகக் காண முடிந்தது. வெண்ணுடை அணிந்து மலர்களை கையில் ஏந்திக்கொண்டு அவர்கள் செல்வதே ஓர் அழகிய காட்சி. மழையும் எங்களுக்குக் கிடைத்திருந்த குறுகிய அவகா சமும் ஆலயத்தினுள் நாங்கள் செல்வதை தடுத்துவிட்டன.

கண்டி நகரம் கடும் போக்குவரத்து நெரிசல் மிக்கதாகப்பட்டது. ஒரு வழியாக நகருக்கு வெளியில் வந்து மதிய உணவைத் தேடி அலைந்தோம். ஒரு டீக்கடையை ஒத்த ஓர் உணவகம் கிடைத்தது. மீன் வறுவல் உட்பட சிங்கள உணவுகளை அந்த மழை நேரத்தில் சாப்பிட்டதும் ஒரு சுகம்தான். மீண்டும் கிளி நொச்சியை நோக்கி பயணம் தொடர்ந்தது. வழியில் மாத்தளை நகரை கடக்க வேண்டியிருந்தது. அழகான நகரம்தான். அங்கி ருந்த புகழ் பெற்ற முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தை சாலையில் இருந்தே கண்டு களித்து தொடர்ந்தோம். ஊருக்கு வெளியே சாலைகளில் திறந்த வெளிகளில் பெரிய கொட்டகை அமைத்து ஒரு மினி சூப்பர்மார்கெட் போல கடைகளை நடத்திக் கொண்டிருந்தார்கள் சிங்கள மக்கள். தின்பண்டங்கள், விளை யாட்டு பொம்மைகள், தேநீர்... அனைத்தும் கிடைக்கின்றன. அல்வா வகைகள், கேரளத்து கோழிக்கோடன் அல்வாவைப் போல விதவிதமான நிறங்களிலும் ருசிகளிலும் கிடைக்கின்றன. பன்னம்பிட்டியாவில் இப்படி ஒரு கடைக்கு விஜயம் செய்தோம். அதே போலத்தான் பழக்கடைகளும். நாங்கள் சென்றது கிட்டத் தட்ட பழ சீசன் ஆரம்பம் என்பதால், வித விதமான பழங்கள் விற் பனைக்கு அணிவகுத்து நின்றன.

இந்தியாவில் நெடுஞ்சாலைகளில் விபத்துகளைத் தடுக்கவும், பயணிகளுக்கு அருள்புரியவும் நிறைய சாலையோரக் கோவில் கள் இருக்கும். எப்பேர்ப்பட்ட நாத்திகரும் அங்கு வண்டியை நிறுத்தி ஒரு கும்பிடையும் காணிக்கையையும் போட்டுவிட்டுதான் வண்டியை எடுப்பார்கள். இலங்கையிலும் இதே வழக்கம் இருக்கும் என்று அறிந்துகொண்டேன். திருமுறிகண்டி பிள்ளையார் கோவிலில் வண்டியை நிறுத்தி இந்த சம்பிரதாயங்களை செய்து விட்டு தொடர்ந்தோம்.

prasadbatti@gmail.com







இந்தமுறை நண்பர்கள் எண்ணிக்கை அதிகமென்பதால், கனடாவில் இருக்கும் டிலிப்குமாரின் நண்பர் கருணா கோபாலபிள்ளை அவர்களின் விருந்தினர் இல்லத்தில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒரு தோப்புக்குள் இருக்கும் அழகிய வீடு. சுற்றிலும் மரங்களும் செடிகளுமாக அருமையான சூழல். உள்நாட்டுப்போர் நடந்த காலத்தில் இந்த இடமெல்லாம் எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தேன். பெரும்பாலும் முகாம்கள் அங்கிருந்திருக்கலாம் என்று அனுமானித்தேன். இந்த இல்லத்தின் நிர்வாகியாக திரு. மூர்த்தி என்ற இனிய நண்பர் இருந்தார். எங்களுக்கெல்லாம் பேருதவியாகவும் திகழ்ந்தார். எங்களுக்காக சமைக்க அவ்வப்போது சில இளைஞர்கள் வந்தார்கள். சில சமயங்களில் ஆப்பம், புட்டு போன்ற பார்சல்கள் வந்துவிடும். மூர்த்தி அவர்களிடம் ஒரு பச்சை நிற ஆட்டோவும் இருந்தது. அதை நான் ஒரு லுங்கி அணிந்துகொண்டு ஓட்டுவதை போல ஒரு புகைப்படம் எடுத்து முகநூலில் பதிவிட்டேன். நண்பர்களிடமிருந்து ஏகப்பட்ட வரவேற்பு!

பெப்பிரவரி 18 அன்று காலையில் எங்களுக்கு ஒரு முக்கியமான நிகழ்ச்சி. நான் இந்தியாவில் இருந்து கிளம்புவதற்கு முன்னமே இது குறித்து ஆசிரியர் டிலிப்குமாரும் கனடாவிலிருந்து வந்திருந்த பொன். பாலராஜன் அவர்களும் சொல்லியிருந்தனர். 'வீடில்லாதவர்களுக்கு கொடையாய் வீடு' என்பது இந்த நிகழ்வின் பெயர். இலங்கைத் தமிழ் புலம்பெயர் சமூகங்கள், அர்ப்பணிப்புள்ள மனிதாபிமானத் தொண்டு நிறுவனங்கள், கிராம அளவிலான நலச் சங்கங்கள் மற்றும் நேரடி குடும்பங்களுக்கிடையேயான மறுவாழ்வு வலையமைப்புகள் ஆகியவற்றின் மூலம், இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமையில் வாடும் தமிழர்களுக்குத் தீவிரமாக வீடுகளைக் கட்டி நன்கொடையாக வழங்கி வருகிறது. இந்திய அரசும் இத்தகைய வீடுகளை கட்டித் தருவது பற்றி ஏற்கனவே எழுதியிருந்தேன்.

புலம்பெயர் வீட்டு வசதிகளுக்கான திட்டங்களை செய்ய சில அமைப்பு வழிமுறைகள் உள்ளன. இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பாவில் வாழும் தமிழர்களால் நிறுவப்பட்டு நிதியளிக்கப்படும் சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள், தொடர்ந்து வீட்டுவசதித் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றன. மேலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற குறிப்பிட்ட நகரங்களைச் சேர்ந்த வெளிநாட்ட வர்கள், நிதியைத் திரட்டுவதற்காகப் பிராந்திய வலையமைப்புகளை உருவாக்குகின்றனர். அவர்கள் தங்கள் சொந்த கிராமங்களில் உள்ள ஆதரவற்றவர்கள், குடும்பத் துணையை இழந்தவர்கள் மற்றும் நிலமற்றவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கென பிரத்தியேக வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்றனர். கூடுதலாக இலங்கைக்குள் உள்ள உள்ளூர் இலாப நோக்கற்ற அமைப்புகளும் சமய நிறுவனங்களும், கால நிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களைப் பயன்படுத்தி, தனிப்பட்ட 'மாதிரிக் கிராமங்கள்' அல்லது ஒற்றைக் குடும்ப அலகுகளைக் கட்டுவதற்காக வெளிநாட்டு நன்கொடையாளர்களுடன் தீவிரமாகப் பங்காளிகளாகின்றன. பொன். பாலராஜன், இத்தகைய நற்செயல்களிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருப்பவர். பொன். பாலராஜனின் அக்கா லீலா செல்லையா தனது இலங்கை ஓய்வுதியத்தில் குளாய்க் கிணறு அன்பளிப்பு செய்கின்றார். நாங்கள் சென்ற இல்லம், கிளிநொச்சி பரந்தன் பகுதியில் சிவபுரம் என்ற இடத்தில் இருந்தது. அன்று பயனாளியிடம் அந்த வீட்டை ஒப்படைக்கும் நிகழ்ச்சி நடைபெறுவதாக இருந்தது. இந்தியாவிலிருந்து நாங்கள் சிலரும் கனடாவிலிருந்து நண்பர்களும் வருகை தந்தது அங்கிருந்தவர்களுக்கு பெருமகிழ்ச்சியைத் தந்தது.

முன்னால் தோட்டம் போடுவதற்கும் மரம் வளர்க்கவும் திறந்த வெளி. மூன்று அறைகள் கொண்ட வீடு, நன்கு பெயிண்ட் அடிக்கப்பட்டு பொலிவுடன் இருந்தது. வீட்டை ஒட்டி கழிவறையும் உண்டு. 'இங்கிலாந்தில் வாழ்ந்த அமரர் திருமதி கமலேஸ்வரி குணசிங்கம் அவர்களால் இவ்வீடு வழங்கப்பட்டிருக்கிறது' என்ற ஒரு சிறு கல்வெட்டு சுவற்றில் பதிக்கப்பட்டிருந்தது. அரசு உயர் அதிகாரிகள் நேரில் வந்திருந்தனர். கவர்ன்மென்ட் ஏஜென்ட் என்று அழைக்கப்படும் மாவட்ட செயலாளர் வந்திருந்து கல்வெட்டை திறந்து வைத்தார். இந்தியாவில் உள்ள கலெக்டர் பதவிக்கு நிகரானது இது என்று எண்ணுகிறேன். நிர்வாகப்பிரிவு, கட்டுமானப்பிரிவு, அக்கௌன்ட்ஸ் பிரிவுகளை சேர்ந்த அதிகாரிகள், அவர்கள் பெரும்பாலும் உள்ளூரை சேர்ந்தவர்கள், நிகழ்வில் கலந்து கொண்டனர். வீடற்றவர்களுக்கு வீடுகளை கட்டி வழங்குவதில் அவர்களிடம் ஒரு கனிவை கண்டேன். மிகவும் அன்போடு பேசி







னார்கள். இந்த நிகழ்வுக்கு அங்குள்ள அரசியல்வாதிகள் யாரும் அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவிலிருந்து புகழ் பெற்ற ஓவியர் மருது இந்த நிகழ்வுக்கு வந்திருக்கிறார் என்பதில் அவர்கள் பெரும் பெருமை கொண்டவர்களாக இருந்தனர். இந்த திட்டத்தை பற்றி விரிவாகவும் எங்களிடம் பேசினார்கள்.

பொன். பாலராஜன் இந்த நிதி வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தவர் என்ற முறையில் நிகழ்வை முன்னின்று நடத்தினார். கொடையாளியின் உறவினர்கள் பலர் வந்திருந்தனர். தமிழர்களான அதிகாரிகளிடம் நான் கண்ட வரையில் அதிகாரத்தைவிட கனிவும் அன்புமே மிளிர்ந்தன. வீட்டை, அந்த வாழ்வில் அடிபட்ட ஏழைத் தொழிலாளர்களுக்கு வழங்கும்போது என் கண்களும் பனித்தன!

மதிய விருந்தும் தயாராக இருந்தது. அதற்கான நேரம் இன்னும் இருந்ததால், பயனாளிகள் குடும்பத்தை வாழ்த்தி விட்டு விடை பெற்றோம்!

அன்று மாலை கிளிநொச்சியில் இன்னொரு முக்கியமான நிகழ்ச்சி. பொன்னையா விவேகானந்தனின் நான்கு நூல்களான 'பெயர்வுத் தமிழ்ச் சமூகம் - இருப்பும் இடர்களும்', 'பொன்னையா விவேகானந்தனின் நாடகங்கள்', 'தமிழ் மொழிக்கல்வி' மற்றும் 'அறிவோம் தமிழ்ப்பண்பாடு' அறிமுக விழா மாலை நடைபெற இருந்தது. 'அறிவோம் தமிழ்ப்பண்பாடு' நூல் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஏராளமான ஓவியங்களுடன் வெளியான வண்ணமயமான நூல். ஓவியங்கள் அனைத்தும் எனது என்ற கூடுதல் பெருமையுடன் விழாவிற்கு கிளம்பினோம். தாய்வீடு இதழ், தமிழ்த் தேசிய கலை இலக்கியப்பேரவை மற்றும் கிளிநொச்சி மாவட்ட விவாதிகள் கழகம் ஏற்பாட்டில் கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் விழா நடைபெற்றது. ஏராளமான தமிழ் அன்பர்கள் வருகை புரிந்திருந்தனர். சொந்த ஊரில் தன் நூல்களை கனடாவில் இருக்கும் எழுத்தாளர் வெளியிட்டு பேசுவது ஓர் உணர்ச்சி மயமான நிகழ்ச்சி அல்லவா! கவிஞர் தீபச்செல்வன் விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் செய்து தலைமை உரையும் ஆற்றினார். கலாநிதி சு. குணேஸ்வரன், அமரர் பெருமாள் கணேசன், நண்பர் திருநகரூர் ஜெகா, மற்றும் பாலா சயந்தன், நூல்களைப் பற்றி பேசினார்கள். ஓவியர் மருதுவும் நானும் சிறப்புரை ஆற்றினோம். பொன்னையா விவேகானந்தனின் ஏற்புரையுடன் விழா இனிதே முடிந்தது. அவருடைய உறவினர்கள், உடன் பிறந்தோர் அனைவரும் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்ட விழாவாகவும் இது திகழ்ந்தது. ஏராளமான புதிய நண்பர்களை சந்தித்தேன். இளம் ஓவியர்களான சமித்ரா ஸ்ரீரங்கநாதன், லுத்தியா காணேஸ்வரன் இருவரும் யாழ்ப் பாணத்திலிருந்து எங்களை சந்திக்க வந்திருந்தனர். விவேகானந்தனின் இன்னொரு சகோதரி சாந்தி, அவர் மகள் வானொலிக் கலைஞர் டிவனியா ஆகியோரையும் சந்தித்தேன். எங்கள் ஊரான கோவையிலிருந்து எழுத்தாளர் பாமரன், விழா முடியும் தருவாயில் வந்து சேர்ந்து கொண்டார். ஒரே ஊர்க்காரர்கள், ஒரே பள்ளி மாணவர்கள்... கட்டியணைத்து மகிழ்ந்தோம்!

அடுத்த நாள் கிளிநொச்சியிலிருந்து விடைபெற்று யாழ்ப் பாணப் பயணம் எங்கள் திட்டத்தில் இருந்தது. விவேகானந்தனின் தமக்கை வீட்டுக்கு சென்று அனைவரிடமும் விடை பெற்றோம். ஒரு பிரிவுபசார விழா நிகழ்ச்சியாக நாங்கள் 'நாட்டியப்பேரொளி' என்று அழைத்த சிரன்சீவன் - சுமனா இணையரின் மகன் நவீனன் ஒலியமைப்பைக் கவனிக்க, அன்பு மகள் தஸ்வீரா எங்களுக்காக ஒரு நடன நிகழ்ச்சியை நடத்தி விடை கொடுத்தாள்.

யாழ். செல்லும் வழியில் இலங்கையின் கள்ளுக்கடை ஒன்றை பார்க்க ஆவலாக அனைவரும் சென்றோம். இந்தியாவில் உள்ளது போல தொடுகறிகள் எதுவும் இல்லாமல் அங்கு வெறும் 'கள்' விற்கப்பட்டுக்கொண்டிருந்தது. அங்கிருந்த கள் உபாசகர்களுக்கு ஆசிரியர் மகிழ்வுடன் ஆசை தீர குடிக்க ஸ்பான்சர் செய்தார். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டோம். குடிமக்கள் அனைவரும் உற்சாகமாக எங்களை வழியனுப்பி வைத்தனர். செல்லும் வழியில் சாலையோரம் விற்கும் பனங்கிழங்கை வாங்கிச் சுவைத்துக்கொண்டு பயணத்தை தொடர்ந்தோம்!



jeeva@thaiveedu.com

# சிவா மாலதி

# யூடித் பட்லரும் பால்நிலை நிகழ்த்துகையும்

யூடித் பட்லர் (Judith Butler) தனது மிகப் பிரபலமான பால்நிலை நிகழ்த்துகை (Gender performativity) தொடர்பான கருத்தியலை மையப்படுத்தி எழுதிய Gender trouble எனும் புத்தகம் 1990-இல் வெளிவந்தது. இன்றுவரை தொடர்ச்சியாக பேசப்பட்டும் விமர்சிக்கப்பட்டும் வரும் ஒரு கருத்தியலாக பட்லரின் பால்நிலை நிகழ்த்துகை காணப்படுகின்றது. ஆயினும், இக் கருத்தியலைக் கற்றுக்கொள்ளும்போது எழுகின்ற கேள்விகளை மையப்படுத்தி இக்கட்டுரை ஒரு உரையாடலை, சிந்தனைக் கிளர்த்துதலை மேற்கொள்ள முயற்சிக்கின்றது. இக்கட்டுரையானது, பால்நிலை ஒடுக்குமுறையிலிருந்து விடுதலையடைவதற்கான தீர்வாக பால்நிலை நிகழ்த்துகை அமைய முடியுமா என்ற கேள்வியினையும் மையப்படுத்தியதாக அமைகின்றது.

'Gender trouble' நூலின் ஆரம்பத்தில், 'பெண்' எனும் நிலையான மற்றும் உலகளாவிய அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே 'பெண்ணிலைவாதம்' முன்னெடுக்கப்படுவதை யூடித் பட்லர் விமர்சனபூர்வமாக அணுகி கேள்விக்குட்படுத்துகிறார். எனினும், இப்பகுதி தமிழ்ச் சூழலில், குறிப்பாகப் பின்நவீனத்துவச் சூழலில் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. அதாவது, 'பெண்' என்ற அடையாளமோ அல்லது பெண் என்ற ஒற்றைக் குழுவோ நிஜத்தில் இல்லை (அல்லது இருக்கக்கூடாது) என்ற அதீத நிலைப்பாடாக இக்கருத்து தவறாக வியாக்கியானப்படுத்தப்படுகிறது. ஆனால், பட்லர் 'பெண்' என்ற அடையாளத்தையோ, பெண்களின் கூட்டு அரசியலையோ முற்றிலுமாக மறுக்கவில்லை. மாறாக, 'பெண்' என்ற சொல்லை ஒரு இறுக்கமான, எல்லோருக்குமான நிலையான கட்டமைப்பாகப் (Fixed Category) பார்ப்பதை மட்டுமே அவர் எதிர்க்கிறார். வர்க்கம், இனம், நிறம் மற்றும் பாலின நாட்டத்தால் வேறுபடும் பெண்களின் பன்முகத்தன்மையை ஒடுக்கக்கூடிய இந்த ஒற்றைப் படையான கட்டமைப்பை விமர்சிக்கும் அதேவேளை, பெண்ணிய அரசியலின் நடைமுறைத் தேவையையும் அவர் மறுதலிக்கவில்லை.

> ***மேற்குலகப் பெண்ணிலைவாதமானது நிறவாதம், காலனித்துவம், முதலாளித்துவம் போன்றவற்றின் தாக்கங்களை ஆரம்பத்தில் கருத்தில்கொள்ளவில்லை. இதன் விளைவாகப் பெண்களின் அனுபவங்களில் உள்ள வேறுபாடுகளையும், அவர்களின் பிரச்சினைகளில் எவை முன்னுரிமை பெற வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் காரணிகளையும் அது கவனிக்கத் தவறியது.***



பட்லர், மேற்குலக தத்துவ மரபின் தொடர்ச்சியாக 20-ஆம் நூற்றாண்டுகளின் இறுதிக் காலப்பகுதியில் தனது எழுத்துகளுக்காக அறியப்பட்டவராக இருக்கின்றார். அவரின் பங்களிப்புகள் மேற்குலகின் போக்குகளை மையப்படுத்தியவையாகவும், மேற்குலக போக்குகளினால் செல்வாக்குச் செலுத்தப்படுபவையாகவும் இருக்கின்றன. அந்தவகையில், மேற்குலகில் நிலவிய பெண்ணிலைவாதமானது, 'வெள்ளையினப் பெண்களினால்' ஆதிக்கம் செலுத்தப்படுகின்றதாகவும், கறுப்பு, ஏனைய நிற மற்றும் தற்பாலீர்ப்பு பெண்கள் போன்றோரைப் புறக்கணிக்கும் போக்குகளையும் கொண்டிருந்தது. இதனைக் கேள்விக்குட்படுத்தி பெல் ஹூக்ஸ் (Bell hooks), ஏஞ்சலா டேவிஸ் (Angela Davis) போன்ற பல கறுப்பு பெண்ணிலைவாதிகள் ஆய்வுசெய்து, எழுதிவந்திருக்கின்றனர். உதாரணமாக, 1984-இல் வெளிவந்த, பிரபலமான கறுப்பு பெண்ணிலைவாதியான பெல் ஹூக்ஸ்இனால் எழுதப்பட்ட, 'Feminist theory From the margins to the center' எனும் நூலைக் குறிப்பிடலாம்.

1987-ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமெரிக்காவில் தொடரும் AIDS நெருக்கடியினால் தற்பாலீர்ப்பு ஆண்களும், ஏனையோரும் இறந்தபோது, அரசின் சுகாதார சேவைகளிலிருந்து இம்மக்கள் புறக்கணிக்கப்பட்டு வருவதனைக் கேள்விக்குட்படுத்தி இந்த மக்களை நோக்கிய கவனத்தினை ஈர்க்கும் வகையிலான போராட்டங்களை மேற்கொண்ட Actup போன்ற அமைப்புகள் அக்காலத்தில் தோற்றம் பெற்றன. அந்தவகையில், குயர் செயல்வாதம் தோற்றம் பெற்ற காலப்பகுதியாக இது கருதப்படுகின்றது. இந்தப் பின்னணியிலேயே அமெரிக்காவைச் சேர்ந்த தத்துவவியலாளரான யூடித் பட்லர் தனது மிகப்பிரபலமான 'Gender trouble' எனும் புத்தகத்தினை 1990-ஆம் ஆண்டில் வெளியிட்டிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

நேரடியான காலனித்துவ ஆதிக்கத்தின்கீழ் இருந்து விடுபட்டு, தற்காலத்தில் (மறைமுகமான) நவகாலனித்துவ அரசியல், பொருளாதார, அதிகாரக் கட்டமைப்புகளுக்குள் வாழும் மக்களாக, யூடித் பட்லரின் கோட்பாட்டினை விமர்சனபூர்வமாக அணுகவேண்டியவர்களாக நாம் உள்ளோம். அது தவிரவும், Anibal Quijano மற்றும் Walter D Mignolo போன்ற காலனித்துவ நீக்க கோட்பாட்டாளர்களும், Maria Lugonus போன்ற காலனித்துவநீக்க பெண்ணிலைவாதிகளும் மிக முக்கியமானதொரு வாதத்தை முன்வைக்கின்றனர். காலனித்துவ நீக்கத்தின் ஒரு பகுதியாக, மேற்குலகின் 'அறிவையும்' அதன் 'அறிவுருவாக்கச் செயற்பாட்டினையும்' மட்டுமே உயர்ந்ததாகக் கருதும் போக்கினை அவர்கள் தீவிரமாகக் கேள்விக்குட்படுத்துகின்றனர். மேலும், நாம் இதுவரை 'அறிவு' என ஏற்றுக்கொண்டிருப்பவற்றை முழுமையாகக் காலனித்துவ நீக்கம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்துகின்றனர். குறிப்பாக, 'பூகோள தெற்கு' (Global South) எனக் கருதப்படும் பிராந்தியங்களில் உருவாக்கப்படும் கோட்பாடுகளுக்கும் அறிவுருவாக்கச் செயன்முறைகளுக்கும் உரிய முக்கியத்துவம் அளிப்பதன் ஊடாக மட்டுமே அறிவைக் காலனித்துவ நீக்கம் செய்ய முடியும் என்றும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

> ***"பெண்களின் ஒடுக்குமுறைகளுக்காகப் போராடுவதாகக் கோரும் வெள்ளைப் பெண்ணிலைவாதமானது, வெள்ளைப் பெண்கள் தவிர்ந்த ஏனைய பெண்களின் பிரச்சினைகளைக் கருத்தில் கொள்ளாதது மட்டுமன்றி, தமது அனுபவமே உலகத்திலுள்ள அனைத்துப் பெண்களதும் பொதுவான அனுபவமாக இருப்பதாகப் பாவனை செய்கின்றது."***

இந்தப் பார்வையுடன் மீண்டும் பட்லரின் Gender trouble-இனை நோக்குவோமானால், gender trouble-இன் ஆரம்பத்திலேயே பட்லர், 'பெண்ணிலைவாதம் எந்தப் 'பெண்களுக்காகப்' போராடுகின்றது? என்ற கேள்வியினை எழுப்புவதனூடாக தனது பகுப்பாய்வில் முன்னோக்கிச் செல்கின்றார். இங்கு பட்லர் 'பெண்ணிலைவாதம்' எனக் குறிப்பிடுவது 'மேற்குலகின்' பெண்ணிலைவாதத்தினையே எனப் புரிந்து கொள்வது அடிப்படையானதாக இருக்கின்றது. அது தவிரவும், பெண்ணிலைவாதங்களில் பல வகைகள் உள்ளன என்ற வகையிலும், மேற்குலகப் பெண்களது அனுபவங்கள் மற்றும் மேற்குலக பெண்ணிலைவாதத்திற்கும், பூகோள தெற்கில் குறிப்பாக இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளிலுள்ள பெண்ணிலைவாதங்கள் மற்றும் இப்பெண்களது அனுபவங்களுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது. அதற்கும் மேலாக, மேற்குலகப் பெண்கள் மத்தியிலேயேகூட கறுப்புப் பெண்களதும், நிறப் பெண்களதும், தற்பாலீர்ப்புப் பெண்களதும், பழங்குடிப் பெண்களதும் அனுபவங்கள்கூட ஒரேமாதிரியானவை அல்ல. இதனைச் சுட்டிக்காட்டும் பட்லர், வெள்ளைப் பெண்ணிலைவாதம், இந்தப் பல்வகைமையை ஏற்க மறுத்து, புறக்கணிப்பின் அடிப்படையில் 'பெண்ணிலைவாதத்தினை' அணுகுகின்றது என விமர்சிக்கின்றார். அந்தவகையில், பட்லரின் கேள்வியை உலகம் முழுவதற்குமானதாக மொழிபெயர்த்து எடுத்துரைப்பது தவறான அணுகுமுறையாகும் என்பதை வலியுறுத்துவதுடன், 'பெண்ணிலைவாதம் எந்தப் 'பெண்களுக்காகப்' போராடுகின்றது? என்ற கேள்வியினை ஏன் பட்லர் எழுப்புகின்றார் என்பதனை ஆராய்வது அவசியமானதாகின்றது. மேற்குலக தாராளவாத வெள்ளைப் பெண்ணிலைவாதத்தின் குறைபாடுகளே அவரை இக்கேள்வியினை எழுப்பத் தூண்டியிருக்கின்றது.

மேற்குலகப் பெண்ணிலைவாதமானது நிறவாதம், காலனித்துவம், முதலாளித்துவம் போன்றவற்றின் தாக்கங்களை ஆரம்பத்தில் கருத்தில்கொள்ளவில்லை. இதன் விளைவாகப் பெண்களின் அனுபவங்களில் உள்ள வேறுபாடுகளையும், அவர்களின் பிரச்சினைகளில் எவை முன்னுரிமை பெற வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் காரணிகளையும் அது கவனிக்கத் தவறியது. ஆனால், இத்தகைய வேறுபாடுகளைப் பெண்ணிய ஆய்வுகளில் முழுமையாகக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை அன்றைய காலத்திலேயே கறுப்புப் பெண்ணியவாதிகள் (Black Feminists) தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளனர். அந்த வகையில், அக்காலத்தில் அமெரிக்காவில் நிலவிய மேற்குலகப் பெண்ணிலை

வாதத்தின் இத்தகைய குறைபாடுகளையும் வரம்புகளையும் அடிப்படையாகக் கொண்டே யூடித் பட்லர் தனது பகுப்பாய்வினைத் தொடங்குகின்றார் என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியமாகும்.

அத்துடன், பெண்களின் ஒடுக்குமுறைகளுக்காகப் போராடுவதாகக் கோரும் வெள்ளைப் பெண்ணிலைவாதமானது, வெள்ளைப் பெண்கள் தவிர்ந்த ஏனைய பெண்களின் பிரச்சினைகளைக் கருத்தில் கொள்ளாதது மட்டுமன்றி, தமது அனுபவமே உலகத்திலுள்ள அனைத்துப் பெண்களதும் பொதுவான அனுபவமாக இருப்பதாகப் பாவனை செய்கின்றது. இந்த ஆபத்தான போக்கின் காரணமாக, இனவாதம், காலனித்துவம், முதலாளித்துவம் போன்ற கட்டமைப்புரீதியான ஒடுக்குமுறைகள் கவனத்திற்கொள்ளப்படாததுடன், கறுப்பு பெண்கள், ஏனைய நிறப் பெண்கள் மற்றும் பால் நிலை பல்வகைமையினர் போன்றோருக்கெதிரான ஒடுக்குமுறைகளும், வெள்ளையினப் பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறைகளும் ஒரேமாதிரியானவையே என்ற தோற்றத்தினை ஏற்படுத்தும் வகையிலானவையாகவும் இருந்தன. ஆனால் யதார்த்தத்தில், கறுப்பினப் பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறையென்பது அவர்கள் 'பெண்களாக' இருப்பதனால் மட்டுமல்லாமல், அவர்கள் 'கறுப்பு', 'பெண்களாகவோ' அல்லது 'கறுப்பு' 'ஏழைப்' 'பெண்களாகவே' தம்மீது இழைக்கப்படுகின்றன என்பதும் கறுப்பு பெண்ணிலைவாதிகளால் சுட்டிக்காட்டப்பட்டன. வெள்ளைப் பெண்ணிலைவாதம் யாருக்காகப் போராடுகிறது என்ற கேள்வியை எழுப்பும்போது பெரும்பாலும், மத்தியதர வெள்ளைப் பெண்களுக்காகவே என்ற பதில் வருவதனைத் தவிர்க்க முடியாது. ஆக, பெண்களுக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு, பெண்கள் என்றால் யார் என்றால், அதாவது 'மத்தியதர வெள்ளைப் பெண்களே' பெண்கள் என வரையறைசெய்து ஏனைய பெண்களைப் புறக்கணிக்கும் போக்கினையே பட்லர் கேள்விக்குட்படுத்துகின்றார். இந்தப் பின்னணி, பட்லரைப் புரிந்துகொள்வதற்கு அவசியமானதாக இருக்கின்றது.

அனைத்துப் பெண்களையும் உள்வாங்கக் கூடியதாகப் பெண்ணிலைவாதம் இருக்க வேண்டும் என்பதே, யூடித் பட்லர் இத்தகைய கேள்விகளை எழுப்புவதன் முக்கிய நோக்கமாகும். மாறாக, பெண்ணிலைவாதத்தின் அடிப்படை அடித்தளத்தையே கேள்விக்குட்படுத்தி, 'பெண் என்ற அடையாளமோ பெண்ணோ எதுவுமே இல்லை; எனவே பெண்ணிலைவாதம் எதற்கு?' என்ற ரீதியிலான விதண்டாவாதப் பின்நவீனத்துவக் கருத்துகளுக்கு வலுச்சேர்ப்பது அவரது நோக்கமல்ல. பன்முகத்தன்மை கொண்ட அனைத்துப் பெண்களுக்கும் குரல் கொடுக்கும் வகையிலான ஒரு விரிவான பெண்ணிய அரசியலுக்கான வழியையே அவர் தேடுகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

> ***சமையலறை பெண்களுக்குரிய இடமெனவும், கல்விக்கூடங்களும், வேலைத்தளங்களும் பெண்களுக்குரியவையல்ல எனக் கருதப்பட்ட காலமும் இருந்தது. பெண்கள் பால்நிலைசார் நியமங்களை ஏற்க மறுத்து கல்வியுரிமைக்காகப் போராடினார்கள். அதன் விளைவாக இன்று இலங்கையில் பெண்கள் மத்தியில் அதிகளவான எழுத்தறிவு வீதத்தினை காணக்கூடியதாக இருக்கின்றது.***

- 'பால்நிலை நிகழ்த்துகை' (Gender perfomativity) என்றால் என்ன?
- பால்நிலை எவ்வாறு தோற்றம் பெறுகின்றது என்பது தொடர்பில் பட்லர் கூறுவது என்ன?

ஆரம்ப காலங்களில், ஆண்மை மற்றும் பெண்மை என்பது ஒரு நபர் பிறக்கும்போதே அவர்களுக்குள் தோன்றும் / இருக்கும் ஒரு அம்சமாகக் கருதப்பட்டது. ஒவ்வொரு நபருக்குள்ளும் இருக்கும் ஆண்மை மற்றும் பெண்மையினடிப்படையிலே அவர்கள் பால்நிலைப் பங்கு பாத்திரங்களை (Gender roles) ஏற்பதாகவும், பால்நிலை நியமங்களை (Gender norms) பின்பற்றுவதாகவும், பால்நிலை வெளிப்பாடுகளை மேற்கொள்வதாகவும் (gender expressions) கருதப்பட்டது. இது Gender essentialism என அழைக்கப்பட்டது. அதாவது ஆரம்பகாலங்களில், பால்நிலை என்பது ஒருவருக்குள் பிறப்பிலிருந்தே இயற்கையாகவே இருந்துவருகிறது என நம்பப்பட்டது.

பட்லர், இந்தக் கருத்தினை மறுத்து, பால்நிலை, சொல்லாடலினால் (discourse) உருவாக்கப்படுகின்றது என்ற கருத்தினை முன்வைத்தார். சொல்லாடல் என்பது மொழியுடன் மட்டுப்படாமல், அதற்கும் மேலதிகமாக, நாம் 'பொது அறிவு' அல்லது 'சாதாரணம்' அல்லது 'உண்மை' எனக் கருதுபவற்றை உருவாக்கும் கருத்துகள், சடங்குகள், கட்டமைப்புக்கள் போன்றவற்றினைக் குறிக்கின்றது.

ஒரு பிள்ளை இந்த உலகில் பிறந்த பிற்பாடு, பிறந்த குழந்தை ஆண் பிள்ளையா? பெண் பிள்ளையா? என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. பின்னர், அந்தப் பிள்ளையைப் பிறப்பில் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ அடையாளப்படுத்திய பிறகு, முதலில் குடும்பத்தினுடாகவும், அயற்சமூகம் மற்றும் உறவினர்களூடாகவும், பின்னர், பாடசாலை, மத அமைப்புக்கள் முதலான சமூக அமைப்புக்களினூடாகவும், சட்டம் போன்ற அரச அமைப்புக்களினூடாகவும், அறிவுச் செயற்பாடுகளினூடாகவும், அப்பிள்ளைமீது பால்நிலைசார் நியமங்களும், எதிர்பார்ப்புக்களும், பால்நிலைசார் பங்குபாத்திரங்களும் சொல்லாடல்கள் மூலம் கடத்தப்படுகின்றன. அதாவது, பெண்பிள்ளை மரத்தில் ஏறக்கூடாது, வீட்டுவேலைகளில் பங்கெடுக்க வேண்டும், காலை விரித்து இருக்கக்கூடாது எனவும், ஆண்பிள்ளை, 'பெண்பிள்ளைபோல' அழக்கூடாது, காற்சட்டை அணிய வேண்டும், பயப்படக்கூடாது என்பவை போன்ற உரையாடல்கள், நடத்தைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றினூடாகவே வளர்த்தெடுக்கப்படுகின்றனர். அவற்றின் விளைவாகவே ஒரு பிள்ளை சுயவிழிப்புடன்கூடிய ஒரு நபராகத் தன்னை உணரும்போது, பால்நிலை தொடர்பான அடையாளமும் உணரப்படுகின்றது என பட்லர் கருதுகின்றார்.

அப்படியானால், பால்நிலைசார் ஆண், பெண் எனும் இருமைகளே சமூகத்தில் ஆதிக்கமான சொல்லாடல்களாக இருக்கும்போது, அதிலிருந்து வேறுபட்ட திருநர்கள், பால்நிலை இருமையல்லாதோர், பால்நிலை திரவத்தன்மையுடையோர் போன்றவர்கள் ஒவ்வொரு சமூகத்திலும், வரலாற்றுரீதியாக இருந்து வருவது எவ்வாறு என்ற கேள்வி எழுகின்றதல்லவா. பட்லர் இதனை சொல்லாடல்களிலுள்ள மட்டுப்பாடாகக் கருதுகின்றார். அதாவது, சமூகத்திலுள்ள ஆதிக்கமான சொல்லாடல்கள் ஆண் மற்றும் பெண் எனும் இருமையான பால்நிலையினை உருவாக்க முயற்சிக்கின்றபோதும், அது பல இடங்களில் தோல்வியடைகின்றது. அதற்குப் பால்நிலை இருமையல்லாதோரும், திருநர்கள் போன்றோரும் சாட்சியாக இருக்கின்றனர் என்பதே அவரது வாதம். ஆயினும், அவரது இந்த விளக்கம் போதாமையுடையதாக கருதப்படுவதுடன், பெண்ணிலைவாதிகளால் விமர்சிக்கப்பட்டும் வருகின்றது. குறிப்பாக, திருநர் நிலை, அதாவது, பிறப்பின்போது அடையாளப்படுத்தப்பட்ட பால்நிலையுடன் அல்லாமல், வேறு பால்நிலையுடன் தன்னை உணரும் நிலை (பெண்ணாக உணரும் ஆண்பிள்ளை, ஆணாக உணரும் பெண்பிள்ளை) வளர்ச்சியின் ஆரம்பக்கட்டங்களிலேயே உணரப்படுவதனை இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அதாவது, சொல்லாடல்கள் மூலமாக பால்நிலை அடையாளம்சார் விழிப்பு ஏற்படுவதற்கு முன்னதாகவே பால்நிலை அடையாளம்சார் தன்னுணர்வு ஏற்படுவதாக இவர்கள் வாதிடுகின்றனர்.

சமூகம் எவ்வாறு பால்நிலையை ஒழுங்குபடுத்துகிறது மற்றும் அதனைத் தொடர்ந்து மீளுருவாக்கம் (Reproduce) செய்து பேணுகிறது என்பதை மட்டுமே யூடித் பட்லர் விளக்குகிறார். மாறாக, சிலர் (திருநம்பி, திருநங்கை போன்றோர் மற்றும் பால்நிலைத் திரவத்தன்மை கொண்டோர்) தாங்கள் பிறப்பின்போது அடையாளப்படுத்தப்பட்ட பால்நிலையிலிருந்து ஏன் முற்றிலும் வேறுபட்ட பால்நிலை அடையாளத்தைத் தீவிரமாக உணர்கிறார்கள் என்பதற்கான உளவியல் அல்லது உள்ளார்ந்த காரணங்களை அவர் விவரிக்க வில்லை. பட்லரின் பால்நிலை நிகழ்த்துகைக் கோட்பாட்டின் மீது முன்வைக்கப்படும் மிக முக்கியமான விமர்சனங்களில் ஒன்றாக இந்த எல்லைப்பாடு அமைகின்றது.

ஒருவர் தன்னைக்குறித்து உணர்கின்ற பால்நிலை அடையாளம் (Gender identity) என்பது உளவியல் மற்றும் உயிரியல் ரீதியான காரணிகளின் கூட்டு விளைவாகக் கருதப்பட்டு, பட்லரின் இந்தக் கோட்பாட்டிற்கெதிரான விமர்சனமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. ஆனால், இவற்றில் எது உண்மை என அறுதியிட்டுக் கூறமுடியாத நிலையில், ஒரு விமர்சன பூர்வமான உரையாடல் மூலமாகவே இந்தக் கோட்பாடுகளை நாம் அணுகவேண்டியுள்ளது.

இப்போது பால்நிலை நிகழ்த்துகை என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். பட்லரைப் பொறுத்தவரை பால்நிலை என்பது சமூகத்தினால் கட்டமைக்கப்பட்டது (socially constructed), பால்நிலை என்பது ஒருவர் யாராக இருக்கிறார் என்பதைப் பற்றியதல்ல, மாறாக, அவர் எதைச் செய்கிறார் என்பதைப் பற்றியது. அதாவது, ஒருவர் என்ன மாதிரியான பால்நிலைசார் நியமங்களைப் பின்பற்றுகிறார், என்னமாதிரியான பால்நிலைப் பங்குபாத்திரங்களை வகிக்கின்றார் என்பதனூடாகவே அவரது பால்நிலை தினமும் மீளுருவாக்கம் செய்யப்படுவதன்மூலம், நிலையான பால்நிலை அடையாளமொன்று இருப்பதான தோற்றத்தினை ஏற்படுத்துகின்றது என பட்லர் கூறுகின்றார். உதாரணமாக, பிறப்பின்போது பெண்ணாக அடையாளப்படுத்தப்பட்ட ஒருவர், சொல்லாடல்களினூடாக தன்னைப் 'பெண்' எனும் பால்நிலையுடன் தொடர்புபடுத்தி உணர்வதுடன், வளரும்போது சமூகத்தில் பெண்பிள்ளைக்குரியதாகக் கருதப்படும் ஆடைகளைத் தினமும் அணிவதன்மூலமும், பெண்களுக்கான கலாசார அடையாளங்களை தரித்துக்கொள்வதன்மூலமும், பெண்களுக்கான குடும்பக் கடமைகள் என வகுக்கப்பட்டிருப்பவற்றினை செய்வதன்மூலமும், (தினமும் செய்யும் இச்செயற்பாடுகளினூடாக) பால்நிலை அடிப்படையில், அவர் ஒரு 'பெண்' என நாம் ஒரு நிலையான அடையாளத்தினை இனங்கண்டு கொள்ளக்கூடிய ஒரு தோற்றத்தினை உருவாக்குகின்றார் என்கின்றார். இது ஒருவரால் தன்னுணர்வுடன் தெரிந்தே (conscious ஆக) செய்யப்படுவதில்லை. மாறாக (unconcious ஆக) இயல்பான முறையில் தினமும் மேற் கொள்ளப்படுகின்றது.

பால்நிலைசார் வெளிப்பாடுகளை ஒருவர் மிகையாகவோ, குறைவாகவோ செய்வதன் மூலம் பால்நிலை, நிலையானது என்ற சிந்தனையினைக் கேள்விக்குட்படுத்த முடியும் எனவும், இது பால்நிலை சமூகத்தினால் உருவாக்கப்பட்டது என்பதனை வெளிப்படுத்துகின்றது எனவும் பட்லர் குறிப்பிடுகின்றார். அதாவது, சமையலறை பெண்களுக்குரிய இடமெனவும், கல்விக்கூடங்களும், வேலைத்தளங்களும் பெண்களுக்குரியவையல்ல எனக் கருதப்பட்ட காலமும் இருந்தது. பெண்கள் பால்நிலைசார் நியமங்களை ஏற்க மறுத்து கல்வியுரிமைக்காகப் போராடினார்கள். அதன் விளைவாக இன்று இலங்கையில் பெண்கள் மத்தியில் அதிகளவான எழுத்தறிவு வீதத்தினை காணக்கூடியதாக இருக்கின்றது. அது போல, பெண்கள் வாகனம் ஓட்டக்கூடாது, கலாசார ஆடைகளை அணியவேண்டும் என்ற கட்டுப்பாடுகள் நிலவின. ஆயினும், பெண்கள் அவற்றை ஏற்க மறுத்ததன் விளைவாக பன்மைத்துவமான ஆடைகளை அணிவதையும், வாகனங்களை ஓட்டுவதையும் தற்காலத்தில் காணமுடிகின்றது.

அந்தவகையில், பால்நிலை நிகழ்த்துகை என்பது பால்நிலை சமூகத்தில் எவ்வாறு மீளுருவாக்கம் செய்யப்பட்டு வருகின்றது, பேசப்படுகின்றது என்பவற்றினை விபரிக்கின்றதே தவிர, ஒருவரது பால்நிலை அடையாளம் எவ்வாறு அல்லது எப்போது தோற்றமடைகின்றது என்பதைப் போதியளவு விளக்கவில்லை என்ற விமர்சனம் முக்கியத்துவம் மிக்கதாக இருப்பதனைக் கருத்தில்கொள்ள வேண்டியுள்ளது.



siva.malathy@thaiveedu.com



# வேடுவர்களின் சடங்கு

தங்கேஸ்வரன் விக்னேஸ்வரன்

வேடுவர்களின் வழிபாட்டுச் சடங்குகளில் முதலாவதாக, வழிபாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுவது உத்தியாக்கள் வழிபாடாகும். இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அதாவது, இடைக்கற்காலம் தொடக்கம் இலங்கையில் வேடர் சமூகம் வாழ்ந்து வருகின்றது என்பதனை இலங்கை மானிடவியல் மற்றும் வரலாற்று ஆய்வுகள் தமது வரையறைக்கு எட்டியவரை எடுத்துக்காட்டி நிற்கின்றன. இலங்கையில் கிழக்குப்பக்கமாக திருகோணமலை தொடங்கி மட்டக்களப்பு, அம்பாறை வரை மிக நீண்டதான கரையோரத்துடன் அண்டியதாகக் கடலோர வேடர் குடிப்பரம்பலை இன்றும் வாழும் சாட்சிகளாகக் காணமுடிகிறது. கிழக்கிலங்கையின் இனக்கலப்பில் இன்னும் வேடப் பூர்வகுடிகளின் அடையாளங்கள் சடங்கார்ந்த நடவடிக்கைகள் ஊடாக வெளிக்கிளம்பியபடியே உள்ளன.

அவ்வகையில் வேடுவச்சடங்கானது எனது கிராமான களுவன்கேணியில் ஜூலை மாதங்களில் நடைபெறும். ஆறு வேடுவப்பந்தல்கள் எனது கிராமத்தில் உள்ளன. அதில் ஒன்றுதான் 'கிட்ணன்' என்பவரின் வேடுவப்பந்தல். இவரது சடங்கானது 12, 13, 14 ஆகிய மூன்று நாட்களில் நடைபெற்றது. எங்களது ஊரில் உள்ள வேடமார்கள், கப்புறாளைமார்களும் மக்களும் அதிதீவிரமாக பங்கேற்றனர். எங்களுக்கே உரித்தான அலங்காரங்கள் கொண்ட இலைகளாலும் மற்றும் இயற்கை தாவரங்களாலும் வேடுவர் தெய்வங்களின் பந்தல்கள் அலங்கரிக்கப்பட்டு இருந்தன.

முதலாவது நாளில் கதவுதிறத்தல் நிகழ்வு ஆரம்பமானது. இதில் உத்தியாக்கள் தெய்வங்கள் உரு ஆடி கதவு திறந்து வைத்தன. இறந்துபோன ஆத்மாக்கள் தெய்வங்களாக மாறி சடங்கு எவ்வாறுதான் நடைபெற வேண்டும், எந்த எந்த தெய்வங்கள் எவ்வாறான ஒழுங்கு முறையில் வரவேண்டும் என்ற அட்டவணையையும், மற்றும் மாறிக்கொண்டு போகின்ற விடயங்களையும் அதற்கான குணமாக்கல் விடயங்களையும் கூறிச் சென்றுவிடும். இந்த உத்தியாக்கள் வந்து உடம்பால் ஆடிய பிற்பாடுதான் மற்ற தெய்வமெல்லாம் வரும்.

இந்தா வெடியப்பா வடபலவயோ
நொதியம்பலோ ஆயியே...
நாயோ... நாகனமாய
கண்டா வெடியாப்பா கமகமற வனுவறை
ஏக் மந்த்ரயே ரயனமோ
ரயமைல் ஏ... கமந்த் வெல்லாயன்

வெல்லம்பாள வெரிகடிகத்தோ
உலட சாயடை உன்னும் பாணன்
கட்டாங்கரியோ ஓ...
கமர்தரயோ தயங்...

(பாடல்)

prasadbatti@gmail.com

இதன் பிறகு பனுவள சீயா, பனிக்கர் களுவர், குடல்புரி ஆட்சி, ரெட்டையர், பால்குடியா சியா, முட மாரி, களுக்கொட்டா, இங்குலு கொட்டா, உக்குளுமா சீயா என்று உத்தியாக்கள் வருவார்கள்.

ஆதிகாலம் தொட்டு இன்றுவரைக்கும் வேடுவர்களின் வழிபாடானது பெண்மயப்பட்டதாக, வழிபாட்டு முறைகளில் பெண்களின் ஆதிக்கம் மிக அதிகமாகக் காணப்படுவதாகவே உள்ளது. முன்னோர்களின் வழிபாட்டில் இருந்து அடுத்தபடியாக வேடர்கள் மாறிக்கொண்ட வழிபாடானது பெண் தெய்வங்களை மையப்படுத்தியே நிகழ்ந்துள்ளமையை வரலாற்றின் நெடுகிலும் கண்டறிந்து கொள்ள முடியும்.

அவ்வகையில் முதலாவது நாளில் உத்தியாக்களுக்கு அடுத்த கட்டமாக பிரதான தெய்வமாக தெய்ய நாச்சி, அந்தன் குமாரி, மொக்காட்டுத் தெய்வம், மாநீலி, குடா நீலி, கிரியம்மா, பூச்சாண்டி மற்றும் பிற்காலத்தில் வந்து சேர்ந்த கண்ணகி பேத்தினி தெய்யோ ஆகிய தெய் வங்கள் ஆடி முதலாவது நாளை இரவு எட்டு மணியளவில் நிறைவு செய்தன.

12-ஆம் திகதி இரண்டாவது நாளாக பூசையானது மாலை 6.00 மணியளவில் ஆரம்பமானது. இன்று முக்கியமாக கப்பல் தெய்வம், கரடித்தெய்வம் போன்ற தெய்வங்களுக்கான மரம் நாட்டும் சடங்காக காணப்பட்டது. அதாவது கப்புறாளை உரு ஆடி காட்டிற்குச் சென்று 20 அடி உயரமான ஒரு மரத்தினை தெரிவு செய்வார். அதனை வெட்ட வேண்டும், மற்றுமொரு கரடி வடிவில் இருக்கும் மரத்தினையும் வெட்ட வேண்டும். பின்பு ஆலயம் வந்து அதற்கு பூஜை செய்து ஆலய நடுப் பகுதியில் நட்டனர்.

கப்பல் தெய்வம் என்பது போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்ட காலத்தில் கடல் கடந்த பேய்களாக அவர்களின் வருகை காணப் பட்டது. அந்தவகையில் களுவன்கேணி ஒரு குடாவாகக் காணப்பட்டது. அவர்கள் களுவன்கேணி கடற்கரை வந்த நேரம் அவர்களுக்கும் களு வன்கேணி வேடர்களுக்கும் ஒரு நெருங்கிய உறவு காணப்பட்டது. வேடர்களை அவர்கள் ஒன்றும் செய்யவில்லை, ஆகையால் அவர்களை நினைவு கூரும் வகையில் அதே போல் கரடித்தெய்வமும் வேட்டையாடல் குணங்களில் காட்சிகள், தேன் எடுக்கும் காட்சிகள் என்பவற்றை பிரதிபலிக்கும் வகையில் இச்சடங்கு நடத்தப்படு கின்றது.

இரண்டாவது நாளில் நெல்லுக்குத்தல் நிகழ்வும் நடைபெற்றது. இது பெண் தெய்வங்களுக்காகவும் படையல் சாதங்களுக்காகவும் பெண்கள் சேர்ந்து மரத்தாலான உரலில் நெல்லைக் குத்தினர். இது ஒரு பழைய பண்பாடாகும். இவரது பந்தல் தமிழ் தையல் தெய்வங்க ளுக்குரிய கோயில்களையும் அதனோடு சேர்ந்து வழிபட்டு வருபவர். அந்தவகையில் மாரியம்மன், பேச்சியம்மன், காளியம்மன், தில் லைக்காளி, வைரவர், பெரியசாமி போன்ற தெய்வ வழிபாடுகளும் இங்கு உள்ளன. கன்னிமார்களை தெரிவு செய்யும் முறையும் இரண்டாவது நாளில் நடைபெற்றது. இன்றைய சடங்கானது இரவு 12 மணி வரை நடை பெற்றது.

மூன்றாவது நாள் சடங்கானது காலை 8.00 மணியளவில் ஆரம்பமானது. கப்புறாளையும் அவரை ஆட்டும் பூசகரும் உறுப்பினர்களும் பரபரப்பாக வேலைகளில் ஈடுபட்டுத் திரிந்தனர். பொங்கல் பானைகள் ஒவ்வொரு பந் தல்கள் முன்பு காணப்பட்டது. பந்தல்களும் மரம், செடி, கொடிகள் மூலம் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. எனக்குப் பிடித்த பந்தலாக 'குமாரர் பந்தல்' காணப்பட்டது. இரண்டு நாட்களும் இரவில் சடங்கு நடைபெற் றதால் அதிகமான விடயங்களைப் பார்ப்பதற்கு சிரமமாக இருந்தது. ஆனால் இன்று பகலில் சடங்கு நடக்கப் போவதை நினைத்து சந்தோசப் பட்டேன்.

> “ஆதிகாலம் தொட்டு இன்றுவரைக்கும் வேடுவர்களின் வழிபாடானது பெண்மயப்பட்டதாக, வழிபாட்டு முறைகளில் பெண்களின் ஆதிக்கம் மிக அதிகமாகக் காணப்படுவதாகவே உள்ளது”





முதலாவதாக பிரதான பந்தலில் இருந்து ஆடுவதற்கு கப்புறாளை தயாரானார். காலில் சிலம்புகளுடன் இடுப்பில் சீத்தை துணியுடன் முதலாவது பத்தினி தெய்வம் ஆடியது. ஆடிய பின் ஒவ்வொரு தெய்வங்கள் தொடர்ந்து வரும். உதாரணத்திற்கு செம்பகநாச்சிக்கு தென்னங்குருத்தில் வளையம் செய்து கழுத்திலிருந்து வலது கைக்குள்ளாலும் மற்றையது இடது கைக்குள்ளாலும் போடவேண்டும். இதுதான் அத்தெய்வத்தின் அடையாளம். அதன் பிற்பாடு இன்னொரு தெய்வம் வரும். அதற்கு தென்னங்குருத்தால் 'சாமரம்' போன்று செய்து கையில் கொடுக்க வேண்டும். இது அத்தெய்வத்தின் அடையாளம். இவ்வாறு ஒவ்வொரு தெய்வத்திற்கும் வெவ் வேறு அடையாளங்கள் காணப்படுகின்றன.

அதன் பின்பு 'அக்கரப்பத்தான்' எனும் தெய்வத்திற்கு தனிப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. சிறு வளைந்த கம்பில் அம்பும் வில்லும் செய்து காட்சிப்படுத்தப்பட்டு இருந்தன. இதற்கு தெய்வம் ஆகும் போது அதிகமான மக்கள் அதிக நேர்த்திக்கடன்களைக் கொண்டு வந்து இருந்தனர். என்னைப் பொறுத்தவரையில் அது நேர்த்திக்கடன் போல் தெரியவில்லை. குறிப்பாக தமிழ் கடவுளர்களுக்கு பைரவர், காளியம்மன் போன்ற தெய்வங்களுக்கு ஆடு, சேவல் போன்றன கொடுப்பது போல் இல்லை. இது ஒரு பரிசுப் பொருளாகவே நான் உணர்கிறேன். பல அலங்கார வர்ணங் களைக் கொண்ட சீத்தைத் துணிகள், முத்து மாலைகள், கல் பதித்த மோதிரங்கள் என்பனவாகும்.

அவ்வேடுவத் தெய்வமானவர் பந்தலின் முன்பு மரத்திலான உரலின் மீது அமர்ந்து இருந்தார் (தெய்வமாடும் கப்பு றாளை). அவரைச் சூழ மக்கள் அமர்ந்து இருந்தனர். ஒவ் வொருவராக துணியைத் தலை மேல் மொக்காடு போல் போர்த்திப் பின்னர் மாலைகள், மோதிரங்களையும் போட்டு விட்டனர். அவர்களுக்கு தீர்த்தம், பிரசாதம் ஊட்டிவிட்டு நோய் குணமாக்கல் செயற்பாடுகளும் நடைபெற்றன. இவ்வாறு மக்களுடன் பேசிய பிற்பாடு மரத்தடியினால் செய்து வைத்த அம்பு வில்லை எடுத்து ஆலய வளாக நான்கு பகுதிகளிலும் வானைப் பார்த்தவாறு வைக்கப் பட்டது. இவ்வாறு 30 நிமிடங்கள் இவ்ஆற்றுகை இடம்பெற்றது.

அடுத்தபடியாக மாரி யம்மன், பேச்சியம்மன், காளியம்மன் போன்ற தெய்வங்கள் ஆடுவதற்காக வேறு ஒருவர் காணப்பட்டார். இது ஒரு பக்கமாக நடந்துகொண்டு இருந்தது. 'கிட்ணன்' எனும் கப்புறாளை தான் வேட தெய்வங்களை ஆடுபவராக காணப் பட்டார். இவர் 'அக்கரப்பத்தான்' தெய்வம் ஆடிய பிற்பாடு 'குமாரர்' எனும் வேடத்தெய்வம் ஆடுவதற்குத் தயாராகினார். சீத்தைத் துணியோடும் மார்புக்குச் சங்கிலி போன்ற வடிவம் அணிந்தும் தலைப்பாகையோடு பிரதான பந்தலில் இருந்து ஆடி குமாரர் பந்தல் நோக்கி நகர்ந்து வந்தார். கையில் வேலும் வைத்திருந்தார். இவ்வழிபாட்டு முறையானது ஆதியில் களுவன்கேணியில் இருந்தே ஏனைய இடங்களான தளவாய், கிரான், இலுக்கு, சித்தாண்டி, கறுவப்பங்கேணி முதலிய இடங்களுக்குப் பரவியுள்ளமையினை ஆய்வின் ஊடாக அறியமுடிகின்றது. குமாரர் தெய்வங்களில் பல வகைகள் காணப்படுகின்றன. அவை செல்லக்குமாரர், வீரக் குமாரர், காலிக்குமாரர், கொழும்புக்குமாரர், கண்டிக்குமாரர், சங்கிலிக்குமாரர், முத்துக்குமாரர், வதனற்குமாரர், புள்ளிங்கு மாரர், பொல்லுக்குமாரர், ஆதிக்குமாரர் முதலிய குமாரர் கலைகள் ஆகும். அதிக நேரம் தெய்வம் ஆடியவராக குமாரர் காணப்பட்டார். கொட்டுப் பறை இசையுடன் மக்களின் கவலைகளைத் தீர்த்து வைப்பவராக அன்றைய தினம் காணப்பட்டார். இதன் பிற்பாடு இறுதியாக சடங் கானது உத்தியாக்களில் வந்து நின்றது. சந்தோசமாக இந்த வருட சடங்கை உத்தியாக்கள் ஏற்றுக் கொண்டார்கள். வேடுவ கோயில்களை வைத்திருக்கும் பூசாரிமார்களுக்கும், கொட்டுப்பறை வாசித்து பாட்டுப் படிப்பவர்களுக்கும் கொடுத்தும் அன்போடு அவர்களை அரவணைத்து இந்த வருடம் 'கிட்ணன்' என்பவரின் சடங்கானது இரவு 7.30 மணிய ளவில் இனிதே நிறைவு பெற்றது.

thangeswaran.vigneswaran@thaiveedu.com



prasadbatti@gmail.com

3

சொர்ணவேல்

# சிலந்தியும்சதுரங்கமும்

## இங்மார் பெர்க்மேனின் மௌன முத்தொகுதியும் ஏழாம் முத்திரையும்

**முன்னுரை:**
**மந்திர விளக்கும் தேவாலயச் சுவரும்:**

ஒரு நூறு ஈயச் சிப்பாய்களைக் கொடுத்து, சிறுவன் இங்மார் தன் அண்ணனிடமிருந்து ஒரு மந்திர விளக்கை வாங்கிக்கொள்கிறான். புகைபோக்கியும் சிம்னிக் குழாயும் நடுவே ஒரு விளக்கும் கொண்ட தகரப் பெட்டி அது. அதற்குள் ஓர் ஒளி; அந்த ஒளிக்கு முன்னால் ஒரு படச் சுருள்; அந்தச் சுருளுக்கு முன்னால் இருள். இரவில், அல மாரிக்குள் அமர்ந்து, அவன் அதைச் சுவரில் ஓட்டிப் பார்க் கிறான் (Bergman 1988). ஐம்பது ஆண்டுகள் கழித்தும் அவரது சினிமா இதே அமைப்பைத்தான் கொண்டிருக்கும்: ஓர் இருண்ட அறை, ஓர் ஒளிமூலம், ஒரு சுவர், மற்றும் அந்தச் சுவரில் விழுந்து அசையும் ஒரு முகம்.

இன்னொரு சுவரும் அந்தச் சிறுவனுக்கு உண்டு. உப்சா லாவின் லூத்தரன் பாதிரியாரான தந்தை எரிக் பெர்க்மேன், உப்லாந்து மாவட்டத்தின் சிற்றூர்த் தேவாலயங்களுக்குப் பிரசங்கம் செய்யப் புறப்படும் ஞாயிறுகளில், மகனையும் அழைத்துச் செல்கிறார். தந்தை மறையுரை நிகழ்த்தும் நேரமெல்லாம் மகன் சுவர்களைப் பார்த்துக்கொண்டிருக் கிறான் - நடுக்காலத்தின் சுண்ணச் சுவரோவியங்கள்; அறு வடையும், கொள்ளை நோயும், நரகமும், சூனியக்காரி களும், மரணமும் நிரம்பிய சுவர்கள்; எல்லாவற்றையும் ஒரே தளத்தில், ஒரே ஒளியில், ஒரே கருணையின்மையில் வரிசைப்படுத்தி வைத்திருக்கும் ஓவியங்கள் (Bergman 1960; Steene 2005). ஒரு சுவரில் ஒளி; இன்னொரு சுவரில் இறையியல். பெர்க்மனின் திரைப்படக் கலை இந்த இரண்டு சுவர்களுக்கும் இடையே நிகழும் ஒரு நீண்ட உரை யாடல்தான். இக்கட்டுரையின் வாதம் எளிமையானது, ஆனால் அதன் விளைவுகள் எளிமையானவை அல்ல: பெர்க்மேன் இறையியலை ஒளியியலாக மாற்றினார். கடவுள் உண்டா இல்லையா என்பதை அவர் விவாதிக்கவில்லை; மாறாக, ஒரு முகம் பதிலுக்குக் காத்திருக்கும் அவலநிலையை அவர் படமாக்கினார். அவரிடம் மௌனம் என்பது ஒரு தத்துவப் பிரச்சினை அல்ல, அது ஒலிக்கோப்பின் பிரச்சினை. அருள் என்பது ஒரு கோட்பாடு அல்ல, அது ஒளியமைப்பின் பிரச்சினை. ஐயம் என்பது ஒரு மனநிலை அல்ல, அது கால அளவின் பிரச்சினை - ஓர் அணுக்கக்காட்சியை (close-up) எத்தனை வினாடிகள் தாங்கிப்பிடிக்கிறோம் என்பதில் தீர்மானமாகும் ஒன்று. பற்றுறுதியின் நெருக்கடியை ஒரு தொழில் நுட்பப் பிரச்சினையாக மாற்றியதுதான் பெர்க்மனின் தனித்துவம்; அதனால்தான் அவரது படங்கள் காலத்தைக் கடந்து நீண்ட ஆயுளைப் பெற்றுவிட்டன.

இக்கட்டுரை நான்கு படங்களை ஒரே வாக்கியமாக வாசிக்க முயல்கிறது: Såsomienspegel (Through a Glass Darkly / ஒரு கண்ணாடியில் காண்பது போல,1961), Natt-vardsgästerna (Winter Light / குளிர்கால வெளிச்சம், 1963), Tystnaden (The Silence / மௌனம் / அமைதி, 1963) - பொதுவாக 'நம்பிக்கை முத்தொகுதி' அல்லது 'கட வுளின் மௌனம்' முத்தொகுதி என்று அழைக்கப்படும் மூன்று அறைநாடகங்கள். மற்றும் அவற்றுக்கு ஆறு ஆண்டுகள் முந்திய Det sjundeinseglet (Seventh Seal / ஏழாம் முத்திரை, 1957). ஏழாம் முத்திரை எனும் நடுக்கால உருவகம், காலவரிசைப்படி முத்தொகுதிக்கு முன் நிற்கும் இப்படம், தர்க்கவரிசைப்படி அதற்குப் பின் நிற்கிறது; ஏனெனில் முத்தொகுதி பதிலின்மையைப் பற்றியது, ஏழாம் முத்திரை ஒரு பதிலைப் பற்றியது - ஏழாம் முத்திரையில் மரணம் பேசுகிறது, பின்னர் வந்த முத்தொகுப்பில்தான் கடவுள் பேசவில்லை. 1957-இல் மரணத்துடன் சதுரங்கம் ஆடமுடிந்தது; 1963-இல் ஆட ஒரு எதிராளியும் இல்லை. இந்த இழப்பின் வரலாறே இந்த நான்கு படங்கள்.

## ஒரு முறையியல் குறிப்பு:

பெர்க்மனை இருத்தலியலின் (Existentialism) வழக்கமான கலைச்சொற்களைக் கொண்டு வாசிப்பதே மேலைமரபின் வழக்கம் - கீர்கேகார்ட், சார்த்தர், 'இறைவனின் மரணம்' என்றெல்லாம். அச்சொற்கள் தவறானவை அல்ல, ஆனால் அவை மட்டுமே போதுமானவையும் அல்ல.



ஏனெனில், இல்லாமையையும், பிரிவுத்துயரையும், இறைவனின் உறைந்துபோன பதிலின்மையையும் பற்றிப் பேசுவதற்கான மிக நுட்பமான, தொன்மையான ஓர் இலக்கணம் தமிழ் மரபிற்கு உண்டு:

- சங்க அகத்திணை கற்றுத்தரும் பிரிவின் பெருவெளி;
- ஆழ்வார் மரபில் 'நீ எங்கே?' என இருளைப் பிளந்து எழும் ஆன்மாவின் கதறல்;
- நிலையாமையின் கரங்களை ஒவ்வொன்றாகப் பட்டியலிட்டுச் செல்லும் அறவிலக்கியத்தின் காலத் தாளம்.

பெர்க்மனை இந்தத் தமிழ் மரபின் அருகில் நிறுத்துவது, மேலைத்தேயக் கலைஞர் ஒருவரை நம் எல்லைக்குள் வசப்படுத்தும் எளிய முயற்சியன்று. மாறாக, அவரது திரைப்படங்களில் இடைவிடாது ஒலிக்கும் ஒரு குறிப்பிட்ட அலைவரிசையை - காதலனும் கடவுளும் ஒரே மௌனத்தால் துலக்கப்படும் அந்த ஆழமான அலைவரிசையை - கண்டடைவதற்கும் கேட்பதற்குமான ஒரு நுட்பமான தத்துவக் கருவியைத் தேடும் முயற்சியே இது.

## முத்தொகுதி என்னும் கட்டுமானம்:

1963-இல் மூன்று திரைக்கதைகளையும் ஒரு தொகுதியாக வெளியிட்டபோது, பெர்க்மேன் ஒரே பக்கத்தில் ஒரு குறிப்பை எழுதினார். இம்மூன்று படங்களின் கருப்பொருள் 'சுருக்கம்' (reduction) என்றார்: Through a Glass Darkly - கைவரப்பெற்ற நிச்சயம்; Winter Light - முகமூடி களையப்பட்ட நிச்சயம்; The Silence - கடவுளின் மௌனம், எதிர்மறை முத்திரை. ஆகவே இவை ஒரு முத்தொகுதி என்றார் (Bergman 1967). முப்பது ஆண்டுகள் கழித்து, Images நூலில், அவர் இதே கட்டுமானத்தை மறுத்தார்: முத்தொகுதி எனும் கருத்து பின்னிரவில் இட்டுக்கட்டப்பட்ட ஒரு நியாயப்படுத்தல், படைப்பூக்கத்தின் மேல் பின்னால் போர்த்தப்பட்ட ஒரு ஒழுங்கு என்பது போன்ற தொனியில் அவர் அதை ஒதுக்கித் தள்ளினார் (Bergman 1994; Steene 2005).

இந்த மறுப்பையே நாம் ஒரு தடயமாக எடுத்துக் கொள்ள வேண்டும். முத்தொகுதி என்பது பெர்க்மேன் திட்டமிட்டுத் தீட்டிய திட்டம் அல்ல; அது தன் படங்களின் முதல் வாசகராகத் தானே அமர்ந்து அவர் எழுதிய ஒரு வாசிப்பு. பின்னர் அந்த வாசிப்பை அவரே திரும்பப் பெற்றார். ஆகவே 'நம்பிக்கை முத்தொகுதி' என்பது ஒரு படைப்பு அல்ல, ஒரு விமர்சனச் செயல் - படங்களுக்கு வெளியே நின்று அவை ஒரு வளைவை உருவாக்குகின்றன என்று சொல்லும் செயல். இக்கட்டுரையும் அதே செயலைத்தான் செய்கிறது, ஆனால் அதன் தற்காலிகத் தன்மையை மறைக்காமல்.

வடிவத்தில் நிகழ்ந்த மாற்றம் மறுக்க முடியாதது. 1950-களின் பெர்க்மேன் கூட்டங்களை நேசித்தார்: நடுக்கால ஊர்வலங்கள், நாடகக் கூடாரங்கள், மந்திர வாதிகள், உருவகங்கள். 1960-களின் தொடக்கத்தில் அவர் ஸ்ட்ரிண்ட்பர்க்கின் 'அறைநாடகம்' (kammarspel) எனும் வடிவத்திற்குத் திரும்பினார் - நான்கு அல்லது ஐந்து பாத்திரங்கள், ஒரே இடம், கிட்டத்தட்ட நிகழ்நேரத்தில் வெளிச்சம் மாறும் அளவுக்கே கதை நகரும் இறுக்கம் இருக்கும் (Törnqvist 1995; Wood 2013). இது கருத்தளவில் ஒரு துறத்தலைக் குறிக்கிறது: உருவகத்தை விட்டுவிட்டு



அறைக்குள் வருதல்; மரணத்தை ஒரு பாத்திரமாக நடிக்க வைக்காமல், மரணத்தையே ஓர் அறையின் காற்றாக மாற்றுதல்.

இந்தத் துறத்தலின் மற்றொரு பெயர் ஸ்வென்நிக்விஸ்ட் (Sven Nykvist). Såsomienspegel Through a Glass Darkly / ஒரு கண்ணாடியில் காண்பது உட்பட முத்தொகுப்பில்

பெர்க்மனின் ஒளிப்பதிவாளராக அமைந்தவர். அவர்களது கூட்டுழைப்பில் ஒளி ஓர் அலங்காரமாக இருப்பதை நிறுத்தி விட்டு ஒரு நெறிமுறையாக மாறியது. Nattvardsgästerna / Winter Light / குளிர்கால வெளிச்சத்திற்கான ஒளியைத் தேடி தேவாலயங்களுக்குள் நாள் முழுதும் அமர்ந்து, வானிலை மாறும்போது சுவரில் விழும் சாம்பல் நிறம் எப்படி



நகர்கிறது என்று அவதானித்ததை பெர்க்மேன் நினைவு கூர்கிறார் (Bergman 1994). அது ஒரு நடைமுறைப் பயிற்சி மட்டுமல்ல; அது ஒரு இறையியல் ஆய்வு. வானிலை மாறும் போது ஒரு தேவாலயத்தின் உள்ளே நிகழ்வது என்ன? ஒன்றுமில்லை. அந்த 'ஒன்றுமில்லை'யைத் துல்லியமாகப் பட மாக்குவதுதான் முத்தொகுதியின் திட்டம்.

## கண்ணாடி வழியே, இருளாக: S˚somienspegel (1961):

இத்தலைப்பு அபோஸ்தலனாகிய பவுலின் வரிகளிலி ருந்து பெறப்பட்டது:'இப்போது நாம் கண்ணாடி வழியே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்போது முகமுக மாய்ப் பார்ப்போம்' (1 கொரிந்தியர் 13:12).

ஆங்கிலத் தலைப்பு (Through a Glass Darkly) அந்த இருளை (darkly) முதன்மைப்படுத்துகிறது; ஸ்வீடிஷ் மூலத் தலைப்போ கண்ணாடியை (spegel) முதன் மைப்படுத்துகிறது.

மொழிபெயர்ப்பில் ஏற்படும் இந்தச் சிறு இடைவெ ளிதான் படத்தின் மையப்பொருளும்கூட.

பிரச்சினை இருளிலா, அல்லது கண்ணாடியிலா? மனிதப் பார்வையின் குறையா, அல்லது பிம்பத்தின் வஞ்சகமா?

இவ்வரி, மனிதரின் அரைகுறைப் புரிதலுக்கும் முழுமையான உண்மைக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிக்கும் ஒரு தத்துவார்த்தக் குறியீடாகும். பைபிளின் சூழலில், நாம் வாழும் இவ்வுலகில் இறைவனையும் வாழ்க் கையின் மெய்யியலையும் மங்கலான கண்ணாடி பிம் பத்தைப் போல அரைகுறையாகவே உணர்கிறோம் என்றும், இறைவனை அடையும் ஆன்மீக நிறைவு நிலையிலேயே உண்மையை எவ்வித மறைப்புமின்றி நேரடி யாகக் ('முகமுகமாக') காண முடியும் என்றும் பவுல் விளக் குகிறார். பெர்க்மேனின் திரைப்படச் சூழலிலோ இது மனித உறவுகளின் சிக்கலை உணர்த்துகிறது; நாம் மற்றவர்களை அவர்களின் உண்மையான இயல்பில் பார்க்காமல், நமது சொந்த மனப்பிரமைகளின் பிரதிபலிப்பாகவே பார்க் கிறோம். இந்த சுயநலமும் சந்தேகமும் நீங்கி, அன்பின் வழியே மனிதர் தெளிவடையும் கணத் தில்தான் அந்த 'முக முகமான' உண்மைத் தரிசனம் சாத்தியமாகிறது என்பதை இந்தத் தலைப்பு சுட்டு கிறது.

ஃபாரோ தீவின் ஒரு கோடைகாலம்; நான்கு மனி தர்கள் மட்டுமே உள்ளனர். மனநல மருத்துவமனையி லிருந்து மீண்டுவந்த கரின் (ஹாரியட் ஆண்டர்சன்); அவளது தந்தையும் நாவலாசிரியருமான டேவிட் (குன்னர் ஜோர்ன்ஸ்ட்ராண்ட்); கணவனும் மருத்துவ ருமான மார்ட்டின் (மாக்ஸ் வான் சிடோவ்); பதினேழு வயதான தம்பி மைனஸ் (லார்ஸ்பாஸ்கார்ட்). அமைதி யான கடல், பழுதடைந்த ஒரு படகு, ஒரு மரவீடு, இருபத்து நான்கு மணிநேரம் - இவற்றைத் தவிர வேறெதுவும் அங்கில்லை.

மைனஸும் கரினும் தந்தைக்காக ஒரு சிறு நாடகத்தை நடித்துக் காட்டுகிறார்கள். இறந்துபோன ஒரு கலைஞரும் அவனை அழைக்கும் ஒரு இளவரசியும் வரும் அந்த எள்ளல் நாடகம், உண்மையில் தந்தைக்கு எதிராக ஒரு மகன் வாசிக்கும் குற்றப்பத்திரிகை.




படத்தின் அறவியல் மையம் அதற்குப் பின்னர்தான் வருகிறது. கரின் தன் தந்தையின் நாட்குறிப்பைத் திறந்து வாசிக்கிறாள். தன் மகளின் நோய் குணமாகாது என்று மருத்துவர்கள் கூறியதை அவர் அதில் பதிவு செய்திருக் கிறார். அதற்குக் கீழே, அந்த நோயின் போக்கை ஒரு எழுத் தாளனாகத் தீவிர ஆர்வத்தோடு கவனிக்கும் தன் சொந்த மிருகத்தனத்தைக் கண்டு அவரே அஞ்சுகிறார். மகளின் துயரத்தையும் அவர் தன் எழுத்துக்கான மூலப்பொரு ளாகவே பார்க்கிறார்.

கலைஞரின் கண் ஒரு கழுகின் கண் என்பதை பெர்க்மேன் தன் சொந்தக் கன்னத்தில் அறைந்து ஒப்புக்கொள்கிறார். தன் மகளை நோயின் ஆழத்தில் மூழ்கவிட்டு, குறிப்பேடும் கையுமாகக் காத்திருக்கும் இந்தத் தந்தையே, பெர்க்மனின் படைப்பு வாழ்விலேயே மிக நேர்மையான தன்வரைபடமாக (Self-portrait) அமைகிறது.



மேல்மாடி அறையின் சுவர்க் காகிதத்தில் ஒரு பிளவு. அந்தப் பிளவுக்குப் பின்னிருந்து குரல்கள் கேட்கின்றன. கரின் அங்கே சென்று காத்திருக்கிறாள்; ஒரு கதவு திறக்கும், கடவுள் வெளியே வருவார் என நம்புகிறாள். இறுதியில் கதவு திறக்கிறது - வெளியே தரையிறங்கும் மருத்துவ ஹெலிகாப்டரின் இறக்கைச் சத்தமாக, சுவரின் அதிர்வாக, வெளிச்சத்தின் பிளவாக. அவள் தான் கண்ட தரிசனத்தைச் சொல்கிறாள்: கடவுள் ஒரு சிலந்தியாக வந்தார்; அவளை நோக்கி நகர்ந்து, முகத்தில் ஏறினார்; அவரது முகம் ஒரு சிலந்தியின் முகம்.

சினிமா வரலாற்றின் மிக அச்சமூட்டும் இறையியல் புதுமைகளில் ஒன்று இது. இது நாத்திகம் அல்ல; கடவுள் இல்லை என்பது கரினின் தரிசனம் அல்ல. மாறாக, கடவுள் இருக்கிறார், அவர் நம்மை உற்று நோக்குகிறார், ஆனால் அன்பு செய்யவில்லை என்பதே அது. கவனமும் அன்பும் துண்டிக்கப்பட்ட ஒரு பிரபஞ்சம் அது. சிலந்தி என்பது அதற்கு மிகத் துல்லியமான உருவகம்: வலையின் நடுவே அமர்ந்து, சிறு அசைவையும் உணர்ந்து, இரையை நோக்கி நெருங்கி வரும் ஓர் உயிரி; அதற்குப் பார்வையுண்டு, ஆனால் கருணையோ அன்போ இல்லை.

இங்கே இந்தியத் திரைப் பார்வையின் மரபு (Darshan) பெர்க்மனுக்கு முற்றிலும் ஓர் எதிர்முனையாக நிற்கிறது. தரிசனம் என்பது பார்ப்பதும் பார்க்கப்படுவதும் ஆகும்; பக்தன் தெய்வத்தை நோக்குகிறான், தெய்வம் அவனைத் திரும்ப நோக்குகிறது, அந்த எதிர்ப் பார்வையே அருளாக மாறுகிறது (Eck 1998). இந்தியத் திரைப்படங்களின் நேர்முகக் காட்சி அமைப்பு - கேமராவை நேராகப் பார்க்கும் தெய்வம், பார்வையாளரை நோக்கிச் சுழலும் திரு வுருவம் - இந்த எதிர்ப் பார்வையின் தொழினுட்பப் பதிப்பு (Vasudevan 2010; Kapur 1993).

ஆனால், கரினின் சிலந்திக் கடவுள் அதே அமைப்பின் தலைகீழ் வடிவம். அங்கேயும் எதிர்ப் பார்வை இருக்கிறது; ஆனால் அது அருளாக இல்லாமல், உடலையும் மனதையும் ஊடுருவும் தாக்குதலாக இருக்கிறது. தரிசனம் நிகழ்கிறது, ஆனால் அது பேரச்சத்தைத் தருகிறது. பெர்க்மனின் புகழ்பெற்ற 'க்ளோஸ்-அப்' (Close-up) காட்சிகள் இந்தத் தலைகீழ் அமைப்பின் மீதே கட்டப்பட்டவை: அதாவது, 'பார்க்கப்படுவதன் திகில்'.

படத்தின் ஒரே இசை, பாஹ் (Bach) இசையமைத்த' இரண்டாம் செலோ சூட்'டின் (Second Cello Suite) சரபந்த் (Sarabande) பகுதி மட்டுமே. அடிப்படையில் அது ஒரு நடன வடிவம் - ஆனால் மிக மெதுவான, கனமான அந்த நடனம், இங்கே ஒரு புலம்பலாகப் பயன்படுத்தப்படுகிறது. சொற்களும் மொழியும் தோற் றுப்போகும் இடத்தில் இசை மட்டுமே எஞ்சுகிறது; இது பெர்க்மனின் மூன்று திரைப்படத் தொகுப்பிலும் (Faith Trilogy) தொடரும் ஒரு கொள்கை.

இறுதிக் காட்சியில் டேவிட் தன் மகன் மைனஸிடம், 'அன்பே கடவுள்' என்பதற்கான சான்றுகளைப் பற்றிப் பேசுகிறார். கரின் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுகிறாள். மைனஸ் திகைத்து நின்று, 'அப்பா என்னுடன் பேசினார்!' என்று சொல்கிறான். இந்த முடிவு பல விமர்சகர்களுக்கு ஏற் புடையதாக இல்லை; இது தகுதியின்றிப் பெறப்பட்ட ஒரு தற்காலிக ஆறுதல் (unearned solace), படத்தின் இரும்பு போன்ற ஆன்மீகத் தர்க்கத்தின் மேல் பலவந்தமாக ஒட்டப்



பட்ட ஒரு மென்மை என்றே வாசிக்கப்பட்டது (Wood 2013; Gado 1986). அந்த விமர்சனம் நியாயமானதுதான்.

ஆனால், மைனஸின் அந்த வாக்கியத்தில் 'கடவுள்' என்ற சொல்லே இல்லை என்பதைக் கவனிக்க வேண்டும். 'அப்பா பேசினார்' - அதுதான் அவனுக்கு நிகழ்ந்த பேரற்புதம். ஒரு மகனிடம் தந்தை பேசுவது; பெர்க்மனின் உலகில்

இதைவிடப் பெரிய தெய்வத் தோற்றம் (Theophany) வேறெதுவுமில்லை.

அடுத்த படம் (Nattvardsgästerna / Winter Light) இந்த வாக்கியத்தை நேர்மாறாகத் திருப்பிப் பரிசோதிக்கும்: ஒருவேளை தந்தை பேசாமல் மௌனமாக இருந்தால் என்ன ஆகும்?



## திருவிருந்தின் விருந்தினர்கள்: Nattvardsg¨sterna (1963):

ஸ்வீடிஷ் மூலத் தலைப்பின் பொருள் 'திருவிருந்தின் விருந்தினர்கள்' - Guests of the Holy Communion / நற்கருணை பெறக்காத்திருப்பவர்கள். இதன் ஆங்கிலத் தலைப்போ Winter Light (குளிர்கால வெளிச்சம்). ஒன்று மனிதர்களைப் பெயரிடுகிறது; மற்றொன்று ஒளியைப் பெயரிடுகிறது. மொழிபெயர்ப்பு என்பது எப்போதும் ஒரு விமர்சனமும்கூட; இந்த வழக்கில் அது படத்தின் இரு பாதிகளையும் சரியாகப் பிரித்துக்காட்டுகிறது. காத்திருக்கும் மனிதர்கள், அவர்கள் மேல் விழும் ஒளி - இரண்டைத் தவிர இப்படத்தில் வேறொன்றுமில்லை.

படத்தின் அமைப்பு ஒரு வழிபாட்டுச் சடங்கின் அமைப்பைக் கொண்டது. நண்பகல்: மிட்சுந்தா தேவாலயத்தில் தோமஸ் எரிக்சன் (குன்னர் ஜோர்ன்ஸ்ட்ராண்ட்) நற்கருணை வழிபாட்டை நடத்துகிறார். மொத்தமே ஏழு பேர். பிற்பகல் மூன்று மணி: அடுத்த ஊரின் தேவாலயத்தில் அடுத்த வழிபாடு. இடையில் வெறும் மூன்று மணி நேரம்.

நண்பகலிலிருந்து மூன்று மணி வரை - கொல்கொதா மலையின் மேல் இருள் கவிந்திருந்த அதே மூன்று மணி நேரம் (மத்தேயு 27:45). பெர்க்மேன் இதை நேரடியாகச் சொல்லவில்லை; அவர் வெறுமனே கடிகாரத்தை அங்கே வைத்துவிட்டு நகர்ந்துவிடுகிறார்.

தோமஸுக்குக் காய்ச்சல். மனைவி இறந்து நான்கு ஆண்டுகள் ஆகின்றன. அவரது நம்பிக்கை இறந்து அதைவிடச் சற்று அதிக காலம் ஆகிறது. ஆனாலும் அவர் வழிபாட்டை நிறுத்துவதில்லை. இதுவே இப்படத்தின் மையக் கோரம்: நம்பிக்கையின்மையின் வேதனையல்ல, நம்பிக்கையின்மையின் 'தொழில்முறை' சடங்கு. தோமஸ் ஒரு அரசு ஊழியரைப் போலச் செயற்படுகிறார்; அவரது ஐயத்திற்குக் கால அட்டவணை உண்டு.

யோனாஸ் பெர்சன் (மாக்ஸ் வான் சிடோவ்) என்னும் மீனவன் தன் மனைவியுடன் வருகிறான். சீனா அணுகுண்டு தயாரிக்கிறது என்று செய்தித்தாளில் படித்ததிலிருந்து அவனுக்குத் தூக்கமில்லை. அவன் ஒரு பாதிரியாரிடம் ஆறுதல் தேடி வருகிறான். பாதிரியாரோ அவனுக்கு ஆறுதல் சொல்வதற்குப் பதிலாகத் தன் சொந்தக் கதையைச் சொல்கிறார் - தன் ஐயத்தின் வரலாற்றை, தன் கடவுள் எப்படிச் சுருங்கி ஒரு சிலந்தியாக, ஒரு அரக்கனாக மாறினார் என்பதை. அது நேர்மையான பேச்சுதான்; ஆனால் கொடூரமானது. யோனாஸ் வெளியேறி ஆற்றங்கரையில் தன்னைச் சுட்டுக்கொள்கிறான். ஓர் ஆன்மீக வழிகாட்டி தன் மறையுரையாலேயே ஒருவனைக் கொல்கிறான். மதத்தின் மீது பெர்க்மேன் இதைவிடக் கடுமையான குற்றச்சாட்டைப் பதிவிட்டதே இல்லை: பொய் ஆறுதல் தந்தது; உண்மை கொன்றுவிட்டது!

மார்த்தா லுண்ட்பெர்க் (இங்க்ரிட்துலின்) என்னும் ஊர்ப் பள்ளி ஆசிரியை தோமஸை நேசிக்கிறாள். அவளது கடிதம் படத்தின் மையத்தில் ஒரே அசையாத 'க்ளோஸ்-அப்' காட்சியாக, கேமராவை நேராகப் பார்த்துப் பேசப்படுகிறது. அவளது கைகளில் தோலழற்சி; சீழ் கட்டிய விரல்கள்; கையுறைகள். தன் வாழ்நாளில் ஒரேயொரு முறை மட்டுமே ஜெபித்ததாக அவள் சொல்கிறாள் - தன் அன்பிற்கு ஒரு பயன் தரும்படி வேண்டினாள்; அதற்குப்



பதிலாகக் கிடைத்தது இந்தத் தோல்நோய். ஜெபத்திற்கான பதில் ஒரு புண்ணாக, உடலிலேயே எழுதப்படுகிறது. அது ஏளனமா, அருளா என்று படம் தீர்மானிக்க மறுக்கிறது. இந்தத் தீர்மானமின்மையே பெர்க்மனின் ஒழுக்க நெறி.

படத்தின் மிக முக்கியமான இறையியல் வாக்கியம், மிகக் குறைந்த அதிகாரமுள்ள ஒரு வாயிலிருந்து வருகிறது.

ஆல்கொட் ஃப்ரோவிக் (அல்லான் எட்வால்) என்னும் கூன் விழுந்த தேவாலயப் பணியாளர், தன் உடல் வலியின் ஓய்வு நேரங்களில் ஏசுவின் பாடுகளின் வரலாற்றை வாசித்திருக் கிறார். அவர் தோமஸிடம் ஒரு கேள்வியை வைக்கிறார். சிலுவையில் ஆணி அடிக்கப்பட்ட உடலியல் வலியை அவர் பெரிதாக மதிக்கவில்லை; தன் முதுகு வலியே அதற்கு நிகரானது என்று நினைக்கிறார். அவரை உறுத் துவது வேறு: ஏசுவின் சீடர்கள் ஒன்றையும் புரிந்துகொள்ள



வில்லை, அவர்கள் தூங்கிவிட்டார்கள்; ஏசு முற்றிலுமாகத் தனியாக இருந்தார். பின்னர் சிலுவையில், பிதாவை அவர் அழைத்தபோது பிதா பதில் சொல்லவே இல்லை. ஏசுவின் உண்மையான பாடு அதுதான் - கடவுளின் மௌனம். தோமஸ் 'ஆம்' என்கிறார்; அவ்வளவே.

இது கிறீஸ்தவ இறையியலின் மிகப் பழைய முடிச்சு - கெத்செமனேயின் தனிமை, ஒன்பதாம் மணி நேரத்தின் 'என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்னும் அலறல். ஆனால் பெர்க்மேன் அதை ஒரு புதிய இடத்தில் வைக்கிறார். ஏசுவின் பாடு நமது பாட்டைப் புனிதப்படுத்தவில்லை; மாறாக, நமது பாடுதான் அவரது பாட்டை விளக்குகிறது. இறைமகனுமே ஒரு விடையளிக்கப்படாத ஜெபத்தின் அனுபவத்தைக் கடந்தார் என்றால், கடவுளின் மௌனம் என்பது நம்பிக்கையின் தோல்வி அல்ல, அதுவே அதன் நிலப்பரப்பு.

சிமோன் வேய் (Simone Weil) இதே கருத்தை கிட்டத் தட்ட இதே சொற்களில் எழுதினார்: கடவுளின் இல்லாமையே அவரது அன்பின் மிக நுட்பமான வடிவம்; அந்த வெறுமையைத் தாங்குவதே மனிதருக் குரிய பணி. மார்ட்டின் புபர் (Martin Buber) இதை 'இறைவனின் மறைப்பு' (Eclipse of God) என்று அழைத்தார் - கடவுள் இறந்துவிடவில்லை, நமக்கும் அவருக்கும் இடையே ஏதோ ஒன்று குறுக்கே வந்து நிற்கிறது. கீர்கே கார்ட்டுக்கு (Kierkegaard) இது ஏற்கனவே தெரிந்திருந்தது: ஆபிரகாம் யாருக்கும் விளக்க முடியாதவன், ஏனெனில் நம்பிக்கை என்பது சான்றுகள் அனைத்தும் தீர்ந்த பின்னும் தொடரும் ஒரு தனிமையான செயற்பாடு.

இங்கே தமிழ் மரபு ஒரு நுட்பமான வேறுபாட்டை வழங்கு கிறது. ஆழ்வார்களின் பாசுரங்களிலும்கூடக் கடவுள் நேரில் வருவதில்லை. நம்மாழ்வாரின் நாயகி தலைவனை அழைக் கிறாள், ஏசுகிறாள், கடிதம் அனுப்புகிறாள், பறவைகளைத் தூது விடுகிறாள்; பதில் வருவதில்லை (Ramanujan 1981). சங்க அகப்பாடல்களின் தலைவியும் அப்படியே காத்திருக் கிறாள்; பாலைத்திணையின் வெயில் அவளுக்குப் பதிலா கப் பேசுகிறது (Ramanujan 1967). பக்தியின் பிரிவுத்துய ருக்கும் பெர்க்மனின் பதிலின்மைக்கும் உள்ள வேறுபாடு இதுதான்: ஒன்று 'இல்லாமை' யைச் சடங்காக மாற்றுகிறது; மற்றொன்று 'சடங்கை' இல்லா மையாக மாற்றுகிறது. இரண்டுமே மனதில் நிற்க வேண்டுமென்றால் மொழியின் தேர்ச்சியைக் கோருகிறது.

இறுதிக் காட்சி. ஃப்ரோஸ்ட்நாஸ் தேவாலயம். சபையில் யாருமில்லை - மார்த்தா, ஆல்கொட், சலிப் படைந்த ஆர்கன் இசைக்கலைஞர் தவிர. தோமஸ் வழிபாட்டைத் தொடங்குகிறார்: 'பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்; வானமும் பூமியும் உம் மகிமையால் நிறைந் திருக்கிறது!' காலியான ஒரு கட்டடத்தில், நம்பிக்கை யற்ற ஒரு வாயிலிருந்து 'பூமி மகிமையால் நிறைந்தி ருக்கிறது' என்ற வாக்கியம் எழுகிறது.

இதைப் பரிகாசம் என்று வாசிக்கலாம். அல்லது வேறு விதமாகவும் வாசிக்கலாம்: மார்த்தா அங்கே இருக் கிறாள்; அவளுக்காக அவர் அதைத் தொடங்குகிறார். நம்பிக்கை இல்லாமல் நிகழ்த்தப்படும் ஒரு சடங்கு, வேறொரு மனிதனுக்காக நிகழ்த்தப்படும்போது, அது அன்பின் எளிய வடிவமாக மாறுகிறது. பெர்க்மனின் மிக இருண்ட படம் ஒரு சிறு விசுவாசச் செயலால் முடிகிறது - இறைவனிடம் அல்ல, சக மனிதனிடம்!





Swarnavel@thaiveedu.com

வே. விவேகானந்தன்

# போருக்குப் பலியான இலக்கியவாதி நெல்லை க. பேரன்



tg.theeban@gmail.com

இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணக் குடாநாட்டில், வடமராட்சிப் பிரதேசத்தில் நெல்லியடி என்னும் ஊரில் வாழ்ந்து வந்த, கந்தசாமி பறுவதம் இணையருக்கு மகனாக நெல்லை க. பேரன், 1946-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ஆம் திகதி பிறந்தார். பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் பேரம்பலம். ஆனால் ஊரையும் பெயரையும் இணைத்து நெல்லை க. பேரன் என்னும் புனை பெயரிலேயே இவர் இலக்கிய உலகில் கால்பதித்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலயத்தில் கற்றார். பின்னர் யாழ். தொழினுட்பக் கல்லூரி, யாழ். சட்டக் கல்வி நிலையம் ஆகியவற்றில் கல்வியைத் தொடர்ந்த இவர், இறுதியில் இலங்கைப் பல்கலைக் கழக சட்ட பீடத்தில் வெளிவாரி மாணவனாகப் பதிவு செய்து, சட்டக் கல்வியில் தேர்ச்சி பெற்றார். இவர் நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலயத்தில் மாணவனாகப் படித்த காலத்தில் அல்வாய் க. கணபதிப்பிள்ளை, வித்துவான் க. ஆறுமுகம் மற்றும் இலக்கியவாதிகளான சிற்பி சிவசரவண பவன், பண்டிதர் க. வீரகத்தி போன்றவர்களின் வழிகாட்டலில், தனது தமிழ் அறிவைக் கூர்மைப்படுத்திக் கொண்டார்.

நெல்லை க. பேரன் 1964-ஆம் ஆண்டு தனது பதினெட்டாவது வயதில், வீரகேசரிப் பத்திரிகையின் கரவெட்டிப் பகுதி நிருபராகவும், அதேகாலப் பகுதியில் ஈழநாடு பத்திரிகையின் உடுப்பிட்டிப் பகுதி நிருபராகவும் தனது பணியை ஆரம்பித்தார். 1966-ஆம் ஆண்டு தபால் திணைக்களத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றிய இவர் சிறிது காலம் குவைத் நாட்டிலும் பணிபுரிந்தார்.

தபால் திணைக்களத்தில் பணிபுரிந்த காலப்பகுதியில் இவரது முதலாவது சிறுகதையான 'எண்பது ரூபா', சுதந்திரன் பத்திரிகையில் பிரசுரமாகியது. பேரன் முதன் முதலாக கொழும்பில் வேலைக்குச் சேர்ந்தபோது, பெற்ற எண்பது ரூபா வேதனைத் தைக் கருப்பொருளாகக் கொண்டு இச்சிறுகதை அமைந் துள்ளது. யாழ்ப்பாணம் திருகோணமலை போன்ற தூர இடங் களில் இருந்து கொழும்பில் வேலை செய்பவர்கள், அற்ப வேதனத்தில் தாமும் வாழ்ந்து தங்கள் குடும்பத்துக்கும் பணம் அனுப்ப வேண்டிய இக்கட்டான நிலையை, இச்சிறுகதை மூலம் துல்லியமாக எடுத்துக் காட்டியுள்ளார். இப்படைப்பு பேரனை இலக்கிய உலகில் ஒரு எழுத்தாளனாக பிரபல்யம் அடையச் செய்தது. அதிகமாக எழுத வேண்டும் என்ற ஆர் வம் கொண்ட பேரன், ஏராளமான சிறுகதைகளை எழுதினார். இவர் எழுதிய, 'எண்பது ரூபா', 'கௌரவம் என ஒன்று', 'குலப் பெருமை', அண்ணா வந்தார்', 'கடவுள் உள்ளே இருக்கிறார்', 'உண்மைகள் பொய்ப்பதில்லை', 'குடிலின் அடியில்', 'இராமச் சந்திரன் உறங்குகிறான்', 'ஒரு படித்த விவசாயின் பயணம்', 'மாற்றங்கள்', 'ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள்', 'ஒளியை நோக்கி', 'அவர்கள் என் சுதந்திரத்தைப் பறித்துவிட் டார்கள்', ஆகிய பதின்மூன்று சிறுகதைகளைக் கொண்ட சிறுகதைத் தொகுப்பு, 1975-ஆம் ஆண்டு 'ஒரு பட்டதாரி நெச வுக்குப் போகிறாள்' என்னும் தலைப்பில் வெளிவந்தது. இதனை யாழ். சட்டக் கல்வி நிலைய மாணவர் மன்றம் வெளி யிட்டது.

பேரனின் மற்றுமொரு சிறுகதைத் தொகுப்பான 'சத்தியங்கள்' ஷர்மிளா பதிப்பக வெளியீடாக 1987-ஆம் ஆண்டு வெளி வந்தது. ஷர்மிளா பதிப்பகம் என்பது, பேரன் - உமாதேவி இணையரின், மகளின் பெயரில் பேரன் நடத்திவந்த பதிப்பக மாகும். இச்சிறுகதைத் தொகுப்பில் 'ஒரு பென்சன்காரர் பயணம் போகிறார்', 'மனப்போக்கு', 'ஒரு விதமான கதை', 'சத் தியங்கள் திரளும்போது', 'சினிமாவுக்குப் போகிறார்கள்', 'ஒரு புது அத்தியாயம் ஆரம்பமாகிறது', 'ஒரு தொழிலாளி சைக் கிள் வாங்குகிறான்', 'ஒரு ஞாயிற்றுக்கிழமை நாற்பது நிமிடம்', 'வாடகைக்கு வீடு', 'பிள்ளைகள்', 'பெருமூச்சு', 'ஏணிப்படிகள்', 'புகை', 'கவிதை அரங்கேறும் நேரம்', 'ஒரு நாணயம் காப்பாற் றப்படுகிறது', 'அன்புள்ள எழுத்தாளருக்கு', 'மெல்ல இனிச் சாகும்', ஆகிய 17 சிறுகதைகள் காணப்படுகின்றன.


இவரது படைப்புகள் பெரும்பாலும், இலங்கையில் வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, ஈழநாடு, ஈழமுரசு, போன்ற பத்திரிகை களிலும், மல்லிகை, கற்பகம், மாணிக்கம், செவ்வந்தி போன்ற சஞ்சிகைகளிலும், சுதந்திரன், தேசாபிமானி, ஜோதி போன்ற வார வெளியீடுகளிலும், தமிழகத்திலிருந்து வெளிவந்த 'தாமரை' என்ற இதழிலும், மற்றும் பாடசாலை ஆண்டு

மலர்கள், கலை இலக்கிய மன்றங்களின் வெளியீடுகள் போன்றவற்றில் வெளிவந்தவையாகும்.

சிறுகதைகளை எழுதிக் குவித்த பேரன் நாவல் இலக்கியத் திலும் கால் பதித்தார். இவரது சிறுகதைகளை விமர்சனம் செய்த இலக்கியவாதிகளின் சிபார்சுகளும், ஊக்குவிப்பு களும், அதற்குக் கால்கோலாக அமைந்தன. இவரது நாவல் களில் 1978-ஆம் ஆண்டு வெளிவந்த, 'வளைவுகளும் நேர் கோடுகளும்' 1985-ஆம் ஆண்டு வெளிவந்த, 'விமானங்கள் மீண்டும் வரும்' என்ற குறுநாவலும் வாசகர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றனவாக்கும். 'வளைவுகளும் நேர்கோடு களும்' என்ற நூலில், ஆசிரியர் முன்னுரை என்ற பகுதியில், 'இந்த நாவலில் சமூகத்தில் நான் நேரடியாகப் பார்த்தும், பழகியும், அனுபவரீதியாக உணர்ந்தும், கொண்ட மனிதர் களின் பிரதிமைகளையே பாத்திரங்களாகப் படைத்துள் ளேன்'. எனக் குறிப்பிட்டுள்ளார்.

சொந்த ஊரில் குலப் பெருமை பேசித் திரிபவர்கள் குவைத் நாட்டில் செய்யும் வேலைகளையும் தொழில் நிலைய அதிகா ரிகளால் நடத்தப்படும் விதத்தையும் மறந்து, ஊருக்கு வந்த தும் மீண்டும் பெருமை பேசித் திரிவதனை வேதனையுடன் குறிப்பிடுகின்றார். அத்துடன் குடும்ப வறுமை காரணமாக, இளையோர் வெளிநாடுகளுக்குச் சென்று, பல சவால்களின் மத்தியில் உழைக்கும் பணத்தை, ஊரில் உள்ளவர்கள் ஆடம்பரமாக வீண் விரயம் செய்வதையும் கண்டிக்கிறார். தமது குடும்ப வறுமையைப் போக்க வெளிநாடு சென்றவர் கள், தமது வாழ்க்கையை மேம்படுத்த மீண்டும் வெளிநாடு செல்வதை 'விமானங்கள் மீண்டும் வரும்' என்ற நாவல் மூலம் விரிவாக எடுத்துக் காட்டியுள்ளார். ஈழநாடு பத்திரிகையும், யாழ். இலக்கிய வட்டமும் இணைந்து நடத்திய இரசிகமணி கனகசெந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டியில் இந்த நாவல் முதற் பரிசைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பேரன் தனது சிறுகதை எழுத்துத்துறையின் வளர்ச்சிக்கு, வீரகேசரி வாரமலர் ஆசிரியரும், கொழும்பு நாவலர் கழகத் தில் தனது ஆசானுமாகிய திரு. இராஜகோபால் அவர்கள் அமைந்தது போல, நாவல் எழுத்துத்து றையில் கால் பதிப்பதற்கு, வீரகேசரி நிர் வாகியும் புத்தக வெளியீட்டுப் பொறுப்பா ளருமான திரு சி. பாலச்சந்திரன் அவர்கள் பெருமளவில் உற்சாகமூட்டி ஊக்கு வித்தார், எனக் குறிப்பிட்டுள் ளார்.



சிறுகதை, நாவல் இலக்கியத்தில் ஈடுபட்டு வந்த பேரன், கவிதை புனைவதிலும் ஆர்வம் கொண்டு, அவ்வப்போது கவிதைகளை எழுதிப் பத்திரிகைகளில் வெளியிட்டும், வானொலி ஊடாக வானலையில் தவழ விட்டும் மக்கள் மனதில் இடம்பிடித்தார். இவரது கவிதைகள் மரபுவழிக் கவிதை களாக இல்லாது, உரைநடையாகவும் புதுக் கவிதை வடிவிலும் அமைந்துள்ளன. தனது மாமனாராகிய அமரர் கந்தவனம் பரமானந் தம் அவர்களது 31-ஆம் நாள் நினவு மல ராக, பேரன் எழுதிய கவிதைகளைத் தொகுத்து 'பேரனின் கவிதைகள்' என்னும் தலைப்பில் 1989-ஆம் ஆண்டு வெளி யிட்டார்.

இக்கவிதை நூலில் 'அன்புள்ள தமிழ்ப் பெண்ணே', 'கடலே', 'பாரதி', 'பூராயம்', 'பாணதுற கரையோரப் புகைவண்டி', 'காற் சட்டை உத்தியோகம்', 'வந்திடுவேன் தைக்கு முன்னர்...', 'பயனுள்ள வழிகளில் செலவிடுவாயா ?', 'ஓ! மிளகாய் பழமே!', 'சாதி சாதி சாதி', 'பொங்கல் கவிதை', 'முட்டாள்கள் அல்ல', 'எப்ப நான் சரிவேன் ?' 'போகாமல் நிற்பதேன் ?', 'மாணவிகள்', 'இல்லறம் நல்லறமாகும்', 'துடிக்கும் இதயம்', 'அந்தநாள் ஞாபகம்...', 'காலத்தின் கவிதைகள்...', 'சின்னஞ்சிறு வய தில்...', 'என்னருமைச் சிறிய நாடே', ' உழைக்கும் கரங்கள் உயரட்டும்', 'எக்கவுண்டன் ஆகி...', 'பாரதி நீ இருந்தால்...', 'பற்றிப் பிடியுங்கள்', 'இயேசுவாய் மாறிவிட்டேன்', 'ஏற்றுமதிக் கூலிகள்', 'ஓ! தமிழ்ப்பெண்ணே' ஆகிய கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

இக்கவிதைகளுள் 'பூராயம்' என்ற கவிதை பின்வருமாறு அமைந்துள்ளது.

***'யாழ்ப்பாண வேலிகளின்***
***கிடுகு ஓட்டைகளில்***
***கண்களைப் புதைத்துப்***
***பாதைகளில் போகும்***
***பாமர மனிதரை***
***நோட்டம் விட்டுச்***
***சாதி பார்ப்பவர்***
***சல்லடை போட்டு***
***பரம்பரை கிளறிப்***
***பேரையும் ஊரையும்***
***தெருவையும் அயலையும்***
***கேட்டுப் பார்த்து***
***உற்று உணர்ந்து***
***பூராயம் பேசிடும்***
***நா(ய்)கரீகம் ஒழிக!***

என நிறைவு பெறுகிறது.

பேரனின் கவிதைகளில் இருந்து அவரது உள்ளக்கிடக்கினை நன்கு அறியக்கூடி யதாக உள்ளது. சமூக ஏற்றத் தாழ்வுக ளையும் பகட்டான வாழ்க்கையையும் வெறுத்த அவர், உழைப்பையும் நாட் டுப் பற்றையும் பெரிதும் மதித்துள்ளார். இலகுவான மொழிநடையில், சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளும் வகை யில், அவரது கவிதைகள் அமைந்தி ருப்பது தனிச் சிறப்பாகும். பேரனின் கவிதைகள் பிற வெளியீடுகளிலும் பிர சுரமாகியுள்ளன. குறிப்பாக யாழ். இலக் கிய நண்பர் கழகத்தினரால் வெளியிடப் பட்ட 'தளிர்கள்' என்ற கவிதைத் தொகுப் பில் பேரனின் கவிதைகள் சில இடம் பெற்றுள்ளன.

பேரனின் சிறுகதைகள், கவிதைகள், கலைக்கோல விமர்சனங்கள் அவ்வப் போது இலங்கை வானொலியில் ஒலிப ரப்பாகியுள்ளன. 'மாற்றாத காசோலை கள்' என்னும் வானொலி நாடகம்

ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் ஒலிபரப் பப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இள வயதில் அண்ணாவியார் அமரர் மு. கனக ரத்தினம் நெறியாள்கையில், நெல்லியடி முருகன் கோயில் வீதியில், நெல்லியடி சண்முகானந்தா நாடக சபையினர் அரங் கேற்றிய, 'கண்திறந்தது', 'மாதவி பெற்ற மாணிக்கம்', 'இரத்தத்திலகம்', போன்ற நாட கங்களில் சாத்திரியார், புறோக்கர் போன்ற பாத்திரங்களில் நடித்துப் புகழ் பெற்றார்.




பேரன் அவர்கள் இலக்கிய முயற்சிகளுடன் மட்டும் நின்றுவிடாது, சமூக அமைப்புகளு டனும் நெருங்கிய தொடர்பைப் பேணி வந்தார். குறிப்பாக நெல்லியடி சனசமூக நிலை யத்தின் தலைவராகவும், தான் கல்வி கற்ற நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அபி விருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றில் முக்கிய உறுப்பினராக இணைந்தும், பாடசாலையின் முன்னேற்றத் துக்காகவும், சமூக மேம்பாட்டுக்காகவும் அயராது செயற்பட்டார். பருத்தித்துறையை மையமாகக் கொண்டு வைத்தியர் எம்.கே. முருகானந்தம், மற்றும் சில இலக்கிய ஆர்வலர்களின் முயற்சியால் இயங்கி வந்த 'அறிவோர் கூடல்' என்ற பல்துறை சார்ந்த அமைப்பிலும் ஆர் வத்துடன் பங்குபற்றி வந்தார்.

சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, விமர்சனம் போன்ற துறைகளிலும் பத் திரிகை நிருபர், செய்தி சேகரிப்பாளர், பதிப்பாசிரியர் போன்ற பன்முக ஆளுமை கொண்ட பேரன், போர்க் காலத்தில், பலாலி இராணுவ முகாமிலிருந்து 1991-ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15-ஆம் திகதி ஏவப்பட்ட, எறிகணையால் அவரது இல்லம் முழுமையாக அழிந்ததொடு, அவ ரும், அவரது மனைவியார் உமாதேவி, பதின்னான்கு வயது மகன் உமாசங்கர், ஏழு வயது நிரம்பிய மகள் சர்மளா, அனை வரும் அகால மரணத்தைத் தழுவினர். இது ஈழத்தமிழ் இலக்கிய உலகத்தை உலுக்கிய மிகப் பெரும் சோக சம்பவ மாகும். 44 ஆண்டுகள் மாத்திரமே வாழ்ந்த பேரன் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் இலக்கிய உலகுக்கு அளப்பெரும் பணிகளை ஆற்றியிருப் பார் என்பது மறுக்க முடியாத உண்மை.



vivekananthan.v@thaiveedu.com





# தமிழ்த்தென்றல் திரு. வி.க.-வின் சிந்தனைகள் ஒரு நோக்கு

■ இராஜேந்திரம்பிள்ளை சிவலிங்கம்

இருபதாம் நூற்றாண்டின் விடியலிலே தமிழ் மொழிக்குத் தனிவாழ்வு தந்த பெருமக்களிலே திரு. வி.க. தன்னிகரற்றுத் திகழ்ந்தவர். திருவாரூர் விருத்தாசலம் கல்யாணசுந்தரனார் தோன்றி மறைந்து ஒரு நூற்றாண்டு சென்றுவிட்ட போதும் அவர் தமிழ் மொழியோடு கலந்து நம்மி டையே இன்னும் வாழ்கின்றார். அவருடைய வாழ்வும், தொண்டும், தனியொரு துறையைச் சார்ந்து அமையாது பல்வேறு கோணங்களிலும் வியாபித்து நின்றது. அரசியல், சமயம், இலக்கியம், பொருளாதாரம், மகளிர் முன்னேற்றம், தொழிலாளர் நலம், இளைஞர் திறம், சீர்திருத்தம், நாட்டு யர்வு போன்ற இன்னோரன்ன துறைகளிலெல்லாம் ஆடம் பரமின்றி அமைதிப் பணி புரிந்தவர். நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் சமயப்பற்றும் கொண்ட திரு. வி.க. அவற்றின் உயர்வுக்காகத் தன்னை அர்ப்பணித்தார்.

1883-ஆம் ஆண்டு ஓகஸ்ட் 26-ஆம் திகதி தோன்றிய இவர் தமது இளமைக் காலக் கல்வியை ஆரியன் பிறைமறி பாடசா லையில் ஆரம்பித்தார். அத்தோடு வணிகத்துறைக் கல்வியிலும் சிறந்து விளங்கினார். அவர் ஐந்தாம் வகுப்பு பயிலும் போதே யாழ்ப்பாணம் நா. கதிரவேற்பிள்ளையால் ஈர்க்கப்பட்டார். ஆங்கிலக் கல்வியில் ஆர்வமும் மோகமும் கொண்டிருந்த திரு. வி.க.-வின் வாழ்வில் புதிய திருப்பமொன்று நிகழ்ந்தது. அதனை அவரே, 'சென்னை வெஸ்லி கலாசாலையில் யான் மாணாக்கனா யிருந்த போது யாழ்ப்பாணம் நா. கதிரவேற்பிள்ளையின் அன்பிற் குரியவனானேன். ஆங்கிலத்திற் பித்துக் கொண்டு திரிந்த எனக்குத் தமிழில் வேட்கையை எழுப்பியவர் அவரே ஆவார்' எனப் பெரிய புராணப் பதிப்பின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

கதிரவேற்பிள்ளை அவர்களின் சொற்பெருக்கைத் தவறாது செவிம டுத்த திரு. வி.க.-விற்கு வேதாந்தம், சித்தாந்தம், இலக்கணம், இலக் கியம், விவாதம், பனுவல் எனப் பல்துறை அறிவையும் பெறும் வாய்ப்பு கிட்டியது. 'கற்றோரைக் கற்றோரே காமுறுவர்' என்பது போல மயிலை மகா வித்துவான் தணிகாசல முதலியாரின் தொடர்பு திருவ ருட்பயன், சிவஞான சித்தியார், சிவஞானபோதம், சமஸ்கிருதம் போன்றவற்றைப் பயிலக் காரணமாயிற்று. தமக்கு ஏற்பட்ட இடர்பாடு களையும் ஐயங்களையும் கேட்டுத் தெரிந்தும் கொண்டார்.

திரு. வி.க. கம்பராமாயணம், வில்லிபாரதம் என்பவற்றில் ஆய்வு மேற்கொண்டார். பல்வேறு சமயக் கொள்கைகளை அறிந்திருந்தது மட்டுமன்றி பிறமொழி இலக்கியக் கர்த்தாக்களான ஷேக்ஸ்பியர்,

prasadbatti@gmail.com

மில்டன், வோர்த், ஷெல்லி, கீட்ஸ், பைரன் போன்றவர்க ளையும் நன்கு கற்றுத் தேர்ந்திருந்தார். பல கம்பெனிகளில் தொழில் வாய்ப்புக் கிடைத்த போதும், அவரது பிடிவாதப் போக்கு அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. ஸ்பென்சர் கம்பெனியில் பணிபுரிந்த இவர் 1910-இல் வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரியும் வாய்ப் பையும் பெற்றார். இவரது அயராத உழைப்பும் மதிநுட் பமும் இவரை வெஸ்லி கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர் நிலைக்கு உயர்த்தின. எனினும் நாட்டில் அன்றிருந்த அரசியல் நிலை காங்கிரஸில் ஈடுபாட்டை ஏற்படுத்தியது. சுப்பிரமணிய பாரதியார், பிபின் சந்திரபாலர் போன்றோரின் பேச்சுகள் அவருள்ளத்தில் அரசியற் புயலை வீசின. வந்தே மாதரம் பத்திரிகையும், பாலர் பேச்சும், திலகர் சிறையும் இவை போன்ற பிறவும் அரசியற் பித்தையே உண்டாக்கின. 1917-இல் ஆசிரியர் பணியும் பத்தியப்படாது போகவே அதனை அன்போடு துறந்து பொது வாழ்வில் ஈடுபட்டார். ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர், அன்னிபெசன்ட் அம்மையார் போன்றோரின் உறவு அரசியலுடன் 'தியோசெபிக்கஸ்' சங் கத்திலும் ஈடுபாட்டை ஏற்படுத்தியது. இவ்வாறு சைவம் தமிழ் என்றிருந்த வாழ்வு சிறிது சிறிதாக மலர்ந்து அரசியல், தேசத் தொண்டு என விரிந்து செல்லலாயிற்று. அத்தகைய அவரது தொண்டினை இனம்காண இக் கட்டுரை போதாது எனினும், அவரது தொண்டோடு பின்னிப் பிணைந்திருந்த உரைநடை, செய்யுள், பேச்சு, பத்திரிகை போன்றவற்றினூடாக ஓர் பறவை நோக்காக மட்டுமே இம்முயற்சி அமைகிறது.

## நூல்கள்:

திரு. வி.க. உரைநடை, செய்யுள், ஆய்வு என ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் முருகன் அல்லது அழகு, சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, இமயமலை அல்லது தியானம், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை, மனித வாழ்க்கையும் காந்தி யடிகளும், சைவத்தின் திறவு சைவத்தின் சராம்சம், தமிழ்த் தென்றல், நாயன்மார் வரலாறு, விடுதலை வழி, இருமையும் ஒருமையும், சீர்திருத்தம் அல்லது செத்துப் பிறத்தல், முதுமை உளறல், பொருளும் அருளும், மார்க்சியமும் காந் தியமும், உரிமை வேட்டல், பொருளும் இருளும், சிந்தித்தி ருத்தல், என் கடன் பணி செய்து கிடப்பதே, திருமால் அருள் வேட்டல், புதுமை வேட்டல், சிவனருள் வேட்டல், கிறிஸ்து மொழிக் குறள், இருளில் ஒளி, வளர்ச்சியும் வாழ்வும் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

## தேசிய இயக்கம்:

இருபதாம் நூற்றாண்டின் தேசிய இயக்கம், சமுதாயத்திற்கு எளிதில் புரியும் வகையில் மொழியைக் கையாள வேண்டிய கட்டாயத்தையும் நல்வாய்ப்பையும் தமிழ் எழுத்தாளர்க ளுக்கு வழங்கிற்று. பத்திரிகைகளின் அவசர யுக வேகத் திற்கு ஏற்ப, வாய்மொழியாகப் பகிர வேண்டிய செய்திகளை நேரிடையாக நல்ல எளிய தமிழில் அவர்கள் எழுதத் தொடங்கினர். இதனால், சமூகத்தின் பெரும்பான் மையான மக்கள் இலக்கியக் கல்வியையும் அரசியல் விழிப்புணர்வையும் ஒரே நேரத்தில் பெறுவதற்கு ஏற்ற சூழல் உருவானதுடன், பல புதிய தமிழ் எழுத்தாளர்களும் தோன்றினர். இத்தகைய எளிய வசன நடை வளர்ச்சிக்குக் காரணகர்த்தாக்களாக விளங்கிய ஒரு சில சான்றோர் களுள் திரு.வி. கலியாணசுந்தரனார் (திரு. வி.க.) மிக மகத் தானவர் ஆவார்.

இருபதாம் நூற்றாண்டின் தேசிய இயக்கம் தமிழ் எழுத்தா ளர்களிடையே சமுதாயத்திற்கு எளிதில் புரியும் வகையில் மொழியைக் கையாள வேண்டிய கட்டாயத்தையும் நல் வாய்ப்பையும் உருவாக்கியது. பத்திரிகைகளின் வேகத் திற்கு ஏற்ப வாய்மொழியாகச் சொல்ல வேண்டிய செய்திகளை நேரடியாக நல்ல எளிய தமிழில் எழுதியதால், சாமானிய மக்களும் இலக்கிய மற்றும் அரசியல் கல்வியைப் பெற முடிந்தது. இத்தகைய எளிய வசன நடை வளர்ச்சிக்குத் தோற்றுவிப்பாளர்களாக விளங்கிய ஒரு சிலருள் திரு.வி. கலியாணசுந்தரனார் மிக முக்கியமானவர் ஆவார்.

தமிழ்ப் புதுக்கவிதையில் மகாகவி பாரதியார் ஏற்படுத்திய புரட்சிக்கு நிகராக, தமிழ் உரைநடையில் புதுமையைப் புகுத்தியவர் திரு. வி.க. ஆவார். பாரதியார் தனது கவிதை களைப் பற்றி, 'சொல் புதிது, சுவை புதிது, சோதிமிக்க நவகவிதை எல்லாமே புதிது' என்று பெருமிதத்துடன் பிரக டனம் செய்தார். அவருக்கு இணையான துணிச்சலுடன் திரு. வி.க.-வும், 'ஒரு தனி நடை கொண்டேன்; சிறு சிறு வாக் கியங்கள் அமைக்கலானேன். எளிமையின் கருத்துக்கள் விளங்கும் முறையைப் பின்பற்றினேன். என் நடை எங்கெங்கோ ஓடும், திரியும், இழையும்; பொருளுக்கேற்ற கோலந்தாங்கும்; இடத்திற்கேற்ற நடம்புரியும்' என்று தனது தனித்துவமான உரைநடை பாணியைப் பற்றிக் குறிப்பிட் டுள்ளார். எளிமையும் கம்பீரமும் செறிந்த இத்தகைய வசன நடையே, பாமர மக்களையும் சென்றடைந்து தமிழ் உரைநடை வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தைப் படைத்தது.

## பத்திரிகை:

பாரதிக்குப் பின் பத்திரிகை உலகில் ஒப்பற்றுத் திகழ்ந் தவர் திரு. வி.க. இவரின் தேசபக்தன் என்னும் பத்திரிகை 09-12-1917 அன்று ஆரம்பமானது. தேசபக்தனில் இவர் தீட்டிய ஆசிரியத் தலைப்புகள் கொண்ட கட்டுரைகள் 'தேச பக்தாமிர்தம்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டது. இதன் முதல் தொகுதி 1919-இல் வெளியானது.

'தேசபக்தன் சுதந்திரத்தை விரும்புகிறான்; சுயஆட்சி கேட்கிறான். இந்தியாவிற்கும் சமத்துவத்தை உண்டுபண் ணுகிற இங்கிலாந்திற்கும் சகோதரன்தான் 'பக்தன்'; பாரத மாதாவின் அடித்தொண்டன்; அவன் பாரதநாட்டில் தோன்றிய ஒவ்வொருவருக்கும் உரியவன்' என்று 'தேச பக்தன்' இதழின் வாயிலாகத் தன் கருத்தை வெளிப்ப டுத்திய திரு. வி.க., பின்னர் அப்பத்திரிகையைப் பாரத நாட்டிற்குக் காணிக்கையாக்கினார். திரு. வி.க. 'தேச பக்தன்', 'நவசக்தி' ஆகிய இதழ்களின் ஆசிரியராக அவர் ஆற்றிய தொண்டு, தொழிலாளர் இயக்கம் மற்றும் விடுதலைப் போராக மலர்ந்தது. இராஜகோபாலாச்சா

ரியார், மகாத்மா காந்தி போன்றோருடன் ஏற்பட்ட உறவு, அவரது சிந்தனையில் காந்தியமும் மார்க்சியமும் இணைய வழிவகுத்தது. இதன் விளைவாக, ஒத்துழையாமை இயக்கம், வேலைநிறுத்தம், நாட்டு விடுதலை என அயராது உழைத்த அவர், பத்திரிகைகள் வழியே ஒரு புதிய உலகத்தைப் படைக்கப் பெருமுயற்சி செய்தார்.


இவர் தமது தேசபக்தனின் தொண்டினை மதிப்பிடும்போது 'தேசபக்தன் தோன்றியிராவிடில் வகுப்புவாதம் கிளைத்து ஓங்கியிருக்கும். வகுப்புவாதம் என்னும் கட்சியின் நச்சுப்பல் தேசபக்தனாற் பிடுங்கப்பட்டது. அக்கட்சியின் வேகம் ஒடுங் கியது. இது வறுத்த நெல்லாயிற்று' எனக் குறிப்பிட்டார். இவ்வாறு பத்திரிகைப் பணி புரிந்த திரு. வி.க.-வின் எழுத்து களில் பல சந்தர்ப்பங்களில் அன்பு, அறம், அழுகை, புலம்பல், வேதாந்தம், ஆறுதல் என்பன மட்டும் மிஞ்சி நின்றன. ஆண்மை, வீரம், விமோசனப் புரட்சி என்பனவற்றை தரிசிக்க முடியவில்லை என பலரும் குறைபட்டுக் கொண் டனர். இது பற்றி வ.ரா. குறிப்பிடுகையில்:

'அறத்துக்கும் அரசியலுக்கும் சன்மார்க்கத்துக்கும் சம தர்மத்திற்கும் பரம்பரை வலுவுக்கும் நவீன தேவைக ளுக்கும் இடையே எழும் மோதல்கள் பற்றி ஓயாத சிந்தனையில் மூழ்கிவிட்ட திரு. வி.க. முழுமையான போராட்ட வீரராக விளங்க முடி யவில்லை. திரு. வி.க.-வின் வளர்ச்சி முழுமை அடைய முடியாமற் போனது நாட்டுக்கு இழப்பு' என்றார்.

'நமது நாட்டின் பண்டை வளம், கல்வி, அறம், அரசு, வழக்கவொழுக்கம் முதலிய வற்றை மக்களுக்கு நினைவூட்டி, இப் பொழுது இன்றியமையாதது வேண்டற் பாலதாய உரிமை வேட்கையை அவர்களி டத்தில் எழுப்ப வேண்டும் என்பதே என் நோக்கம்' எனத் தமது சொற்பொழிவுகளின் நோக்கையும், தன்மையும் விளக்கியுள்ளார்.

சிலருக்குப் பேச்சுமட்டும் வரும், எழுத்து வராது; சிலருக்கு எழுத்து மட்டுமே வரும், பேச்சு சுத்த சூனியம்; பேசுவதையும், எழுதுவதையும் வாழ்வில் கடைப்பிடிப்போர் அரிதிலும் அரிது. திரு. வி.க. பேச்சிலும் எழுத்திலும் செயலிலும் தன்னிகரற்றுத் திகழ்ந் தார்.

அவரது பேச்சுக்கள் காலப் பின்னணியை விளக்கல், இலக்கிய வரலாற்று ஆதாரங்களை அடிப்படையாகக் கொள்ளுதல், தமிழுக்கும் தேசியத்துக்குமுள்ள தொடர்பை விளக்கல், ஒத்துழையாமை இயக்கத்தின் அரசியற் பின்னணியை விளக்கல், காந்தியின் சுயராஜ்யக் கொள்கையைப் பரப்பல், தேசிய உணர்வுக்கு அடிப்படையாகத் தமிழ்ப்பற்று வளர வேண்டுமென வலியுறுத்தல், நாட்டின் சொந்த மொழியில் வினைகளாற்றுதல் வேண்டும் என்ற கருத்துகளைத் தாங்கி நின்றன. திரு. வி.க.-வின் பேச்சுக்களில் அரசியல் முதற் போக்கு முனைந்து நின்ற போதிலும் இடையிடையே பழைமையின் சாயல் கலந்திருந்தன. குறிப்பாக, பக்தியின் மேலீட்டால் காலத்துக்கொவ்வாத சில கருத்துகளும் ஊடோடின.



1914-ஆம் ஆண்டில் உலகப் போர் மூண்டது பற்றி 1920-இல் வேலூரில் 14-வது தமிழர் மாகாநாட்டுத் தலைமையுரையில் 'இந்நிலையில் ஆண்டவன் அருளால் ஐரோப்பாவில் மகாயுத்தம் தோன் றிற்று. அந்தப் போர் கடவுளால் உண்டாக் கப்பட்டது' என விமர்சித்தார். இவ்விளக்கம் அரசியல் அடிப்படையிலோ வரலாற்று வாயிலாகவோ பொருளாதார நோக்கிலோ ஏற்றுக் கொள்ளத்தக்கதாயில்லை. இவரது சமயப் பற்றும் சன்மார்க்க போதனையும் வரலாற்று உணர்வை மழுங்கடித்து விட்டனவோ என எண்ணத் தோன்றுகிறது. இவ்விடத்தில், 'திரு. வி.க. சமய, சமுதாயத் துறைகளிலே பல சீர்திருத்தங்களை எடுத் துரைத்த அதே வேளையில், சித்தாந்தம், வேதாந்தம், வள்ளுவம், காந்தியம், மார்க்சியம் முதலியவற்றை ஒன்றிணைத்து சமரசம் காணவிழைந்தார்' எனக் கலாநிதி க. கைலாசபதி குறிப்பிடுவது மனங் கொள்ளத்தக்கது.

**"சிலருக்குப் பேச்சுமட்டும் வரும், எழுத்துவராது; சிலருக்கு எழுத்து மட்டுமே வரும், பேச்சு சுத்த சூனியம்; பேசுவதையும், எழுதுவதையும் வாழ்வில் கடைப்பிடிப்போர் அரிதிலும் அரிது. திரு. வி.க. பேச்சிலும் எழுத்திலும் செயலிலும் தன்னிகரற்றுத் திகழ்ந்தார்."**

> **உரைநடை போன்றே அவரது கவிதைகளும் மிகத் தெளிவாக இருக்கும். அவை உள்ளத்து உணர்ச்சிகளையும் எழுப்புவன. ஆராய்ந்து எடுக்கப்பட்ட எளிமையான சொற்களால் ஆக்கப்பட்டவை. கருத்தை வழுவாமலே கூறுவன. அவரது கருத்துகள் வழமைக்கு மாறாகவோ பகுத்தறிவுக்குப் பகையாகவோ இருக்கமாட்டா.**

**கவிதை:**

உரைநடை போன்றே செய்யுள் எழுதும் திறனும் திரு. வி.க.-வுக்கு வாய்த்திருந்தது. ஆனால், அவர்தம் ஓய்வொழிவற்ற சொற்பொழிவுகளும் நாள்தோறும் தம் தேசபக்தன், நவசக்தி இதழ்களுக்கு எழுத வேண்டுமென்ற கட்டாயமும் அவர் செய்யுள் தொண்டிற்குத் தடை விதித்து வந்தன.

உரைநடை போன்றே அவரது கவிதைகளும் மிகத் தெளிவாக இருக்கும். அவை உள்ளத்து உணர்ச்சிகளையும் எழுப்புவன. ஆராய்ந்து எடுக்கப்பட்ட எளிமையான சொற்களால் ஆக்கப்பட்டவை. கருத்தை வழுவாமலே கூறுவன. அவரது கருத்துகள் வழமைக்கு மாறாகவோ பகுத் தறிவுக்குப் பகையாகவோ இருக்கமாட்டா. 1931-ஆம் ஆண்டு 'உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல்' என்றொரு நூலில் அவரது தமிழ்ப் பற்றினை,

*'தமிழைப் போல் உயர்ந்த மொழி*
*தரணியில் வேறெங்குமில்லை*
*தமிழனைப் போல் மொழிக் கொலையில்*
*தலைச்சிறந்தோர் எவருளரோ'*

என உயர்ந்த தமிழ் மொழி அழிந்து செல்லும் அவல நிலையை அழகாகச் சித்திரித்துக் காட்டுகின்றார்.

திரு. வி.க.-விடம் மொழிப் பற்று எவ்வளவு தூரம் குடிகொண் டிருந்ததோ அந்த அளவுக்கு நாட்டுப் பற்று மிக்கவராகவும் திகழ்ந்தார். பாரதநாடு பல்வேறு குறைபாடுகளால் பாழ்ப் பட்டு பரிதவித்து கிடந்தபோது அதனை,

*'படியினிலே இல்லாத*
*பாழான சாதி*
*பகுப்புடனே தீண்டாமை*
*பாவையர்தம் அடிமை*
*கொடிய இவை குடிகொண்டு*
*கொடிகொடியாப் படர்ந்தே*
*கொல்லவுடன்*
*பிறப்பன்பை*
*குலைந்தது எந்தன் வாழ்வே'*

எனக் கூறும் அவர் அவற்றை நீக்க, சமுதாயத்தை நோக்கி

*'செம்மை வினையாற்றுதற்குத்*
*சேரவாரும்*
*தீண்டாமை பெண்ணடிமை*
*சிறுமைச்சாதி*
*வெம்மை தருநோய்களைய*
*விரைந்து வாரும்*
*அம்மை சம தர்ம வர*
*சாட்சி நாடி*
*அன்பார்ந்த சோதரரே*
*அணைவீரின்னே'*

என்று அழைப்பு விடுகின்றார்.

இவ்வாறு திரு. வி.க. அவர்கள் உரைநடை, பேச்சு, பத்திரிகை, கவிதை போன்றவற்றின் மூலம் மொழிப்பணி, அரசியல், பொருளாதாரம், சமத்துவம், தேசிய மார்க்கம், சமயம் எனப் பல்வேறு துறைகளிலும் பணியாற்றிச் சென்றார். இவர் பற்றி பி.பி. ஸ்ரீ அவர்கள்:

'பேனா மன்னருக்கு மன்னன், இவர் சிறந்த பக்தன்; அவர் சாகவில்லை. பக்தனைக் கண்டு சாவு தான் செத்துப் போகிறது. அவர் வாழ்ந்துவந்த புதுப்பேட்டை விலாசந்தான் மாறியிருக்கிறது; புது விலாசம் மக்கள் உள்ளம்' எனக் குறிப் பிட்டார்.



sivalingam.r@thaiveedu.com

# பேராசிரியர் கா. சிவத்தம்பியின் மலையகம் குறித்த பார்வையும் பங்களிப்பும்


prasadbatti@gmail.com

பேராசிரியர் கா. சிவத்தம்பி மறைந்து பதின்மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், மலையகம் குறித்த அவரது பார்வையையும் பங்களிப்புகளையும் மீட்டிப் பார்ப்பதற்கான தேவை ஒன்று எழுகின்றது. அதற்கான காரணம், இலங்கையில் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்று ஐம்பது ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், அம்மாநாடு குறித்த நினைவுகூரல்களும் விழிப்புணர்வு நிகழ்வுகளும் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றமையாகும். அதேவேளை, 'மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு' இடம்பெற்று முப்பது ஆண்டுகள் நிறைவடை கின்றன. 18.11.96 அன்று நடைபெற்ற இம்மாநாட்டின் இரண்டாவது அமர்வுக்கு தலைமை வகித்தவர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி என்பதுடன், மீண்டும் ஒரு மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்துவதற்கான தேவை உணரப்படும் இச்சூழலில், அவரது மலையகம் குறித்த பார் வையையும் பங்களிப்புகளையும் மீட்டிப் பார்ப்பது அவசியமானதாகிறது.

## போராசியர் கா. சிவத்தம்பி நினைவுகள்:

பேராசிரியர் கா. சிவத்தம்பி மறைந்து பத்தாண்டுகள் நிறைவில் ஈழத்தினதும் தமிழகத்தினதும் தமிழார்வலர்கள், தமிழ் அறிஞர்கள் ஒன்றிணைந்து நடத்திய பத்துநாள் மெய்நிகர் கருத்தரங்கத் தொடருக்கு 'பேராசிரியர் கா. சிவத்தம்பி எனும் பேராறு' எனத் தலைப்பிட்டிருந்தார்கள். அவரைப் 'பேராறு' என விளித்த எழுத்துகளைப் பார்த்ததும் எனக்குள் ஒரு சிலிர்ப்பு. அவர் மறைந்தபோது அவரை 'சமுத்திரம்' என விளித்து 'சமுத்திரங்கள் சாய்வதில்லை' எனும் அஞ்சலி கவிதை எழுதியது நினைவில் எழுந்ததே அந்தச் சிலிர்ப்புக்கு காரணம். கா. சிவத்தம்பி எனும் அந்தப் பேராறு சமுத்திரப் பெருவெளியில் கலந்து பதின்மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், அவர் சார்ந்த மலையக நினைவுகளும் சேர்ந்தே மிதந்து வருகின்றன.

அவரது முதலாவது ஆண்டு நினைவு தினத்தை 'மலையக மக்கள் கலையரங்கம்' சார்பாக அதன் தலைவர் மலையகக் கூத்துக் கலைஞர் (தற்போது நோர்வூட் பிரதேச சபைத் தலைவர்) பிரான்ஸிஸ் ஹெலன் ஏற்பாட்டில் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடத்தியிருந்தோம். கவிஞர் சு. முரளிதரன் தலைமையில்





**"மலையகத் தமிழர்" எனுஞ்சொற்கு உணர்வுசார்ந்த பல வரை விலக்கணங்களைக் கடந்து, மேலும் விரிவுபடுத்தக்கூடிய விஞ்ஞான ரீதியான வரைவிலக்கணத்தை வழங்கியவர்**

கல்லூரி அதிபர் எஸ். விஜயசிங், கலாநிதி ந. ரவீந்திரன், தோழர் லெனின் மதிவானம், கலைஞர் வேல் ராமர், மல்லியப்புசந்தி திலகர் (கட்டுரையாளர்) ஆகியோர் கா. சிவத்தம்பி நினைவுகளைப் பகிரந்துகொண்டதும் இப்போது நினைவில் மிதக்கிறது.

எமது நினைவோடையில் கா. சிவத்தம்பி எனும் பேராறு ஓடிக் கொண்டிருக்கிறது என்பதற்கு அவரது அறிவின் விசாலம் தான் காரணம் என்பதை அறிவோம். அந்த விசாலமான மனிதரை, அறிவு ஜீவியை இந்த சாதாரண மனிதன் சந்தித்த சந்தர்ப்பங்களில் அவரது உடல்நிலை வெவ்வேறு படிநிலையில் இருந்தது.

- விரிவுரைகளுக்கும், விழாக்களுக்கும் வந்துபோகக்கூடிய காலம்.
- வெளியே நடமாட முடியாத உடல்நிலையும் கண்பார்வைத் தெளிவும் குறையத் தொடங்கியதுமான காலம்.
- உடற்சிக்கலாலும், கண்பார்வை செயலிழந்துவிட்ட நிலையிலும் செயற்பாட்டுடன் முழுமையாக இயங்கிக்கொண்டிருந்த காலம்.

முதலாவது காலப்பகுதி, 2001-ஆம் ஆண்டில் அவர் தகைசால் பேராசிரியராக அமர்ந்திருக்க, ஒரு மாணவனாக நேர்முகத் தேர்வுக்காக அவரின் முன்னால் நின்ற நினைவு. அவரிடம் கற்றுத் தேர்ந்தவர்கள் பலர். அதில் தேர்வானதும், அவரது உடல்நிலை காரணமாக அவர் வகுப்பறைக்குள் வருவதற்கு தோள் கொடுத்த தோழர்களாக இருந்தோம் என்பதில், எங்கள் தோள்களுக்கும் பெருமையே.

இரண்டாவது காலப்பகுதி 2007-ஆம் ஆண்டு 'மல்லியப் புசந்தி' நூலுக்கான 'முன்னுரை' எழுதி வாங்கப் போய் முப்பது நாட்கள் அவர்கூடவே கழித்து இறுதியில் 'பின்னுரை' வாங்கிக்கொண்டு வந்த காலம். அந்த பின்னு ரையும் 'நினைவில் நிற்கும் கவிதைகள்' எனும் அவரது தலைப்பிலேயே நூலில் இடம்பெற்றுள்ளது.

மூன்றாவது காலப்பகுதி, 2010-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் இடம்பெற்ற செம்மொழி மாநாட்டின் இணைப்பாளராக பணியாற்றிய அவருக்கு உதவப்போய், அவர் மறையும் வரை சுப்பையா கமலதாசன் எனும் எனது உதவியாளரை அவருக்கு உதவியாளராக நியமித்து அவருக்கு உதவிய காலம். அது அவரது புகழுடலை கொழும்பு, பொரளை கனத்தை மயானத்தில் தீயில் எரியவிட்டு கண்ணீர் மல்கி நின்ற கணங்கள் வரை தொடர்ந்தது. இந்த பணிவிடை, அவரது வாழ்நாளில் மலையகத்துக்கு அவர் ஆற்றிய பணிகளுக்காகவும் பங்களிப்புக்காகவும் மலையகத்தவர்களாக நாங்கள் செய்த காணிக்கை என்றே கருதுகின்றோம்.

## 'மலையகம்' என்பதற்கான வரைவிலக்கணம்:

'இலங்கைத்தமிழ் வழக்கில் இன்று மலையகம் என்பது, இலங்கையின் மலைப்பிரதேசங்களில் உள்ள பெருந் தோட்டங்களிலும் அவற்றைச் சார்ந்த நகரங்களிலும் வாழும் இந்திய வம்சாவளி தமிழரைக் குறிப்பதாகும். மலையகப் பகுதிகளைச் சாராத பகுதிகளிலுள்ள பெருந் தோட்டங்களில் அதாவது மேல், தென் மாகாணங்களைச் சார்ந்த இறப்பர் பெருந்தோட்டங்களில் வாழ்பவர்களையும் மலைசார் பகுதிகளில் இருந்து சென்று வட-கிழக்கு பகுதியின் விவசாய பிரதேசங்களிலும் (கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில்) கொழும்பிலும் வாழ்பவர் களையும்கூட மலையகத்தமிழர் என்ற தொடர் கொண்டே சுட்டும் மரபு இன்று வழக்கில் உள்ளது' எனும் வரைவிலக் கணத்துக்குச் சொந்தக்காரர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களே. மலையகப் பண்பாட்டுத்தளம் பற்றி முற்றிலுமாக கவனம் செலுத்தப்பட்டு அவரது தலைமையில் மேற்கொள்ளப்பட்ட 'இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும்' (தொகுதி 1, முன்னுரை பக். 11, உதயம் வெளியீடு, 1993) எனும் ஆய்வுத் தொகுப்பில் அவர் கூறும் மலையகம் என்பதற்கான வரைவிலக்கணம் இதுதான்.

மலையகம் சார்ந்தவர்கள் உணர்வு சார்ந்து எழுதிய பல வரைவிலக்கணங்களைக் கடந்து மேலும் விரிவுபடுத்தக் கூடியதான விஞ்ஞான ரீதியான வரைவிலக்கணமாக இதனைக் கொள்ளமுடியும். இன்றைய திகதியில் இதனை இன்னுமொரு பரிமாணத்தில் விரிவாக்கி விளங்கிக் கொள்ளவும் முடியும்.

இலங்கையில் 'மலையகம்' என்பது முதன்மையாக ஒரு புவியியல் நிலவமைப்பைக் குறிக்கும் சொல்லாகத் தோன் றினாலும், காலப்போக்கில் அது தனக்கென தனித்து வமான பண்பாடு, மொழி, இன அடையாளம், வாழ்வியல் மற்றும் பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு சமூகக் குழு மத்தின் அடையாளச் சொல்லாடலாகவும் பரிணமித் துள்ளது. எனவே, 'மலையகம்' என்பதை வெறுமனே ஒரு புவியியல் பிரதேசத்தின் பெயராகக் கருத முடியாது. புவியியல் எல்லைகளைக் கடந்த நிலையில், அது ஒரு சமூ கத்தின் உணர்வு வெளிப்பாடாகவும், சமூக-பண்பாட்டு அடையாளமாகவும், அதனுடன் தொடர்புடைய அரசியல் அடையாளமாகவும் நிலைபெற்றுள்ளது.

இந்த அடையாளத்தின் விரிவு இலங்கையின் புவியியல் எல்லைகளுக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. இன்று அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் மலையகத் தமிழர்களும் தமது மலையக அடையாளத்தைத் தொடர்ந்து வெளிப்ப டுத்தி வருகின்றனர். அதேபோன்று, தாய்த் தமிழ்நாட்



**மலையகத் தமிழர்கள் கௌரவமான சமூகமாக முன்னேற, சிங்கள அரசாங்கங்களுடன் மட்டுமல்லாது வடக்கு, கிழக்குத் தமிழ் சமூகங்களுடனும் போராட வேண்டியிருந்தது**

டிற்குத் திரும்பிச் சென்று வாழ்பவர்களிடையேயும், தம்மை மலையகத் தமிழர் என உணர்ந்து அந்த அடையாளத்தைத் தயக்கமின்றி வெளிப்படுத்துபவர்களிடையேயும் 'மலையகம்' என்பது ஒரு புவியியல் இருப்பிடத்தைவிட மேலான சமூக அடையாளமாகத் தொடர்கிறது.

இதனால், ஒருவர் தற்போது மலையகப் பிரதேசத்தில் வாழ்கிறாரா என்பதைக் காட்டிலும், தமது வரலாறு, சமூக நினைவு, பண்பாடு, மொழி, வாழ்வியல் அனுபவம் மற்றும் கூட்டு அடையாளத்தின் வழியாகத் தம்மை மலையகத்துடன் எவ்வாறு தொடர்புபடுத்திக் கொள்கிறார் என்பதே முக்கியத்துவம் பெறுகின்றது. இவ்வகையில், புலம்பெயர்ந்த நிலையிலும் தமது மலையக அடையாளத்தைத் தக்கவைத்துக்கொள்பவர்கள், மலையகத்தின் புவியியல் எல்லைகளை விரிவுபடுத்தும் ஒரு புதிய சமூகப் பரப்பை உருவாக்குகின்றனர்.

இலங்கையின் அரச நிர்வாக மற்றும் சனத்தொகைக் கணக்கெடுப்புச் சொல்லாடல்களிலும் இச்சமூகத்தின் அடையாளம் காலப்போக்கில் மாற்றமடைந்து வந்துள்ளது. வரலாற்றில் 'Indian Tamil' என வகைப்படுத்தப்பட்ட இச்சமூகம், அண்மைய சனத்தொகைக் கணக்கெடுப்பில் 'Malaiyaga Thamilar' என்ற பெயராலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 'மலையகம்' என்ற அடையாளம் வெறுமனே நிலவியல் சார்ந்த ஒன்றல்ல என்பதுடன், ஒரு சமூகத்தின் வரலாற்று அனுபவம், கூட்டு நினைவு, பண்பாடு மற்றும் சுய அடையாள உணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் உருவான சமூக-பண்பாட்டு அடையாளமாகவும் நிலை பெற்றிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இலங்கையில் இன்றும் 'இந்தியத் தமிழர்' என சட்ட ஏடுகளில் எழுதப்படும் மலையகத் தமிழர் சமூகம் குறித்த பேராசிரியர் கா. சிவத்தம்பியின் பார்வை பற்றி ஏன் பேசவேண்டியிருக்கிறது? பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் மொழி நடையில் கூறுவதானால் காய்தல் உவத்தல் இன்றி விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் புறநோக்காக நின்று பேசவேண்டியிருக்கிறது.

## மலையகத் தமிழப் பண்பாடு குறித்த பேராசிரியர் கா. சிவத்தம்பியின் பார்வை:

இலங்கை மலையகத் தமிழர் என இன்று தனியான இன அடையாளம் கொண்ட மக்களின் பண்பாட்டு அடையாளங்களை முன்னிலைப்படுத்துவதில் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் பார்வையும் பங்களிப்பும் தனித்துவமானது. பேராசிரியர் கா. சிவத்தம்பி பிறப்பால் 'இலங்கைத் தமிழர்'. சாதாரண மொழியில் சொன்னால் அவர் 'யாழ்ப்பாணத்தவர்'. இந்த யாழ்ப்பாணத்தவர்களில் குறிப்பிட்ட சதவீத்தினர் மலையகத்தவர்களைப் பார்த்த விதம், பார்க்கும் விதம் இன்றும் கூட வித்தியாசமானது எனச் சொல்லலாம். தம்மைவிடத் தாழ்ந்தவர்களாகவும், தகைமையில் குறைந்தவர்களாகவும், தமிழ் மொழியை உச்சரிக்கத் தெரியாதவர்காளகவும் பார்க்கின்றனர். இப்படி, மலையகத் தமிழர்கள் குறித்து அவர்கள் வகுத்திருந்த எல்லா நியமங்களும் எதிர்மறை நிலையிலேயே நிற்கின்றன. இந்த பின்னணியில் தம்மை இலங்கையில் கௌரவமான ஒரு சமூகமாக முன்னகர்த்தி முன்னேற மலையகத் தமிழ் சமூகம் தனியே சிங்கள அரசோடும், அரசாங்கங்களோடும் மட்டுமல்ல வடக்கு, கிழக்குத் தமிழ் சமூகத்திடமும் போராட வேண்டி இருந்தது, இருக்கிறது. இந்த யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தில் இருந்து வந்த ஒரு கற்றறிவாளர், பேராசிரியர், சமூகவியல் பார்வை கொண்டு 'மலையகம்' என்ற உணர்வைப் புரிந்துகொண்டு அதனை வரைவிலக்கணம் செய்யவும், அதனைப் பரவலடையச் செய்யவும் வழங்கிய பங்களிப்புகள்தான் இன்றைய நினைவில் மீட்கப்பட வேண்டியது.

1993-ஆம் ஆண்டு உதயம் பவுண்டேசன் நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட இலங்கை 'மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்துநிலையும்' எனும் ஆய்வுத் தொகுப்பில், பதிப்பாசிரியராகப் பேராசிரியர் கா. சிவத் தம்பி எழுதிய முன்னுரையும் இங்கு நினைவுகூரத்தக்க தாகும். மலையத்தின் தோற்றுவாய், பண்பாட்டுத்தளம், வாழ்க்கைச் சடங்குகள், குழுநிலை வழிபாட்டு முறைகள், வழிபாட்டு முறைகளில் பெண்கள், தோட்ட நகர்சார் வழிபாட்டு முறைகள், மலையகப் பகுதிகளில் கத்தோலிக்கம், ஆடை அணிகள், கைவினைப் பொருட்கள், ஆற்றுகைக் கலைகள், கட்புலக் கவின் கலைகள், பண்பாட்டு நடவடிக்கைகளின் வருடாந்த சூழல், மலையகம் பற்றிய ஒரு தேசத்தின் நூற்படிட்டியல் போன்றன இந்தத் தொகுப்பு நூலில் அடங்கியுள்ளன. மலையகம் சார்ந்த ஆய்வறிஞர்கள் இந்தக் கட்டுரைகளை வழங்கி இருந்தாலும் அந்த ஆய்வுத் தொகுப்புக்கு தலைமை வகித்து அவர் எழுதியிருக்கக்கூடிய முதற் கட்டுரை மலையகம் குறித்த பண்பாட்டு அம்சங்களைத் தொகுத்தளிக்கும் கட்டுரையாக அமையப்பெற்றுள்ளது.

## மலையகத் தமிழ் இலக்கியம் குறித்த பேராசிரியர் கா. சிவத்தம்பியின் பார்வை:

இந்த மலையகம் எனும் தொடரை அல்லது சொல்லாடலை பேராசிரியர் கா. சிவத்தம்பி ஏன் வரைவிலக்கணம் செய்ய முனைய வேண்டும்? மலையக இலக்கியத்தின் வழி நின்று அந்த சமூகத்தை அவர் தரிசிக்கத் தொடங்கியதே அதற்கான காரணமாகும்.

மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளையின் In Ceylon Tea Garden எனும் ஆங்கில நெடுங்கவிதை அவரை



**இலங்கை மலையகத் தமிழர்களின் தனித்துவமான பண்பாட்டு இடையாளத்தை முன்னிலைப்படுத்துவதில் பேராசிரியர் சிவத்தம்பியின் பார்வையும் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது**

ஆகர்சித்து இருந்த விதத்தை நான் நேரில் பலமுறை அவதானித்து இருக்கிறேன். எனது 'மல்லியப்புசந்தி' வெளியிடப்பட்ட அதேநாளில் 'In Ceylon Tea Garden' எனும் ஆங்கிலத் தொகுப்பையும் 'இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே' எனும் சக்தீ அ. பாலையாவின் தமிழாக்கத்தையும் பாக்யா பதிப்பகத்தின் ஊடாக இரண்டாம் பதிப்பாகக் கொண்டுவந்தோம். அதன் நகலை அவருக்கு வாசித்துக் காட்டியபோது, ஓரிடத்தில் My bronze bodied men எனும் அந்த பகுதியை திரும்பத் திரும்ப வாசிக்கக் கோரி அப்படியே இலயித்திருப்பார். தலாத்துஓயா கே. கணேசை அனைத்து இந்திய இலக்கிய முக்கியத்தவமுடையவராக அவர் தரிசித்தார். என்.எஸ்.எம். ராமையாவின், தெளிவத்தை ஜோசப்பின் கதைகளை அவர் வாசித்துப் புரிந்துகொண்டார். 'தெளிவத்தை ஜோசப் போன்றவர்கள் எழுதாமல் விட்டிருந்தால் எங்களுக்கு மலையகம் குறித்த பாதி விசயங்கள் தெரியாமலேயே போயிருக்கும்' என, 'ஞானம்' தெளிவத்தை ஜோசப் சிறப்பிதழிலே குறிப்பிட்டுள்ளார். சிதம்பரநாத பாவலரையும், குறிஞ்சிதென்னவனையும், சு. முரளிதரனையும், மல்லிகை சி. குமாரையும், ஏன், மல்லியப்புசந்தி திலகரையும் கூட வாசிப்பதன் ஊடாகப் புரிந்து கொள்ள முனைந்தார். மு. நித்தியானந்தனையும், சாந்திகுமார், ஜோதிகுமார், லெனின் மதிவானம் போன்றவர்களை ஆய்வறிஞர்களாக அறியத் தலைப்பட்டார். அதனால், அவரது பார்வை இலக்கியத்துக்கு வெளியேயும் விரிந்து சென்றது.

'இலங்கையில் தமிழ் என்கிற நதி சிலவேளைகளில் ஒன்றையொன்று சந்திக்கின்ற - சில வேளைகளில் சந்திக்காத பல நீரோடைகளின் சங்கமிப்பாக அமைகிறது. இதற்குள் யாழ்ப்பாணம் வருகிறது, மட்டக்களப்பு வருகிறது, வன்னி வருகிறது, கொழும்பு வருகிறது, இஸ்லாமிய வாழ்க்கை வருகிறது, மலையக வாழ்க்கை வருகிறது. இந்த நீரோடைகளின் சலசலப்பான பாய்ச்சல் ஒன்றோடொன்று சேருகின்ற போதுதான், நான் நம்புகிறேன் ஈழத்து இலக்கியம் என்கிற நதி ஓடும்' என பேராசிரியர் காரத்திகேசு சிவத்தம்பி 'மல்லியப்புசந்தி' கவிதை நூலுக்கு வழங்கிய அறிமுகக் குறிப்பில் தனது குரல் வழியாகவே பதிவு செய்துள்ளார். இந்தப் பதிவின் மூலம் ஈழத்து இலக்கியத்தில் மலையக இலக்கியத்தின் முக்கியத்துவம் - வகிபாகம் என்னவென்பது உணர்த்தப் படுகின்றது.

## மலையக நிகழ்த்துக் கலைகள் குறித்த பேராசிரியர் கா. சிவத்தம்பியின் பார்வை:

மலையகத்துக்கே உரித்தான கலைகள் பற்றிய அவரது கவனம் திரும்பியது. காமன் கூத்து, பொன்னர் சங்கர், அர்ச்சுனன் தபசு போன்ற கலைகளின் பண்பாட்டு அழகியலை, அது கூறும் அரசியலைப் புரிந்துகொண்டார். அவர் பல மேடைகளில் கூறிய கருத்து என்வசம் அவரது குரலில் ஓடியோ பதிவாகவே உள்ளது. 'நான் பார்த்த கலைகளிலே மலையகத்தில் ஆடப்படும் 'அரச்சுனன் தபசு' போன்ற மெய்ச்சிலிர்க்கும் கலையை நான் வேறு எங்குமே பார்த்ததில்லை' என, இங்கிலாந்து பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில், நாடகத்துறையிலே ஆய்வு செய்து கலாநிதிப் பட்டம் பெற்ற ஒரு பேராசியர் கூறுவது வெறும் புகழ்ச்சியாக இருக்க முடியாது.

இப்போதும் மலையகத்திலே... அறுபதடி உயர நெடிய உயர்மரத்தை சீராக்கி, இரண்டு அடிக்கு ஒரு படி என ஆணி அடித்து, அந்தப் படியையே பிடியாக்கி ஏறிச் சென்று, அந்த விடிகாலை குளிரில் அறுபதடி உச்சியில் நின்று ஆடும் மலையகத் தோட்டத் தொழிலாளியின் ஆட்டத்தை வேறு எங்கே போய் காண்பது. இலங்கை மலையகத்தில் இப்போதும் காணலாம்.

2010-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் இடம்பெற்ற செம்மொழி மாநாட்டு இலங்கை குழுவின் இணைப்பாளராகப் பேராசிரியர் கா. சிவத்தம்பியை நியமித்தது இருந்தார்கள். அவர் சார்பில் மாநாட்டுக் குழுவினருடனான தொடர்பாடலாளராக நான் செயற்பட்டேன். அறுபதடி மரத்தில் ஏறி ஆடும் வாய்ப்பை செம்மொழி மாநாட்டு ஏற்பாட்டு குழுவினர் வழங்கியிருந்தால் அதனைத்தான் அங்கே ஆடச்செய்திருப்பார் பேராசிரியர் சிவத்தம்பி. அந்த விழா மேடையில அறுபதடி மரத்தில் ஏறி ஆடுதல் சாத்தியமற்ற நிலையிலேயே, மலையகப் பாரம்பரிய கூத்துக் கலையான 'காமன் கூத்து' கலையை அரங்கேற்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார். மலையக பாரம்பரிய நிகழ்த்துகலைகளை உள்வாங்கிக் கொள்வதிலும் அதனைப் பொதுத் தளத்தில் முன்வைப்புச் செய்வதிலும் பேராசிரியர் கா. சிவத்தம்பி எப்போதும் உயர்ந்த எண்ணத்தைக் கொண்டிருந்தார்.

## மலையகத் தொழிற்சங்க, அரசியல் குறித்த பேராசிரியர் கா. சிவத்தம்பியின் பார்வை:

மலையக அரசியல் பின்புலத்தை அடையாளம் கண்டு, அதனை அவர் அறிமுகஞ்செய்யும் விதமே அலாதியானது. உலகளாவிய ரீதியில் ஓர் அரசியல் கட்சிக்குப் பின்னால் தொழிற் சங்கக் கட்டமைப்பு இணங்குவதையும், ஆனால், இலங்கை மலையகத்தில் அங்குள்ள தொழிற்சங்களுக்குப் பின்னாலே அரசியல் கட்சிகள் அணிதிரளவேண்டி இருப்ப தையும் தெளிவாக அடையாளம் கண்டார். அதற்கான பின்புலத்தையும் விளக்கினார். மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டு வாக்குரிமையும் மறுக்கப்பட்ட நிலையில் தொழிற்சங்க கட்டமைப்பே அந்த மக்களின் அனைத்து அமைப்பாக்கத்துக்கும் ஆணிவேராக அமைந் ததைப் புரிந்துகொள்வதில்தான் அங்கே நிலவும் அரசியலைப் புரிந்துகொள்ள முடியும். இந்தப் புரிதல் பேராசிரியருக்கு நிரம்பவே இருந்தது.



**மலையகம் பற்றிய ஆய்வுகளை பிறர் மேற்கொண்ட காலம் மாறி, இன்று மலையகத்தைச் சேர்ந்தவர்களே தம்மைத் தாமே புறநிலையாக ஆராயும் முதிர்ச்சியைப் பெற்றுள்ளனர்**

மலையகத் தமிழ் மக்களுக்கு நடந்த அரசியல் பழிவாங்கலை யதார்த்த நிலை நின்று ஏற்றுக்கொண்டு, அது குறித்து பல இடங்களில் அவர் பேசி இருப்பதை நாம் காணலாம். இந்திய வம்சாவளியினர் என்ற நிலையில் இம் மக்கள் குடியுரிமைப் பிரச்சினையை எதிர்நோக்கியபோது, அக்காலத்தில் இலங்கைத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய முக்கிய அரசியல் கட்சியாக விளங்கிய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் ஏற்பட்ட பிளவையும் மறந் துவிடக் கூடாது. ஜி.ஜி. பொன்னம்பலம் குடியுரிமை தொடர்பான சட்டமூலங்களுக்கு ஒரே நிலைப்பாட்டை எடுக்காத நிலையில், அவருடன் ஏற்பட்ட கருத்து வேறு பாட்டின் காரணமாகக் கட்சியிலிருந்து விலகி, எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை உருவாக்கிய வரலாற்று உண்மையை, எஸ். ராமநாதன் எழுதிய மலையக இந்திய வம்சாவளியினர்: இருளும் ஒளியும் என்னும் நூலுக்கு எழுதிய அணிந்துரையில் பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப் பிடுகிறார்.' இது தவிரவும், யதார்த்த அரசியல் நிலையில், இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தையும் மலையகத் தமிழ் மக்களின் போராட்டத்தையும் இணைத்து விட முடியாது என்பதை தெளிவாக அந்த நூலிலே குறிப்பிடுகின்றார். எனவே மலையகததின் அரசியல் பயணம் வேறானது, தனித்துவ மானது என்பது அவரது பார்வையாகும்.

## மலையகத் தமிழாராய்ச்சி மாநாடும் பேராசிரியர் கா. சிவத்தம்பியும்:

கலை, பண்பாட்டு, இலக்கிய, தொழிற்சங்க, அரசியல் புரிதல்களோடு, மலையகத் தமிழராய்ச்சி மாநாட்டு தலைமை வகித்து அவர் வழங்கிய பங்களிப்பு மிக உயர்வானது.

உலகெங்கும் நடந்த தமிழராய்ச்சி மநாடுகள் பற்றி நாம் பேசுகிறோம். மலையகம் தனக்கான ஒரு தமிழராய்ச்சிய மாநாட்டை நடத்த முயற்சித்து இருகிறது. 1996-இல் நடைபெற்ற இந்த முயற்சி, அப்போது மத்திய மாகாண சபையில் கல்வி கலாசார அமைச்சராக இருந்த வீ. புத்திரசிகாமணி ஏற்பாட்டில் நடைபெற்றது. நுவரெலியா மாவட்டத்தில் ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரியில் மூன்று நாட்கள் நடைபெற்ற அந்த மாநாட்டிற்கு தலைமை யேற்று பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆற்றி இருந்த உரையும், அந்த தமிழராய்ச்சி மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் தொகுக்கப்பட்டு 'மலையகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு' எனும் நூலுக்கு வழங்கியிருக்கும் முன்னுரையும் முக்கியமானது.

அந்த முன்னுரையில் 'மலையகம் சாராத பிறராலேயே மலையகம் தொடர்பான ஆய்வுகள் வெளிவந்த காலம் போய், இப்போது மலையகத்தைப் பின்புலமாகக் கொண்டவர்களே தம்மைத்தாம் புறநிலையாக நின்று நோக்கும் மனப்பக்குவத்தையும் முதிர்ச்சியையையும் பெற்றுள்ளனர்' எனப் பேராசிரியர் குறிப்பிடுவது அவதா னிக்க வேண்டியது.

இந்த மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற அந்த நாட்களில் அது தொடர்பான பல்வேறு சர்ச்சைகள் பத்திரிகைகளில் நீண்ட நாட்கள் ஓடின. இது 'மலையகத் தமிழர்' ஆராய்ச்சி மாநாடாக இருக்கலாமே அன்றி 'மலையகத் தமிழ்' ஆராய்ச்சி மாநாடாக எவ்வாறு அமைய முடியும் எனும் கேள்விகள் அன்று விவாதங்களாக முன்வைக்கப்பட்டன. அப்படியொரு தமிழை 'மொழியாக' ஏற்றுக்கொள்ள முடியாதவர்களின் காழ்ப்புணர்வே அது. மலையகத் தமிழுக்கும் மலையகத் தமிழருக்கும் சமவாய்ப்பை வழங்குவதில் உள்ள தயக்கத்தின் வெளிப்பாடே அது.

ஆனாலும், அந்த மாநாட்டில் பேராசிரியர் ஆற்றிய உரை அவற்றுக்குப் பதிலிறுத்தியது. 'மலையகத் தமிழ்ச் சமூகத்துக்கு தேசிய மட்டத்தில் சமவாய்ப்பு கிடைக்கும் வரை சவால்களை எதிர்நோக்குவதில் சளைக்கக் கூடாது. முன்னர் எதிர்நோக்கிய சவால்களை விட எதிர்கால சவால்கள் அதிகமாக இருக்கலாம் அதற்காக சளைத்துவிடக் கூடாது' என்பதே அந்த முக்கியத்துவமிக்க செய்தி.


## முடிவுரை:

முப்பது வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டில், மலையகம் எதிர்கொள்ள நேரும் சவால்கள் குறித்து பேராசிரியர் கார்த்திகேசு சிவத் தம்பி ஆற்றிய உரை, சமகாலத்திலும் (2026) உணரக்கூடி யதாக உள்ளது. வேறு வதிவிடங்கள் இன்றி, உரிமையற்ற 'லைன்' அறைகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் மலையகத் தமிழ் மக்கள், அதிலிருந்து சட்டத்தின் துணையோடு பிஸ்கால் அதிகாரிகளால் வீதியில் தூக்கி வீசப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நாட்களில், பேராசிரியர் கா. சிவத் தம்பியின் எதிர்வுகூறல் எந்தளவுக்கு யதார்த்தமானது என் பதையும் உறுதி செய்ய முடிகிறது. பேராசிரியர் கா. சிவத் தம்பி தலைமையில் இடம்பெற்ற மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு ஒரு வரலாற்றுப் பதிவாகும். அந்த மாநாடு நடைபெற்று 30 ஆண்டுகள் ஆகின்ற நிலையில், இன்னுமொரு மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கான தேவை இப்போது உணரப்படுகின்றது. முன்னைய மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் சமகாலப் போக்கு குறித்து இன்னுமொரு சந்தர்ப்பத்தில் தனியாக நோக்கலாம்.



thilagar@thaiveedu.com

# வைகறைவாணன்: இரண்டாம் தலைமுறைத் தோழமை



tg.theeban@gmail.com

**– செல்வ புவியரசன் –**

பத்தாண்டுகளுக்கு முன்னால், வாசகசாலை நண்பர்கள் ஒருங்கிணைத்த இலக்கியச் சந்திப்பு ஒன்றில், அருளர் எழுதிய 'லங்கா ராணி' நாவலைக் குறித்து பேசினேன். அந்நாவல் வெளிவந்த காலத்திலேயே சென்னையில் ஒரு விமர்சனக் கூட்டம் நடந்தது என்றும் அக்கூட்டத்தில் இருவேறு குழுக்களிடையே சச்சரவு எழுந்தது என்றும் குறிப்பிட்டேன். கூட்டத்தில் கலந்துகொண்ட நண்பர் களில் ஒருவர் இத்தகவலை எங்கிருந்து அறிந்துகொண்டீர்கள் என்று ஆர்வத்துடன் வினவினார். பேராசிரியர் இளவரசு குறித்து வைகறைவாணன் வெளியிட்ட மலரிலிருந்து கிடைக்கப்பெற்ற தக வல் என்று கூறிய நான், மேலும் வைகறை தொகுத்து பதிப்பித்த அரணமுறுவல் மலரைக் குறித்தும் அறிமுகப்படுத்தினேன். பொன்னி, சாளரம் பதிப்பகங்கள் வாயிலாக பதிப்பிக்கப்பட்ட க. திருநா வுக்கரசு, சி. அறிவுறுவோன், வைகறைவாணன் ஆகியோரைக் குறித்த மலர்கள் கடந்த ஐம்ப தாண்டு கால அரசியல், சமூக, கலை இலக்கிய வரலாற்றின் முக்கியமான பதிவுகளைக் கவனத் துடன் தொகுத்து தமிழ்ச் சமூகத்திற்குக் கையளித்துள்ளன.

ஒரு தொலைபேசி உரையாடலின்போது, மலர்களின் மன்னர் என்று திராவிட இயக்க இதழாளர் மா. இளஞ்செழியன் கொண்டாடப்பட்ட தகவலை என்னோடு பகிர்ந்துகொண்டார் வைகறைவாணன். எங்கள் தலைமுறைக்கு நீங்கள்தான் மலர் மன்னர் என்று அவரது வெளியீடுகளை வரிசைப்படுத்தினேன். எதிர்முனையில் சிரிப்பலை எழுந்தது. சென்னை புத்தகக் காட்சியின்போது கவனம் ஈர்க்கும் நூற்றுக்கணக்கான புதிய வெளியீடுகளிடையே சாளரம் இலக்கிய மலர் தனித்து விளங்கியது. அவருடனான அறிமுகம் வாய்க்கும் முன்பே எனது கவிதைகளுக்கும் அதில் இடம் கிடைத்தது. 'தச்சன்' இரா. நாகராஜன் கேட்டுப்பெற்றார். அவர்தான் வைகறைவாணனிடம் அறிமுகப்படுத்தினார். வைகறைவாணனும் எனது தந்தையாரும் திருவையாறு அரசர் கல்லூரியில் உடன்பயின்ற தோழர்கள், புதுக்கோட்டை கல்லூரியில் தமிழாசிரியர் பயிற்சியின்போது அறைத் தோழர்கள். அவருடனான பல சந்திப்புகளுக்குப் பிறகே அந்த நட்புறவு தெரியவந்தது. தந்தையின் கல்லூரி நினைவுகளில் செயபாலன் என்ற இயற்பெயரே எனக்கு அறிமுகமாயிருந்தது. வாழ்வின் ஓட்டத்தில், அவருக்கும் என் தந்தைக்கும் இடையே தடைப்பட்டிருந்த தொடர்பு எனது அறிமுகத்திற்குப் பிறகு தொடர்ந்தது. எனது திருமணத்திற்கு, பட்டுக்கோட்டைக்கு நேரில் வந்து வாழ்த்தினார்.

வைகறை, தஞ்சைக்கு வரும் ஒவ்வொரு பயணத்தின்போதும் குறைந்தது இருபது பேரையாவது சந்திக்கும் திட்டத்துடன்தான் வருவார். ஓகஸ்ட் இரண்டாம் தேதியன்று அவரது வீட்டில் இறுதி நிகழ்ச்சிகளுக்காகக் கூடிநின்ற நண்பர்களில் தஞ்சையிலிருந்து வந்த கொள்கை உறவுகள் நிறைந்திருந்தார்கள். திராவிட இயக்கம், பொதுவுடைமை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், நவீன கலை இலக்கியவாதிகள், கல்வியாளர்கள், இதழாளர்கள் என எல்லோருக்கும் இணைப்புப் பாலமாக அமைந்தது அவரது வாழ்வு. திராவிட இயக்கம் அரசியல் வெளியிலும் தனித்தமிழ் இயக்கம் பண்பாட்டு வெளியிலுமாக இணைந்து பயணித்தவை என்ற கருத்தில் அவருக்கு உடன்பாடு உண்டு. அவரது வெளியீடுகளும் நண்பர்கள் வட்டமும் அதற்குச் சான்று. அதே நேரத்தில், இவ்வியக்கங்களுக்கு இடையிலான திடீர் அணிமாறுதல்கள், அதற்குச் சொல்லப்படும் நியாயங்கள் ஆகியவற்றைத் தமது வழக்கமான புன்னகையோடு கடந்துவிடுவார்.

மறுபதிப்புகளிலும் அவரது முத்திரைகள் உண்டு. பூமணி 'அஞ்ஞாடி'யின் வழியே மறுபிரவேசம் செய்தார். அதற்கு முன்பு வெளியான அவரது அனைத்து நாவல்களையும் சிறுகதைகளையும் முழுத்தொகுப்புகளாக வெளியிட்டவர் வைகறை. பொதுவுடைமை குறித்த ராஜாஜியின் அறிமுக நூலையும் அவர் வெளியிட்டார். விடுதலைப் போராட்டக் காலத்தில் சிறையிலிருந்தபோது சக கைதிகளுக்கு அவர் எடுத்த வகுப்புகளின் சுருக்கம் அது. பின்பு, தேசிய முதலாளித்துவத்தின் தீவிர ஆதரவாளராகிவிட்ட ராஜாஜி அந்தப் புத்தகத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டார். இன்குலாப் கவிதைகள் முழுத் தொகுப்பையும் வைகறை வெளியிட்டார். இளம்பிறை கவிதைகளைக் கவனம் ஈர்க்கும் வடிவமைப்புடன் வெளியிட்டார். பேராசிரியர் இளவரசு கடிதங்களும் கல்லூரி நினைவுகளும் அறுபது எழுபதுகளின் அரசியல் இயக்கப் போக்குகளையும் மாணவர்கள் பங்கேற்பையும் குறித்த ஆவணங்கள். பேராசிரியர் இரா. சுப்பிரமணியின் மெக்காலே புத்தகத்தையடுத்து அவர் எழுதிய வில்லியம் பெண்டிங் குறித்த புத்தகத்தை வெளியிடும் இறுதிக்கட்டப் பணிகளில் இருந்தபோதுதான் உடல்நலக்குறைவால் நம்மிடம் விடைபெற்றுக்கொண்டார் வைகறை.

பொன்னி, சாளரம் வெளியீடுகள் சமூக அக்கறையுடன் கூடிய அரசியல் பார்வை, தமிழ் இலக்கிய மரபில் புலமை, நவீன கலை இலக்கிய இயக்கங்களின் தேவை குறித்த தெளிவு ஆகியவற்றைக் கொண்டவை. இவை அனைத்தும் ஒருசேர வாய்க்கப்பெற்ற தமிழ்ப் பதிப்பகங்கள் ஒரு சிலவே. வைகறைவாணனின் புலவர் படிப்பும் அரசியல் இயக்கத் தொடர்புகளும் இயல்பான கலைமனதும் இந்தப் பன்முகத் தன்மையைச் சாத்தியமாக்கியுள்ளன. அவர் பதிப்பாளர் மட்டுமல்ல, படைப்பாளரும்கூட. அவரது காதல் கவிதைகளை அடிபிறழாது நினைவுகூரும் வாசகர்கள் இருக்கிறார்கள். நேரிசை வெண்பாக்களில் புதிய பாடுபொருள்களைப் பரிசோதித்துப் பார்த்திருக்கிறார். சைதாப்பேட்டை பேருந்து நிலையம் எதிரில் இயங்கிய சாளரம் அலுவலகத்திற்கு நண்பர் நாகராஜனும் நானும் சென்று மணிக்கணக்கில் அவரோடு பேசிவிட்டு, மடிப்பாக்கம் பேருந்தில் வழியனுப்பிவிட்டுத் திரும்புவோம். ஒரு செய்தியாளராக மட்டும் நீங்கள் சுருங்கிவிடக் கூடாது என்று நாகராஜனை ஊக்கப்படுத்தியபடியே இருப்பார். எனக்கும் அறிவுரைகள் உண்டு. அவரோடு பயணிக்கும் சகலரையும் அப்படி வழிப்படுத்தியவர் வைகறைவாணன். அவரால் ஊக்கம்பெற்றோரில் பலரும் இன்று கலை, இலக்கிய, ஊடகத் துறைகளிலும் கல்வித்துறையிலும் செயற்கரிய சாதனைகளை நிகழ்த்தி வருகின்றனர்.

உடல்நலம் குன்றியபோதும்கூட வெளியீடுகள், சந்திப்புகள், கூட்டங்களை ஒருங்கிணைக்கும் அவரது செயற்பாடுகளில் தேக்கமில்லை. காலமானதற்குச் சில நாள்களுக்கு முன்பு கூட, பொ. ஐங்கரநேசனின் தமிழ்நாட்டு வருகையையொட்டி அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ஒரு இலக்கியச் சந்திப்பை ஆர்வத்தோடு அவர் ஒருங்கிணைத்தார்.

நண்பர் நாகராஜனோடு இறுதி வணக்கம் செலுத்தச் சென்றேன். வைகறையின் கல்லூரித் தோழரும் இன்று உறவினருமாகிவிட்ட பேராசிரியர் வடுவூர் இளமுருகனோடு சில வார்த்தைகள் பேசினேன். திருவையாறு அரசர் கல்லூரி நாள்களை நினைவுகூர்ந்தார் இளமுருகன். ஏதோ ஒரு வேகத்தில் வைகறை தனது படிப்புச் சான்றிதழ்களைக் கிழித்துப் போட்டுவிட்டார், சில ஆண்டுகளாவது ஆசிரியப் பணியில் இருந்திருக்கலாம் என்ற வருத்தத்தை அவர் பகிர்ந்துகொண்டார். எழுபதுகளின் தொடக்கத்தில் தமிழ் பயின்ற சில மாணவர்கள் இன்னும் ஏதேனும் ஒரு அலங்காரப் பதவியில் ஒட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அந்தத் திசைவழிக்கு மாறாகத் தமிழியக்கத்துக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தவர் வைகறை. தமிழ் வாழும்... தமிழ் வெல்லும்... வைகறைகள் வந்துகொண்டேயிருப்பார்கள்.

**நன்றி: காக்கைச் சிறகினிலே – செப்ரெம்பர் 2026**



selva.puviyarasan@thaiveedu.com

# நந்தா மாலினி

## ஒரு தலைமுறையின் குரலும் நமது காலத்தின் சமூக மௌனச்சாட்சியும்

பி. பற்குணராஜன்



இலங்கை இசையுலகின் ஒப்பற்ற ஆளுமையான நந்தா மாலினி அவர்களின் மறைவு, ஒரு பாடகியின் இழப்பு மட்டுமல்ல; நமது இளமைக்காலத்தின் ஒரு பகுதியையே மௌனமாக இழந்துவிட்ட உணர்வை ஏற்படுத்துகிறது. அவர் வெறுமனே பாடியவர் அல்லர்; அதிகாரத்தின் போக்கைக் கேள்விக்குள்ளாக்கவும், ஒடுக்கப்பட்டோரின் வலியை வெளிப்படுத்தவும் தமது குரலை ஓர் ஆயுதமாக்கியவர்.

கொழும்புப் பல்கலைக்கழக விடுதியில், எப்போதும் ஏதோ ஓர் அறையிலிருந்து தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்கும் குரலாக நந்தா மாலினியின் குரல் இருந்தது. அது வெறும் பாடலின் ஒலி அல்ல; எமது தலைமுறையின் உணர்வுகளோடும் போராட்டங்களோடும் இரண்டறக் கலந்திருந்த ஒரு குரல்.

அக்கால அரசியல் போராட்டங்களும் வன்முறைகளும் எமது விடுதி நண்பர்கள் பலரை நாள்தோறும் எம்மிடமிருந்து பறித்துக்கொண்டிருந்தன. மறுபுறம், நந்தா மாலினியின் சில பாடல்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்புத் தடைகளையும் தணிக்கைகளையும் எதிர் கொண்டிருந்தன. எனினும், அந்தத் தடைகளையெல்லாம் பொருட்படுத்தாது, விதிவிலக்காக விடுதி அறைகளில் அவரது பாடல்கள் ஒலித்துக்கொண்டிருந்தன. அச்சூழலில், அந்தக் குரல் எமக்கு வெறும் இசையாக இருக்கவில்லை; அது எதிர்ப்பின் குரலாகவும், இழப்புகளின் வலியைத் தாங்கிக்கொள்ளச் செய்த துணையாகவும் இருந்தது.

காலம் கடந்துவிட்டது. அந்த அறைகளும் அந்த நண்பர்களும் அந்தப் போராட்ட நாட்களும் இன்று நினைவுகளாக மட்டுமே எஞ்சியுள்ளன. ஆனால், எங்கோ ஓர் அறையில் ஒலித்துக்கொண்டிருந்த நந்தா மாலினியின் குரல் மட்டும் இன்னும் மனதில் கேட்கிறது. அதனால்தான் அவரது மறைவு ஒரு கலைஞரின் மறைவாக மட்டும் தோன்றவில்லை; எமது இளமைக்காலத்தின் ஒரு குரல் மௌனமாகிவிட்டதுபோல் உணரப்படுகிறது.

prasadbatti@gmail.com

### சமூக மாற்றுக்கான இசை மொழி:

1980-களின் நடுப்பகுதியில் அரசியல் மற்றும் சமூக விழிப்புணர்வைப் பெற்ற ஒரு தலைமுறைக்கு, நந்தா மாலினி அவர்களின் பாடல்கள் வெறுமனே கலை வெளிப் பாடாக மட்டும் அமையவில்லை. அவை சமூகத்தின் பல்வேறு முரண்பாடுகளையும் மனித வாழ்வின் ஆழமான வலிகளையும் எளிய மக்களின் மனங்களில் ஆழமாகப் பதித்த இசை மொழியாக அமைந்தன. ஏழை - பணக் காரன், அதிகாரம் - அதிகாரமற்றோர், சட்டம் - நீதி, தாய் - இழந்த மகன் எனச் சமூகத்தின் பல்வேறு பரிமாண ங்களையும் முரண்பாடுகளையும் அவரது பாடல்கள் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தின.

பேராசிரியர் சுனில் ஆரியரத்ன அவர்களின் கருத்துச் செறிவுமிக்க வரிகளுடன் இணைந்து உருவான நந்தா மாலினியின் படைப்புகள், சமூகத்தின் போலியான முகத்தி ரையை விலக்கி அதன் உண்மை முகத்தை வெளிப் படுத்தின. 1981-ஆம் ஆண்டு தொடங்கிய சத்யயே கீதய

(Sathyaye Geethaya) இசை நிகழ்ச்சித் தொடரின் மூலம் எள்ளல், குறியீடு மற்றும் நுட்பமான கேள்விகளின் வழியாக சமூகத்தின் முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டிய அவர், 1987-ஆம் ஆண்டு தொடங்கிய பவன (Pawana) இசை நிகழ்ச்சித் தொடரின் மூலம் அந்தக் குரலை மேலும் தீவிரப் படுத்தினார்.

பவன நிகழ்ச்சிகளிலும் அதனுடன் தொடர்புடைய பாடல்களிலும் வெளிப்பட்ட சமூகக் கொந்தளிப்பும் அரச அடக்குமுறைக்கு எதிரான விமர்சனமும் அக்கால அரசியல் சூழலைத் தீவிரமாகப் பிரதிபலித்தன. அவரது சில பாடல்கள் ஒலிபரப்புத் தடைகளையும் எதிர்கொண் டன. இவ்வகையில், நந்தா மாலினியின் இசை வெறும் ரசனைக்குரிய கலை வடிவமாக நின்றுவிடாமல், சமூக அநீதிகளைக் கேள்விக்குள்ளாக்கும் ஓர் எதிர்ப்புக் குரலாகவும் மாற்றத்திற்கான விழிப்புணர்வை உருவாக்கும் ஓர் இசை மொழியாகவும் பரிணமித்தது.

அதிகாரத்தின் முன்னால் அஞ்சாத நெஞ்சுடன், அரசு மற்றும் அமைப்புகளின் அடக்குமுறைகள் உச்சத்தில் இருந்த காலத்தில், 'கிளர்ச்சியாளர்' என்ற அரசின் அடையாளத்திற்குப் பின்னால் இருந்த ஒரு தாயின் ஒப்பாரியாகத் தமது பாடல்களை மாற்றி, மனிதநேயத்தின் குரலை உலகிற்கு உணர்த்தினார். தனிநபரை மட்டும் குற்றவாளியாகக் காட்டும் அதிகாரத்தின் பார்வைக்குப் பின்னால் இருக்கும் குடும்பத்தின் வலியையும், தாயின் துயரத்தையும், மனித வாழ்வின் அழிவையும் அவரது பாடல்கள் கேள்விக்குள்ளாக்கின.

இலங்கையில் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும், முற்போக்கு மேடைகளின் தவிர்க்க முடியாத பாடகியாகவும் அவர் திகழ்ந்தார். திறந்த பொருளாதாரத்தின் வருகைக்குப் பின்னரான சமூக ஏற்றத்தாழ்வுகள், வறுமை, இளைஞர்களின் ஏமாற்றம், அதிகாரக் கட்டமைப்புகளின் முரண்பாடுகள் எனப் பல் வேறு சமூக அனுபவங் களுக்கும் அவரது குரல் வெளிப்பாட்டுத் தளமாக அமைந்தது.



## எளிய குடும்பத்திலிருந்து இசையுலகின் உச்சிக்கு:

1943 ஓகஸ்ட் 23-ஆம் திகதி அளுத்கமையில் பிறந்து, கொழும்பு கொட்டாஞ்சேனையில் வளர்ந்த நந்தா மாலினி, ஒன்பது பிள்ளை களைக் கொண்ட எளிய குடும்பத்தில் நான்காவது பிள்ளையாகப் பிறந்தார். இவரது தந்தையான வின்சென்ட் பெரேரா தையல் கலைஞராகப் பணியாற்றினார். கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீ குணாநந்த வித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர், சிறுவயதிலேயே தமது இசைத் திறமையை வெளிப்படுத்தினார்.

இவரது இசைத் திறமையை இனங்கண்டஆசிரியை டி.என். மார்கரெட் பெரேரா, அவரை இலங்கை வானொலிக்கு அறிமுகப்படுத்தினார். 1956-ஆம் ஆண்டு நடைபெற்ற கவிதை பாடும் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றமை அவரது கலைப் பயணத்தில் குறிப்பிடத்தக்க தொடக் கமாக அமைந்தது. அதன் பின்னர் அவரது திறமையை அறிந்த டபிள்யூ.டி. அமரதேவா, அவரை வானொலி நிகழ்ச்சியில் பாடுவதற்கான வாய்ப்பை வழங்கினார். 'லமா மண்டபயா' நிகழ்ச்சியில் 'புது சாது' பாடலைப் பாடியதன் மூலம் அவர் நாடு முழுவதும் அறியப்பட்டார்.

சிங்கள இசையுலகில் தனித்துவமான குரலாக நிலைபெற்றிருந்த போதிலும், அவரது கலைப் பயணம் ஒரு மொழிக்குள் மட்டுப்பட்டதாக அமையவில்லை. 1960-களின் தொடக்கத்தில் சிங்களத் திரையுலகிலும் தமது குரலைப் பதித்தார். ரன்முத்து தூவா திரைப்படத்தில் நாரத திஸாசேகரவுடன் இணைந்து பாடிய 'கலன கங்காகி ஜீவிதே' பாடல் அவரது திரையிசைப் பயணத்தில் முக்கியமான தொடக்கமாக அமைந்ததுடன், சிறந்த பெண் பாடகிக்கான சரசவியா விருதையும் அவருக்குப் பெற்றுத்தந்தது.

புகழ் பெற்ற பின்னரும் தமது இசைப் பயிற்சியை அவர் கைவிடவில்லை. ஹேவுட் கலைக் கல்லூரியில் பயின்ற பின்னர் இந்தியாவின் லக்னோவில் உள்ள பத்கண்டே இசை நிறுவனத்தில் இசைப் பயிற்சியைத் தொடர்ந்தார். 1984-ஆம் ஆண்டு விஷாரத் பட்டத்தைப் பெற்றார். அமரதேவாவுடனான அவரது இசைப் பயணமும் குறிப்பிடத்தக்க தாகும். அவருடன் இணைந்து மதுவந்தி வானொலி நிகழ்ச்சியிலும், 1971-ஆம் ஆண்டு ஸ்ரவண ஆராதனா கச்சேரித் தொடரிலும் பங்கேற்றார்.

இசைத்துறையில் தனக்கென ஓர் உயர்ந்த இடத்தை உருவாக்கிய பின்னரும், அவரது கலைப் பயணம் சமூகத்திலிருந்து விலகியதாக அமைய வில்லை. பேராசிரியர் சுனில் ஆரியரத்னவுடனான நீண்டகாலப் படைப்புத் தொடர்பு, அவரது இசையை காதல் மற்றும் தனிமனித உணர்வுகளின் வெளிப் பாட்டிலிருந்து சமூகக் கேள்விக ளுக்கான ஊடகமாக விரிவுபடுத் தியது. அவர்களின் கூட்டிணைப்பு 1970-கள் மற்றும் 1980-களில்

> அவர் பாடிய கனவுகள் அனைத்தும் முழுமையாக நனவாகிவிட்டன என்று சொல்ல முடியாது. ஆனால், அவற்றை நோக்கிய பயணத்தில் அவரது குரல் ஒரு தலைமுறைக்கு அளித்த துணையும் நம்பிக்கையும் மறக்க முடியாதவை. ஒரு கலைஞரின் உடல் மறையலாம், ஆனால் அவர் எழுப்பிய கேள்விகளும் பாடிய கனவுகளும் தலைமுறைகளைக் கடந்து வாழும்.

இலங்கை இசையில் புதிய உணர்வொன்றை உருவாக்கியதாகக் குறிப்பிடப்படுகிறது.

அவரது கலைப் பயணம் சிங்கள மொழியில் மட்டும் நிலைத்திருக்கவில்லை. 1993-ஆம் ஆண்டு குங்குமப் பொட்டு (Kunkuma Pottu) என்ற பெயரில் தமிழ் பாடல்கள் அடங்கிய இசைத் தொகுப்பையும் வெளியிட்டார். இதன் மூலம் மொழிகளைக் கடந்து இசையின் வழியாக மக்களை அணுகிய அவரது கலைப் பார்வை வெளிப்பட்டது.

நீண்டகாலக் கலைப் பங்களிப்புக்காக அவர் 11 சரசவியா விருதுகளையும் 8 குடியரசுத் தலைவரின் திரைப்பட விருதுகளையும் பல்வேறு அங்கீகாரங்களையும் பெற்றார். 2017-ஆம் ஆண்டு இலங்கையின் காட்சி மற்றும் நிகழ்த்துகலைகள் பல்கலைக்கழகம் அவருக்கு 'தர்ஷன சூரி' என்ற கௌரவப் பட்டத்தையும் வழங்கியது. இது இலங்கைப் பல்கலைக்கழகமொன்றினால் பெண் கலைஞர் ஒருவருக்கு வழங்கப்பட்ட குறிப்பிடத்தக்க முதல் கௌரவ மாகப் பதிவாகியுள்ளது.

## காலத்தைக் கடந்த கலைப் பயணம்:

நந்தா மாலினியின் பாடல்கள் ஒரு காலத்திற்குள் அடங்கிவிடாத கலைப் பயணத்தின் சாட்சியங்களாகும். ஒரு காலத்தில் அரச அதிகாரத்தின் தடைகளையும் தணிக்கை களையும் எதிர்கொண்ட அவரது பாடல்கள், காலம் மாறியபோது அதே நாட்டின் அதிகாரபூர்வ நிறுவனத் தாலேயே கௌரவிக்கப்பட்டன. 2025-ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது Studio 09-ஐ 'Dr. Nanda Malini Studio' எனப் பெயரிட்டு அவரைக் கௌரவித்தது. இந்த நிகழ்வு அவரது கலைப் பயணத்தில் காணப்படும் வரலாற்று முரணின் குறிப்பிடத்தக்க அடையாளமாகும்.

ஒரு காலத்தில் ஒடுக்கப்பட்ட குரல், பின்னாளில் தேசிய நினைவின் ஓர் அங்கமாக அங்கீகரிக்கப்பட்டிருப்பது வரலாற்றின் முரணை மட்டுமல்ல; கலையின் நீடித்த ஆற்றலையும் வெளிப்படுத்துகிறது. அதிகாரங்கள் தற்காலிக மானவை; ஆனால் மக்களின் மனங்களில் வேரூன்றிய கலை காலத்தைக் கடந்து வாழக்கூடியது என்பதற்கு நந்தா மாலினியின் கலைப் பயணம் ஓர் அழுத்தமான சான்றாகத் திகழ்கிறது.

## ஒரு குரலின் இறுதி எதிரொலி:

கலாநிதி நந்தா மாலினி பெரேரா 2026 ஓகஸ்ட் 20-ஆம் திகதி, தனது 82-ஆவது வயதில் காலமானார். அவரது மறைவையடுத்து ஓகஸ்ட் 21, 22, 23 ஆகிய திகதிகள் தேசிய துக்க தினங்களாக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டன. அவரது இறுதிச்சடங்கு ஓகஸ்ட் 22-ஆம் திகதி பொரளை பொது மயானத்தில் நடைபெற்றது.

தமது இறுதிச்சடங்குகள் எளிமையான முறையில் நிறைவுபெற வேண்டும்; எந்தவிதமான ஆடம்பரமான நிகழ்வுகளோ உரைகளோ இடம்பெறக் கூடாது என்ற அவரது இறுதி விருப்பமும் அவரது வாழ்வின் எளிமை யையும் கொள்கைப் பிடிப்பையும் பிரதிபலித்தது. புகழின் உச்சியிலும் எளிமையைத் தழுவிய அவரது வாழ்வைப் போலவே, அவரது இறுதி விருப்பமும் ஆடம்பரத்தை நாடாததாக அமைந்தது.

அவர் மறைந்துவிட்டாலும், அவர் எழுப்பிய கேள்விகள் மௌனமாகிவிடவில்லை. அவரது கொள்கை உறுதியும், மனிதநேயப் பார்வையும், சமூக அநீதிகளுக்கு எதிராக ஒலித்த குரலும் நமது சமூக மனச்சாட்சியில் தொடர்ந்து எதிரொலித்துக்கொண்டே இருக்கும். ஒரு கலைஞரின் வாழ்வு முடிவுறலாம், ஆனால் மக்களின் மனங்களில் விழிப்பு ணர்வை விதைத்த அவரது குரலுக்கு முடிவில்லை.

எந்த இளம் தலைமுறையின் கனவுகளுக்கும் போராட்டங் களுக்கும் அவரது குரல் துணைநின்றதோ, அந்தத் தலைமுறையின் மாற்றத்திற்கான தேடல்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் காலத்திலேயே அவர் எம்மை விட்டுப் பிரிந்துள்ளார். அவர் பாடிய கனவுகள் அனைத்தும் முழுமையாக நனவாகிவிட்டன என்று சொல்ல முடியாது. ஆனால், அவற்றை நோக்கிய பயணத்தில் அவரது குரல் ஒரு தலைமுறைக்கு அளித்த துணையும் நம்பிக்கையும் மறக்க முடியாதவை. ஒரு கலைஞரின் உடல் மறையலாம், ஆனால் அவர் எழுப்பிய கேள்விகளும் பாடிய கனவுகளும் தலைமுறைகளைக் கடந்து வாழும்.

சென்று வாருங்கள், தாயே!
உங்கள் குரல் எம்மோடு என்றும் வாழும்.



ranjan.x@thaiveedu.com



ஃபிடல் காஸ்ட்ரோ நூற்றாண்டு

# காஸ்ட்ரோ: ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு

5 – III

தெ. சொலசீர்த்தி டீநிலங்கோ

**மேலாதிக்க எதிர்ப்பும் உலகளாவிய தென்னக சுயாட்சியும்:**

ஃபிடல் காஸ்ட்ரோவை உலக வரலாற்றில் நிலைநிறுத்துவது என்பது, அவரை ஒரு தேசியத் தலைவர் அல்லது கெடுபிடிப்போர் காலச் செயல்பாட்டாளர் என்பதைவிட மேலானவராக அங்கீகரிப்பதாகும். அவர், ஆதிக்கத்தை எதிர்ப்பதை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல், அந்த ஆதிக்கம் செயல்படும் கட்டமைப்புகளையே மறுசீரமைக்க முயன்ற பரம்பரையைச் சேர்ந்தவர். கோட்பாட்டு ரீதியாக, இது காஸ்ட்ரோவை மேலாதிக்க எதிர்ப்பு அரசியலின் மரபில் நிலைநிறுத்துகிறது. உலகளாவிய அதிகாரத்தின் பொருளாதார, கருத்தியல் அடித்தளங்கள் இரண்டையும் சவால் செய்யும் முயற்சிகள்.

அந்தோனியோ கிராம்சியின் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு, மேலாதிக்கம் என்பது வெறும் வற்புறுத்தலால் மட்டும் நிலைநிறுத்தப்படுவதில்லை. அது, ஆதிக்கம் செலுத்தும் சக்திகள் நெறிமுறைகள், நிறுவனங்கள் மற்றும் பொது அறிவை - இயற்கையானது, தவிர்க்க முடியாதது அல்லது சட்டபூர்வமானது என்று உணரப்படுபவற்றை - வடிவமைக்கும் திறனைச் சார்ந்துள்ளது. எனவே, மேலாதிக்க எதிர்ப்பு என்பது பல முனைகளில் செயல்பட வேண்டும். குறிப்பாக மூன்று முனைகள் முக்கியமானவை.

- பொருள் சார்ந்தவை: பொருளாதார உறவுகளை மாற்றுதல், வளங்களை மறுபகிர்வு செய்தல், மாற்று நிறுவனங்களை உருவாக்குதல்
- நிறுவன ரீதியானவை: ஆட்சி விதிகள், கூட்டணிகள் மற்றும் சர்வதேச ஒருங்கிணைப்பை மறுவடிவமைத்தல்
- கருத்தியல் ரீதியானவை: சமத்துவமின்மையையும் அடிமைத்தனத்தையும் நியாயப்படுத்தும் விவரிப்புகளை எதிர்த்தல்

காஸ்ட்ரோவின் அரசியல் வாழ்வை இந்த மூன்று பரிமாணங்களிலும் தலையிடுவதற்கான ஒரு முயற்சியாகப் படிக்கலாம். கியூபப் புரட்சி, நிலைபெற்றிருந்த சொத்து உறவுகளைச் சீர்குலைத்து, அரசின் கொள்கையை மறுபகிர்வுடன் சீரமைத்தது. அது உள்நாட்டில் நிறுவனங்களை உருவாக்குவதிலும், வெளிநாட்டில் கூட்டணிகளை அமைப்பதிலும் ஈடுபட்டது. உலகளாவிய சமத்துவமின்மையை வளர்ச்சிக் குறைபாட்டின் விளைவாகக் கருதாமல், வரலாற்று அநீதியின் விளைவாகக் காட்டும் ஒரு மாற்று விவரிப்பை அது உருவாக்கியது. அவர் அடிக்கடி கூறும் இந்த வாக்கியம் இந்த நோக்குநிலையைப் படம்பிடிக்கிறது: 'ஏகாதிபத்தியம் ஒருகொள்கை அல்ல, அது ஓர் அமைப்பு. ஆதிக்கம் ஓர் அமைப்பு சார்ந்ததாக இருந்தால், எதிர்ப்பும் ஓர் அமைப்பு சார்ந்ததாகவே இருக்க வேண்டும்'.

காஸ்ட்ரோவின் மேலாதிக்க எதிர்ப்பு அரசியல் தனித்து உருவாகவில்லை. புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகள் தன்னாட்சியை நிலைநாட்டவும் சர்வதேச ஒழுங்கை மறுவடிவமைக்கவும் மேற்கொண்ட முயற்சியான, 'மூன்றாம் உலகத் திட்டம்' என்று அடிக்கடி விவரிக்கப்படும் ஒரு

prasadbatti@gmail.com

பரந்த வரலாற்றுப் போக்கின் ஒரு பகுதியாக அவர்கள் இருந்தனர். 1955-ஆம் ஆண்டின் பாண்டுங் மாநாடு, ஜவஹர்லால் நேரு, கமால் அப்தெல் நாசர் போன்ற ஆளுமைகளுடன் தொடர்புடைய அணிசேரா இயக்கத்தின் உருவாக்கம் ஆகியவை இதன் ஆரம்பகால மைல் கற்களாகும்.

இந்தக் கண்ணோட்டத்தைத் தீவிரப்படுத்தி, செயல்பாட்டுக்குக் கொண்டுவந்ததே காஸ்ட்ரோவின் தனித்துவமான பங்களிப்பாகும். பாண்டுங் மாநாடு சகவாழ்வையும் நடுநிலைமையையும் வலியுறுத்திய நிலையில், ஹவானா மாநாடு, குறிப்பாக 1966-ஆம் ஆண்டின் முக்கண்ட மாநாடு, 1979-ஆம் ஆண்டின் அணிசேரா உச்சிமாநாட்டின்போது மிகவும் உறுதியான ஒரு நிலைப்பாட்டை முன்வைத்தது. நாடுகளுக்கு இடையே மட்டுமல்லாமல் இயக்கங்களுக்கு இடையேயும் ஒற்றுமை, காலனித்துவ எச்சங்களுக்கு மட்டுமல்லாமல், தொடர்ந்து நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் அடிமைத்தன வடிவங்களுக்கும் எதிர்ப்பு அவசியம் என்பதை வலியுறுத்தியது.

இந்த வலையமைப்பில் ஹவானா ஒரு மையப் புள்ளியாக மாறியது. அது தூதுக்குழுக்களை வரவேற்று, பயிற்சிகளுக்கு வழிவகுத்து, இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் ஆசியாவைச் சேர்ந்த தரப்பினரிடையே பரிமாற்றங்களைச் சாத்தியமாக்கியது. ஒரு சிறிய கரீபியன் தலை நகரம், மூன்றாம் உலகவாதத்தின் அரசியல் தலைநகரமாக மாறிய இந்த மாற்றம், குறியீட்டு, நடைமுறை விளைவுகளை ஏற்படுத்தியது. விளிம்பு நிலைநாடுகள் வெறும் செயற்றிட்டங்களுக்குப் பதிலளிப்பது மட்டுமல்லாமல், அவற்றைத் தாங்களே வகுக்க முடியும் என்ற கருத்தை இது உறுதிப்படுத்தியது. இது பிராந்தியங்கள் கடந்த போராட்டங்களை இணைத்து, ஒரு பொதுவான அடையாள உணர்வை வளர்த்தது. உலகளாவிய மன்றங்களில் ஓரங்கட்டப்பட்ட குரல்களை இது வலுப்படுத்தியது.

இந்த வழியில், காஸ்ட்ரோ ஓர் உலகளாவிய தெற்கினை - ஒரு நிலையான அணியாக அல்லாமல், ஒருங்கிணைப்பு, விவாதம் மற்றும் இலட்சியங்களுக்கான ஒரு களமாக - ஒருங்கிணைக்க உதவினார். காஸ்ட்ரோவைப் பொறுத்தவரை, மேலாதிக்க எதிர்ப்பு என்பது வெறும் பிரகடனங்களை விட மேலானது. அது உண்மையான விளைவுகளை மாற்றக்கூடிய, பொருள் சார்ந்த ஒற்றுமைச் செயல்பாடுகளைக் கோரியது. கியூபாவின் சர்வதேசவாதம் - இராணுவம், மருத்துவம், கல்வி - இந்தக் கொள்கையின் மிகவும் நன்கறியப்பட்ட வெளிப்பாடாக இருந்தது.

தெற்கு ஆபிரிக்காவில், அங்கோலாவில் கியூபாவின் ஈடுபாடும், அதன் விளைவாக நமீபியா மற்றும் இனவெறிக் கால தென்னாபிரிக்காவில் ஏற்பட்ட தாக்கங்களும், ஒரு சிறிய நாடு எவ்வாறு பிராந்திய சமநிலைகளை மாற்றியமைக்க முடியும் என்பதை நிரூபித்தன. நெல்சன் மண்டேலா பின்னர் குறிப்பிட்டது போல: 'குயிட் டோகுவானாவாலேயில் இனவெறி இராணுவத்தின் தோல்வி, ஒட்டுமொத்த ஆபிரிக்காவிற்குமான ஒரு வெற்றியாகும். 'இது அதன் பொருள்சார் பரிமாணத்தில் மேலாதிக்கத்திற்கு எதிரானதாக இருந்தது: இது வெறும் கதையாடல்களுக்கு சவால் விடுப்பது மட்டுமல்லாமல், களத்தில் உள்ள உண்மைகளையும் மாற்றியது.

அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்தது கியூபாவின் மருத்துவ சர்வதேசவாதமாகும், இது சர்வதேச ஈடுபாட்டின் விதிமுறைகளை மறுவரையறை செய்தது. பல சூழல்களில் துருப்புகளுக்குப் பதிலாக மருத்துவர்களைப் பணியமர்த்துவதன் மூலம், கியூபா வற்புறுத்தலுக்குப் பதிலாக மனித நலனை அடிப்படையாகக் கொண்ட ஒரு செல்வாக்கு மாதிரியை வழங்கியது. இந்த அணுகுமுறை தார்மீக மூலதனம் என்று அழைக்கப்படக்கூடிய ஒன்றைக் குவித்தது, இது உலகளாவிய தெற்கில் கியூபாவின் சட்டபூர்வமான தன்மையை வலுப்படுத்தியது.

இந்த நடைமுறைகள் ஒன்றிணைந்து, மேலாதிக்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளின் தொகுப்பை விரிவுபடுத்தின, மேலும் வளக் கட்டுப்பாடுகளின் கீழும் கூட ஒற்றுமையை நிறுவனமயமாக்கி விரிவுபடுத்த முடியும் என்பதை நிரூபித்தன. மேலாதிக்கத்திற்கு எதிரான அரசியலின் ஒரு மைய அச்சு, வளர்ச்சி மாதிரிகள் மீதான போட்டியாகும். பெரும்பாலும் பிரெட்டன் வுட்ஸ் நிறுவனங்களுடன் தொடர்புடைய இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய மரபுசார் கொள்கையானது, தாராளமயமாக்கல், ஏற்றுமதிநோக்கு, உலகளாவிய சந்தைகளுடன் ஒருங்கிணைதல் ஆகியவற்றை ஊக்குவித்தது. இந்தக் கட்டமைப்பு சார்புநிலையை மீண்டும் உருவாக்குவதாகவும், கொள்கைச் சுயாட்சியைக் கட்டுப்படுத்துவதாகவும் வாதிட்டு, காஸ்ட்ரோ இதை எதிர்த்தார். அவரைப் பொறுத்தவரையில் வளர்ச்சி என்பது வெளிப்புறமாகத் திணிக்கப்படுவதை விட, சமூக நோக்குடையதாகவும் அரசியல் ரீதியாகத் தன்னாட்சி பெற்றதாகவும் இருக்க வேண்டும்.

தொழிற்றுறை கொள்கை, கடன் மறுசீரமைப்பு மற்றும் காலநிலை நிதி தொடர்பான சமகால விவாதங்களில், இந்த விமர்சனத்தின் எதிரொலிகள் தெளிவாகத் தெரிகின்றன. பல நாடுகள், சூழலுக்கு ஏற்ற வளர்ச்சி உத்திகளை அனுமதிக்கும் சீர்திருத்தங்களை ஆதரித்து, உலகளாவிய விதிகளுக்குள் கொள்கைக்கான இடத்தை மீட்டெடுக்க முயல்கின்றன. காஸ்ட்ரோவின் மரபு என்பது ஒரு வார்ப்புருவை விட, ஒரு நெறிமுறை சார்ந்த கூற்றாகும். வளர்ச்சி

என்பது வெளிப்புறக் கட்டாயங்களுக்கு அடிபணியாமல், தேசிய முன்னுரிமைகள் மற்றும் சமூகத் தேவைகளுடன் இணைந்திருக்க வேண்டும். ஆதிக்க எதிர்ப்பு என்பது நிறுவனங்களைப் போலவே கருத்துகளைப் பற்றியதுமாகும். ஆதிக்க அமைப்புகள், சமத்துவமின்மையை வரலாற்று அதிகார உறவுகளின் விளைவாக அல்லாமல், நடுநிலையான செயல்முறைகளின் விளைவாக முன்வைப்பதன் மூலம் தங்களைத் தக்கவைத்துக் கொள்கின்றன.

காஸ்ட்ரோவின் உரைகள் இந்தக் கருத்தியல் போர்க்களத்தில் தலையீடுகளாகச் செயல்பட்டன. ஐக்கிய நாடுகள் சபையிலோ பிராந்திய மன்றங்களிலோ, அவர் உலகளாவிய பிரச்சினைகளை நீதி, வரலாறு, அதிகாரம் ஆகியவற்றின் அடிப்படையில் மறுவரையறை செய்தார். அவரது சொல்லாட்சி, அனுபவபூர்வமான விவரங்களை அறநெறி வாதங்களுடன் இணைத்து, பார்வையாளர்கள் உலகைப் புரிந்துகொள்ளும் விதத்தை மறுவடிவமைப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இதை காஸ்ட்ரோ மிகவும் எளிமையாகவும் இலகுவாகவும் இவ்வாறு விளக்கினார்: 'அவர்கள் வளர்ச்சியைப் பற்றிப் பேசுகிறார்கள், ஆனால் சுரண்டலைப் பற்றிப் பேசுவதில்லை. அவர்கள் உதவியைப் பற்றிப் பேசுகிறார்கள், ஆனால் உதவியை அவசியமாக்கும் அமைப்பைப் பற்றிப் பேசுவதில்லை.'

இந்த முரண்பாடுகளை அம்பலப்படுத்துவதன் மூலம், காஸ்ட்ரோ படிநிலை அமைப்பை இயல்புநீக்கம் செய்து, மாற்று விளக் கங்களுக்கு இடமளிக்க முயன்றார். இந்தக் கதைக் கட்டமைப்புப் பணி, உலகமயமாக்கல், பாதுகாப்பு, வளர்ச்சிகுறித்த மேலாதிக்கக் கட்டமைப்புகளைத் தொடர்ந்து எதிர்க்கும் சமகால இயக்கங்களுக்கு மையமாக விளங்குகிறது. காஸ்ட்ரோ முன்னெடுத்த மூன்றாம் உலகத் திட்டத்தின் விளைவுகள் ஒரு முக்கிய பாடத்தை எடுத்துக்காட்டுகின்றன. மேலாதிக்க எதிர்ப்பு என்பது தொலைநோக்குப் பார்வை மட்டுமல்ல, நீடித்த ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவனமயமாக்கலையும் கோருகிறது என்பதே அப்பாடமாகும்.

கெடுபிடிப் போரின் முடிவு மேலாதிக்க எதிர்ப்பு அரசியலை முடிவுக்குக் கொண்டுவரவில்லை. அது அதன் களங்களை மறுவடிவமைத்தது. இன்று, தன்னாட்சிக்கும் நீதிக்குமான போராட்டங்கள் உலகளாவிய ஆளுகை சீர்திருத்தக் கோரிக்கைகள் (எ.கா. சர்வதேச நிறுவனங்களில் பிரதிநிதித்துவம்), வர்த்தகம் மற்றும் முதலீட்டு விதிகள் குறித்த விமர்சனங்கள் (வளர்ச்சிக்கான கொள்கை வெளி), டிஜிட்டல் இறையாண்மைக்கான கோரிக்கைகள் (தரவு மற்றும் தொழில் நுட்பத்தின் மீதான கட்டுப்பாடு), காலநிலை நீதி (செலவுகள் மற்றும் பொறுப்புகளின் சமமான பங்கீடு) போன்ற களங்களில் வெளிப்படுகின்றன. இந்த ஒவ்வொரு களத்திலும், முக்கிய கேள்விகள் நீடிக்கின்றன. விதிகளை யார் வகுக்கிறார்கள், யார் பயனடைகிறார்கள், குறைந்த சக்திவாய்ந்த தரப்பினர் விளைவுகளை எவ்வாறு வடிவமைக்க முடியும்?

சமகால கூட்டணிகள் - காலநிலை பேச்சுவார்த்தைகளாக இருந்தாலும் சரி அல்லது தெற்கு - தெற்கு ஒத்துழைப்பாக இருந்தாலும் சரி - கூட்டுச் செல்வாக்கை உருவாக்குவதற்கான முந்தைய முயற்சிகளைப் பிரதிபலிக்கின்றன. சூழல்கள் வேறுபட்டாலும், அதிகாரத்தைப் பெருக்கும் காரணியாக ஒற்றுமைக்கு காஸ்ட்ரோ அளித்த முக்கியத்துவத்துடன் அடிப்படைத் தர்க்கம் ஒத்துப்போகிறது. பொருள், நிறுவனப் பரிமாணங்களுக்கு அப்பால், மேலாதிக்க எதிர்ப்பு வரலாற்றில் காஸ்ட்ரோவின் இடம் குறியீட்டு சக்தியால் நிலைநிறுத்தப்படுகிறது. அவரது பிம்பம் - எதிர்ப்பு, விடாமுயற்சி, தெளிவான பேச்சு - வேரூன்றிய அமைப்புகளை சவால் செய்ய முற்படும் இயக்கங்களுக்கு ஒரு குறிப்புப் புள்ளியாக மாறியது.

இந்தக் குறியீட்டுப் பரிமாணம் முக்கியமானது, ஏனெனில் அது அரசியல் கற்பனையை வடிவமைக்கிறது. இது, பங்கேற்பாளர்கள் மாற்றுவழிகளைக் கற்பனை செய்துபார்க்க உதவும் கதைகள், படிமங்கள் மற்றும் எடுத்துக்காட்டுகளின் ஒரு தொகுப்பை வழங்குகிறது. ஃபிரான்ஸ் ஃபனான் வேறு ஒரு சூழலில் வாதிட்டதுபோல, காலனித்துவ நீக்கம் என்பது ஒரு கட்டமைப்புச் செயல்முறை மட்டுமல்ல, அது செயலாற்றும் திறனையும் சாத்தியக்கூறுகளின் மறு உருவாக்கத்தையும் உள்ளடக்கிய ஓர் உளவியல் செயல்முறையும் ஆகும். சாதகமற்ற சூழ்நிலைகளிலும்கூட எதிர்ப்பைத் தக்கவைத்துக் கொள்ளமுடியும் என்பதை நிரூபிப்பதன் மூலம், காஸ்ட்ரோவின் மரபு இந்தச் செயல்முறைக்குப் பங்களிக்கிறது.

மேலாதிக்க எதிர்ப்பு வரலாற்றில் காஸ்ட்ரோவின் இடம் தனித்துவமானது. அது உலகளாவிய படிநிலைகளை எதிர்க்க முடியும், இறையாண்மையைச் செயல்படுத்த முடியும், ஒற்றுமையால் விளைவுகளை மாற்றியமைக்க முடியும் என்ற வலியுறுத்தலில் மையங் கொண்டது. இருபத்தியோராம் நூற்றாண்டிலும், இந்த நோக்குநிலை பொருத்தமானதாகவே உள்ளது. அரசுகளும் இயக்கங்களும் சார்பு நிலையையும் சமத்துவமின்மையின் புதிய வடிவங்களையும் எதிர்கொள்ளும்போது, காஸ்ட்ரோவின் மாதிரியைப் பிரதிபலிக்க முடியுமா என்பதல்ல கேள்வி. மாறாக, அதன் அடிப்படைக் கொள்கைகளான தன்னாட்சி, நீதி, ஒத்துழைப்பு ஆகியவற்றை எவ்வாறு தகவமைத்துக் கொள்ளலாம் என்பதேயாகும். இந்த அர்த்தத்தில், மேலாதிக்க எதிர்ப்பு என்பது ஒரு நிறைவுற்ற திட்டம் அல்ல. மாறாக அது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். அதற்குத் தொடர்ச்சியான பேச்சுவார்த்தை, புதுமை, கூட்டணி அமைத்தல் ஆகியவை தேவைப்படுகின்றன. சமமற்ற அதிகாரத்தால் கட்டமைக்கப்பட்ட ஒரு உலகில்கூட, மாற்றுப் பாதைகளைக் கூட்டாகவும், உத்திபூர்வமாகவும், கண்ணியத்திற்கான அசைக்கமுடியாத அர்ப்பணிப்புடனும் கற்பனைசெய்து பின்தொடர முடியும் என்பதற்கு காஸ்ட்ரோவின் மரபு ஒரு நினைவூட்டலாக நிலைத்திருக்கிறது.

## மாறிவரும் உலகில் காஸ்ட்ரோவின் மரபு:

ஃபிடல் காஸ்ட்ரோவின் மரபு ஆவணக் காப்பகங்களில் நிலைபெறவில்லை. அது நிகழ்காலத்தில் தீவிரமாக உருவாக்கப்படுகிறது. கொண்டாட்டமான, விமர்சனமான, இருபொருள் கொண்டதாக எனப் போட்டிப் புனைவுகள் எல்லைகள், நிறுவனங்கள் எனத் தலைமுறைகளைக் கடந்து ஒருங்கே நிலவி, போட்டியிடுகின்றன. புரட்சிக்கும் அரசு அதிகாரத்திற்கும் இடையிலான சந்திப்பில் அமர்ந்திருக்கும் ஆளுமைகளுக்கு இது ஒன்றும் அசாதாரணமான தல்ல. காஸ்ட்ரோவின் விஷயத்தில் தனித்துவமானது என்

னவென்றால், இந்த நினைவு விவாதங்களின் உலகளாவிய வீச்சும், இறையாண்மை, சோசலிசம், ஏகாதிபத்திய அதிகாரம் குறித்த நீடித்த சர்ச்சைகளுடன் அவை பின்னிப் பிணைந்திருப்பதும்தான்.

இருபத்தியோராம் நூற்றாண்டு முன்னேறிச் செல்லும்போது, ஃபிடல் காஸ்ட்ரோவின் முக்கியத்துவம், அவர் செயல்பட்ட உடனடிச் சூழல்களால் அல்ல, மாறாக புதிய உலகளாவிய நிலைமைகளில் அவரது கருத்துகளும் நடைமுறைகளும் எவ்வாறு மறுவிளக்கம் செய்யப்படுகின்றன, தழுவிக்கொள்ளப்படுகின்றன மற்றும் எதிர்க்கப்படுகின்றன என்பதாலேயே வரையறுக்கப்படுகிறது. காஸ்ட்ரோவின் மரபு என்பது ஒரு நிலையான வாரிசுரிமை அல்ல. அது ஒரு வளம். சமகாலத்திலும் எதிர்காலத்திலும் உருவாகும் சவால்களுக்குப் பதிலளிக்கும் வகையில் அணிதிரட்டப்படக்கூடிய கருத்துகள், உத்திகள் மற்றும் சின்னங்களின் ஒரு களஞ்சியம்.

வரலாற்று ஆளுமையிலிருந்து எதிர்கால வளமாக மாறும் இந்த மாற்றம், அரசியல் மரபுகள் செயல்படும் விதத்தில் ஒரு பரந்த உருமாற்றத்தைப் பிரதிபலிக்கிறது. அவை நிலையான மாதிரிகளைப் பரிந்துரைப்பதற்குப் பதிலாக, இறையாண்மை, நீதி, எதிர்ப்பு ஆகியவற்றைப் பற்றிச் சிந்திப்பதற்கான கட்டமைப்புகளை வழங்குகின்றன. இந்த அர்த்தத்தில், காஸ்ட்ரோவின் மரபின் எதிர்காலம் நகலெடுப்பதில் அல்ல, மொழிபெயர்ப்பில்தான் உள்ளது. சமத்துவமின்மை, பருவநிலை மாற்றம், கடன் மற்றும் தொழிலாளர் உரிமைகள் போன்றவற்றை முன்னிறுத்தும் சமகால உலகளாவிய நீதி இயக்கங்கள், காஸ்ட்ரோவின் ஏகாதிபத்தியம் மற்றும் சார்புநிலை குறித்த பகுப்பாய்வுடன் ஒத்திருக்கும் கட்டமைப்பு விமர்சன வடிவங்களுக்குப் புத்துயிர் அளித்துள்ளன.

அநீதி என்பது தனிப்பட்ட நிகழ்வுகளில் அல்ல, மாறாக கட்டமைப்புகளில் பொதிந்துள்ளது என்ற காஸ்ட்ரோவின் வலியுறுத்தல், இந்தக் கண்ணோட்டங்களுடன் ஒத்துப்போகிறது. உலகளாவிய சமத்துவமின்மையை வரலாற்றுச் செயல்முறைகளின் விளைவாக அவர் கட்டமைத்தது, சீரமைப்பு மற்றும் மறுபகிர்வு அணுகுமுறைகளுக்கான சமகால அழைப்புகளில் எதிரொலிக்கிறது. அதேநேரத்தில், இந்த இயக்கங்கள் வடிவத்தில் வேறுபடுகின்றன. அவை பெரும்பாலும் பரவலாக்கப்பட்டவை, நாடு கடந்தவை மற்றும் டிஜிட்டல் முறையில் ஒருங்கிணைக்கப்பட்டவை. அரசை மையமாகக் கொண்ட அரசியலுக்கு அப்பாற்பட்ட புதிய அமைப்பு முறைகளைப் பிரதிபலிக்கின்றன. காஸ்ட்ரோவின் முக்கிய அக்கறைகளில் ஒன்றான இறையாண்மையின் எதிர்காலம், பாரம்பரிய புவிசார் அரசியலுக்கு அப்பாற்பட்ட சக்திகளால் மறுவடிவம் பெற்றுவருகிறது.

ஃபிடல் காஸ்ட்ரோவின் மரபின் எதிர்காலம் முன்னரே தீர்மானிக்கப்பட்டதல்ல. அவரது வாழ்க்கையுடன் தொடர்புடைய கருத்துகளைத் தனிநபர்கள், இயக்கங்கள், அரசுகள் எவ்வாறு புரிந்துகொண்டு செயல்படுத்துகின்றன என்பதைப் பொறுத்தே அது வடிவமைக்கப்படும். அவர் எழுப்பிய கேள்விகளின் தொகுப்பே மாறாமல் நிலைத்திருக்கிறது. அதிகாரம், சமத்துவமின்மை, மாற்றத்திற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய கேள்விகள் அவை. இந்தக் கேள்விகளை உருவாக்கிய சூழல்கள் நீடிக்கும் வரை, அவை விவாதங்களுக்குத் தொடர்ந்து உயிரூட்டும். காஸ்ட்ரோவே குறிப்பிட்டதுபோல: 'எதிர்காலம் அதற்காகப் போராடுபவர்களுக்கே சொந்தமானது.' இந்த அர்த்தத்தில், அவரது மரபு என்பது ஒரு முடிவல்ல, மாறாக அது ஒரு அழைப்பு. மாறிவரும் உலகில் ஈடுபடவும், கேள்வி எழுப்பவும், அரசியல் சாத்தியக்கூறுகளின் புதிய வடிவங்களைக் கற்பனை செய்யவும் ஒரு அழைப்பு.

## நிறைவுக் குறிப்புகள்:

ஃபிடல் காஸ்ட்ரோவின் வாழ்க்கையை ஒரே ஒரு கதைக்குள் நேர்த்தியாக அடக்கிவிட முடியாது. அது சாதனைகள், சோதனைகள், முரண்பாடுகள், அபிலாஷைகள், தீர்க்கப்படாத பதற்றங்கள் நிறைந்த ஒரு அடர்த்தியான வரலாற்றுப் புலமாக விரிகிறது. எனவே, ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு காஸ்ட்ரோவைப் பற்றிப் பேசுவது ஒரு கதையை முடிப்பதல்ல, மாறாக அது இன்னும் திறந்ததாகவும், விவாதத்திற்குரியதாகவும், மற்றும் செயலூக்கமுள்ளதாகவும் இருக்கிறது என்பதை அங்கீகரிப்பதாகும். இந்தத் திறந்ததன்மை அவரது மரபின் ஒரு பலவீனம் அல்ல. அதுவே அதன் வரையறுக்கும் அம்சமாகும். அரசியல் வரலாற்றைத் தீர்க்கமாக வடிவமைக்கும் ஆளுமைகள், தங்களைப் பற்றிய எளிய தீர்ப்புகளுக்கு அரிதாகவே இடமளிக்கிறார்கள். அவர்கள் தொடர்ச்சியான ஈடுபாட்டைத் தூண்டுகிறார்கள், ஏனென்றால், தங்களின் உடனடிச் சூழலைக் கடந்து நிற்கும் கடினமான கேள்விகளை எதிர்கொள்ள அவர்கள் நம்மை நிர்ப்பந்திக்கிறார்கள்.

அரசியல் விசாரணையை உயிர்ப்புடன் வைத்திருக்கும் இந்தத் திறனில்தான் காஸ்ட்ரோவின் நீடித்த பொருத்தப்பாடு அடங்கியுள்ளது. இந்தக் கட்டுரைத் தொடர் முழுவதும், இறையாண்மை, நீதி, வளர்ச்சி, ஆளுகை, எதிர்ப்பு போன்ற பல கருப்பொருள்கள் மீண்டும் மீண்டும் வந்துள்ளன. அவர்களை ஒன்றிணைப்பது ஒரு நிலையான பதில்களின் தொகுப்பு அல்ல. மாறாக இருபத்தியோராம் நூற்றாண்டிலும் இந்தக் கேள்விகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன என்ற ஒரு பொதுவான அங்கீகாரமே ஆகும்.

காஸ்ட்ரோவின் மரபின் மிகமுக்கியமான பரிமாணம், அரசியல் கற்பனையில் அது ஏற்படுத்திய தாக்கத்தில்தான் அடங்கியுள்ளது. ஆழமாக வேரூன்றிய அமைப்புகளைச் சவால் செய்யமுடியும் என்பதை நிரூபித்ததன் மூலம், சாத்தியம் என்று கருதப்பட்டவற்றின் எல்லையை அவர் விரிவுபடுத்தினார். இந்த விரிவாக்கம் வெறும் வரலாற்று ரீதியானது மட்டுமல்ல, அது தொடர்ச்சியான தாக்கங்களைக் கொண்டுள்ளது. தற்போதுள்ள அமைப்புகள் மாற்றமுடியாதவை என்று கருதப்படும், தவிர்க்கமுடியாத தன்மை என்ற உணர்வால் பெரும்பாலும் வகைப்படுத்தப்படும் ஒரு உலகில், மாற்று வழிகளைக் கற்பனை செய்து பின்தொடர முடியும் என்பதை காஸ்ட்ரோவின் உதாரணம் ஒரு நினைவூட்டலாக அமைகிறது. ஃபிடல் காஸ்ட்ரோ குறிப்பிட்டதுபோல: 'இன்னும் சாதிக்கப்படாதது தான் சாத்தியமற்றது.'



meenilankco@thaiveedu.com

# கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும்

15

## தொல்காப்பியத்தில் தொடரியல்

நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

tg.theeban@gmail.com

தொடரியல் (Syntax) என்பது மொழியியலில் சொற்கள் எவ்வாறு ஒன்றோடொன்று இணைந்து சொற்றொடர்களாகவும் (phrases), வாக்கியங்களாகவும் (sentences) உருவாகின்றன என்பதைப் படிக்கும் இலக்கணப் பிரிவாகும். ஒரு மொழியில் சொற்களை எந்த வரிசையில் அமைத்தால் அது முறையான, பொருள் பொதிந்த வாக்கியமாகும் என்பதை வரையறுக்கும் விதிகளின் தொகுப்பே தொடரியல் ஆகும். மொழியின் அமைப்பையும் அதன் ஆளுமையையும் விளக்கும் உலகின் மிகத்தொன்மையான இலக்கணப் படைப்புகளில் தமிழின் 'தொல்காப்பியம்' தனித்துவமான இடத்தைப் பெறுகிறது. பொதுவாக, மேலைநாட்டு மொழியியலில் இருபதாம் நூற்றாண்டிற்குப் பிறகே தொடரியல் குறித்த விரிவான கோட்பாடுகளும் அணுகுமுறைகளும் முறைப்படி வடிவம் பெற்றன. ஆனால், அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, மொழியின் மிகச்சிறிய அலகான எழுத்து, சொல் ஆகியவற்றைக் கடந்து, சொற்கள் இணைந்து வாக்கியமாக உருப்பெறும் 'தொடர்' அமைப்பைத் தொல்காப்பியர் மிக ஆழமாக ஆராய்ந்துள்ளார்.

தொல்காப்பியரின் தொடரியல் அணுகுமுறை என்பது வெறுமனே சொற்களின் சேர்க்கையை மட்டும் விவரிப்பது அன்று; அது மொழியின் அக அமைப்பையும், பொருள் பொதிந்த வாக்கிய உருவாக்கத்தையும் விளக்கும் ஓர் அறிவியல்பூர்வமான பார்வையாகும். சொல்லதிகாரத்தில் அவர் வகுத்துள்ள வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு, எச்ச இயல் போன்ற பகுதிகள் அனைத்தும் மொழியின் வாக்கிய அமைப்பைத் தீர்மானிக்கும் தொடரியல் கூறுகளையே முதன்மையாகப் பேசுகின்றன. எழுவாயும் பயனிலையும் எவ்வாறு இணைய வேண்டும், அவற்றுக்கு இடையே உள்ள இயைபு (Concord) என்ன, வேற்றுமை உருபுகள் எவ்வாறு வாக்கியத்தின் பொருளை மாற்றியமைக்கின்றன என்பதைத் தொல்காப்பியம் மிக நுட்பமாகக் கையாள்கிறது.

குறிப்பாக, தொல்காப்பியரின் எச்சக் கோட்பாடு நவீன மொழியியலின் 'சார்ந்துநிற்கும் கோட்பாடுகளுக்கு' (Dependency Grammar) நிகரானது. ஒரு சொல் தனியாக நின்று பொருள் தராமல், மற்றொரு சொல்லை எதிர்நோக்கி நிற்கும் 'எச்ச நிலை' (பெயரெச்சம், வினையெச்சம்) வாக்கிய அமைப்பின் நீட்சியை விளக்குகிறது. அதேபோல், வாக்கியத்தில் சொற்கள் அமையும் வரிசை முறை (Word Order) குறித்தும், செய்யுள் வழக்கில் சொற்கள் முன்னும் பின்னும் மாறிவரும் 'பொருள்கோள்' முறைகள் குறித்தும் தொல்காப்பியம் பேசுவது, அதன் தொடரியல் முதிர்ச்சிக்குச் சான்றாகும்.

தொல்காப்பியம் என்பது மொழியைத் தனித்தனிச் சொற்களாகப் பிரித்துப் பார்க்கும் ஒரு மரபிலக்கணம் மட்டுமல்ல; சொற்கள் எவ்வாறு வாக்கியங்களாக உயிர் பெறுகின்றன, அவ்வாக்கியங்கள் எவ்வாறு பொருளைக் கடத்துகின்றன என்பதைத் 'தொடரியல் நோக்கில்' அணுகிய ஒரு முன்னோடித் தமிழ் மொழியியல் ஆவணமாகும். இந்த அணுகுமுறையைப் புரிந்துகொள்வது, தமிழ் மொழியின் தொடரமைப்பைத் தற்கால மொழியியல் கோட்பாடுகளோடு ஒப்பிட்டு நோக்குவதற்கும், கணினி மொழியியல் ஆய்வுகளுக்குப் பயன்படுத்துவதற்கும் மிக இன்றியமையாத அடித்தளமாய் அமைகிறது.

தொல்காப்பியத் தொடரியல் அணுகுமுறை என்பது தமிழ் மொழியின் வாக்கியக் கட்டமைப்பை உலகளாவிய மொழியியல் தளத்தில் நிறுவும் ஒரு முதன்மையான ஆய்வுப் பார்வையாகும். தொல்காப்பியம் தோன்றிய காலத்தில் 'தொடரியல்' என்ற தனிப்பட்ட சொல் பயன்பாட்டில் இல்லாவிட்டாலும், சொல்லதிகாரத்தின் பெரும்பகுதி சொற்களின் சேர்க்கையையும், அவை வாக்கியமாக உருப்பெறும் முறையையுமே விரிவாக ஆராய்கிறது. தனிச்சொற்களின் இலக்கணத்தைக் கடந்து, அச்சொற்கள் தொடராக இணையும் போது ஏற்படும் இலக்கண மாற்றங்களையும், பொருள் புலப்பாட்டையும் விளக்குவதில் தொல்காப்பியர் காட்டியுள்ள நெறிமுறைகள் வியக்கத்தக்கவை.

வேற்றுமை உருபுகள் எவ்வாறு பெயர்ப்பொருளை வினையோடு அல்லது மற்றொரு பெயரோடு பிணைக்கின்றன என்பதை விளக்கும் வேற்றுமையியலும், அவ்வுருபுகள்

மயங்கி வரும் நிலைகளைப் பேசும் வேற்றுமை மயங்கியலும் தொல்காப்பியரின் தொடரியல் ஆளுமைக்குச் சிறந்த சான்றுகளாகும். எழுவாய், பயனிலை, செயற்படு பொருள் ஆகியவற்றுக்கு இடையேயான இயைபையும், திணை, பால், எண், இடப் பொருத்தங்களையும் அவர் வாக்கிய அமைப்பின் அடிப்படையாகக் கொள்கிறார். மேலும், மேலைநாட்டு மொழியியல் அண்மைக் காலங்களில் கண்டறிந்த 'எச்சக் கோட்பாடுகளை' (Dependency Grammar), பெயரெச்சம், வினையெச்சம் ஆகியவற்றின் வழியே அன்றே தொல்காப்பியம் முறைப்படுத்தியுள்ளது. வாக்கியத்தில் சொற்கள் அமையும் நெகிழ்வுத்தன்மையையும், செய்யுள் மரபில் சொற்கள் மாற்றிப் பொருள் கொள்ளப்படும் 'பொருள்கோள்' நுட்பங்களையும் தற்கால 'மாற்றுருவாக்கத் தொடரியலோடு' (Transformational Syntax) ஒப்பிட முடியும்.

> ***"தொல்காப்பியம் என்பது மொழியைத் தனித்தனிச் சொற்களாகப் பிரித்துப் பார்க்கும் ஒரு மரபிலக்கணம் மட்டுமல்ல; சொற்கள் எவ்வாறு வாக்கியங்களாக உயிர் பெறுகின்றன, அவ்வாக்கியங்கள் எவ்வாறு பொருளைக் கடத்துகின்றன என்பதைத் 'தொடரியல் நோக்கில்' அணுகிய ஒரு முன்னோடித் தமிழ் மொழியியல் ஆவணமாகும்."***

எனவே, தொல்காப்பியத் தொடரியல் அணுகுமுறையை முகவுரையாகக் கொண்டு தொடங்கும் இந்தக் கட்டுரை தமிழின் மரபிலக்கணச் சிந்தனைகள் எவ்வளவு தூரம் நவீன மொழியியல் கோட்பாடுகளோடு பொருந்திப் போகின்றன என்பதை வெளிப்படுத்துவதோடு, தமிழ் வாக்கிய அமைப்பின் தனித்துவமான இயல்புகளை அறிவியல்பூர்வமாக நிறுவுவதையும் நோக்கமாகக் கொண்டு அமைகிறது.

தொல்காப்பியர் இதனைத் தொகையியல் கோட்பாட்டின் கீழ், வேற்றுமை உருபுகளோ அல்லது வினை, பண்பு உருபுகளோ வெளிப்படாமல் மறைந்து நின்று பொருள் தருவதாகக் கட்டமைக்கிறார். புறவமைப்பில் சொற்கள் சுருங்கி நின்றாலும், ஆழமைப்பில் அதன் முழுமையான பொருள் சிதையாமல் மனித மூளையில் தொழிற்படுவதைத் தொல்காப்பியம் அன்றே அடையாளம் கண்டுள்ளது.

## சோம்ஸ்கியும் (Nome Chomsky) தொல்காப்பிய தொடரியலும்:

இதன் தொடர்ச்சியாக, சோம்ஸ்கியின் மொழியியல் திறன் மற்றும் மொழிச் செயல்பாடு என்ற பிரிவினையைத் தொல்காப்பியரின் கிளவியாக்கத்தோடும் வழுவமைதிக் கோட்பாட்டோடும் ஒப்பிட முடியும். மனித மூளையில் இயல்பாகவே அமைந்துள்ள மொழியறிவு அல்லது இலக்கண விதிகளின் தொகுப்பே மொழியியல் திறன் ஆகும். அதனைப் பயன்படுத்தி மனிதர் பேசும்போது ஏற்படும் புறவெளிப்பாடு மொழிச் செயல்பாடு எனப்படுகிறது. தொல்காப்பியர் கிளவியாக்கத்தில் தமிழ் மொழியின் அடிப்படைத் தொடரமைப்பிற்குத் தேவையான திணை, பால், எண், இட இயைபுகளை (Agreement Rules) வரையறுக்கிறார். எழுவாய் என்ன திணையிலும் பாலிலும் அமைகிறதோ, அதே திணை மற்றும் பாலில் தான் பயனிலையும் அமைய வேண்டும் என்ற விதி தமிழரின் மொழியியல் திறனாக மனதில் பதிந்துள்ளது. இருப்பினும், உணர்ச்சிவசப்படும்போதோ அல்லது கவிதை மரபிலோ மனிதர் பேசும்போது (Performance) 'நாய் கத்தியது' என்பதற்குப் பதிலாக 'நாய் கத்துகிறான்' என்று வழுவாகக் கூறினாலும், அவரது அகமனதில் திணைப் பொருத்தம் மாறாமல் இருப்பதை உணர்ந்து, அதனைத் தொல்காப்பியர் 'வழுவமைதி' என்ற பெயரில் ஏற்றுக் கொள்கிறார். சோம்ஸ்கி குறிப்பிடும் இலக்கண ஏற்புடைத்தன்மை (Acceptability) என்ற கோட்பாடு தொல்காப்பியரின் இந்த வழுவமைதி நெறியோடு அடியொற்றிப் போவதைக் காணலாம்.

சோம்ஸ்கியின் கோட்பாட்டில் மிக முக்கியமான மற்றுமொரு கூறு 'முடிவிலாத் தொடர் நீட்சி' (Recursion) ஆகும். மனிதர் தன் வசம் உள்ள வரையறுக்கப்பட்ட சில விதிகளைக் கொண்டு, முடிவற்ற எண்ணிக்கையிலான புதிய வாக்கியங்களை உருவாக்கிக்கொண்டே செல்ல முடியும் என்ற மொழியின் உற்பத்தித் திறனை (Generative Capacity) சோம்ஸ்கி வலியுறுத்துகிறார். தொல்காப்பியரின் எச்சவியல் கோட்பாடு, குறிப்பாக வினையெச்ச அடுக்குகளின் இயல்பு, இந்த முடிவிலாத் தொடர் நீட்சிக்கு மிக உன்னதமான சான்றாகும். 'அவன் வந்து, படித்து, தேர்வு எழுதி, வெற்றி பெற்று, வேலைக்குச் சென்றான்' என்ற தொடரில் 'வந்து', 'படித்து', 'எழுதி', 'பெற்று' போன்ற வினையெச்சங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கப்பட்டு, இறுதியில் 'சென்றான்' என்ற ஒரு வினைமுற்றைக் கொண்டு வாக்கியத்தை நிறைவு செய்யும் தொடரியல் நெகிழ்வுத்தன்மையை எச்சவியல் விவரிக்கிறது. எத்தனை எச்சங்கள் வந்தாலும் வாக்கியத்தின் இறுதிப் பயனிலைக்காக அவை காத்து நிற்கும் இந்தத் தொடரியல் சார்பு நிலை சோம்ஸ்கியின் வாக்கிய நீட்சி விதிகளோடு ஒப்பிடத்தக்கது.

மேலும், சோம்ஸ்கியின் மாற்று உருமாற்ற விதிகளில் (Transformational Rules) சொற்கள் இடம் மாறுவதைப் பற்றிய (Scrambling) பார்வைகளும், தொல்காப்பியரின் பொருள்கோள் கோட்பாடும் ஒன்றோடொன்று நேர்க்கோட்டில் சந்திப்பவை ஆகும். ஆங்கிலம் போன்ற



மேலைநாட்டு மொழி களில் சொற்களின் வரிசை மாறினால் பொருளே மாறிவிடும். ஆனால், தமிழ் ஒரு நெகிழ்வான சொல்வரிசையைக் (Free Word Order) கொண்ட மொழியாக இருப்பதால், சொற்களின் இடத்தை மாற்றினாலும் அடிப் படைப் பொருள் மாறுவதில்லை. செய்யுள் வழக்கில் சொற்கள் யாப்புச் சீர்களுக்காக எங்கு வேண்டுமானாலும் மாறி வரலாம். அவ்வாறு மாறி வரும் புறவமைப்பை, மன திற்குள் இயல்பான சொல்வரிசையாகிய ஆழமைப்பிற்கு (Deep Structure) கொண்டு வந்து பொருள் கொள்ள வேண்டும் என்பதைத் தொல்காப்பியர் விளக்கி உள்ளார். 'தொல்காப்பியர் செய்யுளின் பொருளை உணர்த்துவதற்கான பல்வேறு பொருள்கோள் மற்றும் மொழிபுணரியல் உத்தி களைச் சுட்டிக்காட்டுகிறார். குறிப்பாக நிரனிறை, மொழி மாற்று, அடிமறி, சுண்ணம் போன்ற முறைகள் வழியாகச் செய்யுளில் அமைந்துள்ள சொற்களைப் பொருளோடு தொடர்புபடுத்திப் புரிந்துகொள்ளும் வழிமுறைகளை விளக்கு கிறார். மேலும் 'மாட்டு' என்னும் உத்தி வழியாகத் தொலை வில் அமைந்துள்ள சொற்களையும் பொருளையும் இணைத் துப் பொருள் பெறும் முறையையும் எடுத்துரைக்கிறார்.' சோம்ஸ்கி வாக்கிய அமைப்பை மாற்றியமைக்கப் பயன் படுத்திய உருமாற்ற விதிகளின் பழந்தமிழ் வடிவமே இப் பொருள்கோள் நெறிகளாகும்.

இருப்பினும், சோம்ஸ்கிக்கும் தொல்காப்பியருக்கும் இடையே ஒரு முக்கியமான அணுகுமுறை வேறுபாடும் உண்டு. சோம்ஸ்கி மொழியை ஒரு வெறும் இயந்திரவியல் அல்லது கணிதவியல் அமைப்பாக (Mechanical System) மட்டுமே அணுகினார்; சமூகக் காரணிகளைத் தனது தொடரியல் கோட்பாட்டிற்குள் அவர் அனுமதிக்கவில்லை. ஆனால், தொல்காப்பியரின் தொடரியல் கோட்பாடு என்பது சமூகப் பண்பாட்டுச் சூழலோடும், மனிதர்களின் அக மற்றும் புற வாழ்வியல் நெறிகளோடும் பிணைக்கப்பட்ட ஒரு சமூக- மொழியியல் பார்வையைத் தந்தது. சுருங்கக் கூறின், சோம்ஸ்கி இருபதாம் நூற்றாண்டில் கணி தப் பின்புலத்துடன் விளக்கிய மொழி யின் அகக் கட்டமைப்பை, தொல்காப் பியர் பன்னெடுங்காலத்திற்கு முன்பே தமிழின் தனித்துவமான செய்யுள் மற் றும் உலகியல் மரபுகளைக் கொண்டு, மிக ஆழமான தொடரியல் கோட் பாடாகத் தந்துள்ளார் என்பது உலக மொழியியல் அரங்கில் தமிழின் உன் னத இடத்தை நமக்கு உணர்த்து கிறது.

நோம் சோம்ஸ்கியின் மாற்றி லக்கண-ஆக்கமுறைத் தொடரி யல் அணுகுமுறை 1950 - 60-களில் மொழியியல் ஆய்வுலகில் குறிப்பிடத் தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவாக, பல மொழிகளின் மரபிலக் கணங்களில் வெளிப்படையாகவும் மறை முகமாகவும் இடம்பெற்றிருந்த தொடரியல் கருத்துகளை நவீன மொழியியல் கோட்பாடுகளின் அடிப்ப டையில் மறுவாசிப்புச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. குறிப்பாக, தொடர்களுக்கிடையிலான உறவுகளை விளக்குதல், புறநிலைத் தொடருக்குப் பின்னால் அமையும் அகநிலை அமைப்பை நிறுவுதல், மாற்றுவிதிகளின் வழியாக அகநிலை அமைப்பிலிருந்து புறநிலைத் தொடரை உருவாக் குதல், மேலும் மயக்கத்தொடர்கள் தரும் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களுக்கு ஏற்ப வெவ்வேறு அகநிலை அமைப்புகளை நிறுவுதல் ஆகியவற்றின் மூலம் மொழியமைப்பை விளக்குவ தற்கு மாற்றிலக்கணம் வழிவகுத்தது. இத்தகைய கோட் பாட்டுப் பின்னணியில், தமிழ் மரபிலக்கணங்களில் இடம் பெற்றுள்ள தொடரியல் கருத்துகளை நவீன மொழியியல் நோக்கில் மீளாய்வு செய்யும் முயற்சிகளும் முன்னெடுக்கப் பட்டன. குறிப்பாக, தொல்காப்பியத்தில் இடம்பெறும் தொட ரியல் சார்ந்த கருத்துகளை நவீன தொடரியல் கோட்பாடு களுடன் தொடர்புபடுத்தி ஆராயும் தொடக்ககால முயற்சி களில் ச. அகத்தியலிங்கத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க தாகும். இவருடைய Tolkappiyar's Treatment of Syntax என்னும் கட்டுரை 1966-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல் கலைக்கழகத்தில் நடைபெற்ற Grammatical Theories in Tamil என்னும் கருத்தரங்கில் வழங்கப்பட்டு, பின்னர் 1969-ஆம் ஆண்டு 'ஆராய்ச்சி' இதழில் வெளியிடப்பட்டது.

## தொல்காப்பியத் தொடரியலின் பன்முகப் பார்வை:

தொல்காப்பியரின் தொடரியல் கோட்பாடுகள், வெறும் மொழி இலக்கண விதிகளாக மட்டும் சுருங்காமல், மொழியின் ஆழ மான உளவியல் மற்றும் சூழல் சார்ந்த கட்டமைப்பை விளக் குவனவாகத் திகழ்கின்றன. சொல்லதிகாரத்தின் வேற்றுமை யியல், எச்சவியல் போன்ற பகுதிகளில் அவர் முன் வைக்கும் 'கிளவி', 'தொடர்' குறித்த பார்வை கள், நவீன மொழியியலோடு வியக்கத் தக்க வகையில் பொருந்திப் போகின்றன.



பேராசிரியர்
செ.வை. சண்முகம்

## அறிஞர்களின் ஒப்பீட்டுப் பார்வை:


நோம் சோம்சுகியின் (Noam Chomsky) 'மாற்றுருவாக்கப் பிறப்பி லக்கணக் கோட்பாடு' (Transformational Generative Grammar) மற்றும் அக அமைப்பு (Deep Structure), புற அமைப்பு (Surface Structure) ஆகிய கருத்துகளைத் தொல்காப் பியரின் எச்சவியல் மற்றும் வேற்றுமை மயங்கியல் விதிகளோடு ஒப்பிடலாம். மொழியின் ஆழமான பொருளதிகார அமைப்பிலிருந்து, புறத்தே தொடர்கள் எவ்வாறு உருவாகின்றன என்பதைத் தொல்காப்பியர் அன்றே சுட்டிக்காட் டியுள்ளார். 1950 - 60-களில் உலக அளவில் நோம் சோம்ஸ்கியின் மாற்றிலக்கணக் கோட்பாடு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியபோது,

> ***சோம்ஸ்கி இருபதாம் நூற்றாண்டில் கணிதப் பின்புலத்துடன் விளக்கிய மொழியின் அகக் கட்டமைப்பை, தொல்காப்பியர் பன்னெடுங்காலத்திற்கு முன்பே தமிழின் தனித்துவமான செய்யுள் மற்றும் உலகியல் மரபுகளைக் கொண்டு, மிக ஆழமான தொடரியல் கோட்பாடாகத் தந்துள்ளார் என்பது உலக மொழியியல் அரங்கில் தமிழின் உன்னத இடத்தை நமக்கு உணர்த்துகிறது.***

தமிழ்நாட்டு மொழியியலாளர்கள் தொல்காப்பியத்தை அந்த நவீனக் கண்ணோட்டத்தோடு அணுகிப் பல புதிய உண்மை களைக் கண்டறிந்தனர்.


- **தெய்வச்சிலையார்:** தொல்காப்பிய உரையாசிரியர்களில் தெய்வச்சிலையார் தொடரியல் நோக்கில் மிக முக்கியமா னவர். வேற்றுமை உருபுகள் மட்டுமன்றி, சொல்லின் பொருளும் தொடரின் அமைப்பும் எவ்வாறு ஒன்றோ டொன்று பிணைக்கப்பட்டுள்ளன என்பதைத் தனது உரை நெறியின் மூலம் மிக நுட்பமாக விளக்கியுள்ளார். கிளவியாக்கம் தொடரியல் நோக்கில் அமைந்தது என்னும் கருத்தினை வலியுறுத்தும் உரையாசிரியர் தெய்வச்சிலை யார் ஆவார். உள்ளபடி, தொல்காப்பியச் சொல்லதிகாரத் தைத் தொடரியல் நோக்கில் விளக்கும் வகையில் அவர் உரை அமைந்துள்ளது. அக்கோட்பாட்டின் பின்னணியில் கிளவியாக்கமும் தொடரியல் நோக்கு உடையது என்றே அவர் கருதியுள்ளார். பிற உரையாசிரியர்களைப் போன்று இவரும் சில நூற்பாக்களை வழுநோக்கின் அடிப்படையில் விளக்கினாலும் கிளவியாக்கம் என்பது தொடரியல் விளக்கத்தையே அடிப்படையாகக் கொண்டது என்பது அவர் கருத்தாகும்.
- **பேராசிரியர் செ.வை. சண்முகம்:** நவீன மொழியியல் அறிஞரான செ.வை. சண்முகம் அவர்கள், தொல்காப்பிய இலக்கணத்தை தற்கால மொழியியல் கோட்பாடுகளின் துணைகொண்டு மீள்வாசிப்புச் செய்துள்ளார். தொல்காப் பியரின் தொடரியல் கூறுகள் எவ்வாறு ஒரு மொழியின் 'அமைப்புமுறை' (System) மற்றும் 'பயன்பாடு' (Function) ஆகிய இரண்டையும் சமமாகப் பேணுகின்றன என்பதைத் தனது ஆய்வுகளின் மூலம் நிலைநிறுத்தியுள்ளார். பேராசி ரியர் செ.வை. சண்முகம் அவர்களின் தொடரியல் நோக் கின் விரிவையும் ஏனைய அறிஞர்கள் கருத்துகளையும் விரிவாக அடுத்த இதழில் பார்க்கலாம்.

nageswary@thaiveedu.com



# கடந்தகாலச் சுவடுகளை எம் மனங்களில் மீளப்பதித்தது தாமரைச்செல்வியின் ‘சுமைகள்’

மூத்த எழுத்தாளர் தாமரைச்செல்வி அவர்கள் தனது 23-ஆவது வயதில் ‘சுமைகள்’ என்ற நாவலை வெளியிட்டார். 1977 ஜூலை மாதம் வீரகேசரியின் 55-ஆவது வெளியீடாக வெளிவந்த இந்த நாவல் தற்பொழுது 50-ஆவது ஆண்டில் இளம் எழுத்தாளர்களின் தேவை கருதி மீள் பிரசுரமாகியள்ளது. தனது பிறந்த ஊரான குமரபுரம் பரந்தன் கிளிநொச்சியின் வாழ்வியல் முறையையும் சவால்களையும் யதார்த்தமாகப் பேசும் நாவலாக இது அமைந்துள்ளது. ஒரு எழுத்தாளர் தனதும், தான் சார்ந்த மண்ணினதும், மக்களினதும் வாழ்வியல் அனுபவங்களை அடுத்த சந்ததிக்குத் தன் படைப்புகளால் கடத்தும் பாரிய பொறுப்போடு இயங்கவேண்டும். இதனையே தாமரைச்செல்வி அவர்கள் தனது முதலாவது நாவலூடாகச் செய்துள்ளார்.




இந்த நாவலின் இன்னொரு சிறப்பு அட்டைப்பட ஓவியமும் நூலாசிரியரால் வரையப்பட்டுள்ளது. ஒட்டு மொத்த கதைக் களத்தை உள்வாங்கிய ஓவியமாக இது அமைந்திருக்கிறது. ஆனந்தவிகடன், கல்கி போன்ற வற்றின் கதைகளில் வரையப் படும் ஓவியங்களை நினைவு படுத்தும் வகையில் அமைந்துள்ளது. மீசை, அடர்ந்த தலைமுடி, பக்கவாட்டுக் கன்னமுடிகள் என 1977-களின் தமிழ்ச் சமூகத்தில் இருந்த இளைஞர்களின் தோற்றத்தை இயல்பாகக் காட்டுகிறது. நெற்றியில் பெரிய பொட்டு, சுருள் முடி, அமைதியான ஆனால் ஆழமான பார்வை என அந்தப் பருவத்து தமிழ் பெண்ணின் யதார்த்தமான முக அமைப்பைப் பிரதிபலிக்கிறது. நேர்த்தியான கோட்டோவியமும் நீர்வண்ணக் கலவையும் இணைந்த இவ்வோவியத்தில், ஏக்கமும் சமூகக் கவலையும் கண்களில் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. பின்னணியில் பயன்படுத்தப்பட்டுள்ள சிவப்பு மற்றும் மஞ்சள் கலந்த வண்ணங்கள், ஆன்மீகம், உணர்ச்சிப் போராட்டம் மற்றும் சமூக அழுத்தங்கள் ஆகியவற்றை மறைமுகமாகக் குறியீட்டுத் தன்மையுடன் வெளிப்படுத்துகின்றன.

இந்நாவலின் மொழிநடை மிக எளிமையானதும், இயல்பானதும், ஈழத்தின் வடபகுதியின் (கிளிநொச்சி, பரந்தன், யாழ்ப்பாணம்) வட்டார வழக்காகவும் பயன்படுத்தப் பட்டுள்ளது. உதாரணத்திற்கு: ‘இண்டைக்கு முருகன் கோவில்ல திருவெம்பாவை தொடங்குது’, ‘தேத்தண்ணி வாங்கி வந்து தா’, ‘ஆரிட்ட கேட்டா என்ன?’ போன்ற சொற்பிரயோகங்கள் கதைக்களத்தின் அமைப்பையும் மனிதர்களின் இயல்பையும் பிரதிபலிக்கின்றன.

காட்சிப்படுத்தும் திறனைக் கூறுவதாயின் இயற்கை வர்ணனைகளும், கிராமப்புறச் சூழலும் (டிசம்பர் மாதக் குளிர், மழை, நெல் மூட்டைகள், மாட்டுப் பட்டி, வாய்க்கால் பாலம்) வாசகர் கண்முன்னே விரிந்திடும் வகையில் எளிய சொற்களால் விவரிக்கப்பட்டுள்ளன.

நாவலின் முதன்மை மையக்கருத்து ‘குடும்பத்தின் பொறுப்புகள்’ மற்றும் ‘மனித உணர்வுகளுக்கு இடையே ஏற்படும் முரண்பாடுகள்’ ஆகும். விவசாயக் குடும்பத்தின் வறுமை, நெல் விற்பனை, திருமண முயற்சிகள் மற்றும் அன்றாட வாழ்வின் போராட்டங்கள் கதையின் பின்னணியாக அமைகின்றன. அத்தோடு, இளைஞர்களின் பலவீனங்களையும் அவர்கள் எதிர்கொள்ளும் சமூகப் பார்வையையும் நாவலின் வாயிலாக வெளிப்படுத்துவதன் மூலம், நூலாசிரியரின் சமூகப் பொறுப்புணர்வும் சமூகத்தை நோக்கிய அக்கறையும் வெளிப்படுகின்றன. ஆசிரியை தனது முன்னுரையில் குறிப்பிடுவது போல, 18 வயது நிரம்பிய செந்தில் என்ற இளைஞன் சந்தர்ப்பச் சூழ்நிலைகளாலும் தனிப்பட்ட பலவீனங்களாலும் தவறுகளைச் செய்யும்போது, அவனைப் புரிந்துகொள்ளாமல் சமுதாயமும் குடும்பமும் ஒதுக்குகின்ற நிலை நாவலில் ஆழமாகப் பதிவுசெய்யப் பட்டுள்ளது. அதேவேளை, அவன் எதிர்கொள்ளும் மனப் போராட்டங்களும் உணர்வியல் சிக்கல்களும் நுட்பமாகச் சித்திரிக்கப்படுகின்றன. இளமைப் பருவத்தின் விளையாட்டுத்தனமாகத் தொடங்கிய செயல், இறுதியில் திருமண வாய்ப்பையே தகர்க்கும் அளவுக்குப் பெரும் விபரீதமாக மாறுவது நாவலின் கவனத்திற்குரிய அம்சமாக அமைகிறது.

பாத்திரங்களுக்கிடையில் உள்ள தாழ்வு மனப்பான்மையும் ஏக்கமும் உணர்வுபூர்வமாக விவரிக்கப்பட்டுள்ளது. தங்கை சச்சியின் கிண்டல்களுக்கும் ஏளனப் பேச்சுகளுக்கும் செந்தில்

prasadbatti@gmail.com

அடையும் கோபமும், கோபத்தின் உச்சத்தில் தேநீர்க் கோப்பையை வீசியெறிவதும் இளைஞர்களின் பக்குவப்படாத வயதின் உணர்ச்சிக் கொந்தளிப்பையும் அதன் விளைவையும் காட்டுகின்றது.

தீபாவிடம் அவன் கொள்ளும் ஈர்ப்பும், பிறகு அவனுக்குள் ஏற்படும் மனச் சலனமும், அதன் பின் தீபாவின் கோபத்தைக் கண்டு அவன் அடையும் குற்ற உணர்ச்சியும் இளைஞர்களின் இயல்பான உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றன.

மாப்பிள்ளையாக வந்த ராமநாதன், செந்திலைக் கண்டு திருமணத்தை நிராகரித்துச் செல்லும்போது, குடும்பத்தினர் அடையும் அதிர்ச்சியும், தாயின் கதறலும், செந்தில் அடையும் சொல்லொணா குற்ற உணர்வும், அவமானமும் வாசகரின் மனதை உலுக்குவதாக அமைந்துள்ளன.

எமது அனுபவங்களுக்குச் சற்றுத் தொலைவிலுள்ள நாவலில் விவரிக்கப்பட்டுள்ள 50 ஆண்டுகளுக்கு முந்திய வாழ்வியலுக்கும், இன்றைய கிளிநொச்சி மற்றும் வடக்கு மக்களின் தற்போதைய வாழ்க்கை முறைக்கும் இடையே உள்ள முக்கிய வேறுபாடுகள் மற்றும் இன்னமும் மாறாமல் தொடரும் பாரம்பரிய அம்சங்கள் என்பன ஒரு ஆய்வு நிலைக்குள் எம்மை இட்டுச் செல்கின்றன.

இந்நாவலில் விபரித்ததைப் போல் அன்று கைகளால் நெல் அறுவடை செய்தல், மாட்டு வண்டிகளைப் பயன் படுத்துதல், போரடித்தல் மற்றும் இடை த்தரகர்களை மட்டுமே நம்பி நெல் விற்பனை செய்தல் என பாரம்பரிய விவசாய முறைகள் மட்டுமே இருந்தன. இன்றும் கிளிநொச்சி விவசாயத்தின் மையப் பகுதியாக இருப்பதால் டிராக்டர்கள், நவீன அறுவடை இயந்திரங்கள், சூரிய ஒளி மூலம் இயங்கும் நீர்ப்பாசன முறைகள் என நவீன தொழினுட்பம் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

நாவலில் நினைவுக் கிளறல்களை ஏற்படுத்தும் கடிதங்களே தூரத்து உறவுகளுடனான தொடர்பிற்கான பிரதான ஊடகமாக விளங்குகின்றன. குறிப்பாக, கதையின்

> **23 வயதிலேயே எழுத்துலகில் தடம் பதித்துள்ள தாமரைச்செல்வி, தன்னை வெறுமனே ஒரு எழுத்தாளராக மட்டும் அடையாளப்படுத்திக் கொள்ளாமல், சமூகத்தின் வாழ்வியல் சிக்கல்கள், மனித உறவுகள் மற்றும் சமூக அழுத்தங்கள் குறித்து ஆழ்ந்த புரிதலும் சமூகப் பிரக்ஞையும் கொண்ட படைப்பாளியாக வாசகர் மனதில் நிலைநிறுத்திக் கொள்கிறார்.**

முக்கியத் திருப்புமுனையாகவும் ஒரு கடிதம் அமைகிறது. அக்காலத்தில் ஊர் கதைகளும் பல்வேறு தகவல்களும் நேரடியாக வாய்மொழியாகவே பரிமாறப்பட்டன. ஒரு தகவல் தம்மை வந்தடையும் வரையில் பதற்றம், ஏக்கம், மகிழ்ச்சி, துக்கம் எனப் பல்வேறு உணர் வெழுச்சிகளை மனிதர்கள் அனுபவித்தனர். ஆனால், இன்றைய ஸ்மார்ட் போன்கள், வாட்ஸ்அப் மற்றும் சமூக ஊடகங்களின் வருகையால் கடிதப் பரிமாற்றத்தின் தேவை பெருமளவில் மறைந்துவிட்டது. தகவல்கள் கணப்பொழுதிலேயே பரிமாறப்படுவதால், அவற்றை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மனநிலைக்கும், அதனூடாக உருவாகும் உணர்வுகளுக்கும் இன்றைய வாழ்வில் அதிக இடமில்லை. இதன் விளைவாக, மனிதர்களுக்கிடையிலான நேரடி உறவாடலும் ஓரளவு குறைந்துள்ளது. இந்நிலையில், 1995-ஆம் ஆண்டுவரை நீடித்த கடிதப் பரிமாற்றங்களையும், காதலுக்காகக் கடிதங்களைத் தூது செல்லச் செய்த இளமைத் துடிப்பையும் நாவல் நினைவூட்டுகிறது. பாடப் புத்தகங்களிலும் கதைப் புத்தகங்களிலும் இடம்பெற்றிருந்த காதலுக்குக் கடிதம் காவிச் சென்ற கதையுலகையும் இந்நாவல் மீள்நினைவுக்குக் கொண்டுவருகிறது.



அன்று திருமணங்கள் முற்றிலும் தரகர்கள் மற்றும் குடும்பப் பெரிய வர்களின் கடுமையான கட்டுப்பாட்டிலேயே நடந்தன. குடும்பத்தில் ஒருவர் செய்யும் சிறிய தவறு கூட பெண்ணின் திருமணத்தைப் பாதிக்கும் நிலை இருந்தது. இன்று பாரம்பரிய முறைகள் தொடர்ந்தாலும், இளைஞர்களுக்குத் தங்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதிலும், வெளிப்படையாகப் பேசுவதிலும் அதிக சுதந்திரம் கிடைத்துள்ளது. கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் இதற்கான பாதையை உரு வாக்கியிருக்கலாம்.

அன்று போக்குவரத்து பெரும்பாலும் மிதிவண்டி, பஸ் அல்லது நடைப்பயண மாகவே இருந்தது. கிராமங்களில் மின்சாரமும் குடிநீர் வசதியும் குறைவாகவே கிடைத்தன. ஆனால் இன்று ஏ-9 வீதி மேம்பாடு, பரவலான மின்சார வசதி, வங்கியியல் சேவைகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் நாற்சக்கர வாகனங்களின் பயன்பாடு என வட

> **உழைப்பு, தியாகம், தவறுகளை உணர்ந்து திருந்துதல் மற்றும் குடும்பப் பிணைப்பு ஆகியவற்றின் மூலம் அவற்றைக் கடந்து தமது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லும் பாத்திரங்களின் மூலம், வாழ்க்கையின் சிக்கல்களை எதிர்கொள்வதற்கு குடும்ப உறவுகளும் பொறுப்புணர்வும் துணைபுரிகின்றன என்பதை நூலாசிரியர் தாமரைச்செல்வி உணர்த்தியுள்ளார்.**

பகுதி நவீன உட்கட்டமைப்புடன் வளர்ச்சி அடைந்துள்ளது. இன்றளவும் பெரிதும் மாறாமல் தொடரும் பாரம்பரியங்களை நோக்கும்போது, டிசம்பர் மாதத்தில் அதிகாலையிலேயே எழுந்து கோயிலுக்குச் செல்வது, திருவெம்பாவை பாடுவது, சிவன் மற்றும் முருகன் வழிபாடுகளில் ஈடுபடுவது போன்ற சமய மரபுகள் அதே பக்தி உணர்வுடன் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுகின்றன. மேலும், வருடாந்த கோயில் திருவிழாக்கள், பெண்கள் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் காணப்படும் தையல் இயந்திரங்கள், நேர்த்திக்கடன் செலுத்துதல், பொங்கல் விழா மற்றும் கிராமிய வழிபாட்டு முறைகள் போன்றவை சமூகத்தின் பாரம்பரியத் தொடர்ச்சியை வெளிப்படுத்துகின்றன. இத்தகைய நிகழ்வுகள் வெறுமனே சமயச் சடங்குகளாக மட்டுமன்றி, ஊர் மக்களை ஒன்றிணைத்து, அவர்களிடையே உறவையும் சமூகப் பிணைப்பையும் வலுப்படுத்தும் முக்கியமான நிகழ்வுகளாகவும் இன்றளவும் விளங்குகின்றன.

குடும்பப் பொறுப்புகளைச் சுமப்பதும், உறவுகளுக்கிடையிலான உணர்வுபூர்வமான பிணைப்பைப் பேணுவதும், ஒருவருக்கொருவர் உதவிக்கரம் நீட்டுவதும் வடக்கு சமூகத்தின் முக்கியமான வாழ்வியல் அடையாளங்களாகத் தொடர்கின்றன. வீட்டிற்கு வருபவர்களுக்கு முதற்கண் சூடான 'தேத் தண்ணி' (தேநீர்) வழங்கி உபசரிக்கும் பழக்கமும் இன்றளவும் மாறாமல் தொடர்கிறது. எத்தகைய சவால்கள், போர்கள் மற்றும் இயற்கைச் சீற்றங்களை எதிர்கொண்டபோதிலும், மண்ணையும் விவசாயத்தையும் தமது வாழ்வியலின் பிரிக்க முடியாத அங்கங்களாகக் கருதும் கிளிநொச்சி மக்களின் உழைப்பும் மனஉறுதியும் இன்னமும் உயிர்ப்புடன் காணப்படுகின்றன என்பதை நாவல் வெளிப்படுத்துகிறது. இவ்வகையில், கடந்தகால வாழ்வியலையும் சமகால சமூக நிலையையும் ஒப்பிட்டு நோக்குவதற்கான புரிதலையும் நாவல் ஏற்படுத்துகிறது.

அதேவேளை, சமூகத்தில் நிலவும் மரபுகளும் எதிர்பார்ப்புகளும் குடும்பங்களின் வாழ்வில் ஏற்படுத்தும் அழுத்தங்களும் நாவலில் சுட்டிக்காட்டப்படுகின்றன. குறிப்பாக, மூத்த அக்காவிற்குச் சரியான மாப்பிள்ளையைத் தேடி, திருமணம் செய்து வைப்பது குடும்பத்தின் மிகப்பெரிய பொறுப்பாகவும் சுமையாகவும் கருதப்படுகிறது. திருமணம் தாமதமடைந்தாலோ அல்லது எதிர்பார்த்தபடி அமையாவிட்டாலோ, ஊரார்ின் ஏளனப் பேச்சுக்கும் சமூக விமர்சனத்திற்கும் குடும்பம் ஆளாகிவிடுமோ என்ற அச்சம் பெற்றோரிடம் நிலவுகிறது. இத்தகைய அச்சமும் சமூகக் கௌரவம் குறித்த கவலையும் அக்கால வடக்கு சமூகத்தின் வாழ்வியல்சார் பண்புகளாக நாவலில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

கூட்டு உழைப்பும் பரஸ்பர ஆதரவும் குடும்பத்தின் வளர்ச்சிக்கும் நிலைத்தன்மைக்கும் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை இந்நாவல் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. அதேவேளை, சகிப்புத்தன்மையும் தியாகமும் குடும்பத்தின் தாங்குதிறனை வலுப்படுத்துவதையும், சமூக அழுத்தங்களை எதிர்கொள்ளும்போது பொறுமையுடனும் பாரம்பரிய நம்பிக்கை முறைகளான கோயில் வழிபாடு மற்றும் ஆன்மீகத்தின் மீதும் நம்பிக்கை கொண்டு செயல்படுவதையும் நூலாசிரியர் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும், தவறுகளை உணர்ந்து அவற்றிலிருந்து கற்றுக் கொள்வதன் மூலமும், பொறுப்புணர்வுடன் செயற்படுவதன் மூலமும் தாழ்வு மனப்பான்மை மற்றும் கோபம் போன்ற உணர்வுகளிலிருந்து விடுபட்டு, குடும்பத்தின் மீது உண்மையான அக்கறையுடனும் பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டும் என்ற பக்குவத்தைச் செந்தில் என்ற பாத்திரம் எமக்கு உணர்த்துகின்றது.

வறுமை, சமூக எதிர்பார்ப்புகள் மற்றும் தனிப்பட்ட பலவீனங்களால் ஏற்படும் சவால்களை இக்கதாபாத்திரங்கள் எதிர்கொள்கின்றன. உழைப்பு, தியாகம், தவறுகளை உணர்ந்து திருந்துதல் மற்றும் குடும்பப் பிணைப்பு ஆகியவற்றின் மூலம் அவற்றைக் கடந்து தமது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்கின்றனர். இதன் மூலம், வாழ்க்கையின் சிக்கல்களை எதிர்கொள்வதற்கு குடும்ப உறவுகளும் பொறுப்புணர்வும் துணைபுரிகின்றன என்பதை நூலாசிரியர் தாமரைச் செல்வி உணர்த்தியுள்ளார். மேலும், 23 வயதிலேயே எழுத்துலகில் தடம் பதித்துள்ள தாமரைச்செல்வி, தன்னை வெறுமனே ஒரு எழுத்தாளராக மட்டும் அடையாளப்படுத்திக் கொள்ளாமல், சமூகத்தின் வாழ்வியல் சிக்கல்கள், மனித உறவுகள் மற்றும் சமூக அழுத்தங்கள் குறித்து ஆழ்ந்த புரிதலும் சமூகப் பிரக்ஞையும் கொண்ட படைப்பாளியாக வாசகர் மனதில் நிலைநிறுத்திக் கொள்கிறார்.

ajanthan@thaiveedu.com



இரா. மோகன்ராஜன்

# சொற்களைச் செமிக்க மறுக்கும் கவிதைகள்...!

ரூபன் சிவராஜாவின் கவிதைகள் மீது எனக்கொரு ஈர்ப்பு உண்டு. அவரது சில கவிதைகளைக் காக்கைச் சிற கினிலே இதழிலும், முகநூலிலும் வாசித்து வந்திருக்கிறேன். அவரது கவிதை படிமங்கள் வசீகரமானவை. எளிதில் கவிதைகளுக்குள் இழுத்துக் கொள்ளக் கூடியவை. படிமங் களின் சொற்கள் நம்மை மிதக்கவிடக்கூடியவை. மிதவை யாக்கக் கூடியவை. வாசிப்புக்கூடாக நமது தன்னிலையை இப்பிரபஞ்சமெங்கும் கரைத்துவிடும் வேதியல் தன்மை கொண்டவை. அவை ஆன்மிகத் தன்மை கொண்டவை; புலன்களை, புலன்களுக்கே அறிமுகப்படுத்தும் சொற்க ளைக் கொண்டவை; எழுத்தாலான காட்சியைக் கொண்டி யங்குபவை.

கவிதை, சொற்களின் வழியே நம்மைக் குளிரவும், உறை யவும், நீர்க்கவும், கொதிக்கவும், ஆறவும், உதிரவும், மீண் டும் துளிர்க்கவும் செய்யும் உணர்வுகளுக்குள் அழைத்துச் செல்கிறது. இராட்சதச் சக்கரம் போல அது மேலெழுந்து, கீழிறங்கி, மீண்டும் மேலெழுந்து சுழன்று, தன்னுணர்வையும் தன்னிலையையும் கரைக்கும் ஒரு சுழிப்பை உருவாக்கு கிறது. தன்னிலையைப் பொதுநிலைக்குக் கொண்டு செல் லும் கவிதை, இருப்பை இல்லாததாகவும், இல்லாமையை இருப்பாகவும் மாற்றும் ஆற்றல் கொண்டதாகிறது.

சொற்களைக் கவிதையாக்குவதும், கவிதைகளைச் சொற்க ளாக்குவதும்தான் கவிதையின் இயங்குநிலையாக இருக் கிறது. சொற்களுக்குள் தங்கிவிடும் கவிதைகளும், கவி தைக்குள் தங்கிவிடும் சொற்களும் எனக் கவிதைகள் தமது பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால், சொற்களின் எல்லைக்குள் நின்றுவிடாமல், சொற்களுக்கு அப்பால் அவற்றை விடுதலை செய்யும் கவிதைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றன ரூபனின் எழுத்துகள்.

***'உள்ளதை உள்ளபடியே***
***எழுதிவிடவும் முடியாது***
***தணிக்கை செய்வதும்,***
***சாமர்த்தியமற்றிருக்கிறது.***
***சுமந்திடவும் முடியாது***
***இறக்கிடவும் முடியாது***
***எழுதிடவும் முடியாத***
***கவிதையோடு***
***வாழ்வை கடப்பது***
***அத்தனை சுலபமல்ல...'***

*(சுமந்திடவும் முடியாது இறக்கிடவும் முடியாது)*

ரூபனின் கவிதைகள் சொல்லும் அளவிலேயே கவிதையாகி விடுகின்றன. நிலப்பரப்பையும், இரவையும், நிலவையும், எண்ணிலடங்கா விண்மீன்களையும், திசையையும், காற்றை யும், மழையையும் அவை நம்முள் வரைந்துவிடுகின்றன. கவிதை இங்கு மழையாகிறது; மழை இங்கு கவிதையா கிறது. நேற்றும் பெய்தது மழை; இன்றும் பெய்கிறது மழை; நாளையும் பெய்யக்கூடும் மழை. ஆனால், நேற்றைய மழை இன்றைய மழையைப் போல இருப்பதில்லை; நாளைய மழையும் அப்படியே. மழையை வரைதலும், மழையில்




tg.theeban@gmail.com

நனை தலும் மழையாக இருப்பதில்லை. ஆனால், அவை மழையின் இருப்பைத் தன்னுள் கொண்டிருக்கின்றன. கவிதையில் மழையின் ஈரத்தையும், அதன் நறுமணத்தையும் காட்சிப்படுத்துவதன் வழியாக, ரூபன் நம் இதயத்தையே நனையச் செய் கிறார். மண் நனைந்தால் மண்வாசம்; மனம் நனைந்தால் உயிர்வாசம்தானே!

***'மழையை உண்ட***
***கண்களுக்கும்***
***மழையை குடித்த***
***செவிகளுக்கும்***
***மழையை முகர்ந்த***
***மனதிற்கும் மட்டுமே***
***தெரியும்***
***சாரல்களில் இழைகின்ற***
***நுண்ணழகு***
***தூறல்களில் கசிகின்ற***
***மெல்லிசை***
***நனைதலில் துளிக்கின்ற***
***உயிர்வாசம்...'***

*(நனைதலின் உயிர்வாசம்)*

ஒரு கவிதை என்ன செய்யும்? அல்லது என்ன செய்ய வேண் டும்? அதை அப்படியே வாசித்துவிட்டு நகர்ந்துவிட முடி யுமா? அல்லது, வாசித்துவிட்டுக் கடந்துவிட முடியுமா ஒரு கவிதையை? அப்படிக் கடந்துவிட முடிந்தால், ஒன்று - அது கவிதையல்ல; அல்லது, நகர்ந்துவிடும் மனதுக்குள் கவிதை இல்லை. தன்னுள் கவிதையின் நுரைபொங்கும் அலைகள் அடிக்கவில்லை என்றே பொருள். நதியின் மெல்லிய சிலிர்ப் பும், அதன் ஓசையும் கவிதையிலும் இருக்கத்தான் செய்கின் றன. வாசிப்பின் மனமும் படைப்பின் மனமும் ஒருசேர மனப்பு லத்தில் கலக்கும்போதுதான் கவிதை தன்னை மறுபடியும் படைத்துக்கொள்கிறது.

ஒரு பறவை வானில் பறக்கலாம்; ஆனால், அதன் சிறகடிப்பு மனதில் வலசை வரும். ஒரு மெல்லிசை செவிகளுடன் நின்று விடுவதில்லை; அது மனதில் வானவில்லின் நிறங்களை விரித்துச் செல்கிறது. ஒரு கவிதையின் சொற்கள் வெறும் சொற்கள் அல்ல; அவை காட்சியின் எழுத்து வடிவம். உயிர்த் துளிர்ப்பின் எழுத்தசைவு. சொற்கள் தமக்குள் அசையாமல், நம்மை அசைப்பதுதான் கவிதை. கவிதையின் சொற்கள் பக் கங்களில் மட்டும் எழுதப்பட்டு நிற்பதல்ல. மாறாக, காகி தத்தின் வெற்றுப் பகுதியைச் சுற்றியுள்ள மௌன வெளி யிலும் அவை நிரம்பிக்கிடக்கின்றன. அந்த மௌன வெளியே கவிதையாகிறது. வாசித்த பின்பும் நம்முள் ஏதோ ஒன்று தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருந்தால், பார்த்த காட்சியொன்று மீண்டும் மீண்டும் மனதில் தோன்றிக்கொண்டிருந்தால், சொல் லப்படாத ஏதோ ஒன்று நம்மை அமைதியாகத் தொட்டுக் கொண்டிருந்தால் - அங்கேதான் கவிதை இருக்கிறது.

***'ஒரு கவிதை***
***உன்னைக் கண்ணீர் விட வைத்திருக்கிறதா?***
***உன் நினைவுக் கோபுரங்களில்***
***கொடியேற்றியிருக்கின்றதா...***
***உன் ஆழ் மனதைத்***
***துழாவியிருக்கின்றதா***
***அன்றேல்***
***பின்பொரு கணம்***
***நிழலாய் தொடாந்திருக்கின்றதா?'***

ரூபன் இவ்வாறு கேட்கிறார்: 'அப்படியென்றால், அவை ஏற் கனவே எழுதப்பட்டாயிற்று; அத்தனை வார்த்தைகளும்!' எழு தப்பட்ட வார்த்தைகளும், சொற்களும், ஆறுதல்களும் எல் லாமே நமக்கு முன்பிருந்தவையே. நமது மனச்சித்திரமும், கண்களும், கைப்பெருவிரல் ரேகையும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றாக இருப்பதைப் போல, சொல்லப்பட்ட கவிதை களும் எழுதப்பட்ட வார்த்தைகளும் நம்முள் ஒரே மாதிரி யாகப் பிரதிபலிப்பதில்லை. அவை ஒவ்வொரு மனதிற்கும் ஏற்பத் தனித்தனி நிறம் கொள்கின்றன. எனவேதான் கவிதை ஒரு பேராறு. ஆறு ஏற்கனவே இருக்கிறது; அதன் கரைகளும் ஏற்கனவே இருக்கின்றன. ஆனால், அதன் ஒவ்வொரு நீர்த்து ளியும் அப்படியல்ல. ஒவ்வொரு துளியிலும் புதுமை இருக் கிறது. ஒவ்வொரு துளியும் ஆற்றின் இருப்பைத் தன்னுள் சுமந்தபடியே தனித்துவமானதாக இருக்கிறது. அப்படித்தான் கவிதையின் சொற்களும். சொற்கள் ஏற்கனவே இருந்தாலும், அவை ஒவ்வொரு மனதிலும் புதிது புதிதாய் கவிதைகளை உருவாக்கிச் செல்கின்றன.

ஒரு சொல்லின் பொருள் அகராதியில் நிலைத்திருக்கலாம்; ஆனால், அதன் உணர்வுப் பொருள் வாசிக்கும் மனதிற்கேற்ப மாறிக்கொண்டே இருக்கும். சொற்களற்ற கவிதைகளும் அப் படியே. கவிதை இருக்கிறது; சொற்கள் இல்லாமலும் இருக் கிறது. சொல்லப்படாத இடைவெளியிலும், உச்சரிக்கப்படாத மௌனத்திலும், மனத்தில் பொங்கி வழியும் உணர்வுகளிலும் அது தன்னை வெளிப்படுத்திக்கொண்டே இருக்கிறது. ஆறு ஏற்கனவே இருக்கிறது; நீர்த்துளிகள் ஒவ்வொரு கணமும் புதி தாகின்றன. கவிதையும் அப்படியே. சொற்கள் பழையவை யாக இருக்கலாம்; ஆனால், அவை எழுப்பும் மனம் ஒவ்வொரு முறையும் புதிதாகிறது. அதனால்தான் கவிதை ஒருபோதும் முழுமையாகப் பழையதாகிவிடுவதில்லை.

கவிதைகள் ஓவியங்களாகவும், ஓவியங்கள் கவிதைகளா கவும் இத்தொகுப்பில் நின்றியங்குகின்றன. கீர்த்திகாவின் ஓவியங்களுக்கான வண்ணங்களை எழுத்தில் தீட்டுகிறார் ரூபன். குறிப்பாக, 'காலத்தூரிகை' என்ற தலைப்பிலான கவிதை, இயற்கையை ஓவியமாகவும், ஓவியத்தை இயற்கையாகவும் கலைத்தெழுதுகிறது.

தூரிகை வரையும் கோடுகளுக்குள் ஓவியம் உருவாகிறது; ரூபனின் சொற்கள் தீட்டும் வரிகளுக்குள் அந்த ஓவியம் மீண் டும் உயிர்பெறுகிறது. வண்ணங்கள் காட்சியாக மட்டும் நின் றுவிடாமல், சொற்களாக மாறுகின்றன; சொற்கள் மீண்டும் வண்ணங்களாக மனதில் விரிகின்றன. இவ்வாறு, ஓவியத் திற்கும் கவிதைக்கும் இடையிலான எல்லைகளை அழித்து, இரண்டையும் ஒரே கலைவெளியில் சந்திக்கச் செய்கிறது இத் தொகுப்பு. 'காலத்தூரிகை'யில் இயற்கை ஓர் ஓவியமாகக் காட்சியளிக்கிறது; அதேவேளை, அந்த ஓவியம் இயற்கை யின் உயிர்த்துடிப்பைப் பெற்றுத் தன்னையே இயற்கையாக மாற்றிக்கொள்கிறது.

கீர்த்திகாவின் தூரிகையில் பிறந்த காட்சிகளுக்கு ரூபன் சொற்களால் வண்ணம் தீட்டுகிறார். அந்த வண்ணங்கள் வாசிப்பவரின் மனத்தில் மீண்டும் ஒரு புதிய ஓவியமாக உரு வாகின்றன. அதனால், இங்கு ஓவியம் வெறும் பார்க்கப்படும் கலையாகவும் கவிதை வெறும் வாசிக்கப்படும் கலையாகவும் நின்றுவிடவில்லை. ஓவியம் வாசிக்கப்படுகிறது; கவிதை பார்க் கப்படுகிறது. இரண்டும் ஒன்றையொன்று கடந்து, ஒன்றுக்குள்

ஒன்று தம்மை மறுபடைப்புச் செய்கின்றன.

***‘இரவும் பகலுமான***
***நாட்களின் உடலில்***
***இருளும் ஒளியும்***
***தனித்தும் புணர்ந்தும்***
***மாயம் செய்கின்றன.***
***இருளும் ஒளியுமான***
***துளிகள் அசைகின்றன.***
***அசைவின் இசைவில்***
***கறுப்பு வெள்ளையும்***
***வண்ணங்களிலுமாக***
***கோடுகளை வரைகிறது’***

*காலத்தூரிகை (பக். - 120, 121)*

ஓவியர்களான கீர்த்திகாசிறீபன், துஷீ, கதிர் ஆகியோரின் ஓவியக் கவிதைகளை, அவை வண்ணங்களில் வெளிப்படாவிட்டாலும், வண்ணங்களாகத் தீட்டுகின்றன ரூபனின் கவிதைகள். ஓவியங்களில் காணப்படும் கோடுகளையும், வடிவங்களையும், மௌனங்களையும் தமது சொற்களின் வழியே மீண்டும் வண்ணமயமாக்குகிறார் ரூபன். இவ்வாறு, ஓவியமும் கவிதையும் ஒன்றையொன்று பிரதிபலிக்கும் கலைவெளியாக இத்தொகுப்பு விரிகிறது.

நூலினை உயிர் பதிப்பகம் மிக நேர்த்தியாக வடிவமைத்திருக்கிறது. நூலின் உள்ளடக்கத்தையும் காட்சியமைப்பையும் ஒருங்கிணைத்து, வாசிப்பனுபவத்துக்கு அழகியல் பரிமாணத்தைச் சேர்த்திருக்கிறது அதன் வடிவமைப்பு. இதன் வழியாக ஏ. சண்முகநாதன் அவர்களையும் கவனிக்கத்தக்க பதிப்பாளராக இந்நூல் அடையாளப்படுத்துகிறது.

கவிஞர் நெகிழன் வடிவமைத்துள்ள அட்டை, வாசகரின் கண்களைத் தன்னுள் உள்ளிழுத்து, ஒரு காட்சிப் பயணத்திற்குள் அழைத்துச் செல்கிறது. அட்டை வெறும் நூலின் வெளிப்புற அழகாக நின்று விடாமல், நூலின் கவிதை உலகிற்கான முதல் வாசலாகவும் அமைந்திருக்கிறது.

ரூபனின் கவிதைகள் சொற்களோடு மட்டும் நின்று விட மறுக்கின்றன. சொற்களுக்குள் பேசுவதோடு, சொற்களுக்கு அப்பாலும் பேசுகின்றன. சொல்லப்பட்டவற்றையும், சொல்லப்படாதவற்றையும், மௌனத்தையும், காட்சியையும், உணர்வையும் ஒரே கவிதை வெளியில் இணைத்துக்கொள்கின்றன. சொற்களில் செறிய மறுக்கும் கவிதைகள், சொற்களுக்கு அப்பால் விரிந்துகொண்டே செல்கின்றன. அதுவே ரூபனின் கவிதைகளின் தனித்துவமான இயங்குநிலையாகத் தெரிகிறது.



mohanrajan@thaiveedu.com



மாதவி உமாசுதசர்மா

# வேர்களை மறக்காமல் வளரச் சொல்லும் ‘தேடல்கள்’

எழுத்தாளர் கமலினி கதிர் அவர்களின் ‘தேடல்கள் - இளையவர் களுக்கான வரலாற்றுத் தேடல்கள்’ என்னும் நூல், மரபுக்கும் நவீனத்துவத் திற்கும் இடையிலான புள்ளி ஒன்றில் இயங்கும் இன்றைய தலைமுறையி னரிடம் காத்திரமான பல வினாக்களை எழுப்புகின்றது. ‘நாம் யார்? எமது குடும்பங்களின் வழிவழியான வரலாறு என்ன? எமது முன்னோர்கள் எத்தகைய வாழ்வியல் போராட்டங்களையும் அனுபவங்களையும் கடந்து வந்தார்கள்? அவர்களிடம் இருந்து நாம் பெற்ற அறிவையும் பண்பாட்டு விழுமியங்களையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்துகின்றோமா?’ இவ் வாறான வினாக்களே இந்நூலின் மையக் கட்டுமானமாக விரிகின்றன.




தேடல்கள்’ என்னும் நூலின் தலைப்பையும், அதன் முகப்பில் குறியீடாக அமையும் பீனிக்ஸ் பறவையையும், கைகோர்த்து நிற்கும் இளைஞர்களின் சித்தரிப்பையும் முதன்முதலில் அவதானிக்கையில், இது இளைஞர்களுக் கான சுயமுன்னேற்ற அல்லது தன்னம்பிக்கை சார்ந்த நூலாகவே இருக் கலாம் என்றே எண்ணினேன். ஆனால் வாசிக்கத் தொடங்கியதும் அந்த எண்ணம் முற்றிலும் மாறியது. இது தனிமனித முன்னேற்றத்தை மட்டும் பேசும் நூல் அல்ல; ஒரு சமூகத்தின் நினைவுகள், குடும்ப உறவுகள், வர லாற்றுக் காயங்கள், பண்பாட்டு வேர்கள் ஆகியவற்றின் ஊடாக இளைய தலைமுறையின் சிந்தனையை விரிவுபடுத்தும் படைப்பு. ஒரு குடும்பத் தின் வழியே விரியும் வரலாறு.

இந்நூலைச் சிறுகதைத் தொகுப்பு என்று மட்டும் வரையறுக்க முடியாது; முழுமையான நாவல் என்ற வரையறைக்குள்ளும் அடக்கிவிட முடியாது. குடும்ப உரையாடல்களையும் நினைவுகளையும் அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட வரலாற்றுத் தேடலாகவே இதனைப் பார்க்க முடி கின்றது.

ஒவ்வொரு மாலைப்பொழுதிலும் குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாக அமர்ந்து பேசுவது போன்ற இயல்பான கதைச்சூழல் நூல் முழுவதும் காணப்படுகின்றது. அப்பா, அம்மா, பாட்டி, பெரியப்பா, சித்தப்பா, பேரப் பிள்ளைகள் எனப் பல தலைமுறையினர் ஒன்றாக அமர்ந்து உரையாடும் காட்சிகள், நமது வீடுகளின் முன்திண்ணைகளில் நடைபெற்ற பழைய குடும்ப உரையாடல்களை நினைவூட்டுகின்றன. கதாபாத்திரங்கள் கூறும் ஒவ்வொரு சம்பவமும் வாசகரின் மனக்கண்ணில் ஒரு திரைப்படக் காட்சி யைப்போல விரிகின்றது.

இன்றைய குடும்பங்களில் இத்தகைய உரையாடல்களுக்கான இடம் படிப் படியாகக் குறைந்து வருகின்றது. குடும்பத்தினர் ஒன்றாக அமர்ந்து கதைப்பதற்குப் பதிலாக, கல்வி, வேலை, தனியார் வகுப்புகள், தொலை பேசிகள் மற்றும் சமூக ஊடகங்கள் நமது நேரத்தை முழுமையாக ஆக்கி ரமித்துள்ளன. வயதானவர்கள் தங்களது வாழ்க்கை அனுபவங்களைப்

tg.theeban@gmail.com

பகிர்ந்துகொள்வதற்கும், இளையவர்கள் அவற்றைக் கேட்ட றிவதற்கும் சந்தர்ப்பங்கள் குறைந்துவிட்டன. இதனால் முதி யவர்களுடன் சேர்ந்து அவர்களிடம் சேமிக்கப்பட்டுள்ள குடும்ப மற்றும் சமூக வரலாறுகளையும் நாம் இழந்து கொண் டிருக்கிறோம்.

எமது குடும்பங்களில் ஏராளமான வாய்மொழிக் கதைகள் இருக்கின்றன. அவை எழுதப்படாமலும் ஆவணப்படுத்தப்ப டாமலும் ஒரு தலைமுறையோடு மறைந்துவிடுகின்றன. வய தான குடும்ப உறுப்பினர்களை இழக்கும்போது, அவர்களுடன் சேர்ந்து எவ்வளவு வரலாற்றையும் இழக்கிறோம் என்பதை இந்நூல் எனக்கு ஆழமாக உணர்த்தியது.

## பூரணம் பாட்டி: மரபையும் முன்னேற்றத்தையும் இணைக்கும் ஆளுமை:

இந்நூலில் இடம்பெறும் பூரணம் பாட்டி மிகவும் வலிமையான கதாபாத்திரமாக மனதில் பதிகிறார். அவர் பல தலைமுறை களைக் கண்டவர்; பாரம்பரிய வைத்திய அறிவைக் கொண்ட வர்; அதேவேளை கல்வியும் சமூக அனுபவமும் பெற்ற பெண். கிராம மக்களுக்கு மருந்துகளை வழங்கும்போது அவற்றைப் பயன்படுத்தும் முறையையும் அளவையும் விளக் குகிறார். தனது அறிவைத் தனக்குள் வைத்திருக்காமல், பேரப்பிள்ளைகளுடனான அன்றாட உரையாடல்களின் ஊடாக அடுத்த தலைமுறைக்கு இயல்பாகக் கடத்துகிறார்.

வெற்றிலை போடும் பழக்கத்தைக்கூட நாம் பொதுவாக ஒரு தீய பழக்கம் என்று மட்டுமே அணுகுகிறோம். ஆனால் அதனுடன் தொடர்புடைய பாரம்பரிய அறிவு, உணவுக்குப் பின்னர் அதனைப் பயன்படுத்திய விதம் போன்றவை பாட்டி யின் உரையாடல்களினூடாக வெளிப்படுகின்றன. இத்தகைய பகுதிகள் பழைய வழக்கங்களை அப்படியே ஏற்றுக்கொள் ளுமாறு வற்புறுத்தவில்லை. மாறாக, ஒரு பழக்கத்தின் பின் னால் இருந்த அறிவையும் வாழ்க்கை அனுபவத்தையும் புரிந்துகொண்டு அணுக வேண்டும் என்பதை உணர்த்து கின்றன.

பூரணம் பாட்டியைப் பழமையை மட்டுமே பிடித்துக்கொண்டு வாழும் ஒருவராக நூல் சித்தரிக்கவில்லை. தன்னிடம் வளர்ந்த பிள்ளை உயர்கல்விக்காக வெளிநாடு செல்லும் போது அவர் அதனைத் தடுக்கவில்லை. உலகின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் கல்வியிலும் வாழ்க்கையிலும் முன் னேற வேண்டும்; அதேநேரம் தனது மொழி, மரபு, குடும்ப உறவுகள் மற்றும் சமூகப் பொறுப்புகளை மறந்துவிடக் கூடாது என்பதே அவரது நிலைப்பாடு. அந்த வகையில், பூரணம் பாட்டி ஒரு நவீன பெண்ணியப் பார்வையைக் கொண்டவராகவும் தெரிகிறார். தனது அன்பைப் பாதுகாப்பு என்ற பெயரில் கட்டுப்பாடாக மாற்றாமல், அடுத்த தலை முறை சுதந்திரமாக வளர வழிவிடுகிறார். முன்னேற்றமும் மரபும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல என்பதை அவ ரது வாழ்க்கை எடுத்துக்காட்டுகின்றது.

## புலம்பெயர்ந்தாலும் வேர்களை மறக்காத தலை முறை:

வெளிநாட்டில் பேராசிரியராகப் பணியாற்றும் ஹரன், தனது மகள் தமது குடும்ப வரலாற்றையும் தாயகத்தின் பண்பாட் டையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். அதற்காக அவளைத் தாயகத்திற்கு அழைத்து வருகிறார். பாட்டியை மட்டுமன்றி பெரியப்பா, சித்தப்பா மற்றும் பிற உற வினர்களுடன் பழகுவதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கிறார்.

புலம்பெயர்ந்த தலைமுறையினர் காலப்போக்கில் தமது மொழியையும் பண்பாட்டையும் இழந்துவிடுவார்கள் என்ற பொதுவான எண்ணத்திற்கு மாறான முன்னுதாரணமாக ஹரன் திகழ்கிறார். அவர் நவீன கல்வியையும் உலகளாவிய அனுப வத்தையும் பெற்றிருந்தாலும், தனது குடும்பத்தின் நினைவுக ளிலிருந்தும் இனத்தின் வரலாற்றிலிருந்தும் விலகவில்லை. தந்தையின் குடும்ப வரலாற்றை மட்டும் குழந்தைகளுக்குக் கடத்துவது போதாது; தாயின் குடும்பம், ஊர், உறவுகள் மற்றும் பண்பாட்டையும் அவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்ற கருத்தும் நூலில் மென்மையாக முன்வைக்கப்படுகின் றது. குழந்தை வளர்ப்பில் தாய், தந்தை இருவரின் குடும்பப் பின்னணிக்கும் சமமான இடம் வழங்கப்பட வேண்டும் என்ற சமத்துவச் சிந்தனை, வெளிப்படையான பிரச்சாரமாக அல் லாமல் கதையோட்டத்தின் உள்ளே இயல்பாகப் பதிக்கப்பட் டுள்ளது.

## வரலாற்றுக் காயங்களும் உரையாடலின் ஆற்றலும்:

1977-ஆம் ஆண்டு இனக்கலவரம் உள்ளிட்ட தமிழர் வர லாற்றின் துயரமான சம்பவங்கள் குடும்ப உறுப்பினர்களின் நினைவுகளின் ஊடாக வெளிப்படுகின்றன. சிறுவயதில் தனது தாய், தந்தையை இழந்த ஹரனின் மனக்காயங்கள், காலம் கடந்தாலும் முழுமையாக மறைந்துவிடவில்லை. இரத்தம் தோய்ந்த பெற்றோரையும் தீப்பற்றி எரிந்த வீடுகளையும் பார்த்த குழந்தையின் மனதில் ஏற்பட்ட அதிர்ச்சி, அவரது வளர்ந்த பருவத்திலும் வடுக்களாகத் தொடர்கின்றது.

இந்த இடத்தில் நூல் பேசும் உளவியல் பார்வை மிகவும் முக் கியமானது. பேசப்படாமல் மனதிற்குள் ஒதுக்கிவைக்கப்படும் சோகம், அவமானம் மற்றும் அதிர்ச்சி என்பன ஒரு கட்டத்தில் எதிர்மறையான விளைவுகளாக வெளிப்படலாம் என்பதை ஹரனின் பெரியப்பா புரிந்துகொள்கிறார். எனவே அவரை வற்புறுத்தாமல், சாதாரண குடும்ப உரையாடல்களின் வழி யாக அந்த நினைவுகளைப் பேசுவதற்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குகிறார்.

மனநல ஆலோசனை என்பது மருத்துவமனை அல்லது ஆலோசனை அறைக்குள் மட்டும் நடைபெற வேண்டிய ஒன் றல்ல. அன்புடன் கேட்கும் குடும்ப உறவு, குற்றம் சாட்டாத

உரையாடல், பகிர்ந்துகொள்ள அனுமதிக்கும் சூழல் ஆகிய வையும் மனக்காயங்களை ஆற்றும் முதற்படிகளாக அமைய முடியும் என்பதை இந்நூல் உணர்த்துகின்றது.

போர், வன்முறை மற்றும் இடப்பெயர்வுகளைப் பார்த்து வளர்ந்த தலைமுறைகளின் ஆறாத மனக்காயங்கள், அடுத்த தலைமுறையின் வாழ்க்கையிலும் தாக்கங்களை ஏற்படுத்தி யிருக்கலாம். இன்று சமூகத்தில் காணப்படும் போதைப் பொருள் பாவனை, வன்முறை மற்றும் பண்பாட்டுச் சீரழிவு போன்ற பிரச்சினைகளுக்கும் பேசப்படாத கூட்டுத் துயரங்க ளுக்கும் ஏதேனும் தொடர்பு இருக்கிறதா என்ற கேள்வி யையும் நூல் மறைமுகமாக எழுப்புகின்றது.

## முன்னேற்றம் என்பதன் உண்மையான பொருள் என்ன?

முன்னேற்றம் என்ற பெயரில் நமது மொழி, மரபு, உணவு, உறவுகள் மற்றும் வாழ்க்கை முறைகள் அனைத்தையும் கைவிட்டு மேலைத்தேய வாழ்க்கை முறையைப் பின்பற் றுவது உண்மையான முன்னேற்றமா என்ற கேள்வி நூல் முழுவதும் எதிரொலிக்கின்றது.

பழமையைப் பாதுகாப்பது என்பது மாற்றங்களை மறுப்ப தல்ல. நூலில் இடம்பெறும் கதாபாத்திரங்கள் கல்வி கற்கி றார்கள், வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள், தொழில்மு றையில் உயர்கிறார்கள், தமது வாழ்க்கையைச் சிறப்பாகக் கட்டமைக்கிறார்கள். அதேநேரம் தங்களது மொழி, நிலம், மக்கள் மற்றும் மரபுகளுடனான உறவைத் துண்டித்துக் கொள்ளவில்லை. இதுவே 'வேர்களோடு சேர்ந்து வளர்தல்' என்ற நூலின் அடிப்படைச் செய்தியாகத் தெரிகின்றது.

பூரணம் பாட்டியின் வீட்டில் பாதுகாக்கப்படும் நூல்களும் இத்தேடலின் முக்கியமான குறியீடுகளாக அமைந்துள்ளன. 'இது பாட்டியின் நூல்; இது அப்பாவின் பழைய நூல்' என்று அடுத்த தலைமுறை அவற்றைத் தேடிப் பார்ப்பது, புத்த கங்கள் வெறும் வாசிப்புப் பொருட்கள் மட்டுமல்ல; ஒரு குடும்பத்தின் அறிவு, இரசனை மற்றும் நினைவுகளைத் தாங் கிச் செல்லும் ஆவணங்கள் என்பதையும் உணர்த்துகின்றது. தனிப்பட்ட பொருளாதார முன்னேற்றத்தை மட்டுமே வாழ்க் கையின் இலக்காகக் கொள்ளாமல், தாயகத்திற்கும் சமூகத் திற்கும் எவ்வாறு பங்களிக்கலாம் என்று இளையவர்கள் சிந்திக்க வேண்டும் என்ற சமூகப் பொறுப்பையும் நூல் வலி யுறுத்துகின்றது.

## கேள்விகளின் வழியாகத் தொடங்கும் தேடல்:

இந்நூல் வரலாற்றுச் சம்பவங்கள் ஒவ்வொன்றையும் ஆழமான ஆய்வாக முன்வைக்கவில்லை. மாறாக, குடும்ப உரையா டல்களின் வழியாக அவற்றின் கதவுகளைத் திறந்து காட்டு கின்றது. ஒரு சம்பவத்தை வாசித்ததும் 'அப்போது உண்மை யில் என்ன நடந்தது?', 'அதன் பின்னர் என்ன நிகழ்ந்தது?', 'அந்த வரலாறு ஏன் இவ்வாறு திசைமாறியது?' போன்ற கேள்விகள் எழுகின்றன.

இதனை நூலின் குறைபாடாகப் பார்ப்பதைவிட, அதன் நோக்கமாகவே புரிந்துகொள்ளலாம். ஏனெனில் இது இளை யவர்களுக்கு வரலாற்றின் இறுதியான பதில்களை வழங்கும் நூல் அல்ல; அவர்கள் கேள்வி கேட்கவும், மேலும் பல நூல்களைத் தேடி வாசிக்கவும், தமது குடும்பத்தினரிடம் உரையாடவும் தூண்டும் தொடக்கப்புள்ளி.

எல்லோரும் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொள்வதற்குப் பதி லாக, ஏன், எப்போது, எப்படி என்ற கேள்விகளை எழுப்பும் இளைய தலைமுறையை உருவாக்க வேண்டும் என்ற எண் ணம் இந்நூலில் வலுவாக வெளிப்படுகின்றது. ஒரு சமூகத் தின் எதிர்காலம், அதன் இளையவர்கள் எத்தனை பதில் களை நினைவில் வைத்திருக்கிறார்கள் என்பதில் அல்ல; அவர்கள் எத்தனை பொருத்தமான கேள்விகளை எழுப்புகி றார்கள் என்பதில்தான் இருக்கின்றது.

## இளையவர்கள் வாசிக்க வேண்டிய நூல்:

எளிமையான, சரளமான மொழிநடை இந்நூலின் மற்றுமொரு சிறப்பு. ஒரு கனமான வரலாற்று நூலை வாசிப்பது போன்ற சிரமம் ஏற்படுவதில்லை. யாரோ ஒருவர் அருகில் அமர்ந்து நமது குடும்பக் கதையைச் சொல்வது போன்ற உணர்வோடு வாசிக்க முடிகின்றது. வரலாறு, பண்பாடு, மனநலம், குடும்ப உறவு, சமத்துவம், புலம்பெயர் வாழ்வு, பாரம்பரிய அறிவு மற்றும் சமூகப் பொறுப்பு போன்ற பல தளங்களை ஒரே கதை யோட்டத்திற்குள் கொண்டுவந்திருப்பது பாராட்டத்தக்கது.

'தேடல்கள் - இளையவர்களுக்கான வரலாற்றுத் தேடல்கள்' நூலை வாசித்து முடித்த பின்னர், வாசகர் புத்தகத்தை மட் டும் மூடிவைத்துவிட முடியாது. தனது பாட்டி, தாத்தா, பெற் றோர் மற்றும் குடும்பத்தின் மூத்த உறுப்பினர்களிடம் கேட் காமல் விட்ட கதைகளைப் பற்றிய நினைவு நிச்சயமாக எழும். 'எனது குடும்பம் கடந்து வந்த பாதை என்ன?', 'நான் அறியாமல் இழந்த வரலாறுகள் எத்தனை?', 'இன்னும் வாழும் சான்றுகளிடமிருந்து எவற்றை ஆவணப்படுத்தலாம்?' என்ற கேள்விகள் மனதில் தொடரும்.

அந்தக் கேள்விகளையும் தேடல்களையும் உருவாக்குவ தில்தான் இந்நூலின் வெற்றி இருக்கின்றது. இளையவர்கள் தங்களது வரலாற்றை அறிந்துகொள்ளவும், குடும்ப நினைவு களைப் பாதுகாக்கவும், தமது வேர்களை மறக்காமல் உலகை நோக்கி வளரவும் வழிகாட்டும் முக்கியமான படைப் பாக எங்கட புத்தகங்கள்' வெளியீட்டகத்தின் 24-ஆவது வெளி யீடாக வெளிவந்துள்ள எழுத்தாளர் கமலினி கதிர் அவர் களின் 'தேடல்கள்' அமைகின்றது.



mathavi.u@thaiveedu.com

அன்னலட்சுமி இராஜதுரை

# அந்த நிமிடம்

## புலம்பெயர்வாழ்வின் பன்முகப் பதிவு




tg.theeban@gmail.com

புலம்பெயர் இலக்கியம் என்பது வெறும் தாயக நினைவேக்கத்தின் பதிவு மட்டுமல்ல; மாறாக, அது புதிய நிலப்பரப்பில் மனிதர்கள் தம்மைக் கண்டுகொள்ளும் அக-புற வாழ்வியல் சாட்சியமுமாகும். கிழக்கிலங்கையின் ஏறாவூரைப் பிறப்பிடமாகக் கொண்டு, ஜேர்மனியில் புலம்பெயர்ந்து வாழும் 'கௌசி' சந்திரகௌரி சிவபாலனின் 'அந்த நிமிடம்' சிறுகதைத் தொகுப்பு, புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் சமகாலச் சவால்களைப் பதிவுசெய்யும் ஒரு முக்கியமான படைப்பாக அமைந்துள்ளது.

எழுத்தாளர், பேச்சாளர், ஊடகவியலாளர் எனப் பன்முகத் திறமையாளரான இவர், கடந்த ஏழு ஆண்டுகளாக 'தமிழ் வான் அவை' அமைப்பின் ஊடாக மெய்நிகர் (Zoom) வழியில் கலை, இலக்கிய நிகழ்வுகளைத் தொடர்ச்சியாக ஒருங்கிணைத்து வரும் குறிப்பிடத்தக்க ஓர் இலக்கிய ஆளுமையாவார். 'குருவிக் கூடு' நாவல் உட்பட 'ஒளிரும் பிரபஞ்சம்', 'எல்.ஜி.பி.ரி.க்யூ' (LGBTQIA+), 'பெண் ஏன் திருமதியானாள் ?' மற்றும் 'இலக்கியத் தேடல்' ஆகிய படைப்புகளின் வரிசையில், பதினைந்து சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பாகத் தற்போது வெளிவந்திருப்பதே இந்நூலாகும்.

இத்தொகுப்பிலுள்ள பதினைந்து சிறுகதைகளும் மானுட வாழ்வியலின் பல்வேறு நுட்பமான பரிமாணங்களைத் தொட்டுச் செல்கின்றன. ஒன்றிரண்டு கதைகளைத் தவிர, பெரும்பாலானவை ஜேர்மனிக்குப் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ப் பெண்கள் மேற்கத்திய சமூகச் சூழலில் எதிர்நோக்கும் சிக்கல்களையே மையப்படுத்துகின்றன. உண்மைச் சம்பவங்களும் கற்பனை நயமும் மிளிரும் இக்கதைகள், ஆழ்ந்த அனுதாபத்தோடும் நம்பிக்கை இழையோடும் வடிக்கப்பட்டுள்ளன.

முக்கியமாகப் பெண்களின் உடல்-மனநலன், தன்பால் ஈர்ப்பு அடையாளம், புலம்பெயர் பண்பாட்டு முரண்பாடுகள், தொழில் நுட்பத்தின் நேர்மறைப் பயன்பாடு, மனநோய்களும் அவற்றின் சமூகப் பின்னணியும், முதியோர் பராமரிப்பு மற்றும் குடும்ப உறவுகளின் சிக்கல்கள் எனப் பரந்த கருப்பொருட்களை இந்நூல் ஆராய்கிறது.

இத்தொகுப்பின் முதலாவது கதையான 'ஊசி வாங்க காசு தா', பிராங்ஃபோர்ட் இரயில் நிலையத்தில் போதைப்பொருளுக்கு அடிமையாகி வாழ்வின் விளிம்பில் தவிக்கும் மக்களின் அவல நிலையை நிலா எனும் இளம் பெண்ணின் பரிவார்த்தைப் பார்வையில் வெளிப்படுத்துகிறது. கற்பனையன்றி உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு வடிக்கப்பட்ட இக்கதை, சமூகத்தின் கவனிப்பிலிருந்து விலக்கப்பட்ட விளிம்புநிலை மக்களின் மனித உரிமைகளைப் பதிவு செய்வதுடன், சமூக அக்கறையின் அவசியத்தையும் உரக்க வலியுறுத்துகிறது.

'அந்த ஒரு நிமிடம்' சிறுகதையானது குழந்தைப்பேறற்ற தம்பதியரின் மருத்துவப் போராட்டத்தையும், ஆறு மாதங்களாகக் கணவன் பணிநிமித்தம் வெளிநாட்டிலிருக்கும் வேளையில் மனைவி கர்ப்பமடைவதால் எழும் தீவிர மன உழைச்சலையும் பேசுகிறது. இதில் உருவாகும் வாழ்வியல் திருப்பங்களும் மருத்துவர்களின் மகத்தான கடமையுணர்வும் கச்சிதமாகப் படம்பிடிக்கப்பட்டுள்ளன.

'முருகனின் படைப்பு' கதையானது பிரம்மா சிறையிலிருந்தபோது முருகன் படைப்புத் தொழிலில் தவறுகள் செய்ததாகக் கூறப்படும் புராணக் கதையையும், பெண்ணுக்கு அமைந்த இரட்டைக் கருவறை எனும் அபூர்வ மருத்துவ நிலையையும் பிணைக்கும் புதுமையான கற்பனை அணுகுமுறையைக் கொண்டுள்ளது.

'முதுகுவலி' கதையானது பெண்களின் இயற்கையான உடல் மாற்றங்கள் சமூகத்தில் பரிகாசத்திற்கும் தவறான பார்வைகளுக்கும் உள்ளாகும் அவலத்தை, ராஜி என்ற மாணவியின் உடல்-மன உளைச்சல் வழியே விவரிக்கிறது. அத்துடன், சித்ரா என்ற ஆசிரியையின் தலையீடு மூலம் மாணவர் நலனில் கல்வியாளர்களின் அக்கறையின் அவசியத்தைப் பதிவு செய்கிறது.

இத்தொகுப்பின் மிக முக்கியமான கதையான 'பண்பட்ட பண்பாடு', புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு முரண்களைத் தோலுரித்துக் காட்டுகிறது. தன்பால் ஈர்ப்பாளரான நித்தி எனும் பெண், குடும்பக் 'கௌரவத்தின்' பெயரால் படுகொலை செய்யப்படும் அதிர்ச்சியை இக்கதை மையப்படுத்துகிறது. உயிருக்குப் பயந்து புலம்பெயர்ந்தவர்கள், மாற்றுப் பண்பாட்டுச் சூழலில் வாழும் பிள்ளைகளின் இயல்பைப் புரிந்து கொள்ளாமல் 'பண்பாடு' என்ற பெயரில் வன்முறையைப் பிரயோகிப்பதைக் கண்டிப்பதுடன், 'இந்த மரபு மாற வேண்டும்; அந்த மாற்றத்தின் தொடக்கமாக நான் இருப்பேன்' எனும் கனிமொழியின் சபதத்தோடு நிறைகிறது.

பாலின அடையாளம் குறித்த புரிதலை வலியுறுத்தும் இக்கதையில் LGBTQIA+ சமூகத்தினரைக் குறிப்பிட 'தன்பால் ஈர்ப்பாளர்' எனும் மரியாதைக்குரிய சொல்வழக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

'வாசி, நேசி, யோசி' கதையானது, கிருத்திகா என்ற இளம் பெண்ணின் நுட்பமான சிந்தனை வழியே செயற்கை நுண்ணறிவு (AI) தொழில் நுட்பத்தை மனித உயிர்காக்கும் மருத்துவப் பணிக்குப் பயன்படுத்தும் நேர்மறைப் போக்கைச் சித்தரிக்கிறது. நவீன டிஜிட்டல் தொழில் நுட்பத்தைச் சமூக நன்மையை நோக்கி நகர்த்தும் இன்றைய இளைய தலைமுறையின் அறிவுத் திறனை இக்கதை சிறப்பாகப் பறைசாற்றுகிறது.

'சுயம்' சிறுகதையானது, சிறுவயதில் பெற்றோரால் அலட்சியப்படுத்தப்பட்டுத் தனிமைக்கு ஆளாக்கப்படும் சந்தியா என்ற பெண், வளர்ந்த பின் 'பல ஆளுமைக் கோளாறு' (Multiple Personality Disorder) எனும் தீவிர மனநோயால் பாதிப்படையும் அவலத்தைச் சுட்டிக்காட்டுகிறது. பிள்ளைகளின் ஆரம்பகால உளவியல் நலனிலும் உணர்வுசார் தேவைகளிலும் பெற்றோர் செலுத்த வேண்டிய கவனத்தின் அவசியத்தை இக்கதை உணர்த்துகிறது.

'பெண்ணாய்ப் பிறந்த பேராச்சரியம்' கதையானது, அசாதாரணமான முன் உணர்வுகளும் (Intuitiveness) தனித்துவச் செயல்பாடுகளும் கொண்ட பிரியங்கா என்ற சிறுமியின் விசித்திரமான ஆற்றல்களால் அவளது தாயே திகைத்து மலங்க விழிக்கும் நிலையை நகைச்சுவையும் ஆச்சரியமும் கலந்து பதிவுசெய்கிறது.

'நீ யார் ?' சிறுகதையானது, 'டிமென்ஷியா' (Dementia) எனும் மறதி நோயினால் பாதிக்கப்படும் பரமசிவம் என்பவரின் வாழ்வியலிலும், அவரைச் சுற்றியுள்ள குடும்ப உறவுகளிலும் ஏற்படும் சோகமயமான தாக்கங்களை விவரிக்கிறது. முதியோர் சந்திக்கும் உடல்-மனநலப் பிரச்சினைகள் மற்றும் அவர்களை அரவணைத்துப் பராமரிப்பதன் முக்கியத்துவத்தை இக்கதை அழுத்தமாகப் பதிவு செய்கிறது.

'பாசம் செய்த மோசம்' கதையானது, கணவனை இழந்து பெரும் போராட்டங்களுக்கு இடையே தன் மகனை மருத்துவராக ஆளாக்கிய தாய், தன் மருமகளிடமும் அதே தாய்மைப் பாசத்தைப் பொழியும் சூழலில், இறுதியில் அது ஏமாற்றத்தில் முடிவதைப் பரிதாபத்துடன் விவரிக்கிறது. இக்கதை புலம்பெயர் சூழலில் குடும்ப உறவுகளுக்கு இடையே எழும் எதிர்பார்ப்புகளையும் சிக்கல்களையும் யதார்த்தமாகப் பதிவுசெய்கிறது.

அத்துடன், 'மனம்', 'நல்ல நண்பன்', 'மௌனம் கலைகிறது', 'மரணம்' மற்றும் 'காதல் சொல்ல வந்தாள்' ஆகிய கதைகளும் மனித மனங்களின் நுட்பமான உணர்வுகளையும், வாழ்வியலின் பல்வேறு எதார்த்தச் சிக்கல்களையும் அழுத்தமாகக் காட்சிப்படுத்துகின்றன.

முன்னைய புலம்பெயர் இலக்கியங்கள் தாயக நினைவேக்கத்தையும் பழைய நினைவுகளையுமே பிரதானமாகக் காட்சிப்படுத்தின. ஆனால், இந்நூலாசிரியர் கௌசி அவர்கள் சமூகப் பிரக்ஞையும் தொழில் நுட்ப அறிவும் கொண்டு, இன்றைய தலைமுறையினர் ஜேர்மனியச் சூழலில் சந்திக்கும் அக-புறப் பண்பாட்டுச் சிக்கல்களை மிகவும் நயத்துடனும் எளிமையுடனும் வெளிப்படுத்தியுள்ளார். பெண்கள் எதிர்கொள்ளும் பிரத்தியேகப் பிரச்சினைகள், தன்னின ஈர்ப்பு விவகாரங்கள், விசித்திர நோய்கள் மற்றும் பண்பாட்டு முரண்பாடுகளைக் கையாளும் இவரது அணுகுமுறை புதுமையானதாக அமைகின்றது.

'அறிவியல் புனைகதை எழுத்தாளர் ஆர்தர் சி. கிளார்க் கூறியது போல், கதைகள் அனைத்தும் நிஜத்தில் நடந்தவையாக இருக்க வேண்டியதில்லை; 'இப்படியும் நடக்கலாம்' என்ற சாத்தியக்கூறுகளும் கதையாகலாம்' என ஆசிரியர் தனது 'என் மன ஓசை' முன்னுரையில் குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது.

நூலாசிரியரின் எழுத்து நடை எளிமையும் நயமும் கலந்ததாக அமைந்துள்ளது. சிக்கலான உளவியல், சமூகவியல் விடயங்களை வாசகர்கள் இலகுவில் புரிந்துகொள்ளும் வண்ணம் எளிமையாக்கி வழங்கும் திறன் குறிப்பிடத்தக்கது. ஈழத்து ஊடக வழக்கிற்கும், புலம்பெயர் சமூகத்தின் மொழிப் பயன்பாட்டிற்கும் இணக்கமான நடை இக்கதைகளில் காணப்படுகின்றது.

இருப்பினும், சில கதைகளில் உரையாடல் நடை இயல்பான தன்மையிலிருந்து சற்று விலகிச் செல்வது உண்டு. மேலும், பல கதைகளும் ஒரே வகைப்பட்ட புலம்பெயர் பெண்களின் பிரச்சினைகளை மையப்படுத்தியிருப்பதால், கருப்பொருள் மீள்ச்சி (repetition) ஏற்படும் தருணங்கள் உள்ளன. மருத்துவ, உளவியல் விடயங்களில் எளிமையாக்கம் தேவைக்கு அதிகமாக இருப்பதையும் உணர முடிகின்றது.

இந்நூல் சமகாலப் புலம்பெயர் சமூகத்தின் முக்கியமான பிரச்சினைகளான பாலினச் சமத்துவம், பாலின அடையாள உரிமைகள், புலம்பெயர் பண்பாட்டுப் பிணக்கு மற்றும் தொழில் நுட்ப ஏற்பு போன்றவற்றை மிகவும் நேர்மையுடன் கையாள்கின்றது. பெண்களின் உடல் தன்னுரிமை, உளவியல் நலன் மற்றும் சமூக ஏற்பு ஆகியவற்றை வெவ்வேறு கோணங்களில் ஆய்வு செய்வதுடன், 'பண்பட்ட பண்பாடு' கதை வழியாகத் தன்பால் ஈர்ப்பாளர்களின் உரிமைகளுக்கும் குடும்ப ஏற்புக்கும் இடையிலான மோதலைப் பதிவு செய்து சர்வதேச மனித உரிமைகள் தரங்களுடன் ஒத்துப்போகும் பாராட்டுக்குரிய அணுகுமுறையை வெளிப்படுத்துகின்றது. மேலும், தாயகத்திலிருந்து மேற்கத்திய சூழலுக்குப் புலம்பெயர்ந்ததால் ஏற்படும் பண்பாட்டு முரண்பாடுகளையும், 'வாசி, நேசி, யோசி' கதை மூலமாக இளைய தலைமுறை தொழில் நுட்பத்தை எவ்விதம் நேர்மறையாகப் பயன்படுத்துகிறது என்பதையும் படம்பிடிக்கின்றது.

'அறிவியல் புனைகதை எழுத்தாளர் ஆர்தர் சி. கிளார்க் கூறியது போல், கதைகள் அனைத்தும் நிஜத்தில் நடந்தவையாக இருக்க வேண்டியதில்லை; 'இப்படியும் நடக்கலாம்' என்ற சாத்தியக்கூறுகளும் கதையாகலாம்' என ஆசிரியர் தனது 'என் மன ஓசை' முன்னுரையில் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. புதிய பார்வையில் சிந்திக்க வைக்கும் கௌசியின் 'அந்த நிமிடம்' தொகுப்பு, ஜீவநதி வெளியீட்டில் அழகான அட்டைப்படப் பொலிவுடன் வந்துள்ள, வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டும் பாராட்டத்தக்க ஒரு முயற்சியாகும்.



annaluxmi.rajadurai@thaiveedu.com

அழகு குணசீலன்

# ‘கனகர் கிராமம்’

## கிழக்குக்கரை வாழ்வியலின் நீள்வெட்டுமுகம்!

tg.theeban@gmail.com

மூத்த குடி, முதல்மொழி என்று பேசினாலும் தமிழில் நாவல் இலக்கியம் மூத்ததும் இல்லை, தமிழுக்கே உரியதும் அல்ல. நாவல் என்ற நவீனத்துவம் தமிழுக்கு ஒரு தத்தெடுப்பு, மேலைத்தேய தாக்கங்கள் தமிழ் இலக்கியத்தில் ஏற்படுத்திய நவீன இலக்கிய போக்கின் வளர்ப்பு. இது சமூகம், சீர்திருத்தம், வரலாற்றுப் புனைவுகள், துப்பறியும் நாவல்கள் என வியாபித்து, அரசியல், சமூக அவலங்கள், பெண்ணியம், வர்க்கம், பின்நவீனத்துவம், போர்க்கால இலக்கியம் வரை வளர்ந்து விட்ட ஒரு நவீன இலக்கியப் பரப்பாக இன்று மிளிர்கிறது.

தமிழில் முதல் நாவல் என்பது 1879-இல் மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் ‘பிரதாப முதலியார் சரித்திரம்’ என்று நம்பப்படுகிறது. தொடர்ந்து பி.ஆர். இராஜமையரின் ‘கமலாம்பாள் சரித்திரம்’, அ. மாதவய்யாவின் ‘பத்மாவதி சரித்திரம்’ ஆகியவை சமூக யதார்த்தங்களைப் பேசின. அகிலன், சாண்டில்யன், கலைஞர் கருணாநிதி... போன்றவர்கள் கதாபாத்திரத் தேர்வு, விறுவிறுப்பான கதைக்களம் ஆகியவற்றுடன் வரலாற்று உண்மைகளைக் கலந்து நாவல்களைப் படைத்தனர். இலங்கையில் தமிழ் இலக்கியப் பரப்பில் வரலாற்று உண்மைகளைப் பகிர்ந்த - அதுவும் உண்மையான சமூக அரசியல் வரலாற்றைப் பகிர்ந்து கொண்ட நாவல்களைத் தேடவேண்டிய நிலை.

இந்தப் போக்கில், ஒரு நூற்றாண்டுக்கும் மேலான நாவல் இலக்கியத் தாக்கம் எங்கள் கரங்களில் சமூக, அரசியல் யதார்த்தத்தை மட்டும் தந்துவிடவில்லை; அதற்கும் மேலாக, புனைவுகளுக்கே உரிய பொய் அழகிலும் மிகைப்படுத்தலிலும் கஞ்சத்தனத்தைக் கடைப்பிடித்து, இலங்கையின் கிழக்குக் கரையின் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வியலை, அதன் போர்வைகளை அகற்றி அம்மணமாகப் பேசும் ‘கனகர் கிராமத்தை’யும் தந்திருக்கிறது. ஈழத்து நாவல் இலக்கிய மக்கள் மன்றத்தில், ‘நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிர வேறில்லை’ என்று அடித்துச் சொல்லியிருக்கிறார் செங்கதிரோன் கோபாலகிருஷ்ணன். ‘கனகர் கிராமம்’ - ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் ஒரு ‘கோகுலன் சரித்திரம்’

இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சமூகச் சீர்திருத்தம், பிராந்திய உணர்வு, அரசியல் பிரச்சினைகள் பற்றிப் பேசும் பாணியை இஸ்லாமியப் படைப்பாளிகளே ஆரம்பித்து வைத்தனர். இலங்கை நாவல் இலக்கிய வளர்ச்சியில் இவர்களே முன்னோடிகள் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். சித்திலெப்பை மரைக்காயர் ஊடாக இஸ்லாமிய அடையாளங்களுடன் ஆரம்பித்த நாவல் இலக்கியப் பயணம் பின்னர் யாழ்ப்பாணம், மலையகம் என சமூக, பொருளாதாரப் பின்னணியைக் களமாகக் கொண்ட நாவல்கள் வெளிவர உந்துசக்தியாக அமைந்தது. சித்திலெப்பை மரைக்காயரின் ‘அஸன்பே சரித்திரம்’ இலங்கையின் முதல் நாவல் என்று கருதப்படுகிறது. எஸ். இன்னாசித்தம்பி, தி.த. சரவணமுத்துப்பிள்ளை போன்றோரும் இவரைத் தொடர்ந்தார்கள். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து ஈழகேசரி, வீரகேசரி பத்திரிகைகளின் பங்கு நாவல் இலக்கிய வளர்ச்சியில் முக்கியமானது. தொடர் நவீனங்களாக பிரசுரிக்கப்பட்டுப் பின்னர் பல நாவல்கள் வீரகேசரி வெளியீடாக வெளிவந்துள்ளன.

ஒரு நாவல் குறித்த வரையறைகளைக் கடினமான கண்ணாடிகளை அணிந்து மதிப்பீடு செய்பவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் முற்போக்கு - பிற்போக்கு என்று, எஸ். பொன்னுத்துரையின் சமூக உண்மைகளைப் பேசுகின்ற படைப்புக்களைக் கூட அங்கீகரிக்கவில்லை. அதற்காக எஸ்.பொ. துவண்டு விடவில்லை. தனக்கென ஒரு பாணியை அமைத்துக்கொண்டு அதற்கு நற்போக்கு எனப் பெயரிட்டுப் பயணித்தார். அதற்காக, அவரின் படைப்புகள் ‘முகாம்களுக்கு’ அப்பால் பேசப்படாமல் போகவில்லை. எஸ்.பொ.-வின் படைப்புத் தனித்துவம் இன்றும் பேசப்படுவதற்கு அதன் உள்ளடக்கமே முதன்மைக் காரணம். ஒரு படைப்பாளி 'எதைப் பேசுகிறார்' என்பதும், அதன் பின்னுள்ள சமூக, பொருளாதார, அரசியல் யதார்த்தமுமே ஓர் இலக்கியத்தின் முதன்மைத் தகுதியாகக் கொள்ளப்பட வேண்டும். இக்கோட்பாடே மக்கள் கலை இலக்கியத்தின் அடிப்படையாகும். மாறாக, 'எப்படிப் பேசுவது' என்ற உத்திக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுக்கும்போது, அது பல சந்தர்ப்பங்களில் கலையையும் இலக்கியத்தையும் வெறும் 'அழகியலுக்கானது மட்டுமே' என்ற தடத்தில் கொண்டுவந்து நிறுத்திவிடுகிறது. ஆதலால், 'எப்படிப் பேசுகிறார்' என்ற வடிவவாதம் முதன்மையானதல்ல; 'எதைப் பேசுவது' என்ற உள்ளடக்கமே மக்கள் கலை மற்றும் இலக்கியத்தின் அடிப்படைத் தேவையாகும்.

அந்த வகையில் 'கனகர் கிராமம்' ஒரு நாவலா? என்ற கேள்விகூட எழுப்பப்படலாம். எஸ்.பொ. மீதான குற்றச்சாட்டுக் களுள் ஒன்று அவர் பல படைப்பாளிகளால் பேசப்படாத - பேசத்தயங்கிய யதார்த்தங்களைப் 'பச்சையாக'ப் பேசினார் என்பது. அதுபோல் கிழக்கின் சமூக, பொருளாதார, அரசியல் வரலாற்றை 'கனகர் கிராமம்' குத்துமதிப்பாகப் பேசவில்லை. சுட்டு விரலைக்காட்டி ஆதாரங்களோடு பேசுகிறது. இந்த ஆதாரங்கள், நிகழ்வுகள் கேள்விச்செவியன் ஊரைக்கெடுப் பான் என்ற செவியேறல்கள் அல்ல. அத்தனையும் 'கோகுலன்' என்ற கதாபாத்திரமாக செங்கதிரோன் கோபாலகிருஷ்ணன் அள்ளி, அளைந்து, அநுபவித்த சத்தியங்கள் என்பது கனகர் கிராமம் நாவலின் முக்கியத்துவம். இங்கு கிழக்குக்கரை வாழ்வியலின் சமூகங்களுக்கிடையிலான உறவும் அதன் தாற்பரியங்களும் அரசியல் சதிகளும் வியூகங்களும் 'பச்சை யாக'ப் பேசப்படுகின்றன. இதனை 'கனகர் கிராமம்' நாவ லுக்கு சீவகன் பூபாலரெட்ணம் அளித்த முன்னீடு உறுதிப் படுத்தி நிற்கிறது.

நாவலாசிரியர் தனது இலக்கியப் படைப்புகளைச் 'செங்கதி ரோன்' என்ற புனைபெயரிலும், அரசியல்-சமூக ஆக்கங்க ளைத் 'தம்பியப்பா கோபாலகிருஷ்ணன்' என்ற சொந்தப் பெயரிலும் எழுதி வருபவர். இலக்கியத்திற்குரிய 'புனைவு அழகும்', அரசியலுக்குரிய 'அறம் சார்ந்த உண்மைத் தரவு களும்' வெவ்வேறு தளங்களைக் கொண்டவை. இதனால், இந்த இரு வேறுபட்ட இலக்குகளுக்கு இடையே படைப்பாளி செங்கதிரோனுக்கும், மனிதர் கோபாலகிருஷ்ணனுக்கும் இடையே நிகழும் நுட்பமான உளப்போரை, 'அரங்கம்' மின்னி தழில் தொடராக வெளிவந்த இந்த நாவலைப் பற்றிய தனது முன்னீட்டில், அவ்விதழின் ஆசிரியர் சீவகன் மிகத் துல்லிய மாக அடையாளப்படுத்துகிறார்.

மட்டக்களப்பின் சமூக கட்டமைப்பு, அதன் கலாசார பாரம்பரியம், மானிடவியல் நம்பிக்கைகள் மற்றும் வரலாறு பற்றி எப்.எக்ஸ். நடராசாவின் 'மட்டக்களப்பு மான்மியம்,' கந்தையா பண்டிதரின் 'மட்டக்களப்புத் தமிழகம்', சா.இ. கமலநாதன் - கமலா கமலநாதன் ஆகியோரின் கூட்டுபடைப்பான 'மட்டக்களப்பு பூர் வீக வரலாறு' என்பன பேசுகின்றபோதும், இவை பொதுவாக கிழக்குக் கரையின் சமூக வாழ்வியலில் பெரிதும் ஒரு குறுக்குவெட்டு முகங்களாகவே உள் ளன. குறிப்பிட்ட சமூக, பொருளாதார, புவியியல் களத்தைத் துண்டு, துண்டாகப் பதிவு செய்கின்றன. மேலும் கிழக்கு மாகாணத்தின் கடந்த கால சமூக அரசியல் வரலாற்றை இவை பதிவு செய்ய வில்லை. அது அன்றைய காலத்தேவையில் முக்கியமற்றதாக இருந்திருக்கலாம்.

இந்தத் தவிர்ப்பு கிழக்கு மாகாணத்தின் அரசியல் வரலாறு பதிவு செய்யப்பட்டே ஆகவேண்டும் என்ற அழுத்தத்தை எமக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் 'கனகர் கிராமம்' முக்கியமாக இன்றைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கான சமூக, அரசியல் வரலாற்றுப் பாடநூலாக அமைகிறது. அழ கியல் மொழியிலமைந்த புனைவுகளைச் சிக்கனப்படுத்தி யதன் மூலமே, இந்நாவல் அந்த முதன்மைத் தகுதியைப் பெறுகிறது. இதனாலேயே, 'கனகர் கிராமம்' கிழக்குக் கரை யின் சமூக-அரசியல் வாழ்வியலை ஏனோதானோவென்றோ, துண்டு துண்டாகவோ பேசிவிடவில்லை. மாறாக, கிழக்குக் கரையின் வெருகல் ஆற்றையும் தாண்டி வடக்கே தென்னைம ரவாடி தொடக்கம், தெற்கே குமுக்கன் ஆற்றையும் தாண்டிய மாணிக்ககங்கை வரை செங்கதிரோனின் பேனா பாய்ந்திருக் கிறது. இதன் விளைவாக, கிழக்குக் கரை என்ற பெருநிலப்ப ரப்பின் மிகத் துல்லியமானதொரு நீள்வெட்டு முகமாக இந் நாவல் அமைகிறது.

செங்கதிரோன் - கோபாலகிருஷ்ணன் அம்பாறை மாவட்டம் - பொத்துவில் தொகுதியில் - ஒரு கிராமத்தை களமாகக் கொண்டு இந்தக் கதையை நகர்த்தினாலும் கிழக்கின் அரசி யல் வரலாறாக மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதி முதல் பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதி வரையும், இடை யில் மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியை கடந்து அவரது அரசியல் கதைக்களம் வியாபித்துள்ளது. கிழக்குக் கரையின் சமூக வாழ்வியலை ஏதோ ஒரு புள்ளியில் மட்டும் குறுக்காக வெட்டிப் பார்ப்பது 'கனகர் கிராமம்' நாவலின் முழுமையான முக்கியத்துவத்தை விளக்கிவிடாது. வடக்கிலிருந்து தெற்கு வரை பரந்து விரிந்து கிடக்கும் கிழக் கின் பெருநிலப்பரப்பில் - அதன் சமூகம், பொருளாதாரம், கலாசாரம் மற்றும் நிறுவனமயப்படாத மத வழிபாடுகள் என அனைத்திலும் - ஒரு தனித்துவமான 'பன்மைத்துவம்' வெளிப் படுகிறது. இந்த நீண்ட கரையோர வாழ்வியலில், இதுவரை தெரிந்தும் தெரியாமலும், திட்டமிட்டும் தவிர்க்கப்பட்டு வந்த சமூக-அரசியல் உண்மைகளை எவ்வித ஒளிவுமறைவுமின் றிப் பதிவு செய்வதில் ஆசிரியர் முழுமையாக வெற்றியடைந் துள்ளார்.




1947 - 1972 வரை இலங்கையின் வடக்கு - கிழக்கில் இருந்த இரட்டை அங்கத்தவர் தொகுதிகள்கூட வடகிழக்கின் பன்மைத் துவ தனித்துவத்தின் ஒரு வெளிப்பாடு. ஆனால், தென்னி லங்கை மூன்று, இரண்டு அங்கத்தவர் தொகுதிகளை விடவும் இங்கு அந்தந்தச் சமூகங்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தை

தக்கவைப்பதில் சிக்கல்களே அதிகமாக இருந்துள்ளன. பன்மைத்துவ சமூக அரசியல் சுமூக வாழ்வுக்கு ஒரு அரசியல் அங்கீகாரமாக முன்மொழியப்பட்ட இந்த பன்மைப்பிரதி நிதித்துவ அரசியல் அந்த இலக்கிற்கு மாறாக, சமூக முரண் பாடுகளையே மூட்டி விட்டது. இது முறைமையின் குறை பாடா? அல்லது கட்சி அரசியல் அணுகுமுறையின் குறை பாடா? இதற்குக் 'கனகர் கிராமம்' பதிலளிக்கிறது.

'கனகர் கிராமம்' நாவல் மிகவும் கச்சிதமான யுக்தியுடன் ஆரம்பமாகிறது. கடந்த கால நினைவலைகளை சமகால பத்திரிகைச் செய்தியொன்றின் ஊடாக கதையை நகர்த்தும் செங்கதிரோனின் பாணி தனித்துவமானது. ஆம்! செங்கதி ரோன் பேசுவது போன்று பத்திரிகைச் செய்தியால் காலக்கடி காரம் பின்னோக்கி ஓடுகிறது. எண்ணற்ற நினைவலைகள், சொந்த அனுபவங்கள், நிகழ்வுகள், சமூக, அரசியல் செயற் பாடுகள் கனகர் கிராமத்தைக் கிழக்குக் கரையின் சமூக வாழ்வியலின் சமூக ஆரோக்கியத்திற்கான படைப்பாக அடை யாளப்படுத்துகின்றன.

தனிநபர் மற்றும் குடும்ப ஆரோக்கியத்துடன் நாவல் தொடங் குகிறது. திபெத்திய ஆன்மிகத் தலைவர் தலாய் லாமாவின் பொழுது எவ்வாறு விடிகிறதோ, அதேபோன்றுதான் இங்கு கோகுலன் - சுந்தரி தம்பதியரின் பொழுதும் விடிகிறது. ஒரே ஒரு வித்தியாசம்தான் - ஒன்று திபெத் மலைச்சாரல், மற்றை யது மட்டக்களப்பு வாவிக்கரை. இளஞ்சூட்டு வெந்நீர், பாதாம் பருப்பு, கோப்பி, காலை நடைப்பயிற்சி, சில்லென்ற குளிர் காற்று எனத் தொடரும் இவர்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியம் சார்ந்த வாழ்வியலை, 'கனகர் கிராமம்' வாசகர் களும் நாவலின் இறுதிவரை ஆங்காங்கே தங்கள் சொந்த அனுபவங்களோடு கலந்து உணர்வுபூர்வமாக அனுபவிக்க முடியும்.

'சாரதி சற்றும் தாமதமின்றி 'கியரை' அடுத்தடுத்து மாற்றி ஆர்முடுகல் விசையை அழுத்தினான்.' 'பஸ் குறவர்கள் காட் டுக்குள் கொண்டு செல்லும் வேட்டைநாய் உடும்பு ஒன்று ஓடக்கண்டதும் கயிற்றுப்பிடியில் இருந்து பிய்த்துக்கொண்டு பாய்ந்து போவதுபோல் உறுமிக்கொண்டு பாய்ந்து ஓடியது'. ஆபத்தில் இருந்து தப்பித்தல் இங்கு முரணாக கையாளப் பட்டிருப்பதும் ஒரு வழக்கத்திற்கு மாறான கதை சொல்லும் யுக்தி. யானையிடம் இருந்து பயணிகள் தப்பித்தல் போன்று வேட்டை நாயில் இருந்து உடும்பு தப்பித்திருக்கவேண்டும். ஆனால் இங்கு வேட்டை நாய் பஸ்ஸின் வேகத்திற்கு ஒப் பிடப்பட்டிருக்கிறது.

கோகுலனின் வாழ்விடச் சூழல், அவனது சமூக, பொருளா தார, அரசியல் வாழ்வில் செலுத்தியுள்ள செல்வாக்கும் புடம் போடலும் இந்நாவலை வாசிப்பவர்களுக்குத் தெளிவாகப் புலனாகின்றன. அவனது வீட்டு அமைவிடமே இதற்குச் சான் றாகிறது. 'மெதடிஸ்த தேவாலயத்திற்கு எதிரே, போதிராஜ ராமய வீதி (இன்றைய விபுலானந்த வீதி), மறைந்த அயலவர் ஒரு பறங்கியர், மரபான நம்பிக்கைகளான பஞ்சமி, பேய், பிசாசு, பில்லி, சூனியம் முதல் குழல்புட்டு வரை...' என விரியும் இப்பகுதி, கிழக்கின் அந்தத்திலுள்ள ஒரு கிராமத் தின் பன்மைத்துவ சமூக-மத-இனக் கட்டமைப்பையும் அதன் வாழ்வியலையும் அப்பட்டமாகப் பேசுகிறது. கிழக்கில் அன்று கிறிஸ்தவ மிஷனரிகளால் ஆரம்பிக்கப்பட்ட கிராமியப் பாட சாலைகள் இன்று சைவ சமயப் பெயர்களைத் தாங்கி நிற் பதைப் போன்றதே, 'போதிராஜராமய வீதி' பின்னர் 'விபுலா னந்த வீதி'யாக மாற்றப்பட்டிருப்பதும் ஆகும். இது, கோகு லன் வளர்ந்த அன்றைய சுமுகமான கிராமியச் சூழல் இன்று முற்றாக மாறிவிட்டதைக் காட்டுகிறது. இதுவொரு சாதாரண உதாரணம் அல்ல; ஒட்டுமொத்த இலங்கையின், குறிப்பாகக் கிழக்கின் அன்றைய இணக்கமான இன-மத உறவுகளின் அடித்தளம் சிதைக்கப்பட்டு, இன்றைய இன-மதவாத அரசி யல் எவ்வாறு கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பதற்கான அடிப் படைச் சான்றாகும். சமூக ஒருமைப்பாட்டை நேசித்த சுவாமி விபுலானந்தர் மட்டும் இன்று இருந்திருந்தால்...?'

கிழக்கின் விவசாயக் குடும்பம் ஒன்றின் சேனைப் பயிர்ச் செய்கை வாழ்வியலானது, அதனை நேரடியாக அனுபவித்த வர்களுக்கே முழுமையாக விளங்கும். இந்நாவல், வாசகரைக் கோகுலனுடன் சேர்ந்து பயணிக்க வைப்பதோடு, அந்த வாழ்வியலை அனுபவித்தவர்களின் நினைவுகளையும் மீளக் கிளறுகிறது. விடுதி வாழ்க்கை, நெல் வேளாண்மை மற்றும் சேனைப் பயிர்ச்செய்கை, இலங்கையின் சேகுவேரா கிளர்ச் சிக் காலத்தில் (1971) பாடசாலைகள் நீண்ட காலம் மூடப்பட் டிருந்தபோது சாமந்தியாற்றில் முயலும் உடும்பும் பிடிக்க நாய்களுடன் காட்டுக்குச் சென்றமை, கதிர்காமப் பாதயாத் திரை, 1977-களின் கிழக்கின் தமிழ்த்தேசிய அரசியல், பின்னர் 1990-களிலிருந்து அத்தமிழ்த்தேசிய அரசியல் போக்குகள் குறித்த அதிருப்தியும் விமர்சனமும் என விரியும் இப்பயணப் பாதையில் - கோகுலன் என்ற 'செங்கதிரோன்' கோபாலகி ருஷ்ணனும் நானும் பல இடங்களில் நினைவுகளூடாக மன தால் சந்தித்தோம். இத்தகைய அனுபவப் பகிர்வுகளே 'கனகர் கிராமம்' நாவலின் பெறுமதியைக் கூட்டுவதோடு, கிழக்குச் சமூக, பொருளாதார, அரசியல் வரலாற்றில் அதனை ஒரு மறுக்க முடியாத உண்மை ஆவணமாகவும் நிலைநிறுத்து கின்றன.

இது, இதுவரையான கிழக்கின் பாரம்பரிய அரசியல் வரலா றாக இருந்த ஏமாற்று அரசியல் போக்கினை முற்றாக மறுத லிக்கிறது. இப்பாரம்பரிய அரசியல் வரலாற்றை நிராகரிப்பது என்பது, வெறுமனே தனிப்பட்ட குரோதமோ, பிரதேசவாதமோ அல்லது தேர்தல் அரசியல் கட்சி சார்ந்த உள்நோக்கமோ அல்ல. மாறாக, அனைத்து வகையான மேலாதிக்க அநீதிக ளையும் தொடர்ச்சியாக அனுபவித்துத் திரட்டிய படிப்பினை களின் கூட்டு விளைவே ஆகும். இந்த உண்மை வரலாறு இதுவரை எங்கும் பேசப்படவில்லை. சில சந்தர்ப்பங்களில் அங்கொருவர் இங்கொருவராகச் சிலர் தங்கள் எஜமானர்க ளுக்கு முதுகு சொறிந்திருக்கக் கூடும். ஆனால், அந்த அடி மைத்தன வரலாற்றை உடைத்து, உண்மைகளை வெளிப்ப டையாகப் பேசுகின்ற கிழக்கின் முதன்மையான வரலாற்று ஆவணமாக 'கனகர் கிராமம்' திகழ்கிறது; இதுவே செங்கதி ரோன் கோபாலகிருஷ்ணனுக்குக் கிடைத்துள்ள ஆகப்பெரிய வெற்றியும், இந்நாவலின் முக்கியத்துவமுமாகும்.

ஆசிரியர் நாவலில் நிறையவே கிழக்கின் மண்வாசனை - பேச்சு வழக்கு வார்த்தைகளை அள்ளி வீசி விதைத்துள்ளார். அத்துடன் மண்வாசனைக்குரிய கிராமிய - பொருளாதார பண்பாட்டு வாழ்வியலையும், விழுமியங்களையும் கூடவே பேசுகிறார். அவை அனைத்தையும் இங்கு பட்டியலிடுவதல்ல இப்பதிவின் நோக்கம். கனகர்கிராமம் வாசகர்கள் அதனை சுயமாக அனுபவிக்க வேண்டும் என்று அவர்களிடம் விட்டு விடுகிறேன். 'கீரிச்சூட மீன்கருவாடும் உருளைக்கிழங்கும் குழம்பு, சேனையில் எடுத்த பூசணித்தலைப்பு கடையல், காட்டுக்குள் கிடந்த கானந்தி இலை சொதி, குத்தரிசிச்சோறு' இந்த மண்மணம் கிழக்கிற்கே உரியது. இதனை நாவல் எமக்குத் தருகிறது. இந்த நாவலில் எங்கள் வாழ்வியல், வழக்கை பேசும் சந்தர்ப்பங்கள் நிறைந்துள்ளன.

கோகுலன் இயன்றவரை தனது பயணத்தில் தான் சந்தித்த கிராமத்து முக்கியஸ்தர்களை வாசகர்களாகிய எங்கள் முன் நிறுத்துகிறார். அவர்களில் கந்தையா நொத்தாரிஸ், சிவஞான செல்வக்குருக்கள், வேல்முருகு மாஸ்டர் மற்றும் எம்.எச்.எம். அஸ்ரப், உதுமாலெப்பை போன்ற அம்பாறை மாவட்டத்தின் அரசியல் முக்கியஸ்தர்கள் பலரைப் பற்றிப் பேசுகிறார். அரசியல் தளத்தில் எனக்கும் அறிமுகமான ஆளுமைகள், இப்போது என் முன்னால் வந்து நிற்பது போன்றதொரு உணர்வை இந்நாவல்ஏற்படுத்துகிறது. இதே உணர்வு, எனது பத்து பன்னிரண்டு வயதில் 'சின்னச்சாமியாக' அப்பாவின் கையைப் பிடித்துக்கொண்டு கதிர்காமத்திற்குச் சென்ற நினைவுகளையும் மீளக் கிளறுகிறது. அன்று தாளங்குடா சந்தியிலிருந்து பொத்துவிலுக்குப் பேருந்து பிடித்து, அங்கிருந்து உகந்தைக்குச் சென்று கால்நடையாக நடந்த கதை நெஞ்சில் நிழலாடுகிறது. கதிர்காம யாத்திரையின் போது ஒருவரை அவரது பெயரைச் சொல்லிக் கூப்பிடாது 'சின்னச்சாமி', 'பெரியசாமி' என்று அழைக்கும் தனித்துவமான பண்பாட்டு வழக்கு நிலவியது. முதியவர்களைப் பெயரோடு சேர்த்துப் பெரியசாமி என்று அழைத்தார்கள். கோகுலன் விவரிக்கும் இயற்கை வளங்கள் வாசகருக்கு ஒரு புதிய அனுபவத்தைத் தருகின்றன. அன்று யாத்திரிகர்கள் காட்டில் யானையைக் கண்டு கூட அஞ்சியதில்லை; ஒரு 'அரோகரா' கோஷத்துடன் யானைகளோடு இயல்பாக உறவாட முடிந்தது. ஆனால், நாங்கள் பயந்ததெல்லாம் கூட்டம் கூட்டமாகத் திரியும் காட்டு எருமைகளுக்கும் குளுமாடுகளுக்கும்தான். பயணப்பாதையில் கால்களில் குத்திய, இன்றும் படர்ந்து கிடக்கும் வெள்ளி முள்ளின் வலி நினைவில் அப்படியே நிற்கிறது.

'கனகர் கிராமம்' நாவலானது, ஸ்டேட் கவுன்சில் காலம் முதல் இன்றைய நாடாளுமன்ற அரசியல் வரையிலான கிழக்கிலங்கையின் அரசியல் போக்குகளைத் துல்லியமாகப் பேசுகிறது. தங்கள் அரசியல் இருப்பைத் தக்கவைப்பதற்காகத் தீர்க்கதரிசனமற்று, சொந்த இனத்தின் எதிர்காலத்தையே விற்கும் 'வியாபார அரசியலையும்', அந்த வியாபாரிகளையும் இந்நாவல் அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டுகிறது. இலங்கையின் பன்மைத்துவ வாழ்வியலை ஆய்வு செய்த சமூகவியலாளர்கள், தெற்கின் மாத்தறை மற்றும் கிழக்கின் அம்பாறை ஆகிய இரு மாவட்டங்களையும் சமூக முரண்பாடுகள் மிக்க 'வில்லங்கமான' பகுதிகளாக அடையாளப்படுத்துகின்றனர். காணியுரிமை, பொருளாதாரம், நிர்வாகம் என அனைத்திலும் இந்த முரண்பாடு பிரதிபலிக்கிறது. கல்முனைப் பிரதேச தேர்தல் அரசியலில், ஒரே கட்சியைச் சேர்ந்த இரு முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கிடையிலான போட்டியில், ஒருவரை நாடாளுமன்றத்திற்குள் அனுப்ப மற்றவர் 'தமிழர் எதிர்ப்பு' அரசியலையே வழிமுறையாக்கியுள்ளார். 'உங்களுக்கு வடக்கு, எங்களுக்கு கிழக்கு' என்று தங்களுக்குள் ஆட்சி உறுதி எழுதும் அளவிற்கு இங்கு இன, மத வாதம் பூதாகரமாகியுள்ளது. இப்பிராந்தியத்தின் பூர்வீகக் குடியிருப்புகள் குறித்து நாவலாசிரியர் வேறு பல வரலாற்றுப் பதிவுகளையும் தந்துள்ளார்.

க. கணேசலிங்கம் தொகுத்த 'இலங்கையின் சமூக பண்பாட்டு வரலாறு' என்ற நூலில், அம்பாறை மாவட்டத்தின் தெற்கே அமைந்துள்ள 'பாணமை'யின் சமூக, அரசியல் மாற்றங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அங்கு வாழும் தமிழ் சமூகம் இன்று தங்களின் தனித்துவ அடையாளத்தில் 50 சதவீதத்தைத் தொலைத்துவிட்டு, எஞ்சியதை உடன்பாட்டுடன் தக்கவைக்கப் போராடுகிறது. இந்த ஆபத்தான கலப்பு விகிதாசாரம் இப்படியே தொடர்ந்தால், மேற்குக் கரைத் தமிழர்களைப் போல இவர்களும் பெரும்பான்மைச் சமூகத்திற்குள் விழுங்கப்பட்டுவிடுவர். சமகால இடதுசாரிகள் முன்மொழியும் 'இலங்கையராதல் மாடல்' (Sri Lankan Identity) என்பது, தாராளமயப் போர்வையில் சிறுபான்மைச் சமூகங்களின் தனித்துவ அடையாளங்களைச் சிதைத்து, அவர்களைப் பெரும்பான்மைத் தேசியத்திற்குள் கரைத்துவிடும் ஓர் ஆபத்தான தந்திரோபாயமாகும். இக்கோட்பாடு, பிராந்திய ரீதியாகச் சமூக இணக்கத்தோடும் சகிப்புத்தன்மையோடும் வாழும் எளிய சிறுபான்மைச் சமூகங்களை மிக எளிதாக விழுங்கி, அவர்களின் அடையாளங்களை அற்றதாக்கிவிடுகிறது. அதேவேளையில், இத்தகைய மேலாதிக்கக் கரைப்பு உத்திகளானது, தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகச் சிறுபான்மைச் சமூகங்களுக்குள்ளேயே தீவிரமான இன-மத அடிப்படைவாதங்கள் வேரூன்றுவதற்கே வழிவகுக்கிறது. இந்த இருமுனை ஆபத்துகளையும் 'கனகர் கிராமம்' நாவல் வரலாற்று ஆதாரங்களுடன் வாசகர்களுக்கு முன்வைத்து, அவர்களின் சுயசிந்தனையைத் தூண்டுகிறது.

கிழக்கு மாகாணத்தின் பன்மைத்துவ சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பில் மேம்பாட்டு அணுகுமுறை என்பது சுவாமி விபுலானந்தர் அணுகுமுறை. விபுலானந்தரின் கோட்பாடுகளை தவிர்த்துப் பயணிக்கும் எந்த சமூகவியல் பயணமும் அதன் இலக்கை அடையவில்லை என்பதை பல சந்தர்ப்பங்கள் நிரூபித்துள்ளன. கிழக்கில் வேறுபாடுகளற்ற இன, மத நல்லுறவையும், சமூக வாழ்வியலையும் அதனூடான கல்வி, கலாசார, பண்பாட்டு வாழ்வியலையும் கொண்ட ஒரு அபிவிருத்தி மாதிரியை சுவாமி விபுலானந்தரின் அணுகுமுறையில் காணமுடியும். கிழக்கின் அன்றைய அரசியல் தலைமைகள் பலவும் இராமக்கிருஷ்ணமிஷனின் அத்திவாரத்தில் வளர்ந்தவர்கள். இது போன்ற பல சந்தர்ப்பங்களை கனகர் கிராமம் நாவல் பேசுகிறது.

சங்கமன்கண்டி, கட்டகாமம், செல்லக்கதிர்காமம் ஆகிய இடங்கள் சார்ந்த பண்பாட்டுத் தொன்மங்கள், 'நேர்த்தி வைத்து கல் ஏற்றுதல், பின்னர் கல் இறக்குதல்' போன்ற நம்பிக் கைகள் மற்றும் விஷக்கல்-பாம்புக்கடி வைத்திய முறை ஆகி யவற்றை 'கனகர் கிராமம்' நாவல் மிக நுட்பமாகப் பதிவு செய் துள்ளது. காடு, மலை, கடல், வயல் என இந்நாவல் விவ ரிக்கும் கிழக்கின் நானிலச் செழிப்பு, இன்றைய சூழலியல் பாதுகாப்பின் அவசியத்தை உரத்து ஒலிக்கிறது. இவற்றை வாசிக்கும்போது, இயற்கை எழில் சிதைக்கப்பட்டுக்கொண்டி ருக்கும் இன்றைய அறுகம்பையின் சமகாலக் காட்சியே நம் மனதில் நிழலாடுகிறது.

அன்றைய சம்மாந்துறைப் பற்று மற்றும் புளியந்தீவைத் தளமாகக் கொண்டிருந்த மட்டக்களப்பின் தென்பகுதி, காலப் போக்கில் பிரிக்கப்பட்டுப் புதிய 'அம்பாறை மாவட்டம்' உரு வாக்கப்பட்ட வரலாற்றை இந்நாவல் விரிவாகப் பேசுகிறது. அரசாங்க நிர்வாகப் பிரிவுகளுக்கான எல்லை நிர்ணயங்கள் என்பவை, மாறிவரும் சமூக, பொருளாதார, அரசியல் சூழல் களுக்கு ஏற்ப நெகிழ்வுத்தன்மையுடன் மாற்றப்படக் கூடிய வைதான் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால், அந்த எல்லை நிர்ணயங்களும் புதிய நிர்வாகப் பிரிவு களின் உருவாக்கங்களும் சுயநல அரசியல் நோக்கங்க ளுக்காக அன்றி, முழுமையான அரசியல் நேர்மையுடன் செய் யப்பட்டிருக்க வேண்டும் என்பதையே இந்நாவல் வலியுறுத்து கிறது.

டட்லி சேனநாயக்காவும் ஜி.ஜி. பொன்னம்பலமும் தலைக்க வசம் அணிந்து, கல்லோயா - சேனநாயக்க சமுத்திரத் திட்டப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் வரலாற்றுப் பதிவை வாச கர்கள் அறிந்திருப்பீர்கள். சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்துவதைக் கடந்த 75 ஆண்டுகாலக் கட்சிக் கொள்கை யாகப் பிரகடனப்படுத்திய தமிழரசுக்கட்சியும் தமிழ்த்தேசிய வாதிகளும், நடைமுறையில் அதனைத் தடுக்கத் தவறி யதோடு தமிழ்மக்களின் வாழ்வியலையும் பாதிப்புக்குள்ளாக் கியுள்ளனர் என்பதை இந்நாவல் பேசுகிறது. சிங்களக் குடி யேற்றங்களை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டே, 'அம்பாறை' என்ற புதிய மாவட்டம் உருவாக்கப்படுவதற்குத் தமிழரசுக் கட்சி எவ்வாறு துணைபோனது என்பதை இந்நாவல் ஆதாரங் களுடன் நிறுவுகிறது. இந்தத் திட்டமிட்ட குடியேற்றங்களின் மூலமே இலங்கையின் இனத்துவ அரசியலின் வேர்களை நாம் கண்டறிய முடியும். குறிப்பாக, மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட எல்லை நிர்ணயத்தின்போது, பட்டிருப்புத் தொகுதி யில் தன் சாதிய-அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள் வதற்காக, எஸ்.எம். இராசமாணிக்கம் அவர்கள் காரியப் பருடன் இணைந்து தமிழ்க் கிராமங்களை எவ்வாறு பகடைக் காயாக்கினார் என்பதை 'கனகர் கிராமம்' ஒளிவுமறைவின்றி அம்பலப்படுத்துகிறது.

இன்று, தமிழரசுக்கட்சியின் வாரிசுகள் கல்முனைத் தமிழ்ப் பிரிவுப் பிரதேச செயலகத்தை முழுமையாக நிலைநிறுத் தவும் முடியாமல் பரிதாபகரமான அரசியலையே செய்துவரு கின்றனர். ஆனால், இந்தத் தமிழ்ப்பிரிவுச் செயலகமானது - தமிழரசும் தமிழ்த்தேசியவாதிகளும் 'துரோகி' என முத்திரை குத்திய அன்றைய அமைச்சர் கே.டபிள்யூ. தேவநாயகத்தி னாலேயே சாத்தியமானது என்ற வரலாற்று உண்மையை இந்நாவல் பேசுகிறது. கல்முனையில் இன, மத ஐக்கியத் தையும், இரு சமூகங்களும் தங்களைத் தாங்களே நிர்வகித் துக் கொள்ளும் தன்னாட்சியுரிமையையும் அடிப்படையாகக் கொண்டே அன்று அச்செயலகம் உருவாக்கப்பட்டது. ஆனால், இன்று சுவாமி விபுலாநந்தரின் மண்ணில், அவர் போற்றிய இன-மத பேதமற்ற பன்மைத்துவச் சமூகம் என்பது முற்றிலும் அர்த்தமற்றதாகிவிட்டது. இன்றைய தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் வாக்குச் சேகரிப்பிற்குரிய வெற்றுத் தேர்தல் விஞ் ஞாபனமாக மட்டுமே இவ்விடயங்கள் சுருங்கிவிட்டன.

செங்கதிரோன் தனது நாவலில் அரசியல் வரலாற்றை பேசும் அத்தியாயங்களில் முள்ளை முள்ளால் எடுக்கின்ற யுக்தியை கையாண்டுள்ளார். எம்.சி. கனகரெட்ணத்தை பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதியில் தமிழர்விடுதலைக்கூட் டணி வேட்பாளராக நிறுத்துவதற்கு கோகுலன் நகர்த்திய காய்கள் அதிசயிக்கத்தக்கவை. அதேவேளை கனகரெட்ணத் திற்கு ஆதரவானவர்களைக் கொண்டு செய்யப்படும் நியாயப் படுத்தல்களும் முக்கியமானவை. குறிப்பாகத் தமிழர் விடு தலைக் கூட்டணியின் வேட்பாளர் தேர்வு முறையில் இடம் பெற்ற 'உருட்டுக்களை' உதுமாலெப்பையின் வாயால் வெளிப் படுத்தும் சாதுரியம் மெச்சத்தக்கது. இதன் மூலம் மட்டக் களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் இடம்பெற்ற உருட்டுக்கள் அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தப்படுகிறது.

மட்டக்களப்பிலிருந்து அம்பாறை மாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னர், 1947 முதல் 1977 வரை மட்டக்களப்பு தெற்கு மற்றும் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு நாடாளுமன்றத்தில் எந்தவொரு பிரதிநிதித்துவமும் இருக்கவில்லை. 1977 பொதுத்தேர்தலில் பொத்துவில் தொகுதியில் எம்.சி. கனக ரெட்ணம் வெற்றி பெற்றதன் மூலமே அது சாத்தியமானது. முன்னதாக, திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் ஏகாம்பரம் காலமானதைத் தொடர்ந்து நடந்த இடைத்தேர் தலில், தமிழரசுக்கட்சியானது முகம்மது அலியைத் தன் வேட் பாளராக நிறுத்தித் தமிழர் பிரதிநிதித்துவத்தைத் தாரை வார்த்திருந்தது. அவ்வாறான சூழலிலும் கூட, அம்பாறை மாவட்டத் தமிழர்களின் பிரதிநிதித்துவம் குறித்து முஸ்லிம் தரப்புடன் எந்தவொரு பேரம்பேசலையும் நடத்தத் தமிழரசுக் கட்சி தயாராக இருக்கவில்லை. இது, கிழக்கின் அரசியல் தலைவிதியை யார் தீர்மானித்தார்கள் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பொருளாதார பேராசிரியரும், தற்போது அவுஸ்தி ரேலியாவில் வசிப்பவருமான காத்தான்குடியைச் சேர்ந்த பேராசிரியர் அமீர் அலி ஒரு பதிவில் குறிப்பிட்டிருப்பது போல முஸ்லிம்களின் அரசியல் என்பது ஒரு 'பயன்பாட்டு' அரசியல் ஆகும். அவர்கள் சிங்கள அரசியல் தலைமைகளை மட்டு மன்றி, தமிழ்த் தலைமைகளையும் தங்களுக்குச் சாதகமாக மிகச் சிறப்பாகவே பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்த வரலாற்று நிகழ்வுகள் நிரூபிக்கின்றன.

எம்.சி. கனகரெட்ணம் மீது கொழும்பில் வைத்துத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டபோது, அவர் அளித்த வாக்குமூலத்தில் 'ஒரு நெட்டையனும், ஒரு கட்டையனும்' வந்திருந்ததாகக் குறிப்பிட்டதாக ஊடகங்கள் ஆவணப்படுத்தின. இதன்மூலம் நெட்டையன் என்பது உமாமகேஸ்வரன் என்பதும், அவர் கனகரெட்ணத்திற்கு அறிமுகமானவர் என்பதால் அவரைக் கண்டதும் கனகரெட்ணம் அவருடன் பேச முற்பட்டார் என்பதும் அறியப்பட்ட உண்மைகள். ஆனால், கட்டையன் குறித்த மர்மம் துலங்கவில்லை. பொதுவாக அது பிரபாகரன் என்றும், பிரபாகரனே கனகரெட்ணத்தைச் சுட்டார் என்றும் பரவலாக நம்பப்பட்டது. ஆனால், அந்த நபர் பிரபாகரன் அல்ல, வாமதேவன் என்பதை 'கனகர் கிராமம்' நாவல் வெளிப்படுத்துகிறது. வாமதேவன் என்பவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் சாரதியாக இருந்தவர் என்று தெரியவருகிறது. இத்தகைய வரலாற்று நிகழ்வுகளின் பின்னணியிலுள்ள மர்மங்களை எவராலும் எளிதில் கணித்துவிட முடியாது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்புகளும், புவியியல் சூழல்களும் முற்றிலும் வேறுபட்டவை. எனவே, வடக்கின் மாதிரியை அப்படியே கிழக்கிற்குப் பொருத்த முடியாது; கிழக்கிற்கெனத் தனித்துவமான 'அபிவிருத்தி மாதிரி' காலத்தின் கட்டாயம் என்பதை முதன்முதலில் முன்மொழிந்தவர் நல்லையா மாஸ்டர் ஆவார். அவரைத் தொடர்ந்து கே.டபிள்யூ. தேவநாயகம், இராஜன் செல்வநாயகம், எம்.சி. கனகரெட்ணம், செல்லையா இராசதுரை முதலான பலர் இப்பிராந்திய அபிவிருத்தி அரசியல் வழியிலேயே பயணித்தனர். எனினும், இவர்கள் அனைவரும் 'துரோகிகளாக' முத்திரை குத்தப்பட்டனர். இத்தகைய துரோகிப் பட்டங்களையும், தன் மீதான துப்பாக்கிச் சூட்டுத் தழும்புகளையும் சுமந்துகொண்டே நாடாளுமன்ற உறுப்பினர் கனகர் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு ஆற்றிய சேவை அளப்பரியது. கிழக்கின் ஏனைய மாவட்டங்களில் பட்டதாரிகள் வேலைவாய்ப்பின்றி அலைந்த காலத்தில், அம்பாறையில் வேலையற்ற பட்டதாரிகளே இல்லை என்னும் அளவிற்குப் பெருமளவு வேலைவாய்ப்புகளை அவர் உருவாக்கிக் கொடுத்தார். 'கனகர் கிராமம்' போன்ற எதிர்காலத் தொலைநோக்குடைய பல அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்திய அவரது ஆளுமையையும் கிழக்கின் தனித்துவமான அபிவிருத்தி அரசியலின் தேவையையும் இந்நாவல் மிகச் சரியாக எமக்கு உணர்த்துகிறது.

எம்.சி. கனகரெட்ணத்தைத் 'துரோகி' என்றவர்களுக்கு அவரின் ஆரம்பகால வரலாறு தெரிந்திருக்க நியாயமில்லை. இந்த நாவலில் அவர் தொடர்பான பல புதிய தகவல்களை செங்கதிரோன் தருகிறார். தமிழ்த்தேசிய மேடைகளில் அதன் தலைவர்கள் இந்திய போராட்ட வீரர் சுபாஸ் சந்திரபோஸ் பற்றி முழங்க கேட்டிருக்கிறோம். ஆனால் கனகர் சுபாஸ் சந்திரபோஸின் சுதந்திரப்போராட்ட படையணியில் போராடியவர் என்பது எத்தனை பேருக்குத் தெரியும். கனகர் சுபாஸ் சந்திர போஸின் இராணுவத்தில் பயிற்சி பெற்றவர், இந்திய சுதந்திரத்திற்காக போராடியவர். அதற்காகப் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியால் கைது செய்யப்பட்டு மலேசிய சிறையில் அடைக்கப்பட்டார். அவருக்குத் துரோகி பட்டம் சூட்டியவர்களுக்கு இதன் மூலம் பதிலளித்திருக்கிறார் செங்கதிரோன். அது மட்டும் அல்ல கனகர் சுடப்பட்டபோது இராணுவ பயிற்சிதான் கனகரைக் காப்பாற்றியது என்று நம்பப்படுகிறது. சூடு வீழ்ந்ததும் கனகர் நிலத்தில் விழுந்து கரணம் அடித்ததால்தான் அவர் உயிர் தப்பினார் என்ற பல புதிய தகவல்களை 'கனகர் கிராமம்' வாசகர்களுக்கு வழங்குகிறது. கனகர் மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராகவும் இருந்து கட்சி அரசியல் பகைமைகளை கடந்து பணியாற்றியவர். கனகர் கட்சி மாறியபோது அவருக்கு 'இடிவிழும்' என்று அ. அமிர்தலிங்கம் நாடாளுமன்றத்தில் சாபமிட்ட போதும், தேவநாயகம், இராசதுரை, கணேசலிங்கம், டாக்டர் அகமட் பரீட்மீரா லெப்பை ஆகியோர் கனகரின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தனர். இது வடக்கு தலைமைகளால் துரோகியோடு ஒத்து ஓடுதல் என்று பேசப்பட்டது. இறுதியில் இடி எல்லோருக்கும் தான் விழுந்தது.

'கனகர் கிராமம்' நாவலா, இல்லையா என்ற மரபார்ந்த இலக்கிய அளவுகோல்களோடு சிலர் வாதாடலாம். ஆனால், கிழக்கின் சமூக, பொருளாதார, அரசியல் வரலாற்று ஆவணமாக இதன் பெறுமதியை எவராலும் நிராகரிக்க முடியாது. இப்பிராந்தியத்தின் பன்மைத்துவச் சமூகங்கள் கடந்தகாலத் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களையும், கிழக்கிற்குப் பொருத்தமானதொரு எதிர்கால மாதிரியையும் இந்நாவல் முன்மொழிகிறது. இதுவரை திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்ட பல உண்மைகளையும், வரலாற்றுத் தகவல்களையும் இது வாசகர்களுக்குத் தந்துள்ளது. பொருத்தமற்ற அளவுகோல்களைக் கொண்டு, சப்பாத்தின் அளவுக்குப் பாதங்களை வெட்ட முடியாது; மாறாக, பாதத்தின் அளவிற்கு ஏற்பச் சப்பாத்தின் அளவை மாற்றுவதே அறிவுடைமையாகும். செங்கதிரோன் கோபாலகிருஷ்ணன், 'கோகுலனாக' மாறி கிழக்கின் மூடிக்கிடந்த வரலாற்றுப் பெட்டகத்தைத் திறந்து காட்டியுள்ளார். அதில் பூட்டப்பட்டிருந்த வரலாற்று ஆதாரங்கள் இன்றைய மற்றும் எதிர்காலச் சந்ததியினருக்கு மிகவும் அவசியமானவை. அவற்றை நுகர்ந்து தெளிவடைவது வாசகர்களின் பொறுப்பாகும். கிழக்கிலங்கையில், குறிப்பாக மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் வாழும் சமூக ஆர்வலர்கள் அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டியதும், ஒவ்வொரு வீட்டு நூலகத்திலும் இடம்பெற வேண்டியதுமான ஒரு முதன்மை வரலாற்று ஆவணம் 'கனகர் கிராமம்.



gunaseelan.a@thaiveedu.com

மைதிலி தயாநிதி

# எனது பார்வையில் தி. ஞானசேகரனின் அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்

'ஞானம்' இலக்கிய சஞ்சிகை ஆசிரியரான தி. ஞானசேகரனின் அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும் எனும் சிறுகதைத் தொகுப்பு, சமூக யதார்த்தத்தையும் சமூக உளவியலையும் இணைப்பதோடு மட்டுமல்லாது, வாசகரைச் சிக்கலான அறவியல் வினாக்களை எதிர் கொள்ளவும் வைக்கிறது. மேலோட்ட வாசிப்பில் எளிமையான சிறுகதைத் தொகுப்பாகத் தோன்றினும், நுண்ணாய்வுக்கு உட்படுத்தப்படும்போது குறியீட்டியல், முரண்நகை, கதைக்கட்டமைப்பு, வரலாற்றுப் பின்னணி ஆகியவற்றின் வழியாக ஆழமான அர்த்தங்களை வெளிப்படுத்துகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளின் அடிப்படையில் இச்சிறுகதைத் தொகுதியின் இலக்கியச் சிறப்புகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

1973-இல் வெளிவந்த ஞானசேகரனின் காலதரிசனம் என்ற கதைத் தொகுப்பினை நெடுங்காலத்திற்கு முன்னர் வாசித்திருக்கிறேன். இதி லுள்ள இரண்டு கதைகள் எனக்கு இன்னமும் ஞாபகத்தில் உள்ளன. ஒன்று 'ஒரு சின்னப் பையன் அப்பாவாகிறான்' என்ற சிறுகதை. இது எனக்கு அந்தக்காலத்தில் பிடித்த கதைகளுள் ஒன்றாக இருந்தது. இலங்கையர்கோனின் 'மச்சாள்' எனும் சிறுகதையின் சாயல் அதில் நிறைய உண்டு. இரண்டாவது 'காலதரிசனம்' எனும் சிறுகதை. இது ஒரு வித்தியாச மான கதை. வெவ்வேறு சாதிகளையும் தலைமுறைகளையும் சேர்ந்த மூன்று குடும்பங்களின் வாழ்க்கையின் ஊடாக, இது பாரம்பரியத்திற் கும் சமூக மாற்றத்திற்கும் இடையிலான முரண்பாடுகளை ஆராய்கிறது.

காலதரிசனத்தின் பின்னர் 25 வருடங்கள் கழித்து 1998-ஆம் ஆண்டில் மல்லிகைப்பந்தல் அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும் என்ற அவரின் இரண்டாவது சிறுகதைத்தொகுதியை வெளியிட்டது. இத்தொகுப்பு இரண்டு வெவ்வேறான படைப்புக் காலங்களில் உருவான பதினொரு சிறுகதைகளைக் கொண்டுள்ளது.

ஒரு நாவலை ஆராய்வது அல்லது ஒரு சிறுகதையை ஆராய்வது என்பது வேறு; சிறுகதைத் தொகுதி பற்றி எழுதுவது என்பது வேறு. ஒரு விதத்தில் ஒன்றோடொன்று தொடர்பற்றதாகவும், அதேசமயம் தொடர் புள்ளதாகவும் தோன்றும் இக்கதைகள் வாசகர் வாழ்வியல் அனுபவங் களுக்கூடாக நோக்கப்படும்போது பல்வேறு எண்ணக்கருக் களை அவர்கள் மனங்களில் தோற்றுவிக்கலாம். இக் கதைகளுக்கூடாகச் செல்லும் இழைகளுள் ஒன்றினைத் தெரிந்தெடுத்து விளக்குவதும் பொருத்தமானதே. ஆனால் இக்கட்டுரை, இச்சிறுகதைத் தொகுதியிற் காணப்படும் சில இலக்கியப் பண்புகளை மட்டும் எடுத்துக்காட்டுகளுடன் விளக்க முற்படுகிறது.




அநேகமாக எல்லாக் கதைகளிலும் சமூக யதார்த் தமும், சமூக உளவியலும் இணைந்து காணப்படு கின்றன. 'கடமை', 'ராகிங்', 'கோணல்கள்', 'உள்ளும் புறமும்' போன்ற சில கதைகள் சமூக அறம் தொடர்பான வினாக்களை நம்முள்ளே எழுப்புகின்றன. சில கதைகளின் பொருண்மை பரிச்சயமானதாக இருப்பினும், எடுத்துரைப்பு முறைமையும், இலக்கிய உத்திகளும் அவற்றை இன்னொரு தளத்திற்கு எடுத்துச் செல்கின்றன. இதற்கு நல்லதோர் எடுத்துக் காட்டு 'குமிழி' என்ற கதை. அதை எமது இலக்கிய மரபிற்கேற்ப 'ஒருதலைக்காதல்' எனலாம். இது கலை, இலக்கிய தளங்களில் பரவ லாகக் கையாளப்பட்ட பேசுபொருள். தொடர்பாடல் சாத்தியமில்லாத போது நமது ஆசைகளையும் எண்ணங்களையும் இன்னொருவர் மீது ஏற்றிப் பின்னர் உண்மை நிதர்சனமாகும்போது, அந்த ஆசை நீர்க்

tg.theeban@gmail.com

குமிழி போலாகிவிடுவதை கருப்பொருளாகக் கொண்ட இதை உளவியற் கதை என வகைப்படுத்தலாம். 'வெள்ளத்தை வாரியிறைத்துக் கொண்டு பஸ் புறப்பட்டபோது நீரில் அழ காகத் தோன்றியிருந்த குமிழியொன்று 'பட்'டென்று உடைந்து சிதைந்தது' என்ற வரி கதையில் கனகுவின் மனநிலையைப் பிரதிபலிக்கிறது.

காலம் பேசுபொருளை நிர்ணயிக்கிறது என்பதற்கு மிகச் சிறந்த உதாரணமாக இத்தொகுதி திகழ்கிறது. கதைகள் ஒவ்வொன்றினையும் அவ்வவ் வரலாற்றுக்காலகட்டப் பின்ன ணியில் வைத்து நோக்கும்போது அதன் பொருண்மை துலக் -கம் பெறுவதை உணரலாம்.

முதலிற் காணப்படுவை 1996 - 1998 காலப்பகுதியில் எழுதப் பட்டவை. இலங்கையில் தீவிரமான போர்க்காலச்சூழலை மையமாக வைத்து எழுதப்பட்ட 'அல்சேஷனும் ஒரு பூனைக் குட்டியும்', 'கருவறை எழுதிய தீர்ப்பு', 'சோதனை' எனும் மூன்று கதைகள், மலையகத்தில் கல்வி பரவலாக்கப்பட்ட காலத் தைப் பின்புலமாகக் கொண்ட 'சீட்டரிசி', 'திருப்புமுனைத் தரிப் புகள்' எனும் இருகதைகள், அத்துடன் 1990-களில் ராகிங் பல்கலைக்கழகங்களில் தீவிரமடைந்த காலத்தில் எழுதப் பட்ட 'ராகிங்' எனும் சிறுகதை - இவ்வாறு ஆக மொத்தம் ஆறு சிறுகதைகள் 1990-களில் இலங்கையின் இன, சமூக, அரசியற் பிரச்சினைகள் பற்றிப் பேசுபவையாக உள்ளன.

இவற்றின் பின்னால் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஐந்து கதை களும் 1965 - 1973-க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப் பட்டவை. சாதியைக் கருப்பொருளாக் கொண்ட 'உள்ளும் புற மும்', 'எங்கோ ஒரு பிசகு' எனும் இரு கதைகள், பதின்மவய தில் உடன்போக்குத் திருமணம் புரிந்த பெண் எதிர்கொள் ளும் பிரச்சினைகளைப் பேசும் 'கோணல்கள்', பெண்ணின் ஒவ்வொரு செயற்பாட்டையும் தன்மீது அவள் விருப்பம் கொண்டுள்ளாள் என ஆண் ஒருவர் தவறாக அர்த்தப்படுத் திக்கொள்ளலை மையமாகக் கொண்ட 'குமிழி', மணமாகிய ஒருவனால் கருவுற்ற பதின்மவயதுப் பெண்ணின் கருக்கலைப் புக் கோரிக்கையை எவ்வாறு வைத்தியர் எதிர்கொண்டிருத் தல் வேண்டும் என்று மருத்துவ அறம் தொடர்பான சிக்கலை மையமாகக் கொண்ட 'கடமை' என ஐந்து கதைகள் நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இக்கதைகள் காலதரிசனம் என்ற அவரின் முதன்நூலிலிலேயே சேர்க்கப்பட்டிருக்க முடியும். ஆனால் அவர் அவ்வாறு சேர்க்காமைக்கான காரணங்களை ஊகிப்பதற்கு இது தருணமன்று. 'நான் சிறுவயதில் ஓடி விளையாடிய கன்னிமை குன்றாத யாழ்மண்ணின் உயிர்த் துடிப்புகளை இக்கதைகள் சிலவற்றில் நான் காண்கிறேன். அவை அழிந்து விடக்கூடாதே என்ற வேட்கையில் அவற்றை யும் இத்தொகுதியில் சேர்த்திருக்கிறேன்' என்று அல்சேஷ னும் ஒரு பூனைக் குட்டியும் என்ற தொகுதியிற் காணப்படும் 'என்னுரையிற்' குறிப்பிடுகின்றார்.

ஞானசேகரனின் இரண்டாம் கட்டத்து எழுத்துக்களே அதா வது 1984 - 2000 ஆண்டுகளுக்கு இடையில் எழுதப்பட்ட கதை களே இவரைத் தக்கதொரு சிறுகதையாளனாக அடையாளம் காணவைத்துள்ளன என்று க. குணராசா ஈழத்துச் சிறுகதை வரலாறு எனும் நூலில் குறிப்பிடுகின்றார் (பக்கம் 107).

இக்கருத்து மறுபரிசீலனைக்குரியது. ஞானசேகரனின் தொடக்க காலப் படைப்புகளை நுண்ணாய்வு செய்யும்போது, உளவி யலின் தாக்கத்தை அவர் கதைகளிற் சில துலக்கமாக வெளிப்படுத்துவதுடன் முரண்நகை (irony), குறியீட்டியல் (symbolism) போன்ற நுட்பமான இலக்கிய உத்திகளையும் கொண்டிருந்தன என்பது புலனாகின்றது. இது கதைகளை எவ்வாறு மதிப்பிட வேண்டும் என்ற ஒரு பொதுவான கேள்வி யையும் எழுப்புகிறது.

இவ்விடத்தில் கதைகளின் தரநிர்ணய அடிப்படைகள் குறித்த எனது கருத்தையும் பதிவு செய்ய விரும்புகிறேன். நாம் பெரும் பாலும் ஒரு சிறுகதையை ஒருமுறை மட்டுமே வாசித்துவிட்டு, நமது உடனடி உணர்வுபூர்வமான அல்லது கருத்தியல் ரீதியான எதிர்வினையின் அடிப்படையில், நல்ல கதை, கூடாத கதை என எளிமையான தீர்ப்பளித்துவிடுகிறோம், ஆனால் கதைகளைப் பல கோணங்களில் ஆராயலாம். அவற்றின் கட்டமைப்பு, கதைக்களம், பாத்திரப்படைப்பு, களம் (பின் னணி), விவரிப்பு உத்திகள், மொழி, குறியீட்டியல் முதலான பல அம்சங்களை நுனித்து நோக்கலாம். இவ்வாறு செய் யும்போது, முதல் வாசிப்பில் புலப்படாத வலுவான இலக்கிய அம்சங்களை நாம் ஆக்கமொன்றில் கண்டடையக் கூடிய தாக இருக்கிறது. ஆரம்பத்தில் பலவீனமாக அல்லது நம்ப கத்தன்மை அற்றதாகத் தோன்றும் கதைகள்கூட, ஆழமாகப் பகுப்பாய்வு செய்யப்படும்போது தங்களின் கலாபூர்வமான அம்சங்களை வெளிப்படுத்துகின்றன.

எடுத்துக்காட்டாக, ஞானசேகரனின் 1971-இல் எழுதப்பட்ட 'உள்ளும் புறமும்' என்ற சிறுகதையை இங்கு நோக்கலாம். பல்வேறு சாதியினரும் இணைந்து வாழும் கொழும்பு நகரச் சூழலில், அன்றாட வாழ்க்கையின் நடைமுறைத் தேவை களால் சாதி வேறுபாடுகள் எவ்வாறு தளர்த்தப்படுகின்றன என்பதை இக்கதை சித்திரிக்கிறது. ஒரு சிறந்த சிறுகதையின் தொடக்கம் கதைக்களத்தை அறிமுகப்படுத்துவது மட்டு மல்ல; கதையின் மையக் கருத்தை ஒரு குறியீட்டின் மூலம் முன்கூட்டியே உணர்த்துவதும் ஆகும்.

கதை, மாவிட்டபுரத்திலிருந்து ஒரு பார்சலைக் கொண்டு வரும் திருநாவுக்கரசுவின் வருகையோடு தொடங்குகிறது. பார்சல் மிகவும் கனமாக இருப்பதால், அதைக் கட்டிய கயிறு அவனது உள்ளங்கையை அழுத்திச் சிவக்க வைக்கிறது; எரிச்சலடைந்த அவன் அதை ஹோட்டல் வாசலிலேயே போட்டுவிடுகிறான். இந்தக் காட்சி கதைக்கான வெறும் தொடக்கம் மட்டுமா என்பதையும் சிந்திக்க வேண்டும். 1968-ஆம் ஆண்டு சாதிப் போராட்டங்களால் வரலாற்றில் இடம்பி டித்த மாவிட்டபுரத்திலிருந்து அந்தப் பார்சல் வருவது தற் செயலானதல்ல. அந்தக் கனமான பார்சல், கிராமத்தில் உரு வான சாதி உணர்வின் சுமையையே குறியீட்டு ரீதியாக வெளிப்படுத்துகிறது. திருநாவுக்கரசுவுடன் அது கொழும் பிற்கும் பயணிக்கிறது; பார்சல் வந்தடைவதோடு, பழைய சமூக ஒழுங்கு பற்றிய விசாரமும் அங்கு தோன்றுகிறது.

இந்தக் குறியீட்டின் பொருள் கதையின் இறுதியில் மேலும் தெளிவடைகிறது. மாவிட்டபுரத்தில் கோயில் நுழைவுப் போராட்டத்தில் ஈடுபட்ட 'சின்னவனின் மகன்' தற்போது தனது கடையில் வேலை செய்கிறான் என்பதை அறிந்தவுடன் சீவ ரத்தினம் ஒரு கணம் அதிர்ச்சியடைகிறார். ஆனால் உடனே, 'தம்பி, பிழைக்க வந்த இடத்திலை இதையெல்லாம் பார்க் கேலாது... அவனைப்போல ஒரு நம்பிக்கையான ஆள் கிடைக் காது' என்று கூறுகிறார். இங்கு சாதி உணர்வு முற்றிலும்

மறைந்துவிடவில்லை; வாழ்க்கையின் நடைமுறைத் தேவை களுக்காக அது தற்காலிகமாக ஒதுக்கிவைக்கப்படுகிறது என்பதே கதையின் நுட்பமான செய்தி.

இதனாற்றான் 'உள்ளும் புறமும்' என்ற தலைப்பு மிகுந்த பொருத்தமுடையதாக அமைகிறது. வெளிப்புறத்தில் சாதி வேறுபாடுகள் இல்லாதது போல் தோன்றினாலும், உள்ளத் தில் அவை இன்னும் உயிருடன் உள்ளன. அதுபோலவே, சாதிப் போராட்டங்களின் நினைவுகளைச் சுமந்து கொண்டி ருக்கும் மாவிட்டபுரத்திலிருந்து 'முருகானந்த பவன்' என்ற உணவகத்திற்குப் பார்சல் கொண்டு வரப்படுவது கதையின் மையக் கருத்தைத் தொடக்கத்திலேயே குறியீட்டு ரீதியில் உணர்த்தும் கலைநயமிக்க உத்தியாகும். இவ்வாறே, கதைத் தலைப்புகளும் கதாபாத்திரங்களின் பெயர்களும் தொடக்க நிகழ்வுகளும் இவருடைய சிறுகதைகளில் அர்த்தச் செறிவு டன் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்ற குறியீட்டு உத்தியை சிறப்பாக கையாண்டுள்ள மற்றொரு கதை 'அல்சேஷனும் ஒரு பூனைக் குட்டியும்'. இதில் அல்சேஷனும் பூனைக்குட்டியும் குறியீட்டு ரீதியாக முறையே சிங்களப் பெரும்பான்மைவாத அரசையும் தமிழ்ச் சிறுபான் மையினரையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அதேவேளை, தமிழரான கதைசொல்லிக்கும் அவரது சிங்கள நண்பரான சில்வாவிற்கும் இடையிலான ஆழமான நட்பைச் சித்திரிப்பதன் மூலம், சிங்கள மக்களையும் சிங்களப் பெரும்பான்மைவாத அரசியலையும் ஆசிரியர் தெளிவாக வேறுபடுத்திக் காட்டு கிறார். இந்த நட்பானது இரு சமூகங்களுக்குமிடையே இணக் கமான சகவாழ்வு சாத்தியம் என்பதை உணர்த்தும் அதே வேளை, தனிப்பட்ட நல்லெண்ணமும் பரஸ்பர மரியாதையும் மட்டுமே கட்டமைக்கப்பட்ட அரசியல் அநீதிகளைத் தீர்த் துவிட முடியாது என்பதையும் உணர்த்துகிறது. 1983 இனக் கலவரத்திற்குப் பிறகு சில்வாவுடனான தொடர்பைத் துண் டித்துக்கொள்ளும் கதைசொல்லியின் முடிவு, அரசியல்வாதி களால் தூண்டப்பட்ட வன்முறை மனித உறவுகளை எவ்வாறு பாதிக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது. சில்வாவின் மனைவியான மாலினி, ஆரம்பத்தில் தமிழ்ப் போராளிகளை 'பயங்கரவாதிகள்', தமிழ் இளைஞர்களே போரைத் தொடங் கியவர்கள் என்றெல்லாம் அரசின் அதிகாரப்பூர்வக் கருத் தையே எதிரொலிக்கிறாள். ஆனால் கதைசொல்லியின் வர லாற்று விளக்கத்தையும், அல்சேஷன் நாய்க்கும் பூனைக் குட்டிக்கும் இடையிலான மோதலையும் நேரில் கண்ட பிறகு, தனது கருத்தை மறுபரிசீலனை செய்யத் தொடங்குவது போன்று கதை முடிவுறுகிறது. தப்பிச் செல்லும் எல்லா வழிகளும் மறுக்கப்பட்ட பின்னரே பூனைக்குட்டி எதிர்த்துப் போராடு கிறது. இந்தக் குறியீட்டு நிகழ்வு, தமிழ் ஆயுதப் போராட்டம் என்பது தொடர்ச்சியான அரசியல் மற்றும் சமூக ஒடுக்குமு றைகளுக்குப் பிறகு சுயஇருப்பைத் தக்கவைத்துக் கொள் ளும் தற்காப்பு முயற்சியாகவே உருவானது என்ற கதை யாசிரியரின் கருத்தை உருவக ரீதியில் வலுப்படுத்துகிறது.

ஞானசேகரனின் கதைகள் பொதுவாக இரண்டு தளங்களில் புரிந்து கொள்ளப்படவேண்டியவை. வெளிப்படையாகக் கதை யில் கூறப்படும் கருத்து ஒரு புறமிருக்க, கதையின் உட்த ளத்தில் புரிந்து கொள்ளப்பட வேண்டிய கருத்து எனப் பிறி தொன்றிருக்கும். எடுத்துக்காட்டாக 'கருவறை எழுதிய தீர்ப்பு' என்ற சிறுகதையைக் குறிப்பிடலாம். ஒருவரின் இன அடையா ளமும் இனப்பற்றும் அவரது மரபணுவைக் காட்டிலும், அவர் வாழும் சமூகச் சூழல், வாழ்வியல் அனுபவங்கள் ஆகியவற் றாலேயே பெரிதும் வடிவமைக்கப்படுகின்றன என்ற கருத்தை இக்கதை முன்வைக்கிறது. இதற்கான வலுவான சான்றுகளை யும் கதை வழங்குகிறது. இலண்டனில் மருத்துவப் பேராசிரி யராகப் பணியாற்றும் கதைசொல்லியான தமிழர் ஒருவரின் விந்துதானத்தின் மூலம் அவரது நண்பரான பெரேராவின் மனைவி ஸ்ரீமணிக்குப் பிறந்த குழந்தை சுனில். ஆனால் தனக்குக் குழந்தையை அளித்தவர் தனது நண்பரே என்பது பெரேராவுக்கோ, ஸ்ரீமணிக்கோ தெரியாது. சுனில் சிங்களக் குடும்பத்தில் வளர்ந்து, சிங்கள மொழி, பௌத்த மதம், சிங் கள தேசியம் ஆகியவற்றைத் தனது சொந்த அடையாளங் களாக ஏற்றுக்கொள்கிறான். அத்துடன், தனதுசொந்த விருப் பத்தின் பேரில் இலங்கை விமானப்படையில் விமானியாகச் சேர்ந்து அரசு தரப்பில் போரிடுகிறான். இறுதியில் அவன் ஓட்டிச் சென்ற போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதால் உயி ரிழக்கிறான். இரத்த உறவோ மரபணுவோ மட்டுமே ஒருவரின் அடையாளத்தைத் தீர்மானிக்கின்றன என்ற பொதுவான கருதுகோளை இக்கதை கேள்விக்கு உட்படுத்துகிறது. சுனில் தமிழர் ஒருவரின் மரபணு வழியாகத் தோன்றியிருப்பினும், சமூகமயமாக்கல் காரணிகளே அவனது சுய அடையாளத் தையும் விசுவாசத்தையும் வடிவமைக்கின்றன. ஆனால், ஆசிரியர் இந்தக் கருத்தை எங்கும் நேரடியாகக் கூறவில்லை. வாசகர்களே தமது வாசிப்பு அனுபவத்தின் வழியாக இதை உணர்கின்றனர். இந்த மறைமுகத் தன்மை இக்கதையின் முக்கியமான இலக்கியநயங்களில் ஒன்றாகும். எனினும், மருத்துவத்தில் தார்மீக ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாத ஏமாற்றுச் செயற்பாடு மூலமே ஆசிரியர் இந்தக் கருத்தை வலுவாக நிறுவுகிறார் என்பது துரதிர்ஷ்டவசமானது. இருப் பினும், தனது கருத்தை நிறுவுவதற்கு, இத்தகைய கதை யுத்தி அவருக்குத் தவிர்க்க முடியாத ஒன்றாகவும் இருந்தி ருக்கக்கூடும்.

அடுத்து, மலையகக் கதைகளுள் ஒன்றான 'திருப்புமுனைத் தரிப்புகள்' என்ற கதையைச் சுருக்கமாக நோக்கலாம். 'திருப்பு முனை' (turning point) என்ற சொற்றொடரே வாழ்க்கை என்பது ஒரு பயணம் என்பதை உணர்த்துகிறது. மலையக இளைஞர்களின் வாழ்க்கைப் பயணத்தில் கல்வி மட்டுமே உண்மையான திருப்புமுனையை ஏற்படுத்த முடியும். மலை யகப் பாடசாலைகள் வளர்ச்சி பெற்றுள்ளன என்பதைக் கதையிலிருந்து ஊகிக்கக் கூடியதாக இருக்கும் அதே வேளை கற்றலுக்கான சூழல் மலையக இல்லங்களிலும், சுற் றாடல்களிலும் நிலவவில்லை என்பதை ஆசிரியர் அடுக் கடுக்காகக் கதையில் சுட்டிக்காட்டிக்கொண்டே வருகிறார். இருப்பினும், கல்விக்கான பாதையில் 'நிறுத்தங்கள்' அல்லது 'தடைகள்' எனக் கருதக்கூடிய இவை கடக்க முடியாதவை அல்ல என்பதையும் கதை உணர்த்துகிறது. அதற்கு சுயகட் டுப்பாடும் விடாமுயற்சியும் தேவை. தங்கராசு படிப்பதற்கான இடையூறிகளில் பெரும்பாலானவை சத்தத்தின் மூலமாகவே வருகிறது, எடுத்துக்காட்டாக, நாய்களின் குரைப்பு, குழந்தை யின் அழுகை, மேள தாளங்கள், வானொலி, தொலைக் காட்சி, மாரியம்மன் தாலாட்டு, இருமல் சத்தம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இந்தச் சத்தங்களுக்கு எதிராக, தந்தையின் கனவை உணர்ந்து கொண்ட தங்கராசுவின் குரல் எதிர்க் குரலாய் ஒலிக்கிறது: 'செலவுப் பெட்டியை மேசையாகப் பாவித்து அதன்மேல் புதிதாக வாங்கிய லாந்தரை ஏற்றி வைத்து, பலத்த குரலில் மீண்டும் அவன் படிக்கத் தொடங் கியபோது, சூழலில் இருந்த கவனச்சிதறல்கள் யாவும்

அவனது வைராக்கியத்தில் கரைந்து போயின' என்று கதை முடிவுறுகிறது.

இனி, பெண்மையக் கதைகள் இரண்டினை நோக்கலாம். 'கோணல்கள்' என்ற கதையில் வரும் பார்வதி எனும் பதின்ம வயது யுவதியின் பாத்திரமும், 'சீட்டரிசி' கதையில் இடம் பெறும் மலையகத் தோட்டத்தொழிலாளியான பார்வதி என்ற பெண்பாத்திரமும் குறிப்பிடத்தக்கவை. ராஜாஜியின் 'திக் கற்ற பார்வதி' கதையில் வரும் பார்வதி எனும் துயரம் தோய்ந்த பெண்பாத்திரத்தினை இவை நினைவுபடுத்துபவை. 'கோணல்கள்', 'சீட்டரிசி' எனும் இரண்டு கதைகளுமே பார்வ திகளின் அகவுலகினைத் திறம்படச் சித்திரிப்பவை. சமூக யதார்த்தமுடன் உளவியல் யதார்த்தமும் இணைந்த சிறு கதைகள் என்று கூறலாம். உளவியல் யதார்த்தமானது புற வயமான கதை நிகழ்வுகளைக் காட்டிலும் பாத்திரங்களின் அகச் சிந்தனைகள், உணர்வுகள் உந்துதல்கள் மீது கவனம் செலுத்துகிறது.

சிறுகதைத் தலைப்புகளே வெவ்வேறு அர்த்தங்களைத் தரு வனவாக இருப்பதையும் இங்கு குறிப்பிடல் வேண்டும். 'கோணல்கள்' என்ற பன்மைப் பதம், இளமைப் பருவத்தில் எடுத்த ஓர் அவசர முடிவினால் சீர்குலைந்த பாதையில் திசை மாறிச் சென்றுவிட்ட பார்வதியின் வாழ்க்கையைக் குறிக்கிறது. அதே சமயம் ஆதரவற்றுத் தனிமைப்படுத்தப்பட்ட பெண் களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த நினைக்கும் கன கரத்தினம் எனும் பாத்திரத்தின் கோணல் புத்தியையும் குறிக் கிறது, அத்துடன் இத்தகைய அபலைப் பெண்களைப் புறக் கணிப்பதன் மூலம் சமூகம் தான் கடைப்பிடிக்கவேண்டிய அறநெறியிலிருந்து பிறழ்ந்திருத்தலையும் உணர்த்துகிறது, பார்வதி செய்யவேண்டி நேரிடும் சமரசங்களுக்கு அவள் மாத்திரமே பொறுப்பாளியா என்ற வினாவும் கதையில் தொக்கு நிற்கிறது. இக்கதையின் மையக்கருத்து, சமூகம் ஆதரவற்ற மனிதர்களைப் புறக்கணிக்கும்போது, அங்கு சுரண்டல்கள் நிகழ்வதற்கான சூழ்நிலைகள் உருவாகின்றன என்பதாகும்.

இதேபோல், பெண்களின் வாழ்வியல் போராட்டத்தை மலை யக சமூகச் சூழலில் சித்திரிக்கும் கதை 'சீட்டரிசி'. இது தனது ஒரே மகனுக்குத் தேவையான அடிப்படையான பள்ளிப் பொருட்களை வாங்குவதற்காகப் போராடும் ஒரு பெண்ணின் அவல நிலையைக் காட்டுகிறது. கணவனின் குடிப்பழக்கமே குடும்பப் பிரச்சினைகளுக்குக் காரணமாகிறது. மகனின் அத் தியாவசிய கல்விச்செலவைச் சமாளிப்பதற்காகப் பார்வதி கணவனுக்குத் தெரியாமல் 'சீட்டரிசி' திட்டத்தில் இரகசிய மாகப் பங்கேற்கிறாள். வறுமையும், கணவன்மார்களின் பரவ லான குடிப்பழக்கமும் தோட்டத் தொழிலாளர்களான பெண் களை ஒன்றுபடுத்துவதோடு, இக்கஷ்டங்களை எதிர்கொள்வ தற்கான பரஸ்பர புரிதல், ஒற்றுமை என்பவற்றையும் வளர்க் கிறது. பெண்கள் ஒருவரை ஒருவர் பிரச்சினையிலிருந்து விடுவிக்க எத்தனிக்கிறார்கள் என்பது கதையில் அழுத்த மாகக் கூறப்படும் விடயங்களுள் ஒன்று. கதையில் பெண்க ளுக்கிடையிலான புரிந்துணர்வும், மீள்திறனும் (resilience) காட்டப்படுகின்றன. இருப்பினும், கதையின் இறுதிப் பகுதி செயற்கையாகவும் பலவந்தமாகவும் திணிக்கப்பட்டது போலத் தோன்றுகிறது. பார்வதியின் கணவன் கந்தையாவின் கதா பாத்திரம் போதுமான அளவிற்கு வளர்த்தெடுக்கப்படாத தால், அவனது திடீர் மனமாற்றமும் குடிப்பழக்கத்தை முற்றிலும் கைவிடுவதற்கான அவனது உறுதியும் முழுமை யாக நம்பும்படி இல்லை. மேலும், மதுபானக் கடையில் தான் சந்தித்த அவமானத்தைத் தொடர்ந்து வந்த கோபத்தின் வெளிப்பாடே மனைவி மீதான அவனின் வன்முறை என்று கதையில் விளக்கமளிக்கப்படுவதும் பிரச்சினைக்குரியது. இது எவ்வாறிருப்பினும் பார்வதியின் அகவுலகும், சிந்தனை யோட்டங்களும் இக்கதையில் மிகச் சிறப்பாக வெளிப்படுத் தப்பட்டுள்ளன.

இறுதியாக, 'ராகிங்' என்ற சிறுகதை பற்றியும் குறிப்பிடல் வேண்டும். இக்கதை ராகிங்கால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய கதை என்று கூறுவதற்கில்லை. மாறாக, எவ்வாறு அதனைத் தடுப்பது என்பது குறித்து தீவிரமான ஆலோசனைகள் நிகழ்ந்த காலத்தில், ராகிங்கை கடுமையான தண்டனைகள் மூலமே ஒழிக்க முடியும் என்ற சிந்தனை வலுப்பெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் மாற்றுச் சிந்தனை ஒன்றினை முன்வைப்பதாக உள்ளது. இலங்கை அரசு அமுலுக்குக் கொண்டுவந்த 1998-ஆம் ஆண்டின் 20-ஆம் இலக்க 'கல்வி நிறுவனங்களில் ராகிங் மற்றும் பிற வன்முறை வடிவங் களைத் தடை செய்யும் சட்டம்' ராகிங்கை ஒரு தீவிரமான குற் றவியல் குற்றமாக்கியதுடன், இதில் ஈடுபடுபவர்களுக்கும் கடுமையான தண்டனைகளை விதிக்கிறது என்பது கவனத் திற்குரியது. எனினும் இச்சிறுகதை உயர்தரப் பாடசாலை ஒன்றில் நிகழ்வதாகவே எழுதப்பட்டுள்ளது. இதன் முக்கியத் துவம் 'குற்றமும் தண்டனையும்' எனும் கருத்தாக்கம் தொடர் பாக ஒரு புதிய கண்ணோட்டத்தை வழங்குவது ஆகும். தண் டனையின் நோக்கம் என்ன? மாணவர்க்கு வழங்கும் தண்ட னையை எவ்வாறு அவர்களின் பிற்கால வாழ்க்கை பாரதூர மாகப் பாதிக்கப்படாவகையில் வழங்கலாம்? 'நியாயமற்ற' தண்டனைகள் வழங்கப்படுவதால் பாதிக்கப்பட்டவர்கள்கூடக் குற்றவாளிகளை ஆதரிக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார் களா? முதலான கேள்விகளை இக்கதை முன்வைக்கிறது.

நிறைவாக, ஞானசேகரனின் சிறுகதைகளின் ஒட்டுமொத்த இலக்கியச் சிறப்புகளைச் சுருக்கமாகக் கூற வேண்டுமெனில், பின்வரும் அம்சங்களைச் சுட்டிக்காட்டலாம். ஞானசேகரனின் சிறுகதைகள் இருண்மையற்ற, தெளிவான மொழியில் சாதா ரண வாசகர்களும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய நடையில் எழுதப்பட்டிருந்தாலும், அவை வெறும் எளிய வாசிப்பனுப வத்தை மட்டும் வழங்கவில்லை. சமூக யதார்த்தம், சமூக உளவியல், மனித உறவுகள், அறச்சிக்கல்கள், வரலாற்றுப் பின்னணி ஆகியவை குறித்து வாசகர் சிந்திக்கத் தூண்டும் வகையில் எழுதப்பட்டுள்ளன. குறியீட்டியல், உளவியல் யதார்த்தம் போன்ற இலக்கிய உத்திகள் அக்கதைகளுக்கு ஆழத்தையும் இலக்கிய நயத்தையும் அளிக்கின்றன. வாசித்து முடித்த பிறகும் தொடர்ந்து விவாதிக்கவும் மறுபரி சீலனை செய்யவும் தூண்டும் இக்கதைகள், ஞானசேகரனை குறிப்பிடத்தக்க சிறுகதையாளராக இலக்கியவுலகில் நிலை நிறுத்துகின்றன.



maithilithayanithy@thaiveedu.com

# கடல்மேல் நின்று எழுதப்பட்ட முதல் படைப்பு: ஆழி சூழ் உலகு

**சு. வேணுகோபால்**



தமிழின் ஐவகை நிலங்களிலிருந்தும் மதிக்கத்தக்க படைப்புகள் வந்திருக்கின்றன. இருப்பினும் நெய்தல் நிலப் பின்னணியிலிருந்து வந்திருக்கும் படைப்புகள் மிக மிக குறைவு. அதிலும் பொருட்படுத்திப் பேசத்தக்க படைப்புகள் ஒன்றோ இரண்டுதான். உடனடியாக நினைவிற்கு வருவன 'கடல்புரத்தில்', 'ஒரு கடலோர கிராமத்தின் கதை'. 'செம்மீன்' தமிழின் அருகில் உள்ள பண்பாட்டுக்களமான கேரள கடற்கரையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை நிலங்களிலிருந்து மெச்சத் தகுந்த படைப்புகள் நம்மிடம் உள்ளன. அந்த வகையில் நெய்தல் நிலப் பின்னணியிலிருந்து மெச்சத்தகுந்த படைப்பாக 'ஆழி சூழ் உலகு' வந்து சேர்ந்திருக்கிறது.

ஜோ.டி. குருஸின் 'ஆழி சூழ் உலகு' நெய்தல் நிலத்திலிருந்து முளைத்தெழுந்த ஒன்று. அவ்விதமான கடல் மேல் எழுதப்பட்ட தமிழின் முதல் படைப்பு இது ஒன்றே. மற்றவை கடற்கரையில் நின்று கடல் வாழ்வை எழுத முயற்சித்த படைப்புகள்தாம். ஒரு நூற்றாண்டு புனைவு வரலாற்றில் நெய்தலை உருட்டித்திரட்டி எழுத்து வடிவத்திற்குள் கொண்டு வந்த படைப்புகள் எதுவும் இல்லாமல் இருந்தது. 'ஆழி சூழ் உலகு' நெய்தல் நிலத்தின் எழுத்தாக மட்டும் அல்லாமல் இலக்கியத் தகுதியோடும் உருவாகியிருக்கிறது.

'சட்டி சுட்டது', 'கோபல்ல கிராமம்', 'பிறகு', 'ஆனந்தாயி', 'கோவேறு கழுதைகள்', 'தலைகீழ் விகிதங்கள்', 'அஞ்சலை', 'ஈரம் கசிந்த நிலம்', 'நுண்வெளிக் கிரகணங்கள்' போன்ற படைப்புகள் நிலத்தை அசலாகப் பெயர்த்திருக்கின்றன. மனித உள்ளங்களில் புகுந்து பயணிக்கிற அடிப்படையில் இவற்றில் ஒன்றிரண்டு மேலான தகுதியைப் பெறுகின்றன.

தமிழின் மிக முக்கியமான படைப்பாளிகளான, தி. ஜானகிராமன், ஹெப்சிபா யேசுதான், தோப்பில் முகமது மீரான், வண்ணநிலவன், சி.சு. செல்லப்பா, கிருத்திகா, சுந்தரராமசாமி, க.நா. சுப்ரமணியம், வண்ணதாசன் போன்றோர் ஒரு எல்லை வரையில் அவ்வப் பிரதேசங்களைப் படைப்பில் இழுத்திருக்கின்றனர். நகரத்தை மிக அசலான பகுதிகளாக்கிக் கொண்டவர்கள் அசோகமித்திரன், ஜி. நாகராஜன், ஆதவன், நீல. பத்மநாபன் என இவர்களைக் குறிப்பிடலாம். இதேபோல தமிழின் முக்கியமான படைப்பாளிகளிடம் நிலமே

tg.theeban@gmail.com

இல்லாமல் மானுடர்களைத் தீண்டியவர்கள் இருக்கிறார்கள். ஜெயகாந்தன், லா.ச.ரா. என்று சிலர் உண்டு.

ஜோ.டி. குரூஸின் 'ஆழி சூழ் உலகு' நாவல், நெய்தல் நிலத்து மனிதராலேயே எழுதப்பட்டதால் பரதவர் வாழ்விய லையும் கடல் தொழிலையும் அதுவரை அறியப்படாத புதிய அனுபவமாக வாசகருக்குத் தரும் பலத்தைக் கொண் டுள்ளது. இருப்பினும், ஹெமிங்வே மற்றும் தகழி போன்ற படைப்பாளிகள் தங்களின் படைப்புகளில் காட்டிய வாழ்வின் சாரத்தையோ, தத்துவார்த்த ஆழத்தையோ ஜோ.டி. குரூஸ் எட்டவில்லை. நாவலில் வரும் தியாகங்கள் வாசகரை உலுக் குவதற்குப் பதிலாக, இயேசுவின் தியாகத்தை ஒட்டிய பல வீனமான ஒன்றாகவே அமைகின்றன; அதுவே துரோகிக ளுக்கு எதிரான தியாகமாகவோ அல்லது பிற கதாபாத்திரங் களின் வழி நிகழ்ந்ததாகவோ அமைந்திருந்தால் பெரும் சலனத்தை ஏற்படுத்தியிருக்கும். மிக முக்கியமாக, கடலில் கட்டுமரத்தில் சிக்கித் தவிக்கும் மூவரின் அகமனப் போராட் டத்தை நாவலாசிரியர் புனைவுக்கான உத்தியாக மாற்றத் தவறிவிட்டார். அந்த ஆழித்தாக்குதல் பகுதி, கதாபாத்திரங் களின் மனப்பதட்டங்களை ஆழமாக வெளிப்படுத்தாமல் வெறுமனே பரதவர் வாழ்க்கைப் பதிவாக மட்டுமே எஞ்சி நிற்பதால், அது நாவலின் பிற பகுதிகளோடு வேரோடி இணையாமல் தனித்தே நிற்கிறது. இந்நாவல் பரதவரின் இனக்குழு வாழ்க்கையை மிகச் சிறப்பாகப் பதிவு செய்திருக் கிறது. பரதவர்களின் சகலவிதமான பகுதிகளும் நாவலுக் குள் இறங்கியிருக்கின்றன. கிட்டத்தட்ட பறவையின் கண்கள் வழி ஆமந்துறை மக்களின் இயக்கத்தினை, இனக்குழு அசை வுகளை, பண்பாட்டுக் கூறுகளை பதிவு செய்ததுபோல் இருக் கிறது. வேறு வகையில் சொல்வதானால் பரதவரின் கூட்டத் திலிருக்கும் ஒருவர் வாழும் வாழ்ந்த வாழ்க்கையைச் சொல் வதுபோல் அமைந்திருக்கிறது. இவ்விடத்தில் ஒன்று சொல்ல வேண்டும். ஜோ.டி. குருஸ் மேலான இலக்கிய வாசிப்பு உள்ளவராக இருந்திருந்தால் பரதவரின் ஆழ்மன உலகின் சிக்கல்களும் சிடுக்குகளும் அள்ளப்பட்டிருக்கும். அந்த ஆழ் மன உலகம் பொங்கி வரவில்லை. அதே சமயம் இனக்குழு வின் பிரதிநிதியான ஜோ.டி. குருஸ் புறஉலகின் வழி தெரிய வந்த உறவுச் சிக்கல்களைத் தயக்கமில்லாமல் பதிவு செய் திருக்கிறார்.

'ஆழி சூழ் உலகு நாவலில், பரதவர் சமூகத்தின் கிறீஸ்தவ வாழ்க்கை, தமிழர் பண்பாட்டு நம்பிக்கைகள் மற்றும் நாட் டுப்புற மரபுகளுடன் பிரிக்க முடியாத வகையில் கலந்துள் ளமை நுட்பமாக சித்தரிக்கப்படுகிறது. பில்லி, சூனியம், பேய் நம்பிக்கைகள், மாந்திரீகம், குமரி அன்னை மற்றும் முத்தா ரம்மன் வழிபாடு, கட்டுமரப் பூஜை, சகுன நம்பிக்கைகள், நாட்டு வைத்தியம், பேயோட்டும் சடங்குகள், திருவிழா மரபு கள், மொட்டையடித்தல், காது குத்துதல் போன்ற பல இந்து சமய பழக்கவழக்கங்கள் கிறீஸ்தவ சமய வாழ்வோடு இணைந்தே காணப்படுகின்றன. இந்நாவல், பரதவர்கள் கிறீஸ்தவத்தை வெறுமனே வெளிநாட்டு மதமாக ஏற்றுக் கொள்ளாமல், தமிழர் பண்பாட்டிற்கும் வாழ்வியலுக்கும் ஏற்ற வாறு உள்வாங்கி, தமது மண்ணின் மரபுகளோடு இயல்பாக இணைத்துக் கொண்டிருப்பதை வெளிப்படுத்துகிறது. இத னால், கிறீஸ்தவமும் தமிழர் நாட்டுப்புறப் பண்பாடும் ஒன்றுக் கொன்று முரண்படாமல், ஒருங்கிணைந்த கலாசார அடையா ளமாக நாவலில் உயிர்ப்புடன் பதிவு செய்யப்படுகின்றன.

இப்பகுதியில், ஆழி சூழ் உலகு நாவல் பரதவர் சமூகத்தில் கிறீஸ்தவம் உருவாக்கிய புதிய நம்பிக்கைகள், சடங்குகள் மற்றும் கலப்புப் பண்பாட்டை வெளிப்படுத்துவதாக விமர் சகர் குறிப்பிடுகிறார். கிறீஸ்தவ நம்பிக்கைகள் பழைய தமிழர் மரபுகளுடன் இணைந்து புதிய சமூகப் பண்பாட்டை உருவாக்கியுள்ளன. எழுத்தாளர் ஜோ.டி. குரூஸ் பரதவர் கிறீஸ்தவராகத் தனது சமூகத்தின் உயர்வு - தாழ்வுகளில் அக்கறையுடனும் பெருமையுடனும் நாவலைப் படைத்துள் ளார். மேலும், பிற மதத்தவர்களுடனான உறவுகள் மற்றும் சமூக நல்லிணக்கமும் நாவலில் இடம்பெறுகின்றன. வசந்தா, அன்னம்மா போன்ற பாத்திரங்களின் வாழ்க்கை மூலம் சமூக ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை வெளிப்படுத்தப்படுகிறது. இதனால், நாவலில் தீவிர மோதலைவிட நிதானமான சமூகப் பார்வை நிலவுகிறது. பரதவர்களின் வரலாற்றில் போர்த்துகீ சியர் வழியாக கிறீஸ்தவத்தை ஏற்றுக்கொண்ட பின்னணியும், குமரி அன்னையை மேரியுடன் இணைத்துப் பார்க்கும் பண் பாட்டு கலப்பும், கிறீஸ்தவமும் தமிழர் மரபும் ஒன்றிணைந்த கலாசார அடையாளமாக நாவலில் சித்தரிக்கப்படுகின்றன.

பரதவர்களின் தனித்துவமான பண்பாட்டுக்கூறுகள் தொல் தமிழர்களின் எச்சங்களாகத் தொடர்கின்றன. கரந்தை தும்பை பூக்களைச் சூடி போர் புரிந்ததுபோல புலிக்கொடி, மீன்கொடி, ஏந்தி போர்க்களம் புகுந்ததுபோல கடற்போருக்கு கித்தேரியம்மனின் மஞ்சள் கொடிகளைக் கட்டுமரங்களில் ஊன்றிக்கொண்டுவந்து போருக்கு அழைக்கிற தன்மையைப் பார்க்கிறோம். காலத்திற்கு ஏற்ப கருவிகள் மாறுகின்றன. அம்புகளுக்குப் பதில் நாட்டு வெடிகுண்டுகள். போருக்கு வந்தவருக்குள் ஒரு எதிர்பாராத விபத்து நேர்கிறது. மஞ்சள் கொடி இறங்க வெள்ளைக்கொடி ஏறுகிறது. போருக்கு தயாரானவர்கள் பகையாளி கூட்டத்திற்கு ஏதோ ஆபத்து நேர்ந்ததை உணர்ந்து பந்தக்காரர்களாக மாறி, கட்டுமரங் களை செலுத்த உதவி செய்ய விரைகிறார்கள்.

அதேபோல் ஒரு ஊருக்குள்ளே இரு அணிகளாக பிரிந்து மோதுவதில் ஒரு பண்பாட்டு நேர்மையைக் காண்கிறோம். குறிப்பிட்ட நாளில் இரண்டு கோஷ்டிகள் தேதி குறித்து கோவில் மேட்டில் மோதிக்கொள்வது ஆதி சமூக போர்முறை யாக இருக்கிறது. தோற்றவர்கள் வீடுகளுக்குள் புகுந்து கொள்ளை இடுவதும், தமிழர்களின் போர்முறையின் பின் விளைவுகளில் ஒன்றுதான். ஒட்டுமொத்த சமூக மாற்றமும் அரசியல் மாற்றமும், நீதித்துறை, காவல்துறையின் தோற்ற மும் பரதவர் இனக்குழுக்கள் மோதல் நிகழும்போது வேறு தன்மைக்குள் தள்ளுகின்றன. வலுத்தவர்கள் எதிரிகளை வெட்டி வீழ்த்துகிறபோது தப்பி ஓடி ஒளிகின்றனர். இந்த கொலைகளுக்குக் காவல்துறையும் நீதித்துறையும் தரப் போகும் தண்டனைகளுக்குப் பயந்து ஒளிகின்றனர். பலி கொண்டவர்கள் பலியெடுத்தவர்கள் குடும்பத்திற்குள் புகுந்து சூறையாடுகிற தலைகீழ் கோபத்தையும் பரதவர் இனம் சந்திக்கிறது.

கட்டுமரங்களைக் களவாடிச் சென்ற வேறு துரைக்காரர் களுக்கு நீதி புகட்ட மீன்பிடிக்க வரும் அத்துறைக்காரர் களைப் பிணைக் கைதிகளாகப் பிடித்து வருவதும், பிணைக் கைதிகளாக கொண்டு வருபவர்களை அடித்து உதைக்கக் கூடாது என்ற விதியும், அவர்களுக்கு உணவு உடை

கொடுத்து பேணுகிற மனிதநேர்மையும் உரிய துறைகாரர் களுக்கு தாங்கள்தான் பிணைக்கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கிறோம் என்று செய்தி அனுப்புவதும் பண்டை தமிழ்ச்சமூகத்தின் போர் அறம் சார்ந்ததாக இருக்கிறது. சில சமயம் கடலில் வைத்து மோதிக்கொள்ளும்போது அடிக்க லாம், கொல்லலாம். அப்படி அடிபட்டவர்கள் பிணைக்கைதி களாக நிலத்தில் கால் வைத்ததும் விருந்தினராகப் பரதவர் ஏற்று நடத்துகின்ற பண்பாடு ஏற்கனவே நம்மிடம் இருந்த ஒன்றானாலும் இங்கு நாகரிகத்தன்மையுடன் அதனைக் கட்டமைத்திருக்கின்றனர். அரச மரபில் பிணைக் கைதி களுக்குப் பல அவமானங்கள் நேர்ந்திருக்கின்றன. இங்கு உறவு பேணப்படுகிறது. எல்லை மீறி தங்கள் பிராந்தியத் திற்குள் வரும் படகுகளை மடக்கிப் பிடித்து இழுத்துவந்து பஞ்சாயத்து வைக்கிற புதிய வழக்கமும் தோன்றுகிறது. சிலுவை கன்னியாகுமரி துறைமுகத்திலிருந்து போட்டை கடத்தி வருவதும் இதனால்தான்.

இவ்இனக்குழுவினரிடையே சில உயரிய சமூகப் பண்பாடு கள் இன்றளவும் மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, அதிகளவில் மீன்பிடித்துக் கரை திரும்பும் கட்டு மர மீனவர்களின் மீன்பிடி விளைச்சலிலிருந்து, அவர்களது உறவினர்களும் அயலவர்களும் தமது இல்லங்களில் குழம்பு சமைப்பதற்குத் தேவையான அளவு மீன்களை எடுத்துச் செல்வது வழக்கமாகக் காணப்படுகிறது. இதனை கட்டுமர மீனவர்கள் ஒருபோதும் தடை செய்வதில்லை; மாறாக, சமூகப் பகிர்வின் அடையாளமாகவும் பெருமைக்குரிய மரபா கவும் கருதுகின்றனர். இத்தகைய பகிர்வு மரபு விவசாயச் சமூகங்களிலும் 1980-கள் வரை நிலவியிருந்தாலும், தற்போது அது பெருமளவில் மறைந்துவிட்டது.

எளிய மக்களின் இறப்பின்போது, ஊர்மக்கள் ஒன்றிணைந்து நல்லடக்கம் செய்வது இவ்வினக்குழுவின் உயரிய சமூகப் பண்பாகும். ஊமையன் நாவலில், ஊமையனின் இறப்பை முன்னிட்டு சமூக ஒற்றுமை, துக்கப் பகிர்வு மற்றும் சடங்கு மரபுகள் இயல்பாகச் சித்திரிக்கப்படுகின்றன. அடக்கச் சடங் கிற்குப் பின்னர் கடலில் இறங்கி கால்நனைத்தல், அவரது இல்லத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்துதல் போன்ற வழக் குகள் இனக்குழுவின் மனிதநேயத்தையும் ஒற்றுமை உணர் வையும் வெளிப்படுத்துகின்றன. அதேவேளை, இவ்வகை சமூக வாழ்வை முழுமையான இலட்சிய நிலையாகக் காட் டாமல், மனிதர்களின் சிறுசிறு குறைகளையும் மறைக்காமல் பதிவு செய்வதன் மூலம் நாவலாசிரியர் யதார்த்தமான படைப் பாற்றலை வெளிப்படுத்துகிறார்.

உக்கிரமான சண்டைகளின்போது முதியவர்களையும் பெண் களையும், குழந்தைகளையும் தாக்குவதில்லை. முக்கிய மாகப் பிற சமூகத்தவரோடு மோதும் போதும் இந்நேர் மையை கடைபிடிப்பதாக நாவல் சொல்கிறது. இதை காவிய மனம் எனலாம். கண்ணகி தனக்கு நேர்ந்த பேரிழப்பிலும் உக்கிரமான தீக்கனலை பெண்கள், குழந்தைகள் பக்கம் திரும்புவதில்லை. இதற்கெல்லாம் தீர்க்கமான பக்குவம் வேண்டும். ஆழி சூழ் உலகில் வரும் இச்செய்தி தனிமனிதர் உண்டாக்கிய பக்குவம் அல்ல இனக்குழு உண்டாக்கிய பக்குவநிலை.

விதி விலக்குகளே தமிழர் இனக்குழுவின் விதிகளாகும் என்பது என் கருத்து. தமிழர் இனக்குழுக்களுக்குரிய பொது விதிகளும் ஒவ்வொரு இனத்திற்கே உரிய பண்பாட்டுக்கூறு களும் இருக்கும் வேற்று துறைகாரர்கள் நல்ல கட்டுமரங் களை விலைபேசுகிற போது உள்ளூர்காரர்களின் கொடுக் கல் வாங்கல் உள்ளோர் எடுத்துப்போக விடாமல் மறிப்பது உண்டு. சம்சாரிகள் மாடு விற்கும்போதும் இவ்விதம் நிகழும். இது தமிழரின் பொதுத்தன்மை. வேற்று இனக்குழுக்களிடம் இல்லாத ஒன்றை எது பெற்றிருக்கிறதோ அதுவே தனித்த பண்பாடாகும். பரதவர் இனத்தவர் குறிப்பிட்ட நாளில் மோதிக்கொள்வது நீண்ட மரபோடும் பரதவரிடம் மட்டுமே இருக்கக்கூடிய ஒன்றாகவும் இருக்கிறது. அந்தந்த நிலமக் களுக்கு மட்டுமே உரிய விளையாட்டுகளை வேறு நிலத்தில் நிகழ்த்த முடியாது. மலையேற்றம் என்பது குறிஞ்சி நிலத் திற்குரியது. ஊர் ஒற்றுமைக்காக கட்டுமரப் போட்டியைக் கடலில் நிகழ்த்துகிற விளையாட்டு பரதவர்களுக்கு மட்டுமே உரிய ஒன்று. பேய் பிசாசுகள் அண்டாமல் இருக்க பஞ் சலாமை ஈரலை உருக்கி எடுத்த எண்ணெயைச் சிறிய பாத் திரத்திலோ குடுவையிலோ வைத்திருத்தல், இரவில் ஓங்கல் கள் அழுவது துர்நிகழ்வுக்கான அறிகுறி என்று நம்புகிறார் கள். அதே போல மாப்பிள்ளைக்கு மைத்துனன் கால் கழுவும் சடங்கும் பரதவரின் தனித்துவமான ஒன்றாக இருக்கிறது. தங்கள் தெய்வத்தை உரிமையோடு திட்டித் தீர்த்துக் கொள் கிற பண்பு தமிழர் இனக்குழுக்களிடையே இருக்கிறது. மீன் பாடு வாய்க்காதபோது அந்தோனியாரைப் பார்த்து 'உயி ருடன் இருக்கிறாயா? இல்லையா? ஒமக்கு கண்ணே இல் லையா? அன்றாடம் உன்னைக் கும்பிட்டுத்தான போய் கிறோம். ஒரு மச்சம் ஒட்டவில்லை' ஞானதாஸ் கூறுவது பரதவரின் உரிமை உறவு. ஐரோப்பிய இனக்குழுக்கள் யேசுவை இப்படி உரிமையுடன் திட்டிக்கொள்ளுமா என்று தெரியவில்லை. கடவுளரைத் தங்களில் ஒருவராக, தோழ னாக, உயிர்கொடுப்பவனாகப் பார்க்கிற மரபு நம்முடையது.

ஒவ்வொரு இனக்குழுவும் ஒவ்வொருவிதமான மரபான அறி வுத்திறத்தை உருவாக்கி வைத்திருக்கிறது; உருவாக்கு கிறது; நெருக்கடிகள் நேரும்போது புதிய நுட்பங்களை உருவாக்குகின்றனர். அமாவாசை, பௌர்ணமி காலங்களில் கடல் கொந்தளிப்பு இருப்பது கோல்களின் மாற்றத்தால் நிகழக்கூடிய ஒன்று. இக்காலங்களில் கடல்நீர் ஏறிவந்து நிலத்தை மூழ்கடிக்கும். இச்சமயத்தில் கடற்கரை மக்கள் அலையாத்தி வாய்க்காலை உண்டாக்கி அமைதிபடுத்து கின்றனர். கரையோர விவசாயம் பாதுகாக்கப்படுகிறது. மற் றொரு தொழினுட்பத்தையும் உண்டாக்குகின்றனர். அலை யோடு ஏறிவரும் மீன்கள் வாய்க்கால்கள் வருகிறது. அலை, கடலுக்குத் திரும்பும்போது வாய்க்கால் வலைக்கதவு மூடிக் கொள்கிறது. இந்த மரபு தொழினுட்பத்தைக் கிழக்கு கடற் கரை கிராம மக்கள் உருவாக்கியிருக்கின்றனர். சுனாமி தாக்குதலிலிருந்து அலையாத்தி கடல் பகுதிகள் தப்பித் திருக்கின்றன.

இவ்விதமான மரபான அறிவு தொழினுட்பங்களைப் பரதவர் உண்டாக்கியிருப்பதை இந்நாவலில் காண முடிகிறது. அனு பவம் இவ்வறிவுத்திறனைத் தூண்டுகிறது. வேற்று நிலத்தைச் சார்ந்தவர் நெய்தல் மக்களை எழுதுவதற்கும் நெய்தல் நிலத்தவர் தன் சொந்த பூமியை எழுதுவதற்கும் உள்ள

அடிப்படை வித்தியாசம் மரபுதரும் அறிவின் செழுமையை எடுத்தாளுவதிலிருந்து பிரித்தறிய முடியும். அவ்விததொழி லோடு தொடர்புடையவனாலேயே மரபின் அறிவுத்திறம் எழுந்து வரும். மரபான கருத்தியல் என்பதும் அந்த கருத் தியல் மீது விமர்சனத்தை வைப்பது என்பது வேறானது. தொழில் அறிவுத்திறம் என்பது ஒரு சமூக உருவாக்கத்தின் வரலாறோடு தொடர்புடைய ஒன்று. அதில் பல மாற்றங்கள் காலங்காலமாக உருவாகி வந்திருக்கலாம். அவையெல்லாம் படைப்பின் பண்புகள் படைப்பு மண்ணில் காலூன்றி மானுட வாழ்க்கை சித்திரங்களோடு இடையறாத விமர்சனத்தை வைக்கிறது. வாழ்க்கையை வாழும்படி செழுமையாக்குகிறது. மனிதர்களை ஒதுக்கி நொறுக்கும் சமூக சட்ட திட்டங்களைக் கலைக்கிறது.

நீரோட்டமும் காற்றும் நேர் எதிர் திசையில் இருக்கும்போது எதிர்பார்த்த கரையை அடைவதற்கும், நீரோட்டத்தைச் சமா ளித்து மரத்தை ஒரு கட்டுக்குள் கொண்டுவர தொம்பந்திரை கட்டுமரத்தின் முன்பகுதியில் (அணியம்) ஒரு பலகை சொருக துவாரம் போடுகிறார். இந்த அமைப்பிற்கு பரதவரிடம் எதிர்ப் புகள் கிளம்புகின்றன. தொழினுட்பத்தில் மாற்றம் ஏற்படு வதைக் குலத்திற்கு ஆகாது என்று நினைத்திருக்கலாம். அதன் பயன்பாடு சிறப்பானதாக அறியும் பரதவர்கள் மெல்ல மெல்ல அந்த தொழினுட்பத்தை தங்கள் கட்டுமரங்களிலும் கைக்கொள்கின்றனர். கடல் தரும் மோசமான அனுபவங் களிலிருந்து அதனை எளிதாக வெல்ல இத்தொழினுட்பம் உரு வாகிறது. மரபும் புதுமரபும் வேற்று நிலத்துக்காரரல் உணர்வு பூர்வமாக எழுத்தில் கொண்டு வரமுடியாது. பரதவரின் தொழி னுட்ப அறிவை சிலவற்றைத் தொகுத்துப் பார்க்கலாம்.

- இருபது, முப்பது தூண்டில்கள் தனித்தனிக் கயிறுகளில் இணைக்கப்பட்டு அதன் மறுமுனைகள் பிரதான கம்பாவக் கயிறோடு குத்தி முனையப்பட்டிருக்கும். கம்பாவத்தின் இடது புறமும் வலதுபுறமுமாக இருபது அடிக்கு ஒரு தூண்டில் கயிறு என்று கவனமாக இணைத்திருப்பார்கள். இரும்புத்தூண்டில்கள் வலுவாகவும் அரை அடி நீளத்திலும் இருக்கும். பிரதான கம்பாவத்திலிருந்து கிளைகள்போல் பிரிந்து படர்ந்து தொங்கிக்கொண்டிருக்கும். கிளைத் தூண் டில் கயிறுகள் குறைந்தபட்சம் பத்து பாகம் நீளம் இருக் கும். ஆயிரங்கால் தூண்டில் கயிறைக் கடலில் இறக்கு வதற்கு முன்னால் வழியில் போகும்போதே தூண்டில்களில் இரையாகக் கொளுவியிருப்பார்கள். பெரிய மீன் வேட்டை யாதலால் அந்த வகையான மீன்களின் அலைக்கழிப்புக்கு ஈடு கொடுக்கக்கூடிய விதத்தில் கட்டுமரங்கள் வலுவாகப் பெரிதாக இருக்கும்.

- கடலில் சில இடங்களில் தண்ணீர் முத்துப்போல் தெளி வாகவும் சில இடங்களில் கலங்கலாகவும் வந்தது. திடீ ரென்று மாங்காச் சாளைக்கூட்டம் மாப்பு மாப்பாக தெரிந் தது. அதன் பின்னாலேயே அதைத் துரத்திப் பிடிப்பதற் காக சூரைமீன் கூட்டம். நெத்திலியைவிட கொஞ்சம் பெரி யது. மாங்காய் சாளை, சாளை மீனைவிடச் சிறியது. எப் போதும் லட்சக்கணக்கில் கூட்டம் கூட்டமாகவே திரியும். குழந்தை பெற்ற பெண்களுக்கு மாங்காய் சாளையை ஓமக்கறி வைத்துக் கொடுப்பார்கள். சுவையாக இருக்கும். பால்சுரப்பும் அதிகமாகும்...

- போஸ்கோ, பயப்புடாத, ஓங்கல்வ ரொம்ப நல்லதுவ. காந்திமாரி சாதுவானதுவ. தோணியள்ல போற நம்ம ஆள்க தவறி கீழ வுழுந்திற்றான்வயின்னா இந்த ஓங்கல்வ தாம் சுத்தி நின்று சுறாப்பயல்வ கிட்ட வராம காப்பாத்துமாம்.

- எய்யா போஸ்கோ, கொம்பஞ் சிறாக்க நல்ல மூள உள்ள துவ இரைய பக்குவமாக கடிச்சித்தின்னுட்டு தூண்டியவுட் டுட்டு போயிரும்.

- முதல் தூண்டில் மிகச்சிறியது. அதில் சிறிய இழுப்பா ஒன்று மாட்டிக்கிடந்தது. வாலை ஆட்டிக்கொண்டே வந்த இழுப்பாவை தாக்குகோலால் மண்டையில் அடித்து கொளு வித் தூக்கி நடுமரத்தில் போட்டான் போஸ்கோ.

இவையெல்லாம் கடல்தொழிலோடு கொண்டிருக்கிற நீண்ட கால உறவினால் பெறப்பட்ட மரபு அறிவு. விளைச்சலை எடுப்பதற்கான பக்குவங்கள். பரதவரையும் கடலையும் பிரிக்க முடியாத உறவு பிணைப்பு எழுத்தாக உருவெடுக்கிறது. அதே போல கடலைப் புரிந்து கொள்வது என்பது சக மனித ரைப் புரிந்து கொள்வது போலத்தான். கடல் உண்டாக்கும் தோழமை, ஆக்ரோசம், ஜொலிப்பு, முரட்டுத்தனம், பிரமாண் டாம் எல்லாம் தனித்த அழகியலின் பார்பட்டது. அந்த அழகியல் பரதவர்களின் தொழிலோடு கூடிய பசி என்று கூறலாம். அது உணர்வு பசி. ஒரு மனிதரை புரிந்து கொள் வதல்ல. மாபெரும் மக்கள் கூட்டத்தைப் புரிந்து கொள்வது. கடல் பரதவர்களை வசக்கி வசக்கி தன் உடலுக்குள் நீந்தும் மனிதமீனாக மாற்றுகிறது. பரதவரும் கடலின் தாளத்திற் கேற்ப ஆடி அசைந்து கலக்கின்றார்கள். கொஞ்சம் பிசகி னாலும் கவிழ்த்து மரணத்தின் குகைக்குள் கொண்டு சென்று விடும்.



வரிப்புலியன் மீனை வென்று இழுத்து வந்தவர்களும் உண்டு; பயந்து விழுந்து அதன் துணையால் கடித்துக் குதறப்பட்டவர் களும் உண்டு. கச்சான் காற்று வீசும்போது குளிரில் விறைக் கும் பரதவர்கள், வாடக்கரையில் மின்சார மீன்களின் தலைப் பகுதி ஒளியைப் பார்த்து அந்நடுக்கை மறக்கிறார்கள். பெரிய மீன் சிக்கி வலையை இழுக்கையில், தூண்டில் முள் தொடை யிலும் குதிக்காலிலும் குத்தி எறிகிறது. முட்டையிட்டுப் பெரு கும் ஆழிப் பகுதியான மலை வளைவில், வேட்டையாடப்பட்ட வரிப்புலியன் மீன் கட்டுமரத்தோடு இழுக்கப்பட, அதன் துணையும் வெகுதூரம் பின்தொடர்கிறது. பொருளுக்காக மனிதனும், காதலுக்காக மீனின் துணையும் போராடும் விசித் திரம் அங்கே நடக்கிறது. வேட்டையின்றித் திரும்பினால் 'பயந்தாங்கொள்ளி' எனத் துறைக்காரர்கள் கேலி செய்வர் என்பதால், உயிரைப் பணயம் வைத்துச் சுறாப்பாறையில் போராடுகிறான். கடலுக்கும் மீன்களுக்கும் இல்லாத இந்தத் தன்முனைப்பு மனிதரிடம் மட்டுமே உள்ளது. புயலால் அதி கம் பாதிக்கப்படாத வளைந்த கடற்கரையில் வாழும் இவர் கள், கட்டுமரத்தைச் சுற்றிப் பாயும் மீன்களின் ஆபத்துகளை எதிர்கொள்கிறார்கள். பறந்து வந்த ஊழி மீனின் மூக்கு குத்தி வயிறு பிளந்தவர்களையும் அங்கே காண முடிகிறது.

ஜூன், ஜூலை, செப்ரெம்பர் மாதங்களில் கடலடி மாறுவதால் பரதவர்கள் தொழில்தேடி இடம்பெயர்கின்றனர். அரேபியக் கடற்படையுடன் போரிட்டு வாழச் செய்ததும், காயல்பட்டி னத்து இசுலாமியர்கள் கடல்வழியாக வந்து கொள்ளையடித் ததும் இக்கடலின் வரலாறே. கச்சத்தீவு திருவிழாவிற்குச் சென்று கொழும்பு புலம்பெயர் ஆமந்துறை பரதவர்களைச் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றனர்; ஆனால், திரும்புகையில் படகு கவிழ்ந்து உயிரிழப்புகளும் நிகழ்கின் றன. நிலவொளியில் நண்டுகளின் விளையாட்டு, அலை களின் மென்மை, பாறைகளில் நடமாடும் நட்சத்திர மீன்கள் போன்ற மாயாஜாலங்களை மீனவன் காண்கிறான். அதே வேளை, கடல்காய்ச்சல் மனிதரை உருக்குகிறது; நீர்வாடு தாக்கி மாய்க்கிறது. மறுபுறம் ஆயிரக்கணக்கில் கடல் குதிரை கள் ஓசையெழுப்பி அலைகளில் மகிழ்கின்றன. சாவையும் அபூர்வக் காட்சிகளையும் மாறி மாறித் தருவதுதான் கடல்.

வைகறையில் உயிருக்குப் போராடும் சூசையின் சிலுவைக் கண்களில், பாய்புடைத்த மரம் போல் தெரிவது மரமல்ல; பெரிய மீனின் வால்பகுதி. தீங்கற்றவை என்றாலும் அதன் பிரம்மாண்டம் பயத்தை அளிக்கிறது. கட்டுமரத்திற்கான அல் பீசா மரங்களை வெட்டி, ஊறவைத்து வைரம் பாய்ப்பதும் இக்கடலே; ஆழிச் சுழலில் சிக்க வைத்து அவற்றைச் சிதைப் பதும் இக்கடலே. கரையிலிருந்து வெகுதொலைவில் இருக் கும் பரதவர்கள், சோநீவாட்டு சாடக்கிக்கு முன் அவசர அவ சரமாக மீன்பிடித்து மரத்தைச் செலுத்தினால், அந்நீரோட் டமே அவர்களை விடியற்காலையில் கரைசேர்த்துவிடுகிறது.

கடல் அசைந்து அசைந்து இலக்குகளுக்கு அழைத்துச் செல்கிறது. திடீரென வேறொரு பயணத்திற்கு செலுத்துகிறது. மனக்கோலத்தை மாற்றுகிறது. பயத்தை தருகிறது சந் தோசத்தை தருகிறது. துன்பத்தைத் தருகிறது. வல்லமை மிக்க கடலில் மீனவர்கள் விளையாட்டு பொம்மைகளாக மாறிப்போவதும் நேர்கிறது. நிச்சயமற்ற எதிர்காலத்தைப் போன்றே வாழும் கணங்களைத் தந்துகொண்டு அடுத்த கணத்தை மர்மத்தோடு கடல் வைத்திருக்கிறது. நெய்தல் மேல் எழுதப்பட்ட முதல் படைப்பு இதுவே.

தகழி 'செம்மீன்' நாவலை ஒரு தொன்ம கதைக்கு காதல் வடிவம் கொடுத்தார். ஜோ.டி. குருஸ் கற்புத்தன்மை என்பது ஒரு புனைவு. நேர்முகத்தில் மானிட காமமே இயல்பாக இயைந்து கிடக்கிறது என்பதைக் காட்டுகிறார். உண்மையை புனிதப் படுத்தாமல் நாவல் முழுக்க விரிக்கிறார். ஜோ.டி. குருஸ் தனது படைப்பில் மனிதர்களுக்கு இடையிலான சிக்க லான உணர்வுகளையும், சமூக விளிம்புகளில் நிகழும் பாலி யல் மற்றும் குடும்ப உறவு மீறல்களையும் எந்தவிதமான போலியான மூடல்களும் இன்றி நேரடியாகவே காட்சிப்படுத் துகிறார். அமலோற்பவம் தனது கணவரின் மறைவுக்குப் பின் கொழுந்தன் தொம்மந்திரையை மணப்பது, கில்பர்ட்டுக்கும் கொழுந்தியாளுக்குமான தொடர் உறவு, ஊமையனின் மனைவி சாரா மீதான சிலுவையின் வன்முறை, வசந்தா தனது விருப் பத்தின் அடிப்படையில் ஜஸ்டீனுடனும் பின்னர்ப் பிறருடனும் இணைந்து வாழும் சூழல், தாய் அன்னம்மாள் குடும்பத்தைக் கடந்து கொழும்பில் மறுவாழ்க்கை அமைத்துக் கொள்வது, சுந்தரி டீச்சருக்கும் கோத்ராவுக்குமான பாலியல் பகிர்வு எனப் பலதரப்பட்ட உறவு நிலைமாற்றங்களை ஆசிரியர் துணிச்சலாகப் பதிவுசெய்துள்ளார். இருப்பினும், இத்தகைய உறவுச் சிக்கல்களையும் நிகழ்வுகளையும் ஆசிரியர் வெளிப் படையாகப் பதிவு செய்த அளவுக்கு, அவற்றிற்குப் பின்னாலி ருக்கும் கதாபாத்திரங்களின் அகப் போராட்டங்கள், மன உளைச்சல்கள் மற்றும் உணர்வுபூர்வமான மனித ஆழங் களை (Human Depths) ஆழமாக வெளிப்படுத்தத் தவறி விட்டார் என்பதே முதன்மையான விமர்சனமாக அமைகிறது.

இத்தகைய சிக்கலான உறவுகள் பரதவர் சமூகத்தில் இயல் பாக நிகழ்பவை என்ற ஒரு செய்தியை மட்டுமே ஜோ.டி. குருஸால் வெளிப்படுத்த முடிகிறது. சமூகத்தின் மத்தியில் பேசப்படும் மறைமுகமான உறவுகளுக்கு அவர் நிகழ் வடிவம் கொடுத்திருக்கிறார். வருவேல் தன் சித்தியான ரோஸம்மாவு டனும், பின்னர் அவள் மகள் எலிசபத்துடனும் உறவு வைத் துக்கொள்வதும் தங்கை முறையான எஸ்கலினைக் கில்பர்ட் தொடர்ச்சியாக விரும்பித் திருமணம் செய்துகொள்வதும் எனப் பலதரப்பட்ட இணைவுகளைப் புதினத்தில் காண்கிறோம்.

ஆனால், இத்தகைய சித்தரிப்புகள் மூலம் மிகவும் எளிய செய்திகளையே ஆசிரியர் முன்வைக்கிறார். நெய்தல் என்ற புதிய நிலப்பரப்பையும் கடல் சார்ந்த வாழ்க்கையையும் வாசிப் பிற்குத் தந்த அளவுக்கு, காமம் சார்ந்த உளவியல் சிடுக்கு களிலோ அல்லது மனித மனத்தின் அறியப்படாத ஆழங் களிலோ எந்தப் புதிய திறப்பையும் அவர் நிகழ்த்தவில்லை. 'தன்னைக் கொடுத்து மகளைச் சிக்கவைத்தாள்', 'குளிப் பதைப் பார்த்துக் கொண்டிருந்தவன் ஓடிவந்து அணைத் தபோது தன்வசம் இழந்தாள்', 'பணத்தைக் கரைக்கக் கொழுந்தியைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறாள்', 'உடன்பிறந்தவர்கள் திருமணத்தில் அக்கறை காட்டாததால் வேறொருவருடன் இணைகிறாள்' என இத்தகைய உறவு

களுக்குப் பின்னால் மிகவும் மேலோட்டமான காரணங் களையே ஆசிரியர் வலுவாகக் காட்டுகிறார். மனித மனதின் ஆழமான போராட்டங்களை வெளிப்படுத்தாமல் நிகழ் வுகளை மட்டும் அடுக்கிச் செல்வது எழுத்தாளனின் மேம் போக்கான பார்வை யையே காட்டுகிறது.

காலமாற்றமும் சமூகமாற்றமும் மனமாற்றமும் இயல்பாக மலர்கிறது. ரத்தினசாமி நாடார் கருவாடு வாங்கி விற்றுப் பிழைக்கலாம் என்று வந்தவர் மெல்ல மெல்ல உயர்ந்து இறால் ஏற்றுமதி செய்யும் பெரிய வியாபாரியாக மாறுகிறார். வியாபாரிகள் உயர்வதும் சூசை, கோத்ரா, சிலுவை போன் றோர் காலங்காலமாக கடலில் விழுந்து உயரமுடியாமல் அன்றாடங் காட்சியாக நீளுவதும் மாற்றமற்ற மாற்றம். காகு சாமியாரின் வருகை பரதவர் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்து கிறது. மீன்களை பதப்படுத்தி வைக்கக்கூடிய ஐஸ் தொட்டி களை உண்டாக்க வழி வகுக்கிறார். கல்வி நிலையங்களைத் திறந்து படிப்பறிவளிக்கிறார். சின்ன சின்ன மாற்றங்களால் கல்வியறிவு பெற்றவர்கள் புதிய வேலைகளுக்குச் செல்கின் றனர்.

நாடார் - பரதவர் சமூகங்களிடையே தேரி மேட்டில் நிலவிய மோதல்கள் காலப்போக்கில் மங்கிப் போயின. ஜஸ்டின் மகன் பிரபுவின் பழிக்குப் பின், சந்திரன் தரப்பு மீண்டும் பழி வாங்க முனையவில்லை. காலமும் அனுபவமும் ஊட்டிய சலிப்பால் பகை நீர்த்துப்போனது. வசதி வாய்ப்புகளும் புதிய வேலைவாய்ப்புகளும் பெருகியதால் சாதித் தலைமை பலமி ழந்தது; இது முக்கிய மனமாற்றத்தைக் கொண்டுவந்தது. அரசியல் காரணங்களால் கொழும்புக்கும் ஆமந்துறைக்கு மான திருமண உறவுகளும் வணிகத் தொடர்புகளும் துண் டித்தன. முரட்டுத்தனம் கொண்டிருந்த இவ்வினக்குழுக்க ளிடையே கல்வி, புதிய கருவிகள், வணிக முறைகள் மற்றும் புதிய மதத்தின் வருகை ஆகியவை மெல்ல மெல்ல சகிப்புத் தன்மையையும் அமைதியையும் ஏற்படுத்தின.

படைப்பாளியாக ஜோ.டி. குரூஸ் தனது சமூகத்தின் அகப் பொய்மைகளை வெளிப்படையாக விமர்சிக்கிறார். சாமியார் களின் காம விளையாட்டுகள், கோவில் வருமானக் கொள்ளை, மணப்பாட்டில் இரு குழுக்களாகப் பிரிந்த வசதிபடைத் தோரின் தில்லுமுல்லுகள், பரதவர்கள் மீது காவல்துறையின் வெறுப்பு, வைகுண்டமோ கச்சத்தீவோ எங்கு சென்றாலும் பழைய பகையை நினைவுகூரும் மூர்க்கத்தனம் ஆகியவை இதில் அடங்கும். துறைகளில் புது வலைகளையும் கட்டுமரங் களையும் திருடும் கூட்டங்கள், மாணவர்களிடம் ஆசிரியர் களின் பாலியல் சுரண்டல், தூத்துக்குடி - கன்னியாகுமரி துறைமுகங்களில் பரதவர்கள் செல்வாக்கிழந்து பிற சாதி யினர் கைஓங்கியதற்குக் காரணமான ஒற்றுமையின்மை, தமி ழர்களின் வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொள்ளும் சிங்க ளவர்களின் கொலைபாதகச் செயல்கள், குருகுலக் கல்வி மாணவர்களின் சுயநலங்கள் ஆகியவற்றையும் வெளிச்சமிடு கிறார். வழக்குகளில் காவல்துறைக்கும் வழக்கறிஞர்களுக் கும் பணத்தை வாரி இறைத்து எதிரிகளை கொழுக்கவைக் கும் முட்டாள்தனம், சுயகௌரவத்திற்காகச் சொந்த வேலை யாட்களையே காவு கொடுக்கத் துணியும் வெறித்தனம் என ஒரு சமூகத்தின் சீரழிவை விமர்சிக்கும் அதேவேளையில், போட்டிகளைச் சமாளித்து வணிகத்தில் வெல்லும் ரத்தின சாமி நாடாரை அதற்கு இணையான குறியீடாக முன்வைத்துச் செல்கிறார்.

நாவலை 1933 முதல் 1985 வரையிலான காலகட்டத்தில் அமைத்து ஆசிரியர் எழுதியுள்ளார். பரதவர்களின் மனங்களில் படிந்த வரலாற்றோடு, 1964 தனுஷ்கோடி ரயில் விபத்து, கச் சத்தீவு படகு விபத்து, மிகேல் பர்னாந்துவின் கொழும்பு கொலை ஆகிய வரலாற்றுச் சம்பவங்களை ஆதாரமாகக் கொண்டு நாவலின் காலத்தைச் கட்டமைக்கிறார்.

இறால் ஏற்றுமதி, உள்ளூர் இடைத்தரகர்களின் உத்திகள், மீன் பதப்படுத்தும் ஐஸ் குழிகள், மற்றும் இந்துப் பண்பாட்டுச் சடங்குகளைப் பின்பற்றிய இருட்டியார் போன்ற மனிதர்கள் காலப்போக்கில் மறைந்தது போன்றவை இச்சமூக அசைவி யக்கத்தில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களாகக் கொள்ளலாம்.

பரதவர்களிடம் காணப்படும் தியாகம், மேரி மாதா பக்தி, தத் தெடுத்த பிள்ளைகளைச் சொந்தமாகப் பாவித்தல், தாரமிழந் தவரின் மறுமணம், இலங்கையிலிருந்து துரத்தப்பட்ட ஊமை யன் போன்றோரை அரவணைக்கும் பண்பு, தொண்டாற்றிய காகு சாமியாரைப் பல்லக்கில் ஏற்றி அழகுபார்க்கும் குணம், ஏல் சொல்லிப் பிழைக்கும் வயதானவர்களின் எளிமை என அவர்களின் நற்பண்புகளையும் ஆசிரியர் நேசிப்புடன் வெளிப் படுத்தியுள்ளார்.

குறைவாகவே வந்தாலும் வீரம், பழிவாங்கும் உணர்வுடன் அசல் பரத்தியாக மிளிரும் 'மயிலாடியாள்'தான் இந்நாவலின் உயிரோட்டமான பாத்திரம். சிறையிலிருந்து வரும் ஜஸ்டீனின் மனப்போக்கும் அசலானது. ஆனால் தொம்மந்திரை, கோத்ரா, சூசை, சிலுவை போன்ற பிரதான பாத்திரங்கள் ஆசிரியர் வழியிலேயே செல்கின்றனவே அன்றி, மயிலாடியாளைப் போலத் தங்களை எழுத வைக்கும் தனித்துவத்துடன் வளர வில்லை. அதேவேளை, பழுத்த கிழவியான அன்னம்மாள் ஆமந்துறைக்கு வந்து பேத்தியின் மகளைச் சந்திப்பதும், பாலிய தோழிகள் சூழ நலம் விசாரிப்பதுமான பகுதி மானுட உள்ளத்தின் உன்னதம்.

தன்னுள் தொகுத்த மனிதர்களின் கதைகளுக்கு நடுநிலை யோடு செயல்வடிவம் தந்துள்ளார். இம்மாந்தர்களைத் தன்னி லிருந்து உருவாக்கியிருந்தால் அவர்களின் அசைவுகள் இன்னும் அழுத்தமாகப் பதிந்திருக்கும். அதேசமயம், கிறீஸ் துவப் பின்னணி புதியவர்களின் மூடாக்காக இல்லாது, சுவா சம் போலப் பரதவர்களின் வாழ்வியலோடு இயல்பாகக் கூடி வந்திருக்கிறது.

மாந்தர்களை முன்கூட்டியே 'நல்லவர்', 'கெட்டவர்' என்ற முன் தீர்மானங்களின் அடிப்படையில் சித்தரிக்காமல், வாழ்வின் இயல்பான போக்கிலேயே அவர்களின் அகஉலகத்தை வெளிப்படுத்துவதே சிறந்த படைப்பாக்கத்தின் அடையாள மாகும். இதனைத் தவிர்த்து, நிகழ்வுகளை வெறுமனே பதிவு செய்வது படைப்பாளியின் பணியன்று; அது செய்தியாளரின்

பணியாக மட்டுமே அமையும். நாவலில் இடம்பெறும் உரை யாடல்கள், திண்ணைப் பேச்சுகள் போன்ற அன்றாட வாழ் வியல் கூறுகள் முதலில் முக்கியமற்றதாகத் தோன்றினாலும், அவையே நாவலின் யதார்த்தத்தையும் அழகியலையும் செழு மைப்படுத்துகின்றன. அதேவேளை, செறிவை உருவாக்கும் நோக்கில் பல்வேறு மனிதர்களின் இயல்புகளையும் பண்புக ளையும் ஒரே பாத்திரத்தின் மீது சுமத்துவது இயல்புநிலைக்கு முரணானதாக அமைகிறது. மனிதர்களின் சாதாரண கோபம், தாபம், பாசம் ஆகிய உணர்வுகளுக்குப் பின்னால் மறைந்தி ருக்கும் போலித்தனங்களையும் ஆசாபாசங்களையும் திரை விலக்கிக் காட்டுவதே படைப்பாளியின் உண்மையான பணி. இந்நாவலில் யதார்த்த வாழ்க்கைச் சித்திரிப்பு காணப்பட் டாலும், அச்செயல்களின் பின்னணியில் உள்ள மனநெருக்க டிகளையும் உளக்கொந்தளிப்புகளையும் ஆழமாக வெளிப்ப டுத்தும் முயற்சி போதிய அளவில் அமையவில்லை. மேலும், ஒட்டுமொத்தப் பரதவர் சமூகத்தின் வாழ்க்கை விரிவாகப் பதி வாகியிருந்தபோதிலும், நாவலின் கதைநகர்வை ஒருங்கி ணைக்கும் மைய இழை அல்லது மூலவேர் தெளிவாக உரு வாகாதிருப்பது இதன் முக்கியமான குறையாகக் கருதப்படு கிறது.

இந்நாவலின் சில பகுதிகள் உண்மை நிகழ்வுகளை அடிப்ப டையாகக் கொண்டவை. இலக்கிய வாசிப்பு இன்மை மற்றும் சம்பவ இணைப்புக் குறைபாடுகளால் சில பிழைகள் காணப் படுகின்றன. குறிப்பாக, பரதவரின் குலதெய்வ வழிபாட்டிலி ருந்து மேரிமாதா வழிபாட்டிற்கு ஏற்பட்ட மாற்றம் ஆழமான சமூக-உளவியல் போராட்டத்தை உள்ளடக்கியதாக இருந்தி ருக்க வேண்டும். ஆனால், படைப்பில் அது செய்திபோலச் சுருக்கமாகவே இடம்பெற்றுள்ளது. இந்த மாற்றத்தைத் தொன்மம், வரலாற்றுப் புனைவு போன்ற பல்வேறு கலைநய மான வழிகளில் விரிவாகச் சித்தரிக்க முடிந்திருக்கிறது. மேலும், புயல் அச்சத்தால் மக்கள் ஊரைவிட்டு மேட்டுப்பகு திக்குச் செல்லும் நிகழ்வு, தமிழர் மனங்களில் நிலைத்தி ருக்கும் கடலழிவின் வரலாற்று நினைவுகளை வெளிப்படுத்து கிறது. சுனாமிக்கு முன்பே எழுதப்பட்ட இந்நாவலில் இடம் பெறும் இப்பகுதி, கடலுக்கும் பரதவருக்கும் இடையிலான ஆழ்மன உறவைப் படைப்பெழுச்சியுடன் உணர்த்துகிறது. மொத்தத்தில், ஆழி சூழ் உலகு நாவல் கடல்வாழ்க்கையை அழகியலோடும் உயிரோட்டத்தோடும் சித்தரிக்கிறது. கிறீஸ் தவச் சாயலும் இயல்பாகப் பதிவாகியுள்ள போதிலும், பரத வரின் ஆழ்மன இயக்கம் முழுமையாக வெளிப்படவில்லை. உறவுமுறைகள் பரிச்சயமானவையாக இருந்தாலும், கடல் வாழ்க்கையின் புதிய உலகத்தை வாசகருக்கு அறிமுகப்ப டுத்துவதே இந்நாவலின் தனிச்சிறப்பாகும்.



venugopal@thaiveedu.com









# அ. யேசுராசாவின் ‘தம்பியைப் பேசவிடுங்க’ நூல் வெளியீட்டு நிகழ்வு







தாய்வீடு பதிப்பகத்தின் வெளியீடான, ஈழத்தின் மூத்த எழுத்தாளரான அ. யேசுராசாவின் நேர்காணல் தொகுப்பான **‘தம்பியைப் பேசவிடுங்க’** எனும் நூலின் அறிமுக விழா, ஓகஸ்ட் 16 அன்று யாழ்ப்பாணம் ‘எங்கட புத்தகங்கள்’ இல்லத்தில் நடைபெற்றது.

‘தாய்வீடு’ இதழின் இலங்கை இணைப்பாளர்களுள் ஒருவரான ச. சத்யதேவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இதழின் ஆலோசகர் குழு உறுப்பினரும், விமர்சகரும், ஆய்வாளருமான சி. ரமேஸ் வெளியீட்டுரையை ஆற்றினார்.

நேர்காணல்களை மேற்கொண்டவர்களின் சார்பில் கலந்து கொண்டவர்களுக்குக் கௌரவப் பிரதிகள் வழங்கப்பட்டு நூல் வெளியீடு செய்யப்பட்டது. அ. யேசுராசா அவர்கள், பல்வேறு காலகட்டங்களில் இதழ்களுக்கு வழங்கிய ஒன்பது நேர்காணல்களின் தொகுப்பான இந்நூலின் மதிப்பீட்டுரைகளை, எழுத்தாளர், விமர்சகர் கந்தர்மடம் அஜந்தன் மற்றும் உளவளத்துணையாளரும் நாடகக் கலைஞருமான நா. நவராஜ் ஆகியோர் வழங்கினர்.

இந்நேர்காணல்கள் முழுவதும், அ. யேசுராசா தன்னை ஒரு ‘படைப்பாளி’ என்பதைவிட, ‘தீவிர வாசகனாகவே’ முதன்மைப்படுத்துவதை உரையாளர்கள் சுட்டிக்காட்டினர். அத்துடன், அக்கால ஈழத்து ‘முற்போக்கு இலக்கிய’ அமைப்பினருக்கும் அவருக்குமிடையிலான விமர்சன ரீதியான முரண்பாடுகள், சொல்லுக்கும் செயலுக்கும் இடையே இடைவெளியற்ற அவரது இலக்கிய வாழ்வு, அவரது தார்மீக நேர்மை, கலை உணர்வு மற்றும் அதிகார எதிர்ப்புக் குரல் சார்ந்த விமர்சனத் தேவைகளையே இவ்வுரையாடல்கள் வழி அவர் முதன்மைப்படுத்துவதாகவும் அவர்கள் எடுத்துரைத்தனர்.


அதனைத் தொடர்ந்து, உரையாளர்களின் கருத்துகளுக்கான தெளிவுபடுத்தலுடன் கூடிய நூலாசிரியரின் ஏற்புரையும், ‘எங்கட புத்தகங்கள்’ குலசிங்கம் வசீகரனின் நன்றியுரையும் இடம்பெற்றன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இலக்கிய ஆர்வலர்கள், ஆய்வாளர்கள் பெருமளவில் கலந்துகொண்ட இவ்வெளியீட்டு நிகழ்வு, யேசுராசாவின் 60 ஆண்டுகால இலக்கியப் பயணத்தை மீளாய்வு செய்யும் ஒரு முக்கியமான தளமாக அமைந்தது.

thaiveeban@gmail.com

# சம்மாந்துறை மண்ணின் மொழி மரபுக்கு மகுடம்

## ஆய்வாளர் முஹம்மட் சாக்கீரின்
## சம்மாந்துறை வட்டாரவழக்கு அகராதி வெளியீடு


















**கி**ழக்கிலங்கையின் தனித்துவமான பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாக விளங்கும் சம்மாந்துறை மண்ணின் வாழ்வியலோடு ஊறித்தழைத்த பேச்சுமொழி மரபுகளையும் வேர்களையும் தாங்கிய "சம்மாந்துறை வட்டாரவழக்கு அகராதி" நூல் வெளியீட்டு நிகழ்வு, கடந்த 2026 ஆகஸ்ட் 02ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணியளவில், சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் எம். எஸ். காரியப்பர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

வைத்திய கலாநிதி சிராஜ் இப்றாஹிம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சம்மாந்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், புத்திஜீவிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்."சம்மாந்துறை வட்டாரவழக்கு அகராதி" என்பது, சம்மாந்துறைப் பிரதேசத்தில் தலைமுறை தலைமுறையாகப் பயன்படுத்தப்பட்டு வரும் தனித்துவமான பேச்சுவழக்கு, சொல்வளம், மரபுசார் சொற்கள் மற்றும் மக்களின் அன்றாட வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்த மொழிப் பயன்பாடுகளை ஆவணப்படுத்தும் ஒரு முக்கியமான படைப்பாகும். காலப்போக்கில் ஏற்படும் சமூக மற்றும் மொழிப் பயன்பாட்டு மாற்றங்களினால் வழக்கொழிந்து வரும் வட்டாரச் சொற்களையும், பழமையான சொற்றொடர்களையும், மக்களின் வாழ்வியல் அனுபவங்களோடு தொடர்

புடைய மொழி மரபுகளையும் பதிவுசெய்து பாதுகாப்பதன் மூலம், அவற்றை எதிர்காலத் தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் முக்கிய பணியை இவ்வகராதி மேற் கொள்கிறது.

ஆய்வாளர் முஹம்மட் சாக்கீர் அவர்களால் தொகுக்கப்பட் டுள்ள இவ்வகராதி, தாய்வீடு பதிப்பகத்தினால் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறைச் சிரேஷ்ட பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா சிறப்புரை யாற்றினார். வெளியீட்டு ரையைத் தாய்வீடு பதிப்ப கத்தின் ஆய்வாளர் பிரசாத் சொக்கலிங்கம் நிகழ்த்தினார். மேலும், தென்கிழக்குப் பல்க லைக்கழகச் சிரேஷ்ட விரிவு ரையாளர் எம். அப்துல் ராஸாக், உள்ளூராட்சி அமைச்சின் உதவிச் செயலாளர் துலாஞ்சணன் விவேகானந்தன் மற்றும் தென் கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் மன்சூர் ஏ. காதிர் ஆகியோர் நூல் குறித்து உரையாற்றினர்.

சம்மாந்துறை மண்ணின் மொழியியல் தனித்துவத் தையும், அதன் சமூக, பண்பாட்டு அடையாளங்க ளையும் வெளிக்கொணரும் வகையில் இந்நூல் உருவாக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. இவ்வகராதி ஒரு மொழியியல் ஆவணமாக மட் டுமன்றி, சம்மாந்துறை மக்களின் பண்பாட்டு வர லாற்றைப் பதிவு செய்யும் ஓர் அரிய ஆவணமாகவும் திகழ் கின்றது.



prasadbatti@gmail.com

இலங்கையின் இன்றைய அரசியல் சிக்கல்களின் பின்னணியில் மகாவம்சத்தின் பாத்திரம் அளப்பெரியது. புத்தரின் மூன்று முறை விஜயம், விஜயனின் வருகையும் சிங்கள சமூக உருவாக்கத்தின் தொடக்கமாகப் புனைந்தது, குவேனி விஜயன் கதைகள், துட்ட கைமுனு - எல்லாளன் போர், மகிந்த தேரரின் வருகை போன்றவற்றுக்கூடாக மெருக்கூட்டி கட்டமைக்கப்பட்ட கருத்தாக்கம் எந்த நோக்கத்துக்காக மேற்கொள்ளப்பட்டது என்கிற கேள்வியை நாம் இன்று தொகுத்து கேட்க வேண்டி இருக்கிறது. இதன்மூலம், கட்டமைக்கப் பட்ட புனித தீபவம்ச கோட்பாடு இன்றைய இலங்கையின் சீரழிவின் பின்புலமாக இருக்கிறது எனத் துணிந்து தர்க்கிக்க முடியும். மகாவம்சத்தை ஆராய்ந்த ஆயிரக்கணக் கானோர் இருப்பினும் அதை எழுதியவர் பற்றிய தனி ஆய்வுகள் கிடையாது.

இலங்கையின் வரலாற்றெழுதியல் பாரம்பரியத்தில் மகாநாம தேரர் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த இடத்தை வகிக்கிறார். ஏனெனில், அவருக்கு முன்னர் தீபவம்சத்தை எழுதியவர் யார் என்கிற பதிவு நமக்குக் கிடைக்கவில்லை; மகாநாமரே பெயர் அறியப்பட்ட முதல் இலங்கை வரலாற்று ஆசிரியராகப் பதிவாகிறார். ஆயினும், இந்த 'முதல் ஆசிரியர்' என்ற அந்தஸ்தே ஒரு முரண்பாட்டைத் தாங்கியுள்ளது: மகாநா மரைப் பற்றி நம்பகமான வாழ்க்கை வரலாற்றுத் தரவு கிட்டத்தட்ட எதுவும் இல்லை, ஆனால் அவர் எழுதிய நூல் பதினான்கு நூற்றாண்டுகளாக இலங் கையின் இன, மத அடையாள அரசியல் கட்டமைப்பின் அடிநாதமாக இயங்கி வருகின்றது.

மகாநாம தேரர் மகாவம்சத்தை வெறும் பழைய நிகழ்வுகளின் பட் டியலாக எழுதினாரா, அல்லது மகாவிகாரைத் தேரவாத மரபு, அரச அதிகாரம், பௌத்த சமயப் பாதுகாப்பு, இலங்கை ஒரு புனிதத் தீவு என்ற கருத்தை ஒருங்கிணைக்கும் வர லாற்றுக் கதையை உருவாக்கினாரா? இத்தனை சர்வ நாசத்துக்குப் பின்னால் இருந்த அந்த நபர் மகாநாம தேரர். இதைப் புரிவதற்கு மகாநாம தேரருக்கு இருந்த தேவைதான் என்ன என்கிற கேள்வி நமக்கு எழுந்து கொண்டிருக்கிறது. இக்கேள்வியே இக்கட்டுரையின் மையமாக அமைகிறது.

அவர் தீபவம்சத்திலும் சிங்கள அட்டகதா மரபிலும் இல்லாத பல கதைப் பகுதிகளை மகாவம்சத்தில் ஏன், எந்தத் தேவைக ளுக்காகச் சேர்த்திருக்கக்கூடும் என்பதை, கிடைக்கும் ஆய்வுசார் விளக்கங்களின் அடிப்படையில் மதிப்பாய்வு செய்யவேண்டி இருக்கிறது.

என். சரவணன்

# மகாவம்சத்தை இயற்றிய மகாநாம தேரர் யார் ?

## மகாவம்சம்:
## வரலாற்று நூலா அல்லது வரலாற்றுக் காவியமா?

மகாவம்சம் நவீன பொருளில் எழுதப்பட்ட நடுநிலை வரலாற்று நூல் அல்ல. அது பௌத்த சமய வரலாறு, மடாலய நினைவகம், அரச வம்சத் தொடர்ச்சி, புனிதப் புவியியல், அரசியல் நியாயப்படுத்தல் ஆகியவை ஒன்றோடொன்று இணைந்த பாளி வரலாற்றுக் காவியம். அது பொ.ஆ.பி. ஐந்தாம் அல்லது ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகவும், அதன் ஆசிரியர் பெரும்பாலும் மகாநாம பௌத்த பிக்கு எனவும் கருதப்படுகிறது. இந்நூல் இலங்கையின் பௌத்த வரலாற்றைப் பதிவுசெய்வதாகத் தன்னை அறிமுகப்படுத்தினாலும், அதன் உள்ளே புதைந்திருக்கும் அரசியல், சமய, நிறுவன நோக்கங்களை வெளிக்கொணர்வதே இன்றைய வரலாற்றாய்வின் முக்கிய பணியாக அமைந்துள்ளது.

மகாவம்சத்தின் முதல் பகுதிகளில் புத்தர் இலங்கைக்கு மூன்று முறை வந்ததாகக் கூறப்படுகிறது. இவை வரலாற்று நிகழ்வுகளாகப் பதிவுசெய்யப்படுவதாகப் புரிந்துகொள்ளாமல், இலங்கையின் பௌத்த புனிதத் தன்மையை உருவாக்கும் கதையாடல்களாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். இந்தக் கதைகள் இலங்கையைப் புத்தரின் நேரடிப் புனிதத் தலமாக்குகின்றன; இலங்கை பௌத்தத்தின் சட்டபூர்வத் தன்மையை வலுப்படுத்துகின்றன; மகாவிகாரையின் புனித புவியியலைப் புத்தரின் காலத்துடன் இணைக்கின்றன. பின்னாளில் இக்கருத்துகள் சிங்கள - பௌத்த தேசியவாதத்தால் புதிய அரசியல் பொருளில் பயன்படுத்தப்பட்டன.

மகாவம்சத்தின் ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவுகளிலும் அது 'பக்தியுள்ளோரின் அமைதியான மகிழ்ச்சிக்காக எழுதப்பட்டது' என்று நிறைவடையும். இதனால் நூல் தன்னை நவீன வரலாற்று ஆய்வாக அறிமுகப்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது. ஒரு ஆன்மீக உள்ளடக்கத்தை வலியுறுத்துகிறது என்றும் நாம் புரிந்துகொள்ளமுடியும். அதன் நோக்கங்களில் புத்தரின் போதனை இலங்கையில் பாதுகாக்கப்பட்ட வரலாற்றை விளக்குதல், மகாவிகாரையை அசோகர் - மகிந்தர் மரபுடன் இணைத்தல், பௌத்தத்தைப் பாதுகாக்கும் மன்ன ராட்சியை நல்ல அரசாட்சியாகச் சித்தரித்தல், இலங்கையே பௌத்த வரலாற்றின் மையம் என்ற உணர்வை உருவாக்குதல், மகாவிகாரைத் தேரவாதத்தின் அதிகாரத்தை நிறுவுதல் போன்றவற்றை உள்ளடக்கியது.

## மகாநாம தேரர் யார்?

மகாவம்சத்தை மகாநாம தேரர் எழுதியதாக அடையாளப்படுத்துவது மகாவம்ச மூலநூலிலிருந்து அல்ல, மாறாக பிற்காலத்தில் எழுதப்பட்ட மகாவம்ச - டீகா எனும் வர்ணனை நூலிலிருந்தே ஆகும். அந்நூல் மகாநாமரை அனுராதபுரம் மகாவிகாரைப் பிரிவைச் சேர்ந்த, திகசந்த சேனாபதியின் விகாரையில் (Dighasanda Vihara) வாழ்ந்த துறவியாக அடையாளப்படுத்துகிறது. பாளி பெயர்ப் பேரகராதி (Dictionary of Pali Proper Names) இந்த மகாநாமரை, சூளவம்சத்தில் (Cv.xxxviii.16) குறிப்பிடப்படும் மன்னன் தாதுசேனனின் மாமாவான மற்றொரு மகாநாம தேரருடன் 'பொதுவாக அடையாளம் காண்கிறது.' இது ஓர் உறுதியான வரலாற்றுச் சான்று அல்ல, மாறாக பாரம்பரிய ஒரு ஏற்புரை மட்டுமே என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். விக்கிபீடியாவும் Encyclopedia of Buddhism-மும் இதை மீண்டும் உறுதிசெய்கின்றன: 'மகாநாம தேரரைப் பற்றி வேறு நம்பகமான வாழ்க்கை வரலாற்றுத் தகவல் எதுவும் கிடையாது.' அவரது பிறந்த இடம், குடும்பப் பின்னணி, கல்வி, அவரின் குரு, தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய உறுதியான வரலாற்றுச் செய்திகள் மிகவும் குறைவு. இச்செய்தியை நூலில் உறுதியான உண்மையாக அல்லாமல், சரிபார்க்க வேண்டிய மரபுச் செய்தியாக இனங்கான வேண்டும்.

இங்கு இன்னொரு புதிர் ஒன்றையும் கவனத்திற் கொள்ள வேண்டும். Vincent Tournier (2014) என்கிற பிரெஞ்சு - சுவிஸ் அறிஞர் ஆய்வு செய்த போதிகயா கல்வெட்டுகளில், 5 - 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 'மஹானாமன்' எனும் சிங்கள துறவி பற்றிய குறிப்பு உள்ளது. இவர் இலங்கை அரச குடும்பத்துடன் தொடர்புடையவராகவும் மகாகாசியப்பர் பரம்பரையின் வாரிசாகவும் தன்னைக் காட்டிக் கொள்கிறார். இந்த மஹானாமன், மகாவம்ச ஆசிரியர் மகாநாமருடன் ஒரே நபரா என்பது தீர்க்கப்படாத கேள்வி; காலமும் இலங்கை அரச குடும்பத் தொடர்பும் ஒத்துப்போனாலும், மகாயான சார்பு நிலை மகாவிகார மகாநாம தேரரின் கடும் தேரவாத நிலைப்பாட்டுடன் நேரடியாக முரண்படுகிறது. மகாநாம தேரரின் தனிப்பட்ட வாழ்க்கையைவிட அவர் சேர்ந்திருந்த மகாவிகாரை நிறுவனத்தின் அறிவியல், சமய, அரசியல் சூழலே மகாவம்சத்தின் நோக்கத்தை விளக்குவதற்கு நமக்கு அதிகம் உதவுகிறது.



"மகாநாம தேரரைப் பற்றி வேறு நம்பகமான வாழ்க்கை வரலாற்றுத் தகவல் எதுவும் கிடையாது. அவரது பிறந்த இடம், குடும்பப் பின்னணி, கல்வி, அவரின் குரு, தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய உறுதியான வரலாற்றுச் செய்திகள் மிகவும் குறைவு."

## மகாவிகாரை – அபயகிரி மரபுகள்:

மகாவம்சத்தை அதன் உடனடி நிறுவனச் சூழலிலிருந்து பிரித்துப் புரிந்துகொள்ள முடியாது. பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டில் தேவனம்பியதிஸ்ஸ மன்னனால் நிறுவப்பட்ட மகாவிகாரை, பின்னர் அதே அரச பரம்பரையிலிருந்தே தோன்றிய அபயகிரி விகாரையுடன் (இது மகாயான கூறுகளையும் உள்வாங்கியிருந்தது) நீண்டகால முரண்பாடுகளுடன் இருந்தது. இலங்கையின் பௌத்த வரலாறு ஒரே அமைப்பின் வரலாறு அல்ல; பல்வேறு மடாலயங்கள், ஆசாரிய மரபுகள், அரச ஆதரவுக் குழுக்கள் என விரிந்த வரலாறாகும். மகாவிகாரை தன்னைப் பழைய தேரவாத மரபின் பாதுகாவலராகக் கருதியது. அபயகிரி, ஜேதவன விகாரைகளின் சமய நிலைப்பாடுகளை 'மகாயானம்' என்ற ஒரே சொல்லால் வரையறுப்பது மிக எளிமையான விளக்கமாக இருக்கலாம்; காலத்திற்கேற்ப இம்மடாலயங்களின் உறவுகளும் கருத்துகளும் மாறியிருக்கலாம்.

Jonathan Walters இதை 'Mahasena at the Mahavihara: The Interpretation and Politics of History' எனும் ஆய்வில் விளக்குவது போல், மகாவம்சம் மகாவிகாரையின் அரசியல் தேவைக்காகவே வரலாறு கட்டமைத்த ஒரு நூல் என்கிறார். தீபவம்சத்தில் அபயகிரி பற்றிய குறிப்புகள் இதற்கான மூலாதாரங்களாக இருந்தும், மகாவம்சம் அவற்றை வெளிப்படையாக நீக்கியிருப்பது, மகாவிகாரைக்கு மட்டுமே சிறப்புரிமை தரும் நோக்கத்தைக் காட்டுகிறது. மேலும், Springer இதழில் வெளியான ஆய்வு ஒன்று, தீபவம்சத்தில் மகாவிகாரை ஓரங்கட்டப்பட்ட நிலையில் இருந்ததாகவும், மகாவம்சத்தில் அது மையப்படுத்தப்பட்டு, அரச ஆதரவும் விரிவாக விவரிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டுகிறது. எனவே மகாவம்சம் ஒரு மகாவிகாரை மைய வரலாற்று ஆதாரம் என்பதை மறக்கக் கூடாது.

## தாதுசேன மன்னனின் காலப்பின்னணியும் மகாவம்ச உருவாக்கமும்:

மகாவம்சத்தின் உருவாக்கத்தைத் தாதுசேன மன்னனின் காலத்துடன் தொடர்புபடுத்தும் ஆய்வு மரபு உள்ளது. தாதுசேனன் பொ.ஆ.பி. ஐந்தாம் நூற்றாண்டில் அரச அதிகாரத்தை மீளமைத்த மன்னனாகக் கருதப்படுகிறார். சில பின்னைய செய்திகளின்படி, அவர் தீபவம்சத்திற்கு ஒரு விளக்கவுரை எழுதச் செய்ததாகக் கூறப்படுகிறது. கைகரின் பதிப்புக் குறிப்புகளில் இச்செய்தி விவாதிக்கப்படுகிறது.

எனினும், இதனை, மகாவம்சம் தாதுசேனனின் நேரடி அரச ஆணையின் பேரில் எழுதப்பட்டது எனத் தீர்மானமாகக் கூற முடியாது. இதற்கு இரண்டு சாத்தியங்கள் இருக்கலாம். தாதுசேனன் மகாவிகாரை மரபுக்கு ஆதரவளித்து, இத்தொகுப்பு முயற்சிக்கு அரச ஆதரவு வழங்கியிருக்கலாம்; அல்லது மகாவம்சம் நீண்டகாலமாக மகாவிகாரை மடாலய மரபில் மேற்கொள்ளப்பட்ட தொகுப்பு முயற்சியின் விளைவாக இருந்து, பின்னர் தாதுசேனனின் காலத்துடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்கலாம். இதனடிப்படையில், மகாவம்சத்தின் பல்வேறு பகுதிகள் வெவ்வேறு காலகட்டங்களில் தொகுக்கப்பட்டிருக்கலாம் என்றும் கருத முடியும்.

தாதுசேனனின் ஆட்சிக்காலத்தில் தென்னிந்தியப் படையெடுப்புகளின் அச்சுறுத்தல், அரச அதிகாரத்தின் மீளமைப்பு, பௌத்த மடாலயங்களுக்கான அரச ஆதரவு ஆகியவை முக்கிய அரசியல் நிகழ்வுகளாக இருந்தன. இச்சூழலில் மகாவிகாரை தனது சமய அதிகாரத்தையும் வரலாற்று நினைவையும் பாதுகாக்க ஒரு வரலாற்று நூலை உருவாக்க வேண்டிய தேவை எழுந்திருக்கலாம்; மகாவம்சம் அந்தத் தேவைக்கான பதிலாக அமைந்திருக்கலாம் என்பதே ஒரு நம்பகமான வரலாற்று ஊகமாகும்.

## மகாநாம தேரர் பயன்படுத்திய மூலங்களும் உரை மாற்றங்களும்:

மகாநாம தேரர் தமது நூலின் தொடக்கத்திலேயே, முன்னோர் தொகுத்த பழைய நூலின் குறைபாடுகளைத் திருத்தும் நோக்கத்துடன் எழுதுவதாகக் குறிப்பிடுகிறார். இது தீபவம்சத்தையோ அல்லது சிங்கள அட்டகதாவையோ குறிப்பிடுவதாக இருக்கலாம். மகாநாம தேரர் பயன்படுத்தியிருக்கக்கூடிய முதன்மையான எழுத்து ஆதாரம் தீபவம்சம் ஆகும். அடுத்தது 'சிஹல அட்டகதை' என்பதாகும். அது மகாவம்சத்திற்கு



> மகாநாம தேரர் பயன்படுத்தியிருக்கக்கூடிய முதன்மையான எழுத்து ஆதாரம் தீபவம்சம் ஆகும். அடுத்தது 'சிஹல அட்டகதை' என்பதாகும். அது மகாவம்சத்திற்கு முன்பட்ட பாளி வரலாற்று நூலாகக் கருதப்படுகிறது.

முன்பட்ட பாளி வரலாற்று நூலாகக் கருதப்படுகிறது. இரு நூல்களிலும் புத்தரின் இலங்கைத் தொடர்பு, மகிந்தர், தேவானம்பியதிஸ்ஸன், துட்டகைமுனு, அரச வம்சங்கள் பற்றிய பல ஒற்றுமைகள் உள்ளன. ஆனால், மகாவம்சம் தீபவம்சத்தின் எளிமைப்படுத்தப்பட்ட வடிவமல்ல; மாறாக, அதற்கு முன்னிருந்த வரலாற்று மற்றும் மரபுச் செய்திகளை விரிவுபடுத்தியும், புதிய தகவல்களைச் சேர்த்தும், சிலவற்றை மாற்றியும், புனைந்தும் உருவாக்கப்பட்ட தனித்துவமான இலக்கிய வடிவமாகும்.

Wilhelm Geiger-இன் ஆய்வின்படி, மகாநாம தேரருக்கு முன்னரே 'மகாவம்ச அட்டகதா' எனும் தொகுப்பு இருந்திருக்கலாம் என்றும், அதன் அடிப்படையிலேயே தீபவம்சமும் மகாவம்சமும் இரண்டு தனித் திசைகளில் எழுந்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. 1930-ஆம் ஆண்டு G.C. Mendis என்பவருடைய விமர்சன ஆய்வு, மகாவம்சத்தின் மூலங்களை மேலும் பிரித்துக் காட்டுகிறது. ஜாதகக் கதைகள், அசோகாவதானம், பாளி நியதி நூல்கள் அத்துடன் அவற்றின் சிங்கள வர்ணனைகள் என்பவற்றின் கலவையாக மகாவம்சம் உருவாகியிருக்கிறது என்கிறார்.

ஏனைய ஆதாரங்களில் மகாவிகாரையின் பழைய சிங்கள அட்டகதைகள், பிக்குகளின் வாய்மொழி மரபுகள், மடாலயத் தானப் பதிவுகள், அரச வம்சச் செய்திகள், பௌத்த புனிதக் கதைகள், இந்திய பௌத்த மரபுகள் என்பன உள்ளடங்குகிறது. இவை பெரும்பாலும் தனி நூல்களாக இன்று கிடைக்காததால், மகாவம்சமானது பின்னைய விளக்கவுரைகள், கல்வெட்டுகள், தொல்லியல் மூலம் மட்டுமே மீளக் கட்டமைக்கப்படுகின்றன. வம்சத்தப்பகாசினி மகாநாம தேரர் பயன்படுத்திய முன் ஆதாரம் அல்ல. அது மகாவம்சத்திற்கு எழுதப்பட்ட பிந்தைய விளக்கவுரை. எனவே அது மகாவம்சம் பின்னாளில் எவ்வாறு வாசிக்கப்பட்டது என்பதை அறிய உதவும்; ஆனால் மகாநாம தேரரின் மூல ஆதாரமாகக் கருதப்படக்கூடாது.


அதாவது, மகாநாம தேரர் ஒரு 'தொகுப்பாசிரியர்' என்ற பாத்திரத்தில் இயங்கியிருக்கிறார் என்பதே பெரும்பாலான ஆய்வாளர்களின் உடன்பாடு. அதாவது மகாநாம தேரர் புதிதாக ஒன்றையும் கண்டுபிடிக்காமல், இருந்த பல்வேறு மூலங்களை ஒரு குறிப்பிட்ட கருத்தியல் திசையில் தேர்ந்தெடுத்து, வடிவமைத்து மேலதிகமாக புனைந்து விரிவாக்கியவர்.

'மகாநாம தேரர் வரலாற்றை மாற்றினார்' எனும்போது அக்கூற்றை நுணுக்கமாகப் பயன்படுத்த வேண்டும். ஒரு நிகழ்வை விரிவுபடுத்துதல், மற்றொன்றைச் சுருக்குதல், ஒரு மன்னனைப் புண்ணியவானாகக் காட்டுதல், எதிரியை சமய எதிரியாக அமைத்தல், புனித அதிசயங்களைச் சேர்த்தல், ஏனைய இலங்கை சமூகங்களின் பங்களிப்பைத் தவிர்த்தல் ஆகியவை வரலாற்றுக் கதையமைப்பின் மாற்றங்களாகும். இவற்றை அனைத்தையும் திட்டமிட்ட பொய் என்று அழைப்பது சரியல்ல; அதே நேரத்தில் அவற்றை முழுமையான வரலாற்று உண்மை என்றும் ஏற்றுக்கொள்ள முடியாது. நேர்மையான ஆய்வு நோக்கத்தோடு அணுகினால் 'மறுசீரமைப்பு', 'தேர்வு', 'மௌனம்', 'புனிதப்படுத்தல்', 'அரசியல் நியாயப்படுத்தல்' போன்ற சொற்கள் இத்தகைய பக்கசார்பில்லாத ஆய்வுக்கு ஏற்றதாக இருக்கும்.

## சுருக்கல், விரித்தல், புனைதல் ஏன்?

விஜயன் - குவேணி கதை, புத்தரின் மூன்று விஜயங்கள், துட்டகைமுனுவுக்கு ஒதுக்கப்பட்ட அதிக அத்தியாயங்கள், மகிந்த தேரரின் வருகை என்பன தீபவம்சத்திலோ சிங்கள அட்டகதா மரபிலோ இல்லாத அளவு விரிவாக்கப்பட்ட அல்லது புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகள். ஆய்வாளர்கள் இவற்றுக்கு தனித்தனியாக பின்வரும் காரணங்களைச் சுட்டுகின்றனர்.

- **துட்டகைமுனு – எல்லாளன் போர்:** Steffen Bretfeld மற்றும் Siriweera ஆய்வுகளின்படி, தீபவம்சத்தில் வெறும் நிகழ்வுப் பட்டியலாகவும் சுருக்கமாகவும் இருந்த துட்டகைமுனு - எல்லாளன் யுத்தம், மகாவம்சத்தில் 'துட்டகைமுனுவின் காவியம்' என அழைக்கப்படும் அளவுக்கு மனிதாபிமான சாயலுடன் விரிவான காவியமாக மாற்றப்படுகிறது. எல்லாளன் அந்நிய தொடர்புடைய அரசனாகச் சித்தரிக்கப்படுகிறார்; அதேவேளை நீதிமானாகவும் காட்டப்படுகிறார். தீபவம்சத்தில் காட்டப்படும் எல்லாளன் பற்றிய நற்பாத்திரம் மகாவம்சத்தில் மோசமானவனாகச் சித்திரிக்கப்படுகிறது. துட்டகைமுனுவின் வெற்றி பௌத்த அரசின் மீளுருவாக்கமாக அமைக்கப்படுகிறது. போருக்குப் பின்னர் துட்டகைமுனு மனவேதனை அடைவதும், பிக்குகள் அவனை ஆறுதல்படுத்துவதும், போரில்



> குவேணி கதை தீபவம்சத்தில் காணப்படாததாகவும் மகாவம்சத்தில் முக்கியமாக இடம்பெறுவதாகவும் சில ஒப்பீட்டு ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இதை உறுதிப்படுத்த பல்வேறு தீபவம்சப் பதிப்புகளையும் கையெழுத்து மரப்புகளையும் ஒப்பிட வேண்டும்.

கொல்லப்பட்டவர்களைப் பற்றிய பரிதாபமாகக் கேள்வி எழுப்பப்படுவதும் சமய ஒழுக்கத்தையும் அரசப் போரையும் இணைக்கின்றன. தமிழ் பேசும் மக்கள் கொல்லப்படவேண்டியவர்கள் என்று மகாவம்சத்தில் அந்தக் காட்சி விளக்குகிறது. பின்னாளில் இந்தக் கதை பௌத்தத்தைப் பாதுகாக்கும் நியாயமான போர் என்ற அரசியல் நியாயத்தையும் வழங்கியது. இது தனிநபர் வீரம் என்பதைத் தாண்டி, மகாவிகாரை நிர்மாணித்த மகாதூபியின் புனிதத்தன்மைக்கும் அரச - சங்க உறவுக்கும் அடித்தளமிடும் கதையாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.


- **புத்தரின் மூன்று வருகையும் மகிந்த விஜயமும்:** இவை இலங்கையை நேரடியாக புத்தருடன் இணைக்கும், 'தம்மதீப' (dhammadipa - தம்மத்தின் தீவு) எனும் சித்தாந்தத்தின் மூலக் கட்டமைப்பாகச் செயல்படுகின்றன. B. Shirley (2015), இவ்வகையான அடையாள உருவாக்கம் காலனித்துவ எதிர்ப்பு விளக்கவுரைகளில் வலுப்பெற்று, சிங்கள மக்களைப் புனிதத் தீவைப் பாதுகாக்கும் இறைப் பாதுகாவலர்களாகச் சித்தரிப்பதாகக் குறிப்பிடுகிறார். இங்கு கவனிக்க வேண்டியது, Shirley-யின் வாதப்படி, இந்த தம்மதீப கருத்தாக்கத்தின் வேர் மகாவம்சத்திலேயே இருந்தாலும், அது ஒரு ஒற்றைப் பொருள் கொண்ட, மாறாத கருத்தியலாக அல்லாமல், ஒவ்வொரு காலகட்டமும் புதிதாக மறுவாசிப்புச் செய்யப்படும் ஒரு 'கிடைக்கக்கூடிய விவரணை' என்கிறார்.

- **குவேணி கதை:** இயக்கர் / வேடர் சமூக இருப்பை ஒப்புக் கொள்ளும் அதேவேளையில், அவர்களை 'அரக்கத்' தன்மையுடன் சித்தரித்து, ஆரிய - சிங்கள மரபுவழிக்கு எதிரானவர்களாக நிலைநிறுத்தும் ஓர் ஆரம்பகால 'Other' (அந்நியர்) கருத்தாக்கமாக இயங்குகிறது என பல பெண்ணிய வரலாற்றாய்வாளர்கள் விளக்கியுள்ளனர். குவேணி கதை தீபவம்சத்தில் காணப்படாததாகவும் மகாவம்சத்தில் முக்கிய மாக இடம்பெறுவதாகவும் சில ஒப்பீட்டு ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இதை உறுதிப்படுத்த பல்வேறு தீபவம்சப் பதிப்புகளையும் கையெழுத்து மரப்புகளையும் ஒப்பிட வேண்டும்.

குவேணி இலங்கையின் பூர்வீகமாக வாழ்ந்த உள்ளூர் மக்களின் நினைவைக் குறிக்கும் கதாபாத்திரமாகவும், விஜயன் வெளியில் இருந்து வரும் அரச மரபின் பிரதிநிதியாகவும் காண்பிக்கபடுகிறது. விஜயன் பற்றிய அரசியல் நிறுவலில் குவேணியின் அறிவும் உதவியும் தேவைப்பட்டாலும், பின்னர் அவள் விலக்கப்படுகிறாள்.

- **பெண்களின் குரல்களும் இருட்டடிப்பும்:** மகாவம்சமானது சங்கமித்த, போதி மரம், பிக்குணி மரபை முற்றிலும் புறக்கணிப்பதில்லை. இருப்பினும், அதன் மொத்த வரலாற்றுக் கட்டமைப்பில் அரசர்களும் ஆண் பிக்குகளும் மையமாகின்றனர். பெண்களின் அன்றாட சமயப் பணிகள், பிக்குணி நிறுவனங்களின் நிலை, உள்ளூர் பெண்களின் பங்களிப்பு குறைவாகப் பதிவு செய்யப்படுகின்றன. மகாநாம தேரர் பிக்குணிகளின் பாத்திரத்தை இருட்டடிப்பு செய்தார் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. மகாவம்சத்தின் நிறுவன மையம் ஆண் பிக்குச் சங்கமும் அரச மன்னராட்சியும் ஆகும்; அதனால் பெண்களின் குரல்கள் குறுகிய அளவில் பிரதிபலித்தன என்கிற ஒரு வாதமும் முன்வைக்கப்படுவதுண்டு.

- **நூலின் முடிவுறாப் புதிர்:** மகாவம்சம் மகாசேனன் பற்றிய செய்திகளுடன் முடிவடைகிறது. அதன் முடிவு வழக்கமான நிறைவு செய்யுளுடன் முடியவில்லை என்ற கருத்து சில ஆய்வுகளில் காணப்படுகிறது. நூல் முழுமையடையாமல் நிறுத்தப்பட்டதா, பிரதியில் இறுதிப் பகுதி அழிந்ததா, அல்லது குறிப்பிட்ட மடாலய வரலாற்றுக் கட்டத்துடன் முடிப்பது நோக்கமா என்பது முக்கிய கேள்வியாகும். மகாநாம தேரர் தாதுசேனனின் அரசியல் நெருக்கடியால் எழுதுவதை நிறுத்தினார் என்கிற கருத்துக்கு போதிய ஆதாரமுமில்லை.



மகாவம்சம் மகாசேனன் பற்றிய செய்திகளுடன் முடிவடைகிறது. அதன் முடிவு வழக்கமான நிறைவு செய்யுளுடன் முடியவில்லை என்ற கருத்து சில ஆய்வுகளில் காணப்படுகிறது. நூல் முழுமையடையாமல் நிறுத்தப்பட்டதா, பிரதியில் இறுதிப் பகுதி அழிந்ததா?

## மகாநாம தேரருக்கு ஏன் இந்தத் தேவை?

தென்னிந்திய படையெடுப்பு அச்சமா, பௌத்தத்திற்கு ஆபத்து நேருமோ என்ற பயமா, புனிதப்படுத்தலா, அரச நிர்பந்தமா என்பதற்கு ஆய்வுலகில் ஒரே இணக்கமான பதில் இல்லை. மூன்று முக்கிய விளக்கங்கள் மறுபடியும் மறுபடியும் வியாக்கியானப்படுத்தப்படுகின்றன, அவை ஒவ்வொன்றிலும் சில நியாயங்கள் உள்ளன. அவ்வாறு குறிப்பிடுபவர்களையும் நேரடியாக இங்கே விளக்கி விடுகிறேன்:

- Kemper (1991) மேலும் Walters ஆகியோர் முன்வைப்பது போல், மகாவம்சத்தின்படி மகாவிகாரை - அபயகிரி ஆகிய பௌத்த நிறுவனப் போட்டியில் மகாவிகாரைக்குச் சட்டபூர்வத்தன்மை அளிப்பதே. இதன்படி, 'தம்மதீப' சித்தாந்தமும் அரச - சங்க தொடர்பும் வெளி அச்சங்களை விட உள் நிறுவனப் போட்டியிலிருந்தே எழுகின்றன.
- மகாவம்சம் வெறும் அரசியல் பதிவேடல்ல, மாறாக ஒரு காவியம் (பக்தி இலக்கியம்) என்கிறார் ஸ்டீவன் கெம்பர் (Steven Kemper). 'இந்நூல் ஒவ்வொரு மன்னனையும் அரசியல், அவரின் ஆட்சி என பதிவு செய்கிறது.' இந்தக் கண்ணோட்டத்தில், 'பக்தர்கள் புனிதத்தின் பேரால் மகாவம்சக் கதைகளை நம்புவார்கள், அவர்களுக்கு அறிவியல் விசாரணை தேவையில்லை' என்பது போலவே, மகாநாம தேரர் தன் நோக்கத்தை வரலாற்றுத் துல்லியத்திற்காக அல்ல, மாறாக 'தூய மகிழ்ச்சிக்காக' என ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் வெளிப்படையாகவே அறிவிக்கிறார். இது ஒரு முக்கிய ஆதாரம்: மகாநாம தேரர் தன் நூலை வெளிப்புற வரலாறாக உரிமை கோரவில்லை.
- K.D. Pillai (2026) போன்றோரின் சமீபத்திய ஆய்வுகள், மகாவம்ச விவரணைக்கும் தொல்பொருள் / கல்வெட்டு சான்றுகளுக்கும் இடையேயான முரண்பாடுகள், பிற்கால சிங்கள தேசியவாதத்தின் தேவைகளால் மேலும் வலுப்படுத்தப்பட்டவை என வாதிடுகின்றன. இது மகாநாம தேரரின் 5 - 6-ஆம் நூற்றாண்டு நோக்கத்தை நேரடியாகவே விளக்கும் ஆய்வு அல்ல, மாறாக பிற்கால வாசிப்பு / பயன்பாட்டின் அடிப்படையில் விபரிக்கிற ஆய்வு. R. Coningham-இன் தொல்பொருளியல் ஆய்வு (1995) ஆரம்பகால பௌத்த சங்க அமைப்பு பற்றி மகாவம்சம் 'குறிப்பிடத்தக்க அளவு மௌனம்' காப்பதைக் குறிப்பிடுகிறது. குகைக் கல்வெட்டுகளில் தோன்றும் உயர் அரச பட்டம் பெற்ற பரம்பரையினரை அந்நூல் முற்றிலும் புறக்கணிக்கிறது என்கிறார். இது திட்டமிட்ட தவிர்ப்பு என்கிறார் அவர்.

## சிங்கள – பௌத்த தேசியவாத உருவாக்கத்தில் பிற்கால வகிபாகம்:

மகாநாம தேரர் தொடங்கிய மகாவம்ச பாரம்பரியம் அத்துடன் நின்றுவிடவில்லை. மகாவம்சம் நவீன தேசியவாதத்தை உருவாக்கத்துக்கு பலமான சித்தாந்தப் பின்புலமாக இருந்திருக்கிறது. மகாநாம தேரரின் காலத்தில் நவீன தேசியம், குடியுரிமை, இன - மொழி அரசியல், நாட்டின் நவீன அரசியல் கருத்துகள் இருந்ததாகக் கருத முடியாது என்பது உண்மை. ஆனால், மகாவம்சம் இலங்கை பௌத்தத் தீவு, பௌத்த அரச மரபு, புனிதப் புவியியல், வெளிப்புற எதிரி போன்ற கருத்துகளை ஒன்றிணைத்தது. இவை பின்னாளில் சிங்கள - பௌத்த தேசியவாதத்தின் வரலாற்று மொழியாகப் பயன்படுத்தப்பட்டன. எனவே மகாநாம தேரர் பண்டைய தேசியவாதி அல்ல; ஆனால் அவரது வரலாற்றுக் கட்டமைப்பு பின்னாளில் தேசியவாதத்தால் பயன்படுத்தக்கூடிய வளமான கருத்தியல் அடித்தளத்தை வழங்கியது.

George Turnour 1837-ஆம் ஆண்டு அச்சிட்ட பதிப்பும் ஆங்கில மொழிபெயர்ப்பும் காலனித்துவ கால இலங்கை வரலாற்றெழுதியலுக்கு ஒரு முக்கிய மைல்கல்லாக இருந்ததாக Jonathan Walters (2006) விவரிக்கிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அச்சு, மொழிபெயர்ப்பு, காலனிய வரலாற்றியல், பௌத்த மறுமலர்ச்சி ஆகியவை மகாவம்சத்தைப் புதிய அரசியல் சூழலுக்குள் கொண்டு வந்தன. George Turnour பதிப்பு, பின்னைய சிங்கள மொழிபெயர்ப்புகள், Geiger மொழிபெயர்ப்பு ஆகியவை மகாவம்சத்தை



> மகாநாம தேரர் பண்டைய தேசியவாதி அல்ல; ஆனால் அவரது வரலாற்றுக் கட்டமைப்பு பின்னாளில் தேசியவாதத்தால் பயன்படுத்தக்கூடிய வளமான கருத்தியல் அடித்தளத்தை வழங்கியது.

விரிவான வாசகர் உலகிற்குக் கொண்டு சென்றன. அதன் பிறகு இலங்கையின் பண்டைய, இடைக்கால வரலாறு அனைத்தும் Turnour-இன் மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்டே கணிக்கப்பட்டு, வியாக்கியானம் செய்யப்பட்டு, இயற்கை / கலாசார / அரசியல் பரப்புகளுக்குள் வாசிக்கப்பட்டது.

அநகாரிக தர்மபால போன்ற பௌத்த மறுமலர்ச்சித் தலைவர்கள் மகாவம்சத்தைப் பயன்படுத்தியபோது, அது மடாலயச் சமயக் கதையிலிருந்து சமூக - அரசியல் அடையாளத்தின் நூலாக மாறியது. இவ்வாறு உருவான நவீன 'மகாவம்ச மனப்பாங்கை' மகாநாம தேரரின் நோக்கத்துடன் ஒன்றாகக் கருதிவிடமுடியாது. 1956-இல் பண்டாரநாயக்கவின் ஆட்சியிலும், 1977-ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்தன அரசும் அறிஞர்கள், அரசாங்க அதிகாரிகள், பௌத்த துறவிகள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து மகாவம்சத்தை மேலும் புதுப்பித்தது. அந்த மகாவம்ச மரபு இன்றும் தொடர்கிறது. Bruno Shirley (2015) சுட்டிக்காட்டுவது போல், பொது பல சேனா போன்ற அமைப்புகளின் போருக்குப் பிந்தைய சிங்கள - பௌத்த தேசியவாதக் கருத்துரையாடலும், இதே 'தம்மதீப' கருத்தாக்கத்தின் மறுவடிவமே.

## பன்முக வாசிப்பின் அவசியம்:

மகாவம்சத்தில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பாலும் தென்னிந்தியர், படையெடுப்பாளர் முதலியோர் அரச எதிரி என்ற கோணத்திலேயே பிரதிபலிக்கின்றனர். ஆனால் மகாவம்சம் முழு தீவின் சமூக வரலாறு அல்ல; அது ஒரு குறிப்பிட்ட மடாலய மரபின் வரலாறு. தமிழ் மக்கள், வடக்கு - கிழக்கு இலங்கை, கடல்சார் வணிகர்கள், தமிழ் பௌத்தர்கள், சைவ மரபுகள், பெண்கள், உள்ளூர் சமூகங்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் பற்றிய தகவல்கள் குறைவாக உள்ளன. இம்மௌனங்களைக் கல்வெட்டுகள், தொல்லியல், தென்னிந்திய வரலாறு, தமிழ் இலக்கியங்கள், கடல்சார் வர்த்தகச் சான்றுகளால் ஆராய்வது முக்கியம்.

இலங்கையின் வரலாற்றை ஒரே மொழி, ஒரே சமய, ஒரே மரபின் கதையாகச் சுருக்குவது மகாவம்சத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தாலும், அதன் பின்னைய வாசிப்புகள் அதனை நவீன தேசிய அடையாளத்தின் அடித்தளமாக மாற்றின. இத்தகைய ஒற்றைப் பார்வையை மீறி, தமிழ், முஸ்லிம், இந்திய வம்சாவளித் தமிழர், உள்ளூர் சமூகங்களின் குரல்களை வரலாற்று ஆய்வில் இணைப்பது இன்றைய அவசரத் தேவையாகும். மகாவம்சம் ஒரு விகாரைசார் காலவரிசை நினைவுப் பதிவேடு என்ற அடிப்படையில் வாசிக்கப்படும்போது, அது இலங்கையின் பன்முக வரலாற்றின் ஒரு பகுதியாக மட்டுமே அமையும், அதை முழு வரலாற்றாக ஆக்கமுடியாது.

ஆய்வு அணுகுமுறையைப் பொறுத்தவரை, ஒவ்வொரு முக்கியக் கூற்றுக்கும் முதலில் மகாவம்சத்தின் பாளி மூல உரையைப் பார்க்க வேண்டும். அடுத்ததாக தீபவம்சத்துடன் உரை ஒப்பீடு செய்ய வேண்டும். பின்னர் பழைய அட்டகதை மரபுகள் அல்லது வம்சத்தப்பகாசினி போன்ற பின்னைய விளக்கங்கள் உள்ளனவா என்று சரிபார்க்க வேண்டும். அதன் பின்னர் கல்வெட்டு, தொல்லியல், வெளிப்புற இலக்கிய ஆதாரங்களுடன் ஒப்பிட வேண்டும். இறுதியாக அந்தச் செய்தி வரலாற்று நிகழ்வா, சமய நினைவா, அரசியல் கதையா, புராணக் கட்டமைப்பா என்று மதிப்பிட வேண்டும். துரதிர்ஷ்டவசமாக மகாநாம தேரர் இயற்றிய மகாவம்சப் பிரதிகள் எதுவும் தமிழில் இல்லை; ஆங்கிலத்தில் கூட அனைத்து தொகுப்புகளும் கிடையாது. எனவே தமிழில் இத்தகைய ஆய்வுகளைச் செய்யமுடியாத நிலை காணப்படுகிறது. அந்த ஆய்வு இடைவெளி அப்படியே தொடர்ந்து வருகிறது.

மகாவம்சம் பற்றிய ஆய்வுகள் ஏராளம் இருந்தாலும், அவை அனைத்தும் நூலைப் பற்றியே பேசுகின்றன. அதை எழுதிய நபரை ஒரு வரலாற்றின் முக்கிய எழுத்தாளராக, அவரது சூழல், அவரது உளவியல் / அரசியல் தேவைகள் என்ற கோணத்தில் ஆய்வு செய்யும் தனி மோனோகிராஃப் எதுவும் இல்லை.

மகாநாம தேரர் பற்றி நமக்குக் கிடைப்பது வரலாற்று உண்மைகள் அல்ல, மாறாக ஒரு பாரம்பரிய அடையாளமும் அவர் விட்டுச்சென்ற மகாவம்ச நூலின் கட்டமைப்புத் தர்க்கம் மட்டுமே. அவர் பழைய பௌத்த, அரச மரபுகளைச் சேகரித்து, அவற்றைத் தேரவாத - மகாவிகாரை உலகக் கண்ணோட்டத்திற்குள் மறுசீரமைத்த ஒரு மடாலய ஆசிரியர் எனக் கூறலாம். அவர் தேர்ந்தெடுத்த, விரிவாக்கிய, ஒழுங்கமைத்த கதைகள் - விஜயன் - குவேணி முதல் மகிந்தன் விஜயம் வரை - பதினைந்து நூற்றாண்டுகளுக்கும் மேலாக இலங்கையின் அரசியல் கற்பனையை வடிவமைத்து வருகின்றன.

அவருக்கு ஏன் இந்தத் 'தேவை' எழுந்தது என்பதற்கு ஒரே பதில் இல்லை. அவர் உருவாக்கிய புனித வரலாற்றுக் கட்டமைப்பு பின்னாளில் சிங்கள - பௌத்த தேசிய அடையாளத்தின் முக்கிய ஆதாரமாகப் பயன்படுத்தப்பட்டது. எனவே முக்கியமான கேள்வி 'மகாநாம தேரர் வரலாற்றைத் திரித்தாரா ?' என்பது மட்டுமல்ல; ஒரு மடாலயச் சமூகம் தன் சமய அதிகாரத்தையும் அரசியல் நினைவையும் பாதுகாக்க வரலாற்றை எவ்வாறு அமைத்துக் கொண்டது என்பதே ஆழமான ஆய்வுக் கேள்வியாகும். பௌத்த நிறுவன அரசியல், மத பக்தி, பிற்கால தேசியவாத மறுவார்ப்பு, மறுபாவனை என்கிற நோக்கிலேயே இதனை அணுக வேண்டும்.

**குறிப்புரைச் சொற்களஞ்சியம்:**

- தேரவாதம் (Theravada): பௌத்த சமயத்தின் மிகப் பழமையான பிரிவு; பாளி மொழியில் உள்ள திரிபிடகத்தை அடிப்படையாகக் கொண்டது. இலங்கை, மியான்மர், தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ் ஆகிய நாடுகளில் பரவலாகக் காணப்படுகிறது.
- வம்சத்தப்பகாசினி (Vamsatthappakasini): மகாவம்சத்திற்கு எழுதப்பட்ட பிந்தைய பாளி விளக்கவுரை; மகாநாம தேரரின் மூல ஆதாரமல்ல, ஆனால் மகாவம்சத்தின் பின்னைய வாசிப்புகளைப் புரிந்துகொள்ள உதவுகிறது.
- அட்டகதை (Athakatha): பாளி பௌத்த நூல்களுக்கு எழுதப்பட்ட பழைய சிங்கள விளக்கவுரைகள்; பின்னர் பாளிக்கு மொழிபெயர்க்கப்பட்டன. மகாவம்சத்தின் முன் ஆதாரங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.



sarawanan.n@thaiveedu.com

# எழுத்தில் தமிழ் பௌத்தர்கள்

செல்வநாயகி ஸ்ரீதாஸ்



prasadbatti@gmail.com

மகாவம்சம்: பல நூற்றாண்டுகளாக, மக்கள் மத்தியில், நாட்டார் பாடல்களாகப் பாடப்பட்டுவந்த கதைகளை, பொ.ஆ.பி. 6-ஆம் நூற்றாண்டளவில், மகாநாமதேரர் என்னும் பௌத்த பிக்கு பாளி மொழியில் தொகுத்ததாக நம்பப்படுகிறது.

பௌத்தத் துறவிகள் ஒருங்கிணைந்து, மகிந்தன் மூலமாக பௌத்தம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட வரலாறு, பல்லாயிரக்கணக்கான மக்கள் இலங்கையில் பௌத்த மதத்தைத் தழுவிக்கொண்டது, பௌத்த மதத்தின் பெருமையைக் காட்டும் வகையிலான செவிவழிக் கதைகள் முதலியவற்றைத் திரட்டி 'அட்டகதா' என்னும் பெயரில் 'பாளி' மொழியில் தொகுத்தார்கள். இது, பின் ஒரு காலத்தில், கால வரிசைப்படி ஒழுங்கு செய்யப்பட்டு 'அட்டகதா - மகா வம்சம்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டது.

தமிழ் நாட்டினது வரலாற்றை வரைவதற்குச் சங்க இலக்கி யங்களை ஆவணங்களாக ஏற்றுக் கொள்ளாத காலம் ஒன்று இருந்தது. இலக்கியங்கள் கூறும் வரலாற்றுச் செய்திகளை ஏற்றுக்கொள்ளத்தக்க புறச்சான்றுகள் வேண் டப்பட்ட அதே காலகட்டத்தில் மகாவம்சம் வரலாற்று ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது இன்றைய ஆய்வாளர்களுக்கு வியப்புத்தரும் செய்தியாகும்.

இந்த ஆய்வில், பத்துச்சேர அரசர்களின் தொடர்வரலாறு ஆவணப்படுத்தப்பட்டுள்ள பதிற்றுப்பத்து என்னும் வரலாற்று இலக்கியம், நாடோடிப் பாடல்களாகப் பல நூற்றாண்டு களாக எடுத்து வரப்பட்டு பௌத்த பிக்குகளால் நூல் வடிவம் பெற்ற மகாவம்சம் என்னும் நூலுடன் ஒப்பாய்வு செய்யப்படுகிறது. இந்த ஆய்வில் இலக்கியச் சான்றுக ளுடன் புதைபொருள், கல்வெட்டுச் சான்றுகள், நாண யங்கள், பிறநாடார் குறிப்புகள் முதலியவை துணைச் சான் றுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

சங்ககாலத்தைச் சேர்ந்த எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து பத்துச் சேர மன்னர்களைப் பத்துப் புலவர்கள் பாடிய நூறு பாடல்களின் தொகையாகும். இத்தொகை இலக்கியத்தின் முதற்பத்தும் இறுதிப்பத்தும் கறையானுக்கு இரையாக இன்று எமக்கு எட்டு மன்னர்கள் பற்றிய பாடல்களே கிடைக்கின்றன. இன்று, மொத்தம் 86 பாடல்களே பதிற்றுப்பத்துப் பாடல்களாக அறியப்படு கின்றன. இவற்றில், இரண்டாம் பத்து முதலாக ஒன்பதாம் பத்து ஈறாக 80 பாடல்களும் கடவுள் வாழ்த்து ஒன்றுமாக மொத்தம் 81 பாடல்கள் இன்றைய பதிப்புகளில் கிடைக் கின்றன.

இந்த 80 பாடல்களும் அடியளவால் வேறுபட்டவை. இவை, எட்டு அடிகளைச் சிற்றெல்லையாகவும் (பதிற்றுப்பத்து 47, 56) ஐம்பத்துஏழு அடிகளைப் பேரெல்லையாகவும் (பதிற் றுப்பத்து 90) கொண்டவை. எண்பது பாடல்களும் 1696 அடிகளைக் கொண்டவை. பதிகங்கள் 104 அடிகளைக் கொண்டவை. எனவே, பதிற்றுப்பத்து மொத்தம் 1800 அடிகளைக் கொண்டது.

புறநானூறு முதலிய பிறசங்க இலக்கியங்கள் ஒரு சில சங்க கால மன்னர்கள் பற்றித் தனித் தனிப் பாடல்களைக் கொண்டவையாக ஏதோ ஒரு குறிப்பிட்ட நிகழ்வைக் கூறுவனவாகக் காணப்படுகின்றன. மாறாக, பதிற்றுப்பத்து, தொடர்ந்து அரசாண்ட 10 சேரமன்னர்களின் வீரம், வெற்றி, ஆட்சித் திறன், கொடை முதலிய பெருமைகளை எடுத்துக் கூறுவதுடன், அக்கால அரசியல் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக, அரசர்கள், அரசுகளிடையே இருந்த மணமுறை உறவுகளை, போர்கள், போர் முறைகள், கடற்படை வெற்றிகள் முதலிய பல்வேறு வரலாற்றுத் தகவல்களையும் அறியும் களஞ்சியமாக உள்ளது.

பதிற்றுப்பத்து கடைச்சங்க கால நூலாக வரலாற்று அறிஞர்கள், மற்றும் தமிழ் ஆராய்ச்சியாளர்களால் கருதப்படுகிறது. இந்நூலின் காலம் பொ.ஆ.பி. 1-ஆம் நூற்றாண்டு முதல் 3-ஆம் நூற்றாண்டு வரை எனக் கருதப்படுகிறது.

## பதிற்றுப்பத்தின் காலத்தை உறுதிப்படுத்த உதவும் முதன்மையான சான்றுகள்:

### கல்வெட்டுச் சான்றுகள் (Epigra phical Evidence)

### புகளூர் (1) : தமிழ்ப் பிராமிக் கல்வெட்டு

கரூர் அருகே உள்ள புகளூர் (ஆறுநாட்டார் மலை) தமிழ்ப் பிராமிக் கல்வெட்டில் சேர மன்னர்களான கோ ஆதன் செல்லிரும்பொறை, அவரது மகன் பெருங்கடுங்கோ, பேரன் இளங்கடுங்கோ ஆகிய மூன்று தலைமுறைச் சேரர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கல்வெட்டுப் பகுதி வருமாறு:

***'மூதா அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறை***
***கோ ஆதன் செல்லிரும்பொறை மகன்***
***கடுங்கோன் மகன் எங்***
***கடுங்கோன் எங்கோ ஆக அறுத்த கல்'***



புகளூர் கல்வெட்டு

பொருள்: யாற்றூரைச் சேர்ந்த செங்காயபன் என்னும் துறவிக்குச் சேரமன்னர் செல்லிரும்பொறை மகனான பெருங்கடுங்கோவின் மகன் இளங்கடுங்கோ இளவரசர் ஆவதை முன்னிட்டு வழங்கப்பட்ட கொடை.

கல்வெட்டுக் கூறும் முக்கிய தகவல்கள்:

- இது ஒரு சங்க காலச் சேர அரசர்கள் பற்றிக் கூறும் கல்வெட்டு.
- கோ ஆதன், செல்லிரும்பொறை, பெருங்கடுங்கோ, இளங்கடுங்கோ ஆகிய அரசர்களின் பெயர்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன.
- கோ ஆதன் செல்லிரும்பொறையின் மகன் பெருங்கடுங்கோவின் மகன் இளங்கடுங்கோ இளங்கோ ஆவதன் பொருட்டு பாளியில் அமைத்துக் கொடுத்துள்ள செய்தியைக் கூறுகின்றது.
- சேர அரசின் மூன்று தலைமுறை இதன் மூலம் தெரியவந்துள்ளது.
- இதிலுள்ள அரசர்கள் பதிற்றுப்பத்தில் 7, 8, 9-ஆம் பத்திற்குரிய தலைவர்களாக அடையாளப்படுத்தப்பெற்றுள்ளனர்.

### புகளூர் (2): தமிழ்ப் பிராமிக் கல்வெட்டு

***'யாற் றூர் செங்காயப ன்***
***(தா)வன் பின்னன் கொற்ற ன்***
***அறுபித்த அதிட்டானம்'***

பொருள்: யாற்றூரில் செங்காயபனுக்குத் தாவன் பின்னன் கொற்றன் என்பவர் அதிட்டானம் (தரைப்பகுதி) கொடுத்தது பற்றிக் கூறுகிறது.

புகளூர் கல்வெட்டுக்கள் பத்து உள.

### புகளூர் கல்வெட்டுகளின் முக்கியத்துவம்:

- சேர அரசர்களின் பரம்பரை (மூன்று தலைமுறைகள்): சங்க காலச் சேர மன்னர்களான கோ ஆதன் செல்லிரும்பொறை, அவரது மகனான பெருங்கடுங்கோ, மற்றும் பேரன் இளங்கடுங்கோ ஆகிய மூன்று தலைமுறை மன்னர்களின் பெயர்களை ஒரே கல்வெட்டில் வரிசையாகக் குறிப்பிடும் மிக முக்கிய வரலாற்றுச் சான்று இதுவாகும்.
- சங்க இலக்கியங்களின் வரலாற்று உண்மைத்தன்மை: சங்க தமிழ் இலக்கியமான பதிற்றுப்பத்து நூலில் குறிப்பிடப்படும் சேர மன்னர்களின் பெயர்களும் வரலாறும் வெறும் கற்பனையல்ல; அவை உண்மையான வரலாற்று நிகழ்வுகளே என்பதை இக்கல்வெட்டு தொல்லியல்பூர்வமாக உறுதிப்படுத்துகிறது.
- தமிழி (தமிழ்-பிராமி) எழுத்து முறை: இக் கல்வெட்டுக்கள் பண்டைய தமிழி (தமிழ்-பிராமி) எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளன. பொ.ஆ.பி. 1-ஆம் அல்லது 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இவை, தமிழ் மொழியின் எழுத்து வடிவம் மற்றும் பரிணாம வளர்ச்சியைப் புரிந்துகொள்ள பெரிதும் உதவுகின்றன.

- சமண முனிவர்களுக்கான அறக்கொடை: சேர இளவ ரசன் இளங்கடுங்கோ, சமண முனிவரான செங்காயபன் என்பவருக்குக் குகைத்தளத்தில் படுக்கைகள் அமைத்துக் கொடுத்த செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது. இதன் மூலம் சங்க காலத்தில் சேர நாட்டில் நிலவிய சமய நல்லிணக்கமும், சமண சமயத்தின் செல் வாக்கும் புலனாகிறது.
- பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சி: கல்வெட்டு களில் சமணப் படுக்கைகளை அமைத்துக் கொடுத்த செங்கற்படைத்தவர்கள், பொன் வணிகர்கள் மற்றும் பல்வேறு தொழிற்பிரிவினரின் பெயர்கள் குறிப்பிடப்பட் டுள்ளதால், அக்கால வணிகமும் பொருளாதார நிலையும் தெளிவாகின்றன.

இலக்கியச் சான்று: ஏழாம் பத்தில் கபிலர் பாடிய செல்வக்க டுங்கோ வாழியாதன் மற்றும் எட்டாம் பத்தில் அரிசில்கிழார் பாடிய தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை ஆகிய மன்னர்களின் பெயர்கள் இக்கல்வெட்டுகளின் குறிப்புக ளுடன் நேரடியாகப் பொருந்துகின்றன. இக்கல்வெட்டுக்கள் பொ.ஆ.பி. 1 - 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பதால் இந்நூலின் காலம் உறுதி செய்யப்படுகிறது.

## பிறநாட்டு வரலாற்றுச் சான்றுகள் (External Evidence):

கிரேக்க - ரோமானியக் குறிப்புகள்: தாலமி (Ptolemy) எழுதிய குறிப்புகள் மற்றும் 'பெரிப்ளஸ்' (Periplus) நூலில் சேரர்களின் துறைமுகங்களான முசிறி (Muziris), தொண்டி (Tundis), கரூர் (Karuvur) பற்றிய விவரங்கள் உள்ளன.

பதிற்றுப்பத்தில் வரும் சேரன் செங்குட்டுவன் மற்றும் பிற சேர மன்னர்களின் கடல் வாணிகம், ரோமானியர்களுடனான வணிகத் தொடர்பு போன்ற குறிப்புகள், பொ.ஆ.பி. 1 மற்றும் 2-ஆம் நூற்றாண்டின் ரோமானியக் குறிப்புகளுடன் ஒத்துப் போகின்றன.

### சமகால மன்னர்கள் சான்று:

பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தின் தலைவனான சேரன் செங் குட்டுவன், சிலப்பதிகாரத்திலும் முதன்மைச் சேர மன்னனாகச் சித்திரிக்கப்படுகிறான்.

சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்கு விழா எடுத் தபோது, இலங்கை அரசனான முதலாம் கஜபாகு (‘கடல் சூழ் இலங்கைக் கஜபாகு’) கலந் துகொண்டதாகக் கூறப்பட்டுள்ளது. வரலாற் றுப்படி முதலாம் கஜபாகுவின் காலம் பொ.ஆ.பி. 2-ஆம் நூற்றாண்டு (பொ.ஆ.பி. 114 - 136) ஆகும். இதன் மூலம் செங்குட்டுவனைப் பாடிய பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தின் காலம் பொ.ஆ.பி. 2-ஆம் நூற்றாண்டு என தெளிவாகிறது.

## மொழி மற்றும் இலக்கியச் சான்றுகள் (Linguistic Evidence):

சங்க காலத்துக்கே உரிய பழந்தமிழ் சொற்கள், அகவல் பா வடிவம், அந்தாதித் தொடை அமைப்புகள் ஆகியவை இந்நூலில் பயின்று வந்துள்ளன.

சங்ககாலக் கவிஞர்களான கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் போன்றோர் இந்நூலைப் பாடியுள் ளதால், இது சங்க காலத்தின் இடைப்பகுதியிலும் பிற்பகுதி யிலும் (பொ.ஆ.பி. 1 - 3-ஆம் நூற்றாண்டு) தொகுக்கப்பட் டிருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

மூவேந்தர் பற்றிய குறிப்பு தொல்காப்பியத்தில் (பொ.ஆ.மு. 711) இரு இடங்களில் கூறப்பட்டுள்ளது.

***‘...உறுபகை***
***வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்***
***போந்தை வேம்பே ஆரென வரூஉம்’***

தொல். புறத். நூ.05

பொருள்: போரில் அடையாளம் காணும் பொருட்டு அடை யாளப்பூ அணியும் வழக்கம் இருந்திருக்கிறது. தொல்காப்பி யத்தில் மூவேந்தர்கள் தங்களை வேறுபடுத்திக் காட்டச் சூடிய குடிப்பூக்கள் / அடையாளப் பூக்கள் பற்றிய குறிப்பு தொல்காப்பியத்தில் உள்ளது. சேரர்: பனம்பூ (போந்தை) சோழர்: ஆத்திப் பூ (ஆர்) பாண்டியர்: வேப்பம்பூ (வேம்பு) அணிந்து தம்மை அடையாளப்படுத்திக் கொண்டார்கள்.

எனவே, சேரர் தொல்காப்பியர் (பொ.ஆ.மு. 711) காலத் திலேயே அறியப்பட்டிருக்கிறார்கள்.

பதிற்றுப்பத்து, கபிலர், பரணர் முதலிய கடைச் சங்கப் புல வர்களால் பாடப்பட்டிருக்கிறது. அதியமான் என்னும் வேளிர் மன்னன் அசோகச்சக்கரவர்த்தியின் (காலம் பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டு) 12-ஆம் பாறைக் கல்வெட்டில் குறிப்பி டப்பட்டுள்ளான். எனவே, அதியமான் காலம் பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டு என்று கொள்ளப்படுகிறது. அதிய மானோடு அறியப்பட்ட புலவர்களுள் ஔவையார் ஒருவர். ஔவையாரும் கபிலரும் சமகாலத்தவர்களாக அறியப்படு கிறார்கள். எனவே கபிலர் காலம் பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டு என்று கொள்ளலாம். செல்வக்கடுங்கோ வாழி



முசிறி தொல்பொருட்கள்

யாதனைக் கபிலர் பாடிய ஏழாம் பத்து, சிறிது முன் பின்னாக, பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கவேண்டும்.

பதிற்றுப்பத்து, புறநானூறு போன்றதொரு புறத்திணை இலக்கியமாகும். பதிற்றுப்பத்து ஒரு 'வரலாற்று நூல்' என்று கொள்ளும் அளவுக்கு அனைத்துத் தகைமைகளையும் கொண்டதாக இருந்தாலும், இலக்கியத்தைப் போற்றும் தமிழர் பண்பாட்டில் 'பதிற்றுப்பத்தும்' ஒரு இலக்கியமாகக் கொண்டாடப்பட்டதில், கொள்ளப்பட்டதில் வியப்பில்லை.

பதிற்றுப்பத்தில், ஒவ்வொரு பத்தின் இறுதியிலும், அந்தந்தப் பத்தினது பாட்டுடைத் தலைவன் பற்றிய தகவல்களைத் தாங்கிய பதிகங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. இப்பதிகங்கள் பிற்காலத்தில் பாடப்பட்டுச் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இப்பதிகங்கள் ஒவ்வொன்றும் அந்தந்தப் பத்தின் பாட்டுடைத் தலைவன், அவனது அரிய சாதனைகள், அவனது பெற்றார், அவன் திருமணத் தொடர்பு கொண்ட அரச பரம்பரையினர், மனைவியர் பற்றிய தகவல்களைத் தருகின்றன. அவற்றுடன், இப்பதிகங்கள், சேர பரம்பரையினர் பிற அரச மரபினருடன் கொண்டிருந்த திருமணத் தொடர்பு காரணமாக அரச மரபினரிடையே இருந்த அரசியல் தொடர்பு பற்றிய தகவல்களையும் தருகின்றன.

பதிற்றுப்பத்து மன்னர்கள் காலம் சற்று முன் பின்னாக பொ.ஆ.மு. 5-ஆம் நூற்றாண்டு முதல் பொ.ஆ.மு. 1-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதி எனலாம்.

## பதிற்றுப்பத்து அரசர்கள்:

முதலாம் பத்தின் பாட்டுடைத் தலைவனான உதியஞ் சேரலாதன் என்னும் மன்னன் பற்றிய செய்திகள் எடுத்துவரப்பட்டன. இவன், இந்தியத் துணைக்கண்டத்தின், தென் இந்தியப் பகுதியின்,



மலையடிப்பட்டி தொல்பொருள்

வளம் மிக்கதான மேற்குக் கடலை அண்டிய பெரு நிலப்பரப்பில் வலுவானதொரு அரசை நிறுவியிருக்கிறான். அவன், பின் வந்த, அவனது வழித்தோன்றல்களுக்குப் பெருமை மிக்கதொரு பேரசை உருவாக்குவதற்கு வழிவகுத்தான். அவனது வீரம், கொடை, முதலியவை பற்றிப் பிற சங்க இலக்கியங்களில் சமகாலப் புலவர்கள் பாடியிருக்கும் செய்திகள் விரிவாக ஆராயப்பட்டன.

**இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்:**

இவனது ஆட்சிக் காலம் 58 ஆண்டுகள் என்று கூறப்படுகிறது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் வீரம், கொடை, ஆட்சித்திறன் மற்றும் கடற்படை வெற்றிகளைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் மிக விரிவாகப் பேசுகின்றன. இவனைப் பற்றிய மிக முக்கிய வரலாற்றுச் சான்று பதிற்றுப்பத்தின் 2-ஆம் பத்தாகும். பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தில் குமட்டூர்க் கண்ணனார் என்னும் புலவர் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனது சிறப்புகளைப் பாடியிருக்கிறார். நெடுஞ்சேரலாதனது சாதனைச்சிறப்புகள்:

**இமயப் படையெடுப்பும் 'இமயவரம்பன்' பட்டமும்:**

நெடுஞ்சேரலாதன் வடதிசை நோக்கிப் படையெடுத்துச் சென்று, இமயம் வரை தன் ஆதிக்கத்தை நிலைநாட்டினான் என்றும் அங்கு தமிழர்களை இகழ்ந்த வடநாட்டு மன்னர்களை வென்று, இமயமலையில் சேரர் அடையாளமான விற்பொறியைப் (வில்லை) பொறித்தான் என்றும் கூறப்படுகிறது. இமயத்தைத் தனது வடக்கு எல்லையாகக் கொண்டதால் இவன் 'இமயவரம்பன்' என அழைக்கப்பட்டான்.

சான்று (பதிற்றுப்பத்து இரண்டாம் பத்து பதிகம்):

***'ஆரியர் துவன்றிய பேர் இசை இமயம்***
***தென் அம் குமரியொடு ஆயிடை***
***மன்மீக் கூறுநர் மறம் தபக் கடந்தே'***

**கடலில் கொள்ளையடித்துவந்த கடம்பர்களை அடக்கினான்:**

தீவுகளில் வாழ்ந்த பகைவர்களான கடம்பர்களை நெடுஞ்சேரலாதன் தனது கப்பற்படையைக் கொண்டு அடக்கினான். அவர்களின் காவல் மரமான கடம்பு மரத்தை வெட்டி வீழ்த்தி அதனைக் கொண்டு தனது வெற்றி முரசினைச் செய்தான்.

சான்று (பதிற்றுப்பத்து, பாடல் 11, 17):

குமட்டூர்க் கண்ணனார் இவனது செயலை, தேவர்களுக்குச் சாதகமாக, தேவர்களுக்கும் அசுர்க்கும் நடந்த போரில் முருகன் சூரபத்மனின் மாமரத்தை அறுத்ததோடு ஒப்பிடுகிறார்.

*‘கடம்பு அறுத்து இயற்றிய வலம்படு வியன் பணை*
*ஆடுநர் பெயர்ந்து வந்து அரும்பலி’*

(பதிற்றுப்பத்து - 17)

**யவனர்களைத் தண்டித்தல்:**

அரேபிய, கிரேக்க, உரோமானிய வணிகர்களான யவனர்கள் வரம்பு மீறி நடந்தபோது, இவன் அவர்களைக் கைது செய்து தண்டித்தான். அவர்களின் கைகளைப் பின்னால் கட்டித் தலையில் நெய் ஊற்றி அவமானப்படுத்தியதோடு, அவர்களின் விலைமதிப்பற்ற அணிகலன்களையும் வைரங்களையும் கைப்பற்றித் தன் நாட்டு மக்களுக்குப் பகிர்ந்தளித்தான்.

*‘நயன் இல் வன்சொல் யவனர்ப் பிணித்து’*

பதிற்றுப்பத்து - 2-ஆம் பத்து பதிகம்

**மாந்தை நகர் ஆளுமையும் கொடைத்திறனும்:**

இவன் 'மாந்தை' என்னும் துறைமுகப் பட்டினத்தைத் தனது தலைநகராகக் கொண்டு சிறந்த ஆட்சி நடத்தினான். பகை நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட செல்வங்களை வஞ்சி மற்றும் மாந்தை நகர்களில் மக்களுக்கு வாரி வழங்கினான். தன்னைப்பாடிய புலவர் குமட்டூர்க் கண்ணனாருக்குத் தன் நாட்டின் வருவாயில் ஒரு பகுதியையும், உம்பற்காட்டுப் பகுதியில் 500 ஊர்களையும் பரிசாக அளித்தான்.

சான்று (பதிற்றுப்பத்து - உரை, பதிகம்):

**இறுதிப் போர் (புறநானூற்றுச் சான்று):**

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சோழ மன்னனான வேல் பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியோடு போர் புரிந்தான். போர்க்களத்தில் இருவரும் நேருக்கு நேர் மோதி ஒருவரையொருவர் குத்திக் கொண்டு இருவருமே மடிந்தனர். அரசர்கள் இருவருமே இறந்ததைக் கண்டு வருந்திய கழாத்தலையார் மற்றும் பரணர் ஆகிய சங்கப் புலவர்கள் இக்காட்சியைப், புறநானூறு - 62, 63-ஆம் பாடல்களில் பாடியுள்ளார்கள்.

அடுத்த இதழில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனது அரசியல் வாழ்க்கை தொடர்ந்து ஆயப்படும். பண்டைக் காலத்தில் வடநாட்டை வென்று இமயம் வரை ஆட்சிப் பரப்பை அகட்டவேண்டும் என்ற கனவு தமிழ் நாட்டு மன்னரிடமும் புலவர்களிடமும் இருந்திருக்கவேண்டும். இதன் பலனாகவே ‘இமயவரம்பன்’ என்பது போன்ற முன்னடைகள் காணப்படுகின்றன. ஆனால் அதற்கான சான்று கிடைக்கும்வரை இவ்வாறான அடைகள் கேள்விக்குரியனவாகவே கொள்ளப்படும். விளக்கம் அடுத்த மடலில்.

(தொடரும்...)



selvanayaki.s@thaiveedu.com



# போருக்குப் பிந்தைய 'தேசப்பற்று' இலங்கையில் வரலாறு தேசியப் பழமரபாக உருமாற்றப்படுதல்

ஆங்கிலத்தில் நீரா விக்கிரமசிங்க
தமிழாக்கம் ச. சத்யதேவன்

## நிகழ்காலத்தை உருவாக்குதல்



> அரசு என்பது உண்மையில்
> மாறிவரும் மக்களினதும்
> பாத்திரங்களினதும்
> ஒரு சிக்கலான தொகுப்பாகும்
>
> மைக்கேல் ஹெர்ஸ்ஃபெல்ட

வால்டர் பெஞ்சமின் (Walter Benjamin), 'தேசியப் பழமரபைப் போற்றிப் பாராட்டும்' அணுகுமுறை குறித்து எச்சரிக்கின்றார். கடந்த காலத்தை அலட்சியப்படுத்துவதை விடவும், தேசியப் பழமரபை எவ்வித விமர்சனமுமின்றி அப்படியே கொண்டாடுவதே மிகப் பெரிய 'பேரழிவு' (Catastrophe) என அவர் குறிப்பிடுகின்றார்.

இவ்வகையில் பார்க்கும்போது, 'தேசியப் பழமரபு' (Heritage) என்பது அடிப்படையில் நிகழ்காலத் தேவைகளை மையமாகக் கொண்ட ஒரு கலாசார நடைமுறையாகவும் அதிகாரத்தை நிறுவும் ஒரு கருவியாகவும் செயல்படுகிறது. அது கடந்த காலத்தை அப்படியே மறு உற்பத்தி செய்வதற்குப் பதிலாக, நிகழ்காலத்தின் அரசியல் தேவைகளை உருவாக்கி நியாயப்படுத்துவதிலேயே அதிக அக்கறை செலுத்துகிறது.

வரலாற்றுத் தளங்களின் மாறிவரும் முக்கியத்துவமும் புகழும், எந்தவொரு இடமும் இயல்பாகவே அல்லது தோற்றத்திலேயே தேசியப் பழமரபு மதிப்பைக் கொண்டிருப்பதில்லை என்பதை உணர்த்துகின்றன. எனவே, 'தேசியப் பழமரபு' என்பது தனித்தொரு புறவயமான பொருள் அல்ல லாராஜேன் ஸ்மித் (Laurajane Smith) வாதிடுவது போல, அனைத்துப் தேசியப் பழமரபுகளும் அடிப்படையில் 'அருவமானவை' (Intangible) ஆகும்.

prasadbatti@gmail.com



சமகால இலங்கையின் வரலாற்றெழுதியலில் (Historiography) பேராசிரியர் நீரா விக்கிரமசிங்க அவர்களின் ஆய்வுகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆயினும் தமிழ்ச் சூழலுக்கு அவை மிக அரிதாகவே அறிமுகமாகியுள்ளன. அவரது இக்கட்டுரையானது, போருக்குப் பிந்தைய இலங்கையில் தேசப்பற்றுமிக்க அரசொன்றினால் 'தேசியப் பழமரபாக' (Heritage) புதுப்பிக்கப்பட்ட வரலாற்றுக் கருத்தாக்கம் எவ்வாறு கட்டமைக்கப்படுகிறது என்பதையும், தொழில் முறை வரலாற்று ஆய்விற்கும் அரச ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் 'மக்கள்மயப்பட்ட தேசியப் பழமரபிற்கும்' இடையிலான வேறுபாட்டையும் அதன் அரசியல் நோக்கங்களையும் விரிவாக ஆராய்கின்றது. முறையான ஆய்வுச் சஞ்சிகைகளைத் தாண்டி நாடகம், திரைப்படம் மற்றும் ஊடகங்கள் வழியே இப்புதிய பாரம்பரியக் கருத்தாக்கம் செழித்து வளர்ந்துள்ள சூழலில், தொழில் முறை வரலாற்றாசிரியர்களின் மௌனத்தையும், இத்தகைய கருத்தியல் கட்டமைப்பின் பின்னணியில் உள்ள முதன்மை மூலங்களையும் நடைமுறைகளையும் இப் பதிவு ஆழமாகப் பகுப்பாய்வு செய்கின்றது.

இக்கட்டுரையின் மூலப் பிரதி, Economic & Political Weekly (EPW) ஆய்விதழில் (ஒக்ரோபர் 26, 2013, தொகுதி: XLVIII, இதழ்: 43) 'Producing the Present: History as Heritage in Post-War Patriotic Sri Lanka' எனும் தலைப்பில் பிரசுரமானது. முன்னதாக, இதே தலைப்பிலான ஆய்வுரை ஜூலை 2012 -இல் இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தினால் (International Centre for Ethnic Studies - ICES) வெளியிடப்பட்ட ICES Research Papers தொடரின் 2-ஆம் இலக்க ஆய்வறிக்கையாகவும் (Research Paper No: 2) வெளிவந்தது. இக்கட்டுரையின் ஆசிரியர் பேராசிரியை நீரா விக்கிரமசிங்க அவர்களுக்கும், மூலப் பிரதியை வெளியிட்ட நிறுவனங்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.

ஒரு குறிப்பிட்ட இடம் அல்லது பொருள், மதிப்புமிக்க 'தேசியப் பழமரபாக' மாற்றப்படுவது என்பது, அதனைச் சுற்றி நிகழ்காலத்தில் முன்னெடுக்கப்படும் பண்பாட்டுச் செயல்பாடுகள் மற்றும் அரசியல் நகர்வுகள் மூலமாகவே சாத்தியமாகின்றது. இத்தகைய சமகாலப் பண்பாட்டுச் செயல்முறைகளின் வாயிலாகவே, குறிப்பிட்ட பொருள்களும் இடங்களும் புதிய அர்த்தங்களையும் குறியீட்டு மதிப்புகளையும் பெறுகின்றன. போருக்குப் பிந்தைய சமகால இலங்கை அரசியல்-பண்பாட்டுச் சூழலில் நாம் அவதானிப்பது போல, ஒரு வரலாற்றுத் தளத்தைத் தேர்ந்தெடுத்து அதற்கு அதிக முக்கியத்துவமும் முதன்மையும் அளிப்பது என்பது, வெறும் வரலாற்றுப் பேணல் சார்ந்த செயலன்று. மாறாக, அது ஆளும் வர்க்கத்தின் அதிகார அபிலாஷைகளையும், பேரினவாத அரசியல் நிகழ்ச்சி நிரலையும் துல்லியமாகப் பிரதிபலிக்கும் ஒரு கருத்தியல் நகர்வாகும்.

அப்படியெனில், 'நாம் தேசியப் பழமரபைப் பற்றிச் சிந்திக்கும், பேசும் மற்றும் எழுதும் முறைகளை வடிவமைப்பதில் முதன்மைப் பங்காற்றும்' இத்தகைய அங்கீகரிக்கப்பட்ட தேசியப் பழமரபுச் சொல்லாடல்கள் எவை?

இக்கட்டுரை, போருக்குப் பிந்தைய இலங்கையின் சூழலில் இச் சொல்லாடல்கள் எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றன என்பதையும் பொதுமக்கள், துறை சார் நிபுணர்கள் மற்றும் அரச அதிகார அமைப்புகள் தங்களது குறிப்பிட்ட நலன்களையும் நடைமுறைகளையும் நியாயப்படுத்துவதற்காக இத்தேசியப் பழமரபை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதையும் விரிவாக ஆராய்கிறது.

## வரலாறு vs. தேசியப் பழமரபு: கடந்த காலத்தை அணுகும் இரு வேறு முறைகள்:

தெளிவுபடுத்தும் நோக்கில் - இவ்விரு அணுகுமுறைகளும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டவை என்பதை ஏற்றுக்கொண்ட போதிலும் - கடந்த காலத்தை அணுகுவதற்கு குறைந்தது இரண்டு முக்கியமான வழிமுறைகள் உள்ளன என வாதிடலாம்: ஒன்று வரலாறு (History), மற்றொன்று தேசியப் பழமரபு (Heritage). இவ்விரண்டும் சில பொதுவான அம்சங்களைப் பகிர்ந்துகொண்டாலும், அவற்றின் அடிப்படை நோக்கங்களிலும் செயல்முறைகளிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன.

வரலாற்றை, கடந்த காலத்தின் தூய்மையான அல்லது அறுதியான உண்மைகளைக் கண்டறியும் முற்றிலும் நடுநிலையானதொரு ஆய்வு முறையாக நாம் இலட்சியப்படுத்த முடியாது. ஏனெனில், கடந்த காலத்தின் பதிவுகள் காலப்போக்கில் வடிகட்டப்பட்டு, சிதைவுற்ற தடயங்களாகவே நமக்குக் கிடைக்கின்றன. எழுத்தாளரின் குரல், பார்வை அல்லது சார்புநிலையே அற்ற முற்றிலும் 'புறவயமான வரலாறு' (Objective History) என்று ஒன்று சாத்தியமில்லை என்பதை



சமகால வரலாற்றியல் (Historiography) பரவலாக ஏற்றுக் கொள்கிறது. இருப்பினும், தாங்கள் முழுமையான புறவய நிலையை அடைய முடியாது என்பதை உணர்ந்திருக்கும் பெரும்பாலான வரலாற்றாசிரியர்கள், குறைந்தபட்சம் தங்களது ஆய்வுமுறை சார்ந்த நடுநிலைத்தன்மையை (Methodological Neutrality) பேண முயல்கின்றனர்.

எனினும், வரலாற்றாசிரியர்களுக்கும் 'தேசியப் பழமரபு உருவாக்குநர்களுக்கும்' (Heritage Producers) இடையிலான அடிப்படை வேறுபாடு, கடந்த காலத்தை அவர்கள் அணுகும் நோக்கிலும் செயல்முறையிலுமே வெளிப்படுகிறது. வரலாற்றியல் என்பது கடந்த காலத்தை விமர்சன ரீதியாக அணுகி, சான்றுகளின் வழியாக உண்மையை நெருங்க முயல்கிறது. அது முழுமையற்றதாக இருந்தாலும், வெறும் குருட்டு நம்பிக்கை (Faith) அல்லது தொன்மக் கற்பனைகள் மீது மாத்திரம் தங்கியிருப்பதில்லை. பொதுவாக, ஒரு வரலாற்றாசிரியர் தனது துறைசார் ஆய்வுச் சமூகத்தின் நெறிமுறைகளைப் பின்பற்றி, விவாதத்திற்கும் ஆதாரப்பூர்வமான மறுபரிசீலனைக்கும் திறந்ததொரு கடந்த காலத்தை உருவாக்க முயல்கிறார்.

இருப்பினும், தீபேஷ் சக்ரபர்த்தி சுட்டிக்காட்டுவது போல, சர்வதேசக் கல்விசார் உலகிலும் இத்தகைய அறிவு உற்பத்தி தொடர்பான அதிகாரச் சமச்சீரற்ற தன்மைகள் (Knowledge Asymmetries) இப்போதும் தொடர்ந்து நிலவவே செய்கின்றன.

இலங்கையின் உள்ளூர் கல்விசார் சூழலிலும் இதேபோன்ற அறிவுசார் சமச்சீரற்ற நிலைகள் பரவலாகக் காணப்படுகின்றன. குறிப்பாக, வட இலங்கையில் உருவாகும் வரலாற்றுத் தரவுகளும் ஆய்வுகளும் தெற்கைச் சேர்ந்த ஆய்வாளர்களால் எளிதில் அணுகப்பட முடியாததொரு சூழல் இன்றும் நிலவுகிறது. அதேவேளை, சர்வதேசக் கல்வி இதழ்களும் வெளியீட்டகங்களும் இலங்கையைச் சேர்ந்த ஆய்வாளர்களிடம் மேற்கத்திய அறிஞர்களின் படைப்புகளை முதன்மை மேற்கோள்களாகப் (Citations) பயன்படுத்துமாறு எதிர்பார்க்கின்றன; ஆனால் மேற்கத்திய ஆய்வாளர்களிடம் இருந்து உள்ளூர் ஆய்வுகளை அவ்வாறே மேற்கோள் காட்டுமாறு கோரப்படுவதில்லை. இத்தகைய நடைமுறைகள், உலகளாவிய அறிவு உற்பத்தியில் நிலவும் அதிகாரப் படிநிலைகளின் நேரடி வெளிப்பாடுகளாகவே பார்க்கப்படுகின்றன.

இன்று, இலங்கையின் சமூக-அரசியல் நடைமுறைகளில் கடந்த காலத்தைப் பற்றிய 'ஏக்கம்' (Nostalgia), முன்னெப்போதையும் விட ஆழமாக ஊடுருவி வருகின்றது. தொன்ம கட்டமைப்பிலும், வரலாற்று மயமாக்கல் (Historicization) செயல்முறைகளிலும் காணப்படும் 'தேசியப் பழமரபை நோக்கித் திரும்புதல்' என்னும் போக்கு, உள்நாட்டுப் போருக்குப் பிந்தைய தசாப்தத்தில் திடீரென உருவான ஒன்றல்ல. மாறாக, பிரிவினைவாத சக்திகளை இராணுவ ரீதியாக வெற்றிகொண்ட 'சிங்கள-பௌத்த' அரசின் புதிய அரசியல்-கருத்தியல் சூழலில் (Ideological Context), இது தீவிரமான அரச அங்கீகாரத்தைப் பெற்று இயங்கும் ஒரு செயல்முறையாகும்.

இக்கட்டுரை, இத்தகைய 'மேலாதிக்கப் பாரம்பரிய சொல்லாடல்' (Authorized / Dominant Heritage Discourse) எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது என்பதையும், அதில் பங்கேற்கும் பல்வேறு தரப்பினரின் பங்களிப்புகளையும் சுருக்கமாக வரைபடமாக்குகிறது. இறுதிப் பகுதியில், இன்று தீவிர அரசியல் போராட்டக் களமாக மாறியுள்ள 'பாரம்பரிய நடைமுறைகள்' குறித்து ஆராயப்படுவதுடன், இப்பாரம்பரியச் சொல்லாடலின் தத்துவார்த்த ஆதிக்கத்தை மீறிச் செல்லக்கூடிய சாத்தியமான மாற்று அணுகுமுறைகள் குறித்த சில முக்கிய பரிந்துரைகளுடனும் இக்கட்டுரை நிறைவடைகிறது.

## பாரம்பரியத்திற்குத் திரும்புதல் (The Return to Heritage):

1987-ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 13-ஆவது திருத்தத்தின் மூலம், இலங்கையின் பல்லினக் கலாச்சார சமூகக் கட்டமைப்பு (Multicultural Society) சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், போருக்குப் பிந்தைய புதிய 'தேசபக்தி' அரசியல் சூழலில், 'இனி நாட்டில் சிறுபான்மையினர் என்று எவரும் இல்லை' என அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவிக்கிறார். அவரது இவ்வுரையைப் பகுப்பாய்வு செய்தவர்கள், அதில் 'குடியியல் தேசம்' (Civic Nation) என்ற கருத்தாக்கத்தின் அம்சங்கள் பொதிந்திருப்பதாக விளக்கமளித்ததுடன், குடிமக்கள் அனைவரும் இனரீதியான பாகுபாடுகளுக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள் என்பதையும், அனைத்து மத மற்றும் இன அடையாளங்களும் சமமாக மதிக்கப்படுவதையுமே இக்கோட்பாடு வலியுறுத்துவதாகவும் சுட்டிக்காட்டினர்.

எனினும், 'குடியியல் தேசம்' குறித்த இக்கருத்தாக்கம் கோட்பாட்டு ரீதியில் முற்போக்கானதாகத் தோன்றினாலும், நடைமுறை அரசியல் யதார்த்தத்தில் அதுவொரு இலட்சிய வாதக் கற்பனையாகவே முடிகிறது. பார்த்தா சட்டர்ஜி (சுட்டிக்காட்டுவது போல, 'ஒரே மக்களை' (One People) கட்டமைக்க முயலும் எந்தவொரு தேசியவாதத் திட்டமும், தவிர்க்க முடியாத வகையில் சில குறிப்பிட்ட சமூகப் பிரிவினரை ஓரங்கட்டும் (Marginalization) செயல்முறையையும் தன்னுள் உள்ளடக்கியதாகவே அமைகிறது.

மேலும், உலகளவில் 'பண்பட்ட தேசம்' என்ற கருத்தாக்கத்திற்கான முன்னுதாரணங்களாகக் கருதப்படும் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகள்கூட, தங்களது தாராளவாதக் கொள்கைகளை ஒரு குறிப்பிட்ட பெரும்பான்மைப் பண்பாட்டு அடையாளத்தோடு இணைத்தே கட்டமைத்துள்ளன. இந்த நிலையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உரையில் வெளிப்படும் 'புதிய தேசபக்தி' (New Patriotism) என்பது, உலகளாவிய மனித விழுமியங்களோடு தொடர்புடைய மற்றும் குறுகிய இன தேசியவாதத்தை மீறிச் செல்லும் 'அரசியலமைப்பு தேசபக்தி' (Constitutional Patriotism) என்ற கோட்பாட்டிலிருந்து முற்றிலும் விலகி நிற்கிறது. அதேபோல், பொதுக் களம் (Public Sphere) ஒருபோதும் முற்றிலும் நடுநிலையானதாக இருக்க முடியாது என்பதை ஏற்றுக்கொள்ளும் தாராளவாதக் குடிமுறைத் தேசபக்தியுடனும் இதற்கு அடிப்படையான தொடர்பேதும் இருப்பதில்லை.

மாறாக, இப்பார்வை தேசத்தையும் அரசையும் பலவந்தமாக ஒன்றிணைக்கும் ஓர் அரசியல் சொல்லாடலாகவே இயங்கு

கிறது. இது, சிங்கள மக்களின் வரலாற்றையும் அவர்களது 'தோற்றத் தொன்மங்கள்' (Foundation Myths) குறித்த ஒரு குறிப்பிட்ட அரசியல் வாசிப்பையும் அடிப்படையாகக் கொண்டே நாட்டின் மீதான பற்றை உருவாக்க முயல்கிறது. இத்தகைய மேலாதிக்க அரசியல் கட்டமைப்பில், முன்னர் 'சிறுபான்மையினர்' என அடையாளப்படுத்தப்பட்ட சமூகக் குழுக்கள், சமத்துவ அடிப்படையிலான பொதுவான அரசியல் கலாச்சாரத்தின் பங்காற்றுக் கூறுகளாக அல்லாமல், அதன் விளிம்புகளில் இயங்கும் வெறும் 'நிழல்களாகவே' (Shadows) நிலைநிறுத்தப்படுகின்றனர்.

## 20–ஆம் நூற்றாண்டு vs. 21–ஆம் நூற்றாண்டு: பாரம்பரிய வெறி:

போருக்குப் பிந்தைய இலங்கையில் உருவாகியுள்ள 'பாரம்பரியத்தின் மீதான வெறி' (Obsession with Heritage), 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சில செல்வாக்கு மிக்க சிங்களப் புலமையாளர்களால் முன்னெடுக்கப்பட்ட வரலாற்று மறுகட்டமைப்புச் செயல்முறைகளுடன் குறிப்பிடத்தக்க ஒற்றுமைகளைக் கொண்டுள்ளது. அக்கால அறிவுசார் வட்டாரம், பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக்கு எதிரான எதிர்காலனித்துவ (Anti-colonial) அரசியல் சூழலில் இயங்கிய போதிலும், அதேவேளை நாட்டின் உருவெடுத்துவந்த முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்துடனும் நெருங்கிய தொடர்பைப் பேணியது.

கடந்த சில தசாப்தங்களாக இலங்கையின் பொதுக் களத்தில் காணப்படும் முக்கியமான மாற்றங்களில் ஒன்று, 'பாரம்பரியத்திற்குத் திரும்புதல்' (Return to Heritage) என விவரிக்கக்கூடிய கலாசார-அரசியல் போக்காகும். குறிப்பிடத்தக்க வகையில், இத்தகைய திரும்புதல் என்பது தொழில்முறை வரலாற்றியல் (Professional History) மரபின் வீழ்ச்சியுடன் இணைந்தே நிகழ்கிறது. இலங்கையின் முக்கிய வரலாற்றாசிரியர்களில் ஒருவரான ஜி.சி. மெண்டிஸ் (G.C. Mendis) செயல்பட்ட காலகட்டத்தில், வரலாறு என்பது பாடசாலைப் பாடநூல்கள் மற்றும் முறையான மொழிபெயர்ப்புகள் மூலமாகச் சமூகத்தில் தர்க்கரீதியான, அறிவுசார் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் சமகாலத்தில், அந்த விமர்சன வரலாற்றியல் மரபு குறிப்பிடத்தக்க அளவில் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது.

21-ஆம் நூற்றாண்டின் உலகமயமாக்கல் (Globalization) மற்றும் அதனுடன் தொடர்புடைய 'வெளி எதிரிகள்' குறித்த அச்ச உணர்வு, 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் காலனித்துவ ஆட்சியும் பன்னாட்டுமயமாக்கலும் உருவாக்கிய கலாச்சாரப் பாதுகாப்பின்மையின் (Cultural Insecurity) ஒரு புதிய வடிவமாகவே இன்று வெளிப்படுகிறது. இதன் விளைவாக, சுதந்திரத்திற்குப் பிந்தைய ஆரம்பகாலங்களில் காணப்பட்ட 'உலகளாவிய வரலாற்றுப் பார்வை' சுருங்கி, அதன் இடத்தை பண்பாட்டு அடையாள அரசியலும் தேசியப் பழமரபு மையச் சொல்லாடல்களும் முழுமையாகக் கைப்பற்றியுள்ளன.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு 'தொன்மங்கள்' (Myths) எத்தகைய அரசியல் பண்பை வகித்தனவோ, அதே அரசியல் செயல்பாட்டையே இன்று 'தேசியப் பழமரபு' மேற்கொள்கிறது. அதாவது, அது தன்னை அரசியல் சார்பற்றதாகவும் (Apolitical), சமூகத்தின் இயல்பான ஒருமித்த கருத்தின் (Consensus) வெளிப்பாடாகவும் முன்நிறுத்தி, கடந்த காலத்தைப் பற்றிய எவ்விதக் கேள்விகளுமற்ற, முரண்பாடுகளற்ற ஒரு சிக்கலற்ற மேலோட்டமான வாசிப்பை (Problem-free Reading of the Past) உற்பத்தி செய்கிறது.

இலங்கையில் 'தேசியப் பழமரபு' என்பது அரசு அங்கீகரித்த முதன்மைச் சொல்லாடலாக முன்னிலைப்படுத்தப்பட்ட மற்றொரு முக்கியமான வரலாற்றுக் கட்டம், 1977-ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி (UNP) அரசால் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதற்குப் பிந்தைய காலப்பகுதியாகும். அக்காலத்தில், சந்தைமய முதலாளித்துவ மேம்பாட்டை 'நாட்டுப்பற்று' மற்றும் 'தேசியப் பழமரபுக் குறியீடுகள்' (Heritage Symbols) வழியாகச் சட்ட பூர்வமாக்கும் (Legitimize) ஓர் அரசியல் உத்தியாகவே தேசியப் பழமரபு பயன்படுத்தப்பட்டது.

## தொன்மம், தேசியப் பழமரபு மற்றும் வரலாறு ஆகியவற்றின் தொடக்கம்:

20-ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்தங்களில், காலனித்துவ இலங்கையில் கடந்த காலத்தை விளக்கும் இரு வேறுபட்ட அணுகுமுறைகள் இணையான பாதைகளில் இயங்கின; சில குறிப்பிட்ட தருணங்களில் அவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தும் காணப்பட்டன. இவ்விரு அணுகுமுறைகளையும் 'வரலாற்றுப் பாதை' (Historical Path) மற்றும் 'தேசியப் பழமரபுப் பாதை' (Heritage Path) என வகைப்படுத்தலாம். இவ்விரு அணுகுமுறைகளும் தாங்கள் கடந்த காலத்தின் 'உண்மைகளை' வெளிப்படுத்துவதாகக உரிமை கோரிய போதிலும், அவை பயன்படுத்தும் அறிவியல் மற்றும் கருத்தியல் உத்திகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாகக் காணப்பட்டன.

**வரலாற்றுப் பாதை:** தொழில்முறை வரலாற்றாசிரியர்களால் முன்னெடுக்கப்படும் இவ்வணுகுமுறை, ஆய்வுமுறை சார்ந்த வெளிப்படைத்தன்மையையும், வரலாற்றுத் துறையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிமுறைகளையும் (Canons of the Discipline) அடிப்படையாகக் கொண்டுள்ளது. வரலாற்றுச் சான்றுகளின் விமர்சனப் பகுப்பாய்வு வழியாக எப்போதுமே மறுபரிசீலனை செய்யக்கூடிய ஒரு 'புறவயமான கடந்த காலத்தை' (Objective Past) கட்டமைப்பதே இதன் முதன்மை நோக்கமாகும்.

**தேசியப் பழமரபுப் பாதை:** இவ்வணுகுமுறையும் கடந்த காலத்தின் உண்மைத் தன்மையையே முன்வைத்த போதிலும், அதன் வாதங்கள் தொழில்முறை வரலாற்றியலில் ஏற்றுக் கொள்ளப்படும் ஆதாரவழி ஆய்வு முறைகளால் (Empirical Evidence) உறுதிப்படுத்தப்பட்டிருப்பதில்லை. மாறாக, அது பண்பாட்டு நினைவுகள், தொன்மவியல் மற்றும் அடையாள அரசியல் ஆகியவற்றின் அடிப்படையிலேயே இயங்குகின்றது.

இலங்கையில் இத்தகைய தேசியப் பழமரபுச் சொல்லாடலின் தோற்றத்தை, 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் உருவெடுத்த எதிர்காலனித்துவ அரசியலோடும் தேசிய உணர்வின்

எழுச்சியோடும் தொடர்புபடுத்திப் புரிந்துகொள்ள முடியும். இக்காலகட்டத்தில், வரலாற்றின் 'நம்பகத்தன்மை' (Authenticity) குறித்த கருத்தாக்கம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

குறிப்பாக, சிங்கள-பௌத்தப் புலமையாளர்களிடையே, அனுராதபுரம் மற்றும் பொலநறுவை ஆகியவற்றை மையமாகக் கொண்ட 'ராஜரட்டையின் நீர்ப்பாசன நாகரிகம்' சார்ந்த ஒரு புனிதப்படுத்தப்பட்ட கடந்த காலக் கற்பனை உருவாக்கப்பட்டது. இந்த மேலாதிக்க வரலாற்றுப் பார்வை, பின்னர் கண்டி இராச்சியத்தின் குறியீடுகள் மற்றும் பொருள்சார் கலாச்சார (Material Culture) அடையாளங்களோடும் இணைக்கப்பட்டது. எனினும், கண்டிப் பாரம்பரியம் முழுமையாக மகாவம்ச மையச் சொல்லாடலுக்குள் உறிஞ்சப்பட்டுவிடாமல், மக்களின் அன்றாட வாழ்வியல் மற்றும் கலாச்சார நடைமுறைகளில் ஒரு தனித்த அடையாளத்துடன் தொடர்ந்தும் நிலைத்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

காலனித்துவக் காலத்தில் நிலவியதைப் போலவே, சமகால இலங்கையிலும் தேசியப் பழமரபின் பல்வேறு பதிவேடுகள் (Registers of Heritage) வெவ்வேறு சமூக மற்றும் அரசியல் பணிகளை நிறைவேற்றி வருகின்றன. வரலாற்றின் 'நம்பகத் தன்மை' பற்றிய கருத்தாக்கங்கள், தனிநபர்களின் சமூக, மத, பிராந்திய மற்றும் வர்க்க அடையாளங்களின் அடிப்படையில் மாறுபடுகின்றன:

- **யாழ்ப்பாணத் தமிழர்கள்:** வட இலங்கையின் தமிழர்கள், தங்களது தேசியப் பழமரபு உணர்வைத் தென்னிந்தியாவுடனான வரலாறு மற்றும் பண்பாட்டு உறவுகளின் அடிப்படையில் கட்டமைக்கின்றனர். இந்த வரலாற்றுணர்வு, சிங்கள-பௌத்த அடையாள அரசியலின் மையமாக விளங்கும் மகாவம்ச வரலாற்றுப் பார்வையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். இருப்பினும், தமிழர் சமூகத்திலும் ஒரு தனித்துவமான வரலாற்றுணர்வு (Historical Consciousness) வலுவாக நிலவுகின்றது.
- **முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள்:** இலங்கையின் முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சமூகங்களின் 'தூய்மையான கடந்தகால' உணர்வு, அவர்கள் வாழும் இத்தீவின் புவியியல் எல்லைகளைத் தாண்டி, தங்களது மதங்களின் உலகளாவிய அல்லது பன்னாட்டு வரலாற்று மரபுகளோடு (Transnational Religious Histories) பிணைக்கப்பட்டுள்ளது.

20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்குள், 'பிரம்மாண்டமானதும் செழுமையானதுமான சிங்களக் கடந்த காலம்' குறித்த கற்பனை, எழுத்தறிவு குறைந்த சாமானிய சமூகப் பிரிவுகளுக்குள்ளும் பரவலாக ஊடுருவியது. இதன் மூலம், வரலாறு, தொன்மம், தேசியப் பழமரபு ஆகியவை ஒன்றோடொன்று கலந்ததொரு அரசியல்-கலாச்சார நினைவகமாக மாற்றமடைந்தன.

## நவீன வரலாறுகளின் தோற்றம் (The Emergence of Modern Histories):

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், கடந்த காலத்தை அணுகுவதற்குப் 'தேசியப் பழமரபு வழிமுறை' (Heritage Path) பெருமளவு செல்வாக்குச் செலுத்தியது. ஏனெனில், இன்று நாம் அறிவியல் ஆய்வுத் துறையாகப் புரிந்து கொள்ளும் 'வரலாறு' (History) என்பது, அப்போது அதன் ஆரம்பக் கட்டத்திலேயே காணப்படுகிறது.

19-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலும் பிற்பகுதியிலும், முன்னாள் காலனித்துவ செயலாளரான சேர் ஜேம்ஸ் எமர்சன் ரெனன்ட்டின் (Sir James Emerson Tennent 1859) படைப்புகள் பெரும் ஆதிக்கம் செலுத்தின. அவரது 'Ceylon' நூலின் முதல் தொகுதி, இத் தீவின் ஆரம்பக் காலம் முதல் பிரித்தானிய ஆட்சி நிலைநிறுத்தப்பட்டது வரையிலான ஒரு முழுமையான கதையாடலை வழங்குகின்றது. இதற்கு மாறாக, வில்லியம் நைட்டனின் (William Knighton 1845) 'The History of Ceylon' என்ற நூல் மிகக் குறைவாகவே அறியப்பட்ட ஒன்றாகக் காணப்பட்டது. நைட்டன் உள்ளூர் வரலாற்று நூல்களில் விவரிக்கப்பட்ட நிகழ்வுகளை அப்படியே உண்மை என ஏற்றுக்கொண்ட வேளையில், ரெனன்ட் 'மகாவம்சம்' போன்ற வரலாற்றுப் பதிவுகளில் சித்தரிக்கப்பட்டிருந்த சில விபரங்கள் குறித்து மிகுந்த ஐயம் (Scepticism) கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

ரெனன்ட் மற்றும் நைட்டன் ஆகியோரின் இந்த ஆய்வு மரபைப் பின்பற்றி, ஆங்கிலக் கல்வி கற்ற பல இலங்கையர்களும் தீவின் வரலாறுகளை எழுதத் தொடங்கினர்; இவை பெரும்பாலும் பிரித்தானிய வரலாற்றாசிரியர்களின் சில குறிப்பிட்ட வாசிப்புகளுக்குச் சவாலாகவே அமைகின்றன. இவ் வரிசையில், ஜேம்ஸ் டி அல்விஸின் (James d' Alwis 1823-78) 'சிங்கள வரலாறு' ஒரு தனிப் புத்தகமாக முழுமையாக வெளியிடப்படாமல் செய்தித்தாள்களில் தொடராக மட்டுமே வெளிவந்த போதிலும், அவரே இலங்கையின் முதலாவது உள்நாட்டு நவீன வரலாற்றாசிரியராகக் கருதப்படத்தக்கவராக விளங்குகின்றார்.

சிங்கள மொழியில், தொடந்துவே பியரத்தன (Dodanduwa Piyaratne) தேரரின் 1869-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூலே, துறவறம் சாராத பௌத்தப் பள்ளிகளுக்காக வெளியிடப்பட்ட முதல் சிங்களப் பாடப்புத்தகமாகக் கருதப்படுகிறது. அதன் உள்ளடக்கத்தை ஆராயும்போது: எழுத்துகளைக் கற்பிக்கும் அடிப்படைப் பாடங்களைத் தொடர்ந்து, பௌத்தத்தின் நெறிமுறை மற்றும் ஆன்மீகப் பரிமாணங்களைக் கையாளும் வழிகாட்டல்களே அதில் அதிகம் சேர்க்கப்பட்டுள்ளன. ஒரு 'படைப்பாளர் கடவுள்' (Creator God) என்ற கருத்தாக்கத்திற்கு எதிராகப் பௌத்தத்தை நிலைநிறுத்துவது, பௌத்தர்கள் அல்லாதவர்களை விமர்சிப்பது, தார்மீக ஆலோசனைகளை வழங்குவது மற்றும் 'மித்யாத்ருஷ்டி' (False Beliefs / தவறான நம்பிக்கைகள்) என்ற அச்சுறுத்தல்களிலிருந்து பௌத்தத்தைப் பாதுகாக்க மக்களை வலியுறுத்துவதுமே அதன் முதன்மை நோக்கமாக அமைகிறது.

சுவாரசியமாக, இந்த நூலில் வரலாற்று நபர்கள், வரலாற்று நிகழ்வுகள் அல்லது காலப் பிரிவுகள் பற்றிய குறிப்புகள் எதுவும் காணப்படுவதில்லை; அங்கு மாணவர்கள் வரலாற்று அரசர்களை விட புத்தரைப் போற்றிப் பின்பற்றவே பெரிதும் தூண்டப்படுகின்றனர்.

## தொழில்முறை வரலாற்றின் எழுச்சி (Rise of Professional History):

20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், இலங்கை வரலாற்று எழுதியல் என்பது லூயிஸ் எட்மண்ட் பிளேஸின் (Louis Edmund Blazé) 'A History of Ceylon for Schools', டொனால்ட் ஒபேசேகர (Donald Obeyesekere) போன்றோரின் பாடசாலைப் பாடநூல்களாகவும், சேர் பொன்னம்பலம் அருணாசலம் (Ponnambalam Arunachalam) போன்ற தொழில்முறை அல்லாத வரலாற்றாசிரியர்களின் தனிப்பட்ட ஆய்வுப் படைப்புகளாகவுமே முதன்மையாகக் காணப்பட்டது.

இருப்பினும், 1930-களில், தொழில் ரீதியாகப் பயிற்றுவிக்கப்பட்ட புதிய தலைமுறை வரலாற்றாசிரியர்கள் உருவெடுத்தனர். அவர்களுள் போல் ஈ. பிரீஸ் (Paul E. Pieris), அருட்தந்தை எஸ்.ஜி. பெரேரா (Fr. S.G. Perera), எச்.டபிள்யூ. கொட்ரிங்டன் (H.W. Codrington) மற்றும் ஜி.சி. மெண்டிஸ் (G.C. Mendis) ஆகியோர் மிக முக்கியமானவர்கள் ஆவர். இவர்களுள் ஜி.சி. மெண்டிஸ், இலங்கையில் 'வரலாற்றை' ஒரு முறையான கல்வித்துறையாக நிறுவிய முதன்மை அறிஞராகக் கருதப்படுகின்றார்.

மெண்டிஸின் வரலாற்று ஆய்வு முறையானது, பண்டைய காலவரிசை ஏடுகளின் (Chronicles) கதைகளை மறுக்க முடியாத வரலாற்று உண்மைகளாக அப்படியே ஏற்றுக் கொண்ட அநகாரிக தர்மபாலவினதும் அவரைப் பின்பற்றிய வர்களினதும் 'தொன்ம வரலாற்று' (Mythological History) அணுகுமுறையிலிருந்து தெளிவாக வேறுபட்டிருந்தது. மகாவம்சத்தின் நம்பகத்தன்மையை ஒரு புறவயமான நோக்கில் விமர்சிக்கும் அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

'பொ.ஆ.மு. முதல் நூற்றாண்டிலிருந்து ஒட்டுமொத்தமாக இது நம்பகமானதாக இருந்தபோதிலும், நவீன தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஓர் அறிவியல் பூர்வமான வரலாற்றை எழுதுவதற்கு இதில் மிகக் குறைந்த விவரங்களே உள்ளன'

1941 - 42 காலப்பகுதியில், கொல்வின் ஆர். டி சில்வாவின் 'Ceylon under the British Occupation 1795-1833' என்னும் நூல் வெளியானது. இதன் மூலம், இலங்கையின் வரலாற்றுத் துறையானது சான்றுகளைச் சரிபார்க்கும் மேற்கத்தியக் கல்வி மரபின் விதிகளில் உறுதியாகக் கால்பதித்தது. இந்தத் தருணத்திலிருந்து, முறையான வரலாற்றுச் சான்றுகளின்றி வெறும் பாரம்பரியம் மற்றும் பௌராணிகக் கதைகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட வரலாறுகள், நம்பகத்தன்மை குறைந்த வெறும் புனைவுக்களமாகவே தரம் குறைக்கப்படுகின்றன.

## யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் திருப்பம்: திராவிடக் கருத்தாடல்:

இதே 1930-களில் யாழ்ப்பாணச் சூழலிலும் வரலாறு எழுதுவதில் ஒரு தீர்க்கமான மாற்றம் ஏற்பட்டது. புதிய கல்வெட்டு ஆதாரங்கள் (Epigraphical Sources) மற்றும் தென்னிந்திய வரலாற்று மூலங்களின் முறையான பகுப்பாய்வு காரணமாக, அதுவரை 'யாழ்ப்பாண வைபவ மாலை' போன்ற தொன்மக் கதைகளை மட்டுமே முதன்மையாக நம்பியிருந்த தமிழ் வரலாற்று எழுதுகையின் ஒட்டுமொத்தத் தன்மை மாற்றமடைந்தது.

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து, 'ஆரிய' மற்றும் 'திராவிட' ஆகிய மொழியியல் கலைச்சொற்கள், இந்தியாவில் முறையே இந்தோ-ஐரோப்பிய அல்லது திராவிடக் குடும்ப மொழிகளைப் பேசும் மக்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால் இலங்கையில், தமிழ் எழுத்தாளர்கள் இதில் ஒரு குறிப்பிட்ட கருத்தியல் உத்தியைக் கையாண்டனர். சிங்களப் புலமையாளர்கள் தங்களை ஓர் 'ஆரிய இனம்' என்று கூறிக்கொண்ட மேலாதிக்க வாதங்களை எதிர்கொண்டு மறுப்பதற்காக, தமிழர்கள் 'திராவிட' என்ற சொல்லைத் தீவிரமாகப் பயன்படுத்தத் தொடங்கினர். இச்சொல் ஒரே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட புவியியல் இடத்தையும் (தென்னிந்தியா), மொழியையும், ஓர் இன அடையாளத்தையும் குறிக்கும் ஒன்றாக மாற்றமடைந்தது.

பண்டைய காலங்களிலிருந்தே இலங்கையில் திராவிடர்களும் தமிழர்களும் தொடர்ச்சியாக வாழ்ந்து வந்தனர் என்பதை மிக வலுவாக நிறுவுவதற்காகப் பல்வேறு வரலாற்று மற்றும் தொல்லியல் ஆதாரங்கள் திரட்டப்பட்டன. வரலாற்று அறிஞர் ஹெல்மன் ராஜநாயகம் சுட்டிக்காட்டுவது போல, முதலியார் செ. இராசநாயகத்தின் (C. Rasanayagam) 'யாழ்ப்பாணச் சரித்திரம்' (Ancient Jaffna) என்ற நூல் பின்வருமாறு வாதிடுகின்றது:

'சிங்களவர்கள் என்பவர்கள் அடிப்படையில் பழங்குடி மக்கள், ஆரியர்கள் மற்றும் திராவிடர்களின் ஒரு கலவையே ஆவர்; எனவே தமிழர்கள் சிங்களவர்களுடன் மிக நெருங்கிய இரத்தத் தொடர்புடையவர்கள். அத்துடன், யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் தொல்பழங்காலம் தொட்டே வரலாற்று ரீதியாக வாழ்ந்து வருகின்றனர்'

## அபிவிருத்திச் சொல்லாடல்: ஏக்கத்திலிருந்து தேசியப் பழமரபிற்கு (From Nostalgia to Heritage):

1930 களில் டொனமூர் அரசியலமைப்பின் கீழ் இலங்கைக்கு ஒரு குறிப்பிட்ட அளவு 'சுயாட்சி' வழங்கப்பட்டபோது, அரசியல் தளத்தில் ஒரு புதிய ஏக்கம் உருவானது. அதாவது, கடந்த காலத்தில் நாட்டின் விவசாயிகள் பெருமைமிக்கவர்களாகவும் வளமானவர்களாகவும் இருந்தனர் என்றும், நவீன முதலாளித்துவ காலம் அந்த உன்னத விழுமியங்கள் அனைத்தையும் அழித்துவிட்டது என்று ஒரு 'அடிநிலை ஏக்கம்' (Underlying Nostalgia) திட்டமிட்டுக் கட்டமைக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, காலனித்துவத்திற்குப் பிந்தைய இலங்கை அரசு வட மத்திய மாகாணப் பகுதிகளில் (அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற உலர் வலயங்களில்) பண்டைய நீர்ப்பாசனக் குளங்களை மீட்டெடுப்பதிலும், தென்கிழக்கில் புதிய அணைகளைக் கட்டுவதிலும் (கல் ஓயா மற்றும் வளவை கங்கைத் திட்டங்கள்) பெருமளவில்

முதலீடு செய்கிறது; இறுதியாக, 1968-இல் தொடங்கப்பட்ட 'மகாவலி அபிவிருத்தித் திட்டம் இதன் உச்சக்கட்டமாக அமைந்தது.

இப்பிரம்மாண்டத் திட்டங்களின் நோக்கம் முற்றிலும் பொருளாதார மேம்பாடு சார்ந்தது மட்டும் அன்று; மாறாக, இந்த 'அபிவிருத்திச் சொல்லாடல்' என்பது சிங்கள விவசாயியை மையமாகக் கொண்ட தேசியவாத அடித்தளங்களுடன் ஆழமாகப் பின்னிப்பிணைந்திருந்தது. மக்கள் மத்தியில் இந்த விவசாயி ஒரு 'உன்னதமான பிம்பமாக' (Sublime Object) கட்டமைக்கப்பட்டார்.

பொருளாதார தாராளமயமாக்கல் மற்றும் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சி (UNP) அரசாங்கத்தின் கொள்கையில், நீர்ப்பாசன விவசாயத்தின் மூலமான அபிவிருத்திக்கு முதன்மையான இடம் அளிக்கப்பட்டது. இது இலங்கையின் பண்டைய பொற்காலமான 'சுதேசிய பௌத்த கலாசாரத்தின் மறுபிறப்பாகவே' சித்திரிக்கப்பட்டது. ஐ.தே.க ஆட்சியில் மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த காமினி திஸாநாயக்க, 1983-இல் இதனை மிகவும் வெளிப்படையாகப் பிரகடனப்படுத்தினார்:

'புதிய மகாவலிச் சமூகத்தின் ஆன்மா என்பது குளம், விகாரை மற்றும் வயல் ஆகிய மூன்றாலும் ஊக்கமளிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட நமது பண்டைய சமூகத்தின் உன்னதமான விழுமியங்களாகவே இருக்கும்.'

அரசியல்வாதிகளின் இந்த 'கிராமப்புறச் சார்பு' என்பது புதிய ஒன்றல்ல; இது 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே தொடங்கிவிட்டது. அன்றைய முதல்த் தலைமுறை தேசியவாதிகள், காலனித்துவ நாட்டினருக்குத் தாங்களே 'உண்மையான பிரதிநிதிகள்' என்று காட்டுவதற்கும், தங்களின் அரசியல் அதிகாரத்தைச் சட்டபூர்வமாக்குவதற்கும் (Legitimize) கையாண்ட மிக முதன்மையான அரசியல் உத்தி இதுவே ஆகும். காலனித்துவக் காலப் பெருந்தோட்டங்களின் விரிவாக்கத்தால் நிலத்தை இழந்து தவித்த (குறிப்பாகக் கண்டிப் பிராந்திய) சிங்கள விவசாயிகளின் நலன்களுக்காக அரசியல் தளத்தில் வாதிடுவது என்பது ஆட்சியாளர்களுக்கு எப்போதுமே அரசியல் ரீதியாக வசதியான ஒன்றாக அமைந்தது.

இருப்பினும், 1977-ஆம் ஆண்டிற்குப் பிறகு இலங்கை அரசியலில் அரங்கேறிய புதிய மாற்றம் என்னவெனில், 'பாரம்பரியம்' (Tradition) மற்றும் 'நவீனத்துவம்' (Modernity) ஆகிய வற்றிற்கு இடையிலான முரண்பாடுகளைத் தந்திரோபாயமாகச் சமரசம் செய்யும் ஒரு சமூகப் பிம்பத்தைக் கட்டமைப்பதற்காக, அரசு எந்திரமும் வர்த்தகச் சமூகத்தின் விளம்பர உத்திகளும் கைகோர்த்துக் கொண்டமையாகும். ஐ.தே.க அரசாங்கம், தான் கொண்டு வரவிருந்த தீவிர நவீன முதலாளித்துவ வளர்ச்சியை, அடிப்படையில் கிராமப்புறச் சிந்தனை கொண்ட மக்கள் எளிதில் ஏற்றுக்கொள்வதற்கு, அதற்கு ஒரு 'கலாசார ரீதியான ஒரு பாலம்' தேவை என்பதை உணர்ந்திருந்தது. இதன் விளைவாக, அன்றைய செய்தித் தாள்கள், தொலைக்காட்சி விளம்பரங்கள் மக்களின் தொன்மையான உள்ளூர் கலாசார நடைமுறைகளைத் தீவிரமாக வெளிப்படுத்தின. சுவாரசியமான விடயம் என்னவெனில், அந்த விளம்பரங்களில் சித்தரிக்கப்பட்ட மாந்தர்கள் எப்போதுமே சிங்களப் பெரும்பான்மைச் சமூகத்தின் முகங்களாகவே அடையாளப்படுத்தப்பட்டனர்.

ஹென்னாயக்கேயின் (Hennayake) ஆய்வு முடிவுகள் காட்டுவது போல, நவீன வேளாண் தொழில் நுட்ப நிறுவனங்களும் காப்பீட்டுத் துறைகளும், தங்களின் வணிக வளர்ச்சியைப் பண்டைய பாரம்பரியத்துடன் பிணைக்கும் இச்செயல்முறையில் தீவிரமாக ஈடுபட்டன. 1977-இற்குப் பிந்தைய காலப்பகுதியில், ஒரு தனியார் உர நிறுவனம் வெளியிட்ட விளம்பர வாசகத்தை அவர் பின்வருமாறு மேற்கோள் காட்டுகிறார்:

'விவசாயம் என்பது இலங்கைப் தேசியப் பழமரபினதும், அதன் கலாசாரத்தினதும் வழக்கத்தினதும் பிரிக்க முடியாத ஒரு பகுதியாகும். நமது பண்டைய அரசர்கள் உத்வேகம் மிக்க சிறந்த விவசாயிகளாகத் திகழ்ந்தனர். இந்த மண்ணின் மைந்தர்கள், காலங்காலமாக, பூமியின் மீதான தங்களின் பற்றையும் புதுமையான தொழில்நுட்பத் திறனையும் ஒன்றாக இணைத்து வந்துள்ளனர். ஆங்கிலோ-ஃபெர்ட் (Anglo-Fert) மற்றும் ஆங்கிலோ-கெம் (Anglo-Chem) ஆகிய இரு நிறுவனங்களும் இந்த நாட்டில் விவசாயத்தின் வளர்ச்சிக்கான கூட்டு அர்ப்பணிப்பைப் பகிர்ந்து கொள்கின்றன.'

மேலும், ஐ.தே.க அரசாங்கம் 1978-ஆம் ஆண்டில், அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் கண்டி ஆகிய மூன்று பண்டைய தலைநகரங்களை உள்ளடக்கிய பிராந்தியங்களின் தொல்பொருள் தளங்களை நிருவகிப்பதில் வழிகாட்டலையும் உதவியையும் வழங்குமாறு 'யுனெஸ்கோ' அமைப்பிற்குக் கோரிக்கை விடுத்தது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, இக்'கலாசார முக்கோணத்தைப்' (Cultural Triangle) பாதுகாப்பதற்குத் தேவையான நிதியை சர்வதேச அளவில் திரட்டுவதற்கான வேண்டுகோளை விடுத்தபோது, யுனெஸ்கோவின் அன்றைய பணிப்பாளர் நாயகம் பின்வருமாறு குறிப்பிட்டார்:

'இந்தக் கலாசார முக்கோணம்... ஒட்டுமொத்த மனிதகுலபாரம்பரியத்தின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும்; எனவே, பரந்த உலகத்தின் நலனுக்காக அது பாதுகாக்கப்பட வேண்டும்.'

இந்த இரு உதாரணங்களும் எதனைத் தெளிவுபடுத்துகின்றனவெனில், ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன 'அனைத்து முதலீட்டுக் கொள்ளையர்களையும் (Robber Barons) நாட்டிற்குள் வாருங்கள்' என்று பகிரங்கமாக அறிவித்தவாறு, தீவிரக் கட்டுப்பாடற்ற தாராளமயப் பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றிய போதிலும், தன் அரசு தேசத்தின் ஆழமான ஆன்மீக, பண்பாட்டு விழுமியங்களுக்குக் கட்டுப்பட்டது என்றதொரு போலிப் பிம்பத்தைக் காட்டுவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தது என்பதாகும்.

இத்தகைய மேலாதிக்கக் கருத்தாடல், கடந்த காலப்

பொருள்சார் கலாச்சாரத்தின் மீதான ஒரு போஷிப்பு உணர்வுடன் மேலும் மேலும் பிணைக்கப்பட்டிருந்தது. இது, நிகழ்காலச் சமூக அமைப்பைத் தன் விருப்பப்படி தீவிரமாக மாற்றியமைப்பதற்கான ஒரு 'சுய-நியமிக்கப்பட்ட தார்மீக உரிமையை' ஆளும் அரசாங்கத்திற்கு வழங்கியது. மைக்கேல் ஹெர்ஸ்ஃபெல்ட் (Michael Herzfeld) சுட்டிக்காட்டுவது போல:

'களங்கமற்றதும் மீண்டும் பெறமுடியாததுமான கடந்த காலத்தின் ஒரு நிலையான பிம்பம், பெரும்பாலும் நிகழ்காலச் செயல்களில் ஒரு முக்கியப் பங்கை வகிக்கின்றது. அது, நிகழ்காலச் நிகழ்வுகளுக்கு 'நித்திய உண்மையின் தார்மீக அதிகாரத்தை' (Moral Authority of Eternal Truth) வழங்குவதன் மூலமும், காலமாற்றத்தின் முரண்பாடுகளை ஒரு பிரபஞ்ச சம நிலையின் வெளிப்பாடாகப் சித்தரிப்பதன் மூலமும் அவற்றைச் சட்டபூர்வ மாக்குகிறது.'

20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த தேசபக்தி கொண்ட நவீனத்து வவாதிகள், புதிதாக உருவாகிவந்த தேசத்தின் மீது பெருமிதம் கொள்வதற் காகத் தங்களின் பண்டைய கடந்த காலத்தைப் 'தேசியப் பழமரபாக' வரைய றுத்தனர்.

1970-களின் பிற்பகுதியில் ஆட்சிக்கு வந்த தாராளவாத அபிவிருத்தி அரசோ, ஒரு விவசாய சமூகத்தைச் சந்தை சார்ந்த ஏற்றுமதிச் செயலாக்க மண்டலங்களாக (Export Processing Zones) மாற்றுவதற்கான தங்களின் தார்மீக அதிகாரத்தை வலுப்படுத்த அத்தேசியப் பழமரபைப் பயன்படுத் தியது. ஆனால், 21-ஆம் நூற்றாண்டின் உள்நாட்டுப் போருக்குப் பிந்தைய இலங்கை அரசோ, குடிமக்களை அரசியல் நீக்கம் (Depoliticise) செய்வ தற்கும், எழக்கூடிய சாத்தியமான எந்தவொரு எதிர்ப்புக் குரலையும் முடக்கு வதற்கும் என முற்றிலும் ஒரு சுயநல அரசியல் நோக்கத்திற்காகவே தேசியப் பழமரபைக் கையாண்டு வருகின்றது. இத்தகைய தற்போதைய சொல்லா டலின் உருவாக்கம் என்பது, பல்வேறு தரப்பட்ட பங்களிப்பாளர்களும் இணைந்து முன்னெடுக்கும் ஒரு சிக்கலான செயல்முறையாகும்.

**கட்டுரை ஆசிரியர்:**

பேராசிரியர் நீரா கொஞ்சித் விக்கிரமசிங்க (Nira Konjit Wickramasinghe) நெதர்லாந்தின் புகழ்பெற்ற லைடன் பல்கலைக்கழகத்தில் (Leiden University) நவீன தெற்காசிய ஆய்வுகளுக்கான பேராசிரியராகப் பணியாற்றி வரு கின்றார். ஐக்கிய இராச்சியத்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் நவீன வரலாற்றில் கலாநிதிப் பட்டம் (DPhil) பெற்ற இவர், 2009-ஆம் ஆண்டு வரை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வரலாறு மற்றும் சர்வதேச தொடர்புகள் துறையில் பேராசிரியராகச் சேவையாற்றினார். இவர் 'Civil Society in Sri Lanka: New Circles of Power' (2001), 'Sri Lanka in the Modern Age: A History' (2006/2015), 'Metallic Modern: Everyday Machines in Colonial Sri Lanka' (2014) மற்றும் 'Slave in a Palanquin: Colonial Servitude and Resistance in Sri Lanka' (2020) ஆகிய முக்கிய ஆய்வு நூல்களின் ஆசிரிய ராவார். இவரது 'Slave in a Palanquin' (2020) நூல், சிறந்த தெற்காசிய வரலாற்று ஆய்வு நூலுக்கு அமெரிக்க வரலாற்றுச் சங்கத்தினால் (AHA) வழங்கப்படும் சர்வதேசப் புகழ்பெற்ற 'ஜான் எஃப். ரிச்சர்ட்ஸ் பரிசை' (John F. Richards Prize) 2021-ஆம் ஆண்டில் பெற்றது.

(தொடரும்...)



sathiyathevan.s@thaiveedu.com

**மொழிபெயர்ப்புக் குறிப்பு:**

பொதுவாக 'Heritage' என்ற ஆங்கிலச் சொல்லிற்குத் தமிழில் 'மர புரிமை' (அல்லது 'பாரம்பரியம்') என்ற சொல்லே நிலைபெற்றுள்ளது. ஆனால், வரலாற்றெழுதியல் (Historiography) தொடர்பான இக் கட்டுரையில் 'Heritage' என்பதை 'மரபுரிமை' எனக் குறிப்பிடுவது பொருத்தமற்று இருப்பதுடன், வாசகரின் புரிதலிலும் குழப்பத்தையும் சிக்கலையும் ஏற்ப டுத்தக்கூடும். வரலாற்றெழுதியல் நோக்கில் மரபுரிமை வேறு, 'பழமரபு' வேறு என்ற போதிலும், இக்கட்டுரையின் கருப்பொருளுக்கும் பொருளமைதிக்கும் ஏற்ப இத்தழுவல் தமிழாக்கத்தில், 'Heritage' எனும் சொல்லிற்கு அரசியல் அல்லது உணர்ச்சி சார்ந்த தேவைகளுக்காகத் தொன்மக் கதை யாடல்கள் மூலம் புனையப்பட்டு, ஆட்சியாளர்களாலோ அல்லது மக்கள் மத்தியிலோ பரப்பப்பட்டுச் சமூகத்தில் நிலைநிறுத்தப்படும் ஒரு 'புனைவுப் பாரம்பரியம்' என்ற பொருளில், 'தேசியப் பழமரபு' என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, பொருண்மையின் தேவை கருதி சில இடங்களில் 'Heritage' என்பது 'பாரம்பரியம்' என்றும் தமிழாக்கப்பட் டுள்ளது. இத்தழுவல் தமிழாக் கத்தினை வாசித்து, தேவையான திருத்தங்களையும் செம்மையாக்கங்க ளையும் செய்த அருண்மொழிவர்மனுக்கு மனமார்ந்த நன்றிகள்.




ஈழத்து இலக்கிய வரலாற்றில் கனதியாகவும் காத்திரமாகவும் வெளி வந்த இதழ்களுள் 'ஞாயிறு' குறிப்பிடத் தக்கதாகும். 1933-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் கலாநிலையத்தின் வெளியீடாக வெளிவந்த இவ்விதழ், இலக்கியம், தத்துவஞானம், பௌதிக சாத்திரம், ஓவியம், நாகரிகம், சரிதம், கதை, நாடகம் முதலான பல்வேறு துறைகளில் இந்தியாவும் இலங்கையும் அடைந்துள்ள பேறுகளை ஆராய்ந்து அறியும் நோக்கத்துடன் உருவாக் கப்பட்டது. இதன்மூலம் கலை, அறிவியல், இலக்கியம், பண்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைத்து நோக்கும் பரந்த அறிவுப்புல அணுகுமுறையை 'ஞாயிறு' வெளிப்படுத் தியது.

யாழ்ப்பாணக் கலாநிலையத்தின் அங்கத்தினர் பொதுவகை அங்கத்தினர், சிறப்புவகை அங்கத்தினர் என இருவகைப்படுத்தப்பட்டிருந்தனர். நாட்டின் கலை ஆக்கத் தில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட அனைவரும் இந்நிலை யத்தின் அங்கத்தினராக முடியும் எனக் குறிப்பிடப்பட்டது. அத்துடன், அங்கத்தினர் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஓரளவு கல்வியறிவு பெற்றிருத்தல் இன்றியமையாததாகக் கருதப்பட்டது. கலை ஆக்கத்திற்கும் அறிவுத்துறையின் வளர்ச்சிக்கும் பங்களித்த கல்வியாளர்கள் சிறப்புவகை அங் கத்தினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இதன் மூலம் கலை மற்றும் அறிவுசார் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் அறிவார்ந்த அமைப்பாக யாழ்ப்பாணக் கலாநிலையம் செயற்பட்டமை புலப்படுகிறது.

'ஞாயிறு' இதழின் ஆசிரியப் பொறுப்பைச் சு. நடேசப் பிள்ளை, வியாகரண மகோபாத்தியாயர் வை. இராமசாமி சர்மா, வ. குமாரசாமி, வே. நாகலிங்கம் ஆகியோர் காலத்திற் கேற்ப ஏற்று நடத்தினர். இவர்களின் ஆசிரியத்துவத்தின் கீழ் ஆழமான ஆய்வுக் கட்டுரைகளும் தரமான கவிதைகளும் இடம்பெற்றன. இதனால் 'ஞாயிறு' வெறும் இலக்கிய இதழாக மட்டுமன்றி, பல்துறை அறிவையும் கலைச் சிந்தனையையும் வளர்த்த அறிவுசார் இதழாகவும் திகழ்ந்தது.

கிடைக்கப்பெற்றுள்ள இதழ்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும், அவற்றின் உள்ளடக்கச் செறிவும்

prasadbatti@gmail.com

சிந்தனை ஆழமும் 'ஞாயிறு' இதழின் தனித்துவத்தை வெளிப்படுத்துகின்றன. தற்போது ஐந்து இதழ்களே கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், அவற்றில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளும் கவிதைகளும் அக்கால ஈழத்துத் தமிழ் அறிவுலகின் பரந்த சிந்தனைப் பரப்பையும் இலக்கியப் பார்வையையும் அறிந்துகொள்ள முக்கியமான ஆதாரங்களாக அமைகின்றன. இவ்வகையில், 'ஞாயிறு' ஈழத்து இலக்கிய இதழியல் வரலாற்றில் இலக்கியத்தையும் அறிவியலையும் கலைகளையும் ஒருங்கிணைத்துக் கொண்ட காத்திரமான அறிவுசார் முயற்சியாக மதிப்பிடத் தக்கது.

1933-ஆம் ஆண்டு 'ஞாயிறு' இதழ் தொடங்கப் பட்டபோது, யாழ்ப்பாணம் பரமேசுவரக் கலாசாலையின் தலைமைத் தமிழாசிரியரான பிரமஶ்ரீ நவநீதகிருஷ்ண பாரதியார் இயற்றிய

*'செங்கதிர் ஞாயிறே! செங்கதிர் ஞாயிறே!*
*வெங்கதிர் பரப்பிவரு செங்கதிர் ஞாயிறே!'*

எனத் தொடங்கும் இக்கவிதை, இதழின் தொடக்க வாழ்த்துக் கவிதையாக மட்டுமல்லாமல், தமிழ் மொழியின் அறிவொளியையும் இதழின் இலட்சியத்தையும் எடுத்துரைக்கும் கருத்தாழமிக்க படைப்பாகவும் திகழ்கிறது.

*'உள்ளும் புறமுங் கொள்ளிரு ளோட்டி*
*அல்லும் பகலு மகலா தளிக்கும்*
*செந்தமிழ் ஞாயிற்றுச் செல்வற்(கு)*
*எந்தவிதத் தொப்பா வியைந்தனை நீயே'.*

இக்கவிதையின் முதன்மைச் சிறப்பு, இயற்கை ஞாயிற்றையும் (வானில் உதிக்கும் சூரியன்), செந்தமிழ் ஞாயிற்றையும் (தமிழறிவைப் பரப்பும் இதழ்) ஒப்புநோக்கி, செந்தமிழ் ஞாயிறே மேலானது என்பதை வலியுறுத்துவதில் அமைந்துள்ளது. வானில் உதிக்கும் சூரியன் புற உலகின் இருளை மட்டுமே அகற்றுகிறது, ஆனால் மனிதரின் துன்பங்களை ஆராய்ந்து நீக்கவோ, இரவிலும் உலகைக் காக்கவோ, தன்னை நாடி வந்தோருக்கு குளிர்ச்சியும் ஆறுதலும் அளிக்கவோ இயலாது. மாறாக, தனது வெப்பத்தால் உயிர்களை வருத்து வதோடு, மனிதரின் அக இருளாகிய அறியா மையைப் போக்கவும் இயலாதவராகக் கவிஞர் சுட்டிக்காட்டுகிறார்.

இதற்கு மாறாக, கலைக்கடலில் தோய்ந்தெழுந்த 'செந்தமிழ் ஞாயிறு' எனும் இதழ், மக்களின் உள்ளக் கமலத்தை மலரச் செய்து, செந்தமிழின் இனிமையையும் அறிவுச் செல்வத்தையும் தாராளமாக வழங்குகிறது. அது வீர உணர்வு, இல்லறப் பற்று, பண்பாடு, ஒழுக்கம் போன்ற உயரிய விழுமியங்களை வளர்ப்பதோடு, அகத்திலும் புறத்திலும் நிலவும் அறியாமை இருளை அகற்றி அறிவொளியைப் பரப்புகிறது. இயற்கைச் சூரியன் பகலில் மட்டுமே ஒளி தருகின்றது; ஆனால் தமிழ் ஞாயிறு கால எல்லையின்றி மனித சமுதாயத்திற்கு அறிவும் பண்பாடும் நிறைந்த ஒளியை வழங்குகிறது.

நேரிசையாசிரியப்பா யாப்பில் அமைந்துள்ள இப்பாடல், செறிந்த உவமைகளும் எதிர்மறை - நேர்மறை ஒப்புமைகளும் இலக்கிய நயமும் கொண்டதாக விளங்குகிறது. தமிழ் மொழி மனித வாழ்விற்கு வழங்கும் அக வெளிச்சம், அறிவு, பண்பாடு ஆகியவை இயற்கைச் சூரியன் வழங்கும் புற வெளிச்சத்தைவிட உயர்ந்தவை என்பதை வலிமையாக எடுத்துரைப்பதே இக்கவிதையின் தனிச்சிறப்பாகும்.

பிரமஶ்ரீ நவநீதகிருஷ்ண பாரதியார் இயற்றிய 'பொன்மாலிமயம்' என்ற கவிதை, பக்தி, இயற்கை, தமிழ்ப் பண்பாடு என விரிகிறது. இதன் மையப்பொருள் இமயமலை (பொன்மால் வரை / பொன்மாலிமயம்) ஆகும்.

ஈழத்து இலக்கிய இதழியல் வரலாற்றில் இலக்கியத்தையும் அறிவியலையும் கலைகளையும் ஒருங்கிணைத்துக் கொண்ட காத்திரமான அறிவுசார் முயற்சியாக மதிப்பிடத்தக்கது

இமயமலையின் இயற்கை அழகு, பனிப்போர்வை போர்த்திய சிகரங்கள், கங்கை தோன்றும் புனித நிலம், வானவில், சூரியக் கதிர்கள் ஆகிய இயற்கைக் காட்சிகள் கவிதையில் ஓவியமாக வர்ணிக்கப்படுகின்றன.

*'பொன்மால் வரையே! பொன்மால் வரையே!*
*தன்னே ரில்லாப் பொன்மால் வரையே!*
*பாயிருள் சீக்கு ஞாயிற்றுச் செல்வன்*
*தோயு நினதருள் துன்னில னாகளிற்*
*காயுங் காதற் கடுங்கனற் பட்டு*
*வெம்பிவெப் புறீஇ வெதும்பியா றாத்தீ'*

இமயமலை சிவபெருமானின் இருப்பிடமாகவும், முனிவர்கள் தவம் செய்யும் புனிதத் தலமாகவும் சித்தரிக்கப்படுகிறது. கங்கை தோன்றிய புண்ணிய பூமி என்பதால் அதற்கு உயர்ந்த ஆன்மிகப் பெருமை வழங்கப்படுகிறது.

முனிவர்கள், ஞானிகள், புலவர்கள் ஆகியோர் இமய மலையை அடைந்து தவம் செய்து ஞானம் பெறும் இடமாகக் கவிஞர் குறிப்பிடுகிறார். இது வெறும் மலை அல்ல. ஆன்மிக உணர்வை வளர்க்கும் அறிவுக் கோயிலாகும். கங்கை, வேத மரபு, பாரதத்தின் வளம், தெய்வ மரபு ஆகிய அனைத்திற்கும் அடிப்படையாக இமயமலை பாரத நாட்டின் பண்பாட்டு மகிமையின் குறியீடாக விளங்குவதையும் இக்கவிதை குறிப்பிடுகிறது. இங்கு மலை தெய்வீகத் தாயாக உருவகப்படுத்தப்படுகிறது.

இக்கவிதை இமயமலையின் இயற்கை அழகு, தெய்வீகப் பெருமை, கங்கை தோற்றம், முனிவர்களின் தவவாழ்வு, பாரதத்தின் பண்பாட்டு, ஆன்மிகச் செழுமை ஆகிய வற்றைப் போற்றும் புகழ்ப்பாடலாக அமைந்துள்ளது.

இயற்கை, சமயம், பண்பாடு, தேசிய உணர்வு ஆகிய நான்கு கூறுகளையும் ஒருங்கிணைத்து இமயமலையை பாரதத்தின் நிலையான மகிமையின் சின்னமாகக் கவிஞர் சித்தரிக்கிறார்.

வேலணைகிழார் சி. சரவணனார் நிலைமண்டில ஆசிரியப் பாவில் பாடிய பாடலே 'செந்தமிழ்த் தென்றல்'. இக்கவிதை, செந்தமிழின் வரலாற்றுப் பயணத்தையும், தமிழ்நாட்டி லிருந்து ஈழம் வரை அதன் வளர்ச்சியையும், தமிழ் மன்னர்கள், புலவர்கள், அறிஞர்கள் ஆற்றிய பங்களிப்பு களையும் போற்றி, தமிழ் மொழியின் பண்பாட்டு மற்றும் இலக்கியப் பெருமையை எடுத்துரைக்கும் புகழ்ப்பாடலாக அமைந்துள்ளது. குறிப்பாக, தமிழுக்கும் ஈழத்திற்கும் உள்ள வரலாற்று-பண்பாட்டு தொடர்ச்சியை வலியுறுத் துவதே இதன் மையக் கருத்தாகும்.

*'சந்தனப் பொதிசையிற் றளர்நடை பயின்ற*
*செந்தமிழ்ப் பாண்டியிற் சிறப்பொடு பல்கித்*
*தண்புனல் வைகையிற் றவழ்ந்து தவழ்ந்து*
*எண்ணிறீற் புலவர்த மிதயங்க ளமர்ந்து'*

தமிழ் மொழி பொதிகை மலையில் தோன்றி, பாண்டிய நாட்டில் வளர்ச்சி பெற்று, வைகை நதிக்கரையில் செழித்த இலக்கிய மரபை உருவாக்கியது என்று கவிஞர் குறிப்பிடுகிறார்.

*வள்ளுவர் வளர்ப்ப வளவர்கோன் காத்த*
*தெள்ளிய பசுந்தமிழ் அன்னையே! வாழ்க!*

சங்ககாலப் புலவர்கள் தமிழ் மொழியை வளப்படுத்தினர்; திருவள்ளுவர் அதன் அறநெறிச் சிறப்பை உலகறியச் செய்தார். சோழ மன்னர்கள் தமிழைப் பேணி வளர்த் தனர் என்பதையும் கவிஞர் நினைவுகூர்கிறார்.

பின்னர் தமிழ் ஈழத்திற்கும் பரவி, குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஆழமாகப் பயிலப்பட்ட மொழியாக விளங்கியதைக் கூறுகிறார்.

*'ஈழ மொளிதர இலங்கு யாழ்ப்பாணத்து*
*ஆழப் பயிலு மருமொழி யாகி'*

என்னும் தொடர் இதனை விளக்கி நிற்கிறது.

செகராசசேகரன் போன்ற அரசர்களும், ஆறுமுக நாவலர் போன்ற தமிழ் அறிஞர்களும் தமிழைப் பாதுகாத்து வளர்த்த பெருமையையும் இக்கவிதையில் போற்றுகிறார். இறுதியில், தமிழை பொற்கொடியைப் போன்ற தாயாக உருவகப்படுத்தி, அதன் திருவடிகளை வணங்கி புகழ்வ தாகக் கவிஞர் நிறைவு செய்கிறார்.

சைவப் பிரபந்தங்களில் காணப்படும் திருப்பள்ளியெழுச்சி மரபைப் பின்பற்றி, கதிர்காமத்தில் எழுந்தருளிய முருகப்பெருமானை எழுந்தருளுமாறு வேண்டி அமைந்த பக்திப்பாடலே திரு. சு. நடேசப்பிள்ளை அவர்கள் இயற்றிய 'கதிர்காமநாதன் திருப்பள்ளியெழுச்சி'.

விடியல் பொழுதின் இயற்கைக் காட்சிகள் மிகுந்த கவிநயத்துடன் சித்திரிக்கப்படுகின்றன. சூரியன் உதித்தல், பறவைகள் கீச்சிடுதல், தாமரை மலர்தல், வண்டுகள் ரீங்காரமிடுதல், மயில்கள் ஆடுதல் போன்ற காட்சிகள் வழியாக இறைவன் விழித்தெழ வேண்டிய சூழல் உருவாக்கப்படுகிறது.

*'திருவரு ளாமென் விழிந்தது காலை*
*திகழொளி பரப்புசெங் கதிரவ னெழுந்தான்*
*குருகுகள் மதுபொழி மலர்வனத் திடையிற்*
*கூவநற் கீதங்க ளியம்பின கேளாய்*
*உருகிநைந் தழயவ ருன்புகழ் கூறி*
*ஒளிவார் கழலிணைத் தொழுதிட வணைந்தார்*
*கரிமிகு பயில்கிரிக் கதிரையிற் குமரக்*
*கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே...'*

அந்தணர், தமிழன் பர்கள், சாக்கியர் பிற சமயத்தவர், தேவர்கள், திருமகள், கலைமகள் முதலியோர் அனைவரும் கதிர்காம நாதனை வணங்குவ தாகக் கூறப்படுவதன் மூலம், கதிர்காமத்தின் சமய நல்லிணக்கப் பண்பு வலியுறுத்தப் படுகிறது

மலை, காடு, ஆறு, வேடர் மரபு, தேனும் கனிகளும், இயற்கை வளங் களும் இணைந்து கதிர்காமத் தலத்தின் தனித்துவமான சிறப்புகள் எடுத்துக் காட்டுகின்றன. இதனால் இப்பாடல் ஒரு தலப்புகழ் இலக்கியம் என்ற சிறப்பையும் பெறுகிறது.

அந்தணர், தமிழன்பர்கள், சாக்கியர் (பௌத்தர்), பிற சமயத்தவர், தேவர்கள், திருமகள், கலைமகள் முதலியோர் அனைவரும் கதிர்காமநாதனை வணங்குவதாகக் கூறப்படுவதன் மூலம், கதிர்காமத்தின் சமய நல்லிணக்கப் பண்பு வலியுறுத்தப்படுகிறது.

*அருமறை யோதிடு மந்தண ரொருபால்*
*அமுதெனுக் தமிழிசை யன்பர்க ளொருபால்*
*தருமமே சாணெனுஞ் சாக்கிய ரொருபால்*
*தருக்கிடுஞ் சமயிகள் சார்ந்தன ரொருபால்*
*திருப்புக ழொடுதொழுந் தேவர்க ளொருபால்*
*திருமகள் கலைமகள் சயமக ளொருபால்*
*விருப்பொடு வணங்கிடுங் கதிரையிற் குமரக்*
*கடவு ளேபள்ளி யெழுந்தரு ளாயே.*

ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், 'கதிரையிற் குமரக் கடவுளே! பள்ளி எழுந்தருளாயே!' என்ற மகுட வாசகம் மீண்டும் மீண்டும் இடம்பெறுகிறது. இது பக்தியின் ஆழத்தையும் இசைநயத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

சைவத் தத்துவச் சிந்தனைகளையும் இப்பாடல் கூறிநிற்கிறது. இறைவன் உலகெங்கும் நிறைந்த பேரொளி; உயிரும் உணர்வும் அவனே; அறியாமையையும் தீமையையும் போக்கி அருள்புரிபவன் என்ற அரிய சைவசித்தாந்தக் கருத்துகள் இப்பாடலில் பொதிந்து கிடக்கின்றன.

எதுகை, மோனை, உவமை, உருவகம் என அணிநயங்கள் வாய்க்கப் பெற்ற இக்கவிதை கதிர்காமத் தலத்தின் இயற்கை அழகு, சமய நல்லிணக்கம், முருக பக்தி, சைவத் தத்துவம் ஆகியவற்றை ஒருங்கிணைத்த ஈழத் தமிழ் பக்தி இலக்கியத்தின் சிறந்த எடுத்துக்காட்டாகவும் திகழ்கிறது.

ஸ்ரீ நவநீதகிருஷ்ண பாரதியார் இயற்றிய 'செழுங்கதிர்ச் செல்வம்' என்பது வெளிப் படையாக சூரியனைப் போற்றும் கவிதையாகத் தோன்றினாலும், அதன் உட்பொருள் இறையருள், அறிவொளி, ஆன்மிக அனுபவம், இயற்கை அழகு, மனித வாழ்வின் தத்துவம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து வெளிப்படுத்தி நிற்கிறது.

இப்பாடலின் மையப் பேசுபொருள் 'செழுங்கதிர்' (சூரியன் / தெய்வீக ஒளி) ஆகும். கவிஞர் சூரியனை வெறும் விண் மீனாகப் பார்க்காமல், உலகிற்கு உயிர், ஒளி, அறிவு, அருள் ஆகியவற்றை வழங்கும் இறையருளின் வடிவமாகக் காண்கிறார்.

*மண்ணோர் காணா வகையெழினி*
*மழையான் மறைத்து வானத்தின்*
*கண்ணே நீநின் குழுவுடனே*
*கங்குல் பகலாப் பயில்கூத்தை*
*அண்ணால் கோடைக் காலமுற்றும்*
*அவனிக் காடும் பொருள்தெளிப்பாய்*
*விண்ணோர் தலைவா வேதமணி*
*விளக்குச் சுடரே! செழுங்கதிரே!*

சூரியன் மேகங்களால் மறைக்கப்படுவதும், கோடை காலத்தில் பூமிக்கு ஒளியையும் வெம்மையும் தருவதும் கவிஞரால் அழகுற விவரிக்கப்படுகிறது. வானத்தில் மேகக் கூட்டங்களுடன் சூரியன் இயங்கும் நிலையைக் 'கங்குல் பகலாப் பயில்கூத்து' என்று காட்சிப்படுத்துவது கவிதையின் உச்சகட்ட அழகியல். இப்பாடல் சூரியனின் இயற்கை அதிசயங்கள், விடியற்கால அழகு, வானவில், பனி, மேகம், மழை போன்ற இயற்கை நிகழ்வுகளை அழகாக விவரிப்பதோடு; அறியாமையிலிருந்து ஞானத் திற்கு உயர்தல், உலக உயிர்கள் மீதான அன்பு, மனித வாழ்க்கையின் ஆன்மிக உயர்வு மற்றும் இறைவனோடு ஆன்மாவின் ஒன்றிணைவு ஆகிய ஆழமான தத்துவக் கருத்துகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

பக்தியும் தத்துவமும் ஒன்றிணைந்து காணப்படும் செழுங்கதிர்ச் செல்வம் பாடலின் தொடக்கத்தில் இயற்கைச் சூரியனைப் போற்றும் கவிஞர், இறுதியில் அதனை இறையருள், ஞானம், பேரன்பு ஆகியவற்றின் குறியீடாக உயர்த்துகிறார். கவிதையில் கையாளப்படும் செறிவான காட்சிப்படிமங்கள் புதுப் பொலிவை அளிக்கின்றன. பனித்துளி முத்தாகவும், வானவில் ஓவியமாகவும், வானம் ஓவியப் பலகையாகவும் கற்பனை செய்யப்படுவது கவிதைக்கு தனித்துவமான அழகைத் தருகின்றது.

இயற்கை வருணனை இக்கவிதையின் மிகப்பெரிய பலமாகும். காலை, மாலை, வானவில், பனித்துளி, மேகம், நிலவு, நட்சத்திரம் போன்ற இயற்கைக் காட்சிகள் ஓவியம் போல் வருணிக்கப்படுகின்றன. அத்துடன், கவிஞர் சூரியனை ஓவியனாக, ஆசிரியராக, அரசனாக, மணவாளனாக, குழந்தை யாக, கருணைமிக்க இறைவனாகப் பல்வேறு வடிவங்களில் உருவகப்படுத் துகிறார். இவ்வுருவகங்கள் இக்கவிதைக்கு மேலும் அழகையும் ஆழத்தையும் சேர்க் கின்றன.

பாடலின் தொடக் கத்தில் இயற்கைச் சூரியனைப் போற்றும் கவிஞர், இறுதியில் அதனை இறையருள், ஞானம், பேரன்பு ஆகி யவற்றின் குறியீடாக உயர்த்துகிறார். கவிதையில் கையாளப் படும் செறிவான காட் சிப்படிமங்கள் புதுப் பொலிவை அளிக் கின்றன

இனிய ஓசைநயத்துடன் அறுசீர் ஆசிரிய விருத்தத்தில் எழுதப்பட்ட செழுங்கதிர்ச் செல்வம் எதுகை, மோனை, இயைபுத் தொடை போன்ற ஒலிநயங்களைக் கொண்டு ள்ளன. 'பாலர் பள்ளி மணலெழுத்தைப் பயில்கின்றாயோ?', 'யான்செங்கதிரோ? இதுவானோ?' என பாடலில் கையாளப்பட்ட வினாவணி பாடலுக்கு சிந்தனை ஆழத்தை அளிப்பதுடன் ஆன்மிகத் தேடலையும் வெளிப்படுத்துகின்றன.

'செழுங்கதிர்ச் செல்வம்' என்பது சூரியனைப் போற்றும் பாடலாக மட்டுமல்லாமல், இயற்கை, அறிவியல் உணர்வு, ஆன்மிகம், பக்தி, தத்துவம், மனிதநேயம் ஆகியவற்றை ஒருங்கிணைத்த சிந்தனைக் கவிதையாக விளங்குகிறது. இயற்கைக் காட்சிகளை ஆன்மிக அனுபவங்களாக மாற்றும் கற்பனை வளமும், ஆழ்ந்த தத்துவ நோக்கும், இனிய சொல்லாட்சியும் இந்நூலை ஈழத் தமிழ் இலக்கியத்தில் தனித்துவமான படைப்பாக உயர்த்துகின்றன.

யாழ்ப்பாணம் தலைமைத் தமிழ் வித்தியாதரான பிரமஸ்ரீ நி. சதாசிவ ஐயர் இயற்றிய 'தேவியைப் பிழைபொறுக்க வேண்டுதல்' என்னும் பாடல், ஆதி சங்கராசாரியார் வடமொழியில் அருளிய 'தேவி அபராத க்ஷமாபண ஸ்தோத்திரம்' என்பதனைத் தமிழில் மொழியாக்கம் செய்து யாத்ததாகும். அறுசீர் ஆசிரிய விருத்தத்தில் அமைந்துள்ள இப்பாடல், வெறும் மொழிபெயர்ப்புப் படைப்பாக அமையாமல், தமிழ்ப் பக்தி இலக்கிய மரபின் உணர் வையும் சொல்லாட்சியையும் உள்வாங்கி தனித்துவமான இலக்கியப் படைப்பாகத் திகழ்கிறது. குறிப்பாக, தேவியைத் தாயாகக் கண்டு தன் குற்றங்களையும்

குறைகளையும் ஒப்புக்கொண்டு, அவளது அளவற்ற கருணையை வேண்டி நிற்கும் சரணாகதி உணர்வு இப்பாடலின் அடிப்படை உணர்வாக அமைகிறது.


பாடலின் முதன்மையான இலக்கியச் சிறப்பு தாய்ப்பாச உருவகமாகும். தேவி, தன்னை நாடி வரும் அடியாரின் குற்றங்களைப் பொறுத்தருளும் கருணைமிக்க தாயாகக் காட்டப்படுகிறாள். 'குணமிலாத் தாயும் உண்டோ?' என்ற வினா மீண்டும் மீண்டும் இடம்பெறுவது இதனைத் தெளிவுபடுத்துகிறது. உலகில் குற்றம் செய்யும் பிள்ளை யைத் தாய் எவ்வாறு பொறுத்து அரவணைக்கிறாளோ, அதுபோலத் தன்னுடைய பிழைகளையும் தேவி பொறுத்தருள வேண்டும் என்ற வேண்டுதல் இங்கு வெளிப்படுகிறது. இதனால், இறைவனுக்கும் அடியாருக்கும் இடையிலான உறவு அச்சத்தின் அடிப்படை யிலானதாக அல்லாமல், தாய்-பிள்ளை உறவாக மாற்றப்படுகிறது.

இப்பாடலில் வினாவணி சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'குணமிலாத் தாயும் உண்டோ?', 'யாரைச் சரண்பு குவேன்?' போன்ற வினாக்கள் வெறும் தகவலை எதிர்பார்க்கும் வினாக்கள் அல்ல. அவை கவிஞருடைய ஆழ்ந்த பக்தியையும் மனத்தவிப்பையும் வெளிப் படுத்தும் உணர்ச்சி வினாக்களாக அமை கின்றன. குறிப்பாக, 'குணமிலாத் தாயும் உண்டோ?' என்ற தொடர், தேவியின் கருணையை மறைமுகமாக உறுதிப் படுத்துகிறது. உலகில் தாய் தன் பிள்ளையின் குற்றங்களைப் பொறுப்பாள் என்ற இயல்பை முன்வைத்து, தேவியும் தன் அடியாரின் பிழைகளைப் பொறுத்தருள வேண்டும் என்ற நம்பிக்கை வலுப்படுத்தப் படுகிறது.

இதனுடன் தொடர்புடைய மற்றொரு சிறப்பு மறுமொழி அல்லது தொடர் மீளுருவாக்கம் ஆகும். ஒரே கருத்து பல இடங்களில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப் படுவதால் பாடலின் உணர்ச்சி அழுத்தம் அதிகரிக்கிறது. குறிப்பாக, தன்னுடைய குற்றங்களை ஒப்புக்கொண்டு, தேவியின் அருளை நாடும் நிலை வெவ்வேறு சொற்களிலும் சூழல்களிலும் மீளக் கூறப்படுகிறது. இவ்வகையான மறுமொழி, பாடலுக்கு இசைநயத்தையும் மனதில் பதியும் தன்மையையும் வழங்குகிறது.

'அவையடக்கம்' அல்லது தன்னடக்கமான பக்தி உணர்வும் பாடலின் முக்கியமான பண்பாகும். கவிஞர் தன்னை அறிவும் ஆற்றலும் அற்றவராகக் காட்டிக் கொள்கிறார். மந்திரம், தந்திரம், வழிபாட்டு முறைகள், தியானம் போன்ற வற்றை முறையாக அறியாதவன் எனத் தன் குறைகளை ஒப்புக்கொள்கிறார். இதன் மூலம், 'நான் வழிபாட்டிற்குத் தகுதியுடையவன் என்பதால் அருள்புரி' என்று வேண்டாமல், 'என் குறைகளையெல்லாம் பொறுத்து அருள வேண்டும்' என்று தேவியின் கருணையைச் சார்ந்து நிற்கிறார். இத்தகைய தன்னடக்கம் தமிழ்ப் பக்தி இலக்கியத்தின் அடிப்படைப் பண்புகளில் ஒன்றாகும்.

பாடலில் உவமை மற்றும் உருவகங்களும் உணர்ச்சியை வலுப்படுத்துகின்றன. 'அல்லல் கடலில் ஆழ்ந்த' எனத் துன்பத்தைப் பெருங்கடலாக உருவகிப்பதும், தேவியின் கருணையை 'கருணை வெள்ளம்' எனக் காட்சிப் படுத்துவதும் குறிப்பிடத்தக்கவை. உலக வாழ்க்கையின் துன்பம் எல்லையற்ற கடலாகவும், அதிலிருந்து அடியாரைக் காப்பாற்றும் தேவியின் அருள் பெருவெள்ள மாகவும் சித்திரிக்கப்படுகிறது. இவ்விரு உருவகங்களின் எதிர்மறை-நேர்மறை அமைப்பு, பக்தரின் துன்பத்திற்கும் இறையருளிற்கும் இடையிலான உறவைத் தெளிவாக உணர்த்துகிறது.




சொல்லாட்சியிலும் பாடல் தனித்துவம் பெற்றுள்ளது. வடமொழி மூலத்தின் தத்துவக் கருத்துக்களைத் தமிழில் வெளிப்படுத்தும்போது, அவை வெறும் சொற்சார்ந்த மொழிபெயர்ப்பாக அமையாமல், தமிழ்ப் பக்திப் பாடலுக்குரிய இனிமையுடன் வழங்கப்பட்டு ள்ளன. 'அன்னே', 'தாயே', 'தேவி', 'அருள்செய்' போன்ற அழைப்புச் சொற்கள் நேரடியான பக்தி உரையாடலை உருவா க்குகின்றன. இதனால் கவிஞருக்கும் தேவிக்கும் இடையே நெருக்கமான உறவு தோன்று கிறது.

இப்பாடலின் யாப்பியல் அமைப்பும் அதன் இலக்கிய நயத்திற்கு முக்கியமான காரணமாகும். அறுசீர் ஆசிரிய விருத்தத்தில் அமைந்துள்ள பாடல், ஓசை ஒழுங்கையும் இசைத் தன்மை யையும் பெற்றுள்ளது. சீர் அமைப்பு, எதுகை, மோனை, இயைபு முதலிய தொடைநயங்கள் பாடலை வாய்மொழியாக ஓதுவதற்கும் பாடு வதற்கும் ஏற்றதாக அமைக்கின்றன. இதனால் கருத்தின் ஆழத்தோடு ஓசையின் இனிமையும் இணைகிறது. குறிப்பாக, திரும்பத் திரும்ப வரும் 'தாயும் உண்டோ?' போன்ற தொடர்கள் பாடலின் இசைநயத்தை மேலும் வலுப்படுத் துகின்றன.

இவற்றையெல்லாம் விட, பாடல் முழுவதும் பக்திரசம் ஆழமாகப் பரவியுள்ளது. குற்றவுணர்வு, தாழ்மை, அச்சம், நம்பிக்கை, சரணாகதி, அருள் வேண்டுதல் ஆகிய பல்வேறு உணர்வுகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. தொடக்கத்தில் தன் அறியாமையையும் பிழைகளையும் உணரும் பக்தர், படிப்படியாகத் தேவியின் தாய்மைக் கருணையை நம்பி அவளிடம் முழுமையாகச் சரணடை கிறார். இறுதியில் உலகியலான செல்வம், முத்தி, பெரும்பேறு போன்றவற்றைக் கூட வேண்டாமல், தேவியின் திருநாமத்தைப் பாடிப் பணிவதே தன் ஒரே வேண்டுதல்

எனக் கூறும் நிலைக்கு உயர்கிறார். இதனால் பாடலின் சரணாகதி உணர்வு உச்சநிலையை அடைகிறது.

மேலும், இப்பாடல் மொழிபெயர்ப்பு இலக்கியத்தின் சிறப்பையும் எடுத்துக்காட்டுகிறது. வடமொழியில் தோன்றிய பக்திச் சிந்தனை தமிழில் கொண்டு வரப்பட்டாலும், அது தமிழ் மரபுக்குப் புறம்பானதாகத் தோன்றவில்லை. மாறாக, தமிழின் தாய்த்தெய்வ வழிபாட்டு மரபு, பக்தி உணர்வு, தாழ்மையான வேண்டுதல், இனிய விருத்தப்பா ஆகிய வற்றுடன் இயைந்து நிற்கிறது. எனவே, இது மூலப்படைப்பின் கருத்தைத் தழுவிய தமிழாக்கமாக மட்டுமல்லாமல், தமிழின் தனித்துவமான பக்தி அழகியலைப் பெற்ற மறுஆக்கமாகவும் கருதத்தக்கது.

மொத்தத்தில், 'தேவியைப் பிழை பொறுக்க வேண்டுதல்' என்பது வெறும் வடமொழி நூலின் மொழிபெயர்ப் பாகக் கருதத்தக்கதன்று. தாய்ப்பாச உருவகம், வினாவணி, மறுமொழி, அவையடக்கம், உவமை-உருவகம், இனிய சொல்லாட்சி, அறுசீர் ஆசிரிய விருத்தத்தின் இசைநயம் ஆகிய இலக்கியக் கூறுகள் ஒன்றிணைந்து இப்பாடலுக்கு தனித்துவமான கலைத்தன்மையை வழங்குகின்றன. அதை விட, 'குணமிலாத் தாயும் உண்டோ?' என்ற மைய உணர்வின் வழியாகத் தேவியின் அளவற்ற கருணையையும், பிழை செய்த அடியாரைக் கூடத் தாயன்புடன் ஏற்று உய்விக்கும் இறையருளையும் கவிஞர் வெளிப்படுத்துகிறார். எனவே, இப்பாடல் தாயன்பை மையமாகக் கொண்ட சரணாகதி பக்தி இலக்கியமாகவும், வடமொழிக் கருத்தைத் தமிழின் மரபு, யாப்பு, உணர்ச்சி ஆகியவற் றோடு வெற்றிகரமாக இணைத்த தமிழாக்கப் படைப்பாகவும் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற் றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது.

சு. நடேசப்பிள்ளையின் 'சகுந்தலை வெண்பா' தமிழ் இலக்கியத்தில் கதை, கவிதை, இயற்கை வருணனை, உளவியல் சித்திரிப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்துப் படைக்கப்பட்ட சிறப்புமிக்க படைப்பாகும். வடமொழியில் காளிதாசர் இயற்றிய புகழ்பெற்ற 'அபிஞான சாகுந்தலம்' நாடகத்தைத் தழுவி, சு. நடேசபிள்ளை அவர்களால் எழுதப்பட்ட கவிதையே சகுந்தலை வெண்பா. இச்சிறு காப்பியத்தின் முதற்பகுதி ஞாயிறு இதழில் வெளிவந்தது. இக்கவிதை நள வெண்பாவைப் போல் காண்டம் காண்டமாகப் பிரிக்கப்பட்டு வெண்பாவில் எழுதப்பட்டது. கலியோசை மிகுந்து வரும் புகழேந்திப் புலவரின் வெண்பா யாப்பி னையே கவிஞர் இக்கவிதையில் கையாண்டுள்ளார்.

இதன் பிறப்புக் காண்டத்தில் இடம்பெறும் பாடல்களை நோக்கும்போது, கவிஞரின் கற்பனைத் திறனும், இயற்கையை அழகுணர்வுடன் நோக்கும் பார்வையும், மனித உணர்வுகளை நுட்பமாக வெளிப்படுத்தும் ஆற்றலும் தெளிவாகப் புலப்படுகின்றன.

வரிகள் காட்டின் வளத்தையும் அழகையும் உணர்த்துகின்றன. இயற்கை இங்கு வெறும் பின்னணியாக இல்லாமல், கதாபாத்திரங்களின் உணர்வுகளோடு இணைந்த உயிருள்ள கூறாகத் திகழ்கிறது

இப்பகுதியின் தொடக்கத்தில் மேனகை தேவேந்திரனை வணங்கி நிற்கும் காட்சி அழகாகச் சித்திரிக்கப்படுகிறது. 'மின்னற் கொடியனைய மேனகை' என்ற தொடரில் மேனகையின் அழகு மின்னல் கொடியுடன் ஒப்பிடப் படுகிறது. இதன் மூலம் அவளது தோற்றத்தின் ஒளிர்வும் நளினமும் வாசகர்களின் மனக்கண்ணில் காட்சியாக் கப்படுகின்றன. அதேவேளை, தேவேந்திரன் மேனகைக்கு வழங்கும் கட்டளையும், அதற்கு அவள் அளிக்கும் பதிலும் படைப்பில் நாடகத்தன்மையை ஏற்படுத்துகின்றன.

இப்பகுதியில் இயற்கை வருணனை குறிப்பிடத்தக்க சிறப்பாக அமைகிறது. சகுந்தலை காட்டில் தோன்றும் காட்சியைப் புலவர் பல்வேறு இயற்கைக் கூறுகளின் துணையுடன் வருணிக்கிறார். முல்லை, கோங்கு, கரும்பு, செங்கு முதம், அந்திப்பிறை, தென்றல் போன்ற இயற்கைப் பொருள்கள் ஒன்றோ டொன்று இணைந்து ஓர் அழகிய இயற்கைச் சூழலை உருவாக்குகின்றன.

*'அரும்பீன்ற முல்லையு மைதவிழுங் கோங்கும்*
*கரும்பேய்க்கும் மென்பணையுங் காமர் – சுரும்பூதும்*
*செந்தமிழின் தீம்பண்ணுஞ் செங்குமுத வாயிதழும்*
*அந்திப் பிறையுமுண் பாங்கு...'*

என்ற பாடல் வரிகள் காட்டின் வளத்தையும் அழகையும் உணர்த்துகின்றன. இயற்கை இங்கு வெறும் பின்னணியாக இல்லாமல், கதாபாத்திரங்களின் உணர்வுகளோடு இணைந்த உயிருள்ள கூறாகத் திகழ்கிறது.

*'தமியளா யிக்கானில் தாழ்குழலாய் நீவந்
தமுதொத் திசைபாடி யாடக் – குமுதத்தை
ஒத்த விதழ்வாயா லோர்மொழியுங் கூறாய்மற்
நித்தரையி லுற்ற தெவன்...'*

சகுந்தலையின் அழகு இயற்கையோடு இணைத்துப் பல்வேறு உவமைகளின் வழியாக வெளிப்படுத் தப்படுகிறது. அவளது இதழ்கள் குமுத மலருடன் ஒப்பிடப்படுகின்றன. அவளது உடல் மின்னலுடனும், அவளது தோற்றம் ஒளியுடனும் தொடர்புபடுத்தப்படுகிறது. இத்தகைய உவமைகள் சகுந்தலையின் பேரழகை வாசகர்களின் கற்பனைக்கு நெருக்கமாகக் கொண்டு வருகின்றன. இதனால் அழகியல் உணர்வு பாடல்களில் மேலோங்கி நிற்கிறது.

இப்பகுதியின் மற்றொரு முக்கியச் சிறப்பு இசைநயம் ஆகும். வெண்பா யாப்பின் இயல்பான ஓசையோடு எதுகை, மோனை, இயைபு போன்ற ஒலிநயங்களும் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக கிண்கிணி, சிலம்பு, மேகலை போன்ற அணிகலன்களின் ஒலிகள் இயற்கையின் இசையோடு இணைக்கப்

படுகின்றன. 'காலிற் சிலம்பரியே / கையிற் செறிவளையே...' என்ற பாடல், சகுந்தலையின் நடையையும் அவள் அணிந்த அணிகலன்களின் ஒலியையும் ஒருங்கிணைத்துக் காட்சிப்படுத்துகிறது. இதனால் பாடலுக்கு செவியின்பமும் காட்சியின்பமும் ஒருங்கே கிடைக்கின்றன.

இப்பகுதியில் ஐம்புலன்களையும் ஈர்க்கும் வருணனை களைக் காணலாம். மலர்களின் மணம், தேனின் சுவை, கிண்கிணியின் ஒலி, தென்றலின் வருடல், மலர்களின் அழகு போன்றவை ஒன்றிணைந்து காட்டுச் சூழலை உயிர்ப்பிக்கின்றன. 'தாமறைந்து நின்ற தழைத்து' போன்ற காட்சிப்படுத்தல்கள் இயற்கையின் நுட்பமான இயக்கங் களையும் கவிஞரின் கற்பனைத் திறனையும் வெளிப் படுத்துகின்றன.

கோசிக முனிவரின் உளவியல் மாற்றம் இப்பகுதியின் முக்கியமான இலக்கியச் சிறப்பாகும். கடுந்தவத்தில் ஈடுபட்டிருந்த முனிவர், சகுந்தலையைக் கண்டவுடன் மனத்தில் காதல் உணர்வு தோன்று கிறது. 'கண்ணை மெலவிழித்துக் கண்டானே கோசிகன்மன் / பெண்ணென்ற தெய்வீகப் பேரழகைக்...' என்ற வரிகளில், நீண்ட தவநிலையில் இருந்த முனிவரின் மனத்தில் சகுந்தலையின் அழகு ஏற்படுத்திய தாக்கம் வெளிப்படுகிறது. தவம், ஆசை, மயக்கம் ஆகியவற்றுக்கு இடையிலான உள்மனப் போராட்டத்தையும் கவிஞர் நுட்பமாகச் சித்திரிக்கிறார்.

மேலும், தென்றலுக்குக் கவிஞர் ஒரு செயலூக்கமுள்ள பாத்திரத்தன்மையை வழங் குகிறார். சகுந்தலையின் நாணத்தைக் கலைப்பதும், அவளது ஆடைகளையும் கூந்தலையும் அசைப்பதும் போன்ற காட்சிகளின் வழியாகத் தென்றல் ஒரு இயற்கைக் கூறாக மட்டுமன்றி கதையின் நகர்வில் பங்குகொள்ளும் சக்தியாக மாறுகிறது. இயற்கையை மனிதச் செயல்பாடுக ளுடன் இணைக்கும் இக்கவித்துவ உத்தி கவிஞரின் கற்பனை வளத்தை வெளிப்படுத் துகிறது.

*'ஏதே புறத்தீர்க்கு மிவ்விசையென் றேற்ந்திருவான்*
*மீதே யிளந்தென்றல் மெல்லென்று – தாதார்பூ*
*வாசத் தொடுவீச வாசவற்கு வாழ்வளித்துக்*
*கோசிகன்றன் கண்ணைவிழிக் கும்...'*

மேனகை, இந்திரன், கோசிக முனிவர், சகுந்தலை ஆகிய பாத்திரங்களின் உரையாடல்களும் செயற்பாடுகளும் படைப்பில் நாடகத்தன்மையை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக இந்திரனின் கட்டளை, மேனகையின் பதில், சகுந்தலையின் வருகை, கோசிக முனிவரின் மனமாற்றம் ஆகியவை தொடர்ச்சியான காட்சிகளாக அமைக்கப்பட்டுள்ளன. இதனால் வாசகர் கதையை வெறுமனே வாசிப்பதற்குப் பதிலாக நிகழ்வுகளை நேரில் காண்பது போன்ற உணர்வைப் பெறுகிறார்.

அத்துடன், காதல் உணர்வையும் இயற்கையையும் இணைத்துக் காட்டுவதிலும் கவிஞர் சிறந்து விளங்குகிறார். நிலவு, தென்றல், மலர்கள், தேன், மின்மினிகள், மணம் போன்ற கூறுகள் காதல் உணர்வைத் தூண்டும் சூழலை உருவாக்குகின்றன. 'முன்வினையி னீட்டங்கள் மூட்டிய போலெங்கும் / மின்மினிகள் மேவி முயங்குவன' என்ற வரிகளில் இரவின் அழகும் காதல் சூழலும் ஒன்றிணைந்து காணப்படுகின்றன.


சுன்னாகம் இராமநாதன் கழகம் வெளியிட்ட சகுந்தலை வெண்பாவையும், அதற்கு முன்னதாக ஞாயிறு இதழில் தொடராக வெளிவந்த சகுந்தலை வெண்பாவையும் ஒப்பிட்டு நோக்கும்போது, இரு பதிப்புகளுக்கும் இடையில் பாடல் அமைப்பில் ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப் படுகிறது. குறிப்பாக ஞாயிறு இதழில் இடம்பெற்ற 33-வது பாடல், சுன்னாகம் இராமநாதன் கழகம் வெளியிட்ட சகுந்தலை வெண்பாவில் காணப்பட வில்லை. இதற்கான காரணத்தை ஆராய்வது இந்நூலின் பதிப்பு வரலாற்றையும் பாட வேறுபாடுகளையும் புரிந்துகொள்வதற்கு முக்கியமானதாகும்.

*'இருள்விரிந்த கூந்தலா லீரிலா மையல்*
*தரும்விருந்துச் செம்பொற் றனத்தில் – ஒருகுடைக்கீழ்ப்*
*பாராண்டுப் பாவையர்கள் பற்றறுத்தான் மெய்ப்படிந்து*
*தீரான்வெங் காதற் றிளைத்து.'*

(ஞாயிறு இதழில் இடம்பெற்ற 33-வது பாடல்)

இப்பாடல் கோசிக முனிவருக்கும் சகுந்தலைக்கும் இடையில் உருவாகும் காதல் உணர்வின் தீவிரத்தை வெளிப் படுத்தும் பாடலாக அமைந்துள்ளது. இதற்கு முன்னும் பின்னும் இடம்பெறும் பாடல்களை நோக்கும்போது, கதையின் உணர்வுத் தொடர்ச்சியில் இப்பாடலுக்கும் முக்கியமான இடம் இருப்பது புலப் படுகிறது.

எனினும், சுன்னாகம் இராமநாதன் கழகம் வெளியிட்ட பதிப்பில் இப்பாடல் இடம்பெறாமைக்கு முதன்மையான காரணமாக பதிப்பாக்க வேறுபாட்டைக் கருதலாம். இதழில் தொடராக வெளியிடப்பட்ட வடிவம் பின்னர் நூல் வடிவில் பதிப்பிக்கப்படும் போது, கிடைத்த மூலப்பிரதிகள், ஆசிரியரின் கையெழுத்துப் பிரதிகள் அல்லது பதிப்பாசிரியரிடம் இருந்த பிற பிரதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் பாடல்கள் சரிபார்க்கப்பட்டிருக்கலாம்.



அத்தகைய சரிபார்ப்பின்போது, குறிப்பிட்ட பாடல் ஆசிரியரின் இறுதி வடிவில் இடம்பெறாதது எனக் கருதப்பட்டிருக்க வாய்ப்புள்ளது.

மற்றொரு சாத்தியம் இதழ்ப் பதிப்பில் ஏற்பட்ட இடைச்செருகல் அல்லது அச்சுப் பிழை ஆகும். சகுந்தலை வெண்பா முதலில் தொடராக வெளியிடப் பட்டிருந்தால், அத்தொடரை அச்சிடும் நிலையில் வேறு பிரதியிலிருந்து ஒரு பாடல் சேர்க்கப்பட்டிருக்கலாம் அல்லது பின்னர் நூலாக்கும்போது அது நீக்கப்பட்டிருக் கலாம். குறிப்பாக 33-வது பாடல், அதற்கு முந்தைய மற்றும் பிந்தைய பாடல்களுக்கிடையே கருத்துத் தொடர்பைக் கொண்டிருந்தாலும், நூல் பதிப்பில் அது இல்லாதிருப்பது, பதிப்பாசிரியர் திட்டமிட்டு மேற்கொண்ட உரைத் திருத்தமாகவும் இருக்கலாம்.

மேலும், பழைய தமிழ் நூல்களின் பதிப்பு வரலாற்றைப் பார்க்கும்போது, ஒரே படைப்பின் இதழ்ப் பதிப்பு, நூற்பதிப்பு, பின்னர் வெளிவந்த மறுபதிப்புகள் ஆகியவற்றில் பாடல் எண்ணிக்கை மற்றும் பாடல் வாசகங்களில் வேறுபாடுகள் ஏற்படுவது இயல்பானதாகும். அச்சுத் தொழில் நுட்பக் குறைபாடுகள், மூலப்பிரதிகளின் வேறுபாடு, பாடல் வரிசை மாற்றம், பதிப்பாசிரியரின் திருத்தம் போன்றவை இதற்குக் காரணமாக அமையலாம்.

எனவே, ஞாயிறு இதழில் இடம்பெற்ற 33-வது பாடல் சுன்னாகம் இராமநாதன் கழகப் பதிப்பில் காணப்படாததை உடனடியாக 'அச்சுப் பிழை' என முடிவுசெய்வது பொருத்தமானதல்ல. இதழ்ப் பதிப்பையும் கழகப் பதிப்பையும் உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட மூலப் பிரதிகளை ஒப்பிட்டுப் பார்த்த பின்னரே உறுதியான காரணத்தைத் தீர்மானிக்க முடியும். குறிப்பாக ஆசிரியரின் கையெழுத்துப் பிரதி, முதல் இதழ்ப் பதிப்பு, கழகத்தின் அச்சுப் பிரதி ஆகியவை கிடைத்தால், இந்தப் பாடல் உண்மையில் ஆசிரியரால் எழுதப்பட்டதா, பின்னர் இதழில் சேர்க்கப்பட்டதா, அல்லது நூல் பதிப்பில் திட்டமிட்டு நீக்கப்பட்டதா என்பதைத் தெளிவாகக் கண்டறிய முடியும்.

ஆகவே, ஆய்வுநிலையில் இதனை 'ஞாயிறு இதழ்ப் பதிப்பில் இடம்பெற்ற 33-வது பாடல், சுன்னாகம் இராமநாதன் கழகப் பதிப்பில் இடம்பெறவில்லை. இது இரு பதிப்புகளுக்கிடையிலான உரைப் பதிப்பு வேறுபாடாகக் கருதப்பட வேண்டும்; அதன் உறுதியான காரணத்தை அறிய இரு பதிப்புகளின் மூலாதாரங்களையும் ஒப்பாய்வு செய்தல் அவசியமாகும்' என்று குறிப்பிடுவது பொருத்தமானதாகும். இவ்வாறான பாடல் வேறுபாடுகள் சகுந்தலை வெண்பாவின் பதிப்பு வரலாற்றையும், அதன் உரை உருவாக்கத்தையும் ஆராய்வதற்கான முக்கியமான சான்றுகளாக அமைகி ன்றன.

எனவே, சு. நடேசப்பிள்ளையின் சகுந்தலை வெண்பாவின் இப்பகுதி இயற்கை வருணனை, அழகியல் உணர்வு, உவமை மற்றும் உருவகப் பயன்பாடு, இசைநயம், ஐம்புலனுணர்வு, உளவியல் சித்திரிப்பு, நாடகத்தன்மை, கற்பனை வளம் ஆகிய பல இலக்கியச் சிறப்புகளைக் கொண்டதாக விளங்குகிறது. குறிப்பாக இயற்கையை வெறும் காட்சியாகப் பயன்படுத்தாமல், கதாபாத்திரங் களின் மன உணர்வுகளோடு இணைத்து வெளிப்படுத் தியிருப்பது இப்பகுதியின் தனிச்சிறப்பாகும். இதன் மூலம் சு. நடேசப்பிள்ளையின் கவிதை ஆற்றலும், வெண்பா வடிவத்தைக் கையாளும் திறனும், காட்சியையும் உணர்வையும் ஒருங்கிணைக்கும் கவித்துவ நுட்பமும் தெளிவாக வெளிப்படுகின்றன.

1933 - 1934-ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வெளிவந்த ஞாயிறு இதழில் இடம்பெற்றுள்ள கவிதைகளை ஒட்டுமொத்தமாக நோக்கும்போது, அவை வெறும் பக்திப் பாடல்களோ இயற்கை வருணனைகளோ அல்ல என்பது தெளிவாகிறது. தமிழ் மொழிப் பற்று, சைவ சமய மரபு, இயற்கை உணர்வு, அறநெறி, தத்துவச் சிந்தனை, பண்பாட்டு விழுமியங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து வெளிப்படுத்தும் உயரிய இலக்கியப் படைப்புகளாக அவை திகழ்கின்றன.

இக்கவிதைகளில் பிரமஶ்ரீ நவநீதகிருஷ்ண பாரதியார், சு. நடேசப்பிள்ளை, சி. சரவணனார், சதாசிவ ஐயர் போன்ற தமிழறிஞர்கள் பங்கேற்றிருப்பது, ஞாயிறு இதழ் தொடக்கத்திலிருந்தே உயர்ந்த இலக்கியத் தரத்தை இலக்காகக் கொண்டிருந்ததை உறுதிப்படுத்துகிறது. மரபு யாப்பு வடிவங்கள், செம்மையான சொல்லாட்சி, பக்தி, இயற்கை, தமிழ் மறுமலர்ச்சி உணர்வு ஆகியவை இக்கவிதைகளின் பொதுப் பண்புகளாக விளங்குகின்றன.

மேலும், ஞாயிறு இதழ் மரபுத் தமிழ் இலக்கியச் செல்வத்தைப் பாதுகாத்ததோடு மட்டுமல்லாமல், தமிழ் மொழியை அறிவொளியாகவும், சமயத்தை ஒழுக்க நெறியாகவும், இயற்கையை இறையருளின் வெளிப் பாடாகவும், ஈழத் தமிழர் பண்பாட்டை வரலாற்று அடை யாளமாகவும் நிலைநிறுத்த முயன்றுள்ளது. இவ்வகையில், இவ்விதழ் இருபதாம் நூற்றாண்டின் தொடக்ககால ஈழத் தமிழ் இலக்கியத்தில் மரபுக்கும் மறுமலர்ச்சிக்கும் இடையிலான ஒரு முக்கிய இலக்கியப் பாலமாகச் செயல் பட்டது.

எனவே, ஞாயிறு இதழில் இடம்பெற்றுள்ள இக்கவிதைகள் ஈழத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மரபுக் கவிதையின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதோடு, தமிழ் மொழி, சமயம், பண்பாடு, தேசிய உணர்வு ஆகியவற்றை ஒருங்கி ணைத்து இலக்கிய வளர்ச்சிக்கு வலுவான அடித்தளத்தை அமைத்த ஆவணங்களாக மதிப்பிடப் படுகின்றன. இதனால், ஞாயிறு இதழ் ஈழத் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் குறிப்பிடத்தக்க இதழ்களில் ஒன்றாக உரிய இடத்தைப் பெறுகிறது.



ramesh.s@thaiveedu.com




tg.theeban@gmail.com

■ கிருங்கை சேதுபதி

பவ்யமாய் அமர்ந்து பாரதி கேட்க, கோவிந்தசாமி உபதேசம் நீள்கிறது.

மும்முறை பந்தமில்லை என்று முழங்கி, அதன் பின்னே, பயம் இல்லை என்றும் மும்முறை முழங்கிய கோவிந்தசாமி.

வேதக் கருத்தை முன்வைத்து விளக்கி அவர் சொன்னது என்னவோ? உள்வாங்கிய பாரதி அந்த உபதேசத்தைப் பாடலாகப் பின்வருமாறு படைக்கிறார்.

அதுவே நீ என்பது முன் சொல்லப்பட்ட வேதச் செய்தி.' இப்படிச் சொன்னவுடன் அது எது என்ற முகக்குறிப்பு பாரதி யின் முகத்தில் தெரிந்திருக்க வேண்டும்.

'அது எதுவென்று நான் சொல்லக் கேட்பாயாக' என்று விளித்து, பின்னர் விளக்கம் சொல்கிறார் குருநாதர்.

அது என்றால் முன்னால் நிற்கின்ற பொருளின் பெயர். இந்த உலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் அதுவே. உலகில் உள்ள அனைத்தும் என்றால் நீயும் நானும் அதனுள் இருக் கிறோம். எனவே, நீயும் அதுதான். வேறு இல்லை.

ஆதலால், சீடனே, இந்த உலகில் என்ன வந்தாலும் சரி, இரா மபிரானின் தாளினை மனத்தினிலே நிறுத்தி இங்கு வாழ் வாயாக'

என்று முதல் உபதேசம் செய்கிறார்.

நிலையிலா உலகில் வரும் எதுவும் நிலையிலாததுதான். ஆனால், இங்கே நிலையானது ஒன்றுதான். அது இறைவன் திருத்தாள். அந்த இறைவனை இராமன் என்கிறார் குருநாதர். முந்தைய பாடலில் மகாதேவன் என்று சிவனைக் குறித்த அவர் இந்தப் பாடலில், இராமன் என்கிறார். உபதேசம் செய்தவர் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடர். அவர்களுக்கு அரியும் சிவனும் ஒருவனே. பரம்பொருள் ஒன்றுதானே. எனவே, அவன் தாளை அசைவுறாது நினைவில் நிறுத்தி அந்த மைய அச்சில் நம் இயக்கத்தைக் கொள்வதே சரியானது என்பது தெளிவு.

இந்த இடத்தில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதை தான் நினைவுக்கு வருகிறது.

ஒரு குழந்தை தன்னைத் தானே சுற்றிக் கொண்டு விளையா டுகிறது. ஒரு கட்டத்திற்குமேல் தலைசுற்றிக் கீழே விழுந்து விடுகிறது.

இன்னொரு குழந்தை, ஒரு கம்பு போல் அமைந்த தூணைப் பிடித்துக்கொண்டு நெடுநேரம் சுற்றுகிறது. மயங்கவும் இல்லை. விழவும் இல்லை.

பகவான் சுட்டிக் காட்டிச் சொல்கிறார்.

'நான்' என்று ஆடும் முன் சொன்ன குழந்தையின் நிலை. தூண் பற்றியதுபோல், இறைவன் தாள் பற்றி நின்று சுற்றி யாடும் குழந்தைதான் பக்தனுக்கு வேண்டியது. நீங்கள் அதைப் பற்றிக் கொள்ளுங்கள்' என்று உபதேசம் செய்தார்.

அதனைத் தன் வாக்கில் குருநாதர் உரைத்ததைச் செவி மடுத்த பாரதி, கவிவாக்காகப் பாடித் தருகிறார். அதற்கு முன்னதாக ஓர் அடைமொழி தருகிறார்.

அதுதான் இந்தக் கட்டுரையில் கவனிக்க வேண்டிய தனிச் செய்தி.

***மதுவுண்ட மலர் மாலை இராமன்தாள்***

மனதால் பற்ற வேண்டியது தாளை, அது இராமனின் தாள். அவனோ மாலை சூடியவன். அம்மாலையோ மலர் மாலை. அம்மலரோ, மதுவாகிய தேன் நிறைந்த மாலை. மாலை காற்றில் அசையும். மதுவினை உண்டு களிப்பது வண்டு. இங்கே வண்டு இல்லை. மலர்தான் உண்டு. மதுவுள்ள மலர்மாலை என்றாலும் ஓசை கெடப்போவதில்லை. இலக்கணம் தவறப் போவதில்லை. இங்கே மதுவுண்டது வண்டுதான். மதுவுண்ட வண்டு இயக்கமற்று நிலைத்து நிற்கும். மலர் என்ற சொல்லுக்குள்ளே வண்டு நின்றுவிடுகிறது. இயக்கமற்று மலருடன் ஒன்றிவிடுகிறது. மாலை, மாலாகிய இராமனின் தோளில் நிலை பெற்று விளங்குகிறது.

இது செய்தி. மாலைக்குள்ளே வண்டு இருப்பதுபோல இந்த உடலுக்குள்ளே மனம் இருக்கிறது. மாலை - உடல் என்றால், மனம் - வண்டு. மதுவுண்ட வண்டு உடைய மலர் மாலை இராமனின் தோள் சேர்ந்ததுபோல, இராமனின் மலர்த்தாளில் ததும்பும் அருளாகிய தேனை மனதார உண்டு. அவன் தாளில் இந்த மனத்தைக் கொண்டுபோய் நிறுத்தி நீ வாழ்வாயாக. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பது பழமொழி. அது உண்மை எனில் வரும் நன்மைக்கும் தீமைக்கும் யார் பொறுப்பு? வாழ்வுக்கும் மரணத்திற்கும் யார் பொறுப்பு?

'அவர் தலைவ ரன்னவர்க்கே சர ணாங்களே' என்பது கம்பன் வாக்கு. இதனை 'அவர் தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே' என்றும் பொருள் கொள்ளலாம். 'அவர் தலைவர் அன்னவர்க்கே சரண் ஆங்களே' என்றும் பொருள் கொள்ளலாம். இரண்டும் பொருந்த வரும் இந்த மரபை, உள்வாங்கிய நிலையில் பாரதியிடமிருந்து தன்னை அறியாமல் வெளிப்படும் பாடல் இது.

'சீடா, அசைவுறாமல் இராமன் தாளை மனத்தினிலே நிறுத்தி இங்கு வாழ்வாய்' என்பது குரு உபதேசம். இது குருவாக்கு.

'அசைவுறாமல், மதுவுண்ட மலர் மாலை இராமன் தாளை மனத்தினிலே நிறுத்தி இங்கு வாழ்வாய் சீடா' என்பது கவி வாக்கு.

இந்தத் தொடரில், அசைவுறாமல் என்பதை விளக்கத்தான், மதுவுண்ட மலர் மாலை என்ற தனித்தொடரை, பாரதி அமைத்திருக்கிறார். இப்படிச் சொல்வதைவிட, கவிவாக்கு எதுகை மோனை கருதி முளைத்து வெளிவந்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். இனி, இந்தப் பாடலைப் பார்க்கலாம்.

***'அதுவே நீஎன்பது முன் வேத ஒத்தாம்;***
***அதுஎன்றால் எதுவென நான் அறையக் கேளாய்!***
***அதுஎன்றால் முன்நிற்கும் பொருளின் நாமம்;***
***அவனியிலே பொருள் எல்லாம் அதுவாம்; - நீயும்***
***அதுவன்றிப் பிறிதில்லை; ஆதலாலே,***
***அவனியின் மீதுஎது வரினும் அசைவுறாமல்***
***மதுவுண்ட மலர்மாலை இராமன் தாளை***
***மனத்தினிலே நிறுத்தி இங்கு வாழ்வாய், சீடா.'***

*பாரதி அறுபத்தாறு- 60*

'இந்த உபதேசம்தான் பின்னர் கடையத்தில் வாழ்கிறபோது பாரதியிடம் பின்வரும் பாடலாக வெளிப்பட்டிருக்கிறது போலும்,

***'சாகா வரம் அருள்வாய் ராமா'***

சக்தி உபாசகர், மணக்குள விநாயகரைப் பாடியவர், கண்ணன் மீது காதல் கொண்டவர், இராமனிடம்போய் 'சாகா வரம் அருளச் சொல்லி வேண்டியதற்குப் பின்புலமாக இந்தக் குரு உபதேசம் உந்தியிருக்கிறது என்று தெரிகிறது.

***சாகாவர மருள்வாய், ராமா!***
***சதுர்மறை நாதா! - சரோஜ பாதா!***

என்று பல்லவி பாடுகிறார், சரணமோ

***ஆகாசந் தீகால் நீர்மண்***
***அத்தனை பூதமும் ஒத்து நிறைந்தாய்***
***ஏகாமிர்த மாகிய நின்தாள்***
***இணைசர ணென்றால் இதுமுடி யாதா? சாகா***

ஏன் இராமனின் தாளைச் சரணம் எய்தச் சொன்னார் குரு நாதர் என்பது இப்போது விளங்குகிறதா?

இராமன், ஆகாசம், தீ, காற்று, நீர், மண் என ஐம்பூதங்களிலும் ஒத்து நிறைந்து விளங்குகிறான். இது பாரதி உணர்ந்தது.

***அதுஎன்றால் முன்நிற்கும் பொருளின் நாமம்;***
***அவனியிலே பொருள் எல்லாம் அதுவாம்***

இது கோவிந்த சாமி உணர்த்தியது. இராமனை விடவும் ராம நாமம் உயர்ந்தது. அருள வல்லது. இதுவெல்லாம் உணர வேண்டிய பொருள்.

இந்தப் பாடலில், இராமனின் தாளும் வருகிறது. அதுவும் தேன் பிலிற்றுகிறது. இல்லையில்லை, சாகா வாழ்வளிக்கும் அமுதம் கொட்டுகிறது. அதுவும் எப்படிப்பட்ட அமிர்தம். ஏக அமிர்தம். ஒப்பற்ற ஒரே அமிர்தம். தாள்கள் இரண்டு தாள் இணை. தரும் அமிர்தமோ ஒன்று. அதனால்தான் ஏகாமிர்தம் என்கிறார் பாரதி. சரணம் எய்தும் மனம் அதனை உண்ணும்போது, மரணம் எப்படி வரும்? அதனால்தான், இந்தப் பாடல் இப்படிப் பிறக்கிறது.

ஆனாலும் மனம் அமைதி உறுகிறதா? இல்லையே, அதனால், குருநாதரின் அடுத்த விளக்க உபதேசம் தொடர்கிறது.

கவித்துவத்தை விட, குருநாதரின் உபதேசத் தொடரே இந்தப் பாடலில் உளவாகி நிற்கிறது. இந்த உடம்பில் ரோமங்களைப் போல, இந்த இயற்கையில் பலவகையான உயிரினங்கள் உண்டாகியிருக்கின்றன. மற்றவுயிர்கள் எப்படியோ, மனிதவுயிர்களுக்கு மரணம் என்பது இயற்கையாய் வருவதை விட, செயற்கையாகவே வந்து வாய்க்கிறது.

புறப்பகையால் கொல்லப்படுகிற சாவு ஒன்று.

அகப்பகையால் தன்னைத் தானே மாய்த்துக் கொள்கிற சாவு மற்றொன்று.

அதனால்தான் பாரதி, வசன கவிதையில் தற்கொலையை கடுமையாகச் சாடுகிறார். 'ஜகத் சித்திரம்' நாடகம் அற்புதமான உருவகம். இந்த உலக வாழ்வின் குரூரங்களையும் அழகினையும் பறவைகள், பாம்புகள் வாயிலாக உணர்த்தும்

அதிசய நாடகம். குயில் பாட்டை விடவும் நாம் கண்டு கொண்டாட வேண்டிய நாடகம். இந்த உபதேசத்தின் பின்னணியில் விளைந்த அபூர்வப் படைப்பு அது.

'மனந்தான் சத்துரு. வேறு நமக்குப் பகையே கிடையாது. மனந்தான் நமக்குள்ளேயே உட்பகையாக இருந்துகொண்டு, நம்மை வேரறுக்கிறது. அடுத்துக் கெடுக்கிறது.' என்று பறவைகளெல்லாம் கோஷிக்கின்றன.

பொதுவாக, மனிதர்கள்தான் வேட்டையாடுவார்கள். மிருகங்களும் வேட்டையாடும். பறவைகள் வேட்டையாடுமா? ஆட வைக்கிறார், பாரதி. இல்லையில்லை, ஆட்டுவிக்கிறார். கூடவே பின்வருமாறு உபதேசம் கூற வைக்கிறார்.

***'மனந்தான் பகை.***
***அதைக் கொத்துவோம் வாருங்கள்.***
***அதைக் கிழிப்போம் வாருங்கள்.***
***அதை வேட்டையாடுவோம் வாருங்கள்.'***

தன்னைக் கொல்ல வருபவரை எதிர்த்துக் கொத்த வரும் நாகம், முடியாதபோது தன்னைத் தானே கொத்திக் கொண்டு சாகும். இதனை நான் கண்ணுறக் கண்டிருக்கிறேன். அதனால் தானோ, என்னவோ, இந்த நாடகத்தில் இறுதியில் இரு பாம்புகள் பேசிக் கொண்டும் பகைத்துக் கொண்டும் கொத்திக் கொண்டும் மாள்கின்றன.

இத்தகு கொலையினும் கொடிது. தற்கொலை. இதையும் தடுக்கிற உபதேசத்தைக் கிளி மொழிகிறது. அதாவது,

'கேளீர் தோழர்களே, இவ்வுலகத்தில் தற்கொலையைக் காட்டிலும் பெரிய குற்றம் வேறில்லை' - என்று கிளி உபதேசம் செய்கிறது.

இப்படி, மேலே மேலே விளக்கம் தருவதை விடவும், நேரே அந்த நாடகத்தை இந்தக் கோணத்தில் வைத்துப் படித்தால் பல விஷயங்கள் புரிபடும்.

இந்த நாடகம், புதுவையில் இருந்து கிளம்பி, கடையத்தை வாழ்விடமாகக் கொண்ட காலத்தில் பாரதியிடமிருந்து வெளி வந்தது என்பதைக் கவனத்தில் கொண்டால், இந்தக் கால நீட்சியும் கருத்துச் செறிவும் கவித்துவப் பாங்கும் தெளிவுறத் தெரியும்.

எனவே, அழுகைக்கும் அவலத்திற்கும் காரணமாகும், பிறரைக் கொல்லும் எண்ணத்தை, முதலில் கைவிட வேண்டும் என்கிறார் கோவிந்தசாமி.

***நேராக மானுடர் தாம் பிறரைக் கொல்ல***
***நினையாமல் வாழ்ந்திட்டால் அழுதல் வேண்டா;***

இந்தக் கொலைச் சிந்தனை எதனால் வருகிறது? கொள்ளையடிக்கும் மனப்பாங்கால் விளைகிறது. மண்ணாசை மூல காரணம். இயற்கையை அபகரித்துத் தன் வசப்படுத்தும் வெறி. அதற்குப் பின்னான உழைப்பையும் முன்னிறுத்தி,

காரான நிலத்தைப் போய்த் திருத்த வேண்டா

என்கிறார்.

காடு வெட்டிப் போட்டு கடிய நிலந்திருத்தி, வேளாண் தொழில் செய்வது கூட வேண்டாம் என்கிறார். குருநாதர்.

அது எதற்கு? எப்படி? என்கிற கேள்விகள் முளைக்கின்றன.

இது விரிவாக ஆராய வேண்டிய களம்.

இயற்கை மேடு பள்ளங்களோடுதான் இருக்கிறது. இயங்குகிறது. அதனைச் சமப்படுத்த வேண்டியதில்லை. கூடவும் கூடாது. ஐவகை நிலங்களின் அமைப்பில்தான் இயற்கையின் இயக்கம். ஒன்று மற்றொன்றை விழுங்குவதோ, அபகரிப்பதோ, ஆபத்து. மலையும் வேண்டும். கடலும் வேண்டும். சமவெளியும் வேண்டும். பள்ளத்தாக்குகளும் வேண்டும். ஏன், பாலையும் கூட வேண்டும். இருக்கிறது. இதைச் சிதைக்கவும் மாற்றவும் மனித மனம் அவாவுகிறது. அளவு கடந்து வெறி கொள்கிறது. சீரற்ற நிலத்திற்குக் கால்வாய் வெட்டி நீர் பாய்ச்சுவதும் அதனால் கலகம் செய்வதும் உள்ளூர் தொடங்கி உலக நாடுகள் வரை நிகழ்ந்துகொண்டு தானே இருக்கிறது. போரற்ற உலகம் பிறப்பிக்கத்தானே புறப்பட்டு வந்தான் இராமன்.

***யாரொடும் பகை கொள்ளலன் என்றபின்***
***போர் ஒடுங்கும் புகழ் ஒடுங்காது***

என்பது இராமன் தன் குருவான வசிட்டர் வழி பெற்ற மந்திரம். அவனால் அதனை நிலை நிறுத்த முடிந்ததா? பரந்தாமன் மட்டும் நினைத்தால் போதுமா? பாரில் அவன் எடுத்த அவதாரங்களில் ஒன்றான மனிதம் நினைக்க வேண்டாமா? அது நினைத்துச் செயல்பட்டால் அனைத்தும் இன்பம். மரணம் இல்லை. 'சீரான மழை பெய்யும் தெய்வம் உண்டு' என்று கோவிந்தசாமி உபதேசம் செய்கிறார். பாரதி பாடுகிறார்.

***'பாரான உடம்பினிலே மயிர்களைப் போல்***
***பலப்பலவாம் பூண்டு வரும் இயற்கையாலே;***
***நேராக மானுடர் தாம் பிறரைக் கொல்ல***
***நினையாமல் வாழ்ந்திட்டால் அழுதல் வேண்டா;***
***காரான நிலத்தைப் போய்த் திருத்த வேண்டா;***
***கால்வாய்கள் பாய்ச்சுவதில் கலகம் வேண்டா;***
***சீரான மழை பெய்யும்; தெய்வம் உண்டு;***
***சிவன் செத்தால் அன்றி மண்மேல் செழுமையுண்டு***

*பாரதி அறுபத்தாறு - 61*

முழுப்பாட்டும் புரிகிறது. இதன் முடிவில் உள்ள வாக்கியம் நம்மைத் திணறவைக்கிறது.

***'சிவன் செத்தால் அன்றி மண்மேல் செழுமை உண்டு'***

என்ன சொல்ல வருகிறது, இந்தத் தொடர்?

மேலும் சிந்திப்போம்.



sethupathi@thaiveedu.com




> ***காலை புலரும் வேளையில் இயல்பாகவே ஒலிக்கும் பறவைகள், வண்டுகள் முதலியவற்றின் ஒலிகள் இராமனின் வருத்தத்துக்காக இரங்கி ஒலிப்பதாகக் கம்பர் தற்குறிப்பேற்றமாக இச்செய்யுளை வடித்துள்ளார்.***

சென்ற மாத இதழில் கம்பராமாயணம், ஆரணிய காண்டம், சடாயு உயிர் நீத்தபடலம் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து இந்த இதழில் ஆரணிய காண்டத்தின் ஒன்ப தாவது படலமாகிய அயோமுகிப் படலம் எடுத்துவரப்படு கிறது. வான்மீகத்தில் மிகச் சிறுபகுதியாகக் காணப்படுகின்ற இப்படலம் கம்பராமாயணத்தில் 101 செய்யுள்களால் விரித் துக் கூறப்படுகின்றது. அயம் என்பது இரும்பைக் குறிக்கும். அயோமுகி என்பது இரும்புமுகம் கொண்டவள் என்று பொருள் படுகிறது.

சடாயுவுக்கு இறுதிக்கடன் செலுத்திய பின் இராம இலக்குவர் இருவரும் சீதையைத் தேடிச் செல்கிறார்கள். அப்போது அயோமுகி என்பவள் இலக்குவன்மேல் ஆசைகொண்டு மந் திரத்தின் வல்லமையால் அவனை மயக்கி எடுத்துச் செல்ல அவளிடமிருந்து இலக்குவன் மீண்டுவருகின்ற செய்தி இப்பட லத்தில் கூறப்படுகின்றது.

இப்படலத்தின் முதற்பகுதி இரவுவேளையில் சீதையை நினைத்து இராமன் வருந்துவதாக வருகிறது.

***யாமதுதெரிதல் தேற்றாமின்னகைச் சனகியென்னும்***
***காமருதிருவைநீத்தோமுகமதிகாண்கிலாதோ***
***தேமருதெரியல் வீரன் கண்ணெனத் தெரிந்தசெய்ய***
***தாமரைகறங்குற் போதும் குவிந்திலாத் தன்மை***
***என்னோ?***

*கம்ப. ஆரணிய.1040*

தேன்மருதெரியல் வீரன் - தேன் பொருந்திய மலர்மாலையை அணிந்த வீரனாகிய இராமனது, கண் எனத் தெரிந்த - கண் கள் என்று சொல்லப்படுகின்ற, செய்யதாமரை- செந்தாமரை மலர்கள், கறங்குற் போதும் - குவியவேண்டிய இராப்பொழு திலும், குவிந்திலாத் தன்மை - குவியாதிருப்பது, இன்னகைச் சானகி என்னும் காமருதிருவைநீத்தோ - இனிய புன்நகையை யுடைய சீதை என்னும் திருமகளை இழந்ததனாலோ? முக மதி காண்கிலாதோ - முகமாகிய முழுநிலவைக் காணாத தாலோ? என்னோ? - என்ன காரணத்தினாலோ, யாம் அது தெரிதல் தேற்றாம் - நாம் அது இன்னதென்று அறியமாட் டோம்.

சீதையை இழந்ததால் இராமன் கண்மூடித் தூங்கமுடியாமல் இருக்கின்றான் என்பதற்குக் கவிக்கூற்றாக அமைந்த செய் யுள் இது. செல்வத்தையெல்லாம் இழந்தவன் இரவில் கண் மூடி உறங்கமுடியாதிருப்பதைப்போல, சீதையை இழந்த இராமனும் கண்மூடித் தூங்கவில்லை. நிலவைக்கண்டுகு வியுந் தன்மையுள்ள தாமரை, அதனைக் காணாதவிடத்துக் குவியாததுபோல், இராமனுடைய கண்களாகிய தாமரை களும், சீதையின் முகமாகிய திங்களைக் காணமுடியாததால் குவியாதிருக்கிறது என்று இராமன் கண்மூடித் தூங்காதிருக் கின்றான் என்பதைக் கம்பர் குறிப்பிடுகிறார்.

இராமனது கண்களைச் செந்தாமரைக்கு உருவகப்பத்தியது இன்னொரு பொருளை இங்கே வெளிப்படுகின்றது. இராமனது கண்களைத் திருமகள் உறைவதாகக் கூறப்படும் தாமரை யாக உருவகித்துக் கூறியதால் தனது கண்ணுக்குள் உறைந்து இருந்தவளான சீதையை இழந்துவிட்டதனால் அவனால் கண் களை மூடி உறங்கமுடியவில்லை என்றும் பொருள் கொள்ள முடிகிறது. இராமனின் தூக்கமற்ற நிலையைக் கம்பர் இவ் வாறு மிக அழகாகக் கூறிவைத்திருப்பது நயம் மிக்கது.

இராமன் சீதையை நினைத்து வருந்துவதை 16 கலிவிருத்தச் செய்யுள்களிலே கம்பர் அழகாக வடித்திருக்கின்றார். அவற் றுள் ஒன்றை இங்கே தருகிறேன்.

***பூண்டமானமும் போக்கருங் காதலும்***
***தூண்டநின்றிடைதோமுறுமாருயிர்***
***மீண்டுமீண்டுவெதுப்பவெதும்பினான்***
***வேண்டுமோவெனக் கின்னமும் வில்லென்பான்***

*கம்ப. ஆரணிய. 1049*



tg.theeban@gmail.com

பூண்டமானமும் - தனக்கு நேரிட்ட அவமானமும், போக்கருங் காதலும் - நீக்கமுடியாத ஆசையும், தூண்டநின்று இடை - தூண்டுதலினால் நடுவிலே அழியாதுநின்று, தோமுறும் ஆருயிர் - வருத்தமடைகின்ற இராமனது அரிதான உயிரை, மீண்டுமீண்டுவெதுப்ப - அவை மாறிமாறி வருத்துவதனால், வெதும்பினான் - மனம் வருந்தியவனாக, வேண்டுமோ எனக்கு இன்னமும் வில்லென்பான் - எனக்கு இன்னமும் இந்த வில் வேண்டுமோ என்பான்.

சீதையைப் பறிகொடுத்த அவமானம் ஒருபக்கத்திலும், மீண்டும் கிடைப்பாளோ மாட்டாளோ என்ற துயர் மற்றொரு பக்கத்திலுமாக மாறிமாறி வருத்த, இடையிலே அகப்பட்டுக்கொண்டு, போகவும் மாட்டாமல் தவிக்கும் உயிருடையவனான இராமன், தான் வைத்திருக்கின்ற வில்லினால் எந்தப் பயனும் இல்லாதிருக்கிறதே நான் இந்த வில்லை வைத்திருப்பதால் என்ன பயன், என்று வருந்துவதாக இந்தச் செய்யுள் அவனது வருத்தத்தை அழகுபடக் கூறுகிறது. இந்தவகையாகப் பலவாறு மனம் வருந்திய இராமனுக்கு நீண்ட இரவாக இருந்த அந்த இரவு ஒருவாறு கழிகிறது. சீதையைப் பறிகொத்த இராமனின் தீராத வருத்தத்தை மேலும் சில செய்யுள்களிலே கம்பர் எடுத்துவருகிறார்.

***வெள்ளஞ் சிலம்புபாற்கடலின்***
***விரும்புந் துயிலைவெறுத்தளியும்***
***கள்ளுஞ் சிலம்பும் பூங்கோதைக்***
***கற்பின் கடலிற் படிவாற்குப்***
***புள்ளுஞ் சிலம்பும் பொழில் சிலம்பும்***
***புனலுஞ் சிலம்பும் புனைகோலம்***
***உள்ளுஞ் சிலம்புஞ் சிலம்பாவேல்***
***உயிருண் டாகும் வகையுண்டோ***

*கம்ப. ஆரணிய. 1064*

வெள்ளம் சிலம்பு பாற்கடலின் - வெள்ளம் ஒலித்துக்கொண்டிருக்கின்ற பாற்கடலில், விரும்புந் துயிலைவெறுத்து - தான் விரும்புகின்ற தூக்கத்தை வெறுத்து, அளியும் கள்ளுஞ் சிலம்பும் பூங்கோதை - வண்டுகளும், தேனும் ஒலிக்கப் பெறும் மலர்மாலையை அணிந்த கூந்தலையுடைய சீதையினது, கற்பின் கடலிற் படிவாற்கு - கற்பாகிய பெருங்கடலில் அமிழ்ந்துள்ள இராமனுக்காக, புள்ளும் சிலம்பும் - பறவைகளும் இரங்கி ஒலிக்கும், பொழில் சிலம்பும் - சோலைகளும் இரங்கி ஒலிக்கும், புனலும் சிலம்பும் - மலை அருவிகளும் இரங்கி ஒலிக்கும், புனைகோலம்உள்ளும் சிலம்பும் - அணி செய்த சீதையினது உருவமும் மனத்தினுள்ளே தோன்றி வருத்தும், சிலம்பாவேல் - அவள் கண்ணுக்குத் தோன்றி நடந்து வர அவளது காற்சிலம்புகள் ஒலிக்கவில்லை ஆதலால், உயிர் உண்டாகும் வகையுண்டோ - இராமனது உயிர் ஒழியாது தரித்துநிற்கும் வகை உள்ளதா ? இல்லை என்பதாம்.

காலை புலரும் வேளையில் இயல்பாகவே ஒலிக்கும் பறவைகள், வண்டுகள் முதலியவற்றின் ஒலிகள் இராமனின் வருத்தத்துக்காக இரங்கி ஒலிப்பதாகக் கம்பர் தற்குறிப்பேற்றமாக இச்செய்யுளை வடித்துள்ளார். பூங்கோதை என்பது மாலை அணிந்த கூந்தலை உடையவளான சீதைக்குச் சினையாகு பெயராகவும், பூமாலை போன்றவள் என்பதாக உவமையாகு பெயராகவும் இச்செய்யுளில் அமைந்துள்ளது. மேலும் கற்புக் கடல் என்று சீதைக்கு உருவக அடைமொழி கொடுத்துக் கற்பின் மிகுதியான ஆழ, அகலத்தைக் கம்பர் குறித்துக் காட்டியுள்ளதும் சிறப்பு. மேலும் சிலம்பும் என்னும் சொல்லைச் செய்யுள் முழுவதும் வைத்து ஓசையோடு கூடிய சொற்பின்வருநிலையணியில் கம்பர் பாடியிருப்பது சுவைமிக்கது.

சீதையைத் தேடிச்செல்லாமல் இப்படியே வருந்திக் கொண்டிருந்தால் என்னாவது ? இராவணன் சீதையை எடுத்துச் சென்ற இடத்தை தேடிச் செல்வோம் என இலக்குவன் கூற இருவரும் காட்டினிடையே நெடிய தூரம் சென்று ஒரு சோலையை அடைந்து அங்கே தங்குகின்றார்கள். அப்போது கதிரவன் மறைய இருள் மூடுகிறது. இராமன் அங்கே இருக்க, தண்ணீர் எடுத்து வருவதற்காக நீர்நிலை தேடி இலக்குவன் செல்கின்றான். நீரினைத் தேடித் தனியேசென்ற இலக்குவனை அயோமுகி

என்னும் அரக்கர்குலப் பெண் கண்டு அவன்மீது காதல் கொள்கிறாள். அவளது தன்மையைக் கம்பர் வருணிக்கின்ற செய்யுள்களுள் ஒன்று:

***உயிர்பினெருப்புமிழ் கின்றனளொன்ற***
***எயிற்றின் மலைக்குலமென்றினிதுண்ணும்***
***வயிற்றுவயக்கொடுமாசுணம் வீச***
***கயிற்றினிசைத்தமுலைக்குழிகண்ணாள்***

*கம்ப. ஆரணிய. 1079*

உயிர்பின் நெருப்பு உமிழ்கின்றனள் - மூச்சுவிடும்போது நெருப்பை உமிழ்கின்றவளும், எயிற்றின் ஒன்ற - பற்களினால் ஒருசேர, மலைக்குலம் மென்று இனிதுஉண்ணும் - யானைக் கூட்டங்களைக் கடித்து மென்று நன்றாக உட்கொள்ளுகின்ற, வயிற்று - வயிற்றையும், வயக்கொடுமாசுணம் வீச கயிற்றின் இசைத்த - வலியகொடியபெரும் பாம்புகளாகிய நீண்ட கயிற் றினால் சேர்த்துக்கட்டிய, முலைக்குழிகண்ணாள் - முலை களையும், குழிந்துள்ள கண்களையும் உடையவள்.

இவ்வாறு அயோமுகியின் தோற்றத்தை மிகக் கொடூரமாகக் கம்பர் வருணித்திருக்கிறார். இத்தகைய தோற்றத்துடன் அவள் இலக்குவனின் முன்னே வந்துநிற்க, அவனும் அவளைக் காண்கிறான். முன்னாளில் தம்மிடம் வந்து மூக்கரிபட்ட அப் பெண்ணின் கூட்டத்திலுள்ள ஒருத்தியாகவே இவளும் இருக்க வேண்டும் என்று எண்ணியவனாக, 'இந்த இருட்டு வேளை யில் நீ இங்கே எதற்காக வந்தாய்? நீ யார்?' என்று கேட் கிறான். தனது பெயர் அயோமுகி என்றும், அவனிடத்தே அன் பில்லாவிட்டாலும் ஆசை கொண்டுவந்ததாகவும் நாணமேது மில்லாது கூறுகின்றாள். 'இதுவரைக்கும் என்னை ஒருவர் கூடத் தொட்டதில்லை. என்னைத் தழுவி எடுத்து என்னுடன் புணர்ந்து எனது உயிரை விரைவில் கொடுத்தருள்வாய்,' என்று கேட்கிறாள். அவள் கூறியதைக்கேட்ட இலக்குவன் இப்படி மீண்டும் நீ கூறுவாயானால் என்னுடைய அம்புதான் அதற்கு விடைதரும் என்கிறான்.

***மற்றவளவ்வுரைசெப்பமனத்தால்***
***செற்றிலள் கைத்துணைசென்னியில் வைத்தாள்***
***கொற்றவநீயெனைவந்துயிர் கொள்ளப்***
***பெற்றிடினின்றுபிறந்தனெனென்றாள்***

*கம்ப. ஆரணிய. 1091*

மற்றவள் அவ்வுரைசெப்ப - இலக்குவன் தனது கருத்துக்கு மாறாக அவ்வார்த்தைகளைக் கூற, மனத்தால் செற்றிலள் - மனத்திலே சினம் ஏதும் கொள்ளாதவளாக, கைத்துணை சென்னியில் வைத்தாள் - தனது இரண்டு கைகளையும் தனது தலையிலே வைத்துக்கொண்டு, கொற்றவ நீ எனை வந்துயிர் கொள்ளப் பெற்றிடின் - தலைவனே நீ என்னிடம் வந்து என்னை உயிர்வாழும்படி செய்யப் பெறுவேனேயானால், இன்று பிறந்தனென் என்றாள் - இன்று நான் புதிதாகப் பிறந்த பய னைப் பெற்றவளாவேன் என்றாள்.

கொன்றுவிடுவேன் என்று இலக்குவன் கூறியபோதும் சின மேதும் கொள்ளாதவளாகக் கையிரண்டையும் தலைமேல் வைத்து அவனை வணங்கி, தான் வாழ்ந்த அத்தனை நாள் களும் பிறவாத நாள்களாகவே போய்விட்டன, அவனைக் கூடப்பெறுகின்ற நாளேதான் புதிதாகப் பிறந்த நாளாகக் கரு துவதாக அவள் கூறுவது பொருந்தாக் காமம் என்னும் பெருந் திணைக் காதலின் உத்தியாகக் கம்பர் இச்செய்யுளில் வெளிப் படுத்திக் காட்டியுள்ளார்.

***சுமித்திரைசேயவள்சொன்னசொலன்ன***
***கமித்திலன் நின்னிருகாதொடுநாசி***
***துமிப்பதன் முன்பகலென்பதுசொல்ல***
***இமைத்திலள் நின்றனளின்னநினைத்தாள்***

*கம்ப. ஆரணிய. 1093*





சுமித்திரைசேய் அவள் சொன்னஅன்னசொல் - சுமித்திரையின் மகனாகிய இலக்குமணன் அயோமுகி சொன்ன அச் சொற்களைக் கேட்டு, கமித்திலன் - மனம் பொறாதவனாக அவளை நோக்கி, நின் இரு காதொடு நாசிதுமிப்பதன் முன்பு அகல் என்பதுசொல்ல - உன்னுடைய இரண்டு காதுகளையும், மூக்கையும் அறுத்தொழிப்பதற்கு முன்பே இவ்விடத்தை விட்டு ஓடிப்போய்விடு என்று அவன் சொன்ன சொற்களைக் கேட்டும், இமைத்திலள் நின்றனள் - கண்களைக்கூட இமைக்காதவளாகத் திகைத்து நின்றவள், இன்னநினைத்தாள் - அடுத்து என்ன செய்வது என்று எண்ணுகிறாள்.

கம்பர் 'சுமித்திரைசேய்' என்று இலக்குமணனுக்கு அடைமொழி கொடுத்திருப்பது செய்யுளின் எதுகைக்காக மட்டுமல்ல, சுமித்திரையின் குண நலங்களையும் இங்கே மீட்டுக் காட்டுவதற்காகவும் என்று கொள்ளலாம். அயோத்தியிலிருந்து காட்டுக்குப் புறப்பட்டபோது, சுமித்திரையிடம் அனுமதியும், வாழ்த்தும் பெறுவதற்காக இலக்குவன் செல்கிறான். இராமனுடன் தான் செல்வதற்கு மறுத்துவிடுவாளோ என்ற ஐயத்துடன் சென்றவனுக்கு, 'இனி உனக்கு இராமன் இருக்குமிடம்தான் அயோத்தி, உனக்குத் தாயும் தந்தையும் சீதையும் இராமனும்தான், இராமனுடன் தம்பி என்ற உரிமையில் செல்லாதே. அடியாரின் ஏவல் செய்பவனாகச் செல்' என்று அவனை வாழ்த்தி அனுப்பிய அவளது குணநலத்தை மீண்டும் கம்பர் இங்கே நினைவூட்டுவதாக இதனைக் கொள்ளலாம்.

மேலும் இந்தச் செய்யுளைப் படிக்கும்போது இலக்குவனை அடைய விரும்பிய பெண்களின் மூக்கையும் காதையும் அரிந்து அவர்களை அவமானப்படுத்துவதே இலக்குவனுக்குப் பழகிப்போய்விட்ட ஒன்றோ என்றும் எள்ளலாக எண்ணத் தோன்றலாம்.

இலக்குவனின் சொற்களைக்கேட்ட அயோமுகி அவனைத் தனது குகைக்கு எடுத்துப்போய் அடைத்துவைத்து இவனது வெம்மையை அடக்கினால் இவன் தனது ஆசைக்கு உடன் படுவான் என்று திடமாகக் கருதி அவனருகே செல்கிறாள்.

***மோகனையென்பதுமுந்திமுயன்றாள்***
***மாகநெடுங்கிரிபோலியைவவ்வா***
***ஏகினளும்பரினிந்துவொடேகும்***
***மேகமெனும்படிநொய்தினின் வெய்யாள்***

*கம்ப. ஆரணிய. 1095*

வெய்யாள் - கொடியவளான அயோமுகி, மோகனை என்பது - மோகத்தை உண்டாக்கும் மாயையைச் செய்வதில், முந்தி முயன்றாள் - விரைந்து முயற்சி செய்தாள், மாகநெடுங்கிரி போலியைவவ்வா - வானத்தைத் தொடக்கூடிய பெரிய மலையையொத்த இலக்குவனைத் தூக்கிக்கொண்டு, உம்பரின் இந்துவொடு ஏகும்மேகமெனும்படி - வானத்தில் திங்களுடன் சேர்ந்து செல்கின்ற மேகம் என்று சொல்லும்படியாக, நொய்தினின் ஏகினள் - விரைந்து சென்றாள். இலக்குவனுக்கு மாகநெடுங்கிரியையும், அயோமுகி அவனைத் தூக்கிச் செல்வதை இந்துவோடு ஏகும் மேகத்துக்கும் கம்பர் உவமை கூறியுள்ளது நயம் மிக்கது.

மோகனை என்னும் வடமொழிச்சொல் இன்னொருவரை மயக்கித் தன்வயப்படுத்தக்கூடிய மாயையை ஏற்படுத்தும் உத்தியாகக் கூறப்படுகிறது. மோகினி, மோகனம் என்பவையெல்லாம் இச்சொல்லை அடியாகக் கொண்டவை. மலை போன்று இருக்கின்ற இலக்குவனைத் தூக்கிச் செல்வதற்கு இந்த மோகனை என்னும் செயலைப் பயன்படுத்தினாள் என்கிறார் கம்பர். இவ்வாறு அயோமுகி இலக்குவனைத் தூக்கிச் செல்வதைத் தொடர்ந்து அடுத்து எவ்வாறான திருப்பங்கள் ஏற்படப் போகின்றன என்பவற்றை அயோமுகிப் படலத்தின் அடுத்த பகுதியில் வரும் கம்பரின் கவிச்சுவையோடு படித்துச் சுவைக்க அடுத்த இதழ்வரை காத்திருப்போம்.

(வளரும்...)



shanmugarajah@thaiveedu.com

# தமிழ்வலை - 131


'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-131 வினா

### இடமிருந்து வலம்

1 போதை
2 வேப்பம் வடை
4 ஒரு தமிழக அரசியல்வாதியின் சுருக்கப் பெயர் (1-1)
7 இலங்கையர்கோனின் பேர்போன கதை
9 பகு
10 மோவாய்
11 கீழடியில் அகப்பட்ட பானையில் பொறித்த பெயர்
12 இலங்கையில் ஓர் ஊர்
16 தாராளமாக கொடை கொடு
17 திரட்டு


### மேலிருந்து கீழ்

1 பரீட்சார்த்தம்
3 கைக்கொள்
5 தமிழக திரைப்பட மையம்
6 மனைவிக்கு ஈந்த வரத்தினால் மாண்ட மன்னன்
7 ஒருவகைப் பாம்பு
8 முல்லைக்குத் தேரீந்த மன்னன்
10 யாழ் மாநகர புத்த கோயில்
13 திருமணம்
14 குதலை
15 செல்

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி**
**மினன்னஞ்சல் முகவரி:**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை-130-க்கான விடைகள்



## தமிழ்வலை-130 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

குமாரசாமி ரூபிகா, கிளிநொச்சி.
தேவாம்பிகை அரவிந்தன், இங்கிலாந்து
த.செ. நடராசா, ரொறன்ரோ.
ஏ.எஸ். மகாலிங்கம், ரொறன்ரோ.

### பரிசுபெறும் போட்டியாளர்

**தமிழ்வலை 130-க்கான சரியான விடை கிடைக்கப் பெறாததால், 131-ஆவது தமிழ்வலைக்கான பரிசு இரட்டிப்பாகிறது.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிவுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.




# அழுமூஞ்சி

- பஞ்சகல்யாணி

அந்தப் பயிற்சிப் பட்டறையில் பெண்களும் ஆண்களுமாக அறுபது பேர் கலந்து கொண்டனர். மூன்று நாட்கள் பயிற்சி. தங்குமிடம், உணவு வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. பயிற்சி நடந்த மண்டபத்தைச் சுற்றிவர மலைகள், மலைகளில் தொட்டுச் செல்லும் முகில்கள், தென்றல் காற்று, எங்கு பார்த்தாலும் பச்சை, சல சல என்று அருவிகள், மூலை முடுக்குகளிலெல்லாம் பல வண்ணப் பூக்களைத் தாங்கிய சிறு செடிகள். அந்தச் சூழலே மனதுக்கு ரம்மியமாக இருந்தது. அந்தப் பெரிய மண்டபத்தில் வட்டமாக நின்று எல்லோரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். 'நான் கலைச் செல்வி, செல்வி என்று என்னை அழைப்பர்...' என்றவாறு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள் செல்வி. அறிமுகத்தின் பின் பத்துப் பத்துப் பேராகச் சேர்ந்து ஆறு குழுக்கள் அமைக்கப்பட்டன. மூன்று பேர் குழுச் செயற்பாடுகளை வழிப்படுத்தினர். கலகலப்பாகவும் பயனுள்ளதாகவும் அந்தப் பயிற்சிப்பட்டறை அமைந்தது.

செல்வி யாருடனும் அதிகம் கதைக்கவில்லை. ஒட்டிக் கொள்ளவும் இல்லை. பாடசாலைக் காலத்திற் தன் கதைகளால் வகுப்பையே அடிக்கடி சிரிக்க வைத்த செல்வி சில காலங்களாக எங்கேயோ தொலைந்து போயிருந்தாள். தன்னைச் சுற்றி ஓர் எல்லையை அவள் வரைந்து வைத்திருந்தாள். அது தனக்குப் பாதுகாப்பானது என்று நினைத்துக் கொண்டிருந்தாள். ஆனாலும் அப்பப்ப தன் தோழிகளைக் காணும் போதெல்லாம் பழைய செல்வி வெளிவரவே செய்தாள். அவளுடைய எல்லையை ஊடறுத்து நண்பிகள் உள்ளே சென்றனர். அவளும் அதை விரும்பினாள். இந்தப் பயிற்சிக்கு அவளுடைய பள்ளித் தோழிகள் யாரும் வரவில்லை. இருந்தாலும் மற்றவர்களின் கதைகளைக் கேட்டு இரசித்துத் தனக்குட்சிரித்தவண்ணம் திரும்பியவள், அடுத்த குழுவிலிருந்து 'அவன்' தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.



தான் அவளைப் பார்ப்பதை அவள் கண்டுவிட்டாள் என்பதற்காக, அவன் கண்ணை வெட்டி முகத்தை உடனே திருப்பவில்லை. ஆறுதலாகவே தன் பார்வையை அவள் மீதிருந்து எடுத்தான்.

'யாரிவன்? ஏன் என்னை உற்றுப் பார்க்கிறான்? அறிமுகப்படுத்தும்போது இவனை நான் கவனிக்காமல் விட்டுவிட்டேனே. சரி பார்ப்போம்' என்று நினைத்துக்கொண்டு தன் குழு வேலையில் மூழ்கிவிட்டாள் செல்வி.

மீண்டும் அவன் நினைப்பு வரவே அந்தப் பக்கம் திரும்பினாள். அவன் இவளைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தான். அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. இப்படி இன்னும் இரு தடவைகள் அவன் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதை செல்வி கண்டு கொண்டாள். ஆனால் யாருடனும் அதுபற்றிக் கதைக்கவில்லை. அன்றைய நாள் முடிந்து எல்லோரும் தங்குமிடம் சென்றுவிட்டனர். செல்வியும் தனது அறையை அடைந்தாள். 'ஒருவேளை அவன் எங்கேயாவது முன் பின் என்னைக் கண்டிருப்பானோ? அல்லது அவன் வீட்டில் யாரேனும் என்னைப் போல இருப்பார்களோ? இப்படி விவஸ்தை இல்லாமல் என்னையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருக்கிறான்' என்று செல்வி மனதுள் நினைத்துக் கொண்டாள்.

tg.theeban@gmail.com

அடுத்தநாள் காலையில் பயிற்சிப் பட்டறைக்கு வெளிக்கிட்ட செல்வி அவன் மண்டபத்தை நோக்கி முன்னே நடந்து சென்று கொண்டிருப்பதைக் கண்டாள். அவள் அவன் பின்னாலேயே போய்க் கொண்டிருந்தாள். 'கடவுளே இவன் திரும்பிப் பார்க்கக் கூடாது' என்று கடவுளிடம் ஒரு முறை வேண்டிக் கொண்டாள். அங்கே இங்கேயென்று திரும்பாது நேராகவே நிமிர்ந்து நடந்து கொண்டிருந்தான் அவன் தானும் தன்பாடுமாகப் போய்க் கொண்டிருந்தான். அவன் கையால் ஏதோ பாட்டிற்குத் தாளம் போடுமாற் போல இருந்தது.

அன்று முழுக்க அவனை அவதானித்ததில் அவன் செல்வியைப் பார்த்ததாக இல்லை. அவன் தனது குழு சார்பில் அற் புதமான ஓர் அறிக்கையைத் தயாரித்து அளித்தான். உயரமான, அளவான உடல்வாகு. எடுப்பான குரல், அழகான உச்சரிப்பு, நேர்த்தியான ஆடை. அந்த இடத்தில் அவன் ஒரு நாயகனாகவே தெரிந்தான்.

'இந்த ஆள் பெரிசா எல்லாரோடையும் சேராதாம், அப்பப்ப இருந்தாப் போலதான் கதைக்குமாம். எப்பவும் ஏதோ யோசினையில் இருக்குமாப் போலதான் இருக்குமாம். ஆனால் ஆள் பெரிய கெட்டிக்காரன் போல கிடக்கு' என்று செல்வியின் குழுவில் அவனைப் பற்றிக் கதைத்துக் கொண்டார்கள்.

'ஆனாலும் என்னை அடிக்கடி பார்க்கிறானே!' என்று மனதுள் நினைத்துக் கொண்டாள் செல்வி.

அன்று, இரண்டாம் நாள், பயிற்சி முடிந்து வழமை போலவே எல்லோரும் இருப்பிடம் போய்க் கொண்டிருந்தனர். செல்வி இடைக்கிடை திரும்பி அவன் பின்னால் வருகிறானோ என்று பார்த்துக் கொண்டாள். ஆனால் அப்படியேதும் நடக்கவில்லை.

இறுதி நாள், புது இடத்திற்குப் பழக்கப்பட்டுவிட்டாலும் எல்லோர் முகத்திலும் சிறு களைப்புத் தெரிந்தது. அது எல்லோரும் மற்றவர்களுடன் தமது அனுபவங்களைப் பகிர்ந்து மகிழும் நாள். மண்டபத்தில் ஓரமாகத் தேநீர்க் கோப்பையுடன் இருந்த செல்வியை நோக்கி அவன் வந்து கொண்டிருந்தான்.

தன்னை நோக்கி அவன் வருவது செல்விக்குப் பதற்றத்தை ஏற்படுத்தியது. நெஞ்சு படபட என அடித்துக் கொண்டது. வியர்த்தது. அவன் கிட்ட வந்ததும் 'செல்வி உங்களை எனக்குப் பிடிச்சிருக்கு' என்று கூறிவிட்டு, அதே பார்வையால் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். முதன் முறையாக அவனது உதட்டில் ஒரு புன்னகையை அவள் கண்டாள். அவள் அவசரப்பட்டு இருக்கையிலிருந்து எழுந்தாள். வாழ்க்கையில் முதன் முதலாக ஒரு ஆண் 'உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு' என்று அவளுக்குச் சொன்ன தருணம். உணர்வு பூர்வமான தருணம். காது மடல்களெல்லாம் சிவந்து, மயிர் கூச்செறிந்து, என்ன சொல்வதென்று தெரியாமற் தடுமாறியவளை இருத்தித் தனது சிறு விரலில் இருந்த மோதிரத்தைக் கழற்றி அவள் கையிற் திணித்துவிட்டுச் 'செல்வி! உங்களை எனக்கு நிறையவே பிடிச்சிருக்கு' என்றான்.

என்னதான் நடக்கிறது? சுற்றி இருப்பவர்கள் இதைக் கண்டார்களோ? என்று ஒருமுறை சுற்றிப் பார்த்தாள் செல்வி. யாரும் அவர்களைப் பார்த்ததாக இல்லை. எல்லோரும் தம் பாட்டிற் கூடிக்கூடிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் ஏதோ இரண்டு கண்கள் தங்களை எங்கிருந்தோ பார்த்துக் கொண்டிருக்கும் என்று செல்வி நினைத்துக் கொண்டாள். அவன் கதிரையைச் சிறிது தூரம் தள்ளிப் போட்டு அமர்ந்து கொண்டான்.

இந்த விடயத்தை எவ்வாறு கையாள்வது என்று செல்விக்கு விளங்கவில்லை. நான் இரண்டு குழந்தைகளின் தாய் என் பதைக் கூறினால் என்ன? என்று நினைத்தவள், சிலவேளை 'அதற்கென்ன' என்று அவன் சொன்னாலும் சொல்லிவிடுவான் என்று நினைத்து அவதிப்பட்டுக்கொண்டிருந்தாள். திடீரென, 'நேற்று உங்களுடைய அறிக்கை மிகவும் நன்றாக இருந்தது, எனக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள்' என்று அவசரமாகச் சொல்லிவிட்டு முகத்து வியர்வையைக் கையாற் துடைத்தாள். 'நன்றி, உங்கள் குழந்தைகளை யார் பார்த்துக் கொள்கிறார்கள்?' என்று கேட்டபடி தனது கைக்குட்டையை அவளுக்கு நீட்டினான் அவன்.

இது எங்கே போய் முடியப் போகிறதோ என்று தனக்குள் எண்ணியபடி கையிலிருந்த அவனது மோதிரத்தை அவன் பக்கம் நீட்டினாள் செல்வி. 'இல்லை அது உங்களிற்குத்தான். வைத்துக் கொள்ளுங்கள்' என்றுவிட்டு எழுந்து சென்றுவிட்டான் அவன். 'அட எழும்பிப் போய்விட்டான். இந்த மோதிரத்தை எப்படி வீட்டிற்குக் கொண்டு செல்வது?' என்று அவள் பதற்ற மடைந்தபடி அதைத் தன் கைப்பைக்குள் வைத்துக் கொண்டாள். அவ்விடத்தினின்றும் அகன்று சென்றாள்.

செல்வியின் மனம் பரபரத்துக் கொண்டிருந்தது. நடந்ததை நினைக்கையில் மாறுபட்ட உணர்வுகள் தோன்றி மறைந்தன. 'உங்களை எனக்குப் பிடிச்சிருக்கு' என்ற வசனம் அவள் மனதில் எதிரொலித்துக்கொண்டிருந்தது. ஒரு பக்கம் பயமும் மறுபக்கம் சந்தோசமுமாக இருந்தது. சுற்றிவர இருப்பவர்கள் கதைத்தது ஒன்றும் அவள் காதில் ஏறவில்லை. உடம்பு அந்த மண்டபத்தில் இருந்தாலும் உணர்வுகள் எங்கெல்லாமோ சஞ்சரித்துத் திரிந்தன. அவள் மனம் கூட்டத்திலிருந்து விலகித் தனிமையை நாடியது.

மீண்டும் அவன் வந்தான். அவன் கையிற் சிறு துண்டு பேப்பர். அதைச் செல்வியிடம் நீட்டினான். 'ஒருவேளை தொலைபேசி இலக்கமாய் இருக்குமோ?' என்று நினைத்தபடி அதை வாங்கினாள். அது ஒரு சிறு குறிப்பு.

செல்வி!

எப்பொழுதாவது நீ உடைந்து போகையில் இப்படி ஒருவன் உனக்காக உள்ளான் என்று நினைத்துக்கொள். என்று அதில் எழுதியிருந்தது.

'உங்களுக்காகவும்தான்' என்றாள் செல்வி.



Panchakalyany@thaiveedu.com

பிரதீப்பிற்கு மனது ஒன்றவில்லை. வந்ததிலிருந்து தான் அங்கும் நடித்துக்கொண்டிருக்கிறோமோ என்று தோன்றியது. அவனுடைய சிரிப்பும், பேச்சும் அவனுக்கே செயற்கையாய் இருந்தது. கேட்கப்படும் கேள்விகளுக்கு சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் உளறுகிறோமோ என்றுகூடத் தோன்றியது. தனது ஒவ்வொரு பதில் கண்டும் ஊடகவியலாளர் தொடர் கேள்வி கேட்கத் தயங்குவதிலிருந்து அது புரிந்தது.

ஒன்றிலிருந்து ஒன்று பிறப்பதாகத்தான் பேட்டி அமைய வேண்டும். அதுதான் உண்மையான பேட்டிக்கு அழகு. அம்மாதிரியான கேள்விகளைக் கேட்பதும், அதற்கான தகுதியோடிருப்பதும் பேட்டியாளரின் சாமர்த்தியம். அதற்கு எவ்விதத் தயக்கமும் இல்லாமல் பேட்டி கொடுப்பவரின் பதில்கள் தெளிவாக அமைவது அதைவிடச் சாமர்த்தியம். ஆனால் ஒன்று அம்மாதிரிக் கேள்விகளும், பதில் வருவதின் எதிர் வினையான குறுக்குக் கேள்விகளும் அரசியல்வாதிகளுக்கும், ஆட்சியாளர்களுக்கும்தான் பொருந்தும். தனக்கு அந்த முறையைக் கடைப்பிடித்தால் பேட்டி எடுப்பவர் அத்தனை சிரமப்பட வேண்டியதில் லைதான். ஆனாலும் அதற்கும் ஒரு பயிற்சி வேண்டும்தான்.

அல்லாமல் இம்மாதிரியான கேள்விகள்தான் கேட்கப்படும் என்று முன்னரே அறிவித்து, அவற்றை அப் பொழுதுதான் கேட்பதுபோல் கேட்டாலும் பார்வையாளர்களுக்கு அது வெட்டவெளிச்சமாகிவிடும் வாய்ப்பு உண்டு. தயாரிக்கப்பட்டவையில் ஒன்றுக்கொன்றான தொடர்பு பெரும்பாலும் இருக்க வாய்ப் பில்லை. அப்படியே இருந்தாலும் அது பேட்டி கொடுப்பவரை திருப்திசெய்யும் கேள்விகளாகவே அமையக்கூடும் அபாயம் உண்டு.

# வெளியே - உள்ளே...!

**- உஷாதீபன் -**

tg.theeban@gmail.com



எப்படி இருந்தால்தான் என்ன? இது தேவையா? என்று ஆரம்பத்திலேயே மனதுக்குத் தோன்றிவிட்டது பிரதீப்பிற்கு. ஆனாலும் மறுக்க முடியவில்லை. மறுத்தால் ஊடகங்களின் ஆதரவு கிடைக்காது. குறிப்பாக ஒதுக்கப்படும் அபாய முண்டு. அதனால் தன் தொழில் படிப்படியாகப் பாதிக்கப் படும். இதுதான் பிழைப்பு என்று வந்தாயிற்று. வாழ்க்கைக்கு ஆதாரமே இனி இவைதான் என்று காலம் கவனமாய்க் கழிந் துகொண்டிருக்கிறது. அதிலிருந்து பிறழ்ந்துவிடக் கூடாது. தொழிலைக் கெடுத்துக்கொண்டதுபோல் ஆகிவிடக்கூடாது.

யோசனையிலேயேதான் உட்கார்ந்திருக்கிறான். உடம்பு சரி யில்லையா சார் என்று கரிசனையோடு கேட்கிறார் பேட்டி யாளர். அதெல்லாம் ஒண்ணுமில்ல... என்கிறான் இவன். அப் போது காமிரா வேறு திசையில்.

மனசுதான் சரியில்லை... என்று சொல்லலாம்தான். சொன் னால், ஏன்... என்னாச்சு? என்று அடுத்த கேள்வி வரும். பின் அதற்குப் பதில் சொல்லவேணும். அந்த பதிலை அங்கு சொல்ல முடியாது. அது மனதுக்குள் தனக்கு மட்டுமே சொல் லிக்கொள்ளும் பதில். வெளியே சொன்னால் விபரீதம்தான். அப்படிச் சொல்வதற்கு இங்கே வந்திருக்கவே வேண்டாமே என்று ஆகிவிடும். வந்த இடத்திலும் போலியாய்த்தான் உட் கார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. ஆனால் யதார்த்தமாய் இருப்பதுபோல் காட்டிக்கொள்ள வேண்டியிருக்கிறது. நீங் களும் நானும் ஒண்ணுதான் என்பதைப்போல. அதுவே நடிப் புதான் என்று தோன்றுகிறது. மனதுக்கு நியாயமில்லை. அப் பொழுது அது நடிப்புதானே என்று நினைத்துக்கொள்கிறான்.

இன்று ஏதோ கொஞ்சம் காசு சேர்ந்துவிட்டது என்பதற்காக, காரில் வந்துபோகிறோம் என்பதற்காக அவர்களை விட உசத்தி என்று ஆகிவிடுமா? காசு சேர்ந்தால் உசத்தியா? கல்வியும், கேள்வியும் தானே செல்வங்கள்? அறிவு மெய்ப் படுவதுதானே வெளிச்சம். அதுதானே அழியாச் செல்வம்? என்னவோ வாழ்வாதாரம் கொஞ்சம் தாராளம் என்றால் எல் லாத் தரமும் உயர்ந்துவிட்டது என்ற பொருளா?

வேகத்தடை படத்துல அசுரவேகத்தைக் காண்பிச்சிருக்கீங் களே...? கேள்வி வந்து விழுந்தது அரங்கில். யார் கேட்டது என்று பார்த்தான். எதிரே இருந்த கூட்டத்தில் மேல் வரிசை யில் ஒரு பையன் கையைத் தூக்கினான்.

அது காமிரா மேனோட, எடிட்டரோட திறமைங்க... சொல்லத் தான் நினைத்தான். வாய் நுனிவரை வந்துவிட்டது. சொல்லா மல் நிறுத்தினான். பொய்மை தடுக்கிறது. மனச்சாட்சி நிறுத் துகிறது. சொல்லாதே...!

டைரக்டரோட எதிர்பார்ப்பு அதுதானே... அதைப் பூர்த்தி செய்தாகணுமில்லையா? அதைவிட நீங்களெல்லாரும் அப் டித்தானே விரும்புறீங்க... உங்க விருப்பம்தான் என் விருப் பம். அதாவது உங்கள் விருப்பத்தைப் புரிந்துகொண்டு உங் கள் நேரத்தை, பணத்தை நீங்கள் மயங்கிய வேளையிலே பிடுங்கி, நான் என்னை உயர்த்திக் கொள்வது. உங்களை ஏமாற்றி நிற்பது...

சொல்லி முடித்ததும், கையொலி அரங்கத்தைப் பிளந்தது. உறாய்ய்ய்ய்... என்று பலரும் இருக்கையிலிருந்து எழுந்து குதித்தார்கள்.

பிரதீப், பார்த்துங்க... விழுந்துடப்போறீங்க... என்று இங்கி ருந்து கத்தினான். உண்மையான கரிசனத்தில் வந்த வார்த் தைகள் அவை.

உண்மையிலேயே அந்த ஷாட் மெல்ல எடுத்தது தான். ஆனால் அதற்கு முதல் காட்சியின் தொடர்ச்சியாக அந்த சீனில் அப்படி வந்துதான் குதித்தாக வேண்டும். அது தொழி னுட்பக் கலைஞர்களின் கைவண்ணம். அது தன்னை உய ரத்தில் கொண்டுவைக்கிறது.

முதமுதல்ல ஹீரோயினை நீங்க சந்திக்கிற எடத்துல ஒரு மாதிரி உதட்டை மடக்கி நாக்க சுழட்டுவீங்களே? அதக் கொஞ்சம் செய்து காண்பீங்களேன்...? யாரோ ஒரு பெண் ரசிகை கேட்டது. உடனே உற்உறா... என்று சத்தமெழுந்தது. பிரதீப்பிற்கு வெட்கமாக இருந்தது. இதையெல்லாம் எதற்குக் கேட்கிறார்கள் என்று தோன்றியது. அது ஏதோ அந்த நேரத் திய காட்சிக்காகதான் செய்தது. அதையே நாலு படத்தில் செய்தால் அதுவும் அலுத்துவிடும். பிறகு வேறு என்னமாதிரி செய்யலாம் என்று யோசிக்க வேண்டும். இதைக்கண்டு மயங் கியதுபோல் பேசுகிறதே இந்தப் பெண். பெற்றோர்கள் இது இப்படி இங்கு உட்கார்ந்துகொண்டிருப்பதைப் பார்த்தால் வயிற்றெரிச்சல் கொள்ளமாட்டார்களா? இதற்காகவா பெற் றோம் என்று நினைக்கமாட்டார்களா? இந்தப் பெண்ணைப் படிக்கப் பட்டணம் அனுப்பியது இந்தக் கண்றாவிக்காகவா என்று வேதனையடையமாட்டார்களா? அசட்டுப்பிசட்டு என்று இதென்ன கேள்வி?

தன்னையே நான் காதலிப்பதாகக் கற்பனைசெய்து கொள் ளுமோ? கைக்கிளையாக நினைத்துக்கொண்டிருக்குமோ? இப்படி எதையாவது நினைத்துக்கொண்டு, மயங்கிச் சரிந்து கொண்டிருந்தால் இதன் படிப்பு என்னாவது? பெற்றோர்கள் இதன்மீது வைத்திருக்கும் நம்பிக்கை என்னாவது? நான் ஏற் கனவே கல்யாணமானவன் என்பதாவது இதற்குத் தெரியுமா? யார் யாரையோ காதலிப்பது போல் படங்களில் நடிக்கும் நான் உண்மை வாழ்க்கையில் ஒரு மனைவியை அரணாகக் கொண்டிருப்பவன் என்பதாவது இதற்குப் புரியுமா? சத்திய மாக அவளுக்குத் துரோகம் செய்யாதவன் என்ற நேர்மை அறியுமா?

இதை நினைத்தபோது இதே மாதிரி கடந்த தீபாவளிக்கு நடந்த இன்னொரு பேட்டியின்போது வேறொரு ரசிகை தன்னுடன் கைகோர்த்து ஆடியதும், மயங்கியது போல் நழுவி தன்மேல் வேண்டுமென்றே விழுந்ததும், தவிர்க்க முடியாமல் தான் அதைப்பிடித்துக் கீழே படுக்க வைத்ததும், அதைத் தொலைக்காட்சியில் நேரடியாகப் பார்த்துவிட்டு தன் மனைவி உண்மைலயே அந்தப் பொண்ணு மயங்கிருச்சா? இல்ல பாவலாவா என்று கேட்டதும், ச்சே... நா ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும் போல்ருக்கே... என்று சற்றுக் கலங்கிப் போனதும்... இப்போது அந்த மாதிரி ஏதும் நடந்துவிட இடம் கொடுக்கக் கூடாது என்று பிரதீப்பின் மனம் அந்தக் கணத்தில் சுதாரித்தது. வெறுமே படத்தில் உதட்டைச் சுழித்ததற்கே இப்படியென்றால் நேரில் ஏதாவது அதீதமாக சேஷ்டைகள் செய்தால் எல்கை மீறிவிடும் போலிருக்கிறதே...!

அந்தக் காலத்திலும் நடிகர் நடிகைகளை ரசிகர்கள் விரும்பினார்கள்தான். ஆனால் இந்த அளவுக்கா? வெறியர்களாயிருந்தார்கள். அது அவர்களின் நடிப்பிற்காகவும், ஏற்றுக் கொண்ட பாத்திரங்களின் வாயிலாக அவர்களுக்கு ஏற்பட்டிருந்த இமேஜ் காரணமாகவும்தான். ஆனால் சொந்த வாழ்க்கையைச் சிதைத்துக்கொள்ளும் அளவுக்கு இப்படியா? இதனால் இந்த சமூகத்தில் எப்படிப்பட்ட பாதிப்புகளும் ஏற்பட வாய்ப்புள்ளனவே? ஏன் வெறும் சினிமா என்று பார்க்கமாட்டேன் என்கிறார்கள்? வாசலோடு விட்டுவிட்டுப்போக வேண்டியதுதானே? அப்படியென்ன தேசத்தொண்டா ஆற்றுகிறார்கள் இங்கே? கேளிக்கை ஆக்குவதன் மூலமாக ஒருவகையான வியாபாரம்தானே செய்கிறார்கள்? இதைப்போய் இத்தனை சீரியசாய் எடுத்துக்கொள்ளவேண்டும் என்கிற அவசியமில்லையே? ஏன் இந்த இழிநிலை?

நடிப்பு என்கிற தொழிலில் இப்படியெல்லாம் எதையாவது புதுசுபுதுசாகச் செய்யத்தான் வேண்டியிருக்கிறது. அது இவர்களுக்குப் பிடித்ததாக ஆகிவிடுகிறது. அதனால் தன் பிழைப்பில் மெருகு கூடுகிறது. இன்னும் கொஞ்சகாலம் தள்ளலாம்தான். ஓடுற மட்டும் ஓடட்டும். பிறகு பார்த்துக்கலாம்.

உள்மனதுக்குள் இப்படியான எண்ணங்கள்தான் இருக்கின்றன. எதற்காக இப்படி வந்து பழி கிடக்கிறார்கள்? இவர்களுக்கெல்லாம் வேறு வேலையே இல்லையா? அவரவர் வீடுகளுக்கு என்று செய்யவேண்டிய காரியங்களே இருக்காதா? அவரவர் கல்வி, வேலை என்று எதுவும் கிடையாதா? வேலை வெட்டி என்று எதுவுமில்லையாயினும், பொழுதை இப்படியா போக்கவேண்டும்? என் தொழில் இது, நான் பார்க்கிறேன். அதுபோல் அவர்கள் தொழிலை அவர்கள் பார்க்க வேண்டாமா?

எங்க தொழிலே இன்னைக்கு உங்களை நேர்ல பார்க்கிறதுதான் சார்... அடக்கடவுளே...! ஏன்யா உங்க பொன்னான நேரத்தை இப்டி வேஸ்ட் பண்ணிட்டு இங்கவந்து இப்டி உட்கார்ந்து கிடக்கீங்க? இப்டியெல்லாம் நேரத்தை ஒதுக்கிட்டு வந்து ஒரு சினிமா நடிகனைப் பார்க்கிறதும், அவனோட பேசணும்னு ஆசைப்படுறதும், உங்களுக்கு வெட்கமா இல்லையா? இது என் தொழில், நான் பார்க்கிறேன்... அதுபோல் உங்க பிழைப்பை நீங்க பாருங்க... ஏன் உங்க காலத்தை விரயம் பண்ணுறீங்க...?

இதை நினைத்தபோது இவனுக்கே சுருக்கென்றது. உன்னை யாரு இந்த டி.வி. நிகழ்ச்சிக்கு வரச்சொன்னது? என்னால முடியாது. நான் நடிகன். நடிக்கிறேன். படங்களைப் பார்க்கிறது மக்களோட பொழுதுபோக்கு. அதோட முடிஞ்சுபோச்சு... அப்புறம் அவுங்கவுங்க சொந்த வேலையைப் பார்க்க வேண்டிதானே... எதுக்காக என்னைப் பார்க்க இங்க வரணும்? டி.வி.க்காரன் கூப்டபோதே நான் வரலைன்னு சொல்லியிருக்கணும்... ஏதோ வந்திட்டேன். இனிமே இப்டி வரமாட்டேன்... இது தான் கடைசி... ரசிகர்கள்ங்கிற பேர்ல மக்களை, இளைஞர்களை ஏமாத்த நான் தயாரில்லை.

பார்த்திட்டீங்கல்ல... போயிட்டுவாங்க... என்று சொல்லி எழுந்து விடலாமா என்று தோன்றியது பிரதீப்பிற்கு. தொலைக்காட்சிகளுக்கு அவர்கள் பிழைப்பு ஓடியாக வேண்டும். இப்படி ஏதாவது வருஷத்திற்கும் செய்துகொண்டிருந்தால்தான் ஆயிற்று. அதற்கு நம்மையும் டிஸ்டர்ப் பண்ணுகிறார்கள். சும்மா இருக்க விடமாட்டேன் என்கிறார்கள். பிழைப்பிற்கு நடித்துவிட்டு வீட்டிற்கு வந்து அக்கடா என்று கிடப்போம் என்றால் விடுவதில்லை.

சிறுவயதில் ஊரைவிட்டு ஓடிவந்ததே நடிப்பதற்காகத்தான். ஊரில் இருந்த காலத்திலேயே நடிகனை ஓடிப்போய்ப் பார்ப்பது என்பது பிடிக்காது. ஆனாலும் நாமும் நடிகன் ஆக வேண்டும் என்கிற ஆசை மட்டும் மனதில் ஏனோ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டேயிருந்தது. வந்து, நாய்பட்ட பாடுபட்டு எப்படியோ தப்பிக்கிப்பி நடிகனாகியாயிற்று. அத்தோடு விடுகிறார்களா? ரசிகர் மன்றம் வைக்கவா என்று வந்து நிற்கிறார்கள். தயவுசெய்து இதைமட்டும் கேட்காதீர்கள் என்று சொல்லியாயிற்று. எப்படித்தான் அந்தத் துணிச்சல் வந்ததோ? ரசிகர்கள் தாங்க உங்களை ஃபீல்டுல நிறுத்துற வங்க... அவுங்க இல்லன்னா நீங்க இல்ல... அவுங்கள வச்சிதான் நீங்க... ரசிகர் மன்றம் இருந்தாத்தான் ஊருக்கு ஊர் உங்க கட்டவுட்டுக்கு மாலை போட்டு, பாலாபிஷேகம் பண்ணி, கொடி, தோரணம் கட்டி, ஒண்ணுமில்லாத குப்பைப் படத்தக்கூட என்னவோ இருக்குபோலிருக்குங்கிறமாதிரி ஓடவச்சு, வசூல் திரட்டி, ஆளுகளத் தியேட்டருக்கு இழுத்திடுவாங்க... அடிச்சுப்பிடிச்சு அவுங்களோட முயற்சியினாலதான் வசூலாகும் படம். உங்கமார்க்கெட்டும் டவுனாகாம நட்டமாநிக்கும்...

எல்லாஞ் சரிதான். என்னவோ என்மனசாட்சி ஒத்துக்கலை... யோசிப்போம்... - சொல்லி அனுப்பியவன்தானே... பிறகு யாரும் வரவில்லையே... படங்கள் நல்ல தரமாய்த் தானாகவே அமைந்துவிடுகின்றன. அதனால் பிழைத்துக்கொண்டிருக்கிறது. தான்செய்தது சரியா, தவறா ?

தரமாய்த்தான் அமைந்துவிடுகின்றனவா அல்லது என்னவோ ஒரு நேரத்திற்கு ஓடிக்கொண்டிருக்கின்றனவா ? அந்தக் காலத்தில் ஊரில் அப்பாவிடம் அடிவாங்கிக்கொண்டேனும் திருட்டுத்தனமாய் விடாமல் ரெண்டாம் ஆட்டம் சினிமாபோய் விட்டு வந்துபடுத்துக்கொண்டு அந்த ராத்திரி ரெண்டுமணியிலும்கூடத் தூக்கம் வராமல் புரண்டுகொண்டு பார்த்த சினிமா வைப்பற்றியே நினைத்துக்கொண்டிருந்தோமே, அந்தமாதிரித் தூங்க விடாமல் தொந்தரவு செய்த படங்களா இன்றைய படங்கள் ? அப்படிப் படங்களா என்னுடைய படங்கள் ?

மனிதச் சிந்தனையை, அவனுடைய குணாதிசயங்களை, ஒழுக்கத்தை, பண்பாட்டை மேன்மைப்படுத்தும் திரைப்படங்களாகவல்லவா அன்று வந்துகொண்டிருந்தன ? தான் இதுவரை அப்படி ஒரு படத்திலாவது நடித்திருக்கிறோமா ? எந்தத் திரைப்படங்களைப் பார்த்துவிட்டு மனசைப் படாத பாடு படுத்தியதோ அதே மாதிரித் திரைப்படங்கள் ஒன்றாவது இன்று வருகின்றனவா ? தான் இத்தனை புகழ்பெற்ற பின்பும் அம்மாதிரி ஒரு படத்திலாவது நடித்தாக வேண்டும் என்ற துணிச்சல் தனக்கு வருகிறதா ? இன்றுவரை தன் விருப்பத்திற்கு ஒரு படத்திலாவது நடித்திருக்கிறோமா ?

என்ன எக்ஸ்பிரஷன் காண்பிக்கிறேன் என்று என்படத்தை இப்படிப் பார்க்கிறார்கள் ? எந்தக் காட்சியில் தத்ரூபமாக நடித்திருக்கிறேன் என்று இப்படிப் புகழ்ந்து தள்ளுகிறார்கள் ? இந்த சமுதாயத்திற்கான என்ன செய்தியை என் படங்கள் சொல்லுகின்றன என்று இப்படி ஓட வைக்கிறார்கள் ? இன்னும் பத்து வருஷத்திற்கு நான் ஃபீல்டில் தாங்க வேண்டும் என்பது போலல்லவா வசூலை அள்ளிக் கொட்டுகிறார்கள் ?

நன்றாக மனசாட்சிப்படி யோசித்தால் இது இந்தச் சமூகத்திற்குச் செய்யும்பெரிய துரோகமல்லவா ? திரைப்படம் என்பது இந்த மக்களிடம் எத்தனை எளிதாகப் போய்ச் சேரும் ஊடகம் ? அவர்கள் மனதில் எத்தனை மகிழ்ச்சியாய் இடம்பிடிக்கும் ஒரு கருவி ? அதை இப்படிக் கன்னாபின்னாவென்று பயன்படுத்தலாமா ? எனக்குத் தொழில்தான் அது. ஆனாலும் அதிலும் கொஞ்சமேனும் ஒரு தொண்டு மனப்பான்மை வேண்டாமா ? இப்படியா இளைய சமுதாயமும், சமூகமும், எண்ணங்களாலும், சிந்தனைகளாலும், கெடுவதற்கு வழி வகுப்பது ?

அவனவன் பாட்டை அவனவன் தான் பார்த்துக் கொள்ள வேண்டும். யார் இவர்களை வந்துபார்க்கச் சொன்னார்கள் ? குப்பையாய்த்தான் படம் எடுக்கிறார்கள் என்று வராமல் இருக்க வேண்டிதானே ? வந்து, காசையும் வீணாக்கி, நேரத்தையும் வீணாக்கி, உடலையும் கெடுத்துக்கொண்டு, எதற்காக இப்படி ஒரு நஷ்டத்தை வலிய எதிர்கொள்ள வேண்டும் குப்பையை எடுத்தால் பார்க்கமாட்டோம் என்று ஒட்டுமொத்தமாய் ஒதுக்கினால் எல்லாம் மாறிப்போகிறது. அப்பொழுதாவது என்னை வைத்து கொஞ்சம் நல்ல படமாய் எடுப்பார்கள் இல்லையா ? நானும் என் ஆழ்மனதில் உள்ள ஆதங்கப்படி நடிக்க வந்ததின் அர்த்தத்தை நிலைநிறுத்தலாமில்லையா ?

இப்படி டி.வி. பேட்டி, பத்திரிகைப் பேட்டி, என்று என் நேரத்தையும் வீணாக்கி, அவர்கள் நேரத்தையும் வலிய வீணாக்கி இந்த சமுதாயத்தையும் அறிந்தோ அறியாமலோ கெடுத்துக் குட்டிச்சுவராக்கி ஏனிப்படி எல்லாமும் கெட்டவைகளாய் நடக்கின்றன இங்கே ?

என்று இவையெல்லாம் மாறும் ? என்று மனிதர்கள் எல்லோரும் நற்சிந்தனையை மட்டும் அடிப்படையாய்க் கொண்டு வாழ்வார்கள் ? என்று இந்த சமுதாயம் உருப்படும் ?

சார்... சார்... பிரதீப் சார்... என்னாச்சு இன்னைக்கு உங்களுக்கு... முடிச்சிக்குவோம் சார்... வேறொரு நாளைக்குப் பார்த்துக்குவோம்... காமிரா சுற்றியுள்ள மேடையின் அமைப்பை படிப்படியாகக் காட்டிக்கொண்டே விலகுகிறது.

ஏதோவொருவகையில் தனது எதிர்ப்பை இன்று மௌனமாக வேனும் பதிவுசெய்துவிட்டதான திருப்தியில் மெல்லிய புன்னகையோடு ஸாரி... என்றவாறே இருக்கையிலிருந்து எழுகிறான்.

எதிரே அமர்ந்திருந்த ரசிகர்கள் கூட்டம் பிரதீப்பையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருக்கிறது. லைவ் ரிலேயாகத் துவங்கிய நிகழ்ச்சி சட்டென்று மாறிய அவனது அப்போதைய வெளியீடான திரைப்படத்தின் ஒரு பாடலோடு காட்சியாய் விரிகிறது. படத்தின் பெயரே நிகழ்ச்சிக்கும் ஆகிப்போனதாய் இவன் மனத்தில் தோன்ற அதுநாள்வரை இல்லாத என்னவோ ஒரு திருப்தி மனதில் பரவுவதை உணர்கிறான் பிரதீப் என்கிற அந்த மகா நடிகன்.




ushadeepan@thaiveedu.com

# பாலைவனச் சோலை

அவன் குறுந்தாடியின் நுனிமுடிகள் அவள் நெற்றியைத் தொட்டபோது, அவளுக்குத் தெரிந்தது - இந்த ஒரு தொடுகைக்காகத்தான் தன் வாழ்வின் ஒவ்வொரு கணமும் அவளை இங்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது என்று. ஆனால் அந்த உண்மையை அவளால் தன் மனதுக்குள் கூட உச்சரிக்க முடியவில்லை. அருணின் அணைப்பில் அவள் உறங்கினாள். அவர்களுக்கு இடையே இருந்த மூன்று ஆண்டுகள், மூன்று அடிகள், மூன்று தயக்கங்கள் - அனைத்தும் அந்த ஒரு கணத்தில் மடிந்து கிடந்தன. உறக்கம் அவளை விழுங்கிக்கொண்டது. ஆனால் அந்த உறக்கத்திற்குள் கூட அவளது விரல்கள் அவன் மார்பில் ஏதோ தேடிக்கொண்டிருந்தன - அவளால் புரிந்துகொள்ள முடியாத ஒன்றை.

அவர்கள் ஒரே அலுவலகத்தில், ஒரே மேசையைப் பகிர்ந்து கொண்டார்கள். கணினித் திரைகளின் வெண்மையான ஒளி அவர்களது முகங்களை அலசிக்கொண்டிருந்தது, ஒவ்வொரு நாளும் ஒரு புதிய கேள்வியை அவர்கள் முகத்தில் பதித்து விட்டுச் சென்றது. மற்றவர்கள் பார்த்தது - இரண்டு உடல்கள், ஒரே இடம். ஆனால் யாரும் பார்க்காதது - ஒவ்வொரு மௌனமும் ஓர் உரையாடல், ஒவ்வொரு பார்வையும் ஒரு கேள்வி, ஒவ்வொரு மூச்சும் ஒரு தேர்வு. அவர்களது புகைப் படங்களில் கடல் இருந்தது, மலை இருந்தது, மழையில் நனைந்த தெருக்கள் இருந்தன. ஆனால் ஒவ்வொரு புகைப் படத்திலும் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை. கமராவின் லென்ஸ் பதிவுசெய்தது - அவர்களது கைகளுக்கு இடையிலான ஒவ்வொரு மில்லிமீட்டரையும், அந்த இடைவெளி ஒரு கதையாக மாறிக்கொண்டிருந்தது. அந்தக் கதைக்கு பெயர் இல்லை. 'நண்பர்கள்' என்ற வார்த்தை ஒரு மூடிய கதவு. அதற்குள் நுழைந்துவிட்டால், திரும்பி வர முடியாது. அதனால்தான் அவர்கள் அந்தக் கதவின் வாசலிலேயே



tg.theeban@gmail.com

நின்றுகொண்டிருந்தார்கள் - ஒவ்வொரு நாளும், நெருங்காமலும் விலகாமலும்.

அவனில்லாத மூன்றாம் நாள். காலை எழுந்தபோதே ரதிக்குத் தெரிந்தது - இன்று ஏதோ நிகழப்போகிறது. தேநீரில் சீனி கரையாமல் மிதந்தது. ஜன்னலுக்கு வெளியே மேகங்கள் நகர்வதை நிறுத்திவிட்டு நின்றன. நேரம் ஒரு நதியாக ஓடிக் கொண்டிருக்க, அவள் ஒரு கல்லாக உட்கார்ந்திருந்தாள். அவளது கணினித் திரையில் ஒரு வெற்று மின்னஞ்சல் - முகவரி அருண், பொருள் ஒரு கேள்விக்குறி, உடல் ஒன்றுமில்லை. சேமிக்காமல் மூடினாள். மதியம் பன்னிரண்டு மணிக்கு எழுந்து, தனது மேசையில் ஒரு காகிதத்தை வைத்தாள் - 'அரை நாள் விடுப்பு.' பேருந்தில் ஜன்னல் ஓர இருக்கை. வெளியே காட்சிகள் நகர்கின்றன. ஆனால் அவள் பார்ப்பது ஒன்று மட்டுமே - தனது சொந்த பிம்பம், ஜன்னல் கண்ணாடியில் மங்கலாக. அந்தப் பிம்பம் அவளிடம் கேட்டது - 'நீ யாருக்காகப் போகிறாய்?' அவளுக்குப் பதில் தெரியாது.

அவனது வீட்டின் வாசல். கதவைத் தள்ளினாள். உள்ளே இருட்டு - ஆனால் வெயில் நிழல்கள் ஊடுருவி, ஒரு ஒளிக் கோடு சுவரில் விழுந்துகொண்டிருந்தது. குளியலறையில் தண்ணீர் சத்தம். அந்தச் சத்தம் ஒரு தாளமாக அவள் மார்பில் இறங்கியது. அருண் வெளியே வந்தான் - ஈரமான கூந்தல், தோளில் தொங்கும் துண்டு. அவன் அவளைப் பார்த்தான். ஒரு கணம். அந்த ஒரு கணத்தில், மூன்று ஆண்டுகள் சுருண்டு ஒரு நொடிப்பொழுதானது. அவள் அவனை அணைத்தாள். இல்லை - அவள் அவனிடம் அணைக்கப்பட்டாள். வேறுபாடு அவளுக்குப் புரியவில்லை.

அவள் கண் விழித்தபோது, அறையில் ஒளி மாறியிருந்தது. மாலையின் பொன் நிறம் சரிந்து, இரவின் நீலம் படர்ந்து கொண்டிருந்தது. அவள் அருணின் முகத்தைப் பார்த்தாள். உறக்கம் - அது ஒரு முகமூடியா? அவனது மூச்சு சீராக இருந்தது. ஆனால் அவளுக்கு ஓர் உணர்வு - அவன் உறங்கவில்லை, அவன் காத்திருக்கிறான். அவள் எழுந்திருக்கும் வரை. பின்னர் என்ன நிகழும் என்பதற்காக. அவள் எழுந்தாள். அவள் அவனது நெற்றியில் முத்தமிட்டாள். அவன் மூச்சு ஒரு நொடி நின்றதா? அவள் காத்திருக்க வில்லை.

திரும்பும் பயணத்தில், வானம் மஞ்சளாக மாறிக்கொண்டிருந்தது. பேருந்தில் இருக்கைகள் காலியாக இருந்தன. அவள் ஜன்னல் ஓரத்தில் அமர்ந்தாள் - இதே இருக்கை, இதே பேருந்து, இதே நேரம். ஆனால் இப்போது அவளுக்குள் ஏதோ நிகழ்ந்திருந்தது. அவள் அதற்குப் பெயர் வைக்க வில்லை. பெயர் வைத்தால், அது முடிந்துவிடும்.

வீட்டுக்குள் நுழைந்தபோது, அம்மா சமையலறையில். 'சாப்பிட்டாயா?' - இந்தக் கேள்வி வருடக்கணக்கானது. 'ஆம்' - பதில் வருடக்கணக்கானது. ஆனால் இன்று இந்த உரையாடலுக்கு இடையில் ஒரு மௌனம் - புதியது. அம்மா திரும்பிப் பார்த்தாள். ரதியின் கண்களை ஒரு விநாடி பார்த்தாள். பின்னர் மீண்டும் அடுப்புக்குத் திரும்பினாள். அவள் ஏதோ பார்த்தாள். ஆனால் கேட்கவில்லை.

அறைக்குள் நுழைந்த ரதி, ஜன்னலைத் திறந்தாள். வெளியே இருள் படரத்தொடங்கியிருந்தது. தூரத்தில் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது - ஒரே ஒரு விளக்கு. அது யாருடைய வீடு? அவளுக்குத் தெரியாது. ஆனால் அந்த விளக்கு எரிந்துகொண்டே இருக்கிறது. அவள் தனது கையை ஜன்னல் வழியாக நீட்டினாள். காற்று அவள் விரல்களுக்கு இடையே வழிந்தது. அவளால் எதையும் பிடிக்க முடிய வில்லை.

அந்த வீட்டின் மூலையில், ஒரு சிறிய அறை. நான்கு வருடங்களாக அந்த அறை ஒரு கோவிலாக மாறியிருந்தது - அசைவற்ற உடல் அதன் பிரதான சிலை. பாரிச வாதம் அவனது உடலை மரப்படுத்தியிருந்தது; ஆனால் அவனது கண்கள் - அவை மட்டும் அசையாமல் இருந்த ஒரே விஷயம். அவை திறந்து, மூடிக்கொண்டிருந்தன - புருவ இமைகளின் மெல்லிய அசைவில் ஒரு மொழி பிறந்தது. அவன் அசைய வில்லை, பேசவில்லை, ஆனால் அவனது இருப்பு அந்த அறையின் காற்றைக் கனக்கச் செய்தது. ஒவ்வொரு இரவும், ரதி அவன் அருகில் அமரும்போது, அந்தக் கனத்தை உணர்ந்தாள் - அது வேதனையா, அன்பா, கடமையா, அல்லது இவை அனைத்தையும் தாண்டிய ஏதோவொன்றா என அவளால் கண்டறிய முடியவில்லை.

அவளது கணவன் - அவன் ஒரு காலத்தில் நடந்தான், பேசினான், சிரித்தான். இப்போது அவனது உடல் ஒரு கம்பளமாக மடிந்துகிடந்தது, ஆனால் அவனது கண்களில் இன்னும் வாழ்க்கை இருந்தது. அந்தக் கண்கள் பார்த்தன - எப்போதும் பார்த்தன. அவன் பார்ப்பது என்ன?

ஆனால் இன்று, அருணின் அணைப்பில் இருந்து திரும்பிய அவள், அந்த அறைக்குள் நுழைந்தபோது, அவனது கண்களில் ஒரு புதிய ஒளி. அவை இன்னும் திறந்திருந்தன, இன்னும் பார்த்தன. ஆனால் இப்போது அவை கேட்கவில்லை. அவை பதில் சொன்னன. எப்படி? அவளால் விளங்கவில்லை. ஆனால் அவனது கண்களின் ஆழத்தில் ஏதோ நகர்ந்தது - ஓர் ஏற்றுக்கொள்ளல், ஒரு விடுதலை, ஒரு மன்னிப்பு. அவன் அவளைப் பார்த்தான் - இல்லை, அவன் அவளைப் பார்த்ததை நிறுத்தினான். அவன் தன் பார்வையை உள்ளே திருப்பிக்கொண்டான். அந்தக் கணத்தில், ரதிக்கு ஒரு உண்மை புரிந்தது - அவன் இதுவரை அவளைப் பார்த்துக் கொண்டிருந்தது அவளுக்காக அல்ல; அது தனக்காக. அவனது உடல் செயலிழந்தபோதும், அவனது கண்கள் இன்னும் ஒரு கடமையைச் செய்துகொண்டிருந்தன - அவளைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்ற கடமை. இப்போது அந்தக் கடமை முடிந்தது. அவன் தன்னை விடுவித்துக்கொண்டான். அவளை விடுவிப்பதன் மூலம்.



sivagowry@thaiveedu.com



(அன்ரன் செக்கோவ் உலகப் புகழ் பெற்ற ரஷ்ய எழுத்தாளர். காலம் 1860 - 1904. நாடகங்களும் சிறுகதைகளும் எழுதியவர். புகழ் பெற்ற நான்கு செவ்வியல் நாடகங்களையும் பல சிறுகதைகளையும் குறு நாவல்களையும் பயணக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவருடைய சிறுகதைகளை இலக்கிய விமர்சகர்களும் வாசகர்களும் உயர்ந்த இடத்தில் வைத்துள்ளனர். ஹென்றிக் இப்சன், ஓகஸ்ற் ஸ்றின்பேர்க் ஆகியோருடன் இவரையும் சேர்த்து நவீன நாடகத்தின் முக்கியமான மூன்று பேர்கள் என்றும் கணிக்கிறார்கள். இவர் தொழில்ரீதியாக ஒரு மருத்துவர். 'மருத்துவம் என்னுடைய சட்டரீதியான மனைவி. இலக்கியம் என் வைப்பாட்டி,' என்று ஒருமுறை சொன்னார்.

இவருடைய முக்கியமான நாடகங்கள் The Seagull, Three Sisters, The Cherry Orchard, Uncle Vanya. கலைஞரின் பங்கு கேள்வி கேட்பதே அன்றி பதில் சொல்வதல்ல என்று ஒரு முறை சொன்னார், அவருடைய சில கதைகள் புரியவில்லை என்று கேட்டதற்கு பதிலாக.

அவருடைய தந்தை விடுதலை செய்யப்பட்ட அடிமையின் மகன். அவர் மளிகைக் கடை வைத் திருந்தார். தாய் நன்றாகக் கதை சொல்வார். நாங்கள் தந்தையிடமிருந்து திறமைகளையும் தாயிடமிருந்து ஆன்மாவையும் பெற்றோம் என்றார். தந்தை கண்டிப்பானவராக இருந்திருக் கிறார். செக்கோவ், புதுமைப்பித்தனையும் அவர் தந்தையையும் இவ்விடத்தில் நினைவில் கொண்டு வருகிறார். செக்கோவைப் போல புதுமைப்பித்தனும் இளமையிலேயே காச நோயால் பாதிக்கப்பட்டு உயிர் நீத்தார். தந்தையுடனான உறவிலும் விரிசல் இருந்தது.)

tg.theeban@gmail.com

# அன்புக்குரியவள்

**அன்ரன் செக்கோவ் ● தமிழில்: என்.கே. மகாலிங்கம்**

ஒலெங்கா, ஓய்வுபெற்ற கல்லூரி மதிப்பீட்டாளரான பிளெமியன்னியக்கோவின் மகள். அவள், தன் வீட்டின் பின் புறத் தாழ்வாரத்தில் சிந்தனையில் மூழ்கியிருந்தாள். அது வெப்பமான காலம். ஈக்கள் அவளைத் தொடர்ச்சியாக தொந் தரவு செய்து கொண்டிருந்தன. விரைவில் மாலை நேரம் வந் துவிடும் என்பதைப் பற்றி சிந்திக்கையில் மகிழ்ச்சியாக இருந்தது. கருமையான மழை மேகங்கள் கிழக்கில் திரண்டு கொண்டிருந்தன. அதிலிருந்து இடைக்கிடை காற்று ஈரத்தன் மையுடன் வீசிக்கொண்டிருந்தது.

குக்கின், திவோலி என்றழைக்கப்படும் திறந்த வெளி அரங் கின் முகாமையாளன். விடுதியில் வசித்து வந்தான். தோட் டத்தின் நடுவில் நின்று ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டி ருந்தான்.

'திரும்பவுமா?' என்றான் தவிப்புடன். 'திரும்பவும் மழை பெய் யப் போகிறது! ஒவ்வொரு நாளும் மழை. என்னைப் பழி தீர்ப்பது போல. அதிலும் பார்க்க நான் என்னைத் தூக்கிலிட் டுக் கொள்ளலாம்! எல்லாம் நாசமாகப் போகிறது! ஒவ்வொரு நாளும் பயங்கரமான நட்டம்.'

தன் கைகளைத் தூக்கி, ஒலெங்காவுக்கு அதைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

'அங்கே பார்! அப்படித்தான் எங்கள் வாழ்க்கை போய்க் கொண்டிருக்கிறது, ஒல்கா செமியோனோவ்னா. நடப்பது எல் லாம் ஒருத்தனை அழ வைக்கப் போதுமானது. இரவுகளில் தூங்காமல் இயன்றளவு வேலை செய்து தன்னை வருத்திக் கொள்கிறான். நன்றாக இருப்பதற்கு என்ன செய்யலாம் என்று மூளையைப் போட்டுக் குழப்பிக் கொள்கிறான். அதற்குப் பின் என்ன நடக்கிறது? சொல்வதென்னவென்றால், பலர் அறி விலிகள், முரட்டுத்தனமானவர்கள். அவர்களுக்கு நான் அதி யுயர்வான ஓரங்க இசைநாடகத்தை, அழகான முகமூடியை, முதல் தரமான இசைக் கலைஞர்களை அளிக்கிறேன் என்று வைத்துக் கொள். அவர்களுக்கு அவைதானா தேவை என்று நீ நினைக்கிறாய்! அவர்கள் அப்படியான எதையுமே புரிந்து கொள்ள மாட்டார்கள். அவர்களுக்குத் தேவை ஒரு கோமாளி. அவர்கள் கேட்பது கீழ்த்தரமானவற்றை. பின் இந்தக் கால நிலையைக் கவனி! ஒவ்வொரு மாலையும் மழை பெய்கிறது. மே மாதம் பத்தாம் திகதி மழை தொடங்குகிறது. மே ஜூன் மாதம் முழுவதும் அது தொடர்ந்து பெய்து கொண்டே இருக்

கிறது. அது மிக மிக மோசம்! மக்கள் வரமாட்டார்கள். இருந்தும் நான் வாடகைப் பணத்தைக் கட்டத்தான் வேணும், கலைஞர்களுக்குப் பணம் கொடுக்கத்தான் வேணும்.

அடுத்த நாள் மாலையும் மழை முகில்கள் திரும்பவும் ஒன்று சேரும். குக்கின் வெறித்தனமான சிரிப்புடன் திரும்பவும் முன்பு சொன்னதையே சொல்லுவான்.

'மழையே போ. தோட்டத்தை நீரால் நிரப்பு. என்னையும் மூழ்கடி! எனக்கு இந்த உலகத்திலும் அடுத்த உலகத்திலும் அழிவு வந்து சேரட்டும்! கலைஞர்கள் எனக்குக் கைவிலங்கிட்டு சைபீரியாச் சிறைக்கு அனுப்பட்டும்! தூக்குமேடைக்கு அனுப்பட்டும்! ஹா! ஹா! ஹா!'

அடுத்த நாளும் அதே மாதிரி நடக்கிறது.

ஒலெங்கா குக்கின் சொல்வதை எல்லாம் ஒன்றும் பேசமாமல் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருப்பாள். சிலவேளை அவள் கண்களில் கண்ணீர் முட்டும். கடைசியில் அவனுடைய துரதிர்ஷ்டம் அவள் மனதைத் தொட்டது. அவன் மேல் அன்பு வந்தது. அவன் மெலிந்த சிறிய மனிதன். மஞ்சள் நிற முகம். சுருண்ட தலைமுடியை முன்னால் சீவி நெற்றியில் விட்டிருப்பான். மெலிவான உச்ச குரலில் பேசுவான். பேசிக் கொண்டிருக்கும்போது அவனுடைய வாய் ஒரு பக்கம் கோணி இருக்கும். முகத்தில் எப்பொழுதும் விரக்தி வெளிப்பட்டுக்கொண்டிருக்கும். இருந்தும் அவளிடம் அவன் ஆழமான உண்மையான பாசத்தை காட்டிக் கொண்டிருப்பான். அவளும் எப்பொழுதும் எல்லோரிடமும் பிரியமாகவே நடந்து கொள்வாள். அன்பு காட்டாமல் அவளால் வாழ முடியாது. ஆரம்ப நாட்களில் அவள் தன் தந்தையிடம் அன்பு காட்டினாள். அவர் இப்பொழுது இருட்டு அறையில் இருந்து கொண்டு மூச்சுவிட சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார். பிறையன்றஸ்க் என்ற இடத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் வரும் அவளுடைய மாமியாரிடமும் அன்பு காட்டினாள். அதற்கு முதல் அவள் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது தன் பிரெஞ்சு ஆசிரியரிடம் அன்பு வைத்திருந்தாள். அவள் உண்மையான மென்மையான இதயம் கொண்ட கருணையுள்ளம் கொண்ட ஒரு சிறுமி. மென்மையான கண்களும் வலுவான உடலும் கொண்டவள். நிறைவான றோஜா நிறக் கன்னங்கள். மென்மையான வெண்ணிற கழுத்து. அதில் கருமையான ஒரு மச்சம். இனிமையான கதைகளைக் கேட்கும்போது அதில் ஆர்வமும் இருக்கும். அவளுடைய அன்பான வஞ்சனையற்ற புன்னகையை எந்த ஆணும் விரும்புவார்கள். 'ஓம், இவள் பரவாயில்லையே,' என்று எண்ணிக் கொண்டு புன்னகை செய்வார்கள். பெண்கள் அவளுடன் பேசும்போது, உரையாடலுக்கு இடையே அவளுடைய கைகளைப் பற்றிக் கொண்டு, 'ஓ, என் அன்புக்குரியவளே!' என்று மகிழ்ச்சி பொங்கக் கூச்சலிடுவார்கள்.

அவள் பிறந்த நாளிலிருந்து வாழ்ந்த அந்த வீட்டை அவளுடைய தந்தை உயிலில் அவளுக்கு எழுதி வைத்திருந்தார். அந்த வீடு திவோலிக்கு அருகில் நகரத்தின் முடிவில் இருக்கிறது. மாலைகளிலும் இரவுகளிலும் இசைக்குழுக்கள் இசைப்பதையும், வாணவேடிக்கைகள் வெடிப்பதையும் அவற்றின் ஓசைகளையும் அவள் கேட்டுக் கொண்டிருப்பாள். அவை குக்கின் தன் தலைவிதியுடன் போராடுவதைப் போலவும், அவனுடைய தலைமை எதிரியான அக்கறையற்ற பொதுமக்களின் அகழி சூழ்ந்த கோட்டைகளை முற்றுகை இடுவது போலவும் அவனுக்குத் தோன்றும். அப்பொழுது ஒலெங்காவின் இதயத்தில் இனிமையான சிலிர்ப்பு வந்து செல்லும். துயில விருப்பம் இராது. விடியும்போது அவன் வந்து அவளுடைய படுக்கை அறை யன்னலில் மெதுவாகத் தட்டும்போது, தன் முகத்தையும் ஒரு தோளையும் மட்டும் திரைச்சீலைக் கூடாக அவனுக்குக் காட்டி நட்பார்ந்த புன்னகை செய்வாள்...

அவன் அவளை மணக்க விரும்பி தன் விருப்பத்தைத் தெரிவித்தபோது இருவரும் திருமணம் செய்து கொண்டார்கள். அவளுடைய கழுத்தையும், மொழுமொழுத்த தோள்களையும் நெருக்கமாகப் பார்த்தபோது அவன் தன் கைகளைத் தூக்கி,

'என் அன்புக்குரியவளே!' என்றான்.


அவளுடன் அவன் மிக மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான். அவனுடைய திருமண நாளில் பகலும் இரவும் மழை பெய்தபோது அவனுடைய முகத்தில் விரக்தியின் வெளிப்பாடு இன்னும் கொஞ்சம் அதிகமாகத் தெரிந்தது.

இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நன்றாகவே வாழ்ந்தனர். அவள் திவோலியில் இருந்த அவனுடைய அலுவலகத்தில் இருப்பாள். கணக்கு வழக்குகளைப் பார்ப்பாள். தொழிலாளர்களுக்குக் கூலி கொடுப்பாள். அவளுடைய றோசா நிற கன்னங்களும் இனிமையான பிரகாசமான புன்னகையும் அலுவலக யன்னலிலும், குளிர்பான அறையிலும், அரங்கக் காட்சிகளின் பின்னாலும் தெரியும். அவள் ஏற்கனவே தனக்குத் தெரிந்தவர்களிடம் நாடக அரங்கம் தான் வாழ்க்கையில் முதன்மையானது, முக்கியமானது என்றும் நாடகங்களால் மட்டுந்தான் ஒருவர் உண்மையான இன்பத்தை அடைகிறார் என்றும், பண்படுகிறார் என்றும் மனிதாபிமானி ஆகிறார் என்றும் சொல்லுவாள்.

'ஆனால் பொதுமக்கள் அதை புரிந்து கொள்கிறார்களா? அவர்களுக்குத் தேவையானது என்னவென்றால் ஒரு கோமாளி,' என்று சொல்லுவாள்.

'நேற்று, 'ஃபோஸ்றின் உட்புறம் வெளிப்புறம்' என்ற நாடகத்தைப் போட்டோம். நாடக அரங்கின் எல்லா இருக்கைகளும் காலியாக இருந்தன. ஆனால் வனிச்சிகாவும் நானும் ஆபாசமான ஒன்றைக் காட்டியிருந்தால் நாடக அரங்க இருக்கைகள் யாவும் நிறைந்திருக்கும். நாளைக்கு வனிச்சிகாவும் நானும் 'நரகத்தில் ஓஃபியஸ்' என்ற நாடகத்தைப் போடுகிறோம். 'வாருங்கள்!' என்பாள்.

நாடக அரங்கத்தைப் பற்றியும் நடிகர்களைப் பற்றி குக்கின் சொன்னதையே அவளும் திரும்பவும் சொல்லுவாள். அவனைப் போலவே அவளும் பொதுமக்களை அவர்களுடைய அறியாமைக்காகவும் கலைகளைப் பற்றிய புறக்கணிப்புக்காகவும்



இகழ்ந்து சொல்வாள். அவளும் நாடக ஒத்திகைகளில் கலந்து கொள்வாள். நடிகர்கள் விடும் பிழைகளைச் சுட்டிக் காட்டுவாள். இசைக்கலைஞர்களின் நடத்தைகளிலும் ஒரு கண் வைத்திருப்பாள். உள்ளூர் பத்திரிகைகளில் நாடகங் களைப் பற்றி சாதகமற்ற குறிப்புகளைக் கண்டால் அழுவாள். பின் பத்திரிகை ஆசிரியரின் அலுவலகத்திற்குச் சென்று அதைத் திருத்துமாறு சொல்வாள்.

நடிகர்கள் அவள்மீது பாசமாக இருந்தார்கள். அவளை 'வனிச்சிக்காவும் நானும்' என்றும் 'அன்புக்குரியவளே' என்றும் அழைப்பார்கள். அவர்களுக்காக அவள் வருந்தினாள். அத னால் அவர்களுக்குக் கொஞ்சப் பணம் கடன் கொடுத்தும் உதவுவாள். அவர்கள் அவளை ஏமாற்றினால் தனியாக இருந்து சில கண்ணீர்த் துளிகளைச் சிந்துவாள். ஆனால் அவள் தன் கணவனுக்கு அதைப்பற்றிப் புகார் செய்வதில்லை.

அவர்கள் இருவரும் குளிர்காலத்திலும் நல்லுறவுடன் இருந் தார்கள். அரங்கைக் குளிர்காலம் முழுவதும் நகரத்திற்குக் கொண்டு சென்று சிறிய ரஷ்ய கொம்பனிக்கோ மந்திரவா திக்கோ உள்ளூர் நாடகக்காரர்களுக்கோ வாடகைக்கு விடு வார்கள். ஒலெங்காவின் உடல் தடித்துக்கொண்டு வந்தபோது குக்கினின் உடல் மெலிந்து மஞ்சள் நிறமாகிக் கொண்டு வந்தது. ஒலெங்கா எப்பொழுதும் மனத்திருப்தியுடன் வாழ்ந் தாள். ஆனால் அவன் தொடர்ந்து பயங்கரமான நட்டத்தில் அரங்கம் ஓடிக் கொண்டிருக்கிறது என்று குறைசொல்லிக் கொண்டிருந்தான். ஆனால் உண்மையில் அவன் குளிர்காலத் தில் அத்தனை மோசமாக நட்டத்தை அடையவில்லை. இரவில் இருமிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவள் அவனுக்கு சூடான றாஸ்பெரிச் சாறு கலந்த தேநீர் அல்லது எலுமிச்சை மலர் நீர் குடிக்கக் கொடுத்தாள். ஓடிக்கொலொனை அவன் மேனியில் பூசித் தடவி விட்டாள். சூடான சால்வைகளால் உடலைச் சுற்றிக் கட்டி விட்டாள்.

'நீ என் இனிமையான செல்லப்பிராணியே!' என்று சொல்வாள். முழு நேர்மையுடன் அவனுடைய தலைமயிரைத் தடவிக் கொண்டே 'அன்பின் அன்பே!' என்பாள்.

தவக்காலம் அண்மித்தபோது புதிய நாடகக்குழுவை அழைக்க அவன் மொஸ்கோவிற்குச் சென்றான். அவனில்லாமல் அவ ளால் துயில முடியவில்லை. இரவு முழுவதும் யன்னலடியில் இருந்து விண்மீன்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தன்னை இரவு விழித்திருக்கும் பெட்டைக் கோழிகளுடன் ஒப்பிட்டுக் கொண்டாள். சேவல் இல்லாத கோழிக்கூட்டில் இருப்பதைப் போல அமைதியற்றிருந்தாள். குக்கின் மொஸ்கோவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தான். ஈஸ்ரர் காலத்தில் வந்து விடுவேன் என்று கடிதம் எழுதியிருந்தான். அதில் திவொலியின் என்ன செய்ய வேண்டும் என்ற சில அறிவுறுத்தல்களையும் எழுதி யிருந்தான். ஆனால் ஈஸ்ரர் நாளுக்கு முந்திய ஞாயிற்றுக் கிழமை பிந்திய இரவில் வாசல் கதவு அச்சுறுத்தும் வகை யில் பலமாகத் தட்டப்பட்டது. வாசல் கதவில் சுத்தியலால் அடிப்பது போல பூம் பூம் பூம் என்ற சத்தம் கேட்டது. தூக்கக் கலக்கத்திலிருந்த சமையல்காரி மழை பெய்து குட்டையாக

நின்ற நீரில் வெறுங்காலுடன் தொப்தொப்பென்று கால்களை வைத்துக் கதவைத் திறக்க ஓடினாள்.

'தயவுசெய்து திற. உங்களுக்கொரு தந்தி வந்திருக்கிறது,' என்று வெளியே ஒருத்தன் தடித்த குரலில் சொன்னான்.

ஒலெங்காவுக்கு அவள் கணவனிடமிருந்து முன்பும் தந்திகள் வந்திருக்கின்றன. ஆனால் இந்த நேரம் ஏதோ காரணத்தால் அவள் பயத்தினால் விறைத்துப் போனாள். நடுங்கும் கைக ளால் தந்தியைப் பிரித்து வாசித்தாள்.

'இன்று இவான் பெற்றோவிச் சடுதியாக இறந்து போனான். செவ்வாய்க்கிழமை நடைபெற வேண்டிய இறுஇறுதிச்சடங்கு பற்றி உடனடியாக உங்கள் அறிவுறுத்தலுக்காகக் காத்திருக் கிறோம்.'

அப்படித்தான் அந்தத் தந்தி சொன்னது. 'இறுஇறுதிச்சடங்கு' என. பல பிழைகளுடன். ஒரு சில வார்த்தைகளுக்குப் பொருள் கொள்ளவே முடியாது. அந்தத் தந்தியில் ஓபரா நிறுவனத் தின் மேடை முகாமையாளர் கையெழுத்திட்டிருந்தார்.

'என் அன்புக்குரியவனே!' என்று சொல்லி ஒலெங்கா தேம்பி அழுதாள். 'வங்கா, என் அன்பே! ஏன் உன்னை நான் சந்தித் தேன்? ஏன் உன்னை விரும்பினேன்! இதயம் உடைந்த ஏழை ஒலெங்கா! நீ இல்லாமல் நான் தனிமைப்பட்டுப் போனேனே!'

குக்கினுடைய இறுதிச்சடங்கு மொஸ்கோவில் செவ்வாய்க் கிழமை அன்று நடைபெற்றது. ஒலெங்கா புதன்கிழமை வீடு திரும்பினாள். வீடு வந்து சேர்ந்தவுடன் கட்டிலில் விழுந்து உரத்து தேம்பித் தேம்பி அழுதாள். அது பக்கத்து வீட்டுக்கா ரருக்கு மட்டுமல்ல வீதியில் உள்ளவர்களுக்கே கேட்டது.

'ஏழைப் பெண். அன்புக்குரியவள்!' என்று அயலவர்கள் சொன் னார்கள். சிலுவைக்குறி போட்டுக்கொண்டார்கள். 'ஒல்கா செமி யோநோவ்னா, ஏழைப் பெண். அன்புக்குரியவள்! எப்படி இதை ஏற்றுக்கொள்ளப் போகிறாள்!'

மூன்று மாதங்களின் பின் ஒலெங்கா தேவாலயத்தில் பூசை முடிந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள், மனச்சோர்வு டனும் ஆழ்ந்த துக்கத்துடனும் இருந்தாள். அப்போது அவ ளுடைய அயலவர்களான ஒருத்தனான வசிலி அன்டெய்ச் புஸ்ரோவலோவ்வும் அவளுக்கருகில் தேவாலயத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அவன் ப்பாபாகயேவ் என்ற மர வியாபாரியின் முகாமையாளன். ஒரு புல் தொப்பியும் வெண்ணிறத்தில் இடுப்பளவுச் சட்டையும், தங்க கடிகாரச் சங்கிலியும் அணிந்திருந்தான். பார்த்தால் நாட்டுப்புறக் கன வான் மாதிரி இருந்தான். வியாபாரம் செய்பவனாக அல்ல.

'எல்லாமே விதிப்படி தான் நடக்கிறது, ஒல்கா செமியோ னொவ்னா,' என்றான் தீவிரமாக. அவன் குரலில் அனுதாபம் தெரிந்தது. 'அன்பான ஒருத்தன் இறந்தால் அது இறைவன் ஆணையின்படிதான் நடக்கிறது. நாங்கள் மனவுறுதியுடன் இருக்க வேண்டும். பணிவுடன் தாங்கிக் கொள்ள வேண்டும்,' என்றான்.

ஒலெங்காவை அவளுடைய வாசலடிக்குக் கொண்டு வந்து விட்ட பின் அவளுக்கு போகிறேன் என்று சொல்லிவிட்டு அவன் போய்க் கொண்டிருந்தான். அடுத்த நாள் முழுவதும் அவளுக்கு அவனுடைய அமைதியான கண்ணியமான குரல் தான் கேட்டுக்கொண்டிருந்தது. அவள் கண்களை மூடும் போது அவனுடைய கருமையான தாடியைத்தான் கண்டாள். அவனை அவள் நேசித்தாள். வெளிப்படையாகவே அவளும் அவன்மேல் நல்ல மனப்பதிவை ஏற்படுத்தியிருந்தாள். ஏனென் றால் சில காலத்துக்குப் பிறகு அவளுக்கு சாடையாகத் தெரிந்த முதிய பெண் ஒருத்தி அவளிடம் கோப்பி குடிக்க வந்து மேசையில் இருந்தவுடன் புஸ்வரோவைப்பற்றித்தான் கதைத்தாள். அவன் சிறந்ததொரு மனிதன் என்றும் அவனை எவரும் முற்றுமுழுதாக நம்பலாம் என்றும் எந்தப் பெண்ணும் அவனை மணம் செய்ய விரும்புவாள் என்றும் சொன்னாள். மூன்று நாட்களின் பின் புஸ்ரோவே வந்தான். அவன் அதிக நேரம் அங்கே தங்கவில்லை. ஒரு பத்து நிமிசம் மட்டில் தான் தங்கினான். அதிகம் பேசவும் இல்லை. ஆனால் அவன் போனதன் பின் ஒலெங்கா அவனை விரும்பினாள். அவனை மிகவும் விரும்பினாள். அன்றிரவு முழுவதும் காய்ச்சலால் அவள் விழித்துக் கொண்டிருந்தாள். காலையில் முதிய பெண்ணை அவளை வரச்சொல்லி அழைத்தாள். இருவருக் கும் திருமணம் விரைவாக ஒழுங்கு செய்யப்பட்டு திருமண மும் நடந்தது.

திருமணம் முடித்த பின் புஸ்பரொவலொவும் ஒலெங்காவும் ஒன்றாக நல்லுறவுடனே வாழ்ந்தார்கள்.

பொதுவாக அவன் பகல் உணவுவரை தன் அலுவலகத்தில் இருப்பான். அதன் பின் வியாபாரம் சம்பந்தமாக வெளியே போவான். அப்போது ஒலெங்கா அவனுடைய இடத்தில் இருப் பாள். மாலை வரை அவ்விடத்தில் இருப்பாள். இருந்து கணக் குகளையும் முன்பதிவு ஆணைகளையும் எடுப்பாள்.

'ஒவ்வொரு ஆண்டும் மரம் அருமையாகவே கிடைக்கிறது. அதனால் விலை இருபது வீதம் உயர்ந்துள்ளது,' என்று வாடிக்கையாளர்களுக்குச் சொல்லுவாள். 'நாங்கள் உள்ளூர் மரச்சாமான்களை மட்டுமே விற்றால் இந்தப் பிரச்சினை இருக்காது. ஆனால் வசிற்ச்சா எப்பொழுதும் மரம் வாங்குவ தற்கு மொகிலெவ் மாவட்டத்துக்குப் போக வேண்டியிருக் கிறது. கொண்டு வருவதற்கான கட்டணம் அதிகமாகிறது.' அதைச் சொல்லிவிட்டு அதிர்ச்சியுடன் தன் கன்னத்தில் கைகளை வைப்பாள். 'போக்குவரத்துச் செலவு!'

தான் காலம் காலமாக மர வியாபாரம் செய்தது போலவும் வாழ்க்கையில் மரம் மிகவும் முக்கியமான, தேவையான ஒன் றாகவும் அவள் நினைத்துக் கொண்டாள். உத்திரம், தூண், கம்பம், பெருமரம், கிடைச்சட்டம், பலகை, திண்பலகை போன்ற சொற்களின் ஒலிகள் அவளுக்கு நெருக்கமானதாகவும் உருக்கமான ஒன்றாகவும் ஆகிவிட்டன.

இரவில் அவள் துயிலும்போது பலகைகளும் அடுக்குப்பல கைகளும் மலைகள் போல குவிந்திருப்பது போல கனவு காண்பாள். நீண்ட பார வண்டிகளில் தூர இடத்திலிருந்து மரங்களைக் கொண்டு வருவது கனவு காண்பாள். ஆறு அங்குல மரக்குத்திகள் நாற்பதடி உயரத்திற்கு குவிக்கப்பட்டுள்ளது போலவும் அதில் தான் ஏறி பயணம் செய்வது போலவும் கனவு காண்பாள். மரக்குத்திகள், உத்திரங்கள், பலகைகள், ஒன்றுடன் ஒன்று மோதி அதிரடியாக விழுந்துவிட்டது போலவும் தொடர்ந்து விழுந்து கொண்டிருப்பது போலவும், இரண்டு பக்கமும் குவிந்து கிடப்பது போலவும் கனவு காண்பாள். அப்போது ஒலெங்கா நித்திரையில் கத்துவாள். புஸ்ரோவலோவ் அவளுக்கு அன்புடன் சொல்லுவான். 'அன்புக்குரிய ஒலெங்கா, என்ன நடக்கிறது? சிலுவை போட்டுக் கொள்.'

அவளுடைய கணவனின் எண்ணங்கள் தான் அவளுக்கும் இருந்தன. அறை கடும் வெப்பமாக இருக்கிறது அல்லது வியாபாரம் மந்தமாக இருக்கிறது என்று அவன் நினைத்தால் அவளும் அப்படியே நினைத்தாள். அவளுடைய கணவன் கேளிக்கை விசயங்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. விடுதலை நாட்களில் வீட்டிலேயே தங்கி இருப்பான். அதைப் போலவே அவளும் செய்தாள்.

'நீ எப்பொழுதும் வீட்டில் அல்லது அலுவலகத்தில் தான் இருந்து கொண்டிருக்கிறாய்,' என்று அவளுடைய சிநேகிதிகள் அவளுக்குச் சொல்லுவார்கள். 'நாடக அரங்குக்கோ வேடிக்கை அரங்குக்கோ போ' என்று அவர்கள் சொல்லுவார்கள்.

'வசிற்சிகாவுக்கும் எனக்கும் நாடக அரங்குகளுக்குப் போக நேரமிருப்பதில்லை. அபத்தமான விசயங்களுக்குப் போக எங்களுக்கு நேரமில்லை. இந்த நாடக அரங்கங்களால் என்ன பயன்?' என்பாள் நிதானமாக.

சனிக்கிழமைகளில் புஸ்ரோவலோவும் அவளும் மாலைநேர ஆராதனைக்குப் போவார்கள். விடுதலை நாட்களில் காலைப் பூசைக்கும் போவார்கள். திரும்பி வரும்பொழுது இருவரும் அருகருகே மென்மையான இன்முகத்துடன் வீடு வந்து சேர்வார்கள். இருவரிலும் இனிமையான வாசனை மணக்கும். அவளுடைய பட்டாடை இணக்கமாகச் சலசலக்கும். வீட்டில் தேநீர் அருந்துவார்கள். ஆடம்பர ரொட்டிபைப் பலதரப்பட்ட ஜாமுடன் உண்பார்கள். பை என்ற பணியாரம் சாப்பிடுவார்கள். ஒவ்வொரு நாளும் பன்னிரண்டு மணிக்கு பீற்றூட் சுப்பின் சுவையான மணமும் ஆட்டிறைச்சி மணமும் அல்லது வீட்டில் வளர்க்கும் வாத்திறைச்சி மணமும் வரும். விரத நாட்களில் மீன் மணம் வரும். அவர்களுடைய கதவைத் தாண்டி இந்த மணங்களை மணந்து பசியெடுக்காமல் எவரும் போக முடியாது. அலுவலகத்தில் சமோவார் கேத்திலில் எந்த நேரமும் நீர் கொதித்துக் கொண்டேயிருக்கும். வாடிக்கையாளர்களுக்கு தேநீரோ பன்றிக்கறித் துண்டுகளோ கொடுப்பார்கள். கிழமைக்கொரு தரம் இருவரும் குளியல் தொட்டிக்குச் சென்று திரும்பி அருகருகே நடந்து வருவார்கள். இருவரின் முகங்களும் சிவந்திருக்கும்.

'ஓம், எங்களுக்கு எந்தக் குறையும் இல்லை, கடவுளிடம் முறையிட. நன்றி ஆண்டவரே,' என்று ஒலெங்கா சொல்லுவாள் தெரிந்தவர்களிடம்.

'என்னையும் வசிசிற்காவும் போல எல்லோரும் நல்லாய் இருக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்,' என்பாள்.

புஸ்ரோவலொவ் மகிலெவ் மாவட்டத்திற்கு மரச்சாமான்கள் வாங்கச் சென்றால் அவன் இல்லாமல் அவள் பயங்கரமாக வருந்துவாள். நித்திரை வராமல் விழித்திருந்து அழுது கொண்டிருப்பாள். இராணுவத்தில் வேலை செய்யும் ஸ்மிரின் என்ற அழைக்கப்பட்ட ஓர் இளம் கால்நடை அறுவை மருத்துவன் மாலை நேரத்தில் அவர்கள் வீட்டுக்குச் சிலவேளை வருவான். அவனுக்கு அவர்கள் தங்களிடம் இருந்த ஒரு விடுதியை வாடகைக்கு விட்டிருந்தனர். அவன் அவளுடன் கதைப்பான். சீட்டும் விளையாடுவான். அது அவளுடைய கணவன் இல்லாதபோது அவளை உற்சாகமூட்டச் செய்யும். அவன் தன் குடும்ப வாழ்க்கையைப் பற்றிச் சொல்லும்போது அதில் அவள் மிகவும் ஆர்வம் காட்டுவாள். அவனுக்குத் திருமணமாகி ஒரு சின்னஞ்சிறிய ஆண் குழந்தையும் இருந்தது. ஆனால் அவன் தன் மனைவியிடம் இருந்து பிரிந்து இருந்தான். ஏனென்றால் அவள் மனைவி அவனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டாள். இப்பொழுது அவன் அவளை வெறுக்கிறான். தன் மகனின் பராமரிப்புக்காக நாற்பது றூபிள்கள் ஒவ்வொரு மாதமும் அனுப்புகிறான். இவை எல்லாவற்றையும் கேட்ட ஒலெங்கா பெருமூச்செறிந்தாள். தலையை ஆட்டினாள். அவனுக்காக மனம் வருந்தினாள்.

'ஆண்டவன் உன்னைக் காப்பாற்றுவார்,' என்று அவன் விடை பெற்று படிகளால் இறங்கும்போது சொல்லி ஒரு மெழுகுதிரி வெளிச்சத்தில் அவனை அனுப்புவாள். 'என்னை உற்சாகப்படுத்த நீ வந்ததற்கு நன்றி. ஆண்டவனின் அன்னை உனக்கு நல்ல உடல்நலத்தை தர வேண்டும்,' என்பாள்.

அவள் எப்பொழுதுமே அமைதியாகவும் கண்ணியமாகவும் நியாயத்தன்மையுடனும் தான் தன்னை வெளிக்காட்டிக் கொள்வாள். அவளுடைய கணவனிடம் இருந்து பின்பற்றிய பழக்கங்கள் அவை. கால்நடை அறுவை வைத்தியன் கண்ணிலிருந்து மறைந்த பின் அவள் சொல்லுவாள்.

'விளாடிமர் ப்ளாற்றோநிச், நீ உன் மனைவியுடன் இணங்கிப் போ. உன் மகனுக்காக அவளை மன்னித்து விடு. அந்தக் குழந்தைக்கு அது புரியும்.'

புஸ்ரோவலோவ் திரும்பி வந்தபோது கால்நடை அறுவை வைத்தியனைப் பற்றியும் அவனுடைய மகிழ்ச்சியற்ற குடும்ப வாழ்க்கை பற்றியும் அடங்கிய குரலில் அவனுக்குச் சொல்லுவாள். இருவரும் அவனுக்காக வருந்துவார்கள். பின் அவனுடைய குழந்தையைப் பற்றிப் பேசுவார்கள். குழந்தை உண்மையில் தந்தை இல்லாமல் தனிமையை உணரும் என்பார்கள். அப்படிப் பேசிக் கொண்டே ஏதோ ஒரு விசித்திர காரணத்தால் அறைக்குள் புனித சின்னங்கள் இருந்த இடத்திற்கு

சென்று தரையில் குனிந்து ஆண்டவனைப் பிரார்த்தித்துத் தங்களுக்குக் குழந்தை வரம் வேண்டும் என்று கேட்பார்கள்.

அப்படி புஸ்ரோவலோவும் மனைவியும் அமைதியாகவும் சமாதானமாகவும் காதலுடனும் முழுமையான இணக்கத்துடனும் ஆறு ஆண்டுகள் வாழ்ந்தார்கள்.

ஆனால் பாருங்கள்! ஒரு குளிர்கால நாளில் அலுவலகத்தில் சூடான தேநீர் அருந்திய பின் வசிலி அன்டெய்ச் தலையில் தொப்பி அணியாமல் மரச்சாமான்களை அனுப்புவதற்காக முற்றத்திற்குச் சென்றபோது சளியும் இருமலும் பிடித்து நோய்வாய்ப்பட்டான். அவன் மிகச் சிறந்த மருத்துவர்களிடம் போய் தன்னைக் காட்டினான். ஆனால் அவனுடைய நோய் மோசமடைந்து சில மாதங்களின் பின் இறந்து போனான். ஒலெங்கா மீண்டும் ஒருதரம் விதவையானாள்.

'எனக்கு ஒருவரும் இல்லை. நீயும் என்னை கைவிட்டு விட்டுப் போய் விட்டாய், என் அன்புக்குரியவனே,' என்று தேம்பி அழுதாள், அவளுடைய கணவனின் இறுதிச்சடங்குக்குப் பின், 'உன்னை இழந்த பின் நான் எப்படி வாழ்வேன்? துயரத்திலும் துன்பத்திலும் எப்படி இருப்பேன்! எனக்கு இரங்குங்கள், நல்ல மனிதர்களே! நான் இந்த உலகத்தில் தனியளாக நிற்கிறேன்!' என்பாள்.

கறுப்பு நிற நீண்ட துக்க ஆடை அணிந்து நடமாடினாள். பின் தலையில் தொப்பி அணிவதையும் கைகளில் கையுறைகள் அணிவதையும் முற்றாக நிறுத்திக் கொண்டாள். தேவாலயத்துக்கும் கணவனின் கல்லறைக்கும் தவிர வேறு இடங்களுக்கு அவள் அதிகம் செல்வதில்லை. அப்படி அவள் ஒரு கன்னியாஸ்திரியின் வாழ்க்கையையே வாழ்ந்து வந்தாள். ஆறு மாதத்திற்குப் பின்னரே துக்க ஆடையைக் களைந்தாள். வீட்டின் யன்னல்களைத் திறந்தாள். அவளைச் சமையல்காரியுடன் காலையில் சிலவேளைகளில் சமையல் சாமான்கள் வாங்க சந்தைக்கு போவதை சிலர் கண்டிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது அவள் வீட்டின் உள்ளே என்ன நடக்கிறது, அவள் எப்படி வாழ்கிறாள் என்பதை மற்றவர்களால் ஊகிக்க மட்டுமே முடிந்தது. அவள் கால்நடை அறுவை மருத்துவருடன் தோட்டத்தில் இருந்து தேநீர் அருந்துவதையும் அவன் அவளுக்கு செய்தித்தாளை உரத்து வாசித்துக் காட்டுவதையும் கண்டிருக்கிறார்கள். அஞ்சல் அலுவலகத்தில் கண்டு பழக்கமான ஒருத்தியை இப்பொழுது ஒலெங்கா கண்டபோது சொன்னாள்,

'எங்கள் நகரத்தில் முறையான கால்நடை ஆய்வு நடைபெறுவதில்லை. அதுதான் பலவகையான தொற்றுநோய்கள் பரவுவதற்கான காரணம். பால் விநியோகத்தில் இருந்து மக்களுக்கு நோய்த்தொற்றுகள் பரவுகின்றன என்றும் குதிரைகளிலிருந்து பசுக்களிலிருந்தும் நோய்கள் தொற்றுகின்றன என்று பலரும் சொல்லுகின்றனர். வீட்டிலிருக்கும் மக்களின் உடல் நலத்தைக் கவனிப்பதைப் போலவே மிருகங்களின் உடல் நலத்தையும் கவனிக்க வேண்டும்.'

கால்நடை அறுவை மருத்துவரின் வார்த்தைகளையே அவளும் சொன்னாள். அவனுக்கும் அவளுக்கும் எல்லாவற்றையும் பற்றி ஒரே மாதிரியான அபிப்பிராயம் தான் இருந்தது. ஒரு வருடம் கூட எந்தவொரு ஆண் தொடர்பும் இல்லாமல் அவளால் வாழ முடியாது என்பது வெளிப்படையாகவே தெரிந்தது. ஆதலால் அவள் அங்கு விடுதியில் இருந்த அவனுடன் புதியதொரு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு மகிழ்ச்சியாக இருந்தாள். வேறு யாராவது அதைச் செய்திருந்தால் அந்தத் தொடர்பைத் தடுத்திருப்பார்கள். ஆனால் ஒலெங்கா பற்றி எவரும் தவறாக நினைக்க மாட்டார்கள். ஏனென்றால் அவள் செய்வதெல்லாம் இயல்பானது. அவளோ கால்நடை அறுவை வைத்தியனோ அவர்களின் உறவில் ஏற்பட்ட மாற்றத்தை ஒருவருக்கும் சொல்லவில்லை. உண்மையில் அதை மறைக்கவே முயன்றார்கள். ஆனால் அதில் அவர்கள் வெற்றி பெறவில்லை. ஏனென்றால் ஒலெங்காவால் ஒரு இரகசியத்தை இரகசியமாக வைத்திருக்க முடியாது. அவனுடைய படையணியில் வேலை செய்யும் விருந்தினன் ஒருத்தன் வந்தால் அவனுக்கு தேநீர் அல்லது இரவுணவு கொடுப்பாள். கால்நடை கொள்ளைநோய்களைப் பற்றிக் கதைக்கத் தொடங்குவாள். அவற்றின் கால்களில் அல்லது வாயில் ஏற்படும் நோய்களைப் பற்றியும் மாநகர இறைச்சிக் கடைகளைப் பற்றியும் கதைப்பாள். கால்நடை அறுவை வைத்தியன் அதைக் கேட்டு பயங்கரமாகச் சங்கடப்படுவான். விருந்தாளிகள் சென்றபின் அவளின் கையைப்பற்றி கோபத்துடன் சீறுவான்.

'உனக்குப் புரியாததைப் பற்றி கதைக்காதே என்று நான் ஏற்கெனவே உனக்குச் சொல்லி இருக்கிறேன். கால்நடை அறுவை வைத்தியர்கள் எங்களுக்குள் பேசிக் கொண்டிருக்கும்போது நீ குறுக்கே விழுந்து உன் கருத்தைச் சொல்லாதே. அது உண்மையில் எனக்கு எரிச்சலூட்டுகிறது,' என்பான்.

அவள் திகைப்புடனும் மிரட்சியுடனும் அவனைப் பார்ப்பாள். எச்சரிக்கையுடன் அவள் கேட்பாள். 'வொலொட்சிக்கா, அப்போ நான் என்னத்தைப் பேசுவது?'

கண்களில் நீர் வர அவனைக் கட்டி அணைப்பாள். கோபப் படாதே என்று சொல்லுவாள். பின் அவர்கள் இருவரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

ஆனால் அந்த மகிழ்ச்சி நீண்ட காலம் நீடிக்கவில்லை. கால்நடை அறுவை வைத்தியன் தன் படையணி தூர இடத்துக்கு - சைபீரியாவாக இருக்கலாம் - மாற்றலாகிச் சென்றபோது அதனுடன் அவனும் சென்றுவிட்டான். ஒரேயடியடியாகச் சென்றுவிட்டான். திரும்பி வரவே இல்லை. ஒலெங்கா திரும்பவும் தனியாக விடப்பட்டாள்.

இப்பொழுது அவள் முற்றிலும் தனிய விடப்பட்டுவிட்டாள். அவளுடைய தந்தை நீண்ட காலத்திற்கு முன்பே இறந்து விட்டார். அவருடைய சாய்மனைக் கதிரை மாடியறையில் தூசியால் மூடப்பட்டுக் கிடக்கிறது. அதில் ஒரு காலும் இல்லை. அவளும் மெலிந்து ஒளியிழந்துவிட்டாள். அவளை வீதியில் கண்ட மக்கள் முன்பு பார்த்ததைப் போல இப்போது அவளைப் பார்க்கவில்லை. அவளைப் பார்த்து புன்னகை புரிய

வில்லை. அவளுடைய பழைய சிறந்த நாட்கள் தெளிவாகவே கழிந்து விட்டன. இப்பொழுது புதியதொரு வாழ்க்கை தொடங்கி இருக்கிறது. அதைப் பற்றி அவளால் சிந்தித்துப் பார்க்கவே முடியவில்லை. மாலை வேளைகளில் ஒலெங்கா வீட்டுத் தாழ்வாரத்தில் குந்தியிருப்பாள். இசைக்குழு இசைப் பது அவளுக்குக் கேட்கும். வாணவேடிக்கைகள் திவொலி யில் முழங்கும். அதன் ஒலிகள் அவளிடம் எந்தவித எதிர்வி னைகளையும் எழுப்புவதில்லை. அவள் தன் முற்றத்தை எந்தவித ஆர்வமும் இல்லாமல் பார்ப்பாள். எதையும் சிந்திப் பதும் இல்லை, எதையும் விரும்புவதும் இல்லை. இரவு வந்தபோது படுக்கப் போய் வெறுமையான முற்றத்தைக் கனவு கண்டாள். விருப்பமில்லாமல் சாப்பிட்டாள். குடித்தாள்.

எல்லாவற்றிலும் மோசமானது என்னவென்றால் இப்போது எதிலும் எந்தவித அபிப்பிராயமும் அவளுக்கு இருக்க வில்லை. அவளைச் சுற்றி இருந்த பொருட்களை பார்த்து புரிந்து கொண்டாள். ஆனால் அவற்றைப்பற்றி அவளால் எந்தவித அபிப்பிராயத்தையும் உருவாக்கிச் சொல்ல முடிய வில்லை. எதைப்பற்றிப் பேசுவது என்பதும் அவளுக்குத் தெரியவில்லை. எந்த அபிப்பிராயமும் இல்லாமல் இருப்பது என்பது எத்தனை மோசமானது! உதாரணமாக ஒருத்தன் ஒரு போத்தலையோ மழையையோ ஒரு விவசாயி வண்டியை ஓட்டிக் கொண்டு போவதையோ பார்க்கிறான். ஆனால் அந் தப் போத்தல் எதுக்கு இருக்கிறது என்பதையோ, மழை எதற்குப் பெய்கிறது என்பதையோ அவற்றின் அர்த்தம் என்ன என்பதையோ ஒருத்தனால் சொல்ல முடியாவிட்டால், ஆயிரம் றூபிள்கள் கொடுத்தாலும் சொல்ல முடியாவிட்டால், அதன் அர்த்தமென்ன? குக்கினுடன் அல்லது புஸ்ரொவலொவ் வுடன் அல்லது கால்நடை அறுவை வைத்தியனுடன் அவள் இருந்தபோது அவளால் எல்லாவற்றையும் விளங்கப்படுத்த முடிந்தது. தன் அபிப்பிராயத்தையும் சொல்ல முடிந்தது. ஆனால் இப்பொழுது அவள் மூளையிலும் மனதிலும் ஒரு வித வெறுமை குடிகொண்டுவிட்டது. முற்றத்தில் உள்ள வெறுமை போல. துவர்ப்பான, கசப்புப் பூண்டை வாய்க்குள் வைத்திருப்பதைப் போல.

கொஞ்சம் கொஞ்சமாக நகரம் எல்லாத் திசைகளிலும் வளர்ந்து வந்தது. தெருக்கள் வீதிகளாயின. திவொலியிலும் மரக்கடை இருந்த இடத்திலும் புதிய திருப்பங்களும் வீடு களும் வந்தன. எத்தனை வேகமாக காலம் மாறிவிட்டது! ஒலெங்காவின் வீடு இருண்டு கிடந்தது. கூரை துருப்பிடித்து விட்டது. கொட்டில் ஒரு பக்கம் தாழ்ந்துவிட்டது. முழு முற்ற மும் சுனைக்காஞ்சொறி செடிகளும் பலவகை பூண்டுகளும் நிறைந்து காணப்பட்டது. ஒலெங்கா கூட அழகற்றவளாகவும் முதியவளாகவும் ஆகி விட்டாள். கோடை காலத்தில் தாழ்வா ரத்தில் குந்தி இருப்பாள். அவளுடைய ஆன்மாவும் முன் பைப் போல இல்லாமல் வெறுமையாகவும் மந்தமாகவும் கசப்பு நிறைந்தும் காணப்பட்டது. குளிர் காலத்தில் யன்னல டியில் குந்தி இருந்து உறைபனியைப் பார்த்துக் கொண்டி ருப்பாள். வசந்தத்தின் மணத்தை நுகர்ந்தவுடன் அல்லது தேவாலயங்களின் மணிச் சத்தங்களைக் கேட்டவுடன் பழங்கால நினைவுகள் அவளுக்குள் சடுதியாகப் பாய்ந்து வரும். இதயத்தில் மென்மையான வலியும் வரும். கண்கள் கண்ணீரால் நிரம்பி விடும். ஆனால் இவை எல்லாம் ஒரு கணம் தான். அதன் பின் வெறுமை திரும்பவும் அவளை ஆட் கொண்டு விடும். வாழ்க்கையில் பயனற்ற உணர்வு ஏற்படும். பிறஸ்கா என்ற கறுத்தப் பூனை அவளை உரசிவிட்டு மென் மையாக உறுமும். ஆனால் ஒலெங்கா அந்தப் பூனையின் அணைப்பால் அல்லது பரிசத்தால் தீண்டப்படமாட்டாள். அதுவல்ல அவளுக்குத் தேவையானது. அவளுக்குத் தேவை அவளையும், முழு ஆன்மாவையும், பகுத்தறிவையும் ஆட் கொள்ளும் அன்பு அல்லது காதல். அது அவளுக்கு ஒரு நோக்கத்தையும் எண்ணங்களையும் கொடுக்கும். அவளு டைய முதிய குருதியை சூடாக்கும். அவள் அந்தப் பூனை யைத் தன் பாவாடையிலிருந்து தள்ளிவிட்ட பின் எரிச்சலுடன் சொல்லுவாள்.

'நீ போய் விடு. எனக்கு உன்னைத் தேவையில்லை.'

அப்படித்தான் நாளும் வருடமும் போய்க் கொண்டிருந்தது. மகிழ்ச்சி இல்லை. அபிப்பிராயங்கள் இல்லை. மவ்ரா என்ற சமையல்காரி சொன்னதெல்லாவற்றையும் அவள் ஏற்றுக் கொண்டாள்.

வெப்பமான ஒரு ஜூலை நாள் மாலையில் கால்நடைகளை ஓட்டிச் சென்ற பின் அது நிகழ்ந்தது. முழு முற்றமும் தூசாகிக் கிடந்தது. சடுதியாக யாரோ வெளிக்கதவைத் தட்டினார்கள். ஒலெங்காவே அதைத் திறக்கச் சென்றாள். வெளியே பார்த் தபோது பேச முடியாமல் திகைத்துப் போய் நின்றாள். அங்கே சிமிரின் நிற்பதைக் கண்டாள். கால்நடை அறுவை மருத்துவர். தலைமுடி நரைத்திருந்தது. படையணியினரைப் போல அல்லாமல் சாதாரண உடையில் நின்றான். உடன டியாக அவள் அனைத்தையும் நினைத்துக் கொண்டாள். அவ ளால் அழாமல் இருக்க முடியவில்லை. அவனுடைய நெஞ் சில் தலையைச் சாய்த்து ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அழுதாள். உணர்ச்சிப் பெருக்கால் அவர்கள் இருவரும் எப்படி வீட்டுக்குள் சென்றார்கள் என்பதோ தேநீர் அருந்த இருந்தார்கள் என்பதோ அவளுக்கு நினைவில்லை.

'என் அருமை விளாடிமர் பிளற்றோநிச்! எந்த விதி உன்னை இங்கே கொண்டு வந்தது? என்று அவள் முணுமுணுத்தாள். மகிழ்ச்சியால் நடுங்கிக் கொண்டே இருந்தாள்.

'நான் இங்கே தான் நிரந்தரமாகக் குடியிருக்கப் போகிறேன், ஒல்கா செமியோனோவ்னா' என்று அவன் சொன்னான். 'நான் என் வேலையை விட்டுவிட்டேன். அதனால் இங்கே வந்து குடி யிருந்து தனியாகத் தொழில் தொடங்கி என்னுடைய அதிர்ஷ் டத்தைச் சோதித்துப் பார்க்கப் போகிறேன். அத்துடன் இப் போது என்னுடைய மகன் பள்ளிக்கூடம் போகப் போகிற நேரம் வந்துள்ளது. அவன் இப்போது பெரிய சிறுவன். நானும் என்னுடைய மனைவியுடன் சமாதானமாகிவிட்டேன்.'

'அவள் எங்கே?' என்று ஒலெங்கா கேட்டாள்.

'அவள் என் மகனுடன் ஹோட்டலில் தங்கியிருக்கிறாள். ஒரு வசிப்பதற்கு விடுதியைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.'

'கருணையுள்ளவனே! என் ஆன்மாவே! ஏன் என்னுடைய வீட்டில் தங்கலாமே? அது உனக்கு ஏற்றதில்லையா? ஏன், கடவுளே! நான் உன்னிடம் வாடகை கேட்க மாட்டேன்!' என்று கத்தினாள் ஒலெங்கா படபடப்புடன். திரும்பவும் அழத் தொடங்கினாள். 'நீ இங்கே இருக்க வேண்டும். விடுதி மட்டும் எனக்கு நன்றாகப் போதும். ஓ, அன்பானவனே! நான் எவ் வளவு மகிழ்ச்சியாக இருக்கிறேன்!'

அடுத்த நாள் வீட்டின் மேல் தளத்திற்குப் பூச்சுப் பூசினார் கள். சுவர்களுக்கு வெள்ளை அடித்தார்கள். ஒலெங்கா இடுப் பில் கைகளை வைத்துக் கொண்டு முற்றத்தில் அங்கு மிங்கும் சென்று ஆணைகள் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தில் பழைய களை வந்திருந்தது. புன்ன கைத்துக் கொண்டிருந்தாள். நீண்ட துயிலில் இருந்து எழுந் தவள் போல விறுவிறுப்பாகவும் எச்சரிக்கை உணர்வுடனும் இயங்கிக் கொண்டிருந்தாள். கால்நடை வைத்தியரின் மனைவி வந்தாள். மெலிந்த, சாதாரண பெண். தலைமுடி கட்டையாக வெட்டப்பட்டிருந்தது. வெடுவெடுப்பான முகம். அவளுடன் அவளுடைய சின்னஞ்சிறு சாஷாவும் நின்றான். பத்து வயதுச் சிறுவன். வயதுக்கேற்ற உயரம் இல்லை. நீல நிறக் கண்கள். மொழு மொழு உடல். கன்னங்களில் குழிகள். அவன் முற்றத் திற்குப் போயிருக்க மாட்டான். அதற்கிடையில் அங்கிருந்த பூனையைக் கண்டு அதைத் துரத்திக் கொண்டு ஓடினான். பெரிதாக கவர்ச்சியாகச் சிரித்தான்.

'அன்ரி, அது உங்களுடைய பூனையா? என்றான் ஒலெங்கா விடம். 'அது குட்டி போட்டால் எனக்கொன்று தாருங்கள். அம்மா சுண்டெலிகளுக்கு மிகவும் பயப்படுவார்.'

ஒலெங்காக அவனுடன் கதைத்தாள். அவனுக்கு தேநீர் கொடுத்தாள். அவள் இதயம் நெகிழ்ந்து போனது. நெஞ்சில் ஓர் இனிமையான வலி தோன்றியது. அவளுடைய சொந்த மகன் போல அவன் இருந்தான். அவன் மேசையில் மாலை யில் இருந்து பாடங்களைத் திரும்பி படித்தபோது ஆழ்ந்த நெகிழ்ச்சியுடனும் இரக்கத்துடனும் அவனைப் பார்த்தாள். தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

'அழகான செல்லமே... என் அருமைக் குழந்தையே! சின்னஞ் சிறியவனே! புத்திசாலிக் குழந்தையே.'

'தீவு என்பது ஒரு துண்டு நிலம், அதைச்சுற்றி கடல் இருக் கும்,' என்று அவன் உரத்து வாசித்தான்.

'தீவு என்பது ஒரு துண்டு நிலம்,' என்று அவளும் திருப்பிச் சொன்னாள். பல ஆண்டுகள் அமைதியாக இருந்த பின் நேர் மறையான நம்பிக்கையுடனும் புதிய சிந்தனையுடனும் அவள் சொன்ன முதல் அபிப்பிராயம், இதுதான்.

இப்பொழுது அவளிடம் தனியான சிந்தனைகள் தோன்றத் தொடங்கின. இரவுணவின்போது சாஷாவின் பெற்றோருடன் கதைத்தாள். அதில் உயர்நிலைப்பள்ளிகளில் கற்பிக்கப் படுபவை எத்தனை கடினமான பாடங்களாக இருக்கின்றன என்றாள். இருந்தும் உயர்நிலைப்பள்ளிகள் வணிகப் பள்ளிக ளிலும் பார்க்கச் சிறந்தன என்றும் சொன்னாள். ஏனென்றால் உயர்நிலைப்பள்ளிக் கல்வியுடன் எல்லாவிதமான தொழில் களும் கிடைக்கின்றன. ஒரு மருத்துவராகவோ எந்திரிய ராகவோ கூட அதன் பின் வர முடியும் என்று சொன்னாள்.

இப்பொழுது சாஷா உயர்நிலைப் பள்ளிக்குப் போகத் தொடங்கியிருந்தான். அவனுடைய தாயார் ஹார்கோவிலுள்ள சகோதரியின் வீட்டுக்குச் சென்றவள் திரும்பி வரவில்லை. அவனுடைய தந்தை கால்நடைகளைப் பார்வையிடுவதற்கு தினமும் வெளியே போய் வருவான். சிலவேளை மூன்று நாட்கள் கூட ஒயேரடியாக வெளியே நின்று விடுவான். அத னால் சாஷாவை அவர்கள் முற்றாக கைவிட்டு விடப்பட்ட வனாகவும், வீட்டில் அவன் வேண்டப்படாதவனாகவும், அவ னைப் பட்டினி போடுவதாகவும், ஒலெங்கா நினைத்தாள். அதனால் அவனை அவள் தன் விடுதிக்கு அழைத்துச் சென்று அங்கே ஒரு சிறிய அறையில் அவனைத் தங்க வைத்தாள்.

ஆறு மாதமாக சாஷா அந்த விடுதியில் அவளுடன் தங்கியி ருந்தான். ஒவ்வொருநாள் காலையிலும் ஒலெங்கா அவனு டைய படுக்கை அறைக்கு வந்து அவளைப் பார்ப்பாள். அப்போது அவன் ஆழ்ந்த துயிலில் இருப்பான். கன்னத்தில் அடியில் கையை வைத்துக் கொண்டு சத்தம் போடாமல் துயில்வான். அவனை எழுப்புவதற்காக வருந்தினாள்.

'சாஷெங்கா, என் அன்புக்குரியவனே எழும்பு. பள்ளிக்குச் செல்ல நேரமாகிவிட்டது,' என்று துக்கத்துடன் சொல்வாள்.

அவன் எழும்பி உடை மாற்றுவான். பிரார்த்திப்பான். பின் காலை உணவுக்கு மேசையில் இருப்பான். மூன்று கிளாஸ் தேநீர் அருந்துவான். இரண்டு பெரிய வறுத்த பன்றிக் கறித் துண்டுகளும் அரை வெண்ணெய் தடவிய உருண்டைகளும் சாப்பிடுவான். இத்தனை நேரமும் அவன் அரைத் தூக்கத் தில் இருப்பான். அதனால் ஒருவித கடுகடுப்புடனும் இருப்பான்.

'நீ இன்னும் நீதிக் கதைகளை கற்றுத் தேறவில்லை, சாஷங்கா,' என்பாள் ஒலெங்கா, அவன் என்னவோ நீண்ட பய ணத்துக்கு தயாராகிறான் என்பது போல. 'உன்னுடன் நான் எவ்வளவு கஷ்டப்படுகிறேன், தெரியுமா! நீ நன்றாகப் படிக்க வேண்டும், அன்பானவனே! உன் ஆசிரியர்களிடம் பணிவாக நடக்க வேண்டும்.'

'ஓ, என்னைச் சும்மா இருக்க விடு,' என்று சாஷா சொல்லு வான்.

அதன் பின் அவன் வீதியில் இறங்கி பள்ளிக்கூடம் செல்வான். சிறிய உருவம். ஆனால் பெரிய தொப்பி அணிந்திருப்பான். தோளில் பையைச் சுமந்திருப்பான். ஒலெங்கா அவன் பின் னால் சத்தம் செய்யாமல் நடந்து செல்வாள்.

'சாசெங்கா!' அவனைப் பின்னால் அழைத்து அவன் கைக்குள் பேரிச்சைப் பழம் ஒன்றையோ கரமல் சர்க்கரைக் கட்டி

யையோ திணித்து விடுவாள். பள்ளிக்கூடம் இருக்கும் வீதியை அடைந்தவுடன் அவனுக்குப் பின்னால் உயரமான தடிமனான ஒரு பெண் தொடர்ந்து வருவதைக் கண்டு அவன் வெட்கப்படுவான். அவன் திரும்பிப் பார்த்து அவளுக்குச் சொல்லுவான்.

'அன்ரி, நீ வீட்டுக்குப் போ. நான் மிச்ச இடத்தை நடந்து தனியாகவே பள்ளிக்கூடம் போய்விடுவேன்.'

அவள் அவ்விடத்திலே நின்று பள்ளிக்கூட வாசலால் அவன் மறையும் வரை பார்த்துக் கொண்டிருப்பாள்.

ஆ, அவனை அவள் எத்தனை தூரம் விரும்புகிறாள்! முந்தின உறவுகளுடன் பார்த்தால் எதுவுமே இந்தளவு ஆழமானதாக இருந்தில்லை. அவளுடைய ஆன்மா என்றுமே இத்தனை தூரம் அவர்களிடம் தன்னியல்பாக, அக்கறையின்றி, மகிழ்ச்சியுடன் சரணடைந்ததில்லை. இப்பொழுது அவளுடைய தாயுணர்வுகள் எழுப்பப்பட்டுள்ளன. கன்னத்தில் குழி விழுந்த, பெரிய தொப்பி அணிந்த இந்தச் சின்னஞ்சிறிய சிறுவனுக்கு அவள் தன் வாழ்க்கையையே சமர்ப்பித்திருப்பாள்; மகிழ்ச்சியுடனும் கனிவான கண்ணீருடனும் செய்திருப்பாள்; ஏன்? ஏன் என்று எவரால் சொல்ல முடியும்?

அவனை பள்ளிக்கு அனுப்பிய பின் வீட்டுக்குத் திரும்புவாள். திருப்தியுடனும் அமைதியுடனும். பாசத்தால் மனம் நிரம்பி வழிந்திருக்கும். முகம் கடந்த ஆறு மாதங்களாக இளமையாகி விட்டிருந்தது. இதழில் புன்னகையும் கண்களில் ஒளியும் புகுந்திருந்தது. இப்பொழுது அவளைச் சந்திப்பவர்கள் மகிழ்ச்சியுடன் அவளைப் பார்த்தார்கள்.

'காலை வணக்கம், ஒல்கா செமியோனொவ்னா, அன்புக்குரியவளே. அன்பானவளே எப்படி இருக்கிறாய்?' என்பார்கள்.

'இப்போது உயர்நிலைப்பள்ளியில் கற்பிக்கும் பாடங்கள் எல்லாம் மிகவும் கடினமாக இருக்கின்றன,' என்றாள் சந்தையில் கண்டவர்களைப் பார்த்து. 'எல்லாம் மிக அதிகம். நேற்று முதலாவது வகுப்பிலேயே நீதிக்கதையைக் கொடுத்து அதை மனப்பாடமாக கற்றுக் கொண்டு வரச் சொல்லியிருக்கிறார்கள். லத்தீன் மொழியிலிருந்து மொழிபெயர்ப்பொன்றும் செய்ய வேண்டும். ஒரு கணக்கும் செய்ய வேண்டும். ஒரு சிறுவனுக்கு அது மிக மிக அதிகம்.'

பிறகு அவள் ஆசிரியர்களைப் பற்றியும் பாடங்களைப் பற்றியும் பள்ளிக்கூடப் புத்தகங்களைப் பற்றியும் பேசத் தொடங்குவாள். அவற்றை சாஷா சொன்னதாகச் சொல்லுவாள்.

மூன்று மணிக்கு இருவரும் மாலை உணவைச் சாப்பிடுவார்கள். மாலையில் பள்ளிப்பாடங்களை ஒன்றாகக் கற்பார்கள். அவனைப் படுக்க வைத்த பின் அவள் நெடுநேரம் விழித்திருந்து அவனுக்கு சிலுவை இடுவாள். பின் பிரார்த்திப்பாள். அதன் பின் தான் அவள் படுக்கைக்குச் சென்று கனவு காண்பாள். அது சாஷாவினுடைய தெளிவற்ற எதிர்காலத்தைப் பற்றியதாக இருக்கும். அங்கே சாஷா தன் கல்வியை முடித்து விட்டு ஒரு மருத்துவராகவோ எந்திரியர் ஆகவோ ஆகி இருப்பான். பெரிய வீடு வாங்கி இருப்பான். அவனிடம் குதிரைகளும் வண்டியும் இருக்கும். மணம் முடித்து குழந்தைகளும் இருக்கும்... அவற்றை சிந்தித்துக் கொண்டு துயின்று விடுவாள். அவள் கண்களில் கண்ணீர் நிரம்பி இருக்கும். மூடிய கண்களிலிருந்து கண்ணீர் கன்னங்களில் வழிந்திருக்கும். அப்பொழுது அவளுடைய கறுத்த பூனை உறுமிக்கொண்டு அவள் பக்கத்தில் இருக்கும். 'ம்ர், ம்ர், ம்ர்.'

ஒருநாள் சடுதியாக வெளிக்கதவில் பெரிதாகத் தட்டிக் கேட்கும் சத்தம் கேட்டது.

ஒலெங்கா திணறி அதிர்ச்சியுடன் இதயம் படபடக்க எழும்பினாள். அரை நிமிசத்துக்குப் பிறகு இன்னொரு தரம் தட்டிக் கேட்டது.

'கார்கோவிலிருந்து ஒரு தந்தி வந்திருக்கிறது போலும்,' என்று நினைத்துக் கொண்டாள். தலையிலிருந்து பாதங்கள் வரை நடுங்கிக் கொண்டிருந்தது.

'சாஷாவின் தாய் அவனை அனுப்பும்படி ஹார்க்கோவாவிலிருந்து தந்தி அனுப்பியிருக்கிறாள் போலும்... ஓ, கடவுளே எனக்குக் கருணை காட்டு!

அவள் விரக்தி அடைந்தாள். தலை, கைகள், பாதங்கள் எல்லாம் விறைத்துப் போயின. உலகத்தில் தான் மிகவும் மகிழ்ச்சியற்ற பெண் என்று தன்னை நினைத்துக் கொண்டாள். இன்னொரு நிமிசம் கடக்கும். பல குரல்கள் கேட்கும். கால் நடை அறுவை மருத்துவர் தன் உறுப்பினர் விடுதியிலிருந்து வந்திருப்பான்.

'கடவுளே, நன்றி!' என்று நினைப்பாள்.

படிப்படியாக இதயத்தில் இருந்த பாரம் மறைந்து போகும். மனம் இலேசாகும். சாஷாவை நினைத்துக் கொண்டு திரும்பவும் படுக்கப் போவாள். சாஷா அடுத்த அறையில் ஆழமாக துயின்று கொண்டிருப்பான். சிலவேளை துயிலில் அழுது கொண்டிருப்பான்.

'உனக்கு வேண்டியதைத் தருகிறேன். நீ அப்பால் போ. வாயை மூடு!' என்பான்.



mahalingam.k@thaiveedu.com

## தாய்வீடு இதழ் இலங்கையில் கிடைக்குமிடங்கள்...

### மட்டக்களப்பில்...

பிரசாத் சொக்கலிங்கம்
ஆரையம்பதி
71 648 6666

வி. மைக்கல் கொலின்
மட்டக்களப்பு
77 433 8878

ஜிப்ரி ஹாசன்
ஒட்டமாவடி
76 973 5350

பாத்திமா புத்தக நிலையம்
ஏறாவூர்
77 080 7787

### அம்பாரையில்...

எம். ஐ. முஹம்மட் சாக்கீர்
சம்மாந்துறை
77 160 7490

நிரோஜன் சதாசிவம்
தம்பிலுவில்
77 785 0825

பேஜஸ் புத்தக நிலையம்
அக்கரைப்பற்று
74 239 7395

### யாழ்ப்பாணத்தில்...

எஸ். சத்தியதேவன்
யாழ்ப்பாணம்
77 729 4287

சஜீலன்
மல்லாகம்
77 669 8386

தானா விஷ்ணு
இமையாணன், வடமராட்சி
74 007 3200

புக் லாப்
சேர். பொன். இராமநாதன் வீதி
(யாழ். பல்கலைக்கழக பிரதான
வாயிலுக்கு எதிரில்)
யாழ்ப்பாணம்
77 128 5749

எங்கட புத்தகங்கள்
18/2, திருவடி நிழல்
அம்மன் வீதி, யாழ்ப்பாணம்
77 378 8795

சுயின்சி புக் சொப்
271, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்
77 226 8486

### கொழும்பில்...

மல்லியப்புசந்தி திலகர்
கொழும்பு
71 120 8061

### மலையகத்தில்...

அருணாசலம் லெட்சுமணன்
நாவலப்பிட்டி
77 165 4372

அருள்கார்க்கி
பண்டாரவளை
77 519 4817

### கிளிநொச்சியில்...

சிந்தனா ஓட்டோ பாட்ஸ்
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
76 459 1459

கிளி மக்கள் அமைப்பு
கிளிநொச்சி
77 134 3832

### அஞ்சலில் பெறுவதற்கு...

பிரசாத் சொக்கலிங்கம்
71 648 6666

எஸ். சத்தியதேவன்
77 729 4287



உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...

STANDARD MORTGAGES INC



- Mortgages
- Refinance
- Second Mortgages
- Short Term Secured Loans

SMI

STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial

சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட



**Raj Subrayam** AMP
Director

80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
**Tel: 416 298 1700**
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com



# Lower rates. Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.


**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca


**We've Moved**
**Our New Address**

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பளவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You

# BUYERS

If Yathavann Doesn't Negotiate at Least

$10,000 Off The List Price,

He'll Give You $2000 Cash on Closing.

FREE Home Inspection When You Buy With Us.

# Sellers

Your Home SOLD in 60 Days Guaranteed!

OR I'LL SELL IT FOR FREE**

**SOME CONDITIONS MAY APPLY

For More Information On My Exclusive Guaranteed Sales Program

ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA

Free Home Evaluation.
No Cost. No Obligations

RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002

YATHAVANN
SELVARAJAH
Sales Representative

416-992-4474



# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவைகள்

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, வாகனம் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agencyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் வழங்கினோரால் பறிமுதலாகப்போகிறது என்ற கவலையா?

- ✔ சேவைக்கான கட்டணம் (Consultation fee) நாங்கள் அறவிடுவதில்லை.
- ✔ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது.
- ✔ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✔ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடன் அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

| Corporate Bankruptcy | Bankruptcy | Consumer Proposal |
|---|---|---|
| $ 5000 to $7000 + HST | $1800 - $3000 + HST | Zero fee |

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

"Empowering Financial Freedom"

309-80 Corporate Drive

Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**

Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

creditsolutioncentre@gmail.com





"

BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE

Visit your one stop solution center
for all your super visa insurance needs...

SuperVisa.Today

www.supervisa.today #416 321 6000

# BUY OR SELL

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com

POWER BROTHERS REAL ESTATE



UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777

@uthayansivarajah @uthayansivarajah

ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED

INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK

# MORTGAGE FINANCIAL

**Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties**

SUBRA
MORTGAGE SOLUTIONS



புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்



**Residential Mortgages**

- 1st & 2nd Mortgages
- Refinance, Renewal & Switches
- Equity Line of Credits

**Commercial Mortgages**

- 1st & 2nd Mortgages
- Refinance, Renewal & Switches
- Equity Line of Credits

**NESAN**
**416-908-5656**
mortgage@subra.com
www.subra.com

Powered by MORTGAGE ALLIANCE

**WE DEAL WITH ALL BANKS** Brokerage # 10330

TD Canada Trust | Scotiabank | FIRST NATIONAL FINANCIAL LP | radius financial
RFA | EQUITABLE BANK | HOME TRUST | RMG | MCAP

O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



# வீடு வாங்க விற்க...

18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்

## ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

### வாங்கப் போகிறீர்களா?

- ☒ தரமான வீடு தவறிப்போகாது
- ☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- ☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
- ☒ பெருவருவாய் தரும் முதலீடு

### விற்கப் போகிறீர்களா?

- ☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
- ☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- ☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- ☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்































## Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: **416-786-0760**
info@vela4homes.com
www.vela4homes.com

**Homelife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8



# STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

SARVAA CPA
PROFESSIONAL CORPORATION

Our passion is to solve your tax problems:

- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM

VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272











NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111



Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


புது
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


Daniels FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licensed Funeral Preplanning Director & After Care Advisor
Licensed Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN
PURCHASING A NEW
HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Scarborough : C103-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7


15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future
Realty Inc., Brokerage
416.568.4301
Vettyvel Law
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544


AEREN Thiyagarajah
Realtor
Dir. 647-888 3500
DILEEP Thangavel
Realtor
Dir. 416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8


நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை குறைய வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chari, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555


ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொகையைப் அல்ல
கனவை விலக்க...
Thana
Yoganathan
416.418.5749


வீடு விற்பனை நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545


RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225



Ahilan
Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd.,
Brokerage


UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMIDGROUP


Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
RE/MAX ACE


Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120


Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Orbit Solution Centre
416.439.0224
Cell: 416.450.5011


Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
RE/MAX
COMMUNITY
REALTY INC.,


Avazen
416-264-6787
www.4162646787.com
3466 Lawton Ave. East Unit 124, Toronto ON M3K 5J8


Uthayan Alex Sivasambu
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
COLDWELL
BANKER


Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
RE/MAX ACE
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com


BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
Brokerage


NOW HIRING
JOIN OUR
DYNAMIC TEAM
iNFORCE LIFE
Financial Services Inc.
416-909-0400 Bus. 416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN
RASALINGAM CIM
President & CEO


Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
Cell: 416 505 8532


DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524


RE/MAX
077 866 0000
LATHAN VARATHARAJAH
Broker Owner